
மாணிக்கவாசகப்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய

திருவாசகம்

(எளிய உரையுடன்)





உரையாசிரியர்

பேராசிரியர்

சொ.சொ.மீ.சுந்தரம், எம்.காம்., எம்.பில்.,

உ
சிவமயம்
தென்நாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

முதல்வீதி, க.முத்துப்பட்டணம், காரைக்குடி–630001 ஸ்ரீமத் சொக்கலிங்கம் ஐயா இல்ல வளாகம், யாழ்ப்பாணத்தார் வீடு,இராம.கு.இராம.பழ. விலாசம்

"காசிஸ்ரீ", "திருத்தலச்செல்வர்" பழ.மாணிக்கம், B.E.,
மா.வள்ளியம்மை ஆச்சி அவர்களின் பேரனும்,
மா.பழனியப்பன்–பழ.கற்பகாம்பிகை அவர்களின்

மகனும் ஆகிய **ப.முத்துவுக்கும்,**
உ.சிறுவயல் **ப.சிட்டுவுக்கும்**

10.07.2016ம் நாள் நடைபெறும் திருமணவிழாவை முன்னிட்டு 09.07.2016 சனிக்கிழமை கிருஷ்ணா கல்யாண மண்டபம், கல்லுக்கட்டி மேல்கரை காரைக்குடியில்

"பொற்கிழிக் கவிஞர்" அரு.சோ

அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருவாசக முற்றோதல் வேள்வியில் கலந்து கொண்ட திருவாசக மணிகள் அனைவரும் பயன்பெற்று மகிழ்ந்து உய்யுமாறு அன்புடன் வழங்கப்பெற்றது.

உ

சிவமயம்

மாணிக்கவாசகப்பெருமான் மலர்வாய்ப் பிறந்த
வாசகத் தேனாகிய

திருவாசகம்

(எளிய உரையுடன்)

உரையாசிரியர்

சொ.சொ.மீ.சுந்தரம்

எம்.காம்., எம்.பில்.,

வெளியீடு

பேராசிரியர் **சொ.சொ.மீ.சுந்தரம்** அவர்களின் எழுபதாண்டு நிறைவுப் பவள விழாவாக நடைபெற்ற திருவாசக விழாவில், சிவகாசித் தொழிலதிபர் உயர்திரு. **ஆ.பாலசுப்பிரமணியன்** அவர்களால் வெளியிடப் பெற்றது

நாள் : **11.8.2013**

முதற்பதிப்பு : ஜூலை 2008
இரண்டாம் பதிப்பு : ஜூலை 2013

விலை : ரூ.160.00

நூல் கிடைக்குமிடம்
B1, வதுமிதா வசுதாரா வளாகம்,
84, திருப்பரங்குன்றம் சாலை,
மதுரை - 625 003.
94430-47060, (0452) - 2374660

அச்சிட்டோர்
ஐயப்பன் பிரிண்ட் ஹவுஸ்,
1A, ஓபுளா சுப்பையர் சந்து
சின்னக்கடைத்தெரு, மதுரை 625 001.
அலைபேசி : 98945-59135

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் **சுப.திண்ணப்பன்** அவர்கள்
சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் & சிம் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இத்தாலியம் காதலின் மொழி என்றும், ஜெர்மானியம் தத்துவத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும், பிரஞ்சு தூதின் மொழி என்றும் சொன்னால் தமிழ் பக்தியின் மொழி என்று கூறினார் பன்மொழி அறிந்த பேராசிரியர் தனிநாயக அடிகளார். இவ்வாறு தமிழுக்குரிய அடையாளமாகப் பக்தி என்னும் பண்பினை ஊட்டிய பாவலர்கள் நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆவர். நாயன்மார்கள் பாடிய பக்திப் பனுவல்கள் திருமுறைகள் எனப்படும்.

இந்தத் திருமுறைகளில் தோத்திரம் உண்டு; சாத்திரம் உண்டு; சரித்திரம் உண்டு. சரித்திர நாயகர்களாகிய நாயன்மார்கள் சிவபெருமானைத் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் கண்டு தொழுதனர். "தோத்திரமும் சாத்திரமுமானார் தாமே" என்னும் நாவுக்கரசரின் வாக்கு இதனை வலியுறுத்தும்.

தோத்திர நூல்களில் சிறந்தது திருவாசகம். சாத்திர நூல்களில் சிறந்தது திருமந்திரம் என்பார் வள்ளலார். காதலாகித் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பதாகிய - வேதம் நான்கினும் மெய்ப்பொருளாகிய - நமச்சிவாய மந்திரத்தையே தொடக்கச் சொல்லாகக் கொண்டு திகழ்வது திருவாசகம். இறைவனையே சைவனாகவும் செந்தமிழ்ப் பாண்டி நாட்டானாகவும் கண்டு இன்புறும் நூல் அது. தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்னும் சைவர்களின் முழக்க வாசகத்தை வழங்கி நிற்பதும் திருவாசகமே ஆகும். இலக்கிய உலகில் திருவாசகம் என்றும் தித்திக்கும் தேனை ஒத்தது, படிப்பார் உள்ளத்தை உருக்கிப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும் பான்மையது. ஜி.யு. போப் போன்ற வேற்றுச் சமயத்தினரின் போற்றுதலையும் பெற்ற நூல் அது. "கண்ணால் யானும் கண்டேன், காண்க" என நம்மவர்க்குக் கடவுளைக் கண்டு காட்டும் ஏற்றம் கொண்ட இயல்பினது திருவாசகம். அது ஓர் அன்பு நூல், எனவே தான் திருவாசகம் படிப்போர் "அன்பர் ஆகுநர் அன்றி மன்பதை உலகில் மற்றையர் இலரே" என்று பாராட்டினார் துறைமங்கலம் சிவப்பிரகாசர்.

இத்தகைய பெருமை மிக்க திருவாசகம் மாணிக்கவாசகர் சொல்லிய பாட்டாகும். இதன் உட்பொருளாக இலங்குபவர் தில்லை நடராசப் பெருமானாவார். இந்த உட்பொருளை உணர நாம் திருவாசகப் பாட்டின் புறப்பொருளை முதலில் அறிந்து போற்ற வேண்டும். இதனை எல்லாரும் அறியும் பொருட்டுத் திருவாசகத்திற்கு எளிய உரை எழுதித் தருமாறு சிங்கப்பூர்த் திருமுறை மாநாட்டினர் சொல்லின் செல்வர் சொ.சொ.மீ.சுந்தரம் அவர்களை வேண்டி நின்றனர். அதன் விளைவே உங்கள் கைகளில் இன்று திகழும் இந்தத் திருவாசக எளிய உரை நூலாகும்.

உரையாசிரியர் பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரம் அவர்கள் தம் சிறுவயது முதலே திருவாசகம் படிக்கத் தொடங்கியவர். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அதில் தோய்ந்து திளைத்தவர். ஆய்ந்து நுண்பொருள் கண்டு நுவல்பவர். தம் இல்லத்திற்கே திருவாசகம் எனப் பெயரிட்டும் ஆண்டுதோறும் திருவாசக விழாக்கள் நடத்தியும் மகிழ்பவர். பேராசிரியர் வ.சுப.மாணிக்கம், கம்பன் அடிப்பொடி சா.கணேசன், கவிஞர் கண்ணதாசன் முதலிய தமிழ் அறிஞர்களால் பாராட்டப்பட்டவர். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலெல்லாம் திருவாசகம் பற்றிப் பல சொற்பொழிவுகளைக் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப நிகழ்த்தியவர். கயிலைக் காட்சியைக் கண்டு களித்து மற்றவர்களுக்கும் தம் சொல்வண்ணத்தால் தீட்டிக் காட்டும் திறத்தினர். அரிய பொருளை அனைவரும் அறியும்வண்ணம் எளிமையாகவும், எளிய பொருளை அறிஞர் பலரும் போற்றும் வகையில் அருமையாகவும் விளக்கும் இயல்பினர். இலக்கிய உலகில் இணையற்ற பட்டிமன்றப் பேச்சாளர். வணிகத்துறைப் பேராசிரியராக இருந்து சைவத்தையும் தமிழையும் வாழ வைத்துக் கொண்டிருப்பவர். இவரது ஆழ்ந்தகன்ற புலமையும் பழுத்த அனுபவமும் இந்த உரையில் பளிச்சிடக் காணலாம்.

இந்த உரை, நூலாகவும்,கணினிவட்டாகவும் வெளியிடப்படுகிறது. இதனைத் தமிழ்ப் பெருமக்கள் வாங்கிப் படித்தும் கேட்டும் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து இறையருள் பெற வேண்டுகிறேன். நல்லதோர் உரையை நமக்கு நல்கிய நாவலர் சொ.சொ.மீ.சுந்தரம் அவர்கள் திருமந்திரம் முதலிய பல நூல்களுக்கு உரை எழுதி உதவிட வேண்டுகிறேன். அவரது சைவப் பணியும் இலக்கியப் பணியும் தொடர இறைவனை வணங்குகிறேன்.

சிங்கப்பூர்
6.6.2008

சுப.திண்ணப்பன்

அணிந்துரை

இலக்கியச் செல்வர், பேராசிரியர் **தெ.ஞானசுந்தரம்** அவர்கள்
சென்னை, பச்சையப்பன் கல்லூரி முன்னாள் முதல்வர்.

திருவாசகம் மணிவாசகரின் ஆன்மயாத்திரையைத் தெரிவிப்பது. ஆசிரியன் அருளால் இறையன்பினைச் சிறிதே சுவைத்த ஆன்மா இறைவனோடு ஒன்றுவதற்குத் துடித்த துடிப்பினைக் காட்டுவது. இதில் அவ்வான்மாவின் தவிப்பு, ஏக்கம், அச்சம், சோகம், மகிழ்ச்சி போன்றவை பதிவு செய்யப்பட்டுள்ளன. திருவாசகத்தில் இறைவனை நோக்கிப் பேசும் பாடல்களே மிகுதி. இறைவனைப் படர்க்கையில் பேசும் பாடல்கள் மிகக் குறைவாகவும், முன்னிலையில் விளித்துப் பேசும் பாடல்கள் மிகப் பலவாகவும் இருக்கின்றன. இதனால் அதனை ஓதும் போது அஃது ஓதுவோர் தம் உள்ளத்து ஏக்கம், தவிப்பு முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது போலவும் அமைகிறது. அருள் நூல்களில் திருவாசகம் போன்று கற்பார் நெஞ்சினைக் கரையச் செய்வது பிறிதொன்று இல்லை. அதனால் தான் 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்னும் பாராட்டுரை எழுந்துள்ளது.

திருவாசக நுகர்ச்சியில், உண்ணும் சோற்றில் கிடக்கும் கற்களைப் போல் சில சிறுதடைகள் உண்டாகின்றன. திருவாசகம் மணிவாசகரின் அனுபவத்தை முழுமையாகத் தெரிவிக்கும் நூல் என்ற போதிலும் முழுமையான நூலன்று. சில பகுதிகளில் சில பாடல்கள் காணப்படவில்லை. சில பகுதிகளில் அதிகமாகப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருக்கழுக் குன்றப் பதிகம், திருப்புலம்பல், எண்ணப்பத்து, திருப்படையெழுச்சி, பண்டாய நான்மறை, திருப்படையாட்சி, ஆனந்தமாலை, அச்சோப்பதிகம் ஆகியவற்றில் பாடல்கள் குறைவாக உள்ளன. அப்பாடல்கள் நெடுங்காலத்திற்கு முன்பே மறைந்துவிட்டன போலும்! திருத்தோள் நோக்கம், பிராத்தனைப்பத்து, திருவெண்பா ஆகியவற்றில் பாடல்கள் மிகுதியாக உள்ளன. இவற்றில் காணப்படும் மிகுதியான பாடல்கள் இறையன்பு நிறைந்த யாரோ சிலரால் செருகப்பட்டனவாக இருத்தற்கு வாய்ப்பு உள்ளது.

பிரார்த்தனைப்பத்து என்னும் பெயரே அது பத்துப்பாடல்களைக் கொண்டது என்பதனைக் காட்டுகிறது. ஆனால் அதில் பதினொரு

பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இப்பகுதி அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. அதனையொட்டி நோக்கினால், 'வேண்டும் வேண்டும்' என்னும் நான்காம் பாடல் மிகைப்பாடலாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. அப்பாடலை நீக்கினாலும் அந்தாதித் தொடை கெடாமல் மூன்றாம் பாடல் 'வேண்டுமே' என்று முடிய, அச்சீரின் ஈற்றெழுத்தை முதலாகக் கொண்டு ஐந்தாம் பாட்டு 'மேவும் உன்றன் அடியாருள்' என்று தொடங்குவதாய் அமைகிறது.

அடுத்த தடை, ஏடு எழுதுவோரால் நிகழ்ந்துள்ள பிழைகள் ஆகும். அடுத்தடுத்து வந்த பதிப்புகளில் பிழையான பாடமே இடம் பெற்றமையால் இப்பொழுது அதற்கு மாறான பாடம் சிறப்பாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் உண்டாகிறது. 'கல்லாய் மனிதராய்' (சிவபுராணம்) என்பதற்கு மாறாகக் 'கல்லா மனிதராய்' என்று இருப்பதே பொருத்தம் என்பது என் பணிவான கருத்து. 'கொள்ளுங் கில்லெனை அன்பரிற் கூய்ப்பணி' (திருச்சதகம், கைம்மாறு கொடுத்தல், 46) என்பது 'கொள்ளுங் கொல்லெனை அன்பரிற் கூய்ப்பணி' என்று இருத்தல் வேண்டும் என்கிறார் மகாவித்துவான் அருணை வடிவேலு முதலியார். 'செம்பொருள் துணிவே சீருடைக் கழலே' (பிடித்த பத்து. 1) என்பது 'செம்பொருள் துணிவே சீருடைக் கடலே' என்று இருத்தலே தகும் என்பது அறிஞர் மு.அருணாசலம் அவர்கள் கருத்து.

இத்திருத்தம் குறித்து அறிஞர். மு.அருணாசலம் அவர்கள் எழுதியுள்ள கருத்து வருமாறு: "சைவ இலக்கியங்களில் இறைவனாகிய சிவபெருமானது முழுவடிவத்தைச் சுட்டி விளித்துப் பேசுவதே மரபு. சிவபெருமானுடைய அங்கங்களில் ஒன்றை மட்டும் சுட்டிப் பேசுவதாகச் சமய நூல்களில் (திருமுறைகளில்) கண்டதில்லை. திருமுகமே, திருக்கரமே, திருவடியே என்று யாரும் பாடியதில்லை........... மிகப் பழமையான இரண்டு ஏடுகளை நாம் சமீபத்தில் பரிசோத்து வந்த போது அவ்விரண்டு ஏடுகளிலும் 'சீருடைக் கடலே' என்பதே பாடமாகக் காணப்பட்டது. 'கடலே' என்ற தொடரால் மாணிக்கவாசகர் ஆண்டவனைப் பல இடங்களில் அழைக்கிறார். பிடித்த பத்து இரண்டாம் பாடலில் கூட, 'கடவுளே, கருணை மாகடலே' என்று கூறுகிறார். கடலே என்று அமைப்பதில் மரபு வழு எதுவும் இலது. ஆராய்ந்த போது பின்னும்

பல ஏடுகளிலும் இப்பாடம் இருப்பது தெரிய வந்தது" (திருவாசகக் குறிப்புகள், ப. 129&131) இப்பாடத்தை ஏன் எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது விளங்கவில்லை.

அடுத்து, உரையாசிரியர் ஒருவர் ஒரு கருத்தினைத் தெரிவிக்க, அதனையே முடிந்த கருத்தாக எண்ணிப் பின் வந்தோரும் அவ்வாறே உரைகூறுவதால் ஒரு சில இடங்கள் தெளிவு இல்லாமலே இருக்கின்றன. திருவெம்பாவை இரண்டாம் பாட்டு 'ஈசனார்க்கு அன்பு ஆர்யாம் ஆரேலோர் எம்பாவாய்' என்று முடிகிறது. இதற்கு உரையாசிரியர்கள் வெவ்வேறு பொருள் கூறியுள்ளார்கள். சிலர்,"ஈசனுக்குச் செய்ய வேண்டிய அன்பு யாது, நாம் யார்" என்று பொருள் கண்டுள்ளனர். வேறு சிலர் "ஈசனார்க்கு அன்பர்யாம்" என்று பொருள் கொண்டுள்ளனர்.

இப்பாட்டில் சிவபெருமான் தங்கள் மீது கொண்டுள்ள பேரன்பினையும் தாங்கள் அதனை உணராமல் விளையாடிக் கொண்டிருக்கும் தாழ்வினையும் உறழ்ந்து காட்டுகிறாள் உறக்கத்திலிருந்து எழும் பெண். "இரவும் பகலும் இறைவனிடத்தில் அன்பு என்று பேசுபவளே, அந்த அன்பை எல்லாம் இப்பொழுது படுக்கையின் மீது வைத்துவிட்டாயோ?" என்கிறார்கள் எழுப்பும் பெண்கள். அதற்கு உள்ளே இருப்பவள். "பெண்களே, இப்படி நமக்குள் ஏசிக்கொண்டிருத்தற்குரிய நேரமா இது? வானவர்களும் ஏத்துதற்குத் தயங்குகின்ற மலர்ப்பாதங்களை உடைய ஒளி வடிவானவனும் சிவலோகனும் தில்லையில் உறைபவனுமான பெருமான் நமக்கு அருள்பாலிக்க வருகிறான். அவனுடைய அன்பு எத்தன்மைத்து? நம்முடைய அன்பு எத்தன்மைத்து?" என்கிறாள். (ஆர் – எத்தன்மைத்து, 'நான் ஆர் என் உள்ளம் ஆர்' என வருதல் காணலாம்.)

நான்காம் வேற்றுமை குவ்வுருபு இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு, ஏழு வேற்றுமைப் பொருள்களிலும் வரும் என்பது இலக்கணம். அவனுக்கு இப்பெருமை சேரும் என்பது அவனை இப்பெருமை சேரும் என்றும், அவனுக்கு முடியும் என்பது அவனால் முடியும் என்றும், அவனுக்கு இவன் உயரம் என்பது அவனைவிட இவன் உயரம் என்றும், அவனுக்கு அறிவு கூர்மையானது என்பது அவனது அறிவு கூர்மையானது என்றும் காலைக்கு வருவான் என்பது காலையில் வருவான் என்றும் பொருள்படும், 'உனக்கு அன்பருள்ளாம் சிவமே

பெறுந்திரு எய்திற்றிலேன்' என்பதற்கு "உன்னுடைய மெய்யன்பர் கூட்டத்து இருக்கும் மங்களமான பேரின்பச்செல்வத்தைப் பெற முடியாதவன் ஆகிவிட்டேன்" என்று கவிஞர் சொ.சொ.மீ சுந்தரம் அவர்கள் உரையிட்டிருப்பது கருதுதற்குரியது. இவ்விலக்கணத்தை யொட்டி ஈசனார்க்கு அன்பு என்பது ஈசனுடைய அன்பு என்று பொருள்படும். இதுவே தக்கதாக அமையும்.

ஒவ்வொரு புதிய உரை வரும்போதும் ஏதேனும் ஒரு திருத்தமோ தெளிவோ கிடைத்தற்கு வாய்ப்பு உண்டு. அதனால் திருவாசகத்திற்கு அதில் தோய்ந்தவர்கள் தாங்கள் கண்ட விளக்கத்தினைத் தெரிவித்து வரையும் உரைகள் பலப்பல வருதல் வேண்டும். அந்த வகையில் பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ சுந்தரம் அவர்கள் உரையினைப் போற்றி வரவேற்கிறேன்.

கவிஞர் சொ.சொ.மீ அவர்களைப் பச்சையப்பன் கல்லூரியில் வணிகவியல் முதுகலை மாணவராக அவர் இருந்த நாள் முதலாய் நன்கு அறிவேன். அவருடைய தமிழ் அறிவு அப்பொழுதே என்னை வியப்பில் ஆழ்த்தியது. அவர் பழுத்த சைவக்குடியில் தோன்றியவர். அறிஞர்வ.சுப.மாணிக்கனாரின் அன்புக்குரிய மாணவராகத் திகழ்ந்தவர். அவரால் போற்றி வளர்க்கப்பட்டவர். திருவாசகம் முழுவதையும் உள்ளத்தில் எழுதி வைத்துக்கொண்டவர். எப்பொழுதும 'சிவ சிவ' என்னும் மணிவாக்கினையே உரைப்பவர். திருவாசகத்தை உயிர் நூலாக வரித்துக்கொண்டு அதிலேயே வாழ்பவர். அத்தகையவர் அதற்கு உரைகாண்பது மிகவும் தகுதியான செயலாகும்.

இவ்வுரை எளிமையும் அழகும் நிறைந்தது. திருமுறை மணம் கமழ்வது. தெளிவு தரும் விளக்கங்களால் பொலிவது.

'ஆர்த்த பிறவித் துயர் கெடநாம் ஆர்த்தாடும் தீர்த்தன்' என்பதற்கு, "நம்மை இருவினைப் பாசங்களால் மும்மலக் கல்லோடு கட்டும் பிறவி என்ற துன்பம் ஒழியும் படி, நாம் மகிழ்வோடு ஆரவாரம் செய்து முழுகும் தீர்த்தமாக இருப்பவன் என்று உரை வரைந்துள்ளார். இதனைப்படிக்கும் போது நமக்கு உடனே.

இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட (திருநாவுக்கரசர்புராணம் 129)

என்னும் பெரிய புராணப்பாடல் நினைவுக்கு வருகிறது.

'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' என்னும் தொடருக்கு, 'நாள் ஆறில் கண்ணிடந்து அப்ப வல்ல கண்ணப்பரைப் போன்ற அன்பு என்னிடம் இல்லை என்பதைக் கண்ட பின்பும் என்று வரைந்துள்ள உரை

'தொண்டு செய்து,
நாள் ஆறில் கண்ணிடந்து அப்ப வல்லேன் அல்லேன்'

என்னும் பட்டினத்தார் பாடலை நினைப்பிக்கிறது.

அருந்தவருக்கு ஆலின்கீழ் அறம் முதலா நான்கனையும்
இருந்துஅவருக்கு அருளும்அது எனக்கறிய இயம்பேடீ (20)

என்னும் திருச்சாழல் உரையில் "அப்படி சிவபெருமான் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டாவிட்டால் உலகம் திருந்தத் தவம் செய்யும் திருந்திய ஞானிகளாகிய அவர்களுக்கு உலகத்தின் இயற்கை தெரியாமல் போய்விடும் – இது விடை" என்று எழுதியுள்ளார். இப்பகுதியில்,

எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்

என்னும் பரஞ்சோதியின் வாக்கு அழகாகக் கொலுவீற்றிருக்கிறது.

'படமாக என்னுள்ளே தன் இணைப்போது அவை அளித்து (திருப்பூவல்லி,14) என்பதற்கு, 'தன்னுடைய திருவடித் தாமரைமலர்கள் இரண்டையும் என் மனத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் ஓவியமாக்கி என்று உரை வரைந்துள்ளார். இதில்,

"எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக
எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமே"

என்னும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ச் சொற்றொடர் பாலில் தேனாய் விரவி மகிழ்ச்சி தருகிறது

இப்படி அருளாளர்களின் அமுத மொழிகளை விரவிய இவ்வுரை இனிமையின் வடிவாய்த் திகழ்கிறது.

பாடல்களில் பொதிந்துள்ள நயங்களையும், புதைந்து கிடக்கும் உண்மைகளையும் வெளிப்படுத்துவது உரையாசிரியன் கடமையாகும்.

சேயாய் நணியானே - நினையாதவர்க்குத் தூரத்தில் இருப்பவனே! நினைப்பவர்க்குப் பக்கத்துணை ஆனவனே! (சிவபுராணம்.45)

உலகா யதனெனும் ஒண்டிறல் பாம்பு - கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழும் உலோகாயதன் என்னும் ஒளிமிக்க பாம்பு (போற்றித்திருவகல் 56)

சின்மொழியார் - சில சொல்லும் பல செயலும் உடைய பெண்கள் (நீத்தல் விண்ணப்பம்.5)

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் - (கலந்திருப்பதும் கடந்திருப்பது மாகிய) தன் தன்மைகள். அடியர் அல்லாத பிறரால் அறியப்படாத பெருமான் (திருவம்மானை.20)

ஏழைத்தொழும்பனேன் - அறிவிலும் ஆற்றலிலும் ஏழையாகிய அடியனேன் (திருத்தேள் நோக்கம்.13)

மறிவு அறியாச்செல்வம் - மீளாச் செல்வமாகிய முத்திப்பேறு (அடைக்கலப்பத்து.9)

கோல மேனி வராகமே - பன்றிக்குட்டிக்குப் பால்கொடுக்க வந்த அழகான தாய்ப்பன்றியே (திருக்கழுக்குன்றப் பதிகம்.5)

எண்தோள் முக்கண் எம்மானே - எங்கள் சுமைகளைத் தாங்குவதற்காகவே எட்டுத்தோள்களையும் மூன்று கண்களையும் கொண்டவனே! (குழைத்த பத்து.3)

பால் நினைந்து ஊட்டும் தாய் - சொல்லத் தெரியாத குழந்தைக்குப் பசிவரும் நேரம் நினைந்து பால் ஊட்டும் தாய் (பிடித்த பத்து.9)

நித்தமணாளர் - ஆன்மாவாகிய காதலிக்கு அருள் மணமாலை சூட்டும் அவர் நித்திய கல்யாண சுந்தரமூர்த்தி (அன்னைப் பத்து.3)

யார் உன்னை அறியகிற் பாரே - மரமும் நிழலும் போல உயிரும் உடலும் போல உடனாய் நிற்கிறாய். உன்னை அறியவல்லவர் யார் இருக்கிறார்கள்? (கோயில் திருப்பதிகம்.7)

கற்றாரை யான் வேண்டேன் - கல்வித்திறத்தால், நெறியல்லாத வற்றை நெறியெனச் சாதிக்கும் கற்றவர்களை நான் விரும்பேன் (திருப்புலம்பல்.3)

அறிவுதந்து - அவனையும் அறியும் ஞானமளித்து (அற்புதப்பத்து.10) பண்ணின் மொழியாளோடு உத்தர கோச மங்கை மன்னி - இசை போல இன்மொழி பேசும் மங்கள நாயகியோடும் திருவத்தரகோச மங்கையில் பிரியாமல் நிலை பெற்றிருந்தவன் (பண்டாய நான்மறை.5)

திருவார்த்தை என்னும் பகுதியில் அதன் இரண்டாம் பாடல் உரையில் இடைவை மடநல்லாள் என்பது வரகுணபாண்டியன் மனைவியைக் குறிப்பதாகச் சுட்டி அவ்வரலாற்றினைத் தெரிவிப்பது நல்ல குறிப்பாகும்.

இவ்விளக்கங்கள் நயங்களையும் தேவையான குறிப்புகளையும் தந்து நூலை நன்கு உணர்ந்து கொள்ளத் துணையாய் அமைகின்றன.

சித்தாந்தக் கருத்துகளைத் தேவையான இடத்தில் முல்லைப் பூவில் மணம் போலே அளவாகச் சுட்டிச் செல்வது சிறப்பாக அமைந்துள்ளது. அப்பகுதிகள் கற்பாரை மருட்டாமல் மேலும் அக்கருத்துகளைத் தெரிந்து கொள்ளத் தூண்டும் வகையில் இருக்கின்றன.

'விச்சது இன்றியே விளைவு செய்குவாய்' என்பதற்கு, "படைப்புத் தொடங்கியபோது, ஆணவமலத்தால் கட்டப்பட்டுக் கிடந்த உயிருக்கு, வினையாகிய விதை இல்லாமலேயே உடம்பைத் தந்து விளையச் செய்தாய்" (திருச்சதகம்,96) என்றும்,

'வெய்ய கூற்று ஒடுங்க உறும் கடிப் போது அவையே உணர்வு உற்றவர் உம்பர் உம்பர் பெறும் பதமே' என்பதற்கு, "மார்க்கண்டேயன் உயிரைக் கவர முற்பட்ட கொடிய கூற்றுவன் வலிமை ஓங்கும்படி அவன் உடம்பில் பொருந்திய மணமிக்க திருவடிமலர்களையே பற்றிய

சரியையாளரும், அவருக்கு மேலான கிரியையாளரும், அவருக்கு மேலான யோக நிலையினரும் பெறக் கூடிய பதங்களாகிய சாலோக சாமீப சாரூப வடிவினனே!" என்றும் எழுதிச் செல்வது மகிழ்வூட்டுகிறது. (நீத்தல் விண்ணப்பம்,25)

'உடையாள் உன்றன் நடுவிருக்கும்' என்னும் கோயில் மூத்த திருப்பதிகப் பாட்டிற்கு வரைந்துள்ள உரை அருமையிலும் அருமை. அதில் இடம் பெற்றிருக்கும் சித்தாந்தக் குறிப்பு மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது. சிவயசிவ என்ற மந்திரம் இருதலை மாணிக்கம் எனப்படுகிறது. சி என்பது சிவம். வ என்பது சக்தி ய என்பது ஆன்மா. இம்மந்திரத்தில் சிவத்துக்கு நடுவில் சக்தியும் சக்திக்கு நடுவில் சிவமும் இரண்டுக்கும் நடுவில் ஆன்மாவும் உள்ளன. எனவே இப்பாடல் இருதய மந்திரப்பாடல் எனப் போற்றப்படுகிறது என்று தரப்பட்டுள்ள விளக்கம் போற்றற்குரியது.

திருவாசகம் எளிய சொற்களால் ஆகிய நூல், ஆயினும் சில இடங்களில் பொருள் அறிய முடியாமல் தயங்கி நிற்கும் நிலை ஏற்படுகிறது. அது போன்ற இடங்களுக்கு அகல்விளக்காய் அமைந்து இந்த உரை தெளிவு தருகிறது.

'கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தால் போல' (சிவபுராணம்.46)

என்பதில் நெய் என்பதற்குப் பசுவின் நெய் என்று பொருள்கொள்வார் உண்டு. இவர் அதற்கு நெய்ப்புத் தன்மையுடைய தேன் என்று பொருள் கூறியிருப்பது தேனினும் இனிப்பது. 'நெய்த்தலைப் பால்உக்கு விடல்' (339) என்னும் பழமொழியில் இச்சொல் இப்பொருளில் ஆளப்பட்டிருத்தல் காணலாம்.

உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்தொழிந்தோம் என்பதற்கு, "உய்தி பெறுவார் உய்யும் வகைகள் எல்லாம் அனுபவித்து விட்டோம்" (திருவெம்பாவை.11) என்று எளிமையாகப் புரிந்து கொள்ளக் கூடிய உரையினைத் தந்துள்ளார்.

எங்கோமான் அன்பர்க்கு முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருள் என்பதற்கு, "பெருமாட்டியை என்றும் பிரியாத சிவபெருமான் அன்பர்க்கும், சிறியோமாகிய நமக்கும் அவள் முன்னின்று. திருவுளம்கொண்டு சுரந்தருளும் இனிய அருள்" (திருவெம்பாவை.16)

என்று எழுதியுள்ள உரை தெளிவு மிக்கது. 'அன்பர்க்கும்' 'நமக்கும்' என்று ஈரிடத்தும் உம்மை விரித்துப் பொருள் கண்டுள்ளது உரையாசிரியரின் நுண்மாண் நுழை புலத்தைக் காட்டுகிறது.

திருப்படையாட்சி பலருக்குப் பொருள் உணர அரிதாய் இருக்கும் பகுதி. அறிஞர் அ.ச.ஞா இப்பகுதி விளங்கவில்லை என்றே தம் திருவாசக விளக்கவுரையில் சான்றாண்மையோடு குறித்துள்ளார். கவிஞர் சொ.சொ.மீ இவவுரையில் அப்பகுதிக்கு மிக முயன்று சிக்கல் அறுத்துத் தெளிவாக உரை கண்டுள்ளார். இது பாராட்டுக்குரியது.

கடக்கும் திறல் ஐவர் கண்டகர் தம் வல்ஆட்டை
அடக்கும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே (8)

என்னும் குலாப்பத்து பாட்டிற்கு "என்னை வெல்லும் ஆற்றல் மிக்க ஐம்புலப்பகைவரின் வலிமையான விளையாட்டை அடக்கும் ஆற்றல் பெற்றேன். அதற்குக் காரணமான தில்லைப் பெருமானோடு குலாவி மகிழ்ந்து ஆடுகின்றேன் என்று விளக்கம் தந்துள்ளார் நண்பர் சொ.சொ.மீ

இப்பாடலில் வரும் வல்ஆட்டை என்பதற்கு மாறாக 'வல்லரட்டை' என்னும் பாடம் சில பதிப்புகளில் காணப்படுகிறது.

முருட்டு மெத்தையில் முன்கிடத் தாமுன்
அரட்டர் ஐவரை ஆகஅறுத் திட்டுநீர்
முரட்டு அடித்தஅத் தக்கன்தன் வேள்வியை
அரட்டு அடக்கிதன் ஆரூர் அடைமினே

என்னும் திருநாவுக்கரசர் தேவாரத்தைச் சான்று காட்டி, வல்லரட்டை என்பதே செம்மையான பாடம் என்று அறிஞர் சிலர் தெளிவுபடுத்தியுளளனர். வலிய விளையாட்டு என்பதனினும் வலிய குறும்பு என்பது சிறப்பாக அமையும்.

'வன்பராய் முருடு ஒக்கும் என் சிந்தை' என்பதற்கு, 'என் மனம் வலிமை மிக்க உலர்ந்த மரக்கட்டையாகிவிட்டது" என்று உரை காணப்பட்டுள்ளது. பராய் என்பது ஒருவகை மரம். இம்மரங்கள் நிறைந்திருந்த பகுதிக்குப் (திருப்) பராய்த்துறை என்னும் பெயர் வழங்கலாயிற்று. இம்மரத்தின் கணுவைக் கோடரியால் பிளக்க முடியாது. முயன்றால் கோடரிதான் சிதைந்து போகும். அவ்வளவு வலிமையானது

அக்கனு. மாணிக்கவாசகர் தம் மனம் எதற்கும் நெகிழாததாய்க் கடினமாகி விட்டது என்பதனையே இவ்வடிகளில் உணர்த்துகிறார். இதற்கு என்மனம் வலிய பராய்மரத்தின் கணுப்போன்று கடினமாகி விட்டது என்று பொருள் கொள்வது சிறப்பாக அமையும்.

கோகழி என்பதற்குத் திருவாவடுதுறை என்று உரை காண்பவர் தேசிகர் அவர்கள். அவரையொட்டி இவரும் அதே உரையினைக் கொண்டுள்ளார். அதற்குத் திருப்பெருந்துறை என்றும் பெல்லாரி மாவட்டத்துள்ள கோழிநாடு என்று வழங்கப்படும் தலம் என்றும் பொருள் கூறுவர். குரு என்னாமல் குருமணி என்று குறிப்பதும், அடிகளைக் குருவாக வந்து இறைவன் ஆட்கொண்ட தலம் திருப்பெருந்துறை என்பதனாலும் திருப்பெருந்துறை என்பதே வலிவானது. திருப்பெருந்துறை என்பது ஊரின் பெயராகவும் கோகழி என்பது கோவிலின் பெயராகவும் கொள்ளலாம் என்பது அறிஞர்களின் கருத்து.

இவ்வுரை பெரும்பாலும் பண்டிதமணி திருவாசகத்தின் சில பகுதிகளுக்கு எழுதியுள்ள உரையினையும் மகாவித்துவான் தண்டபாணிதேசிகர் எழுதியுள்ள விரிவான உரையினையும் தழுவி எழதப்பட்டுள்ளது. இவ்வுரையின் தனிச்சிறப்பு இதன் எளிமை ஆகும். அளவான அறிவு உடையவர் முதல் புலவர்வரை பலரும் பயிலுதற்குரியது.

திருவாசகத்தில் தோய்ந்து உழைத்து உரை கண்டுள்ள அருமை நண்பர் பொற்கிழிக்கவிஞர் சொ.சொ.மீ அவர்கள் நம் எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவர். அவர் பல்லாண்டு வாழ்ந்து திருமந்திரம் போன்ற திருமுறைகளுக்கும் உரைகாண அன்னை மீனாட்சி கடைக்கண் நோக்கி அருள்புரிய அவள் திருவடிக்கமலங்களை வணங்குகிறேன்.

அன்பன்,

தெ.ஞானசுந்தரம்

முகவுரை

பேராசிரியர் சொ.சொ.மீ.சுந்தரம்

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த சிவபெருமான் பக்தியும் ஞானமும் வேண்டுமென்று அழுத அடியார்களுக்காகத் திருவாசகத்தைத் தந்தான். இது தமிழன்னை சிவபெருமானுக்குச் சூட்டிய தங்க மணிமாலை. தட்சிணா மூர்த்தியின் தவத்திற்குக் கிடைத்த பலன். மனங்கரைத்து மலங்கெடுத்து வாழ்விக்கும் மாமருந்து. மன்னிய திருவருள் மலையிலிருந்து கொட்டும் வற்றாத தமிழருவி.

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகமென்னும் தேன்.

என்று சான்றோர்கள் பாராட்டத் தேனாய் அமுதாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய் இனிப்பது திருவாசகம். அறிவால் சிவனேயான மாணிக்கவாசகப் பெருமான், இறைவனோடு தான் பேசியது மட்டுமல்லாமல் நம்மையும் பேசவைக்கிறார். செந்தமிழ் தெய்வத்தமிழ் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு திருவாசகம்.

நான் செய்த புண்ணியத்தால், என்னுடைய பதினைந்தாவது வயதில் என் தந்தையார் எனக்கு மர்ரே.ராஜம் பதிப்பித்த திருவாசகப் புத்தகத்தை வாங்கிக் கொடுத்தார்கள். அது "மழக்கையிலங்கு பொற்கிண்ணமாக" என் கைகளில் கிடைத்தது. மாணிக்கவாசகருக்குத் தன்னையே காட்டிய சிவபெருமான், எனக்குத் தன்னையே கொடுக்கும் திருவாசகத்தைத் தந்தருளினான். அதே ஆண்டில் பழனி ஈசான சிவாச்சாரிய சுவாமிகள், மாணிக்கவாசகர் திருவருள் பெற்ற மார்கழி மாதம் திருவாதிரை நாள் வெள்ளிக்கிழமை எனக்கு அஞ்செழுத்து மந்திரத்தை உபதேசித் தருளினார்கள். பொருள்புரியாமல், ஆசையினாலும் முன்னைத் தவத்தின் தூண்டுதலாலும் திருவாசகம் படித்த எனக்குக் குருவருளும் திருவருளும் கூடி வந்தன. விடாமல் முழுவதும் படித்தேன். கடிமனம் உருகிற்று. கண்ணீர் பெருகியது.

தெய்வீக இன்பம் தந்த திருவாசகத்தைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன்.

காரைக்குடியில் அழகப்பா கல்லூரியில் வணிகவியல் படித்தபோது, என்னுடைய பேராசிரியரும் வழிகாட்டியும் என்பால் பேரன்பு கொண்டவருமாகிய தமிழறிஞர் வ.சுப.மாணிக்கனார் அவர்கள் திருவாசகம் முழுவதையும் படித்து ஒப்பித்தால் பரிசு தருகிறேன் என்று கூறி என் ஆர்வத்தைத் தூண்டினார்கள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது, மாணிக்கவாசகத்தைக் கேட்டுமகிழ்ந்து மாணிக்கனார் பரிசளித்தார் அன்று. சிவபெருமான் இன்னும் பரிசளித்துக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்கிறேன் இன்று. பண்சுமந்த பாடலுக்குப் பரிசளிக்கும் பரமன், மண்சுமந்த மதுரையிலேயே என்னை வாழவைத்துத் தடுத்தாட்கொண்டான். அங்கையில் நெல்லிக்கனியாக என்கையில் திருவாசகம் இனித்தது. உள்ளம் திருப்பெருந்துறையை விழைந்தது. உடம்பு தில்லையை நாடியது. உரை உத்தரகோச மங்கைக்கு ஆயிற்று. திருவாசகம் என் இல்லத்துக்கும் பெயராயிற்று, ஆம் நான் திருவாசகத்துக்குள் தான் உடலாலும் உள்ளத்தாலும் வசித்துக் கொண்டிருக்கிறேன். இறைவன் திருவருளால் கடந்த நாற்பதாண்டுகளாகப் பல இடங்களில் பன்னிரு திருமுறைகளைப் பற்றித் தொடர் சொற்பொழிவு செய்யும் பேறு கிடைத்தது. 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், சிங்கப்பூர் ருத்ரகாளியம்மன் திருக்கோயிலும், திருமுறை மாநாட்டுக் குழுவும் இணைந்து, திருவாசகம் பற்றி ஏழு நாட்கள் சொற்பொழிவாற்ற என்னைப் பணித்தார்கள். திருவாசகப் பாற்கடலில் மீண்டும் மூழ்கினேன். அப்பொழுது தான் திருவாசகத்துக்கு எளிய உரை ஒன்று இருந்தால் நல்லது என்ற எண்ணம் தோன்றியது. அறிவில்லை என்றாலும் ஆசைப்பட்டேன். இறைவன் திருவருள் புரிந்தான்.

திருமுறைகளில் முதலில் (1835ல்) அச்சேறியநூல் திருவாசகம். முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருவாசகம். சிறந்த கிறித்தவச் சான்றோர் ஆகிய ஜி.யு.போப் அவர்கள் தன்னுடைய எண்பதாவது பிறந்த நாளில் 1900 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் தேதி திருவாசக மொழிபெயர்ப்பை வெளியிட்டார்கள். அவர் பெயர் திருவாசகத்தோடு கலந்துவிட்டது. திருவாசகத்துக்கு உரை

எழுதக்கூடாது என்றிருந்த காலம் மாறி, பல உரைகள் வெளிவந்துள்ளன. இன்னுமோர் உரைஏன் என்ற வினா எல்லோருக்கும் எழுவது இயல்பு.

இதுவரை வெளிவந்த திருவாசக உரைகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. முதல்வகை, செந்தமிழ் அறிவும் சிவஞானமும் பெற்ற முதுபெரும் புலவர்கள் எழுதிய உரைகள், திருவாசகத்துக்கு உரை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று பாராட்டுமாறு, கருத்துரை விளக்கவுரை நயவுரை எல்லாம் எழுதிச் சைவசித்தாந்தக் கருத்துக்களை மிக அழகாக விளக்கிய உரைகள் இவை, இவற்றைப் படிக்க நம்மில் பலருக்கு நேரமும் பொறுமையும் தலையெழுத்துமில்லை, அவற்றை விளங்கிக் கொள்ளுமளவுக்குத் தமிழ் அறிவும் இந்த நூற்றாண்டில் இல்லை. எனவே சாதாரண மக்களிடம் இந்த உரைகள் பரவவில்லை.

2. இரண்டாவது வகை குறிப்புரையும் பொழிப்புரையுமாக எழுதப்பட்ட நூற்கள். நமக்குச் சந்தேகம் வருமிடத்தில் இந்த உரையாசிரியருக்கும் சந்தேகம் வந்து மழுப்பியிருப்பார். குறிப்புரையும் பொழிப்புரையும் மாறுபடும். பாடல்களிலும் உரைகளிலும் அச்சுப்பிழைகள் அதிகமிருக்கும். ஆதலால் இவையும் பயன்படவில்லை.

எனவே, பிழைகளின்றி, எளிதில் விளங்குமாறு, எல்லாப் பாடல்களுக்கும் சுருக்கமாக, தரமான உரை எழுத வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

சொற்களுக்கு மட்டும் பொருள் கூறிப் பிறகு விளக்கம் தராமல், உரையுடன் சேர்த்துச் சிறுசிறு விளக்கங்கள் தந்தால், படிப்பவர்க்கு எளிதாயிருக்கும் என்ற சிந்தனைதான் இந்த உரை எழுதக் காரணமாயிற்று. குறைவிலா நிறைவு இறைவன் மட்டுமே என்றாலும் கூடியவரை குறைகள் இல்லாமல் இவ்வுரை எழுதப்பட்டுள்ளது. இந்த உரையில் சைவசித்தாந்தக் கருத்துக்களை மிக அதிகமாகச்

சொல்லவுமில்லை, சொல்லாமல் விடவுமில்லை. சைவசித்தாந்தம் படிக்காதவர்களும் புரிந்து கொள்ளுமாறு கூறியிருக்கிறேன்.

சொல்லுக்குச்சொல் பொருள் கூறி விட்டுவிடாமல், எளிதில் விளங்க வேண்டும் என்பதற்காகச் சில சொற்கள் வருவிக்கப்பட்டு இவ்வுரை எழுதப்பட்டுள்ளது. கடலில் நீராடுபவனுக்குக் கடலின் ஆழம் அகலம் கடலில் உள்ள பொருட்கள் எல்லாம் முழுவதும் தெரிவதில்லை. அது போலத் திருவாசகம் படிக்கும் நமக்கும் மாணிக்கவாசகரின் பெருமையும் அவருடைய உணர்வுகளும் முழுமையாகத் தெரிவதில்லை. என்றாலும் கடலில் குளிக்கும்பொழுது கடல்நீர் நம் மேனியில் பட்டு மகிழ்ச்சி உண்டாக்குவது போலத் திருவாசகம் படிக்கும் பொழுது அவர் உணர்வில் ஒரு சிறு பகுதி நமக்கும் உண்டாகிறது. அதுவே நம்மால் தாங்க முடியாத அருள் உணர்வாக இனிக்கிறது. திருவாசகம் படிக்கும்போது ஏற்படும் பக்தி உணர்வில் ஆயிரத்தில் ஒரு பகுதியாவது இந்த உரையைப் படிக்கும் போது வந்தால் என் பிறவி பயனுள்ளதாகும். மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் என்ற இமயமலையும் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் என்ற சந்தனப்பொதியச் செந்தமிழ் மலையும், இவர்களுக்கு முன்னும் பின்னும் பல மலைகளும் சுமந்த திருவாசகத்தை, ஆசையோடு ஒரு சிற்றெறும்பு சுமக்கப் பார்க்கிறது. மலையின் உச்சியில் ஏறிய சிற்றெறும்பு மலையை விடக் கொஞ்சம் மேலாகத் தலையைத் தூக்கிக் காட்டினால், அதற்கு மலைதான் காரணமே தவிர எறும்பல்ல என்பதை அந்த எறும்பும் உணர்ந்திருக்கிறது.

சிங்கப்பூர் திருமுறை மாநாட்டுக குழுவினரால் 2008ல் வெளியிடப் பெற்ற இந்தநூல், இப்பொழுது மேலும் சில குறிப்புகள சேர்க்கப்பெற்று இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது. இதற்கு ஒப்புதல் அளித்த சிங்கப்பூர் திருமுறை மாநாட்டுக்குழுத்தலைவர் பேராசிரியர் டாக்டர் இராம.கருணாநிதி அவர்களுக்கும், செயலாளர் கண்ணா கண்ணப்பன் அவர்களுக்கும் என் மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடை எழுபதாண்டு நிறைவுப் பவளவிழா, திருவாசக விழாவாக நடக்கும் இச்சமயத்தில் அதன் நினைவாக இந்த நூல்

வெளியிடப்பெறுகிது. என்னுடைய அன்புக்கும் பாராட்டுதலுக்கும் உரிய மாணவர் ஆ.பாலசுப்பிரமணியன் அவர்கள் இதை வெளியிடுகிறார்கள். என்பால் கொண்ட அன்பால் இதை வெளியிடும் இவர் சிவகாசி ஸ்ரீசீமா நோட்புக் பிரைவேட் லிமிடெட் என்ற புகழ்பெற்ற நோட்டுப்புத்தகக் கம்பெனியின் இயக்குநர் ஆவார். இவர் 'செல்வத்துப்பயனே ஈதல்' என்பதை உணர்ந்தவர். பல திருத்தலங்களில் திருப்பணி செய்பவர். ஆண்டில் இளையவர். அறிவிலும் ஆற்றலிலும் பண்பிலும் பக்தியிலும் முதியவர்.

இவரும் இவர் சகோதரர் ஆ.மாரி ராஜன் அவர்களும் இத்தொழிலை மிகச்சிறப்பாக நடத்தி வருகிறார்கள். இவர்கள் தந்தையார் ஆறுமுகச்சாமி நாடார் அவர்கள் மிகவும் கொடுத்து வைத்தவர். இவர்கள் குடும்பத்தார் அனைவருக்கும் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு தர எம்பெருமான் பழனியாண்டவன் திருவடி மலர்களை வணங்கி வாழ்த்துகிறேன்.

இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டு உதவிய என் அன்பு மாணவரும் மதுரை ஐயப்பன் பிரிண்ட் ஹவுஸ் உரிமையாளருமாகிய திருப்புகழ்ச் செல்வர் K.T.லோகநாதன் அவர்களுக்கு என் நன்றி.

நான் திருவாசகத்தை இன்னும் கொஞ்சம் அதிகமாகப் படிக்க, இந்த முயற்சி காரணமாயிருந்தது. ஆனால் உரை எழுதும்போது தான் தெரிந்தது இதுவரை நான் எவ்வளவு அறிவற்றவனாக இருந்திருக்கிறேன் என்று. இறைவன் திருவருள் நம்மையுமோர் பொருளாக்கி நாயைச் சிவிகையில் ஏற்றி வைத்துள்ளது.

மதுரை — பணிவுள்ள

11.8.2013 — **சொ.சொ.மீ.சுந்தரம்**

மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு



மாணிக்கவாசகர் தமிழ் வளம் கொழிக்கும் தண் பாண்டி நாட்டில், மதுரையம்பதிக்கு அண்மையிலுள்ள திருவாதவூரில், ஆதி சைவ அந்தணர் மரபில் அவதரித்தார். இவர் பதினாறு வயது நிரம்பு முன்பே தென்மொழி, வடமொழிகளில் நிரம்பிய புலமையும், சைவ நூற்பயிற்சியும் சமய உணர்வும் கைவரப் பெற்று மேம்பட்டு விளங்கினார். இவரது அருமை பெருமைகளைக் கேள்வியுற்ற அரிமர்த்தன பாண்டியன் இவரை ஆதரித்து அழைத்தான் முதலமைச்சராக்கினான் தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்புக்கள் பல செய்தான். திருவாதவூரில் அமைச்சுக் கட்டிலில் அமர்ந்து ஆணை செலுத்தி வந்தாராயினும், தாமரையிலைத் துளி போல உலக வாழ்வில் ஒட்டாமல் இருந்து பேரின்பப் பெருவாழ்வை நாடி நின்றார். உண்மையை உணர்த்தித் தன்னை உய்ப்பிக்கவல்ல ஞானாசிரியன் எப்பொழுது வருவான் என்று உள்ளூற ஏங்கிக் கொண்டே இருந்தார்.

சோழநாட்டுக் கடற்கரையில் நல்ல குதிரைகள் வந்திறங்கி உள்ளன என்று கேள்வியுற்றான் பாண்டியன். அமைச்சர் வாதவூரரை அழைத்தான். தக்க விலை கொடுத்து அவற்றை வாங்கி வருமாறு பணித்தான். பெரும்பொருளைக் கொடுத்துப் பரிவாரங்களுடன் அனுப்பினான் சொக்கலிங்கப் பெருமான் திருமுன்னர் பணிந்தெழுந்து விடை பெற்றுப் புறப்பட்டார்.

குதிரைகள் இறங்கியுள்ள துறையை நோக்கிச் செல்லும் வழியில் திருப்பெருந்துறை்யை அடைந்தார். ஆங்கே ஒரு சோலையில் அர

அர என்ற ஒலி கேட்டது. அச்சிவநாம முழக்கம் திருவாதவூரரின் சிந்தையை உருக்கியது. அங்கு ஒரு குருந்த மரத்தின் நிழலில் அடியவர் சூழக் குருமூர்த்தியின் கோலத்தோடு எழுந்தருளியிருந்த சிவபெருமானைக் கண்டார். மெய் மறந்தார். கண்ணீர் வார, குருபரனின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். தம்மை ஆட்கொண்டருள வேண்டும் என விண்ணப்பம் செய்து நின்றார். அவரது ஞான முதிர்ச்சியைக் கண்டு கருணை கூர்ந்த பெருமான் அவர்க்கு உண்மைப் பொருளை உபதேசித் தருளினார். அந்நிலையில் திருவாதவூரர் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கித் திளைத்தார். தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் பெருமான் திருவடிகளில் ஒப்படைத்தார். தொழுத கையினராய் அழுத கண்ணினராய் தழுதழுத்த அன்போடு தம்மை இழந்து மாணிக்கம் போன்று மாசற்றுத் திகழும் வாசகங்களை அமைத்துப் பாடினார். அதற்கு மகிழ்ந்த குருநாதர் அவர்க்கு மாணிக்கவாசகர் என்ற சிறப்புப் பெயரைச் சூட்டிச் சின்னாள் இங்கே இருப்பாயாக என்று கூறி அடியாரோடு மறைந்தருளினார்.

படைகள் புடைசூழப் பட்டும் பணியும் அணிந்து அரசரைப் போல வந்த திருவாதவூரர், இப்பொழுது மெய்த்துறவியாகி, வெண்ணீறணிந்து விழிநீர் பெருக்கி, இரவும் பகலும் எம்பெருமான் நினைவாகவேயிருந்தார். தாம் கொண்டு வந்த பொருளையெல்லாம் திருக்கோயிற் பணிகளுக்கே செலவிட்டார். வாதவூரர் செயலை அறிந்தான் பாண்டியன். வருத்தமும் சினமும் கொண்டான். உடனே குதிரையுடன் வருமாறு ஓலையனுப்பினான். இதுவரை உலக நடைமுறையை மறந்திருந்த திருவாதவூரர் பாண்டியனது திருமுகத்தைக் கண்டதும் உலக ஞானம் வரப்பெற்றார். பெருந்துறைப் பெருமானிடம் சென்று யாது செய்வது என இறைஞ்சினார். இறைவன் ஆவணி மூலத்தன்று நாமே குதிரைகளுடன் வருவோம். நீ முன்னே செல்க, சென்று இந்த விலையுயர்ந்த மாணிக்கக்கல்லை அரசனுக்குக் கையுறையாகக் கொடு என்று கூறி, ஒரு மாணிக்கக்கல்லைத் தந்தருளினார்.

மாணிக்கவாசகர் மறுநாள் புறப்பட்டுச் சென்றார். முன்போல அமைச்சர் கோலத்துடன் மதுரையை அடைந்தார் பாண்டியனைக்

கண்டார் மாணிக்கமணியை மன்னனுக்குக் கொடுத்து மகிழ்வித்தார். பாண்டியன் வாதவூரர்க்கு வரிசைகள் பல வழங்கிச் சிறப்புச் செய்தான்.

ஆவணி மூலத்திற்கு முன்னாள் வரை குதிரைகள் வந்து சேரவில்லை. பாண்டியன் ஒற்றர் மூலம் வாதவூரர் சொல்லியவை எல்லாம் பொய்யென்று அறிந்தான். சீற்றங்கொண்டான். வாதவூரரை ஒறுத்து அவர் கொண்டு சென்ற பொருளையெல்லாம் திரும்பப் பெறுமாறு ஏவலருக்கு ஆணையிட்டான். அவ்வாறே ஏவலாளர் அமைச்சர் பெருந்தகையை அருஞ்சிறையில் பூட்டிக் கொடுமையாக வருத்தினர். வாதவூரர் தம்மை ஆண்டு கொண்டு அருளிய பெருமானை நினைத்து, ஐயனே உனக்கு ஆளான நான் இவ்வாறு அல்லலுறுவது தகுமோ? இந்த நிலையில் என்னைக் கைவிடுதல் உனக்கு அழகோ? என்று கூறி வருந்தி நின்றார்.

திருவாதவூரர் துயர் தீர்க்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான் நரிகளை யெல்லாம் பரிகளாக்கி, தேவர்களைக் குதிரைப் பாகர்களாக்கித் தாமும் குதிரைச் சேகவன் கோலம் கொண்டு, வேதமாகிய குதிரையில் அமர்ந்து மதுரைக்கு வந்தார். கடலில் அலைகள் அடுக்கடுக்காக வருவது போலக் குதிரைகள் அணியணியாக வருவதைக் கண்ட பாண்டியன் அகமகிழ்ந்தான். வாதவூரரை விடுவித்து அவரைப் போற்றினான். சிவபிரான் குதிரைகளை நடத்திக் காட்டினார். முடிவில் குதிரைகளையெல்லாம் கயிறு மாற்றிக் கொடுத்து ஒப்படைத்து விடை பெற்று மறைந்தார்.

அன்றிரவே குதிரைகளெல்லாம் நரிகளாக மாறி ஊளையிட்டன. பழைய குதிரைகளையும் கொன்று, ஊறு பல செய்து ஓடி மறைந்தன. குதிரைக் காவலர் அரசனிடம் சென்று நடந்ததைக் கூறினர். பாண்டியன் கடுஞ்சினம் கொண்டான். நடுப்பகலில் கொடு வெயிலில் வைகை ஆற்றில் நிறுத்தி முதுகிலும் தலையிலும் கற்களையேற்றித் துன்புறுத்துமாறு செய்தான். வாதவூரர் திருவருளை நினைந்து திருவாசகப் பாடல்களைப் பாடிப் பரவினார்.

அன்பர் படும் துயர் கண்டு தரியாத சிவபெருமான் வைகையாற்றில் பெருவெள்ளம் வரச்செய்தார். வெள்ளம் மதுரை

நகர்க்குள் புகுந்து அழிவு செய்யத் தொடங்கியது. பாண்டியன் கட்டளைப்படி நகர மக்கள் அனைவரும் அணைபோடும் முயற்சியில் ஈடுபட்டனர். அந்நகரின் ஒருபால், வந்தி என்னும் நரை மூதாட்டி பிட்டு விற்று வாழ்க்கை நடத்தி வந்தாள். அவள் தனக்கு அளந்து விட்ட பங்கை அடைக்க ஆளில்லாமல் வருந்தி ஆலவாய் அண்ணலின் திருமுன்பு சென்று தன் நிலையை எடுத்துரைத்து முறையிட்டாள்.

சிவபெருமான் ஒரு கூலியாளின் கோலத்தோடு வந்தியின் எதிரே வந்து பிட்டுக்கு மண் சுமக்க இசைந்தார். அவள் அன்போடு கொடுத்த பிட்டை வாங்கியுண்டு வைகைக் கரையையடைந்தார். அங்கே மண்ணை வெட்டுவதும், வெட்டிய இடத்தில் கொட்டுவதும், சும்மாட்டை அவிழ்த்துத் தட்டுவதும், அதனைத் தலையிலே படியக் கட்டுவதுமாக இவ்வாறு, பொழுது போக்கிவிட்டு வேலை செய்து களைத்தவர் போல ஒரு மரத்தடியில் உறங்கலானார்.

பார்வையிட வந்த பாண்டியன் வந்தியின் பங்கு அடைபடாமையைக் கண்டு வெகுண்டான். கூலியாளாக வந்த பெருமானைப் பிரம்பால் அடித்தான் அடித்த அளவில் இறைவன் கரையை அடைத்து மறைந்தருளினார். அந்த அடி அரசன் முதுகிலும், மற்றைய எல்லா உயிர்கள் முதுகிலும் பட்டது. திருவாதவூரர் இறைவனது பெருங் கருணையை நினைந்து

நீறுபடும் பொன்மேனி நின்மலனே நெடுங்கங்கை
ஆறுபடும் சடைமுடியாய் அடியவர்கட்கு எளியானே
மாறுபடும் புரம் எரித்தாய் மாறுபடும் போது உடலில்
கூறுபடும் சிவஞானக் கொம்பின் உளம் குழையாதோ?

என்று உளம் வருந்தினார். பாண்டியன் வாதவூரரை வணங்கிப் பிழை பொறுக்குமாறு வேண்டினான்.

மாணிக்கவாசகர் தம் அமைச்சர் பதவியைத் துறந்து தவ வேடம் தாங்கினார். தல யாத்திரையை மேற்கொண்டு புறப்பட்டார். திருப் பெருந்துறை, உத்தரகோசமங்கை முதலாகிய தலங்களை வணங்கித் தில்லையை அடைந்தார். அங்கே தில்லைவாழ் அந்தணர்களோடு

வாதிட வந்த புத்த குருவை வாதில் வென்றார். ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார்.

திருவாசகத்தைத் தமிழ்நாட்டில் பரவச் செய்யவேண்டும் எனத் திருவுளங்கொண்ட தில்லைப்பெருமான் ஒரு நாள் அந்தண வடிவங் கொண்டு மாணிக்கவாசகரிடம் சென்று திருவாசகத்தை முழுமையும் ஓதச் செய்து எழுதிக்கொண்டார். பின் திருக்கோவையாரையும் பாடச் செய்து அதனையும் சுவடியில் எழுதிக்கொண்டு இறுதியில் திருவாதவூரன் சொல்லத் திருச்சிற்றம்பலமுடையான் எழுதியது எனக் கைச்சாத்திட்டுக் கனக சபையில் வைத்து விட்டு மறைந்தார். தில்லைவாழ் அந்தணர்கள் சுவடியைக் கண்டு வியந்தனர். மாணிக்கவாசகரிடம் சென்று பாடல்களின் பொருளினை விளக்கியருள வேண்டுமென வேண்டினர். சுவாமிகள் அம்பலவாணனைச் சுட்டிக்காட்டி இவரே இத்திருவாசகத்திற்குப் பொருளாவார் என்று கூறிப் பெருமானது திருவடிகளில் நீக்கமறக் கலந்து அருளினார். ஆனி மகத்தன்று முக்தியடைந்தார்.



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

தில்லையில் அருளியது கலிவெண்பா

(காலத்தொடு கற்பனை கடந்த சிவபெருமானுடைய பழமையைக் கூறித் திருநாமம் திருவடி திருவருட்கருணை ஆகியவற்றைப் போற்றிச் சிவனடிக்கீழ் வாழ வழிகாட்டுவது)

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

மங்கலமும் மந்திரமும் ஆகிய திருவைந்தெழுத்து வாழ்க! நாத வடிவு கொண்ட ஆத்மநாதன் தாள் வாழ்க! கண்பொருந்தும் காலத்தும் என் நெஞ்சைவிட்டு அகலாமல் நிறைந்திருப்பவன் திருவடி வாழ்க! திருவாவடுதுறையில் என்னை ஆட்கொண்ட குருநாதர்களில் மணிபோன்றவன் திருவடி வாழ்க! பதிபசு பாசங்களை உணர்த்தும் ஆகமநூல்களாக வந்து உயிர்களுக்குப் பக்கத்தில் நின்று அருள்பவன் திருவடி வாழ்க! ஒருவனாகவும், எண்ணிறந்த அருட்கோலங்களில் பலராகவும் இருக்கும் தலைவன் திருவடி வாழ்க!

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

மனஓட்டம் தொலைத்து என்னை ஆட்கொண்ட மன்னன் திருவடிகள் வெற்றி பெறட்டும். என் பிறவியை வேரறுப்பவனும் சடை, பிறை, கங்கை, கண்ணி இவற்றால் அலங்கரிக்கப் பட்டவனும் ஆகிய சிவபெருமான் வீரக்கழல்கள் வெற்றி பெறட்டும். அன்பிலாதார்க்கு எட்டாதவன் பூப்போன்ற திருவடிகள் வெற்றி பெறுக! கரமலர் கூப்பி வணங்கும் அன்பர் இதயக்கோயிலில் மகிழ்ந்துறைந்து அவர்களையும் மகிழ்விக்கும் அருளரசன்

திருவடிகள் வெற்றி பெறுக! சிவனைக் கண்டதும் தம்மை அறியாமலேயே சிரத்தின் மீது கைகூப்பித் தொழுபவர் களை மேன்மேலும் உயரச் செய்யும் சீருடைய பெருமான் திருவடிகள் வெற்றி பெறுக!

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி

எல்லாவற்றையும் ஆள்பவன் திருவடிகளுக்கு வணக்கம். எங்கள் தந்தையின் திருவடிகளுக்கு வணக்கம். அருள் ஒளி மயமானவன் திருவடிகளுக்கு வணக்கம். எல்லார் உள்ளங்களிலும் தங்குபவனுடைய சிவந்த திருவடிகளுக்கு வணக்கம். அடியார்கள் அன்பில் நிலைபெற்று நிற்கின்ற, இயல்பாகவே மலங்களிலிருந்து நீங்கியவன் திருவடிகளுக்கு வணக்கம். பிறவி மாய்ந்து போகும்படி அடியோடு களையும் மன்னவன் திருவடிகளுக்கு வணக்கம். சிறப்பு மிக்க திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் நமது தேவன் திருவடிகளுக்கு வணக்கம். வற்றாத இன்ப அருவியை அருளும் மலை போன்றவனுக்கு வணக்கம்.

சிவன்அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைப்பன்யான்

அன்பர்க்குச் சிவனாகவும் அல்லாதார்க்கு அவனாகவும் இருப்பவன் என் மனத்தில் நிறைந்து நிற்பதால், அவன் திருவருளால் அவன் திருவடிகளை வணங்கி, என் மனமகிழச் சிவனது பழமைச் சிறப்பை, சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்ற வினைகள் முழுவதும் மிச்சமின்றி அடியோடு அழிந்து போக, நான் சொல்கிறேன்.

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப், பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்

தீயவர்கள்பால் மறக்கருணை காட்டி ஆட்கொள்ள நெற்றிக்கண் உடைய பிரானாகிய நீ, எனக்கு, உலகை வாழ்விக்கும் அருட்கருணைக் கண் காட்ட, அதுவே ஆணை எனக் கொண்டு, உன் திருச்சந்நிதியில் வந்து, எண்ணத்திற்கு எட்டாத எழுச்சி மிக்க திருவடிகளை வணங்கி, விண்ணிலும் மண்ணிலும் நிறைந்து அதற்கு மேலானவனாகி, ஆணவ இருளில் கிடக்கும் உயிர்களுக்கு ஞானம் தரும் விளக்கமான ஒளியாகி, எண்ணிக்கையைத் தாண்டி, எல்லை கடந்தவனே! உன் பொருள் சேர் புகழை, உன்னைக் கண்டும் காண முடியாத பொல்லா வினையுடைய நான், எப்படிப் புகழ்வதென்று அறிய மாட்டாதவனாயிருக்கிறேன். எம்பெருமானே! நான் புல்லாகி, பூண்டு, புழு, மரம், பலவகையான மிருகங்கள், பறவைகள், பாம்புகள், கல், மனிதர், பேய், பூதம், வலிய அசுரர்கள், முனிவர்கள், தேவர்கள் என்று ஆன்மாவின் முன்னேற்றத்திற்காகப் படைக்கப்பெற்ற அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகியவற்றில் எல்லாப் பிறவிகளும் எடுத்து இளைப்படைந்தேன். இன்று உண்மையே வடிவான உன் தங்கத் திருவடிகளைக் கண்டதால், பிறவித்துயரினின்றும் விடுபட்டேன்.

உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம்அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

மலம் நீங்கி நான் கடைத்தேறுவதற்காக, என் மனத்தில் ஓம் என்ற பிரணவ மந்திரமாக நின்ற உண்மைப்பொருளே! இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவனே! அறத்தின் வடிவான இடப வாகனத்தில் காட்சியளிப்பவனே! வேதங்கள் எல்லாம் ஐயா என்று அழைக்கும்படி, அவற்றுக்கு எட்டாமல், உயர்ந்தும் ஆழமாகவும் பரந்தும் விளங்கும் நுண்ணிய வடிவானவனே! கதிரில் வெப்பமானவனே! மதியில் தண்மையானவனே! உயிர்களுக்குள் விளங்கும் தூயவனே! நிலையற்ற உலக இன்பங்களெல்லாம் போய் ஒழிய, என்முன் வந்தருள் செய்து, உண்மை ஞானமாக விளங்கும் நிலையான பேரொளியே! எந்த அறிவுமில்லாத என் கையில் கிடைத்த இன்பப் பெருமானே! என்னுடைய அறியாமையை அகற்றும் நல்லறிவானவனே! ஆதியும் நிலையும் அந்தமும் அற்றவனே! உலகங்கள் எல்லாவற்றையும் படைப்பவனே! வினைநுகரச்செய்து காப்பவனே! பின் தன்னுள் ஒடுக்கிக் கொள்பவனே! இதற்காகவே அருள் வடிவெடுத்து அருள்பவனே! உயிர்களை மறைப்பு சக்தியால் மறைத்துப் பல உடம்புகளில் சேர்த்துப் பாசங்களைப் போக்குபவனே! என்னை உன்னடியார் கூட்டத்தில் சேர அருள்செய்தவனே! பூவின் மணம் போல் என்னுள் பூத்தவனே! நினையாதவர்க்குத் தூரத்தில் இருப்பவனே! நினைப்பவர்க்குப் பக்கத்துணை ஆனவனே! வாக்கு, மனம் இரண்டாலும் அளக்க வொண்ணாமல் மறைந்து நிற்பவனே!

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

கறந்த பாலும், கரும்புச் சாறும், நெய்ப்புத்தன்மை உடைய தேனும் ஒன்றாகக் கலந்தால் நாவிற்கு இனிப்பது போலச் சிறப்புடையதாகி அன்பர்கள் மனத்தில் தேன் போல இன்பம் ஊறச் செய்து, இப்பிறவியிலேயே பிறவி மரத்தை அறுக்கும் எம்பெருமானே! (ஈசானம் தத்புருஷம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்ற) ஐந்து முகங்களிலும் (ஸ்படிகம், பொன், கருமை, செம்மை, வெண்மை என்ற) ஐந்து நிறங்களைப் பெற்றவனே! தாம் வாழ்வதற்காக வணங்கும் தேவர்களுக்கு மறைந்திருப்பவனே! எங்கள் தலைவனே! வலிமைமிக்க வினைகளையுடைய என்னை, முழுவதுமாக மறையுமாறு மூடிவிட்ட ஆணவமாகிய மாயம் பொருந்திய இருளை, புண்ணிய பாவங்களாகிய அரிய கயிறுகளால் கட்டி, வெளியில் தோலால் போர்த்திவைத்து, உடம்பிலுள்ள புழுவும் அழுக்கும் வெளியில் தெரியாதவாறு மறைத்து, மலம் சேருகின்ற ஒன்பது துவாரங்களை வாயில் படிகளாக உடைய இக்குடிசையை, புலன்கள் ஐந்தும் வஞ்சனைசெய்து கலங்கவைக்க, அதனால் என் மனம் நெறிதவறிச் செல்ல, மலங்கள் இல்லாத பெருமானே! உன்னோடு கலந்து அன்புமிக்கவனாகிக் கசிந்து உள்ளம் உருக நிற்கும் நல்லதன்மையில்லாத சிறியவனாகிய எனக்கும் அருள்செய்து, மானிடச் சட்டை தாங்கி இம்மண்ணின் மேல் வந்தருளி, பாதாளம் ஏழினும் கீழ்ப்பபர்ந்த திருவடிகாட்டி, நாயை விடக்கீழான எனக்கு, தாயை விடச் சிறப்பாகக் கருணைகாட்டித் தடுத்தாண்ட தத்துவனே!

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

(புகையாகிய) மாசில்லாத ஒளியாக மனமலரில் அன்பினால் ஒளிவீசும் மலர்ச்சுடர் போன்றவனே! தெய்வீக ஒளி உடையவனே! தேன் போல உயிரை உய்யச்செய்யும் அமுதமே! சிவபுரத்து அரசனே! உயிர்களைக் கட்டும் பாசமாகிய பற்றுக்களை நீக்கிப் பெருமை உடையதாக்கும் வழிபடத் தக்கவனே! உன் திருவடிக்கண் அன்பு கொள்ள அருள்செய்து, நெஞ்சில் இருந்த காமம் முதலிய வஞ்சனைகள் நீங்குமாறு, என் மனத்தை விட்டு அகலாது நிற்கும் பேரருட்கருணைப் பெருவெள்ளமே! உண்ணத் தெவிட்டாத அமுதமே! அளக்கமுடியாத பெருமை மிக்கவனே! உன்னை நினையாதார் உள்ளங்களில் ஒளிந்திருக்கும் பேரொளியே! அன்பினால் கண்ணீர் பெருக, என் உள்ளத்தை உருக்கி, என் உயிருக்குயிராய் நிற்பவனே! இன்ப துன்பங்கள் இல்லாதவனே! அடியார்கள் உள்ளத்தில் இருக்கும்பொழுது அவர்கள் இன்ப துன்பங்களைத் தனதாக்கிக் கொள்பவனே!

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார்தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே

அன்பு செலுத்துவோர்பால் அன்பு வைப்பவனே! எல்லாப் பொருள்களுடனும் இருப்பவனாய், அவற்றினின்றும் வேறுபட்டுத் தோன்றும் ஒளி வடிவானவனே! ஆணவமாகிய இருளுக்குள் இருளாய்ச் செறிந்திருப்பவனே! யாராலும் முழுவதும் காணமுடியாத பெருமை உடையவனே! ஆதியும் முடிவும் நடுவுமாகி இருப்பவனே! இம்மூன்றும் தனக்கு இல்லாதவனே! என்னை வலியவந்து இழுத்து ஆட்கொண்ட என் தந்தையும் தலைவனும் ஆனவனே! தீவிரமான சிவஞானத்தால் உன்னை உணரும் ஞானியர் மனத்திலும் காணமுடியாதவனாய்

இருப்பவனே! நுட்பமான அறிவிலும் நுட்பமான நுண்ணுணர்வாய்த் திகழ்பவனே! போவதும் வருவதும் இணைவதும் (பிரிவதும்) இல்லாமல் நிலைத்திருக்கும் புண்ணிய வடிவானவனே! அனைத்தையும் காக்கும் காவலனே! கருவி கரணங்கள் காணமுடியாத அருள்ஒளியே! கருணைப் பேராற்றில் வரும் பேரின்ப வெள்ளமே! என் தந்தையே! எல்லாவற்றையும் விட மிகுந்தவனே! என் முன் தோன்றிய சுடர் ஒளியே! சொல்ல முடியாத நுட்பமான உணர்வு மயமானவனே! அடிக்கடி மனம் மாறும் உலக உயிர்களின் ஆன்ம பக்குவத்திற் கேற்றவாறு வெவ்வேறு வடிவங்கள் எடுத்து வந்து அவற்றுக்கு அறிவு தந்து தேற்றும் பெருமானே! உயிர்கள் தேறியபின் அடையும் ஞானத்தெளிவே! என் மனத்தில் எப்பொழுதும் ஊறிக் கொண்டிருக்கும் உண்ணக் கிடைத்த அமுதமே! எங்களை உடைமைகளாக உடையவனே!

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே 'ஓ'என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

எடுத்த பிறவிகளுக்கேற்ப வேறுபடுவதும், வயதுஏற ஏற மாற்றமடைவதும், சுத்தப்படுத்தாவிட்டால் புலால் நாறுவதுமான இவ்வுடம்பின் உள்ளே, அடைபட்டுக் கிடக்கும் இத்துயரை நான் இனியும் தாங்கமாட்டேன். என் தலைவனே! சிவபெருமானே! என்று பலகாலும் உன்னைப் போற்றிப் பாடலால் புகழ்ந்து தியானத்தில் இருந்து, பொய்யான உலக இன்பங்களைவிட்டு, மெய்ப்பொருளின் வடிவான அடியார்கள், மீண்டும் இவ்வுலகிற்கு வந்து வினையின் விளைவாய்ப் பிறப்பு எடுக்காமல், ஏமாற்றும் புலன்களை உடைய இவ்வுடம்பின்

வினைக்கட்டை அழிக்கவல்லவனே! எல்லாம் அழியும் சங்கார கால இருளில், எல்லா உயிர்களுக்கும் ஓய்வளித்தோமென்று மகிழ்வோடு ஆடும் தலைவனே! தில்லையில் நடனமாடும் கூத்தப்பெருமானே! பாண்டி நாட்டைப் பழம்பதியாக உடையவனே! துன்பம் தரும் பிறவியை வேரறுப்பவனே! என்று சொல்லைக் கடந்த பெருமானை, தங்களால் முடிந்தவரை சொல்லி, அவனுடைய திருவடிக் கீழிருந்து, (இதுவரை நான் சொல்லிய) பாடலின் பொருளாயிருக்கும் நடராசப் பெருமானை மனத்தால் உணர்ந்து சொல்லக்கூடியவர்கள் ஞானச் செல்வர்கள், அவர்கள் பல்லோரும் தம்மை வணங்கும் உயர்ந்த நிலைபெற்று, தாம் சிவபெருமானைப் பணிந்து சிவபுரத்தில் நிலையாக உள்ளவர் ஆவர்.

(குறிப்பு: சிவபுராணம் இருபத்தெட்டாவது வரியில் "கல்லாய் மனிதராய்" என்பது "கல்லா மனிதராய்" என்றிருக்க வேண்டுமென்றும் ஏட்டில் இருந்து எடுத்தெழுதும் பொழுது பிழை நேர வாய்ப்பிருக்கிறது என்றும், பேராசிரியர்.தெ.ஞானசுந்தரம் அவர்கள் கருதுகிறார்கள். கல்லுக்கு உயிரில்லை என்பதால் இது ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவே உள்ளது.)



பாய்பரியோன் தந்த பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலரால் சொற்செய்து - மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளும் தே.

- திருக்களிற்றுப்படியார்

உ. கீர்த்தித் திருவகவல்

தில்லையில் அருளியது நிலைமண்டில ஆசிரியப்பா

(சிவபெருமானுடைய புகழ்பெருகும் செயல்களைக் கூறுவது இந்த அகவல். இறைவன் நீக்கமற நிறைந்திருப்பது, பல ஞான நூற்களை அருளியது, அவன் நிகழ்த்திய அற்புதத் திருவிளையாடல்கள் திருத்தசாங்கம் ஆகியவை இந்த அகவலில் கூறப்படுகின்றன)

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயிர் எல்லாம் பயின்றனன் ஆகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோர் உலகும்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்
என்னுடை இருளை ஏறத் துரந்தும்
அடியார் உள்ளத்து அன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்

பூதங்கள் அனைத்தும் விரிய இடங்கொடுக்கும் ஆகாயத் தலமாகிய தில்லை என்னும் பழமையான நகரில் நடனமாடிய திருவடியால், எல்லா உயிர்களிடத்தும் இடைவிடாமல் ஆடுபவன் ஆகி, எண்ணிக்கையற்ற பல்வேறு குணங்களோடும் உயிர்களிடம் அழகுடன் விளங்கி, மண்ணுலகையும் சொர்க்கத்தையும் வானோர் வாழும் உலகையும் படைத்து, அங்கங்கே உள்ள உயிர்களுக்குப் பக்குவமடைவதற்கான கல்வியறிவைத் தந்தும், திருவடிக்கண் சேரும் பக்குவம் வந்ததும் கல்வியறிவை அழித்தும், என்னுடைய அறியாமையாகிய இருளை முழுவதும் நீக்கியும், அன்புமிக்க அடியார் உள்ளத்தைத் தான் இருக்கும் இடமாகக் கொண்ட கொள்கையும், அதனால் பெற்ற சிறப்பும் நிலைபெற்ற மகேந்திரமலையில் தான் முன்பு கூறிய ஆகமங்களை வெளிப்படச் செய்த திருவருளும்

கல்லா டத்துக் கலந்தினிது அருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியில் பான்மொழி தன்னொடும்
எஞ்சாது ஈண்டும் இன்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்

விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்தும்
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்து
உற்றஐம் முகங்க ளால்பணித் தருளியும்

கல்லாடம் என்ற தலத்தில் கலந்து இன்பமுடன் எழுந்தருளி உமையவளுடன் இன்பம் எய்தியும் பஞ்சப்பள்ளி என்ற தலத்தில் பால் போன்ற மொழிகளைப் பேசும் உமையவளுடன் எழுந்தருளி, என்றும் குறையாத திருவருளை விளைவித்தும், வேட்டுவக் கோலத்துடன் முருக்கமலர் போல் சிவந்த வாயினைஉடைய உமாதேவியின், ஒன்றோ டொன்று நெருங்கியுள்ள முலைத் தடங்களில் தோய்ந்தும் (உயிர்களுக்குப் போகத்தை நல்கியும்) வலைஞன் ஆகிச் சுறாமீனைக் கொன்றும், பெரிய ஏடுகளில் எழுதப்பெற்ற ஆகமங்களைக் கொண்டு வந்தும், அந்த ஆகமங்களை மகேந்திரமலையில் எழுந்தருளி இருந்து தன்னுடைய ஐந்து முகங்களாலும் மக்களுக்கு உபதேசித்தருளியும்

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூறாயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசனிப் புவனியை உய்யக்
கூறுடை மங்கையும் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர், விட்டே றருளிக்
கோலம்பொலிவு காட்டிய கொள்கையும்

நந்தம் பாடி என்ற தலத்தில், நான்கு வேதங்களையும் அறிந்த அந்தணனாய், எல்லையிலாக் கருணைமிக்க குருநாதனாய் எழுந்தருளியும், உலகம் உய்வதற்காகப் பல்வேறு வடிவங்களைத் தாங்கி, பலபல இயல்புகளையுடைய பல நூறாயிரம் பொருட்களுமாகி, இடபவாகனத்தை உடைய இறைவன், தன் உடம்பில் ஒரு பகுதியாக உள்ள உமையும் தானுமாய் எழுந்தருளி, குதிரையை ஓட்டிக்கொண்டு, திருப்பெருந்துறைக்கு மேற்கேயுள்ள மதுரையம்பதியில் மிகச் சாமர்த்தியமாகக் கூட்டத்துள் ஒருவனாய்த் தானே வந்தும், வேலம்புத்தூர் என்ற தலத்தில் உக்கிர குமார பாண்டியனாக வந்த முருகப்

பெருமானுக்கு வேல்கொடுத்து அழகான திருக்கோலம் காட்டிய கொள்கையும்,

தர்ப்பணம் அதனில் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற்கு ஈந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற்கு அளவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெறாஅது
ஆண்டான் எங்கோன் அருள்வழி இருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தணன் ஆகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்

சாந்தம் புத்தூர் என்ற தலத்தில் விற்போர் புரியும் வேடனுக்காகக் கண்ணாடியில் படைக்கலன்களைப் படைத்துக் கொடுத்த தன்மையும், குதிரைக்கு வைக்கும் கொள்ளுப்பையில் நெருப்பனைய திருமேனியைச் சொக்கலிங்கமாகக் காட்டிய பழமையும், அரியும் பிரமனும் அளக்க முடியாதவன், நரியைக் குதிரையாக்கிச் செய்த நற்செயலும், என்னை ஆட்கொண்டருள. அழகான திருவடிகளை அருளிய சிவபெருமான், பாண்டிய மன்னனுக்குக் குதிரைகளை விற்று அவன் கொடுத்த பொன்னை விரும்பாமல் என்னை விரும்பி ஆண்ட என்தலைவன் அவனருளையே நாடிநிற்கும் எனக்குமுன் தூண்டிவிடப்பெற்ற சோதி வடிவாய்த் தோன்றிய பழமையும், அந்தண வடிவில் என்னை ஆண்டுகொண்டு அருள்செய்து (எல்லாம் வல்ல சித்தனாய்) என்முன் மாய வித்தைகள் காட்டிய இயல்பும்

மதுரைப் பெருநன் மாநகர் இருந்து
குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்
ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையுள் இருந்து
வித்தக வேடம் காட்டிய இயல்பும்
பூவணம் அதனில் பொலிந்திருந் தருளித்

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினிது அருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்

பெருமையும் நன்மையுமிக்க மதுரை என்னும் பெருநகரத்தில் குதிரைவீரனாகக் காட்சிதந்த கொள்கையும், அந்த மதுரைமாநகரில் வந்தி என்ற அன்புமிக்க அடியவளுக்காக அழகாய் மண்சுமந்து அருள் செய்த தன்மையும், உத்தர கோச மங்கை என்னும் தலத்தில் எழுந்தருளி ஞானகுருவாக வேடம் காட்டிய இயல்பும், திருப்பூவணத்தில் விளக்கமாய் எழுந்தருளிப் (பொன்னனையாள் என்ற பக்தைக்குக் களிம்பேறாத) தூய்மையான நிறமிக்க பொன்மேனியைக் காட்டிய பழஞ்செயலும், திருவாதவூருக்கு வந்தருளி (சிறையில் கிடந்த என் காதுகளில்) திருவடிச்சிலம்பொலி கேட்பித்து அருள்செய்த பண்பும்

திருவார் பெருந்துறைச் செல்வன் ஆகிக்
கருவார் சோதியில் கரந்த கள்ளமும்
பூவலம் அதனில் பொலிந்தினி தருளிப்
பாவ நாசம் ஆக்கிய பரிசும்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவகன் ஆகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும்

திருவளர்ந்தோங்கும் திருப்பெருந்துறையில் யான் பெற்ற பெருஞ் செல்வமாய்க் காட்சிதந்து, எல்லாச் சோதிகளும் எந்தச் சோதியிலிருந்து தோன்றினவோ அந்தக் கருவான சோதியில் தன்னுருவை மறைத்துக் கொண்ட கள்ளத்தனமும், பூமண்டலத்தில் எல்லா உயிர்களோடும் இணைந்து அவற்றின் பாவங்களை அழித்தருளும் தன்மையும், பாண்டிய மன்னன் படைகளின் தாகம் தீர்த்து அவை வெற்றி பெறுமாறு தண்ணீர்ப்பந்தல் வைத்து, சிவஞான நன்னீர் தரும் காவலன் ஆகிய நற்செயலும், என்றும் புதியவனாகித் திருவெண்காட்டில் குருந்த மரத்தின் கீழ் வீற்றிருந்த கொள்கையும் பட்டமங்கலம் என்ற தலத்தில் அழகுடன் எழுந்தருளி, இயக்க மாதர் அறுவர்க்கும் அட்டமாசித்திகளையும் அருளிய தன்மையும்.

வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரின் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்
தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவில்
கோவார் கோலம் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்

வேடனாகத் தாம் விரும்பியவாறு உருவங்கொண்டு, (பாண்டிய மன்னனுக்கு வெற்றிதந்து சோழமன்னனை மடுவில் விழச் செய்து) காட்டில் மறைந்த கள்ளத் தனமும், (சுந்தரசாமந்தன் என்னும் சிவபக்தனுக்காக) பெரும் படைகளும் படைத்தலைவனும் போலக் காட்சியளித்து வேண்டிய உருவங்கொண்டு, அருள்புரியும் பெருமை உடையவனாய்க் காட்டிய தன்மையும், ஓரியூர் என்ற தலத்தில் சைவ அந்தணப் பெண்ணுக்கு உள்ளமுவந்து அருள்செய்து, இந்தப் பூமியில், குழந்தையாகத் தோன்றிய தன்மையும், பாண்டூர் என்ற ஊரில் நீங்காமல் நிறைந்திருந்ததும், தேவூர் என்ற ஊருக்குத் தெற்கில் உள்ள தீவில், ஆளும் அரசனாகக் கோலம் கொண்ட கொள்கையும், தேன் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருவாரூரில் (சித்தீச்சரக்குருமூர்த்தியாக) ஞானோபதேசம் செய்த நற்செயலும்

இடைமரு ததனில் ஈண்ட இருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசும்
ஏகம் பத்தின் இயல்பாய் இருந்து
பாகம் பெண்ணோடு ஆயின பரிசும்
திருவாஞ் சியத்தில் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்
சேவக னாகித் திண்சிலை ஏந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயாறு அதனில் சைவன் ஆகியும்

துருத்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்
திருப்பனை யூரில் விருப்பன் ஆகியும்

திருவிடைமருதூரில் அடியார்களோடு நெருக்கமாக எழுந்தருளி இருந்து, தெய்வத்தன்மை மிக்க திருவடிகளைச் சூட்டிய தன்மையும், திருவேகம்பம் என்னும் காஞ்சீபுரத்தில் தான் மட்டும் தனித்திருந்தும், உமாதேவிக்கு ஒரு பாதி கொடுத்துச் சிவசக்தி வடிவாய்க் காட்சியளித்தும் தோன்றிய தன்மையும் திருவாஞ்சியத் தலத்தில் சிறப்புடன் இருந்து மணமிக்க கூந்தலையுடைய நாககன்னிகையை அம்மையின் பாகத்தில் அமர்த்தி மகிழ்ந்த தன்மையும், அட்டாலைச் சேவகன் ஆகி, கையில் வில் ஏந்தி, (பாண்டியனை வெல்லச் சமணர் அனுப்பிய யானையை வென்று) பலப்பல தோற்றங்கள் காட்டிய தன்மையும், கடம்பூரில் தனக்கெனத் தனிப்புகழ் பெற்றிருந்தும், திருஈங்கோய்மலையில் தன் அழகுத் திருக்கோலம் காட்டியும், திருவையாற்றில் ஆதிசைவ அந்தணராகித் (தன்னைத் தான் அர்ச்சித்த மூர்த்தியாகியும்) திருத்துருத்தியில் காதலோடு இருந்தும், திருப்பனையூரில் விருப்புடன் எழுந்தருளியும்

கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்
குற்றா லத்துக் குறியாய் இருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத்து ஒருமுதல் உருவுகொண்டு
இந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையும் தன்வயின் படுத்துத்
தானே யாகிய தயாபரன் எம்இறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத்து இழிந்துவந்து அழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்

சீர்காழியில் அம்மையப்பராகக் காட்சியளித்தும், திருக்கழுக் குன்றத்தில் என்னை மறக்காமல் (வந்து திருக்கோலம்) காட்டியும், திருப்புறம்பயத்தில் வணிகப்பெண் மணத்துக்குச் சாட்சிநாதனாகி அறங்களை அருளிச்செய்தும், திருக்குற்றாலத்தில் சிவலிங்கத் திருமேனி கொண்டு எழுந்தருளியும் அளவற்ற பெருமை உடைய சோதி வடிவத்தை மறைத்து, அழகுமிக்க வடிவுடைய குருமுதல்வன் உருவம் தாங்கி, இந்திரஜாலம் போல என்முன் எழுந்தருளி, எல்லோருடைய

தன்மைகளையும் தன்னுள் அடங்கச் செய்து, அவர்கள் நெஞ்சில் தான் மட்டுமே தனித்து விளங்கும் தனிப்பெருங்கருணை உடைய எம் இறைவன், சந்திரதீபம் எனும் நகரில் சாத்திரங்களைத்தருபவனாகி, வானத்திலிருந்து இறங்கிவந்து அழகுமிக்க (அரேபியாவில் உள்ள மெக்கா என்னும்) பாலைவனத்தில் அழகிய (கல்வடிவான) தன்மையோடு நெருங்கி இருந்து அருள்செய்தும்

மந்திர மாமலை மகேந்திர வெற்பன்
அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை யாண்ட பரிசது பகரின்
ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை ஒருங்குடன் அறுக்கும்
ஆனந் தம்மே ஆறா அருளியும்
மாதில் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண்டு அருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்
மூல மாகிய மும்மலம் அறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏலுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற்கு அளவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூர் ஆகவும்
ஆதி மூர்த்திகட்கு அருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெயர் ஆகவும்
இருள்கடிந்து அருளிய இன்ப ஊர்தி
அருளிய பெருமை அருண்மலை யாகவும்

(இவ்வாறெல்லாம் எமக்குள் புரியும்) மந்திரமலையாகிய மகேந்திர மலையில் விளங்கும் அளவற்ற பெருமையும் அருளும் உடைய பெருமான், எங்களை ஆட்கொண்ட தன்மையைப் பேசினால் (அது கீழ்க்கண்ட படி அமையும்) 1. பேராற்றல் மிக்க பேரழகுடைய (அறத்தின் வடிவாய்த்) திருநீறணிந்து தோன்றும் இடபத்தை உடைய கொடியை உயர்ந்து விளங்கச் செய்தும். 2. ஆணவ மலத்தை முழுவதுமாற்றி

ஆட்கொள்ளும் ஆனந்தத்தையே ஆறாக அருள்செய்தும் 3. அருட்சக்தியை ஒரு பாகமாக உடைய கருணையாளன், நாதமாகிய பெரிய பறையை விரும்பி ஒலிக்கச் செய்தும் 4. ஆன்மாக்களுக்கு ஆணவ முதலிய மலங்கள் வந்து சாராமல் ஆண்டருள் புரியும் எம்பெருமான் முத்தலைச் சூலத்தைத் திருக்கரத்தில் தாங்கியும் 5. உயிர்களுக்கு இயல்பான ஆணவ கன்ம மாயங்களாகிய மும்மலங்களையும் அற்றுப்போகச் செய்பவன், தூயதிருமேனிச் சுடர்வீசும் எம்பெருமான், அடியார்கள் பால் அன்புடையவன் ஆகி, அவர்கள் சூட்டிய செங்கழுநீர் மாலையைப் பொருந்திய அழகுற விரும்பி அணிந்தும் 6. திருமால் நான்முகன் இவர்களால் அளக்க முடியாத சிவபெருமான், குதிரையைத் தன் ஊர்தி ஆக்கி அதன்மீது எழுந்தருளிய பேரழகும் 7. ஆன்மாக்கள் இவ்வுலகில் மீண்டும் பிறக்காமல் பிறவாவரம் அருளும் பெருமான் பாண்டிநாட்டையே தன் பழைய திருத்தலமாகக் கொண்டும். 8. பக்திசெய்யும் அடியார்களை வானோர்க்கும் உயர்ந்த உலகத்தில் வைத்துப் பாதுகாப்பவன் உத்தர கோசமங்கையையே தனக்குரிய ஊராகக் கொண்டும் 9.ஐந்தொழில் புரிய நியமிக்கப்பட்ட பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், மகேச்சுரர், சதாசிவர் எனப்படும் முதல்மூர்த்திகளுக்கு அவர்கள் அந்தந்தத் தொழில்புரிய அருள்செய்யும் தேவதேவன் என்ற பெயரையே தன் திருப்பெயராகக் கொண்டும். 10. அறியாமை இருள்மாற்றி ஆட்கொள்ளும் இன்பத்தை வாகனமாக உடைய திருவருளையே தனக்குரிய மலையாகக் கொண்டும் (இவ்வாறு பத்து அங்கங்களாலும் இறைவன் அடியவரை ஆட்கொள்கிறான்.)

எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்
அப்பரிசு அதனால் ஆண்டுகொண்டு அருளி
நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்கம் எய்தியும்
பூதலம் அதனில் புரண்டுவீழ்ந்து அலறியும்
கால்விசைத்து ஓடிக் கடல்புக மண்டி
நாத நாத என்றழுது அரற்றிப்
பாதம் எய்திலர் பாதம் எய்தவும்

அடியார்கள் ஒவ்வொருவருடைய தன்மைக்கும் தகுதிக்கும் ஏற்றபடி அவரவர்க்கு உரிய தன்மைகளால் ஆட்கொண்டு அருள்செய்து, நாய் போன்ற என்னை நலமிக்க தில்லையில் அழகிய பொன்னம்பலத்திற்கு வருக என்று கட்டளையிட்டு, என்னை மட்டும் (என் தகுதிக்குப் பொருத்தமாக) இங்கேயே விட்டுவிட்டு (எம்பெருமான் மறைந்தான். அப்பொழுது) அவனோடு கூடச் சென்ற அடியவர்கள் இரண்டறக்கலக்க அவர்களோடு இறைவனும் கலந்தருளியும், அவ்வாறு கலக்கும் பேறுபெறாதவர்கள், குருநாதன் மறைந்தபொழுது எழுந்த சோதியுள் பாயவும், சிலர் அவன்மேல் மால்கொண்டு மயங்கி வீழ்ந்தும், பூமியில் விழுந்து புரண்டு அலறியும், காலால் வேகமாகக், கடற்கரை வரை ஓடிச்சென்று எங்கள் நாதனே நாதனே என்று அழுது புலம்பவும் இவ்வாறு முன்பு திருவடிப்பேறு அடையாதவர்கள் இப்பொழுது திருவடிபெறவும்

பதஞ்சலிக்கு அருளிய பரமநா டகஎன்று
இதஞ்சலிப் பெய்தநின்று ஏங்கினர் ஏங்கவும்
எழில்பெறும் இமயத்து இயல்புடை அம்பொன் 140
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத்து அழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவரோ டும்
பொலிதரு புலியூர்ப் புக்கினிது அருளினன்
ஒலிதரு கயிலை உயர்கிழ வோனே. 146

திருச்சிற்றம்பலம்

பதஞ்சலி முனிவருக்காகப் பதம்சலியாமல் ஆடும் ஆனந்த நடராசப் பெருமானே என்று மனம் சலிக்க நின்று ஏங்கிய அடியார்கள் ஏங்கி நிற்கவும், அழகு மிக்க இமயத்தின் இயல்புகள் அனைத்தும் வாய்க்கப்பெற்ற பொன்னம்பலத்தில் திருநடனம் செய்பவனும், கொவ்வைக் கனிபோல் சிவந்த வாயினை உடைய உமையவளுக்கும், காளிக்கும் அருள்புரியும் திருமுகப் புன்னகையுடையவனும் ஆகிய இறைவன், அடியவர் வாழ்த்தொலி வழங்கும் உயர்ந்த கயிலைநாதன், தன்னோடு நெருக்கமான அடியார்கள் கூட்டத்தோடு பொலிவுமிக்க புலியூரெனப்படும் தில்லையில் புகுந்து எமக்கருள் செய்து இனிதமர்ந்திருக்கிறான்.

3.திருவண்டப்பகுதி

தில்லையில் அருளியது இணைக்குறள் ஆசிரியப்பா

(சிவபெருமானுடைய தூலசூக்குமத்தை வியந்து, இறைவன் அண்டங்களெல்லாம் மிகச் சிறியனவாகத் தோன்றும்படி தான் பெரியோனாகிய தன்மையையும், ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் ஆகியவற்றைச் செய்யும் சிறப்பையும் தான் பெற்ற பேரின்ப அனுபவத்தையும் கூறக்கூடியது)

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமும் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பேர் ஊழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்து
எறியது வளியின்
கொட்கப் பெயர்க்கும் குழகன்

அண்டங்கள் எல்லாம் உருண்டை வடிவில் பெருகிக் கொண்டே இருப்பவை. அளக்கமுடியாதவை ஆகி, வளத்துடன் திகழும் தோற்றமுடைய அண்டங்கள் ஒன்றனுக்கொன்று மேலாக நிற்கும் எழுச்சியைச் சொல்லத் தொடங்கினால் அவை நூற்றியொரு கோடியை விட அதிகமானவை. (சிவபெருமானோடு இவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால்) வீட்டில் நுழைகின்ற சூரியக்கதிர்களில் செறிந்து தோன்றும் அணுக்களைப்போல இவை மிகமிகச் சிறியதாகத் தோன்றும்படி, சிவபெருமான் மிகமிகப் பெரியவன். ஆராய்ந்து பார்த்தால் பல நான்முகர் பல திருமால்கள் என்று இவர்கள் செய்யும் படைத்தல் காத்தல் இரண்டையும், சிவபெருமான் தான் செய்யும் மகாசங்காரம், அதன் நீக்கமாகிய படைப்பு, காத்தல் ஆகியவற்றில் சூக்குமமாகவும் தூலமாகவும் புயற்காற்றில் அகப்பட்ட சிறுகாற்றுப் போலச் சுழலச் செய்யும் இளமையுடையவன் ஆவான்.

முழுவதும்
படைப்போன் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் திருத்தகும்
அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையும் கிழவோன் நாள்தொறும்
அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்று
எனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்தனைத்து அவ்வயின் அடைத்தோன் அஃதான்று

எல்லா உலகங்களையும் படைக்கும் நான்முகனையும் படைக்கும் பழமையானவன். படைத்தவற்றைக் காப்பாற்றும் திருமாலையும் காக்கும் கடவுளானவன். அப்படிக் காப்பாற்றியவற்றை ஒடுக்கி மறைப்பவன். ஒடுக்கப்பட்டவற்றைச் சிலகாலம் எண்ணாமல் இருந்து, (அவற்றுக்கு ஓய்வளிப்பவனாகிய) கடவுள். மங்கலமான ஆறு சமயக் கோட்பாடுகளை உடைய ஆறுவகைச் சமயத்தவர்களுக்கும் வீடுபேறுதரும் கடவுளர் என்று சொல்லப்படுபவரெல்லாம், தனக்கு முன் சிறுபுழுக்களைப் போல் தோன்ற, தான் வீடு பேறுதரும் தலைவனாய் நிற்பவன். நாளெல்லாம் சூரியனுக்கு ஒளிகொடுப்பவன். அழகிய சந்திரனுக்குக் குளிர்ச்சி தந்தவன். வலிமைமிக்க தீயிடம் வெப்பத்தை வைத்தவன். பொய்யில்லாத வானத்தில் பூதங்களெல்லாம் கலந்து இருக்கச் செய்தவன்.மேன்மைமிக்க காற்றிடம் கிளர்ந்தெழும் ஆற்றலை அமைத்தவன், நிழல் விழக்கூடிய தண்ணீரில் இனிய சுவையை வைத்தவன், வெளிப்படையாகத் தெரியும்படி மண்ணில் உறுதியான தன்மையை வைத்தவன். எக்காலத்திலும், எத்தனையோ கோடிக்கணக்கான உயிர்களையும் அவ்வவற்றுக்குத் தக்க இடங்களில் அமைத்தவன்.

முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னோர் இல்லோன் தானே காண்க
ஏனத் தொல்எயிறு அணிந்தோன் காண்க
கானப் புலியுரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன்று அவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையில் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க

அதுவல்லாமலும், எல்லாப்பொருள்களுக்கும் முற்பட்டவனும், எல்லாவற்றையும் உடைமையாகக்கொண்ட முழுமுதல்கடவுளும், தனக்குவமை இல்லாதவனும், ஆதிவராகத்தின் கொம்பை அணிந்தவனும் காட்டுப் புலித்தோலை இடுப்பில் அணிந்தவனும், மெய்யெல்லாம் வெண்ணீற்றின் ஒளிவீசும் வித்தகனுமாகிய சிவபெருமான் (அவனை நான் காணுமாறு) என்னைக் கண்டு கொள்க! (என்னை விட்டு அவன் பிரிந்திருப்பதை) நினைக்கும் தொறும் நினைக்கும்தொறும், அதைப் பொறுக்கமாட்டாதவன் என்பதையும் இப்பிரிவு தொடர்ந்தால் அழிந்து போவேன் என்பதையும் அவன் காணட்டும். வீணையில் நாதம் இசைவது போல என் உயிரில் ஞானமாக இசைந்தவன், அவ்வீணையுள் சாதாரிப்பண் இசைத்துப் (பாணபத்திரனுக்கு அருள்செய்தவன்) எல்லோருக்கும் மேலானவன், மிகப் பழமையானவன், பிரமனும் மாலும் தேடிக்காண முடியாத

பெரியவன். வியக்கத்தக்க செயல்புரிபவன், எல்லாப் பொருட்களிலும் இணைந்திருப்பவன், சொல்லும் பொருளும் தோன்றுமுன்னே இருக்கும் பழமைமிக்கவன், மனத்தால் பற்றமுடியாமல் தூரத்தில் இருப்பவன், ஆனால் அன்பு வலையுள் அகப்பட்டுக் கொள்பவன், தன்னொப்பார் இல்லாமல் இவன் ஒருவனே இறைவன் என்று கூறும்படி ஒன்றானவன், விரிந்திருக்கும் அண்டங்கள் அனைத்திலும் விரிந்திருப்பவன், அணுவுக்கணுவாய்த் தோன்றும் நுட்பமான தலைவன், இணையிலாப்புகழுடைய ஈசன். அரியவற்றுள் எல்லாம் அரியதாய் நிற்கும் அருமையானவன், எல்லாப் பொருட்களிலும் தானே சேர்ந்திருந்து அவை வளரச் செய்பவன், நூல் தந்த சிற்றறிவால் உணரமுடியாத நுட்பமானவன் மேலுலகம் கீழுலகம் என விரிந்து பரந்தவன் என்னைக் கண்டு கொள்ளட்டும்.

அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண்ஆண் அலியெனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியில் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானும் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண்டு அருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க

தனக்குத் தோற்றமும் முடிவுமில்லாதவன் என்னைக் காணட்டும். உயிர்களைக் கட்டும் பாசப்பிணைப்பும்,அவற்றிலிருந்து விடுபடும் வீடும் ஆகியவற்றை உயிர்கள் பக்குவப்படுவதற்காக உண்டாக்கியவன். நிற்கக்கூடிய மரமுதலிய பொருட்களும் செல்லக்கூடிய உயிர் உள்ள புழு முதலிய பொருட்களும் ஆகி நிற்பவன். பல பேரூழிகளைக் கண்டு அதன் பின்னும் இருப்பவன், எல்லோரும் தன்னையடையத் தான் அருள்புரியும் ஈசன், தேவர்களாலும் அறியவொண்ணாச் சிவபெருமான்,

பெண்ணும், ஆணும் அலியுமாய் விளங்கும் பெருமான் என்னைக் கண்டு கொள்ளட்டும். எனக்கருள் புரிந்த காலத்தில் என் கண்கள் காணத் தக்கவாறு இரங்கி வந்த பெருமான் இப்பொழுது மீண்டும் அந்தப் பேற்றை நான் அடைய என்னைக் காண்பானாக! அருளை மிகுதியாகச் சுரக்கும் அமுதமானவன், அவன் தனிப் பெருங்கருணையை எனக்குக் காட்டிய பெருமான் என்னைக் காணட்டும். எனக்காக இம்மண்ணில் திருவடி பதிய வந்தவன், சிவபெருமான் இவன் என்று நான் தேறச் செய்தவன், அவனாக வந்தெனை ஆட்கொண்ட பெருமான் என்னைக் காணட்டும். நீலமலர்க்கண்ணியான உமையவளை இடப்பாதியில் உடையவன் என்னைக் காணட்டும். அருளாகிய அவளும் உடையவனாகிய அவனும் பிரிவாற்றாது தவிக்கும் என்னை உடனடியாகக் கண்டுகொள்ளட்டும்.

பரமா னந்தப் பழங்கடல் அதுவே
கருமா முகிலின் தோன்றித்
திருவார் பெருந்துறை வரையில் ஏறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளரா விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழில் தோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியில் கோபம் மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டம் கையற ஓங்கி
இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெரும் தாபம் நீங்காது அசைந்தன

சிவபெருமானாகிய பேரானந்தம் தரும் பழைய அருட்கடல், கரியமேகம் போலத் தோன்றித் திருப்பெருந்துறை என்னும் மலைமேல் ஏறி, அழகான மின்னல் திசையெல்லாம் ஒளி வீசவும், அந்த ஒளியில் ஐம்புல ஆசைகளாகிய பாம்புகள் அஞ்சி விலகி ஓடவும், வெப்பமிக்க கோடைக்காலம் தன் பெரிய தலையை மறைத்துக் கொள்ளவும்,

அழகான தோற்றத்துடன் அருள் ஒளி மிளிர, எங்களுடைய அளவற்ற பிறவிகளின் மீது கோபம் கொண்டு, (அவற்றை அகற்ற எண்ணி) மிகப்பெரும் கருணையாகிய முரசொலிக்கவும், எங்களுடைய கூப்பியகரங்கள் காந்தள் மலர்போல் விளங்கவும், அள்ளக் குறையாத சிவனருள் மழைத்துளி வீழ, அதனால் திக்கெலாம் வெள்ளம் செழிப்புடன் ஓடவும், அந்த வெள்ளத்தினால் ஆணவ மலையின் அருகில் தோன்றிய துன்பக்குளம் உடைந்து போகவும், (சிவனருள் இப்படி வெள்ளமாகப் பெருகினாலும், இந்த வெள்ளத்தை விட்டுவிட்டு) அறுவகைச் சமயங்களாகிய கானல் நீரை, தாகத்துடன் ஓடிவரும் நீண்ட கண்களையுடைய மான் கூட்டம், மிகப் பெரிய வாய் திறந்து குடிக்கப் பார்த்து, தாகம் தணியாது தளர்ச்சியொடும் வருந்துகின்றது.

ஆயிடை வானப் பேரியாற்று அகவயின்
பாய்ந்தெழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொருது அலைத்திடித்து
ஊழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்து
உருவ அருள்நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறை அகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேல் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க

அவ்விடத்தே வானதியாகிய கங்கை உள்ளே பாய்ந்து நிரம்பி மேலெழுந்து, இன்பமாகிய பெரிய சுழி தெள்ளிச் சுழித்து எங்கள் பாசமாகிய பெரிய கரையினை மோதி இடித்துவிட, பல ஊழிகளில் வளர்ந்து ஓங்கி உள்ள நம்முடைய நல்வினை தீவினையாகிய மிகப்பெரிய மரத்தை வேரோடு பறித்து, திருவருளாகிய தண்ணீரை ஓடச்செய்து, உயர்ந்த மலைகளில் திகழும் சந்தனமரங்களால் வானுயர்ந்த அணைகட்டி, தேன்சொரியும் மலர்கள் மலரும் குளங்களை வளைத்து, நிறைந்த அகில் புகைஉடைய பெரிய கரைப்பக்கம் சேர்ந்துள்ள வண்டுகள், குளத்துத் தண்ணீரின் மேற்பக்கம் வர, மேலும் மேலும் மகிழ்வோடு நோக்கி, அருச்சனை என்ற வயலில்

இறையன்பாகிய விதையை விதைத்து, தொண்டொன்றே தொழிலாய்க் கொண்ட சிவபக்தர்களாகிய உழவர்கள், உலகம் உண்பதற்குச் சிவனருள் வெள்ளத்தை வாரி வழங்க, இத்தனைக்கும் காரணமான அரும் பெரும் மேகமாய்த் தோன்றிய சிவபெருமான் வாழ்க.

கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க்கு அருளும் ஆதி வாழ்க
அச்சம் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பம் துடைப்போன் வாழ்க
எய்தினர்க்கு ஆரமுது அளிப்போன் வாழ்க
கூர்இருள் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க்கு ஏதில்எம் இறைவன் வாழ்க
காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க

கரிய படத்தை உடைய பாம்பை அரையில் கச்சையாகக் கட்டியுள்ள கடவுள் வாழ்க! அருந்தவம் புரிவோர்க்கு அருள்புரியும் ஆதிமுதல்வன் வாழ்க! அச்சத்தை அகற்றி எம்மைக் காப்பவன் வாழ்க! எப்பொழுதும் வலியவந்து எங்களை ஈர்த்து ஆட்கொள்பவன் வாழ்க! உயிர்களைச் சூழ்ந்துள்ள பிறவித்துன்பத்தை இருந்த சுவடும் தெரியாமல் துடைப்பவன் வாழ்க! தன்னை வந்து அடைந்தவர்களுக்குப் பெறற்கரிய அமுதமாகிய திருவருளை அளிப்பவன் வாழ்க! நள்ளிருளில் வளைந்து நடனமாடுபவன் வாழ்க! பெரிய மூங்கில் போன்ற தோள்களையுடைய உமையம்மையின் காதலன் வாழ்க! அயலான் என நினைப்பவர் மனத்தில் அயலான் என நிற்கும் எங்கள் இறைவன் வாழ்க! காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கும் அடியார்களுக்கு, இளைத்தபோது உதவும் வைத்த மாநிதியானவன் வாழ்க!

நச்சரவு ஆட்டிய நம்பன் போற்றி
பிச்செமை ஏற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்
கண்முதல் புலனால் காட்சியும் இல்லோன்

விண்முதல் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவில் நாற்றம் போன்றுயர்ந்து எங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக்கு எளிவந்து அருளி
அழிதரும் ஆக்கை ஒழியச் செய்த ஒண்பொருள்
இன்றெனக்கு எளிவந்து இருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந்து உள்ளம் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்

நச்சுப்பாம்பை ஆடவைக்கும் நம்புதற்குரியவனுக்கு வணக்கம்! தன் திருவடிகளில் நம்மைப் பித்துக் கொள்ளச் செய்த பெரியவனுக்கு வணக்கம். திருநீற்றுடன் காட்சிதரவல்லவனுக்கு வணக்கம். நான்கு திசைகளிலும், நடப்பனவற்றை நடக்க வைத்தும், கிடப்பனவற்றைக் கிடக்கச் செய்தும் நிற்பவற்றை நிற்க வைத்தும், (திருவிளையாடல் செய்து) சொல்லும் பதமும் கடந்த தொன்மையானவன், உள்ளத் துணர்வால் உணர்தற்கரியவன், கண் முதலிய புலன்களால் காணமுடியாதவன், ஆகாயம் முதலிய பூதங்கள் ஐந்தையும் வெளிப்படப் படைத்தவன், பூவில் மணம் போல எங்கும் நீக்கமற நிறைந்த பெருமை, இன்று எனக்காக இரங்கி வந்து அருளி, அழியும் இவ்வுடலை ஒழியச் செய்த மெய்ப்பொருளானவன்; இவ்வளவு பெரியவன் எனக்காக எளியவனாக வந்து (குருந்த மரத்தடியில் குருநாதனாக) இருந்தருள் புரிந்த இறைவனுக்கு வணக்கம். என் உடலைக் கனியச் செய்தவனுக்கு வணக்கம். ஊற்றுப் போல என் உள்ளத்திலிருந்து தானு மகிழ்ந்து (என்னையும் மகிழச் செய்பவனுக்கு) வணக்கம். பொறுக்கலாற்றாத பேரின்ப வெள்ளம் பொங்கி அலைமோத அதைத் தாங்க முடியாத இவ்வுடலை நான் விரும்பவில்லை.

மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க்கு ஒளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க்கு ஒளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உறைப்பவர்க்கு ஒளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும்
இத்தந் திரத்தில் காண்டுமென்று இருந்தோர்க்கு

அத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கவ்வி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாணுதல் பெண்ணென ஒளித்தும் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
ஒன்றுண்டு இல்லை என்றறி வொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்கும் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலில்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற்று ஒளித்தும்

மரகதக் குவியலும் மாணிக்கத் திரட்சியும் ஒன்று சேர்ந்து, மின்னுகின்ற பொன்னொளியாக விளங்க, இவ்வொளியை நான்முகன் முதலானோர் சென்று தேட, அவர்கள் காணமுடியாமல் ஒளித்தும், முறையான யோக நெறியால் காண முற்பட்டவர்களுக்கு, மனம் ஒன்று பட்டு இறைவனை நோக்கும் முயற்சியில், சுற்றத்தார் இவரை எண்ணிக் கவலைப்படுமாறு, உறைத்து நிற்கும் தவத்தினர்க்கு ஒளித்தும், வேதங்களின் தன்மையை அறிந்து ஆராய்ந்தும் இறைவனைக் காண மாட்டாமல் வருத்தமுற்றவர்க்கு ஒளித்தும், இந்த நூலில் கூறப்பட்ட வழியில் காண்போம் என நினைப்பவர்க்கு அந்த நூலுக்குள் அவ்வழியிலேயே ஒளித்தும், எப்படிச்சொன்னாலும் வெறுக்காமல் அருள்செய்யும் இறைவன் ஆண் என்று சொல்லுமாறு தோன்றியும், அலியென மாறித் தோன்றியும், ஒளிபொருந்திய நெற்றியை உடைய பெண் என ஒளித்தும், நெடுந்தூரத்தே செல்லுமாறு ஐம்புல இன்பங்களை விட்டு, அணுகமுடியாத மலைகளில் சென்று, முன்புநுகர்ந்தவற்றை யெல்லாம் அகற்றி, வெறும் உயிர் மட்டும் உடம்பில் இயங்கிக் கொண்டிருக்குமாறு அருந்தவம் செய்யும் தவத்தினர் காணமாட்டாமல் கெட்டிக்காரத்தனமாக ஒளித்தும், இறைவனை ஒன்று என்றும் உண்டு என்றும் இல்லை என்றும் நினைப்பவர் அறிவுக்கெட்டாமல் ஒளித்தும், "முன்பு பழகிய போதும் இன்று பழகும் போதும் நாம் காணமாட்டாமல் தன்னை ஒளித்துக் கொண்ட கள்வனைக் கண்டுகொண்டோம் அவனை வளைத்துப் பிடியுங்கள் அன்றலர்ந்த

மலர் மாலைகளால் அவன் திருவடிகளில் விலங்கு பூட்டுங்கள் அவனைச் சுற்றி நில்லுங்கள். சூழ்ந்து கொள்ளுங்கள், தொடர்ந்து செல்லுங்கள் விடாதீர்கள் பற்றுங்கள்'' என்று கூறியவர்களின் பற்றுதலுக்கு அகப்படாமல் முழுவதுமாக ஒளித்தும்,

தன்னேர் இல்லோன் தானே ஆனதன்மை
என்னோர் அனையோர் கேட்கவந்து இயம்பி
அறைகூவி ஆட்கொண்டு அருளி
மறையோர் கோலம் காட்டி அருளலும்
உளையா அன்புஎன்பு உருக ஓலமிட்டு
அலைகடல் திரையின் ஆர்த்தார்த்து ஓங்கித்
தலைதடு மாறா வீழ்ந்துபுரண்டு அலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்
கடக்களிறு ஏற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றேன் ஆக அவயவம் சுவைதரு
கோல்தேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில்நகை எரியின்
வீழ்வித்து ஆங்கன்று
அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்
தடக்கையின் நெல்லிக் கனியெனக்கு ஆயினன்

தனக்கு நிகரில்லாத இறைவன். தானே தனிப் பெருங் கடவுளாயிருக்கும் தன்மையை, என்னோடு ஒத்த இயல்பினர் கேட்க வந்து கூறி, குருவடிவில் அறைகூவி, ஆண்டுகொண்டு அருள் செய்து அந்தணக் கோலத்தைக்காட்டி அருளியதும், என்றுமே வருத்தம் தராத இறையன்பினால், என் எலும்பெலாம் உருக, அவன் பெயர் கூறி ஓலமிட்டு, அலைகடல் போல ஆரவாரித்து, தலைமயங்கி தரையில் வீழ்ந்து புரண்டு கதறியழுது, பித்தர் போல மயங்கி, வெறிகொண்டவர் போல் களிப்புற்று, நாட்டுமக்கள் மயங்கவும், கேட்டவர்கள் வியப்படையவும், பாகனை ஏறவிடாமல் செய்யும் யானையைப் போல் மதங்கொண்டு, இந்த அன்பால் விளைந்த பேரின்பத்தைத் தாங்கமாட்டாமல் நான் தவிக்க, என் உடம்பிலுள்ள உறுப்புக் களெல்லாம் கொம்புத்தேனால் செய்யப்பட்டவை போல இன்பம் தர, எம்பெருமான் அருள்செய்தான். முன்னாளில் பகைவரின் முப்புரங்களையும் சிரிப்பினால் உண்டாகிய நெருப்பில் விழச்செய்தது போல், இன்று

தன்னுடைய திருவருட் பெருந்தீயில் அடியவர்களாகிய எங்களில் ஒருவரும் தப்பிவிடாமல் எல்லோரையும் ஒடுக்கிக் கொண்டனன். என் உள்ளங்கையில் விளங்கித் தோன்றும் நெல்லிக்கனியாயினான்.

சொல்லுவது அறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான்எனைச் செய்தது
தெரியேன் ஆஆ செத்தேன் அடியேற்கு
அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பைதோறும் நாயுடல் அகத்தே
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளங் கொண்டோர் உருச்செய்து ஆங்கெனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன் ஒள்ளிய
கன்னல் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்பது ஆக்கினன் என்னில்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராஅமுது ஆக்கினன்
பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே.

திருச்சிற்றம்பலம்

இந்தப் பேரின்பத்தை எப்படிச் சொல்வது என நான் அறியேன். இதைத்தந்த இறைவனே! நீ வாழ்வாயாக! எனக்கும் அருளியது முறையோ! இதை நான் தாங்கமாட்டேன். நாயைப் போன்ற எனக்கு நீ அருளியவிதத்தை நான் அறியேன். ஆஆ நான் இறந்தேன். உன்னருளை முழுவதும் நான் அறியமாட்டேன். அந்த அருளமுதைப் பருகியும் நிறைவடையேன். அப்படியே விழுங்கியும் பொறுக்கமாட்டேன். வளமிக்க குளிர்ந்த பாற்கடலில் அலைகள் புரள, பௌர்ணமி நாளில் பொங்கும் கடல் போல என் உள்ளம் ததும்ப, சொற்களைக்கடந்து, அமுதம் என் மயிர்க்கால் தோறும் நிறையச்செய்தனன். நாயின் உடம்புக்குள் குடியாக இருந்து இனிய தேனைப்பாய்ச்சி நிரப்புவது போல, கொடியவனாகிய எனது ஊன் நிரம்பிய உடம்பின் பாகங்களில்

எல்லாம், வியக்கத்தக்க அமுத மழையை என் எலும்புத் துளைகள் எல்லாவற்றிலும் ஏற்றினான். அவன் திருவருளை நினைத்ததும் உருகத்தக்க மனத்தைக்கொண்டு கண்ணுக்குத் தெரியக்கூடிய ஓர் உருவம் செய்தது போல், எனக்குக் கசிந்துருகக்கூடிய உடலைப் படைத்துக் கொடுத்தான். ஒளிபொருந்திய கரும்பையும், விளாம் பழத்தையும் விரும்பி யுண்ணும் ஆண் யானையைப் போல, கடையவனாகிய என்னையும் அழியாவண்ணம் என்றும் இருக்கச் செய்தான், பிரமனும் திருமாலும் அறியமுடியாத பெருமான், என்னுள்ளே என்றும் அழியாத திருவருட்கருணை என்னும் தேனைக்கலந்து அருளொடு சேர்ந்த பேரமுதாக்கினான்.



எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமீ தேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க்கு அடிமை செய்வாம்

- பரஞ்சோதி முனிவர்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல்அறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்.

- அபியுக்தர்

வான்கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

- இராமலிங்க வள்ளலார்

4.போற்றித்திருவகவல்

தில்லையில் அருளியது நிலைமண்டில ஆசிரியப்பா

(உயிர்கள் உடம்போடு கூடித் தோன்றும் முறை, சகத்தின் உற்பத்தி, இறையன்பின் வளர்ச்சி இவற்றைக் கூறி இறைவனை வணங்குவது.)

நான்முகன்முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுலகு அளந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மால் அன்று
அடிமுடி அறியும் ஆதரவு அதனில்
கடுமுரண் ஏனம் ஆகிமுன் கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து பின்எய்த்து
ஊழி முதல்வ சயசய என்று
வழுத்தியும் காணா மலரடி இணைகள்
வழுத்துதற்கு எளிதாய் வார்கடல் உலகினில்

பிரமன் முதலிய தேவர்கள் வணங்கி எழும்ப, இரண்டு அடிகளால் மூவுலகங்களையும் அளந்து நான்கு திசைகளிலும் உள்ள முனிவர்களின் ஐம்புலன்களும் மகிழ, வணங்கி நிற்கும் ஒளிவீசுகின்ற மணிமுடியணிந்த திருமகள் கணவனாம் நெடிய திருமால், அன்று, சிவபெருமான் திருவடியின் முடிவை அறியும் ஆசையால், வலிமை மிக்க பன்றியின் வடிவங்கொண்டு, முற்பட்டு ஏழுலகங்களையும் ஊடுருவத் தோண்டி, இளைப்புற்று, "ஊழிக்காலத்தும் அழியாது விளங்கும் முதல்வனே! உனக்கு வெற்றி வெற்றி" என்று சொல்லிப் போற்றியும் காண முடியாத திருவடிகள் இரண்டும், நீண்ட கடல்சூழ்ந்த உலகத்தில் நாங்கள் வணங்குவதற்கு எளிதாய் வந்து (நின்றன.)

யானை முதலா எறும்புஈ றாய
ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்

ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

இவ்வுலகில் யானையில் தொடங்கி எறும்பு வரையான கேடில்லாத யோனிகளில் பிறப்பதிலிருந்து தப்பியும், மனிதப்பிறவியில் தாயின் வயிற்றில் குன்றுதல் இன்றிப் புழுக்கள் செய்யும் சண்டையிலிருந்து தப்பியும் முதல்மாதத்தில் தான்றிக்காயின் வடிவம்பெற்று, மயக்கம், நோய் இரண்டிலும் தப்பியும், இரண்டாம் மாதத்தில் கருத்தோற்றம் கண்டு ஒன்றுபட்ட தன்மை எய்தும் போது புழுக்களால் அழிவதிலிருந்து தப்பியும், மூன்றாம் மாதத்தில் தோன்றும் தாயின் மதநீர் கருப்பையுள் சென்று நிறையாமல் தப்பியும், நான்காம் மாதத்தில் பேரிருளுக்குத் தப்பியும் ஐந்தாம் மாதத்தில் கரு அழிவதிலிருந்து தப்பியும் ஆறாம் மாதத்தில் ஊர்மக்கள் கூறும் பழிச்சொல்லுக்குத் தப்பியும் ஏழாம் மாதத்தில் அடிவயிறு சரியத் தொடங்குவதால் கருச்சிதைவு ஏற்படுவதிலிருந்து தப்பியும், எட்டாம் மாதத்தில் தாய்க்கு மலம்கட்டிக்கொள்வதால் ஏற்படும் துன்பத்திலிருந்து தப்பியும், ஒன்பதாம் மாதத்தில் கருவெளிப்படுமுன் புரண்டு கொண்டிருப்பதால் வரும் வருத்தத்திலிருந்து தப்பியும், வெளிவரத்தக்க பத்தாம் மாதத்தில் இதுவரை தாயும் தானும் பட்ட துன்பக்கடலில் உண்டாகும் துயரத்திற்குத் தப்பியும்,

ஆண்டுகள் தோறும் அடைந்தவக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகல் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்துமுன் பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து
ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்தும்
பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்

மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்

ஒவ்வோராண்டாகப் பருவவளர்ச்சி அடையும் போது செய்யும் செயல்களின் தொகுப்பினாலும் அவற்றின் இருப்பினாலும் பலவாறு தப்பியும், காலையில் மலத்தாலும், கடும்பகலில் பசியாலும், இரவில் தூக்கச் செயலாலும், பல பயணங்கள் போவதாலும் வரும் துன்பங்களிலிருந்து தப்பியும், கருங்கூந்தல் சிவந்த வாய் வெண்மையான பற்கள் கார்காலத்து மயில் போன்ற அழகிய சாயல் இவற்றோடு, ஒன்றுடன் ஒன்று நெருங்கி, உள்ளக் கிளர்ச்சியால் மகிழ்ந்து, கச்சு என்னும் ஆடை அறுந்து போகக்கூடிய அளவுக்கு நிமிர்ந்து, ஒளிவீசி, எதிரில் பருத்து, இடுப்பு இளைக்கும்படி எழுந்து, பக்கங்களில் அடிபருத்து, சிறிய ஈர்க்குக் கூட இடையில் நுழைய முடியாவண்ணம் இணைந்திருக்கும் இளமையான முலையினையும் உடைய மங்கையரின் கூர்மையான கண்கள் கொள்ளை கொள்வதிலிருந்து தப்பியும், பித்தர்களாகிய உலக மக்களின் பெரிய நீர்த்துறையில் கிடக்கும் மதமுள்ள யானை போன்ற ஆசைகளிலிருந்து தப்பியும், கல்வி எனப்படும் பல கடல்களில் விழாது தப்பியும், செல்வம் என்னும் துன்பத்திலிருந்து தப்பியும், புல் முதலிய பல்வேறு பிறவி வேறுபாடுகளில் இருந்து தப்பியும்,

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்

(இவ்வளவு துன்பங்களிலிருந்தும் தப்பிய பிறகு) கடவுள் என்னும் சிந்தனை உண்டாகி, விருப்பு வெறுப்பற்ற ஒப்பற்ற பொருளான இறைவனையே எண்ணத் தொடங்கிய போது, உடல் உலகு கரணங்கள் என்னும் ஆறு கோடி மாயையின் சக்திகள் வேறு வேறாகத் தம் மாயையான வஞ்சனைச் செயல்களைத் தொடங்கின. நெருங்கிய உறவினர்களும் மற்றவர்களும் சேர்ந்து, கடவுள் இல்லை என்று நாத்திகம் பேசி நாத்தழும் புற்றனர். உறவினர் என்னும் பழமையான பசுக்கூட்டங்கள், உறவுப்பெயர் சொல்லி அழைத்துப் பதறினார்கள். விரதங்களாலே வீடு பேறு அடையலாம் என்று வேதம் படித்தவர்கள் சாதிக்கத்தக்க ஆதார சாத்திரங்களைக் காட்டினார்கள். பலவேறு சமயவாதிகள் அவரவர் மதங்களே பொருத்தமானவை என்று அரற்றிச் சண்டையிட்டனர்.

மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித் தாஅர்த்து
உலோகா யதனெனும் ஒண்டிறல் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம் எய்தி
அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் இடையறா அன்பில்
பசுமரத்து ஆணி அறைந்தாற்போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந்து அனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுதல் இன்றிச்
சதுரிழந்து அறிமால் கொண்டு சாரும்
கதியது பரம அதிசய மாகக்

திட்பமான மாயாவாதம் என்னும் சூறாவளி சுழித்து அடித்து ஆரவாரம் செய்யவும், கண்டதேகாட்சி கொண்டதே கோலம் எனவாழும் உலோகாயதன் என்னும் ஒளிமிக்க பாம்பின் கலை வேறுபாடுகளை உடைய கடும் நஞ்சு வந்து சேரவும், அதனால் பெரிய வஞ்சனைகள்

எனைவந்து சூழவும்,இவற்றின் வசமாகாமல் தான் பிடித்த பிடியை விடாமல், தீயைக்கண்ட மெழுகுபோல இறைவனைத் தொழுது உள்ளம் உருகிஅழுது, உடல்நடுங்க, ஆடியும் பாடியும் அலறியும் வணங்கியும், குறடும் அறிவற்றவனும் தாம் பிடித்ததை விடுவதில்லை என்னும் படி, நல்ல தைலதாரை போல இடைவிடாத அன்பால் பச்சை மரத்தில் ஆணி அடித்தால் அது மரவளர்ச்சியால் இறுகிப்பிடுங்கமுடியாதது போல, மனங்கசிவது அதிகமாகி, கடல் போலச் சுழன்று, மனம் குழைந்து போக, அதற்கு அனுகூலமாக உடம்பு நடுங்கி, உலகமக்கள் தம்மைப் பேயென்று சொல்லிப் பெருநகை கொள்ள, வெட்கமில்லாமல், நாட்டுமக்கள் பழிப்பதை ஓர் ஆபரணமாக ஏற்றுக்கொண்டு, மனம் கோணாமல், நாம் வல்லவர் எனும் எண்ணத்தை விட்டு, இறைவன் பால் கொண்ட ஞானப்பித்து அதிகமாக, அதனால் அடையும் சிவகதி மிகப்பெரிய அதிசயமாகத் தோன்ற

கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வம் கனவினும் நினையாது
அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென்று இகழாதே திருவடி இணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் ஆகி முனியாது அத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு கரையது 'புரள
நன்புலன் ஒன்றி நாதவென்று அரற்றி
உரைதடு மாறி உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி

அண்மையில் கன்றை ஈன்ற பசுவின் மனம் போலக் கதறியும், பதறியும், வேறுதெய்வங்களைக் கனவிலும் நினையாமல், அரிய பரம்பொருளான ஒப்பற்றதலைவன், இந்த உலகத்தில் வந்து, எனக்குக் குருநாதனாகி அருளிய பெருமையை, எளிதில் கிடைத்ததால் எளிமை என்றெண்ணி இகழ்ந்துவிடாமல், அவன் திருவடிகள் இரண்டையும், பிரியாதிருக்கும் நிழலைப்போல, முன்னும் பின்னுமாகத் தொடர்ந்துசென்று, சலிப்பில்லாமல், குருநாதன் எழுந்தருளிய

திருப்பெருந்துறைத் திசையையே நோக்கி, எலும்பு நைந்து உருக, உள்ளம் மிகக்கனிந்து, ஏங்க, திருவடிகள் மீது அன்பென்னும் ஆறு கரைபுரண்டு செல்ல, நல்ல புலனுணர்வுகள் ஒன்றுபட்டு, என் தலைவனே என்று அழுதரற்றிச் சொல் தடுமாற, மெய்ம்மயிர் சிலிர்க்க, கைகளாகிய மலர்கள் குவிய, நெஞ்சத்தாமரை மலர, கண்களில் கண்ணீர்த் துளிகள் அரும்ப, அழியா அன்பினால் நாள்தோறும் செழித்து ஓங்கும் மெய்யன்புடைய அடியார்களைத் தாயே ஆகிவளர்க்கும் பெருமானே போற்றி.

மெய்தரு வேதியன் ஆகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக்கு ஆரமுது ஆனாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னார் உருவ விகிர்தா போற்றி
கன்னார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக்கு அருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி

உண்மைப்பொருளை உணர்த்தும் அந்தணனாகி என் பழவினை முழுதும் கெட, கைகாட்டி அருளவல்ல கடவுளே போற்றி பொன்மயமான மதுரையில் அரசாண்ட சோமசுந்தர பாண்டிய மன்னனே போற்றி. நான்மாடக் கூடல் விளங்கக் காரணமான குருநாதனே! போற்றி. தெற்கில் பொன்னம்பலமாய் விளங்கும் தில்லையில் ஆடுபவனே! போற்றி! இன்று எனக்குக் கிடைத்த அரிய அமுதே! போற்றி! அழிவற்ற நால் வேதங்களுக்கும் முதல்வனே! போற்றி. இடபம் எழுதப் பெற்ற

வெற்றிக் கொடியினை உடைய சிவபெருமானே! போற்றி. மின்னல் போல் அதிக ஒளிவீசக்கூடிய பல்வேறு திருமேனிகளை உடையவனே! போற்றி. கல்லில் நார் உரிப்பது போல என் மனத்தை உருக்கிக் கனிபோல் இனித்தவனே! போற்றி என்னைக் காக்கவந்த பொன்மலையே! போற்றி. ஆஆ! எனக்கு அருள்புரிபவனே போற்றி எல்லாவற்றையும் ஆக்கிக் காத்து அழிப்பவனே! போற்றி துன்பங்கள் அனைத்தையும் வேரொடு களையும் அப்பனே! போற்றி ஈசனே! போற்றி. இறைவனே போற்றி. ஒளியுள்ள பளிங்கின் திரட்சியே! போற்றி அரசனே! போற்றி. அமுதமே! போற்றி. மணமிக்க திருவடிகளையும் (அடியார் அன்புக்கேற்ப அருள்) வேறுபாடுகளையும் உடையவனே! போற்றி. வேதங்களை உடையவனே! போற்றி. இயல்பாகவே மலமற்றவனே! போற்றி. ஆதிமுதல்வனே! போற்றி. பேரறிவுப் பெரும் பொருளே! போற்றி.

கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க்கு அரிய மருந்தே போற்றி
ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேஅருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி யரனே போற்றி
உரையுணர்வு இறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி
அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகில் ஆகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவன் ஆக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

அடையத்தக்க வீடுபேறு ஆனவனே! போற்றி. கற்றவர் உண்ணும் கனியே! போற்றி. கங்கை தங்கிய சிவந்த சடையை உடைய விரும்பத்தக்கவனே! போற்றி. எல்லாவற்றையும் உடையவனே! போற்றி. மெய்யுணர்வே! போற்றி. கீழ்ப்பட்ட என்னையும் அடிமையாக ஏற்றுக்கொள்ளத்திருவருள் நோக்கம் செய்தவனே! போற்றி. ஐயனே! போற்றி அணுவாயிருப்பவனே! போற்றி. சைவனே! போற்றி. தலைவனே போற்றி. உயிர்கள் அன்பு செலுத்தத்தக்க அடையாளமானவனே! போற்றி. எட்டுக்குணங்களை உடையவனே! போற்றி. (சென்றடையும் பொருளாயிருப்பதோடு) செல்லும் வழியாகவும் இருப்பவனே! போற்றி. எங்கள் நினைவுகள் எல்லாவற்றிலும் விளங்குபவனே! போற்றி. அமுதம் பெற்ற தேவர்களும் அடைய முடியாத பேரமுதே! போற்றி. மற்றவர்களுக்கு எளிவந்து அருள்புரியும் இறைவனே! போற்றி. மெய்யடியார்கள் சுற்றத்தார் இருபத்தொரு தலைமுறைக்கு ஒன்றோடொன்று மாறுபட்ட நரகங்களில் வீழ்ந்து அழுந்தாமல் காப்பாற்றும் அரசனே! போற்றி. துன்பமகற்றி இன்பமளிக்கும் நண்பனே! போற்றி. எனக்குத் துணையானவனே! போற்றி. என் வாழ்வானவனே! போற்றி. என் சேமநிதியே! போற்றி முத்தியின்பமானவனே! போற்றி. முதலானவனே! போற்றி. எல்லா உயிர்களுக்கும் தந்தையே! போற்றி. சிவபெருமானே! போற்றி. உரைகளையும் உணர்வுகளையும் கடந்து நிற்கும் ஒருவனே! போற்றி கடல் சூழ்ந்த உலகில் வாழும் பொழுது உயிர்கள் அடையும் பயனே! போற்றி. அரியபொருளாயினும் எளியவனாய் வந்தருளும் அழகே! போற்றி கருமுகில் போல் அருள்மழை பொழியும் கண்ணே! போற்றி. என்றும் நிலைத்திருக்கும் திருவருள் என்னும் மலையே! போற்றி ஒன்றுக்கும் பற்றாத என்னையும் ஓர் அடியவன் என்று அடியார்களில் ஒருவனாக்கி, சிறந்த திருவடிகளை என் தலைமேல் வைத்துத் திருவடிதீட்சை தந்த வீரனே! போற்றி.

தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத்து அமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி

தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி
கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி
இடைமருது உறையும் எந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலைஎம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி

தொழுத கையினர் ஆன தொண்டர்களின் துன்பங்களை முழுவதுமாக அகற்றுபவனே! போற்றி. ஆக்கமும் பெருக்கமும் சுருக்கமும் இல்லாத ஆனந்தக் கடலே! போற்றி. அழிவையும் படைப்பையும் கடந்தவனே! போற்றி அண்டங்களில் உள்ள எல்லா உயிர்களையும் கடந்த முதல்வனே! போற்றி. (உயிர்களுக்குப் போகமும் வீடும் தருவதற்காகக் கல்யாண சுந்தரனாக வரும்) மான் போன்ற கண்களையுடைய உமையவள் மணவாளனே! போற்றி. வானகத்திலுள்ள தேவர்களுக்கு அவர்கள் நினையாவிடினும் நன்மைசெய்யும் தாயானவனே! போற்றி. பூமியிடத்தில் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என ஐந்து தன்மைகளாய் விரிந்தவனே! போற்றி. தண்ணீரில் சுவை ஒளி ஊறு ஓசை என நான்காக விளங்கியவனே! போற்றி. தீயில் ஒளி ஊறு ஓசை என மூன்றாகத் திகழ்ந்தவனே! போற்றி. காற்றில் ஊறு ஓசை என இரண்டு தன்மைகளாய் மகிழ்ந்தவனே! போற்றி. வான்வெளியில் ஓசை மட்டுமே ஆக விளைந்தவனே! போற்றி. அன்பால் முதிர்ந்த அடியார் உள்ளத்தில் அமுதாய் இனிப்பவனே! போற்றி. சிவனைச் சிந்தியாத தேவர்களுக்குக் கனவில் கூடக்காணமுடியாதவனே! போற்றி. நாய் போன்ற அடியவனுக்கு விழிப்பு நிலையிலும் வந்து அருள் விளக்கம் செய்தவனே! போற்றி. திருவிடைமருதூரில் எழுந்தருளிய என் தந்தையே! போற்றி சடையில் கங்கையை (ஆபரணம் தரிப்பது போல) வருத்தமின்றித் தாங்கியவனே! போற்றி. திருவாரூரில் அமர்ந்தாடும் தியாகராசனே! போற்றி. சீர்மிக்க திருவையாற்றுக்கு உரியவனே! போற்றி. திருவண்ணாமலையில் மலையாக உள்ள அண்ணலே! போற்றி. கண்கள் மகிழக்காட்சிதரும் ஆனந்தக் கடலே! போற்றி.

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங்கு அறியேன் போற்றி
குற்றா லத்தெம் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத்து அழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
அத்திக்கு அருளிய அரசே போற்றி
தென்னாடு உடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி
ஏனக் குருளைக்கு அருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி

கச்சியம்பதியில் உறைகின்ற எந்தாய்! போற்றி. இடப்பாகம் பெண்வடிவ மானவனே! போற்றி. திருப்பராய்த்துறையில் எழுந்தருளியுள்ள பரம்பொருளே! போற்றி. திருச்சிராப்பள்ளியில் விளங்கும் சிவபெருமானே! போற்றி. உன்னைத்தவிர வேறு ஒரு பற்றையும் நான் அறியேன். போற்றி. திருக்குற்றாலத்தில் நடனமாடுபவனே! போற்றி. திருவாவடுதுறையில் விரும்பி அமரும் செம்பொற்றியாகராசனே! போற்றி. திருஈங்கோய் மலையில் உள்ள எந்தையே! போற்றி. அழகுடைய திருப்பழனத்துக்கு அழகுண்டாக்கும் அழகனே! போற்றி. திருக்கடம்பூரில் எழுந்தருளும் உளிபடாச் சுயம்பு மூர்த்தியே! போற்றி. சிவனேதுணை எனத்திருவடி அடைந்தவர்க்கு அருள் செய்யும் அப்பனே! போற்றி. பட்டமங்கலம் என்ற தலத்தில் இத்திமரத்தின் கீழிருந்து இயக்கிமார் அறுவர்க்கும், மதுரையில் வெள்ளையானைக்கும் அருள் வழங்கிய அரசனே! போற்றி. தென்னாட்டை உரிமைநாடாக உடைய சிவபெருமானே! போற்றி எல்லா

நாட்டவர்க்கும் தலைவனே! போற்றி. பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டி அருள் புரிந்தவனே! போற்றி. மிகப் பெருமையுடைய கயிலை மலைக்கு உரியவனே! போற்றி. அருள் தர வேண்டும் அம்மானே! போற்றி. ஆணவ இருள்கெட அருள் தரும் இறைவனே! போற்றி. வேறு துணையற்றுத் தனியாய் நிற்கும் அடியவன் தளர்ந்தேன் போற்றி. என் சிந்தனைக்கு நீயே களமாக இருக்கவும் உன்னையே கருதவும் அருள்செய்பவனே! போற்றி.

அஞ்சேல் என்றிங்கு அருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சேர் அடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநாடு உடைய மன்னே போற்றி
கலையார் அரிகேசரியாய் போற்றி
திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத்து அரனே போற்றி

பிறவிப்பிணிக்கு அஞ்சி அலையும் எனக்கு அஞ்சேல் என்று அபயமளித்துக் காக்க வேண்டும் போற்றி. நஞ்சை அமுதமாக விரும்பி ஏற்றவனே! போற்றி. அப்பா! போற்றி. ஐயா! போற்றி. நித்தியமாய் இருப்பவனே! போற்றி. மலமற்றவனே! போற்றி. அன்பருக்கு அன்பனே! போற்றி. எல்லாவற்றுக்கும் பிறப்பிடமானவனே! போற்றி. பெரியவனே! போற்றி. வள்ளல் தன்மை உள்ளவனே! போற்றி. எல்லோர்க்கும் அரியவனே! போற்றி. மலம் இல்லாதவனே! போற்றி. அந்தண

வேடத்திற்கு நல்ல வழிகாட்டியாய் இருப்பவனே! போற்றி. என்னை இப்படிப் புலம்பவிடுவது முறையோ? இனி யான் ஒரு போதும் உனைப்பிரிந்து இருக்கமாட்டேன். முதல்வனே! போற்றி. எனக்கு எல்லா உறவினரும் ஆனவனே! போற்றி. என் உயிரே! போற்றி.

சிறப்பே! போற்றி சிவமே! போற்றி. மேகமே! போற்றி. என் மணவாளனே! போற்றி. செம்பஞ்சுக்குழம்பு ஊட்டிய திருவடிகளை உடைய உமையவள் பங்கனே! போற்றி. அடியவனாகிய நாயேன் வருந்தி நின்றேன் போற்றி.எனக்கு ஒளி காட்டும் ஒளிவடிவான ஈசனே! போற்றி. அறிவின் முடிவில் விளங்குகின்ற ஞானக்கண்ணே! போற்றி. பல தலங்களிலும் எளிமையாய்க் காட்சிதரும் அரசே! போற்றி. மலைநாட்டை உடைய மன்னனே! போற்றி. உடையாகச் சிங்கத்தின் தோலை அணிந்தவனே! போற்றி. திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளும் செல்வனே! போற்றி. கயிலைப் பொருப்பில் அமர்ந்திருக்கும் திருப்பூவணத்துச் சிவபெருமானே! போற்றி.

அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி
தெரிவரிது ஆகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட்கு அன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன்று அருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுஈறு ஆனாய் போற்றி

ஞானவடிவில் அருவமாகவும், அடியார்களுக்கருள் செய்ய உருவமாகவும் திகழ்பவனே! போற்றி. ஆன்மாக்களோடு பொருந்தி நின்று கருணை பொழியும் மலையே! போற்றி. நனவு கனவு உறக்கம் இவை கடந்த சுழுத்தியாகிய துரிய நிலையையும் கடந்து துரியாதீதமாகிய மூலாதாரத்தில் விளங்கும் ஒளிப்பிழம்பே! போற்றி. ஆராய்ந்தறிய முடியாத ஞானத்தெளிவே! போற்றி. துளையிடப்படாத முத்தின் வெள்ளொளியே! போற்றி. அடிமையானவர்க்கு அன்பனே! போற்றி. தெவிட்டாத தெள்ளமுதே! திருவருளே! போற்றி. ஆயிரக்கணக்கான திருப்பெயர்களை உடைய பெருமானே! போற்றி. தாளி அறுகினால் ஆகிய மாலையை அணிந்தவனே! போற்றி. அலகில் சோதியாக அம்பலத் தாடுபவனே! போற்றி. சந்தனமும் திருநீறும் அணிந்த சோமசுந்தரனே! போற்றி. சிந்தனைக்கு எட்டாத சிவபெருமானே! போற்றி. மகேந்திரமாகிய பெரிய மலையில் எழுந்தருள்பவனே! போற்றி. நாங்கள் உய்வதற்காக எங்களை அடிமையாய்க்கொள்பவனே! போற்றி. புலி தன் முலைப்பாலை மான்கன்றுக்கு ஊட்டச் செய்தவனே! போற்றி. சுறாமீனை அடக்குவதற்காக அலைகடல் மேல் நடந்தவனே! போற்றி. காக்கைகளால் துன்புறுத்தப்பட்ட கரிக்குருவிக்கு உபதேசம் செய்து வலிமைதந்து வலியான் ஆக்கிய பெருமானே! போற்றி. ஐம்புலன்களும் இன்பநுகராமல் புலர்ந்து போக, மனத்தில் பொருந்தியவனே! போற்றி. இந்த உலகில் பலமுறை திருமேனி தாங்கிப் பல உருக்காட்டியவனே! போற்றி. முதலும் நடுவும் முடிவும் ஆனவனே! போற்றி

நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத்து அரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்புஒன்று அறியா நாயேன்
குழைத்தசொல் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்

மலயத்துவச பாண்டியனுக்கு நரகம், சுவர்க்கம், இந்நிலவுலகில் மீண்டும் பிறத்தல் ஆகியன இல்லாமல் தன் திருவடியருளியவனே! போற்றி. எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவனே! போற்றி. செழுமலர்கள் மலர்ந்திருக்கும் சிவபுரத்தின் அரசனே! போற்றி. செங்கழுநீர் மாலையணிந்த செஞ்சடைக்கடவுளே! போற்றி. வணங்கும் அடியார்களின் மனமயக்கம் தீர்ப்பவனே! போற்றி. இது தவறு இது இறைவனையடையும் வாய்ப்பு என்று பிரித்தறிய மாட்டாத நாயினேன், அன்பினால் மனம் குழைந்து அதைச் சொற்களில் வடித்துக் கட்டிய சொல்மாலையைச் சூடியருள் செய்ய, உன்னைப் போற்றுகிறேன். முப்புரங்களையும் எரித்த பழமையானவனே! போற்றி. மேலானவற்றுக் கெல்லாம் மேலான பரமசிவனே! போற்றி. பாம்பணிந்தாடும் பரமனே! போற்றி. போற்றி. முன்னைப்பழம்பொருளே போற்றி போற்றி. உனக்கு வெற்றி வெற்றி (உன்பதம்) போற்றி போற்றி.



5.திருச்சதகம்

திருப்பெருந்துறையில் அருளியது

(தெய்வத்தன்மை வாய்ந்த நூறுபாடல்களைப் பத்துத் தலைப்புக்களில் அந்தாதியாக அமைத்த பதிற்றுப் பத்தந்தாதி இது. இறைவன் பால் எழக்கூடிய கனிந்த மனநெகிழ்வாகிய பக்தியையும், பக்தி அதிகரிக்கக் குறைந்துகொண்டே வரும் உலகப்பற்று அற்றுப்போகும் வைராக்கியத்தையும் இதற்குக் காரணமான குருநாதன் மேல் கொண்ட எல்லையற்ற அன்பையும் காட்டுவது இப்பகுதி. இதில் முதல் பத்து மெய்யுணர்தல் ஆகும்.)

I.மெய்யுணர்தல் (கட்டளைக் கலித்துறை)

(என்றும் நிலையான இன்பந்தரும் மெய்யான இறைவனை உணர்வதும் - அதனால் உடம்பில் விளைந்த மெய்ப்பாடுகளும் - இறைவனிடம் அன்பு நிரந்தரமாய் வேண்டுவதும் கூறப்படுகின்றன)

5) மெய்தான் அரும்பி, விதிர்விதிர்த்து,
உன்விரையார் கழற்கு, என்
கைதான் தலை வைத்துக், கண்ணீர்
ததும்பி, வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் 'போற்றி'
'சயசய' போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன்; உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே. 1

என் உடம்பு (மிகுதியாகிய அன்பினால்) புளகங்கொண்டு, நடுக்க மெய்தி, உன்னுடைய தெய்வமணங்கமழும் திருவடிகளையே சிந்தித்து, என் கைகளைத் தலைமேல் குவித்து, கண்களில் ஆனந்தக்கண்ணீர் துளும்பி நிற்க, (என் உடல்) இளைத்து, என் உள்ளம் யான் எனது எனும் அகப்பற்று, புறப்பற்றுகளாகிய பொய்களைவிட்டு, உன்னைப் போற்றி சயசய போற்றி என்று புகழ்ந்து நிற்கும், இந்த ஒழுக்கத்தை ஒருக்காலும் தளரவிடமாட்டேன் என்னை உடைமையாகக் கொண்ட பெருமானே! (உன் உடைமையாகிய என்னைப்பிறர் கவராத வண்ணம்) பார்த்துக் கொள்ள வேண்டும்.

6) கொள்ளேன் புரந்தரன், மால், அயன்
வாழ்வு; குடிகெடினும்
நள்ளேன் நினது அடியாரொடு
அல்லால்; நரகம் புகினும்,
எள்ளேன் திருவருளாலே
இருக்கப் பெறின்; இறைவா
உள்ளேன் பிற தெய்வம், உன்னை அல்லாது
எங்கள் உத்தமனே. 2

இந்திரன், திருமால், பிரமன் இவர்கள் பெற்ற பெரும் பதங்களை இவர்களே வந்து கொடுத்தாலும் கொள்ளமாட்டேன். என் குடிப்பெருமையே கெட்டுப்போனாலும், உன் அடியார் திருக்கூட்டத்துடன் அன்றிப் பிறரோடு நட்புக்கொள்ளமாட்டேன். அதனால் நான் நரகத்தில் புகநேர்ந்தாலும் அதனை இகழமாட்டேன். உன் திருவருளால் இவ்வுலகில் இன்னும் எத்தனை ஆண்டுகள் இருக்க நேர்ந்தாலும், எங்கும் நீக்கமற நிறைந்த இறைவனே! என்னை ஆட்கொண்ட உத்தமனே! உன்னைத்தவிரப் பிற தெய்வங்களை நினைக்கவும் மாட்டேன்.

7) உத்தமன், அத்தன், உடையான்
அடியே நினைந்து உருகி,
மத்த மனத்தொடு, 'மால் இவன்'
என்ன, மன நினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட,
ஊர் ஊர் திரிந்து, எவரும்
தத்தம் மனத்தன பேச
எஞ்ஞான்று கொல் சாவதுமே. 3

உயர்ந்தவற்றுள் உயர்ந்தவனும், என் அப்பனும், என்னை உடையவனாகிய சுவாமியும் ஆகிய சிவபெருமான் திருவடிகளையே அன்பால் நினைத்து அன்பின் முதிர்ச்சியால் உருகி, மகிழ்வான சிந்தையோடு, இவன் ஒரு பைத்தியம் என்று ஊர் மக்கள் கூறுமாறு நான் என் எண்ணத்திற்கு ஏற்றவாறு பலவற்றைச் சொல்லி, ஊரெல்லாம் சுற்றி, என்னைப் பார்த்த எவரும் அவரவர் மனம் போன போக்கில் என்னைப் பற்றிப் பேச, அதனால் தன் முனைப்பு அடங்கி, நான் என்னும் ஆணவம் அழிவது என்றைக்கோ?

8) சாவ முன் நாள் தக்கன் வேள்வித்
தகர் தின்று, நஞ்சம் அஞ்சி,
ஆவ எந்தாய் என்றுஅவிதா
இடு நம்மவர் அவரே,
மூவர் என்றே எம்பிரானொடும்
எண்ணி விண் ஆண்டு, மண்மேல்
தேவர் என்றே இறுமாந்து, என்ன
பாவம் திரிதவரே. 4

முன்னொருகாலத்தில் தக்கன் செய்த யாகத்தில் அவியாகிய ஆடு இறந்துபோகுமாறு தின்றும், திருப்பாற்கடலில் நஞ்சு தோன்றிய போது அதற்கு அஞ்சியும் ஆஆ! எங்கள் தந்தையே! என்று கூக்குரலிடும் தேவர்கள் (துன்பக்காலத்துத் துதித்தலும் இன்பக்காலத்தில் இறைவனை மறத்தலும் உடைய) நம்மைப் போன்றவர்களே ஆவர்.இந்தத் தேவர்கள் எம்பிரான் ஆகிய சிவபெருமானுடன் ஒருங்குவைத்து மூவர் என்றே (தவறாக) எண்ணி, விண்ணுலகத்தை ஆண்டு, மண்ணுலகிலும் தேவர் என்றே இறுமாப்புற்றுத் திரிகின்றார்களே இது எவ்வளவு பாவமான செயல்!

9) தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு
முட்டாது இறைஞ்சேன்
அவமே பிறந்த அரு வினையேன்
உனக்கு அன்பருள் ஆம்
சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்
நின் திருவடிக்கு ஆம்
பவமே அருளு கண்டாய் அடியேற்கு
எம் பரம்பரனே. 5

பெறற்கரிய இப்பிறவியில் நான் தவம் செய்யவில்லை. குளிர்ந்த மலர்களை உன் திருவடித்தாமரைகளில் சார்த்தி இடைவிடாமல் வணங்கினேன் இல்லை. இந்தப்பிறவியை வீணாக்கத்தக்க வினைகளையே செய்து வந்திருக்கிறேன். உன்னுடைய மெய்யன்பர் கூட்டத்துள் இருக்கும் மங்கலமான பேரின்பச் செல்வத்தைப் பெற முடியாதவன் ஆகிவிட்டேன். என் பரம்பொருளே! எனக்கு உன் திருவடியில் அன்புவைப்பவனாகப் பிறக்கும் பிறவியைக் கொடுப்பாயாக!

10) பரந்து பல் ஆய் மலர் இட்டு
முட்டாது அடியே இறைஞ்சி
'இரந்த எல்லாம் எமக்கே பெறலாம்'
என்னும் அன்பர் உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே நின் தன்
வார் கழற்கு அன்பு எனக்கும்
நிரந்தரமாய் அருளாய் நின்னை
ஏத்த முழுவதுமே. 6

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கி, வழிபட்டு, பலமலர்களால் உன் திருவடிகளை அர்ச்சித்து, இடைவிடாமல் உன்னடிகளையே வணங்கி, இவ்வாறு செய்வதால், வேண்டிக் கேட்ட விண்ணப்பங்கள் அனைத்தையும் பெறலாம் என்று நினைக்கும் மெய்யன்பர்கள் உள்ளத்தில் மறைந்து நிற்காமல் அவர்கள் உள்ளம் கொள்ளை கொண்ட கள்வனே! உன்னை என் வாழ்வு முழுவதும் துதிக்கும்படி, உன்னுடைய கழல் அணிந்த திருவடிக்கண் நிரந்தரமான அன்பை எனக்கும் தந்தருள வேண்டும்.

11) முழுவதும் கண்டவனைப் படைத்தான்
முடி சாய்த்து முன் நாள்
செழு மலர் கொண்டு எங்கும் தேட
அப்பாலன்; இப்பால் எம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடகம்
ஆடிக், கதிஇலியாய்,
உழுவையின் தோல் உடுத்து உன்மத்தம்
மேல்கொண்டு உழிதருமே. 7

உலகத்தில் இயங்குவன நிற்பன யாவையும் படைத்தவனாகிய பிரமனைப் படைத்த திருமால் பன்றியாகித் தலையைக் கீழ் நோக்கிச் சாய்த்து, சிவனுடைய செழுமையான திருவடித்தாமரைகளையே மனத்தில் கொண்டு, அவற்றைக் காண்பதற்காகத் தேடி அலைய, அவனால் காணமுடியாமல் அப்பாற்பட்டு நின்றவன் சிவபெருமான். அப்பெருமான் எங்களுக்கு மிக எளியனாகிச் சுடுகாட்டில் பேயோடு கூத்தாடித் தனக்கு ஆதாரமாக அடையத்தக்க இடமில்லாதவனாகி, புலித்தோலை உடுத்திக் கொண்டு, (பித்தன் போல) ஊமத்தம்பூவைத் தலையில் சூடிக்கொண்டு திரிகின்றானே.

12) உழிதரு காலும், கனலும்,
புனலொடு, மண்ணும், விண்ணும்
இழிதரு காலம் எக்காலம்
வருவது வந்ததன்பின்
உழிதரு காலத்த உன் அடியேன்
செய்த வல்வினையைக்
கழி தரு காலமுமாய்அவை காத்து
எம்மைக் காப்பவனே. 8

எப்பொழுதும் இயங்குகின்ற காற்றும், எரிகின்ற தீயும், தண்மையான நீரும், தாங்குகின்ற மண்ணும், விரிந்துசெல்லும் வான்வெளியும் ஒன்றுக்குள் ஒன்று ஒடுங்குகின்ற பேரூழிக்காலம் எப்பொழுது வருமோ! யானறியேன். அந்தப் பேரூழிக்காலத்திற்குப் பிறகும் அழியாமல் அருட்கூத்தாடும் திருவடிகளை உடைய என் அப்பனே! அப்பொழுதாவது அடியேன் செய்த வல்வினைகளை நீக்கும் காலம் அதுவாகவே இருக்க, அவ்வினைகள் மீண்டும் எனைப்பற்றாவண்ணம் அவற்றை ஒழித்து என்னைக் காக்க வேண்டும்

13) பவன், எம்பிரான், பனி மாமதிக்
கண்ணி விண்ணோர் பெருமான்
சிவன், எம்பிரான் என்னை ஆண்டு
கொண்டான் என் சிறுமை கண்டும்
அவன் எம்பிரான் என்ன, நான்
அடியேன் என்ன இப் பரிசே
புவன், எம்பிரான், தெரியும்
பரிசு ஆவது இயம்புகவே. 9

உலகத் தோற்றத்திற்கு நிலைக்களமாக உள்ளவன், என்னை ஆட்கொண்ட எம்பெருமான், குளிர்ந்த மதியை அணிந்தவன், விண்ணோர் தலைவன், சிவன் எனும் நாமம் தனக்கே உரியவன், அப்பெருமான் என் சிறுமையை அறிந்தும் விலக்காமல் ஆண்டு கொண்ட அளவிலாக் கருணையால், அவனே எனக்குத் தலைவனாக, நான் அவனுக்கு அடியவனாக, இத்தன்மையே உலகம் எம்பிரானை அறியும் தன்மையாக இருக்கட்டும். இந்த ஆண்டான் அடிமைத்திறத்தையே பாராட்டிப் புகழட்டும்.

14) புகவே தகேன் உனக்கு அன்பருள்
யான்; என் பொல்லா மணியே
தகவே எனை உனக்கு ஆட்கொண்ட
தன்மை எப் புன்மையரை
மிகவே உயர்த்தி விண்ணோரைப்
பணித்தி அண்ணா அமுதே
நகவே தகும் எம்பிரான் என்னை
நீ செய்த நாடகமே. 10

துளையிடப்படாத முழு மாணிக்கமே! நான் உன் அடியார்கூட்டத்தில் புகுவதற்கே தகுதியற்றவன். அப்படிப்பட்ட என்னை ஆட்கொண்ட தன்மை உன் பெருமைக்குத் தக்கதாகுமா? எத்தகைய இழிந்தோரையும் நீ மிக உயரச் செய்கிறாய். உயர்ந்த வானவர்களை (ஆட்கொள்ளாமல்) தாழ்த்துகிறாய். தேவர்களால் அணுகமுடியாத அமுதமே! உன்னுடைய நாடகம் மிகவும் சிரிக்கத்தக்கதாக அன்றோ உள்ளது

II.அறிவுறுத்தல் (தரவுகொச்சகக்கலிப்பா)

(இறைவன் திருமுன் வேண்டுவது போல, மனத்திற்கு நயத்தாலும் பயத்தாலும் அறிவுரை கூறல்)

15) நாடகத்தால் உன் அடியார்போல்
நடித்து, நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்,
மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக் குன்றே
இடையறா அன்பு உனக்கு என்
ஊடகத்தே நின்று, உருகத்
தந்துஅருள் எம்முடையானே. 11

பொய்யன்பனாகிய நான் உன்னுடைய மெய்யன்பர்கள் போல நாடகமாடி, இந்த நடிப்புமுடிந்த பின் கூலி கேட்காமல், நாடகத்தின் இடையிலேயே வீடு பெறுவதற்கு மிக விரைவுடன் முந்துகிறேன். பொன் நிலத்தில் திகழும் மாணிக்க மலையே! உன்னிடத்தில் இடையறாத மெய்யன்பு என் உள்ளத்தின் நடுவே நிலைபெற்று உள்ளம் உருகுமாறு, எம்மை அடிமையாக உடையபெருமானே! தந்தருள்வாயாக

16) யான் ஏதும் பிறப்பு அஞ்சேன்
இறப்புஅதனுக்கு என் கடவேன்?
வானேயும் பெறில் வேண்டேன்
மண்ணாள்வான் மதித்தும் இரேன்
தேன் ஏயும் மலர்க் கொன்றைச் சிவனே
எம்பெருமான் எம்
மானே உன் அருள்பெறு நாள்
என்று?' என்றே வருந்துவனே. 12

(துவ முதலியவற்றால் ஒழிக்கத்தக்க) பிறவி எடுக்க நான் அஞ்ச மாட்டேன். ஆனால் (தவிர்க்க முடியாத) இறப்புக்குநான் என்ன செய்ய வல்லேன்! இறந்த பின் விண்ணுலகம் கிடைத்தாலும் விரும்பமாட்டேன். பிறந்து வாழும் போது மண்ணாளும் மன்னன் ஆவதையும் ஒரு பெரிய சாதனையாக நினைக்கமாட்டேன். தேன் பொருந்திய கொன்றை மலர் மாலையணிந்த சிவபெருமானே! எங்கள் தலைவனே! என் அப்பனே! உன் திருவருள் கிடைக்கும் நாள் என்று வரும் என்றே எண்ணி வருந்துவேன்.

17) வருந்துவன் நின் மலர்ப் பாதம்
அவை காண்பான் நாய் அடியேன்
இருந்து நல மலர் புனையேன்
ஏத்தேன் நாத் தழும்பு ஏறப்
பொருந்திய பொற் சிலை குனித்தாய்
அருள் அமுதம் புரியாயேல்
வருந்துவன் அத் தமியேன்; மற்று
என்னே நான் ஆமாறே. 13

நாய் போன்ற சிறுமை உடையவனாகிய நான், உன்னுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளைக் காண வேண்டுமென்று வருந்தி முயல்கின்றேன். என் உடம்பு நன்றாக இருந்தும் நல்ல மலர்களைத் தொகுத்து உனக்கு அணிவிக்க மாட்டேன். நாவில் தழும்பு உண்டாகும்படி உன் புகழை வாயாரப் பாடமாட்டேன். உன்னால் மட்டுமே செய்யத் தக்க செயலாக மேருமலையை வில்லாய் வளைத்தவனே! நின் கருணை அமுதை எனக்களிக்காவிட்டால், கதியற்றுத் தனியே நிற்கும் நான் மிகவும் வருந்துவேன். உய்யும் வழி வேறு எனக்கு என்ன உள்ளது?

18) ஆம்ஆறு உன் திருவடிக்கே அகம்
குழையேன் அன்பு உருகேன்
பூமாலை புனைந்து ஏத்தேன்
புகழ்ந்து உரையேன் புத்தேளிர்
கோமான் நின் திருக்கோயில் தூகேன்
மெழுகேன், கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன்
சதுராலே சார்வானே. 14

உன் திருவடிக்குத் தொண்டனாகும் படி நெஞ்சம் கனிந்திலேன். அன்பினால் உருகமாட்டேன். நீசூடிய பூமாலையை நான் புனைந்து, உன்னைப் போற்றிலேன். உன் திருப்புகழைப் பாராட்டிப் பேச மாட்டேன். கடவுளர்க்கெலாம் ஒரு தலைவனாகிய சிவபெருமானே! உன்னுடைய திருக்கோயிலில் திருவலகிடமாட்டேன். மெழுகமாட்டேன். இப்படிப் பணி செய்து அதனால் உண்டாகும் இன்பத்தால் கூத்தாடமாட்டேன். பயனின்றிச் செத்துப் போவதற்கே விரைவாக முயலுகின்றேன். தன் கெட்டிக் காரத்தனத்தால் எங்களோடு சார்ந்து இருக்கும் பெருமானே! (என்னைத் தடுத்தாட் கொள்ளமாட்டாயா)

19) வானாகி, மண்ணாகி,
வளியாகி, ஒளியாகி,
ஊனாகி, உயிராகி,
உண்மையுமாய், இன்மையுமாய்க்,
கோனாகி, 'யான் எனது' என்று
அவர் அவரைக் கூத்து ஆட்டு
வானாகி நின்றாயை
என் சொல்லி வாழ்த்துவனே. 15

வானவெளி, மண், காற்று, தீ என்னும் இப்பூதங்கள் ஆகியும், உடலும் உயிருமாகியும், உள்ள பொருளாகவும் இல்லாத பொருளாகவும், எல்லாவற்றுக்கும் மன்னனாகியும், உலகமக்கள் எல்லோரையும், யான் செய்தேன் என்றும் எனதுடைமை என்றும் சொல்லி அறியாமையால் அகக்கூத்தும் புறக்கூத்தும் ஆடவைத்தும், அவர்கள் மனத்துக்குள்ளேயே நிற்கின்ற உன்னை என்னால் என்ன சொல்லி வாழ்த்தமுடியும்?

20) வாழ்த்துவதும் வானவர்கள்
தாம் வாழ்வான் மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து
தம்மை எல்லாம் தொழ வேண்டிச்
சூழ்த்து மதுகரம் முரலும்
தாரோயை நாய் அடியேன்
பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான்
யானும் உன்னைப் பரவுவனே. 16

தேவர்கள் உன்னை வாழ்த்துவது தாம் நெடுங்காலம் இன்பமாக வாழ்வதற்கே ஆகும் அவர்கள் நெஞ்சத்தை உனக்கே இடமாக வைத்துப் பணிவதெல்லாம், தாம் பெருமை பெற்றுத் தம்மை உலக உயிர்களெல்லாம் தொழுது பணிய வேண்டியே ஆகும். வண்டுகள் மொய்த்து ஒலிக்கும் கொன்றை மாலையை உடையவனாகிய உன்னை, நாய் போன்ற அடியேன், பயனற்றதான பிறப்பை முழுவதும் நீக்குவதற்காகவே வாழ்த்துகிறேன்.

21) பரவுவார் இமையோர்கள்
பாடுவன நால் வேதம்
குரவுவார் குழல் மடவாள்
கூறு உடையாள் ஒரு பாகம்
விரவுவார் மெய்யன்பின்
அடியார்கள் மேன்மேல் உன்
அரவுவார் கழல் இணைகள்
காண்பாரோ, அரியானே. 17

தேவர்கள் உன்னை முன்னிலைப்படுத்தி உரையால் வாழ்த்துவர். வேதங்கள் உன்புகழைப் படர்க்கையில் வைத்து இசையால் பாராட்டும். குராமலரை அணிந்த கூந்தலையுடைய உமாதேவி, உன் திருமேனியின் ஒரு பாதியைத் தன் பாதியாக உடையவள். உண்மையான அன்புள்ள அடியார்கள் உன்னோடு கலந்து இன்பமுறுவார்கள். இப்படி மொழியால் பரவிய தேவரும் மறைகளும் மெய்யில் கலந்த இறைவியும் மனத்தால் மகிழ்ந்த அடியார்களும் கூட, ஒலிக்கின்ற வீரக்கழல்களை அணிந்த நின் திருவடிகளை மேலும் மேலும் இடையறாது காண்பார்களோ! முடியாது. ஏனெனில் நீ காண்டற்கரியவனன்றோ!

22) அரியானே யாவர்க்கும்
அம்பரவா அம்பலத்து எம்
பெரியானே சிறியேனை
ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரை ஆர்ந்த மலர் தூவேன்
வியந்து அலறேன் நயந்து உருகேன்
தரியேன் நான் ஆமாறு என்
சாவேன் நான் சாவேனே. 18

அமரர் முனிவர் அனைவரும் காண்டற்கரிய பெருளமானே! நுண்ணிய ஞானவெளியில் திகழ்பவனே! பொன்னம்பலத்தில் அருட்கூத்தாடும் பெரியோனே! அறிவிலும் அன்பிலும் சிறியவனாகிய என்னை ஆண்டுகொண்ட நின் திருவடித் தாமரைகளுக்கு, மணமிக்க மலர் இட்டு வழிபடமாட்டேன். தகுதியற்றவனை ஆட்கொண்ட நின் கருணையை வியப்புடன் உரத்தகுரலில் கூவிக் கதறமாட்டேன். அன்பினால் உள்ளம் நயந்து உருகமாட்டேன். உன்னைக் காணாமல் இவ்வுடம்போடு கணமேனும் வாழமாட்டேன். நான் இறந்துபோவேன் இறந்து போவேன்? வேறென்ன செய்ய முடியும்?

23) வேனில் வேள் மலர்க்கணைக்கும்
வெள் நகைச் செவ் வாய்க் கரிய
பானல் ஆர் கண்ணியர்க்கும்
பதைத்து உருகும் பாழ் நெஞ்சே
ஊன் எலாம் நின்றுஉருகப்
புகுந்து ஆண்டான் இன்று போய்
வான் உளான் காணாய் நீ
மாளா வாழ்கின்றாயே. 19

இளவேனில் காலத்து அரசனாகிய மன்மதன் எய்யும் மலரம்புக்குப், பதைத்தும், வெள்ளியபற்களையும் சிவந்த வாயினையும் கரிய குவளை மலர் போன்ற கண்களையும் உடைய பெண்களை நினைத்து உருகியும் பாழ்பட்ட என் நெஞ்சமே! உடம்பிலுள்ள நரம்பு எலும்பு எல்லாம் உருகும்படி நெஞ்சுள் புகுந்து நிலைத்து நின்று ஆண்ட பெருமான், இப்பொழது நம்மைவிட்டுப் போய் வான வெளியில் இருக்கிறானே. அவன் மறைந்ததை நீ காணவில்லையா? அதற்குப் பிறகும் இறந்து போகாமல் வாழ்கின்றாயே.

24) வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல்
காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக்
கடல் ஆய வெள்ளத்தே. 20

சிவபெருமானோடு கூடி வாழாத நெஞ்சமே! நீ இன்னும் உலக இன்பத்தில் திளைத்து வாழ்கின்றாயே. மிக வலிமையுடைய தீவினையின் வசப்பட்டு அதனுள்ளே ஆழ்ந்து போகிறாய். அவ்வாறு அழுந்தாமல் நம்மைக் காக்கும் பெருமானைப் போற்றாமல் உனக்கு நீயே கேட்டை உண்டாக்கிக் கொள்கிறாய் நானும் பலமுறை உனக்கு இடித்துக் கூறிவிட்டேன். துன்பமாகிய கடலனைய வெள்ளத்தில் நீ வீழ்ந்து முழுகிப் போகிறாய்.

III.சுட்டறுத்தல் (எண்சீர் விருத்தம்)

(இது இன்னது என்று சுட்டிக்காட்டும் நம் சிற்றறிவினால் இறைவனை அறிய முடியாது. மெய்யுணர்வினால் மட்டுமே அறியலாம் என்று சுட்டறிவை விட்டொழிப்பது)

25) வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளம் தாழ்உறு புனலில் கீழ்மேலாகப்
பதைத்து உருகும்அவர் நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளம் தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளம் தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண் இணையும் மரமாம் தீவினையினேற்கே. 21

கங்கை தங்கிய விரிந்த சடையினை உடையவனே! அறத்தின் வடிவான எருதை வாகனமாக உடையவனே! தேவர்களுக்குத் தலைவனே என்று அன்பர்கள் உன்னைப் போற்ற, அதைக் கேட்ட அளவிலே விருப்பமிக்க நெஞ்சம் உடையவராய், பள்ளத்தில் வீழும் மிகுந்த நீரைப் போல, அப்படிப் பள்ளத்தில் பாய்ந்த நீர் மிகுந்த வேகத்தினால் வீழ்ந்த இடத்தினின்றும் மேலே கிளம்புதல் போல, கீழ்

மேலாம் படி பதைத்து உருகும் மெய்யன்பர்கள் ஒரு பக்கம் நின்னருள் வேண்டி நிற்க, அவர்களை விட்டுவிட்டுச் சிறியவனாகிய என்னை ஆட்கொண்டாய். இந்தக் கருணையை எண்ணி உள்ளங்காலில் தொடங்கி உச்சந்தலை வரை, நெஞ்சமாக மாறி உருகவில்லையே. உடம்பு முழுவதும் கண்களாகிக் கண்ணீர் வெள்ளம் பாயவில்லையே! என் தந்தையே! என் நெஞ்சம் நெகிழாத கல்லாகி விட்டது. என் கண்கள் மரங்களாகி விட்டன. இது நான் செய்த தீவினைப் பயனாகும்.

26) வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போது நான் வினைக்கேடன் என்பாய் போல
'இனையன் நான்' என்று உன்னை அறிவித்து என்னை
ஆட்கொண்டு எம்பிரான் ஆனாய்க்கு இரும்பின் பாவை
அனைய நான் பாடேன் நின்றுஆடேன் அந்தோ
அலறிடேன் உலறிடேன் ஆவி சோரேன்
முனைவனே முறையோ நான் ஆன ஆறு
முடிவு அறியேன் முதல் அந்தம் ஆயினானே. 22

நல்வினை தீவினைகளால் கட்டப்பெற்றுத் தன் நிலை உணராது கிடந்த என்பால் கருணை கொண்டு என் சிந்தையில் புகுந்து, நான் அறிவதற்கு நேரமளித்து அங்கேயே நின்று, "என் பால் வருக நான் வினையை ஒழிப்பவன்" என்று கூறுவாய் போல, இத்தன்மையன் யான் என்று உன்னை எனக்குஅறிமுகம் செய்து, என்னை அடிமை கொண்ட, என் தலைவனாகிய உன்னை எண்ணி, இரும்பினால் செய்யப்பட்ட பொம்மை போன்ற நான் பாடவில்லை, நின்று ஆடவில்லை. ஐயோ என்று கதறவில்லை. என் உடம்பு உலரவில்லை. மூர்ச்சிக்கவில்லை. நான் இப்படி ஆகியது முறையான செயலா? கடவுளே! ஆதிஅந்தம் ஆனவனே! இது எங்கே போய் முடியுமோ தெரியவில்லையே.

27) ஆய நான்மறையவனும் நீயே ஆதல்
அறிந்து யான் யாவரினும் கடையனாய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டும்
நாதனே நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால் ஆண்டு கொண்டாய்
அடியார் தாம் இல்லையே அன்றி மற்று ஓர்
பேயனேன் இதுதான் நின் பெருமை அன்றே
எம்பெருமான் என் சொல்லிப் பேசுகேனே. 23

எல்லோருக்கும் தலைவனாகிய அந்தணன் நீ என்று நான் அறிந்தேன். நான் யாவர்க்கும் கடையவனாகிய நாய்த்தன்மை உடையவன் என்பதையும் ஆய்ந்து நோக்கிக் கண்டு கொண்டேன். என் தலைவனே! நான் உனக்கு அன்பன் என்று சொல்கிறேன். அதனால் தானே நீ என்னை ஆட்கொண்டாய்? பேய்த்தன்மை உடைய என்னைத்தவிர உனக்கு வேறு அடியார்கள் கிடைக்கவில்லையா? இல்லை இல்லை. இது உன் பெருந்தன்மையைக் காட்டுகிறது. என் தலைவனே! உன் புகழை எப்படிப் பேச வல்லேன்!

28) பேசில் தாம் ஈசனே எந்தாய் எந்தை
பெருமானே என்றுஎன்றே பேசிப்பேசிப்
பூசில் தான் திருநீறே நிறையப் பூசிப்
போற்றி எம் பெருமானே என்று பின்றா
நேசத்தால் பிறப்பு இறப்பைக் கடந்தார் தம்மை
ஆண்டானே அவா வெள்ளக் கள்வனேனை
மாசு அற்ற மணிக் குன்றே எந்தாய் அந்தோ
என்னை நீ ஆட்கொண்ட வண்ணம்தானே. 24

பேசாதநாளெல்லாம் பிறவாநாட்கள் என்று எப்பொழுதும் எங்கள் தலைவனே! என் தந்தையே! என் தந்தைக்கும் தலைவனே! என்று பலவாறு பேசியும், பூசும்பொழுது அஞ்செழுத்து மந்திரம் கூறித் திருநீறே நிறையப் பூசியும், பிறழாத மெய்யன்பினால் பிறப்பு இறப்பு இரண்டும் ஒழிந்த மெய்யன்பரை ஆட்கொண்டவனே! வெள்ளம் போல் ஆசை கொண்டவனும், அது வெளியில் தெரியாதபடி மறைக்கும் கள்வனும் ஆகிய என்னை, குற்றமில்லாத மாணிக்கமலை போன்றவனே! என் தந்தையே! ஐயோ! என்னை நீ ஆட்கொண்டருளிய தன்மையை எப்படிப் போற்றுவேன்!

29) வண்ணம்தான் சேயது அன்று வெளிதே அன்று
அநேகன் ஏகன் அணு அணுவில் இறந்தாய் என்று அங்கு
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்தும்ஆறு அறியாத எந்தாய் உன்தன்
வண்ணம்தான் அது காட்டி வடிவு காட்டி
மலர்க் கழல்கள் அவை காட்டி வழி அற்றேனைத்
திண்ணம் தான் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்
எம்பெருமான் என் சொல்லிச் சிந்திக்கேனே. 25

சிவபெருமான் திருமேனி செம்மை நிறம் என்றும், இல்லை இல்லை வெள்ளை நிறம் என்றும் அவனே பலவுருவானவன் என்றும் தனிமுதல்வன் என்றும், அணுப்போன்றவன், அணுவுக்கும் அணுவானவன் என்றும் இமையோர்கள் எல்லாம் நினைவுமயங்கி, நின்னையடைய வழி தெரியாமல் தடுமாறும்படி உனை அறிவிக்காமல் இருந்த தந்தையே! உன்னுடைய உண்மையான நிறத்தையும், திருவுருவத்தையும் தாமரைத் திருவடிகளையும் காட்டி, நெறியறியாமல் மயங்கும் என்னை, நிச்சயமாக இனிப்பிறவி எடுக்காமல் காப்பாற்றி ஆட்கொண்ட பெருமானே! உன் கருணையை எப்படிப் பாராட்டி இதயத்தில் இருத்துவேன்!

30) சிந்தனை நின் தனக்கு ஆக்கி நாயினேன் தன்
கண்இணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்
மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தெனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை
மால் அமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடு அனைய மேனித்
தனிச் சுடரே இரண்டும் இல் இத் தனியனேற்கே. 26

என்னுடைய நினைவெல்லாம் உனக்கே ஆக்கி, நாயேனுடைய கண்கள் இரண்டையும் உன் திருவடி மலர்களுக்கே உரிமையாக்கி, என் வணக்கத்தையும் அந்தத் திருவடிமலருக்கே ஆக்கி, என் வாயை உன்னைப் பற்றி மணிமணியாகப் பாடும் பொருள்சேர் புகழ்மொழிக் காக்கி ஐந்து புலன்களும் உன்னையே அனுபவித்து இன்புறத்தக்கவாறு, வலியவந்து என்னை ஆளாகக் கொண்டு, என்னுள்ளே புகுந்தருளி வியக்கத்தக்க செயல் செய்த பெருமானே! (நெய்தல் நிலத்துக்கு அடையாளமான) விரும்பத்தக்க அமுதக்கடலே! (குறிஞ்சிக்கு அடையாளமான) மலையே! மருதநிலத் தாமரையும் முல்லையாகிய காடும் இணைந்த தாமரை மலர்க்காடு போன்ற திருமேனியை உடைய ஒப்பற்ற ஒளி விளக்கே! அனுபவித்தறியும் பரஞானமும், நூலறிவாகிய அபரஞானமும் இரண்டு மில்லாதவனும், திருவருள் பெறத்தக்க சாதனைத்துணையின்றி வாடுபவனும் ஆகிய எனக்கு உன்னையே தந்தருளிய நின் திருவருளை எப்படிப் புகழ்வேன்

31) தனியனேன் பெரும் பிறவிப் பௌவத்து எவ்வத்
தடம் திரையால் எற்றுண்டு பற்று ஒன்று இன்றிக்
கனியைநேர் துவர் வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காம வான் சுறவின் வாய்ப்பட்டு
இனி என்னே உய்யும்ஆறு என்று என்று எண்ணி
அஞ்சு எழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதல் அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே. 27

உதவியற்றவனாகிய நான், பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து, துன்ப அலைகளால் அலைக்கப்பட்டு, பற்றிக் கொள்ள எதுவும் இல்லாமல், கொவ்வைப்பழம் போல் சிவந்த உதடுகளை உடைய பெண்கள் என்னும் காற்றினால் கலக்கப்பட்டு, காமம் என்ற பெரிய சுறாமீனின் வாயில் சிக்கி, இனிக் கரைசேர வழி என்ன என்று பலமுறை நினைத்து, திருவைந்தெழுத்தாகிய தெப்பத்தைப் பற்றிக் கொண்டு கிடக்கும் மூடனாகிய எனக்கு, எம்பெருமானே! முதலும் முடிவுமற்ற வளமான முத்திக்கரையைக் காட்டி ஆட்கொண்டாயே! (இதை எப்படிப் புகழ்வேன்)

32) கேட்டாரும் அறியாதான் கேடு ஒன்று இல்லான்
கிளை யிலான் கேளாதே எல்லாம் கேட்டான்
நாட்டார்கள் விழித்து இருப்ப ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசு இட்டு நாயினேற்கே
காட்டாதன எல்லாம் காட்டிப் பின்னுங்
கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து, ஆட்கொண்டான்
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே. 28

செவிமூலம் கேட்டு அறிந்து கொள்ள முடியாதவன், அழிவு சிறிதும் இல்லாதவன். உயிர்களுக்கு அவன் தாய்தந்தையாவானே தவிர அவனுக்குச் சுற்றம் இல்லாதவன் செவிமூலம் கேளாமல், தன் நிறையறிவால் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் கேட்க வல்லவன் நாட்டில் உள்ள சான்றோர்கள் பலரும் ஆன்ம விழிப்போடு அவன் அருளுக்குக் காத்திருக்க, இந்த உலகில் நாய் இருக்க நல்லிருக்கை அமைத்து, நாயாகிய எனக்குக் காட்டக் கூடாதவற்றையெல்லாம் காட்டி என்னை யாரென்று உணரவைத்தும், கேட்கப்படாதவற்றைக் கேட்பித்து எனக்கு உபதேசம் செய்தும் நான் மீண்டும் பிறவியில் புகாமல்

ஆட்கொண்டு காத்தான். இது எம்பெருமான் செய்திட்ட மாயவித்தை தானே!

33) விச்சை தான் இது ஒப்பது உண்டோ? கேட்கில்
மிகு காதல் அடியார் தம் அடியன் ஆக்கி
அச்சம் தீர்த்து ஆட்கொண்டான் அமுதம் ஊறி
அகம் நெகவே புகுந்து ஆண்டான் அன்புகூர
அச்சன் ஆண் பெண் அலி ஆகாசம் ஆகி
ஆர் அழல் ஆய் அந்தம் ஆய் அப்பால் நின்ற
செச்சை மாமலர் புரையும் மேனி எங்கள்
சிவபெருமான் எம்பெருமான் தேவர்கோவே. 29

சிவபெருமான் என்னை ஆட்கொண்ட மாயவித்தை போல வேறொன்றுண்டா? அது என்னவென்று கேட்பீர்களேயானால், மிகமிக அன்புசெய்யும் அடியவர்களுக்கெல்லாம் என்னை அடிமையாக்கி முன் செய்த வினைப்பயன் இன்னும் வந்து மூளுமோ என்று அஞ்சிய நிலையை ஒழித்து, என் இரும்பு நெஞ்சத்தில் அமுதம் ஊறவும் அன்பு பெருகவும் அகங்குழையவும் என்னுள் புகுந்து என்னை ஆட்கொண்டான். எனக்குத் தந்தையானான். ஆண் பெண் அது எனும் உலகத் தொகுதியானான். தகராகாசம் எனப்படும் நுண்ணிய ஞானப் பெருவெளியானான். சிவயோகிகள் மட்டுமே காணக் கூடிய பேரொளியானான். உலகம் ஒடுங்கும் முடிவிடம் ஆனான். அதற்குப்பின்னாலும், தான்மட்டும் அழியாமல் நின்றான். செவ்வண்ணமான வெட்சிமலர் போன்ற மேனியுடையவன் அடியார்களாகிய எங்களுக்குப் பற்றுக் கோடாக உள்ள சிவபெருமான், எனக்குத் தலைவனாகிய எம்பெருமான், அவனே தேவர்களுக்கெல்லாம் தலைவன் ஆவான்.

34) தேவர் கோ அறியாத தேவ தேவன்
செழும் பொழில்கள் பயந்து காத்து அழிக்கும் மற்றை
மூவர் கோனாய் நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாது ஆளும் பாகத்து எந்தை
யாவர் கோன் என்னையும் வந்து ஆண்டு கொண்டான்
யாம் ஆர்க்கும் குடி அல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன் அடியார் அடியாரோடு
மேன்மேலும் குடைந்து ஆடி ஆடுவோமே. 30

தேவர்க்கரசன் என்று இறுமாந்திருக்கும் இந்திரனால் அறியப்படாத மகாதேவன். (அறிவுடையாரையும் தம்முட்கொண்ட) செழிப்பான உலகங்கள் எல்லாவற்றையும் படைத்து அளித்து அழிக்கும் மும்மூர்த்திகளுக்கும் தலைவனாகி அவர்களைச் செயல்பட வைக்கும் முதல்வன். அவர்கள் வடிவம் எல்லாம் தன் வடிவம் ஆனவன் என் பாட்டனுக்குப்பாட்டன். தந்தையைக் காட்டும் தாயைப் போன்ற உமாதேவியின் ஆளுகைக்குரிய இடப்பாகத்தைப் பெற்ற என் அப்பன். யாவர்க்கும் மன்னவன். மிச்சிறியவனாகிய என்னையும் ஒரு பொருளாக்கித் திருப்பெருந்துறையில் வந்து ஆண்டு கொண்டவன். எனவே இனி நாங்கள் வேறு எவர்க்கும் அடிமையாக மாட்டோம். இனி எதற்கும் அஞ்சமாட்டோம். அவனுடைய அடியார்க்கடியாரோடு இணைந்தோம். மேலும் மேலும் இந்தப் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து ஆடுவோமாக.

IV.ஆத்மசுத்தி (அறுசீர் விருத்தம்)

(இடையறாத இறையன்பினால் மனமாசுகள் நீங்கி உயிர் தூய்மை அடைதல் என்பது இதன் பொருள். மனத்தை அழைத்து, அதனை ஒறுத்துரைத்துத் திருத்துவது கூறப்படுகிறது)

35) ஆடுகின்றிலை கூத்து உடையான் கழற்கு
அன்பிலை என்பு உருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாத மலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை
துணை இலி பிண நெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வது ஒன்று அறியேனே. 31

இறையன்பால் ஆடமாட்டேன் என்கிறாய். ஐந்தொழில் காட்டும் அம்பலக்கூத்தன் திருவடிக்கண் அன்பு செய்யாமல் இருக்கிறாய். எலும்பு உருகுமாறு பாட மாட்டேன் என்கிறாய். இப்படி மனம் வாக்கு உடம்பு மூன்றையும்இறைவனுக்காக்காமல் வீணாக்குகிறோமே என்று பதைக்கமாட்டேன் என்கிறாய். அவனைப்பணிவதும் இல்லை. அவன் திருவடிமலரை உன் தலைமேல் சூடவும் இல்லை. பலமலர்களை அவன் திருவடிகளில் சூட்டவும் இல்லை. வேறு துணையில்லாமல்,

ஆடல்பாடலாகிய புறச்செயல்களும் அழுது அன்புசெய்யும் அகச் செயல்களும் இல்லாமல் பிணத்தைப் போலச் செயலற்றுக் கிடக்கும் நெஞ்சமே! எம்பெருமானைத் தேடிக்கண்டு கொள்ளவும் இல்லை. தேடியும் காணாமல் தெருவெல்லாம் அலறவுமில்லை. உன்னை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யப்போகிறேன்?

36) அறிவு இலாத எனைப் புகுந்து ஆண்டுகொண்டு
அறிவதை அருளி மேல்
நெறி எலாம் புலம் ஆக்கிய எந்தையைப்
பந்தனை அறுப்பானை
பிறிவு இலாத இன் அருள்கள் பெற்றிருந்தும்
மாறுஆடுதி பிண நெஞ்சே
கிறி எலாம் மிகக் கீழ்ப்படுத்தாய்
கெடுத்தாய் என்னைக் கெடுமாறே. 32

இறைவனை அறியும் மெய்யறிவு சற்றுமில்லாத என்னை, வலியவந்து ஆட்கொண்டு தன்னை அறியும் சிவஞானத்தையருளி, மேலான வீடு பேறடையத் தக்க வழிகளையெல்லாம் விளங்கச் செய்த என் அப்பனை,பாசப்பிணிப்பை ஒழிக்கும் பரமனை, என்றும் நெஞ்சில் இருந்து நீங்காமல் வைத்திருக்கத்தக்க திருவருளைப் பெற்றிருந்தும், அப்படிச் செய்யாமல் மாறுபட்டிருக்கிறாயே! என் நெஞ்சே! பிணம் நல்லதும் செய்யாது கெட்டதும் செய்யாது நீ அதைவிடக் கீழானதாகிக் கெட்டதைச் செய்கிறாயே. பொய்மை மேலோங்கிநிற்க என்னைக் கீழே தள்ளிவிட்டாய். நான் கெட்டுப் போக வழிகாட்டி என்னைக் கெடுத்துவிட்டாயே

37) மாறி நின்று எனைக் கெடக் கிடந்தனையை எம்
மதி இலி மட நெஞ்சே
தேறுகின்றிலம் இனி உனைச் சிக்கெனச் சிவன்
அவன் திரள் தோள் மேல்
நீறு நின்றது கண்டனை ஆயினும்
நெக்கிலை இக் காயம்
கீறுகின்றிலை கெடுவ்து உன் பரிசு இது
கேட்கவும் கில்லேனே. 33

நானும் பிற அடியார்களும் கூறும் அறிவுரைகளைக் கேட்காமல் இருக்கும் புத்தியற்ற நெஞ்சமே! இறைவனை அடையத் துணையாக

நிற்க வேண்டிய நீ தடையாக மாறி நின்றாய் உட்பகையாகி நான் கெட வேண்டுமென்றே என்பால் கிடந்தாய் இனி உன்னை நம்ப மாட்டேன் அவன் என்று போற்றப்படும் சிவபெருமானுடைய திரண்ட தோள்களின் மீது, இறைவன் திருமேனி ஒளியோடு இணைந்து திருவெண்ணீறு ஒளிவீசுவதைக் கண்டாயில்லை. அக்காட்சியை நினைந்தாவது உருகவில்லை. அப்படி உருகாமல், வெறுமையான இவ்வுடலைச் சிதைக்கவுமில்லை உன்செயல்கள் எல்லாம் கேட்டையே விளைவிப்பவை. இக்கொடுமையை என்னால் கேட்கக்கூட முடியவில்லை.

38) கிற்றவா மனமே கெடுவாய் உடையான்
அடி நாயேனை
விற்று எலாம் மிக ஆள்வதற்கு உரியவன்
விரை மலர்த் திருப் பாதம்
முற்றிலா இளம் தளிர் பிரிந்திருந்து
நீ உண்டன எல்லாம் முன்
அற்ற ஆறு நின் அறிவும் நின் பெருமையும்
அளவு அறுக்கில்லேனே 34

கெட்டுப் போவதற்காகவே நீ செய்த செயல்கள் எவ்வளவு கீழானவை! என் மனமே! உலகம் அனைத்தையும் உடையவன். நாய் போன்ற என்னை, வினைக்கு ஈடாகப் பிறக்க வைத்து விற்பதற்கும், அதன்மூலம் எல்லா நன்மைகளும் அதிகமாகும் படி ஆள்வதற்கும் உரியவன் அவனுடைய மணமிக்க மலர்ப் பாதங்களாகிய என்றும் முற்றிப் போகாத இளமையான தளிர் போன்ற திருவடிகளைப் பிரிந்திருந்து, நீ முன்பு அனுபவித்த இன்பநினைவுகள் எல்லாம் அற்றுப் போகச் செய்து விட்டாயே! உன்னிடம் இல்லாத அறிவையும் கீழான பெருமையையும் நான் அளந்துரைக்க முடியாது.

39) அளவு அறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு
அடியவர்க்கு எளியான் நம்
களவு அறுத்து நின்று ஆண்டமை கருத்தினுள்
கசிந்து உணர்ந்திருந்தேயும்
உள கறுத்து உனை நினைந்து உளம் பெரும் களன்
செய்ததும் இலை நெஞ்சே
பளகு அறுத்து உடையான் கழல் பணிந்திலை
பரகதி புகுவானே. 35

தேவர்களால் இன்ன தன்மையன் என்று அளக்க வொண்ணாதவன், அடியவர்க்கெளிய பெருமான், நம் வஞ்சக ஒழுக்கத்தை அழித்து, நம்மை ஆட்கொண்டதை உள்ளத்தில் கொண்டு உணர்ந்து ஈடுபட்டிருந்தாலும், உலக இன்பங்களாக உள்ளது போல் தோன்றுவனவற்றை வெறுத்து, உன்னிலையை உணர்ந்து உள்ளம் பெருங்கோயிலாக ஆக்கவில்லையே என் நெஞ்சமே உன்னுடைய குற்றங்களை விடுத்து, நம்மை உடைய நாயகன் திருவடிகளைப் பணிந்து அழியாப் பேரின்பம் அடையாமல் இருக்கிறாயே! (இது சரியா?)

40) புகுவது ஆவதும் போதரவு இல்லதும்
பொன் நகர் புகப் போதற்கு
உகுவது ஆவதும் எந்தை எம்பிரான்
என்னை ஆண்டவன் கழற்கு அன்பு
நெகுவது ஆவதும் நித்தலும் அமுதொடு
தேனொடு பால் கட்டி
மிகுவது ஆவதும் இன்று எனின் மற்று இதற்கு
என் செய்கேன் வினையேனே. 36

அடையத்தக்கதும் அடைந்தால் திரும்பி வர முடியாதது மாகிய,சிவபெருமானுடைய பொன் போலப்போற்றத்தக்க சிவநகருள் புகுவதற்குத் தடையாக உள்ள பற்றுக்கள் நீங்க வேண்டும். என்னப்பன் என் தலைவன் என்னை ஆட்கொண்டவன் திருவடிகளுக்கே அன்பு செய்து உருக வேண்டும் நாளெல்லாம் பாலும் தேனும் கரும்புக் கட்டியும் கலந்துண்டால் கிடைக்கும் சுவையை விட மிக இனிய சுவையை அனுபவிக்க வேண்டும். என்று எண்ணுகிறேன். ஆனால் இவை கிடைக்காதபடி என் தீவினை வலியதாயிருக்கிறதே என்ன செய்வேன்?

41) வினை என்போல் உடையார் பிறர் ஆர்
உடையான் அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பு அன்று
மற்று அதனாலே
முனைவன் பாத நன்மலர் பிரிந்துஇருந்து
நான் முட்டிலேன் தலை கீறேன்
இனையன் பாவனை இரும்பு கல் மனம் செவி
இன்னது என்று அறியேனே. 37

என் போலத் தீவினை செய்தவர் யார் இருக்கிறார்கள்? அடிமை நாயான என்னைத் தினையளவுப் போதும் பிரிந்திருத்தல் என்னை உடையவனாகிய இறைவன் திருவுள்ளக் கருத்து அன்று. இந்தத் திருவுளத்தை அறிந்து அவன் திருவடிகளைப் பற்றிக் கொள்ளாத நான், அவன் திருவடிக் காட்சியின்றிப் பிரிவு நேர்ந்த போது, அதனால் துடித்து எதிலாவது என் தலையை மோதவில்லையே! பிளக்கவும் இல்லையே. குழையாத என் நினைவு இரும்பாகிவிட்டது. மனம்கல்லாகிவிட்டது. அவன் திருப்புகழ் கேளாத காதுகளை இன்னதென்று கூடக் கூறமுடியவில்லையே.

42) ஏனை யாவரும் எய்திடல் உற்று மற்று
இன்னது என்று அறியாத
தேனை ஆன் நெயை, கரும்பின் இன் தேறலை
சிவனை என் சிவலோகக்
கோனை மான்அன நோக்கி தன் கூறனைக்
குறுகிலேன் நெடுங் காலம்
ஊனை யான் இருந்து ஓம்புகின்றேன்
கெடுவேன் உயிர் ஓயாதே. 38

மெய்யன்பர் இல்லாத மற்றவர்கள் அடையமுயன்றும், இத்தன்மை உடையது என்று அறிய மாட்டாத தேனை, பசுநெய்யை, கரும்பின் இன் சாற்றை, சிவபெருமானை, எனக்கு அவனால் காட்டப்பெற்ற சிவலோக வேந்தனை, பார்வையினால் அருள்புரிய மான்விழி பெற்ற உமையவளைத் தன் இடப்பாகத்தில் உடைய இறைவனை நீண்ட காலமாக அணுகாமல் பிரிந்திருக்கிறேனே இந்த உடலை நீண்டகாலமாகப் பாதுகாக்கிறேனே - என்னுயிர் உடலைவிட்டும் போகவில்லையே என் அன்பு இப்படியா ஆயிற்று!

43) ஒய்வு இலாதன உவமனில் இறந்தன
ஒண் மலர்த் தாள் தந்து
நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும்
என்னை நன்னெறி காட்டித்
தாயில் ஆகிய இன் அருள் புரிந்த என்
தலைவனை நனி காணேன்
தீயில் வீழ்கிலேன் திண் வரை உருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே. 39

அவன் திருவடிகள் நமக்கு ஓய்வுதருமேயொழிய அவை ஓய்வு எடுத்து கொள்ளாமல் அருள் பொழிபவை. உவமை கூற முடியாதவை. அந்த ஞானவொளி மிக்க மலர்த்தாள்களை எனக்களித்து நாய்ப்பிறப்பை விடக் கீழாகப் பிறந்த எனக்கு நல்ல வழிகாட்டி, தாயை விடச் சிறப்பாக எனக்கருள் புரிந்த என் தலைவனை நெடுங்காலமாகக் காணாமல் இருக்கிறேன். இந்த உடல் இனி எதற்கு என்று நெருப்பில் வீழ்ந்து இறக்க வில்லை மலையிலிருந்து உருளவில்லை கடலிலாவது சென்று வீழ்ந்தேனா அதுவும் இல்லையே. (பிறவிக்கடலில் அல்லவா வீழ்ந்து விட்டேன்)

44) வேனில் வேள் கணை கிழித்திட மதி சுடும்
அதுதனை நினையாதே
மான் நிலாவிய நோக்கியர் படிறு இடை
மத்து இடு தயிராகித்
தேன் நிலாவிய திரு அருள் புரிந்த
என் சிவன் நகர் புகப் போகேன்
ஊனில் ஆவியை ஓம்புதல் பொருட்டு இனும்
உண்டு உடுத்து இருந்தேனே. 40

வேனில் காலத்தில் விரும்பத்தக்கவனாய் வரும் மன்மதனின் மலரம்புகள் என் மனத்தைப் பிளக்க, அந்தப் புண்ணில் சுடுகின்ற கிரணங்களைச் சந்திரன் வீச, அந்தத் துன்பநிலையை நினைக்காமல், மான்விழி மங்கையர் வஞ்சகச் செயல்களுக்காளாகி, மத்தினால் கடைபடும் தயிர் போல் துன்புற்றுக் கிடக்கிறேனே - தேன்போலத் தெவிட்டாத திருவருள்புரிந்த என் ஆண்டவனுடைய சிவபுரத்திற்குச் செல்லவில்லையே -உடம்புக்குள்ளே உயிரை வைத்திருக்கும் பொருட்டு எனக்காக உண்டும், பிறர்க்காக உடுத்தியும் இவ்வளவு நாள் வாழ்ந்திருந்தேனே! - என் அறியாமை இருந்தவாறென்னே!

V.கைம்மாறு கொடுத்தல் (கலிவிருத்தம்)

(தன்னையே எனக்குத் தந்த தலைவனுக்குக் கைம்மாறாக என்னையே அவனுக்களிப்பேன் என்று பேசுவது இப்பகுதி)

45) இரு கை யானையை ஒத்து இருந்து என் உளக்
கருவை யான் கண்டிலேன் கண்டது எவ்வமே
வருக என்று பணித்தனை வான் உளோர்க்கு
ஒருவனே கிற்றிலேன் கிற்பன் உண்ணவே. 41

ஒரு கையினால் மிகுதியான உணவை வாரி உண்டு உடல் பருத்த யானை போல நான் இருகைகளால் உணவுண்டு, அது பாகனை மறப்பது போல நானும் எனையாண்ட இறைவனை மறந்து அது தன் உடல் ஆற்றலை அறியாதது போல நான் என் உள்ளத்தின் உள்ளே திகழும் மூலப்பொருளான உன்னை உணர்ந்திலேன். துன்பத்தையே நான் கண்டேன் இப்படிப்பட்ட என்னை, "திருவடிக்காட்சி பெற வருக" என்று ஞானாசிரியனாகவந்து கட்டளை இட்டாய். வானுலகத் தேவர்களின் ஒப்பற்ற தலைவனே! நான் அந்தக் கட்டளையை ஏற்றுக் கைம்மாறு தர ஆற்றல் இல்லாதவனாய், இன்னும்உண்ணவும் உடுக்கவுமே ஆற்றல் உடையவனாய் இருக்கிறேனே!

46) உண்டு ஓர் ஒண்பொருள் என்று உணர்வார்க்கு எலாம்
பெண்டிர் ஆண் அலி என்று அறி ஒண்கிலை
தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்
கண்டும் கண்டிலேன் என்ன கண் மாயமே. 42

தனக்குவமை இல்லாத் தனிப்பொருள் ஒன்றுண்டு என்று உணர்ந்தவர்கள் எல்லாம், அப்பொருள் பெண்ணா ஆணா அலியா என்று அறிய முடியாமல் நீ விளங்குகிறாய் ஆனால் உன் திருவடித் தொண்டனான எனக்கு உண்மைத் தன்மையோடு (திருப்பெருந் துறையில் அந்தணன் ஆவதும் காட்டி) வந்தாண்டாய் (கண்ணில்லான் பெற்றிழந்தது போல) உன்னைக் கண்டும் காணாமல் விட்டுவிட்டேனே! என் கண் இப்படி மயங்கிவிட்டதே! இது என்ன கண்கட்டு வித்தையோ?

47) மேலை வானவரும் அறியாதது ஓர்
கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்து போம்
காலமே உனை என்று கொல் காண்பதே. 43

வானுலக இந்திரன் முதலிய தேவர்களுக்கும் மேலான, பிரமபதம், திருமால்பதம் முதலியவற்றில் உள்ள தேவர்களும் அறியமுடியாத ஒப்பற்ற திருவுருவப் பேரழகனே! எளியவனாகிய என்னை ஆட்கொண்ட கூத்தப் பெருமானே! மண்முதல் விண்முடிய ஐந்து பெரும் பூதங்களாய் இருப்பவனே! அவை தோன்றி மறைவதற்கான காலவடிவான கடவுளே! உன்னை இனிமேல் என்று காணப் போகிறேன்!

48) காணலாம் பரமே கட்கு இறந்தது ஓர்
வாள் நிலாப் பொருளே இங்கு ஓர் பார்ப்பு எனப்
பாணனேன் படிற்று ஆக்கையை விட்டு உனைப்
பூணும் ஆறு அறியேன் புலன் போற்றியே. 44

உன்னருளே கண்ணாகக் காணும் பதிஞானத்தால் காணத்தக்க பரம்பொருளே! கண்ணால் முழுவதுமாகக் காணமுடியாத பேரொளிப் பிழம்பாய்த் திகழ்பவனே! பறவைக்குஞ்சு முட்டையைவிட்டுப் பருவம் வந்ததும் பறந்து போவது போல, வாழ்வைப் பாழாக்கிக் கொண்ட நான், பொய்யான இவ்வுடம்பை விட்டு உன்னோடு சேரும்நெறியை அறியாமல், இன்னும் ஐம்புல இன்பங்களையே விரும்பிப் போற்றிக் கொண்டிருக்கிறேனே!

49) போற்றி என்றும் புரண்டும் புகழ்ந்து நின்று
ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்
ஏற்று வந்து எதிர் தாமரைத் தாள் உறும்
கூற்றம் அன்னது ஓர் கொள்கை என் கொள்கையே. 45

மனத்தால் உன்னைப் போற்றியும், உடலால் புரண்டு உன் திருக்கோயிலில் வலம் வந்தும், நாவினால் புகழ்ந்து பாடியும், பல பிறவிகளில் தொடர்ந்து வரும் பேராற்றலுடைய மெய்யன்பினால் உன்னைக் கூவி அழைக்கவில்லை. உன் பெருமையை அறிந்தும் உனக்கு எதிராக வந்து, அந்த ஆர்வத்தினாலேயே உன் திருவடித்தாமரைகளால் உதைபட்டு, திருவடி பொருந்தப்படும் நற்பேறு பெற்ற எமனைப் போலவே திருவுளக் குறிப்புக்கு மாறுபட்டாவது திருவடிப் பேறு பெற வேண்டும் என்ற என் கொள்கையும் இருக்கிறது.

50) கொள்ளும் கில் எனை அன்பரில் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறா மலர்க் கொன்றையான்
நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தையே. 46

அருளாகிய தேனும் அதையருந்தும் மெய்யடியார்களாகிய வண்டுகளும் நீங்காத கொன்றைமலர் மாலையணிந்த பெருமான், இவ்வுலகங்களில் நடுவிலும் கீழும் மேலுமாகிய எல்லா இடங்களிலும், எள்ளும் அதனுள்ளே எல்லாப்பகுதிகளிலும் என்றும் நிறைந்து நிலைபெற்று நிற்கும் எண்ணெயும் போல இருக்கும் எந்தைபிரான்

மெய்யடியார்களைக் கூவி அழைத்துப் பணி கொள்வது போல, என்னையும் பணி கொள்வானோ!

51) எந்தை யாய்எம் பிரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய் தம்பிரான் தனக்கு அஃது இலான்
முந்தி என்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தையாலும் அறிவு அரும் செல்வனே. 47

எனக்குத் தந்தையும் தாயும் தலைவனும் ஆகியவன், எல்லோருக்கும் தந்தையும் தாயும் தலைவனும் ஆகியவன். ஆனால் தனக்குத் தந்தை தாய் தலைவன் என உறவுகள் இல்லாதவன் ஏதுக்களாலும் எடுத்தமொழியாலும் மட்டுமன்றி மனத்தினாலும் யாவரும் நினைந்து அறிவதற்கு அருமையானவன், (அமரரும் முனிவரும் காணமுடியாதபடி ஒளிந்து கொள்வதற்காக) என் உள்ளத்தில் ஞான விளக்கம் இல்லாத பொழுதே விரைந்து வந்து புகுந்து கொண்டான்

52) செல்வம் நல்குரவு இன்றி விண்ணோர் புழுப்
புல் வரம்பு இன்றி யார்க்கும் அரும் பொருள்
எல்லை இல் கழல் கண்டும் பிரிந்தனன்
கல் வகை மனத்தேன் பட்ட கட்டமே. 48

முன் செய்த நல்வினையால் வந்த செல்வம் உடையவர், தீவினையால் வந்த வறுமை உடையவர் எனற ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல், நல்வினை நுகரும் தேவர்கள், தீவினைப்பயன் நுகரும் புழு, புல் என்ற வேற்றுமைகள் இன்றியும் எல்லோருக்கும் அடைவதற்கரிய சிவபெருமானுடைய அளக்கமுடியாத்திருவடிகளை, இப்பூமியில் அவன்காட்டக்கண்டும், அதைத் தொடர்ந்து பற்றிக் கொள்ளாமல் பிரிந்து விட்டேனே. என் மனம் கல்லின் வகைகளில் ஒன்றாகி மாக்கல் போல மனக்கல்லாகிவிட்டது. அதனால் தானே இத்துன்பம் வந்து சேர்ந்தது.

53) கட்டு அறுத்து எனை ஆண்டு கண்ணார நீறு
இட்ட அன்பரொடு யாவருங் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டினோடு இரண்டும் அறியேனையே. 49

என் பாசக்கட்டுக்களை அறுத்து, என்னை அடிமை கொண்டு, பார்ப்பவர்கண்களுக்கும் மங்கலத்தைக் கொடுக்கும் படி திருநீறணிந்த

மெய்யடியார்களும் மற்றவர்களும் காணும் படியாக, எனக்குப் பெருமைதந்து அறிஞர்கள் ஆய்வு செய்யும் பட்டிமண்டபத்தில், அறவடிவான காளைவாகனமுடைய நீ என்னையும் ஏற்றிவைத்தாயே, நான் எட்டும் இரண்டும் சேர்த்து எண்ணக் கூடத் தெரியாதவனல்லவா? (எட்டாகிய அகரவடிவான இறைவனையும் இரண்டான உகரவடிவான அம்மையையும், இரண்டும் என்பதில் வரும் மகர ஒற்றெழுத்தான ஆன்மாவையும் இணைக்கும் பிரணவமந்திரம் அறியாதவனல்லவா?)

54) அறிவனே அமுதே அடி நாயினேன்
அறிவனாகக் கொண்டோ எனை ஆண்டது
அறிவு இலாமை அன்றே கண்டது ஆண்ட நாள்
அறிவனோ அல்லனோ அருள் ஈசனே. 50

பேரறிவான ஞானமே! பேரின்பம் தரும் அமுதமே! அடிமையாகிய நாய் போன்ற என்னை அறிவுடையவனாகத் திருவுள்ளம் கொண்டோ ஆட்கொண்டாய்? அப்படி ஆட்கொண்டபோது என்பால் அறிவிலாமையைத் தானே கண்டாய்? இப்பொழுது உன்னைப் பிரிந்து தவிக்கும் நான் அறிவுடையவனா அறிவில்லாதவனா என்று தெரியவில்லையே! முற்றும் உணர்ந்த நீ தான் எனக்குத் தெளிவு தந்தருள வேண்டும்.

VI. அநுபோக சுத்தி (அறுசீர் ஆசிரியவிருத்தம்)

(இறைவன்பால் அணுகவிடாத உலக நுகர்ச்சிகளை எண்ணி வருந்தி முறையிட்டுப் பின் மனத்தூய்மை பெறுதல்)

55) ஈசனே என் எம்மானே எந்தை
பெருமான் என் பிறவி
நாசனே நான் யாதும்ஒன்று அல்லாப்
பொல்லா நாயான
நீசனேனை ஆண்டாய்க்கு நினைக்க
மாட்டேன் கண்டாயே
தேசனே அம்பலவனே செய்வது
ஒன்றும் அறியேனே. 51

எல்லாவற்றுக்கும் இறைவனே! எனக்குச் சிறப்பான தலைவனே! என்னைச் சான்றோன் ஆக்கும் என் தந்தையாகிய பெருமைக்குரியவனே! பேரின்பப் பெருஞ்செல்வம் பெறத்

தடையாயிருக்கும், என் பிறப்பை ஒழிப்பவனே! உலகப் பொருட்கள் ஒன்றிலும் காணமுடியாத மிகப் பொல்லாத நாய் போன்ற இழிந்தவனாகிய என்னை ஆட்கொண்டருளிய உன் பெருமையை நினைக்காமல் இருக்கிறேனே. இதை நீயும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறாயே. என் மன இருளை மாற்றும் ஒளி வடிவானவனே! யாவரும் காண என்னை அம்பலத்தில் ஆட்கொண்டவனே! எதுவும் செய்யத் தெரியாமல் நான் தவிக்கிறேனே! (இனி யாரை நாடுவேன்!)

56) செய்வது அறியாச் சிறு நாயேன் செம் பொன்
பாத மலர் காணாப்
பொய்யர் பெறும் பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன்
பொய் இலா
மெய்யர் வெறி ஆர் மலர்ப் பாதம் மேவக்
கண்டும் கேட்டிருந்தும்
பொய்யனேன் நான் உண்டு உடுத்து இங்கு இருப்பது
ஆனேன் போர் ஏறே. 52

உன்னடியார்களைக் காமம் முதலிய அறுபகை யானைகள் தாக்காவண்ணம் போரிட்டழிக்கும் சிங்கம் போன்றவனே! என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கும் சிறுமை உடைய சிறு நாய் போன்றவனாகிய நான், உன் திருவடித் தாமரையைக் காணும் பேறு பெறாத பொய்மையாளர் பெறத்தக்க பேறுகள் எல்லாவற்றையும் ஒருங்கே பெறுவதற்குரியவன். பொய்க்கலப்பற்ற மெய்யடியார்கள் உன் மலர்ப்பாதம் அடைவதைக் கண்டும் கேட்டிருந்தும், பொய்மையாளனான நான் இவ்வுலக வாழ்வில் இச்சையுற்று இன்னும் உணவுண்டும் ஆடை உடுத்தியும் வாழ்ந்திருக்கிறேனே!

57) போர் ஏறே நின் பொன் நகர் வாய்
நீ போந்து அருளி இருள் நீக்கி
வார் ஏறு இள மென் முலையாளோடு
உடன் வந்து அருள அருள் பெற்ற
சீர் ஏறு அடியார் நின் பாதம்
சேரக் கண்டும் கண் கெட்ட
ஊர் ஏறு ஆய், இங்கு உழல்வேனோ
கொடியேன் உயிர்தான் உலவாதே. 53

ஆணவத்தைப் போர் செய்தழிக்கும் ஆண்சிங்கமே! பொன் மயமாய் ஒளிவீசும் திருக்கயிலைமலையிலிருந்து, நீ புறப்பட்டு எங்கள்

ஆணவ இருளைக் கெடுப்பதற்காக கச்சணிந்த இளமையான முலைகளை உடைய பார்வதியோடும் உடன் வந்தருள, அதனால் திருவருள் பெற்ற சிறப்புமிக்க மெய்யன்பர்கள், திருவடியடைந்ததைக் கண்ணால் நேரில் பார்த்திருந்தும், நான் கண்கெட்டுக் குருடாகிக் கட்டுக் கடங்காமல் திரியும் ஊர்ப்பொலி எருது போலத் திரியலாமா? நான் மிகக் கொடியவன் என்பதால் என் உயிர் இன்னும் கெட்டுப் போகாமல் இருக்கிறதோ?

58) உலவாக் காலம் தவம் எய்தி
உறுப்பும் வெறுத்து இங்கு உனைக் காண்பான்
பல மா முனிவர் நனி வாடப்
பாவி யேனைப் பணி கொண்டாய்
மல மாக் குரம்பை இது மாய்க்க
மாட்டேன் மணியே உனைக் காண்பான்
அலவா நிற்கும் அன்பு இலேன்
என் கொண்டு எழுகேன் எம்மானே. 54

நீண்ட நெடுங்காலம் தவம் இயற்றி, உடம்பை வெறுத்து, உன்னைக் காண வேண்டும், என்ற ஒரே குறிக்கோளுடன், பல பெரிய முனிவர்கள் மிகவும் வாடி நிற்க, அவர்களை விட்டுவிட்டு மாபாவி யாகிய என்னை அடிமையாக ஏற்றுப் பணிசெய்ய வைத்தாய். நானோ மலம்சோரும் இந்தப் பெரிய உடம்பை ஒழிக்கும் ஆற்றல் இல்லாதவன். என் மாணிக்கமே! உன்னைக் காணவேண்டுமென்று வருந்தித் துன்புறும் மெய்யன்பில்லாதவன். இனி எதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு வினைக்கடலில் இருந்து எழுந்து உய்வேன். என் தலைவனே! நீயே துணை.

59) மான் நேர் நோக்கி உமையாள் பங்கா
வந்து இங்கு ஆட்கொண்ட
தேனே அமுதே கரும்பின் தெளிவே
சிவனே தென் தில்லைக்
கோனே உன்தன் திருக்குறிப்புக்
கூடுவார் நின் கழல் கூட
ஊன் ஆர் புழுக்கூடு இது காத்து இங்கு
இருப்பது ஆனேன் உடையானே. 55

அடியார்களை இறைவன் புறக்கணித்து விடக்கூடாதே என்று மருட்சி தோன்றும் பார்வையோடு பார்க்கும் மான்விழிப்பாவை

உமையவளை ஒரு கூறாகப் பெற்றவனே! இந்த உலகுக்கு வந்து என்னை அடிமை கொண்டவனே! தேனைப்போல் மிக இனிப்பவனே! பாலைப்போல் பயன் தருபவனே! கருப்பங்கட்டிபோல் தூய இன்பம் அளிப்பவனே! பேரின்ப வடிவான சிவனே! தென்னாட்டுத் தில்லைக்கரசனே! நின் திருவுள்ளக் குறிப்பு சாரப் பெற்ற மெய்யன்பர்கள் உன் திருவடியை அடைய, என்னை உடைய பெருமானே! நான் மட்டும் தசையால் நிறைந்த புழுக்கூடாகிய இவ்வுடலைப் பாதுகாத்து இதிலேயே தங்கி இருக்கிறேனே! (நான் எப்பொழுது உய்வேன்?)

60) உடையானே நின்றனை உள்கி
உள்ளம் உருகும் பெருங் காதல்
உடையார் உடையாய் நின் பாதம்
சேரக் கண்டு இங்கு ஊர் நாயின்
கடை யானேன் நெஞ்சு உருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடை ஆர் புழுக் கூடு இது காத்து இங்கு
இருப்பது ஆக முடித்தாயே. 56

குறைவிலா நிறைவாய் எல்லாம் உடைய பெருமானே! உன்னையே நினைந்து நெஞ்சுருகும் பேரன்பர்கள், தம்மை உடைய பெருமானாகிய உன் திருவடிகளை அடைந்து இன்புறக்கண்டும், ஊரில் திரியும் நாயைவிடக் கீழானநான், உள்ளம் உருகாமல் இருக்கிறேனே. சமய உண்மைகளைக் கற்றுத் தெளியா மனமுடையவனாய், உன்னை எண்ணிக் கசிந்து கண்ணீர் மல்கி உருகாதவனாய், நாற்றமிக்க புழுக்கூடாகிய இவ்வுடம்பையே பேணிப் பாதுகாத்து இவ்வுலக வாழ்விலேயே நிலைப்படுமாறு செய்துவிட்டாயே - இது தான் உன் திருவுள்ளமா?

61) முடித்த ஆறும் என்தனக்கே
தக்கதே முன் அடியாரைப்
பிடித்த ஆறும் சோராமல்
சோரனேன் இங்கு ஒருத்தி வாய்
துடித்த ஆறும் துகில் இறையே
சோர்ந்த ஆறும் முகம் குறு வேர்
பொடித்த வாறும் இவை உணர்ந்து
கேடு என் தனக்கே சூழ்ந்தேனே. 57

இந்த உடலையே பேணிப்பாதுகாத்து இங்கே இருக்கட்டும் என்று நீ முடிவு செய்ததும் சரிதான். முன்னர் மெய்யன்பர்களைச் சோர்ந்து போகாமல் அணைத்துக் கொண்டதும் பொருத்தம் தான். ஏன் தெரியுமா? கள்வனாகிய நான் காமத்தில் வீழ்ந்து, ஒரு பெண்ணின் வாயிதழ் துடித்ததையும், ஆடை சிறிது நழுவியதையும், அவள் முகத்தில் சிறுவியர்வை அரும்பியதையும் ஆகிய இவற்றையே உணர்ந்து, எனக்கு நானே கேட்டையல்லவா தேடிக்கொண்டுவிட்டேன்.

62) தேனைப் பாலை கன்னலின்
 தெளியை ஒளியைத் தெளிந்தார் தம்
ஊனை உருக்கும் உடையானை
 உம்பரானை வம்பனேன்
நான் நின் அடியேன் நீ என்னை
 ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானும் சிரித்தே அருளலாம்
 தன்மை யாம் என் தன்மையே. 58

தனையடைந்தார் அனுபவிக்கும் தேனும் பாலும் (இவைபோல எச்சிலும் ஊனும் கலக்காத) கரும்புச்சாற்றின் தெளிவும்ஆக உள்ளவனும், அருட்பெருஞ் சோதியும், தன்னைக் கடவுள் என்று உணர்ந்து தெளிந்த மெய்யடியார்களின் ஊனுடம்பை உருகவைக்கும் உடையவனும், மேலான சிவபுரத்தலைவனும், ஆகிய பெருமானை நோக்கி, வீணனாகிய நான் “தகுதியற்ற நான் உன் அடியவன்” என்றும், “தகுதி உணராது ஆட்கொண்ட நீ என்னை ஆண்டவன்” என்றும் கூறினால், (அறியாக்குழந்தையின் பொருந்தா உரை கேட்டுத் தந்தை நகைப்பது போல) சிவபெருமான் என்னைப் பார்த்துச் சிரித்தருள்வான். என்இயல்பு இப்படிச் சிரிக்கத் தக்கது தான்.

63) தன்மை பிறரால் அறியாத
 தலைவா பொல்லா நாயான
புன்மையேனை ஆண்டு ஐயா
 புறமே போக விடுவாயோ
என்னை நோக்குவார் யாரே
 என் நான் செய்கேன் எம்பெருமான்
பொன்னே திகழும் திரு மேனி
 எந்தாய் எங்குப் புகுவேனே. 59

உலகஉயிர்கள் அனைத்தையும் தானறிந்தாலும், தன்னியல்பைப் பிறர் அறியமுடியாத தலைவனே! பொல்லாத நாய் போன்ற சிறுமை உடைய என்னை ஆட்கொண்டு, ஐயனே! புறத்தே தள்ளி, வேறொருவர் பால் போகவிட்டுவிடுவாயோ? அப்படித் தள்ளிவிட்டால் என்னைக் கடைக்கணிப்பார் யார் இருக்கிறார்கள்? நான் என்ன செய்வேன்? என்னை ஆண்டவன் நீ தானே. பொன்னார் மேனியை உடைய என் அப்பனே. உன் பிள்ளை உன்னை விட்டு வேறு யாரிடம் அடைக்கலம் புகுவேன்!

64) புகுவேன் எனதே நின் பாதம்
போற்றும் அடியாருள் நின்று
நகுவேன் பண்டு தோள் நோக்கி
நாணம் இல்லா நாயினேன்
நெகும் அன்பு இல்லை நினைக் காண
நீ ஆண்டு அருள அடியேனும்
தகுவனே என் தன்மையே
எந்தாய் அந்தோ தரியேனே. 60

எந்தையே ! உன் திருப்பாதம் எனக்கே உரிமை உடையதல்லவா - அத்திருவடிகளையே அடைவேன். பழி பாவங்கண்டு வெட்கப்படாத நாய் போன்ற நான், உன்னைப் போற்றும் அடியார் கூட்டத்துக்கு நடுவில் நின்று, பலர் அறிய என் தோள்களின் பூரிப்பை வெளிப்படுத்தி இறுமாந்து களித்தேன். நின்னைக் காணக் கருவியாய் நிற்கும் குழைவான மெய்யன்பு எனக்கில்லை. நீயே வந்து தடுத்தாட்கொள்வதற்குநான் தகுதியானவனா? இல்லையே. இந்நிலையில் ஐயோ இந்த உலக வாழ்வை எப்படிப் பொறுத்துக் கொண்டிருப்பேன்?

VII. காருணியத்திரங்கல் (அறுசீர் ஆசிரியவிருத்தம்)

(பாசம் நீங்கிய பிறகும் சிவப்பேற்றுக்கு முன்னரும் தேவையான இறைவன் திருக்கருணை குறித்து இரங்குதல்)

65) தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள்
விடலையே போற்றி ஒப்பு இல்
ஒருத்தனே போற்றி உம்பர்
தம் பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள்
நின்மலா போற்றி போற்றி. 61

உடம்போடு கூடிய துன்பவாழ்வைப் பொறுக்கமாட்டேன் இன்பம் தருபவனே! என்னைக் காத்தருள்க. ஞானாகாசமாகிய நுண்ணிய பரவெளியில் விளங்கும் பழமையானவனே! காத்தருள்க. எங்களுடைய இளங்காளை வடிவப் பெருமானே! காத்தருள்க. ஒப்பில்லாத ஒருவனே! காத்தருள்க. தேவர்கள் தலைவனே! காப்பாயாக. தில்லையம் பலத்தில் அருட்கூத்தாடுபவனே! காப்பாயாக. மலங்களால் கட்டுண்ட எங்களை மலங்களற்ற தூயவனே! காப்பாயாக காப்பாயாக

66) போற்றியோ நமச்சிவாய
புயங்கனே மயங்குகின்றேன்
போற்றியோ நமச்சிவாய
புகலிடம் பிறிது ஒன்று இல்லை
போற்றியோ நமச்சிவாய
புறம் எனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய
சய சய போற்றி போற்றி. 62

பிரணவத்திலிருந்து வேறுபடாத திருவைந்தெழுத்தின் பொருளான பெருமானே! பாம்புகளை அணிந்தவனே! உன்னை அடையமாட்டாமல் மயங்குகின்றேன். காத்தருள்க. நமசிவயப் பொருளோனே! காத்தருள்க - யான் புகுவதற்கு உரிய இடம் உன்னைத் தவிர வேறில்லை. ஓம் நமச்சிவாய! காத்தருள்க - என்னைப் புறத்தே தள்ளிவிடாதே. ஓம் நமச்சிவாய! காப்பாயாக. உனக்கு வெற்றி உனக்கு வெற்றி என்னைக் காப்பாயாக, என்னைக் காப்பாயாக!

67) போற்றி என் போலும் பொய்யர்
தம்மை ஆட் கொள்ளும் வள்ளல்
போற்றி நின் பாதம் போற்றி
நாதனே போற்றி போற்றி
போற்றி நின் கருணை வெள்ளப்
புது மதுப் புவன நீர் தீ
காற்று இயமானன் வானம்
இரு சுடர்க் கடவுளானே. 63

என்னைப் போல மெய்யன்பு இல்லாதவர்களையும் அடிமை கொள்ளும் வள்ளல்பெருமானே! காத்தருள்க. நின் திருவடிகள் முன்னும் பின்னும் என்னைக் காத்தருள்க! எங்கள் தலைவனே! காத்தருள்க.

காத்தருள்க. நின்னருளாகிய புதிய தேன் வெள்ளம் என்னைக் காத்தருள்க! மண், நீர், தீ , காற்று, உயிர், வான், கதிரவன், திங்கள் எனறு எண் வகையான திருமேனிகள் கொண்ட கடவுளே! (என்னைக் காத்தருள்க)

68) கடவுளே போற்றி என்னைக்
கண்டுகொண்டு அருளு போற்றி
விட உளே உருக்கி என்னை
ஆண்டிட வேண்டும் போற்றி
உடல் இது களைந்திட்டு ஒல்லை
உம்பர் தந்து அருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி. 64

எல்லாவற்றுக்கும் உள்ளேயும் வெளியேயும் நிற்பவனே! என்னைக் காத்தருள்க. அடியார் கூட்டத்தில் என்னைவிட்டுவிடாமல் உன் திருவருட் பார்வைக்கு ஆளாக்கிக் காத்தருள்க உலகப்பற்றுக்கள் அனைத்தையும் நான் விட்டு விடத்தக்கவாறு, என் உள்ளத்தை உருக்கி என்னை ஆட்கொண்டு காத்தருள்க. இவ்வுடம்பை ஒழித்து விரைவில் மேலான வீட்டுலக இன்பம் தந்து காத்தருள்க! உலகைக் காப்பதற்காகச் சடையினுள்ளே மிக வேகமாக வந்தகங்கையை அடங்க வைத்து இன்பம் தருபவனே! என்னைக் காத்தருள்க, காத்தருள்க.

69) சங்கரா போற்றி மற்று ஓர்
சரண் இலேன் போற்றி கோலப்
பொங்கு அரா அல்குல் செவ் வாய்
வெண் நகைக் கரிய வாள் கண்
மங்கை ஓர் பங்க போற்றி
மால் விடை ஊர்தி போற்றி
இங்கு இவ் வாழ்வு ஆற்றகில்லேன்
எம் பிரான் இழித்திட்டடேனே. 65

சுகம் தருபவனே! காத்தருள்க! வேறு புகலிடம் இல்லாதேன் என்னைக் காத்தருள்க. வெகுண்டு படமெடுக்கும் விரிந்த பாம்பின் படம் போல் அழகிய மறைவிடத்தையும் சிவந்த வாயினையும், வெள்ளைப் பற்களையும் கருமை நிறம் பொருந்திய ஒளிமிக்க கண்களையும் உடைய உமையவளைப் பங்கிலே .கொண்ட பரமனே! காத்தருள்க. காக்கும் திருமாலாகிய காளை வாகனம் உடையவனே! காத்தருள்க இவ்வுலகில் உடம்போடு கூடிவாழும் வாழ்வை இனியும்

பொறுக்க மாட்டேன். இதை இகழ்ந்து வெறுத்து ஒழித்துவிட்டேன். (எனவே என்னைக் காப்பாயாக)

70) இழித்தனன் என்னை யானே
எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை
ஆளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடுஇவ் வாழ்வு போற்றி
உம்பர்நாட்டு எம் பிரானே. 66

என் இயல்பை நான் அறிந்தவன் என்பதால், உன்னடிமையாகிய என்னை, நானே இழிவுபடுத்தல் ஆனேன். என் தலைவனே காத்தருள்க காத்தருள்க. என்னை ஆட்கொண்ட உன்னைப் பழிக்கவில்லை. பெருங்கருணையினால் என்னை ஆண்டருளிய நின் திருவடிகள் என்னைக் காத்தருள்க! சிறியவனாகிய நான் செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்து அருள்செய்வது பெரியவனாகிய உன் கடமையல்லவா! எனவே என்னைக் காத்தருள்க. மேலான சிவலோகத் தலைவனே! உடம்போடு கூடிய இவ்வாழ்வை ஒழித்தருள்வாயாக

71) எம்பிரான் போற்றி வானத்
தவர் அவர் ஏறு போற்றி
கொம்பர் ஆர் மருங்குல் மங்கை
கூற வெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை
ஆளுடை ஒருவ போற்றி 67

மண்ணில் வாழும் என் போன்ற மக்கள் தலைவனே! காத்தருள்க. விண்ணுலகத்தில் பல பதவிகளில் இருப்பவர்களுக்கும் காளை போல் இருந்து காப்பவனே! என்னைக் காத்தருள்க. பூங்கொம்பு போல் இடையினை உடைய மங்கையைப் பங்கில் உடையவனே! யோகியாய் வெண்ணீறு அணிந்து காட்சியளிப்பவனே! என்னைக் காத்தருள்க. செம்மேனி உடையானே காத்தருள்க. தில்லைசிற்றம்பல நாதனே! காத்தருள்க. சிவலோகத்தலைவனே! காத்தருள்க. என்னையும் ஆட்கொண்ட ஒப்பிலாப் பரம்பொருளே! காத்தருள்க.

72) ஒருவனே போற்றி ஒப்பு இல்
அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருக என்று என்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின் பாதம் போற்றி
தமியனேன் தனிமை தீர்த்தே. 68

சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் கிடைக்காத தனிமுதல்வனே! காத்தருள்க. நிகரில்லா எந்தையே காத்தருள்க. தேவர்களுக்கும் ஞானகுருவான கல்லாலமர்ந்த கடவுளே என்னைக் காத்தருள்க. எங்கள் அழகான கொழுந்தாகி, மெய்யடியார் இன்பதுன்பங்களை முதலில் உணர்பவனே! காத்தருள்க. உன்னருகில் வருக என்று எனக்குக் கட்டளையிட்டு என்னைக் காப்பாற்றி ஏற்றுக்கொள்க! உன் பற்றொழிய ஒரு பற்றுமில்லாமல் தனியே நிற்கும் என் தனிமையை ஒழித்து உன் பாதம் தந்து காத்தருள்க.

73) தீர்ந்த அன்பாய அன்பர்க்கு
அவரினும் அன்ப போற்றி
பேர்ந்தும் என் பொய்ம்மை ஆட்கொண்டு
அருளிடும் பெருமை போற்றி
வார்ந்த நஞ்சு அயின்று வானோர்க்கு
அமுதம் ஈ வள்ளல் போற்றி
ஆர்ந்த நின் பாதம் நாயேற்கு
அருளிட வேண்டும் போற்றி. 69

உன் பால் மிகுதியான அன்பு செலுத்தும் மெய்யன்பர் மீது, அவர்களை விட அதிகமாக அன்புசெலுத்தும் பெருமானே! என்னைக் காத்தருள்க. என் பொய்யொழுக்கத்தை ஒழித்தும் என்னை ஆட்கொண்டும் அருள் செய்யும் பெருமைக் குணமுடையவனே! காத்தருள்க. பாற்கடலில் ஒழுகிய நஞ்சை உண்டு, வானத்தவர்க்கு அமுதம் வழங்கிய வள்ளலே! என்னைக் காத்தருள்க. அழிவில்லாத இன்பம் மிக்க நின் திருவடிகளை நாயேனுக்குத் தந்து என்னைக் காத்தருள்க.

74) போற்றி இப்புவனம் நீர் தீ
காலொடு வானம் ஆனாய்
போற்றி எவ் உயிர்க்கும் தோற்றம்
ஆகி நீ தோற்றம் இல்லாய்
போற்றி எல்லா உயிர்க்கும்
ஈறு ஆய் ஈறு இன்மை ஆனாய்
போற்றி ஐம் புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கையானே. 70

சிவன் உய்யக் கொள்கின்ற இந்தப் பூமி, தண்ணீர், நெருப்பு, காற்று, வான்வெளி என்னும் பூதங்கள் ஐந்தானவனே! வணக்கம். எல்லா உயிர்களும் தோன்ற நீ காரணன் ஆகி, உனக்குத்தோன்றுதல் இல்லாதவனே! வணக்கம். எல்லா உயிர்களும் இறுதிக்காலத்தில் ஒடுங்கும் இடமாய் நீ இருக்கிறாய். ஆனால் உனக்கு முடிவில்லை. ஐம்புலன்களாலும் பற்ற முடியாதவனாய், கன்மப் பயனை உயிர்கள் அனுபவிக்கும் போது ஐம்புலன்களோடும் சேர்ந்திருப்பவனே! வணக்கம்.

VIII. ஆனந்தத் தழுந்தல் (எழுசீர் விருத்தம்)

(இன்பநுகர்வால் விளையும் மகிழ்ச்சியில், தேனுண்ட வண்டு போல் அழுந்திக்கிடக்க வேண்டும் என்று இறைவனிடம் வேண்டுதல்)

75) புணர்ப்பது ஒக்க எந்தை என்னை
ஆண்டு பூண நோக்கினாய்
புணர்ப்பது அன்று இது என்றபோது
நின்னொடு என்னொடு என் இது ஆம்
புணர்ப்பது ஆக அன்று இது ஆக
அன்பு நின் கழல்கணே
புணர்ப்பது ஆக அங்கணாள
புங்கம் ஆன போகமே. 71

எனக்குப் பேரின்பப் பெருஞ்செல்வம் தரக் கடமைப்பட்ட என் அப்பனே! உன் திருவருளோடு இணைவதற்குரிய காலம் கனிந்த பொழுது, அடியேனை ஆட்கொண்டு, நான் அடிமைத் தனம் பூண அருள் செய்தாய். பிறகு என்னோடு உன்னை இணைக்கும் காலம் இதுவல்ல என்று நீ திருவுள்ளம் பற்றிய போது, என்னைப் புறக்கணித்தாய் எனவே உன் திருவருளாகிய இது பற்றி உன்னிடம்

பேச என்ன இருக்கிறது! இக்காலம் உன்னோடு இணையும் காலம் ஆனாலும் பிரியும் காலமானாலும் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். அழகிய கண்ணோட்டம் உடையவனே! உயர்ந்த சிவபோகம் தருவது உன் திருவடிக்கண் நான் செலுத்தும் அன்பே ஆகும். அது வந்தால் எனக்குப் போதும்.

76) போகம் வேண்டி வேண்டிலேன்
புரந்தராதி இன்பமும்
ஏக நின் கழல் இணை
யலாது இலேன் என் எம் பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி அஞ்சலிக்கணே
ஆக என் கை கண்கள் தாரை
ஆறு அது ஆக ஐயனே. 72

உலக இன்பங்களுக்கு ஆசைப்பட்டு, போகம் நுகர்வதற்குச் சிறந்த இடமான இந்திரப்பதம் முதலிய தேவர் உலக இன்பங்களை நான் விரும்பவில்லை. ஒப்பற்றவனாகிய உன் திருவடித்துணையின்றிவேறு பற்றுக்கோடில்லேன். என் தலைவனே! உன் மீது கொண்ட பக்தியால் என் உடம்பெல்லாம் நடுங்க, என் கைகள் தலைமேல் குவித்துத் தொழ, என் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டி ஆறாகப் பெருக வேண்டும் என் ஐயனே! இதற்கு அருள்செய்க

77) ஐய நின்னது அல்லது இல்லை
மற்று ஓர் பற்று வஞ்சனேன்
பொய் கலந்தது அல்லது இல்லை
பொய்ம்மையேன் என் எம் பிரான்
மை கலந்த கண்ணி பங்க
வந்து நின் கழல் கணே
மெய் கலந்த அன்பர் அன்பு
எனக்கும் ஆக வேண்டுமே. 73

என் தலைவனே! உன்னைத் தவிர வேறு எந்தப் பற்றுக்கோடும் இல்லாதவன் நான். இருந்தாலும் வஞ்சகனும் பொய்யொழுக்கம் உடையவனுமாகிய நான் பொய்யன்பு உடையவனாகவே இருக்கிறேன். என்னை ஆண்டவனே! அஞ்சனம் தோய்ந்த கண்களையுடைய

அருளரசியான உமையொரு பங்கனே! உன் திருவடிநிழலில் வந்து நின்று இன்பமுறும் மெய்யடியார்களின் உண்மை அன்பே எனக்கும் உண்டாக அருள்புரிவாயாக.

78) வேண்டும் நின் கழற்கண் அன்பு
பொய்ம்மை தீர்ந்து மெய்ம்மையே
ஆண்டுகொண்டு நாயினேனை
ஆவ என்று அருளு நீ
பூண்டு கொண்டு அடியனேனும்
போற்றி போற்றி என்றும் என்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின் வணங்கவே. 74

என் மன்னவனே! உன் திருவடிக்கண் மெய்யான அன்பைத் தருவாயாக. என் பொய்யொழுக்கம் தீர்த்து, மெய்யன்புதந்து, என்னை ஆட்கொண்டு, நாய் போன்ற எனக்கு, ஆஆ என்று இரங்கி ஆறுதல் கூறி அருள் செய்வாயாக! அப்படி ஆட்கொண்ட தன்மையை நானும் ஆபரணம் போலப் பூண்டுகொண்டு, வணக்கம் வணக்கம் என்று மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் வந்து வந்து நின் திருவடியில் வணங்கச் செய். இதற்கேற்ற மெய்யன்பைக் கொடு.

79) வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும்
வேதம் நான்கும் ஓலம் இட்டு
உணங்கும் நின்னை எய்தல் உற்று
மற்றொர் உண்மை இன்மையின்
வணங்கி யாம் விடேங்கள் என்ன
வந்து நின்று அருளுதற்கு
இணங்கு கொங்கை மங்கை பங்க
என்கொலோ நினைப்பதே. 75

உன்னைத் தவிர வேறு மெய்ப்பொருள் இல்லையென்பதால், வானும் மண்ணும் உன்னையே வணங்குகின்றன. நான்கு வேதங்களும் உன்னைக் காணமாட்டாமல் உன்னை அடைய எண்ணி ஓலமிட்டு இளைத்துவிட்டன. அடியார்களாகிய நாங்கள் உன் திருவடிகளையே வணங்கி உன்னை விடுவதில்லை என்று சிக்கெனப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். அருள்புரிவதற்காகவே நெருங்கிய கொங்கைகளை உடைய உமையவளைப் பங்கில் கொண்ட

பரம்பொருளே! எங்களுக்கு முன் வந்து வெளிப்பட்டு அருள்புரிவதற்கு உன் திருவுள்ளம் நினைக்க வில்லையா?

80) நினைப்பது ஆக சிந்தை செல்லும்
எல்லை ஏய வாக்கினால்
திணைத்தனையும் ஆவது இல்லை
சொல்லல் ஆவ கேட்பவே
அனைத்து உலகும் ஆய நின்னை
ஐம்புலன்கள் காண்கிலா
எனைத்து எனைத்து அது எப்புறத்து அது
எந்தை பாதம் எய்தவே. 76

என் தந்தையே! என் மனம் எவ்வளவுக்கு உன் திருவுருவை நினைக்கமுடியுமோ, அந்த அளவுவரை நினைக்கட்டும். வாய்ப்பேச்சினால் திணையளவு கூடப்பலன் விளையாது. உயர்ந்த நூற்கள் உன்னைப்பற்றிச் சொல்கின்ற செய்திகளை எல்லாம் என் காதுகள் கேட்கட்டும். ஆனால் இவையெல்லாம் உன்னைக் காட்டுமா? அனைத்துலகுமாய் நிற்கும் நின்னை ஐந்து புலன்களும் காணமாட்டாதவையே ஆகும். என் தந்தையாக நீ இருந்தும் உன் திருவடிகளை நான் அறியாமல் தவிக்கலாமா? அவற்றை அடைவதற்கு உதவியாக, அவை எத்துணை அளவுடையவை எவ்விடத்தில் இருப்பவை என்று கூற மாட்டாயா?

81) எய்தல் ஆவது என்று நின்னை
எம் பிரான் இவ் வஞ்சனேற்கு
உய்தல் ஆவது உன்கண் அன்றி
மற்றொர் உண்மை இன்மையின்
பைதல் ஆவது என்று பாது
காத்து இரங்கு பாவியேற்கு
ஈது அலாது நின் கண் ஒன்றும்
வண்ணம் இல்லை ஈசனே. 77

என்னை ஆண்ட பெருமானே! நான் நின்னையடைவது எப்பொழுது? வஞ்சகனாகிய எனக்கு உன் பற்றே அல்லாமல் உய்யும் வழிகாட்ட வேறு பற்றுக்கோடு இல்லையே. உன்னைத் தவிர வேறு மெய்ப்பொருள் இல்லையே. நீ கைவிட்டால் நான் மிகவும் துன்புறுவேன் என்று அறிந்தவனல்லவா நீ? எனக்கு இரங்கிப் பாதுகாப்பாயாக.

உன்னைக் காணக் கூடாத அளவுக்குப் பாவம் செய்தவனாகிய எனக்கு, இதைத்தவிர உன் திருவடி அடைய வழிவேறென்ன இருக்கிறது? ஈசனே! வழிகாட்டு

82) ஈசனே நீ அல்லது இல்லை
இங்கும் அங்கும் என்பதும்
பேசினேன் ஓர் பேதம் இன்மை
பேதையேன் என் எம் பிரான்
நீசனேனை ஆண்டு கொண்ட
நின்மலா ஓர் நின்னலால்
தேசனே ஓர் தேவர் உண்மை
சிந்தி யாது சிந்தையே. 78

இம்மை உலகத்தும் மறுமை உலகத்தும் தலைமையான மெய்ப் பொருள் ஈசனாகிய உன்னைத் தவிர வேறொன்றில்லை என்பதையும், வீட்டுநிலை அடைந்து உயிர் இறையடி நிழலில் இரண்டறக் கலக்கும் போது இறைவனுக்கும் உயிருக்கும் வேறுபாடில்லை என்பதையும், அறிவற்றவனாகிய நான் பேசியதுண்டு. இவ்வாறு உன் பொருள் சேர் புகழ் பாடியதால், பாசப்பிணிப்பால் இழிந்தவனாகிய என்னை ஆட்கொண்ட தூயவனே! உவமை கூறமுடியாத உன்னைத் தவிர, வேறு தெய்வம் உண்டென்று கூட என்மனம் நினைக்காது.

83) சிந்தை செய்கை கேள்வி வாக்கு
சீர் இல் ஐம் புலன்களால்
முந்தை ஆன காலம் நின்னை
எய்திடாத மூர்க்கனேன்
வெந்து ஐயா விழுந்திலேன்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை ஆய நின்னை இன்னம்
எய்தல் உற்று இருப்பனே. 79

என் ஐயனே! மனம், செயல், கேள்வி, மொழி இவற்றை உனக்கு ஆக்காமலும், தாம்பெற்ற இன்பங்களைச் சிவார்ப்பணமாக்காமல் சீர் கெட்ட ஐம்புலச் சேட்டைகளாலும், பழங்காலத்தில் உன்னை அடையப் பெறாத அறிவிலியாகிய நான், இத்தீவினையை எண்ணி நெருப்பில் வீழ்ந்து வேகவில்லை. என் மனம் வெட்கப்பட்டு உடைந்து போகவில்லை

ஏன் தெரியுமா? என் தந்தையாகிய நீ உன் குழந்தையாகிய எனக்கு அருள்புரிவாய். நான் உன்னை அடைய முடியும் என்ற எண்ணத்தில் தான் உயிரை வைத்துக் கொண்டு இன்னும் இருக்கிறேன்.

84) இருப்பு நெஞ்ச வஞ்சனேனை
ஆண்டு கொண்ட நின்ன தாள்
கருப்பு மட்டு வாய் மடுத்து
எனைக் கலந்து போகவும்
நெருப்பும் உண்டு யானும் உண்டு
இருந்தது உண்டது ஆயினும்
விருப்பும் உண்டு நின்கண் என்கண்
என்பது என்னவிச்சையே. 80

இரும்பு போன்ற வன்மை மிக்க நெஞ்சையுடையவனும், வஞ்சகனுமாகிய என்னை ஆண்டருளிய நின்னுடைய திருவடிகள், எனக்குக் கருப்பஞ்சாறு போன்ற தூய அருளமுதம் ஊட்டி, என் உணர்விலும் உயிரிலும் கலந்து திடீரென்று என்னைப் பிரிந்து சென்றுவிட்டன. இது தாங்க முடியாத்துயரம். என்னை எரிப்பதற்கு நெருப்பு இருந்தது எரிக்கப்படுவதற்கு ஏற்றவனாக நானும் இருந்தேன்.என்றாலும் உன்னிடம் என் விருப்பம் அதிகமாக உள்ளது என்று கூறுகிறேன். அதிக விருப்பம் இருந்தால் பிரிந்த பொழுது நெருப்பில் அல்லவா பாய்ந்திருக்க வேண்டும்? இது என்ன மாயவித்தை?

IX. ஆனந்த பரவசம் (கலிநிலைத்துறை)

(மெய்யுணர்வினால் இறையருளைப்பற்றி நின்று பக்குவமுதிர்ந்த உயிர், அந்த ஆனந்தத்தில் மேன்மேலும் ஈடுபட்டுத் தன்வசம் இழத்தல் ஆனந்த பரவசம் ஆகும்)

85) விச்சுக் கேடு பொய்க்கு ஆகாது
என்று இங்கு எனை வைத்தாய்
இச்சைக்கு ஆனார் எல்லாரும்
வந்து உன் தாள் சேர்ந்தார்
அச்சத்தாலே ஆழ்ந்திடு
கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா என் நான்
செய்கேன் பேசாயே. 81

பொய்மை என்னும் பயிர் என்றைக்கும் வளர்வதற்கு வித்து அழியாமல் இருக்க வேண்டும் என்று இவ்வுலக வாழ்வில் என்னை இருத்தினாய் போலும். அன்புடன் தொண்டு செய்யும் அடியார்கள் எல்லாம் வந்து உன் திருவடியில் சேர்ந்துவிட்டார்கள். நான் மீண்டும் பிறப்பு வருமோ என்று அச்சத்தால் வருந்துகின்றேன். திருவாரூரில் அடியார்களின் அன்புப் பிச்சையை ஏற்கும் தெய்வமே! நான் என்ன செய்தால் உன்னடி அடையலாம் என்று இப்பொழுதாவது கூற மாட்டாயா?

86) பேசப்பட்டேன் நின் அடியாரில்
திரு நீறே
பூசப்பட்டேன் பூதலரால்
உன் அடியான் என்று
ஏசப்பட்டேன் இனிப்படு
கின்றது அமையாதால்
ஆசைப்பட்டேன் ஆட் பட்டேன்
உன் அடியேனே. 82

உன்னடியார் கூட்டத்தில் நானும் ஒருவன் என்று பாராட்டிப் பேசப்பட்டேன். குருந்த மரத்தின் கீழ் ஞானாசிரியனாகிய உன்னால், திருநீறு பூசப்பட்டுத் தூய்மை பெற்றேன். உலகமக்களால் சிவன் அடியான் என்று ஏசப்பட்டேன். இனித் துன்பப்பட முடியாது. அடியேன் உன் அடியவனாக ஆசைப்பட்டு உனக்கே ஆளாயினேன். என்னைக் கண்டு கொள்க!

87) அடியேன் அல்லேன் கொல்லோ தான் எனை
ஆட்கொண்டிலை கொல்லோ
அடியார் ஆனார் எல்லாரும்
வந்து உன் தாள் சேர்ந்தார்
செடி சேர் உடலம் இது நீக்க
மாட்டேன் எங்கள் சிவலோகா
கடியேன் உன்னைக் கண்ணாரக்
காணும் ஆறு காணேனே. 83

நான் உனக்கு அடிமை என்பது உண்மை இல்லையா? நீ என்னை ஆட்கொள்ளவில்லையா? மெய்யடியார் எல்லோரும் உன்னிடம் வந்து திருவடிப் பேறு பெற்றுவிட்டார்கள். நான் மட்டும் துன்பமுண்டாக்கும் பாவச் செடியாகிய இவ்வுடம்பை ஒழிக்கவும்

மாட்டாமல், எங்கள் சிவலோக நாதனாகிய உன்னைக் கண் குளிரக்காணும் நெறியை அறியவும் மாட்டாமல் தவிக்கிறேனே! நெஞ்சம் குழையாத கடுமை உடையவன் நான்தானே!

88) காணும் ஆறு காணேன் உன்னை
அந்நாள் கண்டேனும்
பாணே பேசி என் தன்னைப்
படுத்தது என்ன? பரஞ்சோதி
ஆணே பெண்ணே ஆர் அமுதே
அத்தா செத்தே போயினேன்
ஏண் நாண் இல்லா நாயினேன்
என்கொண்டு எழுகேன் எம்மானே. 84

இப்பொழுது உன்னை மீண்டும் காண முடியாதவனாகிய நான், முன்னாளில் குருநாதன் வடிவில் கண்ட போது உன்னைப் போற்றிப் பேசியதெல்லாம் உண்மையாக இல்லாமல் உபசாரமாயிற்றோ? அதனால் எனக்கு என்ன நலன் கிடைத்தது? அருவநிலையில் மேலான சோதியாகவும் உருவநிலையில் ஆண் பெண் ஆகவும் அருவுருவநிலையில் ஆரமுதாகவும் காட்சியளிப்பவனே! என் தந்தையே! நான் பயனின்றி இறந்தே போய் விட்டேன். உன்னையடையும் தவவலிமையும், பயன் பெறாமல் அடியார் குழுவில் வைத்து எண்ணப்பட்டதால் வெட்கமும், இல்லாத நாயேன் என் தலைவனே! இனி எதைப் பற்றிக் கொண்டு இத்துன்பக்கடலினின்றும் எழுவேன்?

89) மான் நேர் நோக்கி உடையாள் பங்கா
மறை ஈறு அறியா மறையோனே
தேனே அமுதே சிந்தைக்கு அரியாய்
சிறியேன் பிழை பொறுக்கும்
கோனே சிறிதே கொடுமை பறைந்தேன்
சிவ மா நகர் குறுகப்
போனார் அடியார் யானும் பொய்யும்
புறமே போந்தோமே. 85

மான் போன்ற பார்வையை உடையவளும், எம்மையெல்லாம் தனக்கு உடைமையாகப் பெற்றவளும் ஆகிய உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனே! கன்மப்பகுதியைக் கூறும் வேதங்களாலும் ஞானப்பகுதியை விளக்கும் வேதமுடிவுகளாலும் உணரமுடியாத மறை

பொருளாய்உள்ளவனே! எளிமையில் -தேனாகவும் அருமையில் அமுதாகவும் இருப்பவனே! சிந்தனை கடந்த சிவபரம்பொருளே! சிறியவனாகிய என் குற்றங்களைப் பொறுக்கும் பெருமைக் குணமுடையவனே! என் மனத்துயரால் கொடுமையான சொற்களைக் கூறிவிட்டேன். உயர்ந்த அடியார் எல்லாம் சிவபுரம் போயினர். நானும் என் பொய்யும் புறம்பாகப் போய்விட்டோமே. இதனால் கூறிய கடுஞ்சொற்களைப் பொறுத்தருள்க.

90) புறமே போந்தோம் பொய்யும்
யானும் மெய் அன்பு
பெறவே வல்லேன் அல்லா
வண்ணம் பெற்றேன் யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்று ஒன்று அறியாதார்
சிறவே செய்து வழி வந்து சிவனே
நின் தாள் சேர்ந்தாரே. 86

நானும் என் பொய்யும் உன் திருவருளுக்குப் புறம்பாகப் போய் விட்டோம். நான் உன்பால் மெய்யன்பு செலுத்த வல்லவன் ஆக இருந்தும், அப்படி அன்பு செலுத்தாத தன்மையை அல்லவா பெற்றுவிட்டேன்! முழுவதுமாகத் தங்களை உன்னிடம் ஒப்படைத்த அடியார்கள் உன்னைத் தவிர வேறெதையும் அறியாத சிறப்புடையார். அவர்கள் சிறந்த செயல்களைச் செய்து தவவழியில் சென்று சிவபெருமானே! உன் திருவடிப் பேறு பெற்றுவிட்டார்களே! (அந்தப் பேறு எனக்கு என்று வருமோ?)

91) தாராய் உடையாய் அடியேற்கு உன்
தாள் இணை அன்பு
பேரா உலகம் புக்கார் அடியார்
புறமே போந்தேன் யான்
ஊர் ஆ மிலைக்கக் குருட்டு ஆ
மிலைத்து ஆங்கு உன் தாள் இணை அன்புக்கு
ஆரா அடியேன் அயலே
மயல்கொண்டு அழுகேனே. 87

என்னை உடைய எம்பெருமானே! எனக்கும் உன் திருவடிப் பேரன்பைத் தரமாட்டாயா? மெய்யடியார்கள் மீளா உலகமாகிய வீட்டுலகை அடைந்தார்கள். நானோ அங்கே போக மாட்டாமல்

வெளியில் நிற்கிறேன். கன்றைக் கண்ட ஊர்ப் பசுக்கள் மகிழ்வோடு கனைக்கும் போது, கண்ணில்லாத குருட்டுப் பசுவும் கன்றைக் கண்ட மாதிரிக் கனைத்தது போல, உன் திருவடித்தாமரைகளுக்கு அன்பு செலுத்தும் அனுபவம் பெறாத நானும் மெய்யடியார்களோடு சேராமல் புறம்பே நின்று, உன் மேல் ஆசைப்பட்டு அழுகின்றேனே.

92) அழுகேன் நின்பால் அன்பு ஆம்
மனமாய் அழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின் ஆர்
பொன்னார் கழல் கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா
ரோடும் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண்டு
உன்னைப் பணிகேனே. 88

உன் பால் அன்பு கொண்ட மனத்தினால் நான் அழவில்லையே. தீயிடைப் பட்ட மெழுகுபோல் உருகி, ஒளிமிக்க உன் பொற்கழல்களைக் கண்டு வணங்கி, உன்னைத் தொடர்ந்து வந்த மெய்யடியார்களைத் தொழுது நானும் தொடரமாட்டாமல் பயனின்றிப் பிறந்துவிட்டேனே இனி எதைப்பற்றுக் கோடாகக் கொண்டு உன்னை வணங்குவேன்?

93) பணிவார் பிணி தீர்த்துஅருளிப்ப
பழைய அடியார்க்கு உன்
அணி ஆர் பாதம் கொடுத்தி
அதுவும் அரிது என்றால்
திணி ஆர் மூங்கில் அனையேன்
வினையைப் பொடி ஆக்கி
தணி ஆர் பாதம் வந்து ஒல்லை
தாராய் பொய் தீர் மெய்யானே. 89

பொய்ப்பொருட்கள் எல்லாம் அழிந்து போக இறுதியில் எஞ்சிநிற்கும் மெய்ப்பொருளே! தொன்றுதொட்டு உன்னை வணங்கிய பழைய அடியார்களுக்குப் பாசப்பிணி தீர்த்தருளி சிவத்துவமாகிய திருவடிப் பேறு தந்து அருள்கின்றாய். எனக்கு அந்தப் பெரும்பேறு அரியது என்றால், பிறர் வளைத்தாலன்றி வளையாத கெட்டி மூங்கில் போன்றவனாகிய என் வினைகளை அழித்து, (கன்மநீக்கம் செய்து) வினை எரிவதால் வரும் வெப்பத்திலிருந்து காப்பாற்ற உன் குளிர்ச்சிமிக்க திருவடிகளை விரைவில் தந்து ஆட்கொள்வாயப்பா.

94) யானே பொய் என் நெஞ்சும்
பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனை வந்து உறுமாறே. 90

உன்னை வணங்குவதாக நடிக்கும் நான் பொய்யன் உன்னை நினைக்கும் என் நெஞ்சமும் பொய். உன் பால் செலுத்தும் என் அன்பும் பொய். இப்படி இருக்கும் போது கடுமையான வினைகளை உடைய நான் கண்ணீர் விட்டு அழுதால் உன்னைப் பெற முடியுமா? அந்த அழுகை பொய்யாக இருக்கக் கூடாதே. அப்படிப் பொய்யானால் என்ன செய்வேன்? தேனும் அமுதமும், கரும்புச்சாற்றின் தெளிவுமாய் இனிக்கும் எம்பெருமானே! நான் உன்னை வந்தடைய நீயே வழிகாட்டி அருள் புரிவாயாக!

X.ஆனந்தாதீதம் (எண்சீர் ஆசிரிய விருத்தம்)

(ஆனந்தத்தின் முடிந்த நிலையில் காண்பவன் காட்சி காணப்படுபொருள் என்னும் வேறுபாடில்லாமல் ஞான நிலையோடு உயிர் தோய்ந்திருப்பது அதீதமாகிய பேரின்பநிலை)

95) மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
ஈறிலாத நீ எளியை யாகி வந்து
ஒளிசெய் மானுட மாக நோக்கியும்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
கடையன் ஆயினேன் பட்ட கீழ்மையே. 91

உலகில் காணப்படும் நீர்ப்பெருக்காகிய வெள்ளம் போல் பெருகுதல் சுருங்குதல் வற்றிப் போதல் எனும் மாற்றங்கள் இல்லாமல் என்றும் ஒரே மாதிரி ஓடிக்கொண்டிருக்கும் பெருங்கருணை வெள்ளமாகிய பெருமானே! உன்னுடைய மலரடிகளில் வேற்றுமை இன்றிக் கலத்தற்குரிய பக்குவம் பெற்ற மெய்யடியார்கள், முந்தி வந்து,

மெய்யாகிய திருவடிப் பேறு பெற்றனர். என்றும் அழிவற்றவனாகிய நீ, எளிமையோடு ஒளிபொருந்திய மானிடவடிவில் ஞானாசிரியனாக எழுந்தருளி வந்து, அருட்பார்வை பார்த்த பின்பும் கூட, மனத்தில் ஒருவித மாற்றமும் பெறாத நாயேன், என் இழிவான தன்மையால் மிகக் கீழானவனாகி விட்டேன்.

96) மையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெ னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ணம் என்றலால்
அரியை என்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லிங்கெனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்த மாவதே. 92

தன் விழியைச் சேர்ந்த மையை விளங்கச் செய்யும் அம்மையை ஒருபங்கில் உடையவனே! நீ குருநாதனாக வந்து என்னை அடிமையாக்கிக் கொண்ட பிறகு, சிறுகுழந்தை தன் கையிலுள்ள ஒளி பொருந்திய தங்கக் கிண்ணத்தை மிகச் சாதாரணமாக நினைப்பது போல நினைத்தேனே அல்லாமல், நீ கிடைத்தற்கரியவன் என்று நினைக்கவில்லை. செம்மேனி எம்மானாகிய நீ, உடம்பில் விளங்கும் திருவெண்ணீற்றுக்குப் பெருமைதந்து வெண்ணிறத்தோடு காட்சியளிக்கிறாய். அது போல உன்னை அடைந்த மெய்யன்பர்கள் உன்னோடு இணைந்து உண்மை இன்பம் பெற்றுவிட்டார்கள் பொய்யான வாழ்க்கையில் புகும்படி என்னை விட்டுவிட்டு, நீ மட்டும் சிவபுரத்துக்கு எழுந்தருளுதல் உன் பெருங்கருணைக்குப் பொருத்தமான செயலா? கூறுவாய் ஐயனே!

97) பொருத்தம் இன்மையேன் பொய்ம்மை உண்மையேன்
போத என்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்தம் இன்மையேன் வஞ்சம் உண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியாய் அருள்செய் அன்பரும்
நீயும் அங்கெழுந் தருளி யிங்கெனை
இருத்தி னாய்முறை யோஎன் எம்பிரான்
வம்ப னேன்வினைக்கு இறுதி இல்லையே. 93

பொய்யொழுக்கத்தை உடைய நான் உனக்குப் பொருத்தமானவன் இல்லை ஆனால் நீயோ என்னை வருக என்று அழைத்து விரும்பி நோக்கினாய். ஏமாற்றுத் தன்மை கொண்ட நான், உன்னிடம் வருவதற்கு முயற்சி எடுக்காமல் விட்டுவிட்டேன் அதனால் உனைப்பிரிந்தேன். அப்பிரிவுத்துயரால் இறந்தொழியவும் இல்லை. செந்தாமரைமலர் போன்ற திருவடிகளை உடையவனே! செந்நிறமான திருமேனிப் பெருமானே! உன்னருள் பெற்ற அன்பர்களுடன்,நீயும் சிவபுரத்துக்கு எழுந்தருளி என்னை இப்பொய் வாழ்க்கையில் போட்டுவிட்டாயே! இது நியாயமா? பயனில்லாமல் வாழும் என் வினைக்கு முடிவே கிடையாதா?

98) இல்லை நின்கழற்கு அன்பது என்கணே
ஏலம் ஏலும்நற் குழலி பங்கனே
கல்லை மென்கனி ஆக்கும் விச்சைகொண்டு
என்னை நின்கழற்கன்பன் ஆக்கினாய்
எல்லை இல்லைநின் கருணை எம்பிரான்
ஏது கொண்டுநான் ஏது செய்யினும்
வல்லை யேஎனக்கு இன்னும் உன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே. 94

தூய்மையான ஞானப் பெருவெளியில் உள்ளவனே! மயிர்ச் சாந்தணிந்த அழகிய கூந்தலை உடைய உமையவளை ஒரு பால் உடையவனே! என்னிடம் உன் திருவடிக்கண் அன்பில்லை. என்றாலும் கல்லைப் பிசைந்து மென்மையான பழமாக்கும் வித்தையைக் கொண்டு, என்னை உன்திருவடிக்கு அன்புடையவனாகச் செய்து விட்டாய். நின் பெருங்கருணைக்கு எல்லை இல்லை. எனவே இனி நான் மனம் மொழி மெய்களால் எந்தச் சிறுபணியைச் செய்தாலும், எனக்கு மீண்டும் உன் திருவடிக்காட்சிதந்து எம்பெருமானே! இவ்வுலக வாழ்விலிருந்து மீட்கும் வல்லவன் அல்லவாநீ. (அதைச் செய்ய மாட்டாயா?)

99) வான நாடரும் அறியொ ணாதநீ
மறையில் ஈறும்முன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத்து உடைய விச்சையே. 95

வானத்துத் தேவர்களால் அறியமுடியாத நீ, வேதங்களின் முடிவாகிய ஞானக்கூறும் தொடர்ந்து பற்ற முடியாத நீ, மற்ற உலகத்தார் தெரிந்து கொள்ள முடியாத நீ. என்னை மிக இன்பத்தோடு ஆண்டு கொண்டாய். முதலில் உலக வாழ்க்கைக்குக் கட்டுப்பட்டு இந்த உடம்பைக் கூத்தாட வைத்தாய், பிறகு உள்ளம் உருகி உன் அருளமுதத்தைப் பருகத்தந்தாய், அதன் பின் எல்லாம் சிவமாகக் கண்டு ஞானக் கூத்தாடச் செய்து, இவ்வுலக ஆசைகள் எல்லாம் நைந்தொழியச் செய்தாய். (இவையனைத்தும் உன்னாலன்றோ நிகழ்ந்தன)

100) விச்சது இன்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையுன் கோயில் வாயிலில்
பிச்சன் ஆக்கினாய் பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயி னுங்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே. 96

படைப்புத் தொடங்கிய போது, ஆணவமலத்தால் கட்டப்பட்டுக் கிடந்த உயிருக்கு, வினையாகிய விதை இல்லாமலேயே உடம்பைத் தந்து விளையச் செய்தாய் விண்ணுலகம் மண்ணுலகம் முதலிய எல்லா உலகங்களையும் அவ்வவற்றின் நிலையில் இருக்குமாறு படைத்துக் காத்து ஒடுக்குவாய். வஞ்சகமிக்க புலையனாகிய என்னை, உன் திருக்கோயிலின் வாயில் முன்னே வைத்து உன்பால் பித்துக் கொள்ளச் செய்தாய். பேரன்பர்களாகிய உன் மெய்யடியார் கூட்டத்தில் இருக்க உரிமை உடையவன் ஆக்கினாய். நச்சுமரமாய் இருந்தால் கூட வளர்த்தவர்களே அந்தப் பெரிய மரத்தை வெட்டமாட்டார்கள். என்னை உடையவனே! நானும் அப்படித்தான். என்னை வெறுத்து ஒதுக்கிவிடாதே.

101) உடைய நாதனே போற்றி நின்னலால்
பற்று மற்றெனக்கு ஆவது ஒன்றினி
உடைய னோபணி போற்றி உம்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினும்
கடையன் ஆயினேன் போற்றி என்பெருங்
கருணை யாளனே போற்றி என்னைநின்
அடியன் ஆக்கினாய் போற்றி ஆதியும்
அந்தம் ஆயினாய் போற்றி அப்பனே. 97

என்னை ஆளாகக் கொண்ட ஆத்மநாதனே! வணக்கம் உன்னைத் தவிர எனக்கு ஆதரவான பற்றுக்கோடு இனி வேறில்லை. என்னைப் பணி கொண்டருள்வாய். வணக்கம். மேல் உலகத்தவர்க்கும் மேலான பரம்பொருளே! வணக்கம். எல்லோரையும் விடக் கடைப்பட்டவன் வணங்குகிறேன். எனக்குப் பெருங்கருணை புரிபவனே! வணக்கம் என்னை உனக்கு அடிமையாக ஆக்கிக் கொண்டவனே வணக்கம். ஆதியும் அந்தமும் இல்லாத என் அப்பனே! வணக்கம்

102) அப்ப னேஎனக்கு அமுத னேஆ
னந்த னேஅகம் நெகஅள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக்கு உரிய அன்பரில்
உரிய னாய்உனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாளர் எய்ப்பினில்
வைப்ப னேஎனை வைப்ப தோசொலாய்
நைய வையகத்து எங்கள் மன்னனே. 98

என் அப்பனே! எனக்குச் சாவா மருந்தானவனே! பேரின்ப மானவனே! உள்ளம் உருக வாயில் ஊறல் உண்டாக்கும் தேன் போன்றவனே! உன்பால் உரிமை உடைய மெய்யன்பர்களைப் போல, நானும் உரிமை உள்ளவனாகி, உன்னை நுகரும்படி எனக்குக் கிடைத்த ஒப்பற்ற உணவானவனே! ஒளி விளங்கும் திருமுடி உடையவனே! தொண்டர்கள் தளரும் போது எடுத்துப்பயன் படுத்தத் தக்க வைப்பு நிதி போன்றவனே! என்னை மட்டும் இவ்வுலக வாழ்க்கையில் நையுமாறு வைப்பது முறையாகுமோ! எங்கள் மன்னவனே! நீதான் கூற வேண்டும்.


103) மன்ன எம்பிரான் வருக என்னெனை
மாலும் நான்முகத்து ஒருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக என்னெனை
முழுதும் யாவையும் இறுதி உற்றநாள்
பின்ன எம்பிரான் வருக என்னெனைப்
பெய்க ழற்கண்அன் பாய்என் நாவினால்
பன்ன எம்பிரான் வருக என்எனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே. 99

என்றும் நிலைபெற்ற எம்பெருமானே! என்னை வருக என்று அருள்வாயாக. திருமாலும் நான் முகனும் மற்ற தேவர்களும் ஆகிய

யாவர்க்கும் முற்பட்டவனே! என்னை வருக என்று அருள்க. உலகம் முழுதும் பொருட்கள் யாவையும் அழிவெய்திய ஊழிக்காலத்துக்குப் பின்னும் அழியாமல் இருப்பவனே! என்னை வருக என்று அருள்க. பாவத்தை ஒழிக்கும் எம்பெருமானே! கழல் அணிந்த உன் திருவடிக்கண் அன்புடையவனாய், என் நாமணக்க, உன் சிறப்புக்களை இசையோடு பாட, என்னை வருக என்று அருள் புரிய வேண்டும் அப்பனே!

104) பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்து உருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும்நான் போற்றி அம்பலத்து
ஆடும் நின்கழல் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்குஎனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. 100

மெய்யன்புடையவர் பால் மெய்ப்பொருளாய் இருப்பவனே! உன்னையே நான் பாடவேண்டும். உன்னையே பாடி நைந்து உள்ளம் உருக நான் கூத்தாட வேண்டும். தில்லையில் திருக்கூத்தாடும் நின் திருவடி மலரை, நாயேன் அடைந்து நாதனே உன்னோடு சேர வேண்டும் புழுக்களுக்கு இடமாகிய இவ்வுடம்பிலிருந்து நான் விடுபட வேண்டும். பொய்யுலக வாழ்வை விட்டொழிக்க வேண்டும். நீ அழிவில்லாப் பேரின்ப வீடு தந்து எனக்கருள வேண்டும் உன் திருவடிகளுக்கு வணக்கம் வணக்கம்



அன்புருவ மான அருள்வாத வூர் இறைவன்
இன்புருவ மாகநமக்கு ஈந்தருளும் - நன்புலஞ்சேர்
வாசகம் எங் கேயான் வரையும் உரையெங்கே
ஆசகற்றிக் கொள்ளல் அறன்.

-பண்டிதமணி மு.கதிரேசனார்

6. நீத்தல் விண்ணப்பம்

திருவுத்தரகோசமங்கையில்அருளியது (கட்டளைக்கலித்துறை)

(இறைவன் தன்னைக் கைவிடக் கூடாதென்றும், இவ்வுலக வாழ்வை நீத்து அவனருளில் சேர்ப்பிக்க வேண்டும் என்றும் விண்ணப்பம் செய்தல்)

105) கடையவனேனைக் கருணையினால்
கலந்து, ஆண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
சடையவனே தளர்ந்தேன் எம் பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே. 1

எல்லோரையும் விடக் கடைப்பட்டவனாகிய என்னை, தன்னுடைய தனிப்பெருங்கருணையினால் என்னுட் கலந்து ஆட்கொண்டருளிய இடப வாகனத்தை உடையவனே! என்னை விட்டுவிடாதே. ஆற்றல் மிக்க புலித்தோலை ஆடையாக உடையவனே! என்றும் நிலைபெற்ற உத்தர கோச மங்கைக்கு மன்னனே! (காலில் விழுந்த சந்திரனைத் தலையில் வைத்துக் கொண்ட) சடைக்கற்றை உடையவனே! நான் மிகவும் சோர்ந்து போனேன். எம் தலைவனே! என்னைத் தாங்கிக் காத்தருள்க!

106) கொள் ஏர் பிளவு அகலாத் தடங்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதி கண்டாய்
நின் விழுத் தொழும்பின்
உள்ளேன் புறம் அல்லேன் உத்தர
கோசமங்கைக்கு அரசே
கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்டு
ஆண்டது எக் காரணமே. 2

கொள்ளின் பிளவு அளவு இடைவெளி கூட இல்லாத, அடிபருத்த கொங்கை மகளிரின் கொவ்வைப் பழம் போன்ற சிவந்த வாயிதழை விட்டுக் கணப்பொழுதும் பிரியாதவன் என்றாலும் என்னை விட்டுவிடாதே.

ஏன் தெரியுமா? நான் உன்னுடைய தொண்டில் ஈடுபட்டுள்ளவன். உனக்குப் புறம்பானவன் இல்லை. உத்தர கோச மங்கை மன்னனே! உனக்கு வஞ்சகம் செய்ய மாட்டேன். நான் முன்பு உன்னை நீங்கிச் சென்றதும், என்னைத் தேடிக் கண்டுபிடித்து ஆட்கொண்டதற்கு எது காரணம்? (உன் திருவருள்தானே)

107) கார் உறு கண்ணியர் ஐம்புலன்
ஆற்றங் கரை மரமாய்
வேர் உறுவேனை விடுதி கண்டாய்
விளங்கும் திருவா
ரூர் உறைவாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
வார் உறு பூண் முலையாள் பங்க
என்னை வளர்ப்பவனே. 3

கருமை நிறத்தழகுடைய கண்களைப் பெற்ற பெண்கள் மேல் ஆசைப்பட்டு ஐம்புலன் ஆகிய ஆற்றங்கரையில், விரைவில் வேர் பறிக்கப்பட்டு வீழ்ந்தொழியும் மரம் போல, வேர்விட்டு நிற்கும் என்னை விட்டுவிடாதே. திக்கெல்லாம் நிறைந்த புகழ்த் திருவாரூரில் இருப்பவனே! நிலையாக உத்தர கோசமங்கையில் ஆளும் அரசனே! கச்சுப் பொருந்திய அணிகள் அணிந்த கொங்கைகளை உடைய அம்மையை ஒரு கூறாக உடையவனே! அடியேனைப் பாதுகாப்பவனே! (என்னைக் கைவிடாதே)

108) வளர்கின்ற நின் கருணைக் கையில்
வாங்கவும் நீங்கி இப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதி கண்டாய்
வெண் மதிக் கொழுந்து ஒன்று
ஒளிர்கின்ற நீள் முடி உத்தர
கோசமங்கைக்கு அரசே
தெளிகின்ற பொன்னும் மின்னும் அன்ன
தோற்றச் செழும் சுடரே. 4

தொட்டதைத் துலங்க வைத்து வளரச் செய்கின்ற உன் கருணைக் கரங்களால் என்னை வளைத்து எடுக்கவும், அதற்ககப்படாமல் விலகி, இப்பொய்யுலக வாழ்வில் இறுமாந்து

களிக்கின்ற இச்சிறியவனை விட்டுவிடாதே. வெள்ளையான இளம்பிறை ஒளிவீசும் நீண்ட சடையினை உடையவனே! உத்தர கோசமங்கைக்கு அரசே! தெளிந்த பொன்னையும் மின்னலையும் போல நிறமும் ஒளியும் மிக்க பேரொளிப் பிழம்பே! (என்னைக் கைவிடாதே)

109) செழிகின்ற தீப் புகு விட்டிலின்
சில் மொழியாரில் பல் நாள்
விழுகின்ற என்னை விடுதி கண்டாய்
வெறிவாய் அறு கால்
உழுகின்ற பூ முடி உத்தர
கோசமங்கைக்கு அரசே
வழி நின்று நின் அருள் ஆர் அமுது
ஊட்ட மறுத்தனனே. 5

செழிப்பாய் எரிகின்ற தீயின்கண் விழுந்தே இறக்கும் விட்டில் பூச்சி போல, சிலசொல்லும் பல செயலும் உடைய பெண்களிடம் பலகாலமாக விழுந்து கிடக்கின்ற என்னை விட்டுவிடாதே. தேன் தோய்ந்த ஆறுகால்களை உடைய வண்டுகள் கிண்டுகின்ற கொன்றை மலர் மாலையணிந்த முடியினை உடைய உத்தரகோச மங்கை மன்னனே! நீ என்னை வழி மறித்து, என்முன் நின்று, அருளமுதத்தை வலிய ஊட்ட, அதை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்து விட்டேனே! (இனி என் செய்வேன்?)

110) மறுத்தனன் யான், உன் அருள்
அறியாமையின் என் மணியே
வெறுத்து எனை நீ விட்டிடுதி கண்டாய்
வினையின் தொகுதி
ஒறுத்து எனை ஆண்டுகொள் உத்தர
கோசமங்கைக்கு அரசே
பொறுப்பர் அன்றே பெரியோர் சிறு
நாய்கள் தம் பொய்யினையே. 6

என் மாணிக்கமே! என்னுடைய அறியாமையால் நீ ஊட்டிய அருளமுதத்தை உண்ண மறுத்துவிட்டேன். அதற்காக நீ என்னை வெறுத்து ஒதுக்கி விடாதே. இதற்குக் காரணமான என் வினைத் தொகுதியைக் கடிந்து என்னை ஆட்கொள்க! உத்தரகோசமங்கை

மன்னவா! நீ மிகப் பெரியவனவல்லவா? சிறு நாய்களின் பொய்மையைப் பெரியோர் பொறுத்தருள்வது இயல்புதானே.

111) பொய்யவனேனைப் பொருள் என
ஆண்டு ஒன்று பொத்திக்கொண்ட
மெய்யவனே விட்டிடுதி கண்டாய்
விடம் உண் மிடற்று
மையவனே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
செய்யவனே சிவனே சிறி
யேன் பவம் தீர்ப்பவனே. 7

பொய்யடியானாகிய என்னைப் பொருள் என மதித்து, ஆட்கொண்டு, ஒப்பற்ற நின் கருணைப் பெருக்கினால் என் பொய்மையைப் பொத்திப் பொத்தி மறைத்து என்னை ஏற்றுக் கொண்ட மெய்ப்பொருளே! என்னை விட்டுவிடாதே. நஞ்சை உண்டு கழுத்தில் கரிய நிறம் பெற்றவனே! நிலையான உத்தர கோச மங்கை மன்னனே! சிவந்த மேனியனே! சிவபெருமானே! சிறியேனுடைய பிறப்பை ஒழிப்பவனே! என்னைக் கைவிடாதே.

112) தீர்க்கின்ற ஆறு என் பிழையை நின்
சீர் அருள் என் கொல் என்று
வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய்
விரவார் வெருவ
ஆர்க்கின்ற தார் விடை உத்தர
கோசமங்கைக்கு அரசே
ஈர்க்கின்ற அஞ்சொடு அச்சம் வினை
யேனை இருதலையே. 8

என் குற்றங்களை, சிறப்புமிக்க உன் அருட்குணம் எவ்வாறு தீர்க்கப் போகிறதோ என்று வேர்த்துப் புழுங்கும் என்னை விட்டுவிடாதே. பகைவர் அஞ்சுமாறு ஒலிக்கின்ற மணிமாலை அணிந்த காளையை ஊர்தியாகக் கொண்ட உத்தர கோசமங்கைக்கரசே! என்னை ஐம்புல இன்பம் ஒரு புறமும் இதனால் வரும் துன்பம் பற்றிய அச்சம் மறுபுறமுமாக இழுக்கின்றனவே!

113) இருதலைக் கொள்ளியின்உள் எறும்பு
ஒத்து நினைப் பிரிந்த
விரி தலையேனை விடுதி கண்டாய்
வியன் மூஉலகுக்கு
ஒரு தலைவா மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
பொருதலை மூஇலை வேல் வலன்
ஏந்திப் பொலிபவனே. 9

உள்ளே துளையுடைய மூங்கிலின் இருபக்கமும் நெருப்புப் பற்றி எரியும் போது துளைக்குள் நுழைந்து உள்ளே இருக்கும் எறும்பைப் போல, உன்னை விட்டுப் பிரிந்து உலகவாழ்வின் வெறுப்புக்கும் உன்னுடைய பிரிவுக்கும் இடையே தவிக்கின்றமையால் தலைவிரி கோலமாய்த் திரியும் என்னை விட்டுவிடாதே. மேல் உலகம் கீழ் உலகம் நடுவுலகம் என்னும் மூன்று உலகங்களுக்கும் ஒப்பற்ற தலைவனே! நிலையான உத்தரகோசமங்கைக் கரசே! போர் செய்யத்தக்க மூவிலைச் சூலப் படையை வலக்கையில் தாங்கித் திகழ்பவனே! என்னை விடாமல் பற்றிக்கொள்.

114) பொலிகின்ற நின் தாள் புகுதப்பெற்று
ஆக்கையைப் போக்கப் பெற்று
மெலிகின்ற என்னை விடுதி கண்டாய்
அளி தேர் விளரி
ஒலி நின்ற பூம்பொழில் உத்தர
கோசமங்கைக்கு அரசே
வலி நின்ற திண் சிலையால் எரித்
தாய் புரம் மாறுபட்டே. 10

விளங்குகின்ற நின் திருவடிகளை அடைக்கலமாகப் பெற்றும், இவ்வுடம்பை ஒழிக்க வேண்டும் என்ற விருப்பத்தைப் பெற்றும், இரண்டிலும் ஊன் உருக மெலிகின்ற என்னை விட்டுவிடாதே. மெய்யன்பர்களாகிய வண்டுகள் சிவானந்தத் தேனுண்டு, விளரி என்னும் இசைபாடுகின்ற உத்தர கோசமங்கைக்கு அரசே! முப்புரங்களையும் பகைத்து வலிமைமிக்க மேருமலையாகிய வில்லினால் அழித்தவனே! (என்னை விட்டுவிடாதே)

115) மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப
யான் உன் மணி மலர்த் தாள்
வேறுபட்டேனை விடுதி கண்டாய்
வினையேன் மனத்தே
ஊறும் மட்டே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
நீறு பட்டே ஒளி காட்டும் பொன்
மேனி நெடுந்தகையே. 11

ஐந்து புலன்களும் முரண்பட்டு என்னை வஞ்சித்தமையால், நான் உன்னுடைய ஒளிமிக்கமலர் போன்ற திருவடிப்பணிக்கு வேறுபட்டு அப்பணி செய்யாமல் நிற்கிறேன். தீவினையுடைய என் நெஞ்சத்திலும் தேனாய் ஊறுபவனே! நிலைபெற்ற உத்தரகோசமங்கை மன்னனே! திருநீற்றுப் பூச்சால் ஒளிவிடும் பொன் போன்ற திருமேனியுடைய பெரியோனே! என்னை விட்டுவிடாதே.

116) நெடுந்தகை நீ என்னை ஆட்கொள்ள
யான் ஐம்புலன்கள் கொண்டு
விடும் தகையேனை விடுதி கண்டாய்
விரவார் வெருவ
அடும் தகைவேல் வல்ல உத்தர
கோசமங்கைக்கு அரசே
கடும் தகையேன் உண்ணும் தெள் நீர்
அமுதப் பெருங் கடலே. 12

பேரருட்குணமுடைய பெரியவனாகிய நீ என்னை ஆளாகக் கொள்ளவும், நான் ஐம்புல இன்பங்களையே பொருளாகக் கொண்டு உன்னை விட்டுவிட்டேன். அதற்காக நீ என்னை விட்டுவிடாதே. பகைவர் அஞ்ச, அவரையழிக்கும் சூலப்படையைச் செலுத்தவல்ல உத்தரகோச மங்கை மன்னா! கொடுந்தன்மையுடைய யான், பருகத்தக்கதாகவந்த தெளிந்த அமுதமயமான அருட்பெருங் கடலே! என்னை விட்டுவிடாதே.

117) கடலினுள் நாய் நக்கி ஆங்கு உன்
கருணைக் கடலின் உள்ளம்
விடல் அரியேனை விடுதி கண்டாய்
விடல் இல் அடியார்
உடல் இலமே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
மடலின் மட்டே மணியே அமுதே
என் மதுவெள்ளமே. 13

கடலளவு தண்ணீரிலும் நாய் நக்கிக் குடிப்பது போல, உன் கருணையாகிய கடலில் முழுவதுமாக மனம் செலுத்தாமல் சிறிது சிறிதாகப் பருகும் என்னை விட்டுவிடாதே. உன்னை விடாமல் பற்றி நிற்கும் அடியார் உடலையே கோயிலாகக் கொண்ட உத்தரகோச மங்கை மன்னா! மலரில் வரும் தேனே! மாணிக்கமே! அமுதமே! எனக்குக் கிடைத்த கள்பெருக்கே! என்னைக் கை விடாதே.

118) வெள்ளத்துள் நாவற்றி ஆங்கு உன்
அருள் பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்
விரும்பும் அடியார்
உள்ளத்து உள்ளாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
கள்ளத்துளேற்கு அருளாய்
களியாத களி எனக்கே. 14

நல்ல நீர்ப்பெருக்காகிய வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பவனுக்கு நாக்கு வறட்சியுற்றது போல, உன் திருவருளுக்கு ஆளாகியும் துன்பத்திலிருந்து இன்னும் விடுபடமாட்டாத என்னை விட்டுவிடாதே. உன்னை விரும்பும் அடியார் உள்ளக் கோயிலில் இருப்பவனே! நிலையான உத்தரகோச மங்கை மன்னனே! வஞ்சகத்துள் மூழ்கியிருக்கும் எனக்கு ஐம்புலன்களால் அடைய முடியாத மாறிலா மகிழ்ச்சியை அருள்வாயாக!

119) களி வந்த சிந்தையொடு உன் கழல்
கண்டும் கலந்துஅருள
வெளி வந்திலேனை விடுதி கண்டாய்
மெய்ச் சுடருக்கு எல்லாம்
ஒளி வந்த பூங் கழல் உத்தர
கோசமங்கைக்கு அரசே
எளி வந்த எந்தை பிரான் என்னை
ஆளுடை என் அப்பனே. 15

மகிழ்ச்சிமிக்க மனத்தோடு உன் திருவடிகளைக் காணப்பெற்றும் நீயும் நானுமாய்க் கலந்தருளத் தக்கவாறு உலகப் பிணிப்பிலிருந்து வெளிப்பட்டுவராத என்னை, விட்டுவிடாதே. இயல்பாகவே ஒளிபடைத்த மெய்ப்பொருட்கள் அனைத்திற்கும் ஒளி உண்டாகக் காரணமாகிய திருவடிகளை உடைய உத்தர கோசமங்கை மன்னனே! எனக்கு எளிமையாக வந்து காட்சி தந்த என் தந்தைக்கும் தலைவனே! என்னை ஆளாகக் கொண்ட என் அப்பனே! (என்னை விட்டுவிடாதே)

120) என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றி
நின்று எய்த்து அலைந்தேன்
மின்னை ஒப்பாய் விட்டிடுதி கண்டாய்
உவமிக்கின் மெய்யே
உன்னை ஒப்பாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய்
என் அரும்பொருளே. 16

தந்தை மகனுக்கு அச்சம் நீக்கி ஆறுதல் தருவது போல என்னைப் பார்த்து அப்பா அஞ்சாதே என்று சொல்லுவார் இன்றி வருந்தி நின்று இளைத்து அலைந்தேன். எனக்குக் காட்சி தந்து உடனே மறைந்ததால், மின்னலைப் போன்றவனே! மெய்யாகவே உனக்கு உவமை சொல்ல நினைத்தால் உன்னையே நீ ஒப்பாய். நிலையான உத்தர கோசமங்கை மன்னா! எனக்கு அம்மையும் அப்பனும் ஆனவனே! பெறற்கரிய பொருளானவனே! என்னை விட்டுவிடாதே.

121) பொருளே தமியேன் புகல்இடமே
நின் புகழ் இகழ்வார்
வெருளே எனை விட்டிடுதி கண்டாய்
மெய்ம்மையார் விழுங்கும்
அருளே அணி பொழில் உத்தர
கோசமங்கைக்கு அரசே
இருளே வெளியே இகபரம்
ஆகி இருந்தவனே. 17

(பொருளல்லவற்றைப் பொருளாக எண்ணும் உலகில்) யான் பெற்ற மெய்ப்பொருளே! துணையில்லாமல் தனித்திருக்கும் எனக்குச் சென்றடையும் இடமானவனே! நின் மெய்யான புகழைப் பழித்துப்

பேசும் பொய்மையாளர்க்கு அச்சம் தருபவனே! உன் புகழ் பாடும் மெய்யடியார் வாரி வாரி உண்ணும் அருளமுதே! அழகிய சோலைகள் சூழ்ந்த உத்தர கோசமங்கை மன்னனே! உலகத்தையே மெய்ப்பொருள் என்றிருப்பார் மனத்தில் இருள்போல மறைபொருளாய் இருப்பவனே! பரம் பொருளாகிய உன்னை அகத்தில் கண் கொண்டு காண்பவர்க்கு வெளிப்படும் பொருளே! எனக்கு இம்மையும் மறுமையுமானவனே! என்னை விட்டுவிடாதே.

122) இருந்து என்னை ஆண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றி வை என்னின் அல்லால்
விருந்தினனேனை விடுதி கண்டாய்
மிக்க நஞ்சு அமுதா
அருந்தினனே மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
மருந்தினனே பிறவிப் பிணிப்
பட்டு மடங்கினர்க்கே. 18

என் உள்ளத்தில் வேறறக் கலந்திருந்து, உன் உடைமைப் பொருளாகிய என்னை, உன் திருவுள்ளப்படி ஆண்டனுபவிப்பாய் அல்லது அடுத்தவருக்கு விற்று விடுவாய் அல்லது அடைமானமாக வைப்பாய் என்று கூறுவதன்றி வேறொன்றும் செய்ய உரிமையில்லாத என்னை, மெய்யடியார் கூட்டத்திற்கு இவன் புதியவன் (பக்குவம் பெற வேண்டியவன்) என்று விட்டுவிடாதே. அமுதம் உண்ணுங்கால் உண்டாகும் உவகையோடு நஞ்சை அருந்திய பெருமானே! நிலைபெற்ற உத்தர கோசமங்கை மன்னனே! பிறவிநோய்க்கு ஆளாகி ஆற்றல் குன்றி முடங்கிப் போனவர்களுக்கு அப்பிணி தீர்க்கும் மருந்தானவனே! (என்னை விட்டுவிடாதே)

123) மடங்க என் வல் வினைக் காட்டை நின்
மன் அருள் தீக் கொளுவும்
விடங்க என்தன்னை விடுதி கண்டாய்
என் பிறவியை வே
ரொடும் களைந்து ஆண்டுகொள் உத்தர
கோசமங்கைக்கு அரசே
கொடும் கரிக்குன்று உரித்து அஞ்சுவித்
தாய் வஞ்சிக் கொம்பினையே. 19

அடியேனுடைய வன்மையான வினைக்காடு, அழியும்படி, உன்னுடைய நிலையான பேரருளாகிய நெருப்பிட்டுக் கொளுத்தும் ஆண்மை மிக்கவனே! என்னை விட்டுவிடாதே. என் பிறப்பை அதற்குக்காரணமான மூலவினைகளோடும் களைந்து ஆண்டுகொள்க! உத்தர கோசமங்கை மன்னா! மலை போன்ற கொடிய யானையின் தோலை உரித்து, வஞ்சிக் கொடி போன்ற உமையவளை அச்சம் கொள்ளச் செய்தவனே! (என்னை விட்டுவிடாதே)

124) கொம்பர் இல்லாக் கொடிபோல்
அல மந்தனன் கோமளமே
வெம்புகின்றேனை விடுதி கண்டாய்
விண்ணர் நண்ணுகில்லா
உம்பர் உள்ளாய் மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே
அம்பரமே நிலனே அனல்
காலொடு அப்பு ஆனவனே. 20

தாவிப்படரக் கொழுகொம்பிலாத தனிக்கொடி போல, சுழன்று வெம்புகின்றேன். மென்மையானவற்றுக்கெல்லாம் மென்மையானவனே! இப்படிவாடுகின்ற என்னை விட்டுவிடாதே. தேவரும் அணுகமாட்டாத சிவலோகத் திருப்பவனே! நிலையான உத்தரகோச மங்கை மன்னனே! வான் வெளியே! மண்ணுலகே! நெருப்பும் காற்றும் நீருமானவனே! என்னை விட்டுவிடாதே

125) ஆனை வெம் போரில் குறுந்தூறு
எனப் புலனால் அலைப்புண்
டேனை எந்தாய் விட்டிடுதி கண்டாய்
வினையேன் மனத்துத்
தேனையும் பாலையும் கன்னலையும்
அமுதத்தையும் ஒத்து
ஊனையும் என்பினையும் உருக்கா
நின்ற ஒண்மையனே. 21

யானைகள் சண்டை போடும் போது இடையில் அகப்பட்ட சிறிய செடியைப் போல, ஐம்புலனாகிய யானைகளுக்கிடையில் அகப்பட்டு அலைக்கப்படும் என்னை என் அப்பனே! விட்டுவிடாதே

தீவினைப்பயனால் துன்புறும் என் மனத்தில் உன் திருவருட் கருணையால் தேனும் பாலும் கருப்பஞ்சாறும் அவற்றை விடச் சிறந்த தேவாமிர்தமும் போல இனிமை தந்து, ஊனினை உருக்கி, வலிமையான எலும்பினையும் உருக்கிக் கரையச் செய்த ஞானவடிவினனே! என்னை விட்டுவிடாதே.

126) ஒண்மையனே திருநீற்றை உத்
தூளித்து ஒளி மிளிரும்
வெண்மையனே விட்டிடுதி கண்டாய்
மெய் அடியவர்கட்கு
அண்மையனே என்றும் சேயாய்
பிறர்க்கு அறிதற்கு அரிதாம்
பெண்மையனே தொன்மை ஆண்மையனே
அலிப் பெற்றியனே. 22

ஞான ஒளிப்பிழம்பானவனே! திருநீற்றை நீரில் குழையாமல் நிறையப்பூசி அந்த நீற்றொளியால் வெண்ணிறம் பெற்றுத் திகழ்பவனே! மெய்த்தொண்டர்களுக்குப் பக்கத்துணை ஆனவனே! பொய்யொழுக்கம் உடையவர்களால் அணுக முடியாமல் தூரத்தில் இருப்பவனே! அறிதற்கரிதான (சக்தியாகிய) பெண்தன்மை உடையவனே! மிகப் பழைய (சிவமான) ஆண்தன்மை உடையனே! இரண்டு மற்ற (பரப்பிரம்மமான) அலித்தன்மை உடையவனே! என்னை விட்டுவிடாதே.

127) பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்கும் அன்பின்
வெற்று அடியேனை விடுதி கண்டாய்
விடிலோ கெடுவேன்
மற்று அடியேன் தன்னைத் தாங்குநர்
இல்லை என் வாழ்முதலே
உற்று அடியேன் மிகத் தேறி நின்றேன்
எனக்கு உள்ளவனே. 23

திருவருட்கருணையால் நீ தரப் பெற்ற மனமொழி மெய்களைக் கொண்டு, உன்பால் அன்பைப் பெருக்காமல், குற்றங்களையே பெருக்கி, அன்பைச் சுருங்க வைத்த பொய்யடியானாகிய என்னைத் தள்ளிவிடாதே. அப்படித் தள்ளிவிட்டால் நான் கெட்டொழிவேன் என்னைக் காப்பாற்றித்

தாங்கத் தக்கவர் உன்னைத் தவிர யாருமில்லை. என் வாழ்வுக்கு மூலகாரணமானவனே! நான் உன்னையே அடைக்கலம் காப்பவன் என்றடைந்து, அந்த எண்ணத்தில் மிகவும் தெளிவாக இருக்கிறேன். எனக்கென்று உள்ள மெய்யான ஆதரவு நீ தானே!

128) உள்ளனவே நிற்க இல்லன
செய்யும் மையல் துழனி
வெள்ளனலேனை விடுதி கண்டாய்
வியன் மாத் தடக்கைப்
பொள்ளல் நல் வேழத்து உரியாய்
புலன் நின்கண் போதல் ஒட்டா
மெள்ளெனவே மொய்க்கும் நெய்க் குடம்
தன்னை எறும்பு எனவே. 24

இறைவழிபாட்டுக்குச் செய்யத்தக்க பலசெயல்கள் இருக்க, அதைவிட்டுத் தகாத செயல்களையே செய்யும் மயக்கத்தையும் ஆரவாரத்தையும் உடைய தூயோனல்லாத என்னை விட்டுவிடாதே மிகப்பெரிய துதிக்கையில் துளையினை உடைய நல்யானையின் அகன்ற தோலை உடையாகப் போர்த்தியவனே! என் மனம் உன்பால் போக முடியாதபடி, நெய்நிறைந்த குடத்தை எறும்பு மொய்த்து வாயில் வழியைத் தடைசெய்வது போல, ஐம்புலன்களும் மெதுவாக நெருங்கிச் சூழ்ந்து மொய்க்கின்றன. யானையை உரித்தவனுக்கு இந்த எறும்புகளை ஒழிப்பது அரிதல்லவே.

129) எறும்பிடை நாங்கூழ் என புலனால்
அரிப்புண்டு அலந்த
வெறும் தமியேனை விடுதி கண்டாய்
வெய்ய கூற்று ஒடுங்க
உறும் கடிப்போதுஅவையே உணர்வு
உற்றவர் உம்பர் உம்பர்
பெறும் பதமே அடியார் பெய
ராத பெருமையனே. 25

பல எறும்புகளின் இடையில் அகப்பட்டுச் சல்லடைக்கண்களாக அரிக்கப்பட்ட நாக்குப் பூச்சியைப் போல, ஐம்புலன்களாலும் தின்னப்பட்டு வருந்திய பயனற்றவனும் ஆதரவில்லாதவனுமாகிய என்னை விட்டுவிடாதே. மார்க்கண்டேயன் உயிரைக் கவரமுற்பட்ட கொடிய

கூற்றுவன் வலிமை ஓங்கும்படி அவன் உடம்பில் பொருந்திய மணமிக்க திருவடிமலர்களையே பற்றிய சரியையாளரும், அவருக்கு மேலான கிரியையாளரும், அவருக்கு மேலான யோக நிலையினரும் பெறக்கூடிய பதங்களாகிய சாலோக சாமீப சாரூப வடிவினனே! இந்த மூவருக்கும் மேலான மெய்யடியார்களாகிய சிவஞானிகள், மீண்டும் வாராமலிருக்க வழிசெய்யும் சாயுஜ்ய பதவியான பெருமை உடையவனே! என்னை விட்டுவிடாதே

130) பெரு நீர் அற, சிறு மீன் துவண்டு
ஆங்கு நினைப் பிரிந்த
வெரு நீர்மையேனை விடுதி கண்டாய்
வியன் கங்கை பொங்கி
வரு நீர் மடுவுள் மலைச் சிறு
தோணி வடிவின் வெள்ளைக்
குரு நீர் மதி பொதியும் சடை
வானக் கொழு மணியே. 26

பெருநீராகிய வெள்ளம் வற்றியதால், சிறிய மீன் துடிப்பது போல, உன்னைப் பிரிந்து துடிக்கும் அச்சமிகுந்த என்னை விட்டுவிடாதே. பரந்த கங்கையாகிய பொங்கிவரும் நீர்நிலையில், அலைகளால் அசைக்கப்படும் சிறிய படகைப் போல, வெண்ணிறமான குளிர்ந்த பிறைச்சந்திரன் விளங்கும் சடையினை உடையவனே! ஞானவானில் தோன்றும் செழிப்பான மாமணியே! (என்னையும் ஆட்கொள்க!)

131) கொழு மணி ஏர் நகையார் கொங்கைக்
குன்றிடைச் சென்று குன்றி
விழும் அடியேனை விடுதி கண்டாய்
மெய்ம் முழுதும் கம்பித்து
அழும் அடியார் இடை ஆர்த்து வைத்து
ஆட் கொண்டுஅருளி என்னைக்
கழுமணியே இன்னும் காட்டு கண்டாய்
நின் புலன் கழலே. 27

செழிப்பான வெண்முத்துப் போன்ற பற்களையுடைய அழகிய மங்கையரின் கொங்கைகளாகிய மலையில் ஏறி, அறிவு குறைந்து, தடுமாறி விழுகின்ற அடியவனை விட்டுவிடாதே. பக்திப் பரவசத்தால்

உடம்பெல்லாம் நடுங்க உன்னையே நினைத்து அழுகின்ற அடியார்களின் பக்கத்தில் என்னை இழுத்துப் பிடித்து வைத்து ஆட்கொண்டு, அருள் செய்து, என்னைத் தூய்மைப்படுத்தும் மாணிக்கமே! நின் அருள் ஞானத் திருவடிகளை இன்னும் காட்டியருள்வாயாக.

132) புலன்கள் திகைப்பிக்க யானும்
திகைத்து இங்கு ஓர் பொய்ந் நெறிக்கே
விலங்குகின்றேனை விடுதி கண்டாய்
விண்ணும் மண்ணும் எல்லாம்
கலங்க, முந்நீர் நஞ்சு அமுது செய்தாய்
கருணாகரனே
துலங்குகின்றேன் அடியேன் உடை
யாய் என் தொழு குலமே. 28

ஐம்புலன்களும் என் அறிவை மயக்க, நானும் மயங்கி, இவ்வுலக இன்பம் தரும் பொய்யான தீயநெறியில் விலகிச் செல்கின்ற என்னை விட்டு விடாதே. விண்ணும் மண்ணும் மற்ற உலகங்களும் கலங்குவதைக் கண்டு, கடலில் தோன்றிய நஞ்சை அமுதம் போல் உண்டவனே! கருணைக் கடலே! நடுங்குகின்ற அடியேனை அடிமையாகக் கொண்டவனே! வணங்கத் தக்க என் குலதெய்வமே! (என்னை விட்டுவிடாதே)

133) குலம் களைந்தாய் களைந்தாய் என்னைக்
குற்றம் கொற்றச் சிலையாம்
விலங்கல் எந்தாய் விட்டிடுதி கண்டாய்
பொன்னின் மின்னு கொன்றை
அலங்கல் அம்தாமரை மேனி அப்பா
ஒப்பு இலாதவனே
மலங்கள் ஐந்தால் சுழல்வன் தயிரில்
பொரு மத்து உறவே. 29

சாதிகுலம் இவற்றால் வரும் செருக்கை ஒழித்தாய். மனமொழி மெய்களால் செய்யப்படும் குற்றங்களை வேரோடு களைந்தாய்! வெற்றிதரும் வில்லாக மேருமலையை ஏற்றருளிய எந்தையே! என்னை விட்டுவிடாதே பொன்போல் மின்னுகின்ற கொன்றைமலர் மாலையணிந்த, அழகான தாமரைமலர்போன்ற திருமேனியை உடைய

என் அப்பனே! ஒப்பற்ற கடவுளே! மத்தினால் மிகுதியாகத் தாக்கப்பட்டுச் சுழலும் தயிரைப் போல (உயிர் அறிவைக் குறைக்கும் ஆணவம், நல்வினை தீவினை எனச் செயல் வடிவில் வந்து இன்பதுன்பங்களைத் தரும் கன்மம், கன்மத்துக்கு ஏற்றபடி உயிர்களுக்கு உடம்பையும், இடத்தையும், நுகர்வையும் தரும் மாயை, மாயாகாரியங்களாகிய மாயேயம், உயிரோடு ஒன்றி நின்று மலங்களைத் தொழிற் படுத்தி உயிரைப் பக்குவப்படுத்தும் திரோதாயி ஆகிய) ஐந்து மலங்களாலும் தாக்கப்பட்டுச் சுழலும் என்னைத் தள்ளிவிடாதே.

134) மத்து உறு தண் தயிரின் புலன்
தீக் கதுவக் கலங்கி
வித்து உறுவேனை விடுதி கண்டாய்
வெண் தலை மிலைச்சிக்
கொத்து உறு போது மிலைந்து
குடர் நெடு மாலை சுற்றித்
தத்துறு நீறுடன் ஆரச்செஞ்
சாந்து அணி சச்சையனே. 30

மத்தினால் கடையப்படும் குளிர்ந்த தயிரைப்போல, புலன்களாகிய தீப்பற்றி வெதுப்பக் கலக்கமுற்று, வித்துப்போல வேரூன்றி அழுந்தும் தன்மை கொண்ட அடியேனைக் கைவிடாதே. தாருகாவனத்து முனிவர்கள் வேள்வியில் உண்டாக்கி ஏவிய வெள்ளைத் தலையைச் சடையில் சூடிக் கொத்தோடு கூடிய கொன்றை மாலையணிந்து, இறந்து போன பிரமன் முதலிய தேவர்களின் குடரை நீண்ட மாலையாகச் சுற்றிக் கொண்டு, நீரில் குழைக்கப்படாது பரந்துபட்ட நீறுடன் செஞ்சந்தனக்குழம்பணிந்து திகழும், சத்தாம் தன்மைபெற்ற மெய்ப்பொருளே! என்னைத் தள்ளிவிடாதே.

135) சச்சையனே மிக்க தண் புனல்
விண் கால் நிலம் நெருப்பு ஆம்
விச்சையனே விட்டிடுதி கண்டாய்
வெளியாய் கரியாய்
பச்சையனே செய்ய மேனியனே
ஒண் பட அரவக்
கச்சையனே கடந்தாய் தடம்
தாள அடல் கரியே. 31

மெய்ப்பொருள் ஆனவனே! மிக்கதாகிய குளிர்ந்த நீர், வானம், காற்று, நிலம், தீ ஆகிய ஐம்பெரும் பூதங்களாக விளங்கும் வித்தை கற்றவனே! பதிஞானமாகிய ஞான நாட்டத்திற்கு வெண்மையாகவும் பசுபாச ஞானங்களாகிய ஊன நாட்டத்திற்குக் கருமையாகவும், இறைவியோடு இணைந்து பசுமையாகவும், எனக்கருள் புரியக் குருநாதனாக வந்த போது செம்மையாகவும் திகழும் திருமேனிப் பெருமானே! ஒளி மிக்க படத்தினை உடைய உயிர்ப்பாம்பாகிய கச்சையை அரையில் கட்டிக்கொண்டவனே! அகன்ற கால்களையும் எதிர்த்தாரைக்கொல்லும் திறனையும் உடைய கயமுகாசுரனாகிய யானையைக் கொன்றவனே! என்னை விட்டுவிடாதே

136) அடல் கரிபோல் ஐம்புலன்களுக்கு
அஞ்சி அழிந்த என்னை
விடற்கு அரியாய் விட்டிடுதி கண்டாய்
விழுத் தொண்டர்க்கு அல்லால்
தொடற்கு அரியாய் சுடர் மா மணியே
சுடு தீச் சுழலக்
கடல் கரிது ஆய் எழு நஞ்சு அமுது
ஆக்கும் கறைக் கண்டனே. 32

வலிமையினால் பாகனையே தாக்கும் யானையைப் போல ஐம்புலன்களும் தாக்க அதற்கஞ்சி நிலை கலங்கிய என்னை, விடுதற்கரியவனாகிய எம்பெருமானே! விட்டுவிடாதே சிறந்த மெய்யடியார்களுக்கு அன்றிப் பிறர்க்குத் தீண்டுவதற்கு அருமையானவனே! அணியத் தக்க ஒளிமிகுந்த மாணிக்கமணியே! சுடக்கூடிய தீக்கொழுந்து சுழலும்படி, திருப்பாற்கடலில் எழுந்த கரிய நிறத்தோடு கூடிய நஞ்சை உணவாகக் கொண்ட திருநீலகண்டப் பெருமானே! (என்னையும் தடுத்தாண்டு கொள்வாயாக)

137) கண்டது செய்து கருணை மட்டுப்
பருகிக் களித்து
மிண்டுகின்றேனை விடுதி கண்டாய்
நின் விரை மலர்த் தாள்
பண்டு தந்தால் போல்ப் பணித்து
பணி செயக் கூவித்து என்னைக்
கொண்டு என் எந்தாய் களையாய் களை
ஆய குதுகுதுப்பே. 33

உன்னுடைய திருவருளாகிய தேனை நிறையக் குடித்து, களிப்பு மிகப்பெற்றும், திருந்தாமல், மனத்தில் தோன்றியபடி செய்து, செருக்கோடு பேசுகின்ற சிறியேனைக் கைவிட்டுவிடாதே. மணமிக்க (உன்னுடைய) தாமரைத் திருவடிகளை முன்பு தந்தது போல மீண்டும் கொடுத்து, என்னைத் தொண்டு செய்யக் கூவி அழைத்து, ஆட்கொண்டு, என் ஞானவளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் ஆசையைக் களைவாயாக!

138) குது குதுப்பு இன்றி நின்று என் குறிப்பே
செய்து நின் குறிப்பில்
விது விதுப்பேனை விடுதி கண்டாய்
ளவிரை ஆர்ந்து இனிய
மதுமதுப் போன்று என்னை வாழைப்
பழத்தின் மனம் கனிவித்து
எதிர்வது எப்போது பயில்விக்
கயிலைப் பரம்பரனே. 34

உன்னுடைய திருவுள்ளத்திற்கு இசைவாக நடக்க ஆசைப்படாமல், என் மனம் போலவே செயல்புரிந்து, (உன் திருவுள்ளம் போல ஒழுகுவதால் கிடைக்கும்) பயனைப்பெற மிகவும் விரைகின்ற (அறிவிலியாகிய) என்னை விட்டுவிடாதே. வாழைப்பழம் போல் என் மனத்தைக் குழையச் செய்து, மணம் நிறைந்ததும் இனிமை மிக்க பூந்துகளோடு கூடியதுமான தூய தேனைப்போல, எனக்கு நீ எப்பொழுது காட்சியளிப்பாய்? திருக்கயிலையில் எழுந்தருளியிருக்கும் பரம்பொருளே! என்னை எப்பொழுது அங்கே அழைத்துக் கொள்ளப் போகிறாய்?

139) பரம்பரனே நின் பழ
அடியாரொடும் என் படிறு
விரும்பு அரனே விட்டிடுதி கண்டாய்
மென் முயல் கறையின்
அரும்பு அர நேர் வைத்து அணிந்தாய்
பிறவி ஐவாய் அரவம்
பொரும் பெருமான் வினையேன் மனம்
அஞ்சிப் பொதும்பு உறவே. 35

மேலாகியபரம்பொருளே! உன்னுடைய பழவடியாருடைய தூய ஒழுக்கத்தோடு சிறியவனாகிய என்னுடைய வஞ்ச வொழுக்கத்தையும் விரும்பி ஏற்றுக்கொண்ட சங்காரகாரணனே! என்னைவிட்டுவிடாதே. முயல் உருவம் போன்ற களங்கத்தை உடைய சந்திரனின் மெல்லிய பிறையை, பாம்புடன் ஒக்க வைத்துச் சடையில் அணிந்தவன் அல்லவா நீ? மெய்வாய் கண் மூக்கு செவி என்ற ஐந்து தலைகளோடு கூடிய உடற்பிறவி என்ற பாம்பு, தீவினையேனாகிய என் மனம் அஞ்சி நடுங்கி ஒளிவதற்கு வளை தேடுமாறு என்னைத் தாக்குகிறதே (இந்தச் சூழ்நிலையில் நீ என்னை விட்டுவிடாதே)

140) பொதும்பு உறு தீப்போல் புகைந்து எரியப்
புலன் தீக் கதுவ
வெதும்புஉறுவேனை விடுதிகண்டாய்
விரை ஆர் நறவம்
ததும்பும் மந்தாரத்தில் தாரம்
பயின்று மந்தம் முரல் வண்டு
அதும்பும் கொழும் தேன் அவிர் சடை
வானத்து அடல் அரைசே. 36

காட்டிலுள்ள மரப்பொந்தில் பிடித்த தீ அணைப் பாரில்லாமல் பெருகி மரத்தையே எரிப்பது போல, ஐம்புலன்களாகிய நெருப்பு எரிக்க, அதனால் மனம் வருந்துவேனை விட்டுவிடாதே. நறுமணம் பொருந்திய, தேன் நிறைந்த மந்தார மலரில், (பாச ஞானத்தைக் குறிப்பதுபோல்) எடுத்தல் இசைபாடி, பிறகு (பசுஞானத்தைக் குறிப்பது போல்) படுத்தல் இசை ஒலித்து, இறுதியில் (சிவானந்தத்தில் தோய்வது போல) தேனில் அமிழ்ந்து விட்ட வண்டுகள் சூழ்ந்த சடையினை உடையவனே! ஞான ஆகாயத்தில் வெற்றியோடு வீற்றிருக்கும் வேந்தனே! என்னை விட்டுவிடாதே.

141) அரைசே அறியாச் சிறியேன்
பிழைக்கு அஞ்சல் என்னின் அல்லால்
விரைசேர் முடியாய் விடுதி கண்டாய்
வெண்நகைக் கருங்கண்
திரைசேர் மடந்தை மணந்த
திருப் பொன் பதப் புயங்கா
வரை சேர்ந்து அடர்ந்து என்ன வல்
வினை தான் வந்து அடர்வனவே. 37

எங்கள் மன்னனே! அறிவற்ற சிறியவனாகிய என் பிழையை நீக்கி அஞ்சேல் என்று நீ அபயம் தராவிட்டால் வேறு யார் தருவார்கள்? மணமிக்க சடைமுடிப்பெருமானே! வெள்ளிய பற்களையும், கருங் கண்களாகிய கடலினையும்உடைய உமையவள் மணவாளனே! வீட்டுலகமாகிய செல்வத்தை அருளும் அழகிய திருவடிகளை உடையவனே! பாம்பணிந்த பெருமானே! பல மலைகள் திரண்டு வந்து நெருக்குவது போல், என் தீவினைகள் ஒன்றாகச் சேர்ந்து என்னைத் தாக்குகின்றன. இந்நிலையில் நீ என்னை விட்டுவிடாதே.

142) அடர் புலனால் நின் பிரிந்து அஞ்சி
அம்சொல் நல்லார் அவர் தம்
விடர் விடலேனை விடுதி கண்டாய்
விரிந்தே எரியும்
சுடர் அனையாய் சுடுகாட்டு அரசே
தொழும்பர்க்கு அமுதே
தொடர்வு அரியாய் தமியேன் தனி
நீக்கும் தனித் துணையே. 38

என்னைப் பலவாறு தாக்குகின்ற புலன்களுக்கு அஞ்சி, உன்னைப் பிரிந்து, அழகிய சொற்களைப் பேசும் பெண்களின் மலைக்குகை போன்ற இடங்களை விடாமல் பற்றி நிற்கின்ற சிறியேனை விட்டுவிடாதே. எங்கும் விரிந்து எரியும் தீப்பிழம்பு போன்றவனே! எல்லாம் ஒடுங்கும் இடமாகிய சுடலைக்கு அரசனே! தொழுமடியார்க்கு அமுதம் போன்றவனே! யாராலும் தொடர்ந்து சென்று பற்ற முடியாதவனே! வேறு துணையில்லாத அடியேன் தனிமையைப் போக்கும் ஒப்பற்ற தனித்துணையாக உள்ளவனே! (என்னை விட்டுவிடாதே)

143) தனித் துணை நீ நிற்க யான் தருக்கித்
தலையால் நடந்த
வினைத் துணையேனை விடுதி கண்டாய்
வினையேனுடைய
மனத் துணையே என்தன் வாழ் முதலே
எனக்கு எய்ப்பில் வைப்பே
தினைத் துணையேனும் பொறேன் துயர்
ஆக்கையின் திண் வலையே. 39

நிகரில்லாத் துணையாக நீ இருக்க, ஆணவத்தால் செருக்குற்றுத் தலைகீழாக நடந்த வினையைத் துணையாகவுடைய என்னை விட்டுவிடாதே. தீவினை செய்த என் உள்ளத்துக்குத் துணையாய் இருந்து காப்பவனே. என் வாழ்வுக்கு ஆதாரமானவனே! இளைக்கும் பொழுது பயன்படுத்த யான்பெற்ற சேமநிதியே! உடம்பாகிய நெருக்கமான வலையில் விழுந்து எய்தும் துன்பத்தை இனிமேல் தினையளவு நேரங்கூடப் பொறுக்க மாட்டேன். (என்னை விரைந்து ஆட்கொள்வாய்)

144) வலைத்தலை மான் அன்ன நோக்கியர்
நோக்கின் வலையில் பட்டு
மிலைத்து அலைந்தேனை விடுதி கண்டாய்
வெண் மதியின் ஒற்றைக்
கலைத் தலையாய் கருணாகரனே
கயிலாயம் என்னும்
மலைத் தலைவா மலையாள் மண
வாள என் வாழ்முதலே. 40

வலையில் அகப்பட்ட மானின் கண்களைப் போன்ற கண்களையுடைய பெண்களின் பார்வையாகிய வலையில் அகப்பட்டு மயங்கித் திரிந்தவனை விட்டுவிடாதே. வெள்ளையான திங்களின் ஒருகலைப் பிறையைத் தலையில் தாங்கி வளரச் செய்தவனே! அருட்கருணை உள்ளவனே! பேரின்ப நிலையமான கயிலாயம் என்னும் மலைக்குத் தலைவனே! இமய மலையின் மகளான உமையவள் மணவாளனே! என் வாழ்வுக்கு மூலகாரணமானவனே! (என்னை விட்டுவிடாதே)

145) முதலைச் செய்வாய்ச்சியர் வேட்கை வெந்
நீரில் கடிப்ப மூழ்கி
விதலைச் செய்வேனை விடுதி கண்டாய்
விடக்கு ஊன் மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்
சிவனே முறையோ முறையோ
திதலைச் செய் பூண் முலை மங்கை
பங்கா என் சிவ கதியே. 41

காமமாகிய வெந்நீர்க் கடலில் மூழ்கி, சிவந்த வாயினை உடைய பெண்களாகிய முதலைகள் கடிக்க, அதனால் நடுக்கமுறும் சிறியேனை விட்டுவிடாதே. புலால் நாற்றமிக்க தசை செறிந்த, நோய்கள் விளைவிக்கும் உடம்பை இனித்தாங்க மாட்டேன் சிவனே! என்னை இப்படித் தவிக்கவிடுவது முறையாகுமா? முறையாகுமா? தேமல் படர்ந்த, அணிகள் அணிந்த நகில்களை உடைய உமையவள் ஒரு பாகத்தனே! எனக்கு வீடு பேறாக உள்ளவனே! என்னைக்காப்பாயாக!

146) கதி அடியேற்கு உன் கழல் தந்து
அருளவும் ஊன் கழியா
விதி அடியேனை விடுதி கண்டாய்
வெள்தலை முழையில்
பதி உடைவாள் அரப் பார்த்து இறை
பைத்துச் சுருங்க அஞ்சி
மதி நெடு நீரில் குளித்து ஒளிக்கும்
சடை மன்னவனே. 42

நின் திருவடிகளே எனக்குப் புகலிடமாகும். அதை நீ தந்து அருளிய பின்னரும், இந்த உடம்பை விட முடியாத ஊழ்வினை உடைய என்னை விட்டுவிடாதே பிரம்மகபாலமாகிய வெள்ளை நிறமுடைய தலையின் துளையில், தங்கி இருக்கும் பாம்பு பக்கத்திலுள்ள சந்திரனைப் பார்த்துச் சிறிது படமெடுத்துப்பிறகு பயந்து படத்தைச் சுருக்கிக் கொள்ள, இதைக் கண்டு அஞ்சிய சந்திரன் கங்கை நீரில் மூழ்கி மறைய, பகைப் பொருட்கள் தம்மில் பகையொழிந்து வாழும் சடைமுடிதாங்கி அருளாட்சி புரிபவனே! என்னை விட்டுவிடாதே.

147) மன்னவனே ஒன்றும் ஆறு
அறியாச் சிறியேன் மகிழ்ச்சி
மின்னவனே விட்டிடுதி கண்டாய்
மிக்க வேத மெய்ந்நூல்
சொன்னவனே சொல் கழிந்தவனே
கழியாத் தொழும்பர்
முன்னவனே பின்னும் ஆனவனே
இம் முழுதையுமே. 43

என்றும் நிலையானவனே! உன்னோடு கலந்து வாழும் வழியறியாத இச்சிறியவனுக்கு மகிழ்ச்சி மின்னலாய் ஒளிதருபவனே! சொற்பொருள் மிக்க வேதங்களையும், சிவாகமங்களையும் சொல்லி அருளியவனே! சொற்களுக்கு அப்பாற்பட்டு நிற்பவனே! உன்னைவிட்டு நீங்காமல் தொண்டு செய்யும் அன்பர்களுக்கு முன்னின்று காக்கும் முதல்வனே! அவர்களுக்குப் பின்னால் நின்றும் பக்கத்திலிருந்தும் எல்லாமாய்க் காப்பவனே! என்னை விட்டுவிடக்கூடாது. நானும் (உன் தொண்டன் தானே)

148) முழுது அயில் வேல் கண்ணியர் என்னும்
மூரித் தழல் முழுகும்
விழுது அனையேனை விடுதி கண்டாய்
நின் வெறி மலர்த் தாள்
தொழுது செல் வான் நல் தொழும்பரில்
கூட்டிடு சோத்துஎம் பிரான்
பழுது செய்வேனை விடேல்
உடையாய் உன்னைப் பாடுவனே. 44

கூர்மையான வேற்படை போன்ற கண்களையுடைய பெண்கள் ஆகிய பெரிய நெருப்பில் முழுவதும் முழுகிய வெண்ணெய் போன்ற சிறியேனை விட்டுவிடாதே. தேன் நிறைந்த தாமரைமலர் போன்ற நின் திருவடிகளைப் போற்றிச் சிற்பர வெளியை நோக்கிச் செல்லும் உன் தொண்டரோடு என்னையும் சேர்ப்பாயாக! உனக்கு வணக்கம். எம்பிரானே! குற்றமே செய்யும் என்னை விட்டுவிடாதே. உன்னையே பாடுவேன். அதை நீ கேட்டருள வேண்டாமா?

149) பாடிற்றிலேன் பணியேன் மணி
நீ ஒளித்தாய்க்குப் பச்சூன்
வீடிற்றிலேனை விடுதி கண்டாய்
வியந்து ஆங்கு அலறித்
தேடிற்றிலேன் சிவன் எவ்விடத்
தான் எவர் கண்டனர் என்று
ஓடிற்றிலேன் கிடந்து உள்
உருகேன் நின்று உழைத்தனனே. 45

என் மாணிக்க மணியே! ஞானாசிரியனாக நீ ஆட்கொண்டருளிய போது உன்னை வாயாரப்பாடவில்லை. உடம்பினால்

வணங்கவில்லை. காட்சி தந்த நீமறைந்த போது பச்சை இறைச்சிப் பிண்டமாகிய இந்த உடம்பை ஒழிக்கவில்லை. உன் கருணையை எண்ணி வியந்து, உன்னைக் காண மாட்டாமல் அலறித் தேடவில்லை. சிவபெருமான் எங்கே இருக்கிறான்? யார் பார்த்தவர்கள்? எனக்குச் சொல்லுங்கள் என்று ஓடவில்லை. ஓய்ந்து கிடந்து உள்ளம் உருகி நொந்து அழவில்லை. வீணாக உலக வாழ்க்கையில் ஈடுபட்டு இன்னும் உழைத்துக் கொண்டிருக்கிறேன். என்ன செய்வேன்?

150) உழை தரு நோக்கியர் கொங்கைப்
பலாப் பழத்து ஈயின் ஒப்பாய்
விழை தருவேனை விடுதி கண்டாய்
விடின் வேலை நஞ்சு உண்
மழை தரு கண்டன் குணம் இலி
மானிடன் தேய் மதியன்
பழை தரு மா பரன் என்று என்று
அறைவன் பழிப்பினையே. 46

மயக்கம் தரும் மருட்சி உடைய மான் பார்வை போன்ற பார்வையை உடைய பெண்களின் கொங்கையை, பலாப்பழத்தில் மொய்க்கும் ஈயைப் போல, விடாது விரும்பி நிற்கும் என்னை விட்டுவிடாதே. விட்டுவிட்டால் உன்னைப் பழித்துரைப்பேன். கடல் நஞ்சை உண்டு நீலமேகம் போன்ற கழுத்தை உடையவன் என்பேன், குணமில்லாதவன் என்பேன். மக்கள் தன்மை உள்ளவன் என்பேன். தேய்ந்த அறிவினை உடையவன் என்பேன். பழைய பெரிய பரதேசி என்பேன். எப்பொழுதும் உன் பழியைக் கூறுவேன். எனவே என்னை விட்டுவிடாதே. (இப்பாடல் பழிப்பது போல இறைவனைப் புகழ்வதாகும். மணிவாசகரால் மறந்து கூட இறைவனைப் பழிக்க முடியாது. திருநீலகண்டம் அவன் பேரருள் காட்டுவது. குணமிலி என்பது குணங்களைக் கடந்த தத்துவாதீதத் தன்மையையும், மானிடன் (மானை இடக்கையில் ஏந்தியவன்) என்பது தீமையை ஒறுக்கும் மறக் கருணையையும், தேய் மதியன் என்பது சந்திரனுக்கருளிய அறக் கருணையையும் காட்டுவன. மாபரன் என்பது முழுமுதல் கடவுள் என்பதைக் காட்டுவது. மணிவாசகர் பழிப்பேன் என்றது சொல்லளவில் தானே தவிரச் செயலளவில் அல்ல.)

151) பழிப்பு இல் நின் பாதப் பழம் தொழும்பு
எய்தி விழப் பழித்து
விழித்துஇருந்தேனை விடுதி கண்டாய்
வெண் மணிப் பணிலம்
கொழித்து மந்தார மந்தாகினி
நுந்தும் பந்தப் பெருமை
தழிச் சிறை நீரில் பிறைக் கலம்
சேர் தரு தாரவனே. 47

பழிக்கக்கூடாத உன் திருவடிக்கீழ் பழமையாகிய தொண்டை மேற்கொண்டேன். பின் அத்தொண்டு நழுவிவிட்டது. நான் அந்தத் திருவடியைப் பழித்து இனி என்ன செய்யலாம் என்று திகைத்து விழித்துக் கொண்டிருக்கிறேன். என்னை விட்டுவிடாதே. முத்துக்களை உடைய சங்குகளைக் கொழித்து சிவபெருமான் திருச்சடையாகிய அணையைச் சார்ந்து, வரம்புக்குட்பட்ட நீர்நிலையாகி, மந்தார மலர்களை ஒதுக்குகின்ற கங்கையில், தோணி போல் தெரியும் பிறை மதியைத் தலைமாலையாகச் சூடிய பெருமானே! என்னை விட்டுவிடாதே.

152) தாரகை போலும் தலைத் தலை
மாலைத் தழல் அரப் பூண்
வீர என்தன்னை விடுதி கண்டாய்
விடின் என்னை மிக்கார்
ஆர் அடியான் என்னின் உத்தர
கோசமங்கைக்கு அரசின்
சீர் அடியார் அடியான் என்று
நின்னைச் சிரிப்பிப்பனே. 48

தலைமேல் விண்மீன்களைப் போன்ற தலைமாலை களையும், நஞ்சு மிக்க பாம்புகளாகிய அணிகலன்களையுமுடைய வீரனே! என்னை விட்டுவிடாதே. என்னை விட்டுவிட்டால், அறிவொழுக்க மிக்க சான்றோர்கள் என்னைப் பாத்து "நீ யாருக்கு அடியவன்? இப்படி இருக்கிறாய்?" என்று வினவுவாரானால், திருவுத்தரகோச மங்கையில் வீற்றிருக்கும் தெய்வீகப் பேரரசன் ஆகிய சிவபெருமானுடைய சிறப்பு மிக்க அடியவர்க்கு அடியவன் என்று கூறி எல்லோரும் உன்னைப் பார்த்துச் சிரிக்கச் செய்து விடுவேன்.

153) சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பை
தொழும்பையும் ஈசற்கு என்று
விரிப்பிப்பன் என்னை விடுதி கண்டாய்
விடின் வெங்கரியின்
உரிப் பிச்சன் தோல் உடைப் பிச்சன் நஞ்சு
ஊண் பிச்சன் ஊர்ச் சுடுகாட்டு
எரிப் பிச்சன் என்னையும் ஆளுடைப்
பிச்சன் என்று ஏசுவனே. ள49

வெறுக்கத்தக்க இவ்வுலக வாழ்க்கையை நான் எள்ளி நகையாடுவதோடு பிறரும் எள்ளி நகையாடுமாறு செய்வேன். என் திருத்தொண்டை இறைவனுக்கே ஆக்கி எங்கும் பரவச் செய்வேன். என்னை விட்டுவிடாதே. அப்படிக் கைவிட்டால் உன்னை, கொடிய யானைத் தோலைப் போர்த்திய பித்தன், புலித்தோலை உடுத்த பித்தன், நஞ்சை உண்ட பித்தன், ஊருக்குப் பொதுவான சுடுகாட்டுத் தீயில் ஆடும் பித்தன், தகுதியில்லாத என்னையும் ஆட்கொண்ட பித்தன் என்று இகழ்ந்துரைப்பேன்.

154) ஏசினும் யான் உன்னை ஏத்தினும்
என் பிழைக்கே குழைந்து
வேசறுவேனை விடுதி கண்டாய்
செம் பவள வெற்பின்
தேசு உடையாய் என்னை ஆளுடையாய்
சிற்றுயிர்க்கு இரங்கி
காய் சின ஆலம் உண்டாய் அமுது
உண்ணக் கடையவனே. 50

நான் உன்னை வைதாலும் வாழ்த்தினாலும் என் குற்றத்தையே கருதி உள்ளமுருகி வருந்துவேனை விட்டுவிடாதே. செந்நிறப் பவளமலை போல் ஒளிவீசும் பெருமானே! என்னை ஆட்கொண்டவனே! அமுதம் உண்ண உரிமையுடையவனாய் இருந்தும், சிறிய உயிர்கள்பால் இரக்கமுற்று, கொதித்தெழும் கொடுமைமிக்க ஆலாலம் என்ற நஞ்சை உண்டு உலகைக் காத்தவனே! என்னையும் விட்டுவிடாமல் காப்பாயாக!

7.திருவெம்பாவை

திருவண்ணாமலையில் பாடப்பெற்றது (கொச்சகக்கலிப்பா)

(பக்குவமுற்ற ஆன்மாக்கள், ஆணவமல இருளில் துயிலும் ஆன்மாக்களை எழுப்பி, இறையருளாம் நீராட்டுவதே பெண்கள் நோன்பான திருவெம்பாவை. பராசக்தியைப் போற்றிப் பாவை அமைத்து வழிபட்டு அவள் மூலம் வீட்டிற்கு நாயகனையும், நாட்டுக்கு மழையையும் பெறுதல் இதன் நோக்கமாகும்)

155) ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன் செவியோ நின் செவிதான்
மா தேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போது ஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம் தோழி பரிசு ஏல் ஓர் எம் பாவாய் 1

ஒளிமிக்க அகன்ற கண்களை உடைய பெண்ணே! தனக்கு முதலும் முடிவுமில்லாத அரிய பெரிய ஒளிப்பிழம்பாக உள்ள இறைவனை நாங்கள் பாடக் கேட்டுக் கொண்ட பின்னும் தூங்குகிறாயோ? உன் காதுகள் வன்மையான செவிட்டுக் காதுகளோ? (அடுத்த வீட்டுப்பெண் என்ன செய்தாள் தெரியுமா?) சிவபெருமானுடைய நெடிய சிலம்பணிந்த திருவடிகளை நாங்கள் புகழ்ந்து பாடிய வாழ்த்தொலி, தெருப்பக்கம் கேட்டதுமே பக்தி மிகுதியால் தேம்பித் தேம்பி அழுதாள். தன்னை மறந்தாள். மலர்கள் நிறைந்த படுக்கையிலிருந்து புரண்டு எழுந்தாள். வேறு எச்செயலும் செய்ய மாட்டாமல் அவன் திருவடி நினைப்பிலேயே இருந்தாள் அவள் அப்படி இருக்க, நாங்கள் எழுப்பிய பின்பும் எழாத உன் தன்மை இப்படி இருக்கிறதே?

156) பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப் பகல் நாம்
பேசும்போது எப்போது இப்போது ஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீ சீ இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப் பாதம் தந்துஅருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்புஆர் யாம்ஆர்? ஏல் ஓர் எம் பாவாய் 2

"உன் தகுதிக் கேற்ற அணிகலன்களை உடைய பெண்ணே! நாம் பேசிக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம், "இரவும் பகலும் என் அன்பு ஒளிப்பிழம்பான இறைவனுக்கே" என்று கூறுவாயே! இப்பொழுது இம்மலர்ப்படுக்கை மீது அன்பு வைத்தாயோ'' என்று துயில் உணர்த்தவந்த பெண்கள் கேட்டனர். உள்ளே தூங்கிக் கொண்டிருந்தவள் விழித்து "தக்க அணிகலன்களை அணிந்த பெண்களே! சீச்சீ உங்கள் வாக்கில் இத்தகைய சில சொற்களும் வரலாமா? நாம் விளையாடி ஏசிக் கொண்டிருக்கும் இடம் இதுவா" என்றாள். வந்த பெண்கள் "தேவர்கள் புகழ்ந்து பாராட்டுவதற்குக் கூசுகின்ற மலர் போன்ற திருவடிகளை, நமக்குத் தருவதற்காக இவ்வுலகில் எழுந்தருளிய ஞானாசிரியனும், சிவலோக நாயகனும் தில்லைச் சிற்றம்பலத்து இறைவனும் ஆகிய பெருமானுடைய அன்பு எவ்வளவு உயர்ந்தது! அன்பு செய்யும் அடிமைகளாகிய நாம் எவ்வளவு தாழ்ந்தவர்கள்! (எனவே உன்னோடு விளையாட வரவில்லை. எழுந்துவா" என்றார்கள்)

157) முத்து அன்ன வெண் நகையாய் முன்வந்து எதிர்எழுந்து என்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ஊறித்
தித்திக்கப் பேசுவாய் வந்து உன் கடை திறவாய்
பத்து உடையீர் ஈசன் பழஅடியீர் பாங்கு உடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏல் ஓர் எம் பாவாய். 3

"முத்துப் போன்ற வெண்மையான பற்களை உடைய பெண்ணே! எங்களுக்கு முன்பே படுக்கையிலிருந்து எழுந்து வந்து எம் எதிரே நின்று, என் தந்தை இன்ப வடிவானவன் அமுதம் போல் உண்டவரை வாழ்விப்பவன் என்று வாயில் எச்சில் ஊறி இனிக்க இனிக்கப் பேசுவாயே! இப்போது எழுந்து வந்து உன் வீட்டு வாசல் கதவையாவது திறக்கக் கூடாதா" என்றனர் எழுப்ப வந்த பெண்கள். உள்ளே இருந்தவள் "நீங்கள் சிவனடியார்களுக்கு உரிய (திருநீறும் சிவமணியும் அணிதல், குருவழிபாடு, சிவதோத்திரம் செய்தல், மந்திரம் செபித்தல், இறைவழிபாடான சிவபூசை செய்தல், பதிபுண்ணியங்களைச் செய்தல், சிவபுராணம் கேட்டல், சிவாலய பரிபாலனம் செய்தல், சிவனடியாரிடம் உணவருந்துதல், அடியார்க்கு அடியான் ஆதல் ஆகிய) பத்துக் குணங்களையும் உடையவர்கள். ஈசனுக்குப் பழமையான

அடியார்கள்: என் இனிய தோழிகள். அத்தகைய நீங்கள் புதிய அடியார்களாகிய எங்கள் சிறுகுற்றங்களைத் தீர்த்து ஆட்கொண்டால் அது தீங்காகுமோ?" என்று கேட்டாள். எழுப்பவந்தவர்கள் "நீ எவ்வளவு அன்புடையவள் என்பதை நாங்கள் அறியமாட்டோமா? தூய நெஞ்சுடையார் சிவபெருமானைப் பாடாமல் இருப்பார்களா? சரிசரி பேசாமல் எழுந்து வா. உன்னை எழுப்பவந்த எங்களுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்" என்றனர்.

158) ஒண்நித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று, அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை வேத விழுப் பொருளை
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்து உள்ளம்
உள் நெக்கு நின்று உருக யாம் மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயில் ஏல் ஓர் எம் பாவாய். 4

"ஒளிமிக்க முத்துப் போன்ற பற்களை உடைய பெண்ணே! இன்னும் விடியவில்லையா" என்று எழுப்பவந்தவர் கேட்டனர். உள்ளே இருந்தவள் "அழகான கிளியின் மொழிபோலப் பேசும் பெண்கள் எல்லோரும் வந்து விட்டார்களா?" என்று கேட்டாள். எழுப்ப வந்த பெண்கள் "வந்தவர்களைக் கணக்குப் பார்த்து உள்ள படியே தெரிவிப்போம். அப்படி எண்ணிப் பார்க்கும் நேரம் வரை கண்களைத் தூங்க வைத்துக் காலத்தைப் போக்காதே. தேவர்களுக்கு ஒப்பற்ற அமுதமானவனை, மறைகளின் பொருளாயிருப் பவனை, காண்பார்கள் கண்களுக்கும் அழகுண்டாகும்படி காட்சியளிப் பவனை, புகழ்ந்துபாடி, மனங்கசிந்து, நெக்குருகி நிற்கிறோம். (கடவுளைப் பாடவந்த எங்களால்) கணக்கெடுக்க முடியாது. நீயே எழுந்து வந்து எணணிப்பார். வந்தவர் எண்ணிக்கை குறைந்தால் மீண்டும் போய்த்தூங்கு" என்றனர்.

159) மால் அறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போல் அறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும்
பால் ஊறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசு ஏல் ஓர் எம் பாவாய். 5

அடியைத் தேடியதிருமாலும் முடியைத் தேடிய நான்முகனும் காணமுடியாமல் திருவண்ணாமலை வடிவில் நின்ற இறைவனை, நாம் உணர்வோம் என்று பொய்யுரைகளைப் பேசுபவளே! சுரக்கும் பாலும் தேனும் போல் இனிமை தோன்றப் பேசும் வஞ்சகியே! வாசற் கதவைத் திறப்பாயாக. மண்ணகத்தார் விண்ணகத்தார் மற்றுமுள்ளார் யாராலும் அறிய முடியாத பெருமானுடைய திருமேனி அழகையும், நம்மையும் ஆண்டுகொண்டு சீராட்டும் அருட்குணத்தையும் வாயாரப்பாடி, சிவபெருமானே சிவபெருமானே என்று பலமுறை கூவி ஓலமிட்டாலும் நீ உணரவில்லை. எழுந்து வரவும் இல்லை. (இறைவன் திருமேனியை அலங்கரிக்காமல்) மயிர்ச்சாந்து பூசி உன் கூந்தலை அலங்கரிக்கும் பெண்ணே! உன் பக்தித் தன்மை என்னே! என்று எழுப்பவந்தவர் அழைக்கின்றனர்.

160) மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவு அரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட் கொண்டருளும்
வான் வார் கழல் பாடி வந்தோர்க்கு உன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடு ஏல் ஓர் எம் பாவாய்.

6

மான் போன்றவனே! நாளை நானே வந்து உங்களை எழுப்புவேன் என்ற நேற்றுக் கூறினாயே! அந்த வார்த்தை நாணமில்லாமல் எந்தத் திசையில் போயிற்று என்று சொல். இன்னும் பொழுது புலரவில்லையா? வானுலகும் மண்ணுலகும் பிற உலகங்களும் அறிய முடியாத இறைவன் தானே வலியு வந்து, தலையாய அன்பு செய்து, நம்மை ஆட்கொண்டான். அவனுடைய அழகிய நெடிய வீரக்கழலணிந்த திருவடிகளைப் பாடி, உன் வீட்டுக்கு வந்த எங்களுக்கு நீ கதவைத் திறக்காவிட்டாலும் பரவாயில்லை. வாயைத் திறந்தாவது பதில் சொல்லக் கூடாதா? வாயைத்திறக்காமலும் இறைவனை எண்ணி உடலும் மனமும் உருகாமலும் இருக்கும்

இந்நிலை உனக்கே பொருத்தமாகும் இனியாவது எங்களுக்கும் மற்று எல்லோருக்கும் தலைவனைப் பாடுவாயாக.

161) அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இரும் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய் திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீ சேர் மெழுகு ஒப்பாய்
என்னானை என் அரையன் இன்அமுது என்று எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன் நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசு ஏல் ஓர் எம் பாவாய். 7

தாயே! இப்படியும் முரண்பட்ட சில செயல்கள் உன்பால் உள்ளனவோ? பல தேவர்களாலும் நினைத்தற்கும் அரியவன், ஒப்பற்றவன், மிக்க பெருமைஉடையவன். அவனுடைய திருச்சின்னங்களாகிய எக்காளம் சங்கு முதலியவற்றின் ஒலிகளைக் கேட்ட மாத்திரத்தில் அவனையே கண்டது போல சிவ சிவ என்று சொல்லி வாயைத்திறப்பாயே. (தென்னாடுடைய சிவன் என்று கூறுவதற்காகத) தென்னா என்று தொடங்கியதுமே நெருப்பிலிட்ட மெழுகு போல் உருகுவாயே. இப்பொழுது என்னப்பன் என்னரசன் இன்னமுது என்று எல்லோரும் ஒவ்வொருவராக எல்லாப் பெயர்களையும் சொல்லிவிட்டோம். அதைக் கேட்ட பின்பும் தூங்குகிறாயே! வலிய நெஞ்சம் கொண்ட அறிவில்லாதவர் போலச் சும்மா கிடக்கிறாயே! என்னே தூக்கத்தின் வலிமை (வாழ்க்கையே உண்ணவும் உறங்கவும் தானா?)

162) கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கு எங்கும்
கேழ் இல் பரஞ்சோதி கேழ் இல் பரங் கருணை
கேழ் இல் விழுப் பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈது என்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆம் ஆறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடு ஏல் ஓர் எம் பாவாய். 8

பொழுது புலர்ந்ததை அறிவிக்கச் சேவல்கோழி கூவ, பறவைகள் ஒலியெழுப்புகின்றன. கோயில்களில் நாதசுரம் வாசிக்குமுன்னால் சங்கு ஒலிக்கிறது. ஒப்பற்ற ஒளிச்சுடரான இறைவனுடைய ஒப்பற்ற

பெருங்கருணையைப்பாடும் ஒப்பற்ற பொருள் சிறந்த பாடல்களைப் பாடினோம் – நீ கேட்கவில்லையா? இப்படிக் கிடக்கும் சிறுபெண்ணே! நீ தீங்கு நேராமல் வாழ்வாயாக! இப்படியும் ஒரு தூக்கமா? வாய்திறந்து பேசக்கூட மாட்டேன் என்கிறாய். அருட்கடலான சிவபெருமான் திருவடிக்கு அன்பு செய்யும் நெறி இப்படித்தானா? ஊழிக்காலத்திலும் அழியாமல் நிற்கும் உலக முதல்வனை, அணிகள் புனைந்த உமையாள் ஒரு பங்கினனைப் பாடுவாயாக.

163) முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரான் ஆகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன் அடியார் தாள் பணிவோம் ஆங்கு அவர்க்கே பாங்கு ஆவோம்
அன்னவரே எம் கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எம் கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏல் ஓர் எம் பாவாய். 9

(காலதத்துவங்களுக்கு அப்பாற்பட்டு) முற்பட்ட பழமையான பொருட்கள் எல்லாவற்றுக்கும் முற்பட்ட பழம்பொருளாய் இருப்பவனே! பிற்பட்ட புதுமையான பொருட்கள் எல்லாவற்றுக்கும் மீண்டும் அதே பொருள்தன்மை உள்ளவனே! உன்னைத் தலைவனாகப் பெற்ற உன் சிறப்புமிக்க அடியார்களாகிய நாங்கள் உன்னடியார் திருவடிகளையே வணங்குவோம். அவர்களுக்கே உரிமை உடையவர்கள் ஆவோம். அவர்களே எங்கள் கணவராவார். அவ்வடியார் மனமுவந்து சொன்ன கட்டளைகளின்படியே அவர்களுக்கு நாங்கள் அடிமைகளாக இருந்து ஏவல் கேட்போம்.எங்கள் பிரானே! எங்களுக்கு இவ்வாறு நீ அருள் புரிந்தால், நாங்கள் எந்தக் குறையும் இல்லாதவராய் வாழ்வோம்.

164) பாதாளம் ஏழினும் கீழ் சொல் கழிவு பாத மலர்
போதுஆர் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒரு பால் திரு மேனி ஒன்று அல்லன்
வேத முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழம் தொண்டர் உளன்
கோது இல் குலத்து அரன்தன் கோயில் பிணாப் பிள்ளைகாள்
ஏது அவன் ஊர் ஏது அவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏது அவனைப் பாடும் பரிசு ஏல் ஓர் எம் பாவாய். 10

எம்பெருமான் திருவடித்தாமரைகள் கீழே உள்ள பாதாள லோகங்கள் ஏழுக்கும் கீழாகச் சொல்லுக்கடங்காத நிலையைப் பெற்றவை. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருமுடியும் எல்லாப் பொருள்களுக்கும் முடிவாக உள்ளது. ஒரு பக்கம் அருட்சக்தியான பெண் இருக்கிறாள். எனவே இறைவன் ஒரு வகைப்பட்ட திருமேனி உடையானல்லன். ஞான வடிவானவேதங்களுக்கு இவனே முதல்வன். விண்ணும் மண்ணும் புகழ்ந்து பாராட்டினாலும் புகழ்ச்சி முற்றுப் பெறாதவனாய், எண்ணிக்கையற்ற தொண்டர்களோடு திகழ்கிறான். அத்தகைய சிவபெருமான் திருக்கோயிலில் இருந்து கொண்டு சிவத்தொண்டு மட்டுமே செய்து வரும் குற்றமற்ற நலத்தினையுடைய பெண்மக்களே! அவனுக்கு ஊர் எது? அவன் பெயர் யாது? அவனுக்கு உறவினர் யார்? அவனுக்கு அயலார் யார்? அவனைப் புகழ்ந்துபாடும் தன்மை யாது? கூறுங்கள்

165) மொய்ஆர் தடம் பொய்கை புக்கு முகேர் என்னக்
கையாற் குடைந்து குடைந்து உன் கழல் பாடி
ஐயா வழி அடியோம் வாழ்ந்தோம் காண் ஆர் அழல் போல்
செய்யா வெண்ணீறு ஆடி செல்வா சிறு மருங்குல்
மை ஆர் தடம் கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டுஅருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமை ஏல் ஓர் எம் பாவாய். 11

வண்டுகள் நிறைந்திருக்கும் பெரிய திருக்குளத்தில் புகுந்து, முகேர் என்ற ஒலியுண்டாகும்படி கையினால் தண்ணீரைக் குடைந்து, மூழ்கி, உன் திருவடிப் புகழ்பாடுகின்றோம். ஐயா! நாங்கள் வழிவழியாகப் பல தலைமுறைகளாக உன்னடியவர்கள். உன்னால் வாழ்கிறோம். செறிவான நெருப்புப் போல் சிவந்த மேனியனே! வெள்ளையான திருநீற்றில் குளிப்பவனே! வீட்டுலகமாகிய பெருஞ்செல்வம் உடையவனே! சிற்றிடையையும் மைதீட்டப்பெற்ற அகன்ற கண்களையும் உடைய உமையவள் மணவாளனே! எம் தலைவனே! ஆண்டவனாகிய நீ, உயிர்கள் பக்குவப்படுவதற்காக எங்களை ஆட்கொண்டு அருள்புரியும் திருவிளையாட்டில், உய்திபெறுவார் உய்யும்வகைகள் எல்லாம் அனுபவித்து விட்டோம். இனிமேல் நாங்கள் மேலும் பிறவி எடுத்து இளைத்துப் போகாமல் காத்தருள்வாயாக!

166) ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீ ஆடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார் கலைகள்
ஆர்ப்பு அரவம் செய்ய அணி குழல் மேல் வண்டு ஆர்ப்பப்
பூத் திகழும் பொய்கை குடைந்து உடையான் பொன் பாதம்
ஏத்தி இரும் சுனை நீர் ஆடு ஏல் ஓர் எம் பாவாய். 12

நம்மை இருவினைப் பாசங்களால் மும்மலக் கல்லோடு கட்டும் பிறவி என்ற துன்பம் ஒழியும்படி, நாம் மகிழ்வோடு ஆரவாரம் செய்து முழுகும் தீர்த்தமாக இருப்பவன், நல்ல தில்லையில் உள்ள ஞான வெளியில் தீயேந்தி ஆடுகின்ற திருவருட்கூத்தன், இந்த உலகத்தையும் வானுலகையும் எல்லாவற்றையும் ஆக்கியும் அளித்தும் அழித்தும்விளையாடுபவன். அவனுடைய திருநாமத்தைப் பாடி, கைவளை ஒலிக்கவும், நீண்ட மேகலை முதலிய அணிகள் ஆரவாரம் செய்யவும். அழகிய கூந்தல் மீது வண்டுகள் முழங்கவும், மலர்கள் மலரும் திருக்குளத்தில் மூழ்கி நம்மை உடைய இறைவன் பொன்னார் திருவடிகளைப் புகழ்ந்துபாடி, பெரிய சுனைநீரில் முழுகி ஆடுவோமாக!

167) பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பைம் போதால்
அங்கங் குருகு இனத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எம் கோனும் போன்று இசைந்த
பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்து ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம் பாவாய். 13

குளிர்ந்த குவளைகளின் கரிய மலர்களாலும், செந்தாமரை மலர்களை உடைமையாலும், அழகிய நீர்வாழ் பறவைகளை உடைமையாலும், பின்னியெழும்அலையொலிகளை உடைமையாலும், தங்கள் அழுக்கைக் கழுவக் கருதுவோர் வந்தடை வதாலும், எங்கள் இறைவியும் எம் தலைவனாகிய சிவபெருமானும் போலத் தோன்றுகின்ற பொங்கிவரும் நீர்ப் பொய்கையில் தாவித் தாவிப் புகுந்து நம் கைவளைகள் ஒலிக்கவும், சிலம்புகள் அவ்வொலியோடு சேர்ந்து ஒலிக்கவும், மகிழ்ச்சியால் கொங்கைகள் பூரிக்கவும், நீராடும்போது தண்ணீர் மேல் எழவும் தாமரைகள் பூத்துக் கிடக்கும் பொய்கையில் பாய்ந்து ஆடுவோமாக! (பைங்குவளை அம்மையின் திருக்கண்களையும்

செங்கமலம் அப்பனுடைய திருமேனியையும் காட்டுவதால் இது சிவசக்தி வடிவம் ஆகும். இரண்டாவது வரியில் குருகு அம்மையின் கைவளையயலையும் அரவம் (பாம்பு) சிவபெருமான் அணிந்த பாம்பணி களையும் குறிப்பதால் இதுவும் சிவசக்தி வடிவம் ஆகிறது. மலங்கழுவுதல் என்பது பாசப் பிணிப்பை அகற்றுவது. இது சிவன் சக்தி இருவருக்கும் பொருந்தும் பைங்குவளைக் கார்மலர் என்பது நயனதீக்கையையும், செங்கமலப்பைம்போது மானசீக தீக்கையையும், குருகினம் ஸ்பரிச தீக்கையையும், அரவம் (ஒலி) வாசிக தீக்கையையும் குறிக்கும் என்பது பண்டிதமணி கதிரேசனார் கண்ட நயம்)

168) காதார் குழை ஆட, பைம்பூண் கலன் ஆட,
கோதை குழல் ஆட, வண்டின் குழாம் ஆட,
சீதப் புனல் ஆடி, சிற்றம்பலம் பாடி,
வேதப் பொருள் பாடி, அப்பொருள் ஆமா பாடி,
சோதி திறம் பாடிச் சூழ் கொன்றைத் தார் பாடி,
ஆதி திறம் பாடி, அந்தம் ஆமா பாடி,
பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளை தன்
பாதத் திறம் பாடி ஆடு ஏல் ஓர் எம் பாவாய். 14

காதில் அணிந்த தோடுகள் அசையவும், பிற அழகிய அணிகலன்கள் அசையவும், கூந்தலில் அணிந்த மாலைகள் அசையவும், மலர்களில் இருந்த வண்டுக்கூட்டம் எழுந்து சுற்றிவரவும், குளிர்ந்த நீரில் மூழ்கி ஆடுவோம். சிற்றம்பலத்துப் பெருமானைப் பாடுவோம். மறைகளின் பொருளமைந்த பாடல்களைப் பாடி, இறைவன் அப்பாடலுக்கேற்ற பொருளாய் இருப்பதைப் பாடி, ஒளிமயமான பெருமான் பெருமையைப்பாடி, அவனைச் சுற்றியுள்ள கொன்றை மாலையைப் பாடி, எல்லாவற்றுக்கும் அவனே முதல்வன் என்ற முறையைப்பாடி, அவனே முடிவாய் ஆவதையும் பாடி, நம்முடைய இயல்புக்கேற்றபடி வேறுபடுத்தி நம்மை வளர்த்துப் பக்குவப்படுத்தும் வளையலணிந்த கைகளை உடைய உமையவள் திருவடிப் பெருமை பாடி, நீராடுவோமாக.

169) ஓர் ஒரு கால் எம்பெருமான் என்று என்றே நம் பெருமான்
சீர் ஒரு கால் வாய் ஓவாள் சித்தம் களி கூர
நீர் ஒரு கால் ஓவா நெடும் தாரை கண் பனிப்பப்
பார் ஒரு கால் வந்தனையாள் விண்ணோரைத் தான் பணியாள்
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆம் ஆறும்
ஆர் ஒருவர் இவ் வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வார் உருவப் பூண் முலையீர் வாய் ஆர நாம் பாடி
ஏர் உருவப் பூம் புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம் பாவாய். 15

கச்சணிந்த அழகான அணிகலன்களைப் பூண்ட கொங்கைகளை உடைய பெண்களே! (இறையன்பால் தன்வயமிழந்த சிவானுபவநிலை பெற்ற இந்தப் பெண்) ஒவ்வொருசமயத்தில் எம்பெருமானே என்று பலமுறை கூறுகிறாள். நம்மை ஆட்கொண்ட சிவபெருமான் சிறப்புக்களை எல்லாம் வாய் ஓயாமல் பேசுகிறாள். உள்ளத்து மகிழ்வினால் கண்களிலிருந்து கண்ணீர், தாரைதாரையாகக் கொட்ட, நிலத்தில் விழுந்து சிவபெருமானே நம் தலைவன் என்று அவனுக்கே ஒரே முறையான வணக்கத்தை மேற்கொள்கிறாள். பிற தேவர்களை வணங்க மாட்டாள். பெரிய அரசனாகிய சிவபெருமானுக்கு இப்படிப் பித்துப் பிடித்தவர் செயல் இதுதான் போலும். இப்படி ஆட்கொள்ளக்கூடிய திறமை உடையவர் யாரோ, அவருடைய திருவடிகளை வாய் நிறையப்பாடி, அழகிய தோற்றமுள்ள மலர்கள் நிறைந்த பொய்கை நீரில் பாய்ந்து ஆடுவோமாக!

170) முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆள் உடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம் பிராட்டி திருவடிமேல்
பொன் அம் சிலம்பில் சிலம்பித் திருப் புருவம்
என்னச் சிலை குலவி நம்தம்மை ஆள் உடையாள்
தன்னில் பிரிவு இலா எம் கோமான் அன்பர்க்கு
முன்னி அவன் நமக்கு முன் சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழை ஏல் ஓர் எம் பாவாய். 16

மழை முகிலே! நீ கடலைச் சார்ந்து அங்கே உள்ள நீர் குறையுமாறு முகந்து விண்ணில் எழுந்து, எம்மை உடையவளாகிய உமையவளைப் போல நீலநிறம் பெற்று, எம்மை ஆட்கொண்டருளிய அம்மையின் சிறிய இடைபோல் மின்னல் மின்ன விளங்கி,எங்கள் தலைவி திருவடியில் உள்ள பொற்சிலம்பு போல் ஒலித்து, அவளுடைய அழகான புருவம் போல் வானவில் உண்டாக்கி, நம்மை அடிமையாக உடைய பெருமாட்டியை என்றும் பிரியாத சிவபெருமான் அன்பர்க்கும், சிறியோமாகிய நமக்கும், அவள் முன்னின்று, திருவுளங்கொண்டு சுரந்தருளும் இனிய அருள் போலப் பெய்வாயாக!

171) செங் கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதது ஓர் இன்பம் நம் பாலதா
கொங்கு உண் கரும் குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொன் பாதம் தந்தருளும் சேவகனை
அம் கண் அரசை அடியோங்கட்கு ஆர் அமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம் திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம் பாவாய். 17

எல்லோரும் நீராடும் பொழுது ஒரு பெண் குளிருக்கு அஞ்சி, நீராடாமல், நீர்த்துறைக்கு முதுகு காட்டித் திரும்பி நிற்கிறாள். அப்பொழுது அழகாய்த் தெரிந்த அவள் கூந்தல் அழகைச் சுட்டிக் காட்டி அவளை அழைத்து, நீராடும் பெண்கள் பாடியது இத்திருப்பாடல். (இது கதிர்மணி விளக்கம்) மணம் தங்கிய கரிய கூந்தலை உடைய பெண்ணே! திருமாலிடத்திலும் நான்முகனிடத்திலும் இந்திரன் முதலிய பிற தேவர்களிடத்திலும் எங்குமே இல்லாத ஒப்பற்ற பேரின்பம் மிகமிகச் சிறியவர்களாகிய நம்மிடம் வருமாறு, நம்முடைய குற்றங்களைக் களைந்து, இந்நிலவுலகத்தில் நம்முடைய வீடுகள் ஒவ்வொன்றிலும் எழுந்தருளி, தன்னுடைய செந்தாமரைப் பொற்பாதங்களைத் தந்தருள் செய்யும் கொடைவென்றியால் மேம்பட்ட வீரனை, அழகிய திருவருள் நோக்கமுடைய மன்னவனை, அடிமைகளான நமக்குக் கிடைத்தற்கரிய பேரமுதை, நம்முடைய பெருமானைப்பாடி, நமக்கெல்லாம் நன்மை பெருக, தாமரைமலர்களால் பொலிந்து விளங்கும் நீரில் பாய்ந்து ஆடுவோமாக!

172) அண்ணாமலையான் அடிக் கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித் தொகை வீறு அற்றாற்போல்
கண் ஆர் இரவி கதிர் வந்து கார் கரப்ப
தண் ஆர் ஒளி மழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண் ஆகி ஆண் ஆய் அலி ஆய்ப் பிறங்கு ஒளி சேர்
விண் ஆகி மண் ஆகி இத்தனையும் வேறு ஆகிக்
கண் ஆர் அமுதமும் ஆய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணே இப் பூம்புனல் பாய்ந்துஆடு ஏல் ஓர் எம் பாவாய். 18

திருவண்ணாமலையில் எழுந்தருளி இருக்கும் அண்ணா மலையார் திருவடித் தாமரைகளைச் சார்ந்து வணங்கக்கூடிய தேவர்கள் முடிகளில் உள்ள பலவகை மணிகளும் (எம்பெருமான் திருவடி ஒளிக்குமுன்) பொலிவிழந்து தோன்றுவது போல, கதிரவன் ஒளிவெளிப்பட்டு இருள் நீங்கிய பொழுது, விண்மீன்கள் (கதிரவன் ஒளிக்குமுன்னால்) தங்கள் மெல்லிய ஒளியை இழந்து மறைய, பெண்ணாகியும் ஆணாகியும் அலியாகியும் ஒளி மிகுந்த வானமாகியும் மண்ணுலகமாகியும், இவையனைத்திற்கும் வேறுபட்டுநிற்கும் பொருளாகியும், கண்கள் கண்டு அனுபவிக்கும் அமுதமாகியும் நிலைபெற்று நிற்கும் பெருமான் திருவடிகளைப் புகழ்ந்து பாடிப் பெண்களே! பொலிவு மிக்க இந்தப் பொய்கையில் குதித்து நீராடுவோமாக!

173) உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப் பழஞ் சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்
எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க
எம்கை உனக்கு அல்லாது எப் பணியும் செய்யற்க
கங்குல் பகல் எம் கண் மற்று ஒன்றும் காணற்க
இங்கு இப் பரிசே எமக்கு எம் கோன் நல்குதியேல்
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு ஏல் ஓர் எம் பாவாய். 19

எங்கள் தனிப்பெருந்தலைவனே! உன் கையில் கொடுக்கப்படும் இந்தப் பெண்பிள்ளை உனக்கே அடைக்கலப் பொருளாவாள் என்று திருமணம் நடக்கும் போது மணமகனிடம் சொல்லப்படும் இப்பழைய சொல்லை, (எங்கள் கணவர் சிவனடியாராக இல்லாவிடில் எங்கள் வாழ்வு பயனற்றுப் போகுமே என்ற) அச்சத்தால் புதுப்பிக்கின்றோம். உனக்கு ஒரு விண்ணப்பம் செய்கிறோம். திருச்செவி சார்த்தி அருள்க! எங்களுடைய கொங்கைகள், உன் அன்பரல்லாதவர் தோள்களைத் தழுவக்கூடாது. எங்கள் கைகள் உனக்கன்றி வேறுயாருக்கும் எந்தப் பணியும் செய்யக்கூடாது. எங்கள் கண்கள் இரவிலும் பகலிலும் உன்னைத்தவிர எந்தப்பொருளையும் பார்க்கக்கூடாது. இவ்வுலகத்தில் எங்களுக்கு எங்கள் தலைவனாகிய நீ இந்த மாதிரியே அருள்புரிந்தால், கதிரவன் (கீழ்த்திசையில் உதித்தாலும்) வேறு எந்தத் திசையில் உதித்தாலும் எங்களுக்குக் கவலையில்லை.

174) போற்றி அருளுக நின் ஆதி யாம் பாத மலர்
போற்றி அருளுக நின் அந்தம் ஆம் செம்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன் பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகம் ஆம் பூங் கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறு ஆம் இணை அடிகள்
போற்றி மால் நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம்உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீர் ஆடு ஏல் ஓர் எம் பாவாய். 20

இறைவனே! எம்மைப்பாதுகாத்து எல்லாப் பொருட்களுக்கும் முதலாகிய உன் திருவடிமலர்களை அருள்வாயாக. அந்தத் திருவடிகளுக்கு வணக்கம். எங்களைப் பாதுகாத்து எப்பொருட்கும் முடிவாகிய நின் சிவந்த திருவடிகளை அருள்வாயாக. அவற்றுக்கு வணக்கம். எல்லா உயிர்களும் தோன்றக் காரணமாகிய பொன் போன்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க! எல்லா உயிர்களுக்கும் நுகர்வைத் தந்து பாதுகாக்கும் பூப்போன்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க. எல்லா உயிர்களுக்கும் ஓய்வு தந்து ஒடுங்கவைக்கும் இரண்டு திருவடிகள் எம்மைக் காத்தருள்க! திருமாலும் நான்முகனும் காணமாட்டாமல் மறைந்து நின்ற தாமரைத் திருவடிகள் எம்மைக் காத்தருள்க! நாம் எல்லாம் கடைத்தேறும் வண்ணம் ஆட்கொண்டு அருள்புரியும் பொன் போன்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க! நாம் ஆடுகின்ற சிவபெருமான் வடிவான இம் மார்கழி நீர் எம்மைக் காத்தருள்க. என்று பாடி நீராடுவோமாக!



தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்து அருளும் நாயகனை
வானூறும் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை இருபோதும் இறைஞ்சிடுவேன்.
- (செவ்வந்திப் புராணம்) சைவ எல்லப்ப நாவலர்

8.திருவம்மானை

(திருவண்ணாமலையில் அருளியது) தரவு கொச்சகக்கலிப்பா

(ஆத்மநாதன் புகழை நினைத்து ஆனந்தக் களிப்போடு பாடிய அம்மானைப் பாடல்)

175) செங்கண் நெடுமாலும் சென்று இடந்தும் காண்புஅரிய
பொங்கு மலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பு அறுத்திட்டு எம் தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்
அம் கணன் அந்தணன் ஆய் அறைகூவி வீடு அருளும்
அம்கருணை வார் கழலே பாடுதும் காண் அம்மானாய் 1

சிவந்த கண்களையுடையவனும், ஓங்கி உலகளந்த வனுமாகிய திருமாலும், பன்றியாக மாறிப் பாதாளம் வரை தோண்டியும் காண மாட்டாத, பேரின்பம் பொங்கவைக்கும் திருவடிகள் இந்தப்பூமியில் பட எழுந்தருளி, சகடக்கால் போல மாறிமாறி வரும் எங்கள் பிறப்பை அறுத்து, எம் தரத்தையும் கீழானதென்று நினையாமல் ஆட்கொண்டு, தென்னை மரங்கள் திரண்டிருக்கும் சோலைகளை உடைய திருப்பெருந்துறைநாதனும், சோமசுந்தரபாண்டியனும், அழகிய கண்களால் எம்மை ஆண்டவனும் ஆகிய சிவபெருமான், பிறவி வெப்பத்தை மாற்றும் தட்பமுள்ள அந்தணன் வடிவம் கொண்டு எம்மை வலியக் கூவி அழைத்து, நிலையான பேரின்பத்தை அருளுகின்றான். ஆதலின் அழகிய மான் போன்ற கண்களை உடைய பெண்களே! அவனுடைய கருணைத்தேன் ஒழுகும் திருவடி மலர்களைப் பாடுவோமாக!

176) பாரார் விசும்பு உள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆராலும் காண்டற்கு அரியான் எமக்கு எளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சு ஏற்றி
வாரா வழி அருளி வந்து என் உளம் புகுந்த
ஆரா அமுது ஆய் அலை கடல்வாய் மீன் விசிறும்
பேர் ஆசை வாரியனைப் பாடுதும் காண் அம்மானாய் 2

இன்பதுன்பக்கலப்பாய்இருக்கும் பூமியில்உள்ளவர்களும், விண்ணுலகில் போகம் நுகர்வோரும், அறியாமையில் அழுந்திக்கிடக்கும் பாதாள லோகத்தார்களும், இவர் தவிர மற்ற புவனங்களில்

வசிப்பவர்களும், ஆகிய எவராலும் காண்பதற்கரியவன், எமக்கு எளியவனாய் வந்த ஐந்தெழுத்துப் பேருடையான், பாண்டிய மன்னன், திருப்பெருந்துறையான், அவனுக்கே அன்புசெய்யும் பித்துமிகவைத்து, மீண்டும் பிறவியெடுத்து வாராத வழிகாட்டி, (பூனை குட்டியைத் தானே கவ்விச் சென்று காப்பாற்றுவது போல) தானே வலிய வந்து, என்னுள்ளத்தில் புகுந்து, என்றும் தெவிட்டாத தெள்ளமுதானான். அந்த பெருமானை, உமையவளை மணந்து கொள்வதற்காக, அலைகடலில் மீன் பிடிக்க வலைவீசும், பெருங்காதல் கடல் போன்றவனைப் பாடுவோமாக.

177) இந்திரனும் மால் அயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்க சிவன் அவனி வந்தருளி
எம் தரமும் ஆட்கொண்டு தோள் கொண்ட நீற்றன் ஆய்
சிந்தனையை வந்து உருக்கும் சீர் ஆர் பெருந்துறையான்
பந்தம் பரியப் பரி மேல்கொண்டான் தந்த
அந்தம் இலா ஆனந்தம் பாடுதும் காண் அம்மானாய். 3

இந்திரனும் திருமாலும் நான்முகனும் மற்றுள்ள முனிவர்களும் தேவர்களும், வானத்திலேயே சிவனருள் கிடைக்காமல் ஏமாந்து நிற்க, சிவபெருமான் பூமிக்கு வந்து, எங்கள் நிலையிலும் எங்களை ஆட்கொண்டான். திருத்தோளில் திருநீறு ஒளிவீச, இரும்பை உருக்கிச் செம்பொன் ஆக்குவது போலச் சிந்தையை உருக்கும் புகழ்மிக்க திருப்பெருந்துறையான், எங்கள் பாசக்கட்டுகள் அற்றுப்போகக் குதிரைமேல் வந்த பிரான், எங்களுக்குத் தந்த எல்லையற்ற ஆனந்தத்தைப் பாடுவோமாக

178) வான் வந்த தேவர்களும் மால் அயனோடு இந்திரனும்
கான் நின்று வற்றியும் புற்று எழுந்தும் காண்புஅரிய
தான் வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு
ஊன் வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்பு எய்து
தேன் வந்து அமுதின் தெளிவின் ஒளி வந்த
வான் வந்த வார் கழலேபாடுதும் காண் அம்மானாய். 4

பசுபுண்ணிய மேலீட்டால் வானின்கண் வந்து பொருந்திய தேவர்களும், மால், பிரமன், இந்திரன், முதலியவர்களும், காட்டில் வந்து தவம் செய்து, உடம்பு வற்றியும், உடம்பைச் சுற்றிப் புற்று மூடப்பட்டும் காணமுடியாத பரம்பொருளாகிய இறைவன், தானே

வலியவந்து, நாய் போன்ற எனக்கு, தன் பிள்ளையின் இழிவு தோன்றாது காக்கும் தாய் போலப் பேரன்பு காட்டி, என் உடல் இடம் கொண்டு, மயிர்த்துளை தோறும் கசிந்து இனிக்க உயிர்ப்பூட்டும் தேனாக மாறி, அமுதத் தெளிவை உண்டதால் விளையும் ஞான ஒளியானான். அப்பெருமானுடைய வானுயர்ந்த பெருமை மிக்க திருவடிகளைப் பாடுவோமாக.

179) கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சு ஏற்றி
கல்லைப் பிசைந்து கனி ஆக்கித் தன் கருணை
வெள்ளத்து அழுத்தி வினை கடிந்த வேதியனைத்
தில்லை நகர் புக்கு சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதும்காண் அம்மானாய். 5

கல்லைப் போலக் கசியாத மனத்தைப் பெற்றுக் கடையனாய் நிற்கும் நாயினும் கீழ்ப்பட்ட என்னை, அரிய செயலை எளிதாகச் செய்ய வல்லவனும், தென்னவனும், பெருந்துறைப் பெருமானுமாகிய சிவபெருமான் அவனைப்பற்றியே பிதற்றச் செய்து, கல்லாகிய மனத்தைப் பிசைந்து, சுவையும் மனமும் உடைய கனியாக்கி, தன்னுடைய பெருங்கருணை வெள்ளமாகிய தேனில் அழுந்தச் செய்தான். என்னுடைய வினைகளை ஓட்டிய குருநாதனாகிய அந்தணனை, தில்லைப்பதியில் சிற்றம்பலத்தில் நிலை பெற்று விளங்கும், விரைந்து செல்லும் விடையை உடைய அப்பெருமானைப் பாடுவோமாக.

180) கேட்டாயோ தோழி கிறி செய்த ஆறு ஒருவன்
தீட்டு ஆர் மதில் புடை சூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டி
தாள் தாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடு எய்த
ஆள்தான் கொண்டு ஆண்டவா பாடுதும் காண் அம்மானாய். 6

என்னை ஒருவன் மயக்கிய செய்தியைத் தோழி! நீ கேட்டாயோ? (அவன் யார் தெரியுமா?) சித்திரங்கள் தீட்டப்பெற்ற, பகைவரால் கடத்தற்கரிய மதில் சூழ்ந்த தென்னாட்டுத் திருப்பெருந்துறையான் (அவன் என்ன செய்தான் தெரியுமா?) பிறவிக் கடலில் கிடக்கும் எனக்கு இருவினை ஒப்பும்,மலங்களற்ற தன்மையும் தன் திருவருளும் என்று

பிறருக்குக் காட்டாதவற்றை எல்லாம் எனக்குக் காட்டினான். சிவமாகிய தன்னைக் காட்டினான். திருவடித்தாமரை காட்டினான். தன்கருணையால் பேரின்ப நுகர்வான தேனைக் காட்டினான். நம்மையும் நமக்கருள் புரிந்த அவனையும் பார்த்து நாட்டு மக்கள் நகைக்க, நாம் வீட்டின்பம் பெற அவன் நம்மை ஆட்கொண்ட சிறப்பைப் பாடுவோமாக.

181) ஓயாதே உள்குவார் உள் இருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாது இருக்கும் பாதியனை
நாய் ஆன நம்தம்மை ஆட்கொண்ட நாயகனை
தாயான தத்துவனைத் தானே உலகு ஏழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதும் காண் அம்மானாய். 7

எண்ணெயொழுக்கும் தேனொழுக்கும் போல, இடைவிடாமல் எண்ணுபவர்களின் மனத்தகத்தான் ஆகிய உண்மைப் பொருளை, அப்படி நினையாதவர்க்குத் தூரத்தில் இருப்பவனை, மதுரைக்கு வந்த குதிரைச் சேவகனை, தென்னவனாய்த் திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருப்பவனை, வேதம் உரைத்த பெருமானை, உமையவள் ஒரு பாகத்தானை, நாய் போன்ற நம்மையுமோர் பொருளாக்கி ஆட்கொண்ட தனித்தலைவனை, பிழைபொறுத்து வீடுதரும் தாய் போன்றவனை, உண்மை வடிவானவனை, ஏழு உலகங்களும் தானேயாய் இருப்பவனை, அங்குள்ள எல்லாவற்றையும் ஆண்டருளும் பெருமானைப் பாடுவோமாக.

182) பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண் சுமந்து கூலி கொண்டு அக் கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன் மேனி பாடுதும் காண் அம்மானாய். 8

(உயிரைத் தாங்கும் உடல் போல,) பண் சுமந்த பாடலுக்குப் பரிசளிக்கப் பெண்ணாகிய உமையவளைச் சுமந்த இடப்பாகத்தான், எங்கள் பெருமான், திருப்பெருந்துறைச் செல்வன், விண்ணால் சுமக்கப்பெற்ற புகழுடைய பரந்த மண்டலங்களுக்குத் தலைவன், ஞானந்தரும் நெற்றிக்கண்ணையுடைய கடவுள், என்றும் தழைக்கின்ற மதுரை மாநகரில் வந்திக்காக மண்சுமந்து, அதற்குரிய கூலியாகப்

பிட்டை ஏற்றுக்கொண்டு, பாண்டியனால் அடிக்கப்பட்டு, புண் தாங்கிய அவன் பொன்னார் திருமேனியைப் பாடுவோமாக

183) துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரி நூலான் கோல மா ஊர்தியான்
கண்டம் கரியான் செம் மேனியான் வெண்நீற்றான்
அண்டம் முதல் ஆயினான் அந்தம் இலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழ அடியார்க்கு ஈந்தருளும்
அண்டம் வியப்பு உறுமாபாடுதும் காண் அம்மானாய். 9

திருமுடியில் ஒருகலைப் பிறையை உடையவன், வேத வடிவானவன், திருப்பெருந்துறையில் எழுந்தருளும் பெருமான், திருமார்பில் முப்புரிநூலணிந்தவன், அழகிய குதிரையை ஊர்தியாகக் கொண்டவன், கழுத்தில் கறுப்பு நிறத்தையும் மேனியில் சிவப்பு நிறத்தையும் திருநீற்றில் வெண்மை நிறத்தையும் ஏற்று (காத்தல் அழித்தல் படைத்தல் எனும் முத்தொழிலும் செய்பவன்) அண்டங்களுக்கு முதல்வன், பழமையான அடியார்களுக்கு, எல்லையற்ற ஆனந்தம் கொடுப்பதையே பண்டு முதல் இன்று வரை பழக்கமாக உடையவன், எம்பெருமானுடைய இந்த வள்ளன்மையை எல்லா அண்டத்தாரும் வியக்க, நாமும் பாடுவோமாக

184) விண் ஆளும் தேவர்க்கும் மேல் ஆய வேதியனை
மண் ஆளும் மன்னவர்க்கும் மாண்பு ஆகி நின்றானைத்
தண் ஆர் தமிழ் அளிக்கும் தண் பாண்டி நாட்டானை
பெண் ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண் ஆர் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதும் காண் அம்மானாய். 10

போகமே பெரிதெனக் கருதி விண்ணுலகையாளும் தேவர் களுக்கு மேலாகத்திகழும் ஞானவடிவானவனை, மண்ணையாளும் மன்னவர்க்கு அவர்கள் அடைய வேண்டிய மாண்பு மிக்க பொருளாய் நின்றவனை, பேசவும் கேட்கவும் இனிமையான தமிழ்மொழியில் தானும் கலந்திருந்து இருமைப் பயன் தரும் குளிர்ச்சி மிக்க பாண்டி நாட்டுக்கு அரசனை, பெண்ணாகிய அங்கயற்கண்ணம்மை ஆளுகின்ற பாகத்தை

உடையவனை, யாவராலும் பேணிப் போற்றப்படும் திருப்பெருந் துறையில், கண்ணுக்கினிய திருவடிகளைக்காட்டி, நாயேனை ஆட்கொண்டருளிய திருவண்ணாமலையானைப் பாடுவோமாக!

185) செப்பு ஆர் முலை பங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமேதாள் அடைந்தார் நெஞ்சு உருக்கும் தன்மையினான்
அப் பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பு ஆர் சடை அப்பன் ஆனந்த வார் கழலே
ஒப்பு ஆக ஒப்புவித்த உள்ளத்தார் உள் இருக்கும்
அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதும் காண் அம்மானாய். 11

செப்புப்போன்ற முலையினை உடைய உமாதேவியைப் பாகத்தில் கொண்டவன், பாண்டிய மன்னன், திருப்பெருந் துறையான், சிறிதும் தவறாமல் திருவடிகளையே நினைத்துத் தஞ்சமென்று அடைந்த அன்பர்களின் நெஞ்சைக் கசிவிக்கும் கருணையாளன், அழகிய பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்கி, துவாத சாந்தப் பெருவெளியில் வாழும் ஆனந்த வாழ்வை அங்கேயே கொடுக்கும், கங்கை தங்கிய செஞ்சடைக் கடவுள்,அவனுடைய ஆனந்தமயமான திருவடிகளுக்குத் தம்மையே அடகுவைத்த மனத்தினை உடைய அடியார்கள் உள்ளத்தினுள்ளே இருப்பவன். அப்பாற்பட்ட எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவன், அவனையே பாடுவோமாக!

186) மைப் பொலியும் கண்ணி கேள் மால் அயனோடு இந்திரனும்
எப் பிறவியும்தேட என்னையும் தன் இன் அருளால்
இப் பிறவி ஆட்கொண்டு இனிப் பிறவாமே காத்து
மெய்ப் பொருட்கண் தோற்றம்ஆய் மெய்யே நிலைபேறு ஆய்
எப் பொருட்கும் தானே ஆய் யாவைக்கும் வீடு ஆகும்
அப்பொருள் ஆம் நம் சிவனைப் பாடுதும்காண் அம்மானாய். 12

எழுதப்பட்ட கண்மைக்கும் அழகுதரக்கூடிய கண்களை உடையவளே! கேட்பாயாக. திருமாலும், பிரமனும், இந்திரனும், பன்றி, அன்னம், மயில் என்று வேறுபிறவிகள் எடுத்துத் தேடி அலைய, (அவர்களுக்குத் தன்னைக் காட்டாமல்) மிகக் கடையவனாகிய என்னையும், தன் கைம்மாறு வேண்டாத கருணையால், இந்தப் பிறவியிலேயே ஆட்கொண்டு, இனிமேலும் பிறவி எடுக்காமல் காப்பாற்றி, அழியாப் பொருளும் (உணர்த்த உணர்வதுமான) ஆன்மாவிடம் (மணியின் ஒளி போல்) வெளிப்பட்டு, அந்த

ஆன்மாவையே பற்றுக் கோடாகக் கொண்டு, எல்லாப் பொருட்களுக்கும் தானே ஆதாரமாகி, எல்லாவற்றுக்கும் வீடு பேறாய் விளங்குகின்ற 'அ' என்ற எழுத்தின் பொருளான நம் சிவபெருமானைப் பாடுவோமாக.

187) கை ஆர் வளை சிலம்பக் காது ஆர் குழை ஆட
மை ஆர் குழல் புரளத் தேன் பாய வண்டு ஒலிப்ப
செய்யானை வெண்ணீறு அணிந்தானைச் சேர்ந்து அறியாக்
கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதும் காண் அம்மானாய். 13

கை வளைகள் ஒலிக்கவும், காதணிகள் அசைந்தாடவும், கருங்கூந்தல் விரிந்து புரளவும், கூந்தலில் சூடிய மலர்களிலிருந்து தேன் சொரியவும், வண்டுகள் ஒலி செய்யவும், சிவந்த திருமேனி உடையவனை, வெண்ணீறு அணிந்தவனை, யாரையும் குவித்து வணங்கி அறியாத கைகளை உடையவனை, எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்தவனை, அன்பு செய்பவர்க்கு உண்மைப் பொருள் ஆனவனை, பொய்யன்பருக்கு மெய்ப்பொருள் ஆகத் தோன்றாத ஞான வடிவினனை, அடியார்கள் உய்யத்திருமேனி தாங்கித் திருவையாற்றில் அமர்ந்த பெருமானைப் பாடுவோமாக!

188) ஆனை ஆய்க் கீடம் ஆய் மானுடர் ஆய்த் தேவர் ஆய்
ஏனைப் பிறவு ஆய் பிறந்து இறந்து எய்த்தேனை
ஊனையும் நின்று உருக்கி என் வினையை ஓட்டு உகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து இனிய
கோன்-அவன் போல் வந்து என்னைத் தன் தொழும்பில் கொண்டருளும்
வானவன் பூம் கழலே பாடுதும் காண் அம்மானாய். 14

யானை, புழு, மனிதர், தேவர் மற்ற பிறவிகள் எனப் பிறந்தும் இறந்தும் இளைத்துப் போன என்னை ஆட்கொண்டு, என்னுடன் இருந்து, என் உடம்பை உருக்கி, என் பழைய வினைகளை ஓட்டி, தேன், பால், கருப்பஞ்சாறு இவைபோல இனிக்கும் தலைவனாக என் முன் வந்து, என்னைத் தன்னடியார் கூட்டத்தில் ஒருவனாகக் கொண்டு அருள்புரிந்த தேவதேவன் மலர்த்திருவடிகளையே பாடுவோமாக!

189) சந்திரனைத் தேய்த்தருளி தக்கன் தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள் நெரித்திட்டு எச்சன் தலை அரிந்து
அந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல் தகர்த்து
சிந்தித் திசை திசையே தேவர்களை ஒட்டு உகந்த
செந்தார்ப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதும் காண் அம்மானாய். 15

சிவபெருமானை மதிக்காமல் தக்கன் செய்த வேள்வியில், சந்திரனைக்காலால் தேய்த்தும், இந்திரன் தோளை நெரித்தும், தக்கன் தலையை அரிந்தும், வானத்தில் செல்லும் கதிரவன் பற்களை உடைத்தும், திசைகள் தோறும் தேவர்கள் சிதறி ஓடுமாறு செய்தவனும், சிவந்த மாலை யணிந்தவனும், பொழில்கள் சூழ்ந்த தென் திருப்பெருந் துறையில் உறைபவனும் ஆகிய சிவபெருமானுடைய மந்தார மாலையைப் பாடுவோமாக!

190) ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுள் கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீம் கரும்பின் கட்டியுமாய்
வானோர் அறியா வழி எமக்குத் தந்தருளும்
தேர் ஆர் மலர்க் கொன்றைச் சேவகனார் சீர் ஒளி சேர்
ஆனா அறிவாய் அளவு இறந்த பல் உயிர்க்கும்
கோன் ஆகி நின்றவா கூறுதும் காண் அம்மானாய். 16

என் உடலுக்குச் சுவைமிக்க தேனாகவும், உயிருக்கு வளம் தரும் அமுதமாகவும் உணர்வுக்கு இனிக்கும் கருப்புக் கட்டியாகிய வெல்லமாகவும் ஆகி, என்னுள் ஒன்றாய்க் கலந்திருந்து, தேவர்களும் அறியாத வீட்டின்பவாயிலாகிய சிவஞானவழியை எமக்குத்தந்தருள்பவன் சிவபெருமான். தேன் நிறைந்ததும் (ஓங்காரவடிவானதுமான) கொன்றை மாலையை அணிந்த வீரனாகிய அவன், புகழுடன் விளங்கும் ஒளிமயமான, என்றும் கெடாத பேரறிவாகவும், கணக்கில்லாத உயிர்கள் அனைத்திற்கும் தலைவனாகவும் நின்ற அருட்செயலைக் கூறுவோமாக

191) சூடுவேன் பூங் கொன்றை சூடிச் சிவன் திரள் தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன் உள் உருகித்
தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனல் ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதும் காண் அம்மானாய். 17

சிவபெருமான் சூடிக் களைந்த கொன்றை மலரை அவன் காதலியாகிய நான் சூடுவேன். நான் அவனுடைமையானதால் அவன் திரண்ட தோள்களைத் தழுவிக் கொள்வேன். அவனோடு கூடி அதனால், தன்னறிவுமயங்கி, இன்பம் அதிகரிப்பதற்காக ஊடல் உறுவேன். அப்பிரிவு தாங்காமல் அவன் வாயமுதம் பெற மனம் உருகிநிற்பேன். அது கிடைக்காமல் அவனைத் தேடுவேன். தேடித்தேடிச் சிவன் திருவடிகளையே சிந்திப்பேன். சிந்தனையிலிருந்து திருவடிசற்று மறைந்தபோது வாடுவேன் மீண்டும் சிந்தித்துத் திருவடி தெரிய மனம் மலர்வேன். அப்பெருமான் விரைந்து வர வேண்டும் என்பதற்காக, திருக்கரத்தில் தீயேந்தி ஆடும் பிரான் திருவடிகளையே பாடுவோமாக

192) கிளி வந்த மென்மொழியாள் கேழ் கிளரும் பாதியனை
வெளி வந்த மால் அயனும் காண்பு அரிய வித்தகனைத்
தெளி வந்த தேறலைச் சீர் ஆர் பெருந்துறையில்
எளி வந்து இருந்து இரங்கி எண் அரிய இன் அருளால்
ஒளி வந்து என் உள்ளத்தின் உள்ளே ஒளி திகழ
அளி வந்த அந்தணனைப் பாடுதும் காண் அம்மானாய். 18

கிளிபேசும் மொழிபோல மென்மையான மொழியினை உடைய உமாதேவியாரின் பச்சைநிறம் கிளர்ந்து விளங்கும் பாதிமேனி உடையவனை, உள்ளே தேட வேண்டிய இறைவனை வெளியில் தேட வந்த திருமாலும் பிரமனும் காணமுடியாத வித்தகனை, தெளிவுதந்த சிவத்தேனை, சிறப்புமிக்க திருப்பெருந்துறையில் எளிமையாக வந்து, குருந்த மரத்தடியில் இருந்து, என் மீது இரக்கம்கொண்டு, எல்லையற்ற கருணையால், என் உள்ளத்தில் ஞான ஒளி வீச வைத்து, அந்த ஒளியின் வாயிலாக என்னுள் புகுந்து சிவப் பேரொளி திகழவைத்து, அன்புகாட்டிய அந்தணனைப் பாடுவோமாக.

193) முன்னானை மூவர்க்கும் முற்றும் ஆய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாது இயலும் பாதியனைத்
தென் ஆனைக் காவானைத் தென் பாண்டி நாட்டானை
என்னானை என் அப்பன் என்பார்கட்கு இன் அமுதை
அன்னானை அம்மானைப் பாடுதும் காண் அம்மானாய்.19

முத்தொழில் புரியும் அயன் அரி அரன் மூவர்க்கும் முற்பட்டவனாய் அவர்களைச் செயல்பட வைப்பவனும் எல்லாவற்றுக்கும்

(ஊழிக் காலத்தில்) முடிந்தபொருள் ஆனவனும், எல்லாவற்றுக்கும் பின்னாலும் இருப்பவனும், தலைக்கோலம் அணிந்தவனும், சிவலோகம் என்று எல்லோராலும் போற்றப்படும் திருப்பெருந்துறையில் நிலைபெற்ற அரசனாய் இருப்பவனும், ஞானவெளியில் திகழ்பவனும், மாது அடங்கியிருக்கும் பாதியனும், அழகிய திருவானைக்காவில் இருப்பவனும், தனக்குப் பழம் பதியாகிய பாண்டிநாட்டானும், எனக்கு யானை போன்றவன் என் தந்தை என்று பேசும் மெய்யடியார்களுக்கு இன்னமுதம் ஆனவனும் ஆகிய, அம்மானைப் பாடி அம்மானை ஆடுவோமாக.

194) பெற்றி பிறர்க்கு அரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின் மேல் வந்தருளித் தன் அடியார்
குற்றங்கள் நீக்கிக் குணம் கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்பு அறுப்பான் தொல் புகழே
பற்றி இப் பாசத்தைப் பற்று அற நாம் பற்றுவான்
பற்றிய பேர் ஆனந்தம் பாடுதும் காண் அம்மானாய். 20

திருச்சிற்றம்பலம்

(கலந்திருப்பதும் கடந்திருப்பதுமாகிய) தன் தன்மைகள், அடியார் அல்லாத பிறரால் அறியப்படாத பெருமான், திருப்பெருந்துறையான், அறிவாகிய வெற்றிக்குதிரையின் மேல் வந்தருளித் தன் அடியார் செய்த பாவச் செயல்களைப் போக்கி, அவர்கள் குணத்தை எடுத்துப் பாராட்டி, அவர்களைச் சுற்றியிருந்து உலக பாசத்துள் சிக்கவைக்கும் சுற்றங்களின் தொடர்பை அறுப்பவன், அவனுடைய பொருள் சேர் பழம் புகழையே பற்றி, உலகபாசமாகிய பற்று நீங்க, அதனால் நாம் பெற்ற பேரானந்தத்தையே பாடுவோமாக.



9.திருப்பொற்சுண்ணம்

(தில்லையில் அருளியது) அறுசீர் விருத்தம்

(இறைவன்புகழ்பாடி ஆனந்த மனோலயத்துடன், பொன் நிறமாயிருக்கும் பொடி இடித்துச் சிவபெருமான் திருமஞ்சனமாடக் கொடுத்தல்)

195) முத்து நல் தாமம் பூ மாலை தூக்கி
முளைக் குடம் தூபம் நல் தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார் மகளும்
நா மகளோடு பல்லாண்டு இசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 1

முத்துக்கள் கோர்க்கப்பட்ட நன்முத்து மாலைகளையும் மலர் மாலை களையும் தொங்கவிடுங்கள். முளைப் பாலிகைக்குடம், தூபம், தீபம், இவற்றை இடம் பார்த்து வையுங்கள். சத்தி, சோமி, பார்மகள் மூவரும் நாமகளோடு சேர்ந்து பல்லாண்டு பாடுங்கள். சித்தி, கௌரி, பார்ப்பதி, கங்கை ஆகிய நால்வரும் கவரி வீசுங்கள். நம் தலைவனும் திருவையாற்று நாதனுமாகிய அம்மானைப்பாடி, அவன் திருமஞ்சனம் ஆடுவதற்காகப் பொற்சுண்ணம் இடிப்போமாக.

196) பூ இயல் வார் சடை எம்பிராற்குப்
பொன் திருச்சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடு வகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்து உடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எம் கோன் எம் கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்தும் நாமே. 2

பூக்களோடு கூடிய நீண்ட சடையினை உடைய எம் பெருமானுக்குப் பொன்மயமான திருச்சுண்ணப்பொடி இடிக்க வேண்டும். மாவடுவின் பிளவை யொத்த கண்களை உடைய பெண்களே! வாருங்கள். வேறு பேச்சுப் பேசாமல் அவன் புகழ்

பாடுங்கள். உடனே பாடுங்கள். தொண்டர்கள் வெளியில் நில்லாமல் அழையுங்கள். குனிந்து வணங்குங்கள். எம் தலைவன், எங்கள் நடனநாயகன், சிவகாமியும் தானுமாக வந்து, நம்மை ஆட்கொள்ளச் செம்பொன் சேர்க்கப்பட்ட சுண்ணம் இடிப்போமாக!

197) சுந்தர நீறு அணிந்தும் மெழுகி
தூய பொன் சிந்தி நிதி பரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழில் சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர் கோன் அயன் தன் பெருமான்
ஆழியான் நாதன் நல் வேலன் தாதை
எந்தரம் ஆள் உமையாள் கொழுநற்கு
ஏய்ந்த பொற் சுண்ணம் இடித்து நாமே. 3

உங்களைத் தூய்மை செய்ய நெற்றியில் அழகு மிக்க திருநீறு பூசுங்கள். சுண்ணம் இடிக்கும் இடத்தைக் (கறவைப் பசுவின் சாணத்தைக் கொண்டு) மெழுகி, தூய்மையான பொன்னைச் சிந்துமாறு செய்து, நவரத்தினமாகிய நிதிகளைப் பரப்பி, இந்திரனுக்குரிய கற்பக மரத்தை (வாழை மரம் போல) நாட்டி, எங்கும் அழகுச்சுடர் வீசும் விளக்குகள் வைத்து, இடபக்கொடியைக் கட்டுங்கள். தேவர்கள் தலைவனும், நான்முகனுக்குப் பெருமானும், சக்கரப்படைபெற்ற திருமாலுக்குக் காதலனும், நலம்புரியும் வேலேந்திய முருகப் பெருமானுக்குத் தந்தையும், பிணிபோக்கும் மருத்துவன் போல, எங்கள் தரத்திற்கேற்ப அருள் செய்யும் உமையாள் கணவனும் ஆகிய சிவபெருமானுக்குத் தக்கவகையில் அருள் ஞானச் சுண்ணப்பொடி இடிப்போமாக!

198) காசு அணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்பு அணிமின்கள் கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திரு ஏகம்பன் செம் பொன் கோயில் பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 4

சுண்ணம் இடிக்கும் உலக்கைகளுக்கெல்லாம் பொன்னும் மணியுமாகிய வடங்களை இட்டு அழகு செய்யுங்கள். காவிப்பட்டை

தீட்டப்பெற்ற உரலைச்சுற்றிப் பட்டாடை அணிவியுங்கள். அன்பு மிக்க அடியவர்கள் என்றும் நிலைபெற்று வாழ்க என்று வாழ்த்தித் தேசங்களெல்லாம் புகழ்ந்து கொண்டாடும் காஞ்சித் தலத்தில் உள்ள ஏகாம்பரநாதரின் செம்பொன் மயமான கோயிலைப் பாடி, நம்முடைய பாசங்களையும், பழைய வினைகளையும் வேரோடு பறித்து, இறைவன் அருளில் நிலைபெற்றுநின்று, அவனைப்பாடிப் பொற்சுண்ணம் இடிப்போமாக!

199) அறுகு எடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோடு அமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மில் பின்பு அல்லது எடுக்க ஒட்டோம்
செறிவு உடை மும் மதில் எய்த வில்லி
திரு ஏகம்பன் செம் பொன் கோயில் பாடி
முறுவல் செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 5

மங்கல நீராடும் சிவபெருமானுக்கு, அறுகம்புல்லைப் பாலில் தோய்த்துத் தலையில் வைக்க, நான்முகனும் திருமாலும் இந்திரனும், முயல்வார்கள். அவர்களுக்கு முன் செல்ல நினைத்துப் பல்லைக் கடிக்கின்ற மற்ற தேவர்களும் முயல்வார்கள் அவர்கள் நமக்குப் பின்னால் தான் அப்பணியைச் செய்ய வேண்டுமே ஒழிய முதலில் செய்ய விடமாட்டோம். சேர்ந்திருக்கின்ற முப்புரங்களை எய்த வில்லாளனாகிய ஏகாம்பரநாதரின் செம்பொன்னாலான கோயிலைப்பாடி இப்பேறு கிடைத்த மகிழ்ச்சியால் புன்முறுவல் செய்யும் சிவந்த வாயினை உடைய பெண்களே! முக்கண்களை உடைய நம் அப்பனுக்கு, திருமஞ்சனம் கொள்ளச் சுண்ணப்பொடி இடிப்போமாக

200) உலக்கை பல ஓச்சுவார் பெரியர்
உலகம் எலாம் உரல் போதாது என்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாது என்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாள் மலர்ப் பாதங்கள் சூடத் தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி
மகிழ்ந்து பொற் சுண்ணம் இடித்து நாமே. 6

செயற்கரும் செய்கை செய்யும் சிவனடியார்கள் உலக முழுவதும் ஒரே உரலாக இருந்தாலும் போதாது என்று கூறும்படி உலக்கை பிடித்துக் குத்துவார்கள். மெய்யடியார்கள் இதில் கலந்து கொள்ளவும் கண்டு மகிழவும், உலக முழுவதும் இடம் போதாது என்னும் படி வந்து சேர்ந்தார்கள். நாம் நலமுறும்படி நம்மை ஆட்கொண்டு, அன்றலர்ந்த செந்தாமரைப் பாதங்களைச் சூடி மகிழக்கொடுத்து உதவிய இமயமலைக்கு மருமகனைப் பாடிப் பாடி மகிழ்வோடு பொற்சுண்ணம் இடிப்போமாக!

201) சூடகம் தோள் வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடகம் மெல் அடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பரா பரனுக்கு
ஆடக மா மலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 7

கைவளையும் தோள்வளையும் ஒலித்து நிற்க, தொண்டர் கூட்டம் எழுந்து ஆரவாரம் செய்ய, நாட்டுமக்கள் நம்மைப் பார்த்து இவர்கள் பித்தர்கள் என்று நகைக்க. நாம் அவர்களைப் பார்த்து இவர்கள் சிவனடிப்பேறு பெறவில்லையே என்று நகைத்து ஆரவாரிக்க, பாடகம் ஒலிக்கும் மெல்லிய பாதங்களை உடைய உமையவளைப் பங்கில் உடையவனும், மேலானவற்றுக்கெல்லாம் மேலானவனும் பொன்மலையை ஒத்தவனுமாகிய தலைவனுக்குத் திருமஞ்சனமாடச் சுண்ணப்பொடி இடிப்போமாக.

202) வாள் தடம் கண் மட மங்கை நல்லீர்
வரி வளை ஆர்ப்ப வண் கொங்கை பொங்கத்
தோள் திரு முண்டம் துதைந்து இலங்கச்
சோத்து எம்பிரான் என்று சொல்லிச் சொல்லி
நாள் கொண்ட நாண் மலர்ப் பாதம் காட்டி
நாயில் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 8

ஒளிமிக்க அகலமான கண்களும், அறிந்தும் அறியாதாள் போலிருக்கும் மடப்பமும் உடைய நல்ல பெண்களே! கைகளில் கீற்றுக்களோடு வளையல்கள் ஒலிக்கவும், வளமான முலைகள் எழுந்து பொங்கவும் தோள்கள் இரண்டும் அழகிய தலையைத் தொட்டுவரவும், எம்பெருமானே! தோத்திரம் என்று சொல்லிச் சொல்லி அன்றலர்ந்த தாமரைப் பதங்களைக் காட்டி நாயினும் கீழான நம்மை, இப்பிறவியிலேயே ஆளாகக் கொண்ட முறைமைகளைப் பாடிப் பாடி அவன் நீராட, பொற் சுண்ணம் இடிப்போமாக!

203) வையகம் எல்லாம் உரல் அது ஆக
மா மேரு என்னும் உலக்கை நாட்டி
மெய் எனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடி
செம் பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணி தில்லை வாணனுக்கே
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 9

உலகங்கள் அனைத்தையும் உரலாக்கி, உலகிற்கு அச்சாணியாகிய மேருமலை என்ற உலக்கையை வைத்து, உண்மை அன்பான மஞ்சள் நிறையப்போட்டு, சிறப்பு மிக்க தென்னவனும் திருப்பெருந்துறைச் செல்வனுமாகிய சிவபெருமானுடைய சிவந்த திருவடிகளைப் பாடிப் பாடி, செம்பொன் மேருவாகிய உலக்கையை வலக்கையால் இறுக்கமாகப் பற்றி நம் தலைவனாகிய தில்லைவாணனுக்குத் திருமஞ்சனமாடப் பொற்சுண்ணம் இடிப்போமாக.

204) முத்து அணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல் வண்டு இனம் ஆட ஆடச்
சித்தம் சிவனொடும் ஆட ஆடச்
செம் கயல் கண் பனி ஆட ஆடப்
பித்து எம்பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப் பொற் சுண்ணம் இடித்து நாமே. 10

முத்து வடங்கள் அணிந்த கொங்கைகள் அசைய அசைய, அடர்ந்த கூந்தலில் வண்டுகள் எழுநது ஒலிக்க, நம் மனம் அதையே

கோயிலாக உடைய சிவபெருமானுடன் ஆட ஆட, சிவந்த மீன் போன்ற கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பி ஆட, நம் சித்தத்திலுள்ள பித்து அதற்குக் காரணமான எம்பெருமானுடன் ஆட ஆட, பிறவிப்பிணி இறையன்பரல்லாத பிறரொடும் ஆட ஆட, சிவபெருமான் கருணைக்கடலான பராசக்தியோடும் ஆட, அவன் திருமஞ்சனமாடச் சுண்ணம் இடிப்போமாக

205) மாடு நகை வாள் நிலா எறிப்ப
வாய் திறந்து அம் பவளம் துடிப்ப
பாடுமின் நம் தம்மை ஆண்ட ஆறும்
பணி கொண்ட வண்ணமும் பாடிப் பாடித்
தேடுமின் எம் பெருமானைத் தேடி
சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 11

பல்லின் நிலாவொளி பக்கங்களில் பரவ, இறையன்பால் வாய்திறந்து பவளம் போன்ற உதடுகள் துடிக்க, இறைவன் நம்மை ஆட்கொண்ட முறையையும், நம்மைப் பணிகொண்ட வகையையும் பாடிப்பாடி எம்பெருமானைத் தேடுங்கள். தேடும் முயற்சியிலேயே மனம் மகிழத் திகைத்துப் பிறகு தெளிவடைந்து ஆடுங்கள். அம்பலத்தாடும் பெருமான் திருமஞ்சன மாடச் சுண்ணம் இடிப்போம் வாருங்கள்.

206) மை அமர் கண்டனை வான நாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர் பிரானை நம்மை
அகப்படுத்து ஆட்கொண்டு அருமை காட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போது அரிக் கண் இணை பொன் தொடித்தோள்
பை அரவு அல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 12

நஞ்சமர் கண்டமுடையவனை, அப்படி நஞ்சையுண்டு வானத்திலுள்ளவர்க்கு அமுதமீந்த மருந்து போன்றவனை, மாணிக்கம் போல் போற்றத்தக்க திருக்கூத்துச் செய்பவனை, தலைவனை, ஆசிரியர்க்கெல்லாம் ஆசிரியனை, நம்மை அகன்று போகாமல் தன்னருளில் சிக்க வைத்து, ஆளாக்கித் தன்னுடைய அரியதன்மையைக்

காட்டுபவனை, பொய்யான உலக போகத்தில் ஈடுபட்டுப் பொய்வாழ்வு வாழ்பவர்க்குப் பொய்யானவனை, மெய்யடியார்களுக்கு மெய்ப் பொருளானவனை, பூவைப்போல் செவ்வரிபடர்ந்த கண்களையும், பொன்வளையல் அணிந்த தோள்களையும், பாம்பின் படம் போன்ற மறைவிடத்தையும் உடைய நற்பெண்களே! நாம் பாடிப் பொன்நிறமான திருச்சுண்ணப் பொடி இடிப்போமாக!

207) மின் இடைச் செந்துவர் வாய்க் கருங் கண்
வெள் நகைப் பண் அமர் மென் மொழியீர்
என்னுடை ஆர் அமுது எங்கள் அப்பன்
எம் பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண் முலை மங்கை நல்லீர்
பொன் திருச் சுண்ணம் இடித்தும் நாமே. 13

மின்னல் போன்ற இடையினையும், சிவந்த பவளம் போன்ற வாயையும், கரிய கண்களையும், வெள்ளைப் பற்களையும், இசைப்பண் போல் மொழிகளையும் உடைய பெண்களே! உண்டு பார்த்த எனக்கு ஆரமுதானவன். எங்கள் தந்தை. எங்கள் பெருந்தலைவன், இமயமலை அரசன் மகளாகிய உமாதேவிக்கு (உலகைப்படைக்கச் சிவமும் சக்தியுமான போது) கணவன். (சக்தியிலிருந்து சதாசிவம் தோன்றலால்) மகன். (சிவத்திலிருந்தே சக்தி வந்ததால்) தகப்பன். (ஞான சக்தியிலிருந்து சிவதத்துவமும் கிரியாசக்தியிலிருந்து சக்தி தத்துவமும் தோன்றுவதால்) தமையன். எம் குருநாதன், அவனுடைய திருவடிகளைப் பாடிப் பொன் அணிகள் பூட்டிய கொங்கைகளை உடைய நற்பெண்களே! பொன்கூட்டிச் செய்யப்பெற்ற சுண்ணத்தை இடிப்போமாக!

208) சங்கம் அரற்றச் சிலம்பு ஒலிப்பத்
தாழ் குழல் சூழ் தரும் மாலை ஆட
செங் கனிவாய் இதழும் துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம்பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடை முடியான் கழற்கே
பொங்கிய காதலில் கொங்கை பொங்கப்
பொன் திருச் சுண்ணம் இடித்தும் நாமே. 14

சிவபெருமானைச் சேரமாட்டாமையால் கைவளையல்கள் அரற்றவும், கால்சிலம்புகள் ஒலிக்கவும் மிக நீளமாகத் தாழ்ந்த கூந்தலைச் சுற்றியுள்ள மாலை ஆடவும், சிவந்த கோவைப்பழம் போன்ற இதழ்கள் துடிக்கவும், சிவந்த அணிகளை அணிந்த பெண்களே! சிவபெருமான் இருக்கும் சிவலோகம் பாடி, தலையிலுள்ள கங்கை இரைய, அதைக்கண்டு வேறொரு பாம்பு சீறுவதாக எண்ணித் திருமுடிமேல் உள்ள பாம்பு சீறும் படி உள்ள சடைமுடிகள் உடைய சிவபெருமான் திருவடிகளையே நினைத்து அவன் மேல் மிகுகின்ற காதலால் கொங்கைகள் விம்மப் பொன்னிறமான திருச்சுண்ணம் இடிப்போமாக!

209) ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்கு அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச் சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பு அறுத்து ஆண்டுகொண்ட
கூத்தனை நாத் தழும்பு ஏற வாழ்த்திப்
பானல் தடம் கண் மடந்தை நல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 15

ஞானமாகிய கரும்பிலிருந்து எடுக்கப்பெற்ற தெளிவான சாறு போன்றவனும், அதிலிருந்த காய்ச்சப்பெற்ற வெல்லப்பாகு போல் இனிப்பவனும், தேடிக்கிடைக்காத இன்பமானவனும், சுவைகுன்றாத்தேன் போன்றவனும், பழச்சுவை ஆனவனும், என் மனத்துள்தானே புகுந்து தித்திக்கின்ற தலைவனும், என் பிறவியை அறுத்து ஆட்கொண்ட கூத்தப்பெருமானும் ஆனவனை, நாவில் தழும்பேற்படுமாறு வாழ்த்தி, ஆனந்தக் கண்ணீர் சுரக்கும் நீலப்பூப்போல் அகன்ற கண்களை உடைய நல்ல பெண்களே! அவன் புகழ்பாடிப் பொற்சுண்ணம் இடிப்போமாக!

210) ஆவகை நாமும் வந்து அன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டு அறியாச்
செம் மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேவலன் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம் பொன் செய் சுண்ணம் இடித்து நாமே. 16

மலங்களால் கட்டப்பட்ட பசுவான நாமும் சிவஞானியர் ஆகும்படி வந்து அருள்செய்து, அன்பர்களோடு நாமும் திருவடிக்கு ஏவல் செய்யப் பணித்த முறைகளைப்பாடி, விண்ணுலகத் தேவர்கள் கனவிலும் காணமுடியாத திருவடிச் செந்தாமரைகளை நாம் உய்வதற்காக நமக்குக் காட்டும் திருவருட்செல்வனும், இடபந்தாங்கிய வெற்றிக்கொடியை உடையவனும் ஆகிய சிவபெருமான், முப்புரம் அழித்த வெற்றிவீரன் - அவனுடைய திருநாமங்களை மீண்டும் மீண்டும் பாடிச் செம்பொன் நிறமுள்ள சுண்ணப்பொடி இடிப்போமாக!

211) தேன் அக மா மலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச் சடைமேல்
வான் அக மா மதிப் பிள்ளை பாடி
மால் விடை பாடி வலக்கை ஏந்தும்
ஊன் அகம் மா மழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனகம் ஆக நஞ்சு உண்டல் பாடிப்
பொன் திருச் சுண்ணம் இடித்தும் நாமே. 17

தேன் மிகுந்த பெரிய கொன்றை மலர் மாலையைப் பாடி, அவனுடைய திருத்தலமான கயிலாயத்தைப் பாடி, அவன் திருச்சடையாகிய ஞானவெளியில் மதிமிக்க பிள்ளையாய் விளங்கும் பிறையைப்பாடி, அவனைத் தாங்கும் திருமாலாகிய பெரிய இடபத்தைப்பாடி, அவன் வலக்கையில் ஏந்தியிருக்கின்ற ஊன் பொருந்திய பெரிய மழு, சூலம் இவற்றைப்பாடி, தேவர்களும் மனிதர்களும் உயிர்பிழைத்துய்யுமாறு முன்னாளில் நஞ்சையே உணவாக உண்டதைப்பாடிப் பொன்திருச்சுண்ணம் இடிப்போமாக

212) அயன் தலை கொண்டு செண்டு ஆடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயம் தனைக் கொன்று உரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந் தனைப் பாடி நின்று ஆடி ஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 18

ஆணவமிக்க பிரமன் தலையைக் கையில் பூச்செண்டு போலத் திரித்து ஆடிய வீரச்செயலையும், தக்கயாகத்தில் கதிரவன் பல்லைப் பறித்ததையும், யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்தியதையும், காலனைக் காலால் உதைத்ததையும், பொருந்திய முப்புரங்களை அம்பு எய்து அழித்ததையும், அறிவற்ற எங்களையும் ஆட்கொண்ட நயமான திருவருட்கருணையையும் பாடிநின்று ஆடி ஆடி நம் தலைவனுக்குச் சுண்ணப்பொடி இடிப்போமாக!

213) வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழும் தென் தில்லை பாடிச்
சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைம்மேல்
இட்டு நின்று ஆடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே. 19

பிரணவ வட்டம் போல் இருக்கும் கொன்றைமலர் மாலையைப் பாடி, சிவபெருமானுக்கு உகந்த ஊமத்தம் பூவைப்பாடி, திருமுடியில் உள்ள சந்திரனைப்பாடி, மேலோர்கள் வாழ்கின்ற அழகிய தில்லைத் தலத்தைப்பாடி, அங்கே திருச்சிற்றம்பலத்தில் ஆடும் எங்கள் பெருஞ்செல்வமான சிவனைப்பாடி, அவன் அரையில் கட்டியுள்ள பாம்புக் கச்சையைப்பாடி, அவன் மணிக்கட்டில் உள்ள பாம்புக் கங்கணத்தைப்பாடி, கவிந்துள்ள கைமேல் ஊரவிட்டதால் தன் விருப்பம் போலாடும் பாம்பைப் பாடி, எம்மையாளும் சிவபெருமானுக்குச் சுண்ணம் இடிப்போமாக!

214) வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியும் ஆய் இருள் ஆயினார்க்குத்
துன்பமும் ஆய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியும் ஆய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமும் ஆய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப் பொற் சுண்ணம் இடித்தும் நாமே. 20

திருச்சிற்றம்பலம்

வேதமாகவும் அதனால் உணர்த்தப் படும் வேள்வியாகவும், ஆனவருக்கு, உண்மையும் பொய்யுமாக விளங்குபவருக்கு, சிவஞானியருக்கு ஒளியாகவும் அவஞானியருக்கு இருளாகவும் இருப்பவருக்கு, தீவினைப்பயனான துன்பமும் நல்வினைப்பயனான இன்பமும் ஆனவருக்கு, பாதியானசக்தியாகவும் முழுதுமான சிவசக்தியாகவும் காட்சியளிப்பவருக்கு, மறைப்புச்சக்தியால் உயிர்களைக் கட்டும் பந்தமாகவும் அதனின்றும் விடுவிக்கும் வீடாகவும் இருப்பவருக்கு, முதலானவற்றுக்கெல்லாம் முதலாகவும் இறுதியான எல்லாவற்றுக்கும் இறுதியாகவும் ஆன இறைவனுக்குத் திருமஞ்சனமாடப்பொடி இடிப்போமாக.



மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவம்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்து பின்னர்
இன்புருவம் ஆயினை நீ எழில் வாதவூர் இறையே

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நான் அடைதல் வியப்பன்றே

-இராமலிங்க அடிகள்

10.திருக்கோத்தும்பி

(தில்லையில் அருளியது) தரவுகொச்சகக் கலிப்பா

(பிரிவுத்துன்பத்தால் வாடும் மணிவாசகர், சிவனோடு ஐக்கியமாக வேண்டி, நறுமணமுள்ள பூவில் மட்டும் செல்லும் அரசவண்டாகிய கோத்தும்பியைத் தூதுவிடுத்தல்)

215) பூ ஏறு கோனும் புரந்தரனும் பொற்பு அமைந்த
நா ஏறு செல்வியும் நாரணனும் நான் மறையும்
மா ஏறு சோதியும் வானவரும் தாம் அறியாச்
சே ஏறு சேவடிக்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 1

அரசவண்டே! செந்தாமரை மலரில் ஏறியமர்ந்த நூலறிவு மிக்க நான்முகனும், போக வாழ்வுடைய இந்திரனும், எல்லாக்கலைகளுக்கும் இறைவியாய் அழகுமிக்கவளாய் நான்முகன் நாவில் ஏறியுள்ள கலைமகளும், நாராயணமூர்த்தியும், நான்கு வேதங்களும், இடபத்தில் ஏறிவரும் உருத்திரனும், மற்றுமுள்ள தேவர்களும் ஆகிய யாராலும் அறியப்படாதவனும் அறத்தின் வடிவமான இடபத்தில் ஏறிவருபவனுமாகிய சிவபெருமான் திருவடிக்கண் சென்று ஊதுவாயாக

216) நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர் என்னை யார் அறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல் மதி மயங்கி
ஊன் ஆர் உடை தலையில் உண் பலி தேர் அம்பலவன்
தேன் ஆர் கமலமே சென்று ஊதாய் கோத் தும்பீ. 2

தேவதேவனாகிய சிவபெருமான் என்னை வலியவந்து ஆட்கொள்ளாமல் இருந்திருப்பானானால், நான் யார்? என் மனம் யார்? நான் பெற்ற ஞானங்கள் யார்? இவ்வுலகில் என்னை யார் அறிவார்கள்? அறிவுதிரிந்து ஆணவம் கொண்ட பிரமனுடைய ஊன் நிரம்பிய உடைந்த தலையாகிய மண்டை ஓட்டில் உண்ணக்கூடிய பிச்சைப்பொருளை வைத்திருப்பவனாகிய திருச்சிற்றம்பலப் பெருமானுடைய தேன் நிறைந்த திருவடித் தாமரையில் சென்று அரசவண்டே! ஊதுவாயாக.

217) தினைத்தனை உள்ளது ஓர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்து எலும்பு உள் நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 3

அணுஅணுவாக மிகக்குறைவாகத் தினையளவு தேனுள்ள பூக்களில் தேனை உண்டு நீ வருந்தாதே. நினைக்கும் தோறும் காணும்தோறும், பேசும்தோறும் எப்போதும், எல்லா எலும்புகளும் உள்ளே உருகிநிற்க, ஆனந்தமான தேனைச் சொரிந்து கொண்டே இருக்கும் கூத்தப்பெருமானாகிய (தேனடையாய் இருப்பவனுக்கே) சென்று ஊதுவாயாக.

218) கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்டபின்
என்அப்பன் என்ஒப்பு இல்என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்து என்னை வா என்ற வான் கருணைச்
சுண்ணப் பொன் நீற்றற்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 4

நாள் ஆறில் கண்ணிடந்து அப்ப வல்ல கண்ணப்பரைப் போன்ற அன்பு என்னிடம் இல்லை என்பதைக் கண்டறிந்த பிறகும், என் தந்தையாகிய பெருமான், அன்பு செய்யாமல் இருப்பதில் ஒப்பற்றவனாகிய என்னையும் ஆண்டுகொண்டருளி, அழகாகக் கட்டளையிட்டு, என்னைத் தில்லைக்கு வருக என ஆணை வழங்கினான். அழகிய திருநீறணிந்த அப்பெருமானுக்கே சென்று ஊதுவாயாக!

219) அத் தேவர் தேவர் அவர் தேவர் என்று இங்ஙன்
பொய்த் தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்து ஏதும் இல்லாது என் பற்று அற நான் பற்றி நின்ற
மெய்த் தேவர் தேவர்க்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 5

"அத்தேவரே தேவர் அவரே யாவர்க்கும் தெய்வம்" என்று தமது சிற்றறிவால் பொய்யான தேவர்களைப் புகழும் மக்கள் வாழும் பூமியில் , அகப்பற்று புறப்பற்று ஏதுமில்லாமல், என் பற்றுக் களிலிருந்து நான் நீங்கி உய்வதற்காக, நான் பற்றி நின்ற மெய்யான தெய்வமாகிய சிவபெருமானிடத்தில் சென்று ஊதுவாயாக!

220) வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பு என்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 6

தேனைத் தொகுத்துவைத்திழக்கும் வண்டு போலத் தேடிக்குவித்து வைத்த செல்வம், இன்பக்கலனாகக் கருதும் பெண்கள், பெற்ற பிள்ளைகள், தன்னலம் தலைதூக்கத் தமக்கும் தம்மைச் சார்ந்தவர்க்கும்

மட்டுமே நன்மை செய்யும் குடிப்பிறப்பு, வயிறு வளர்க்கக் கற்ற கல்வி, என்னும் இவற்றின் மீது கொண்ட பற்றின் முதிர்ச்சியால் பித்துக்கொண்டு தடுமாறும் உலகில், பிறப்பு இறப்பு என்னும் சுழற்சியும் சேருவதால் வந்த மனவிகாரத்தையும் அதனால் விளைந்த கலக்கத்தையும் தெளிவித்த பேரறிவுடைய பெருமானுக்கே சென்று ஊதுவாயாக!

221) சட்டோ நினைக்க மனத்து அமுது ஆம் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரை நாம் உரு அறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத் தும்பீ. 7

விரைந்து நினைக்கும் போதெல்லாம் மனத்தில் அமுதமாக இனிக்கின்ற சங்கரனாகிய பெருமானை, கெட்டறிந் தவனாகிய நான் மறப்பேனோ? அடியார்களுக்குக் கேடுவரச் செய்யாத திருவடிகளோடு பொருந்தி வாழாமல், உலகச் சார்பினால் பாவங்களையே செய்துழலும் பாவிகளாகிய அடிமைகளின் உருவத்தைக் கூட நாம் அறியமாட்டோம். எனவே பெரியவர்களுக்கெல்லாம் பெரியவனாகிய மகாதேவனுக்கே சென்று ஊதுவாயாக

222) ஒன்று ஆய் முளைத்து எழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்று ஆக வைத்து என்னை நாய் சிவிகை ஏற்றுவித்த
என் தாதை தாதைக்கும் எம் அனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 8

சிவம் என்னும் ஒரு பொருளாய் அறிவிற்குப் புலப்படும் படி முளைத்துத் தோன்றி, அதிலிருந்து பல கிளைகளைவிட்டுப் பருமையுற்று, என்னை நல்லவழியில் வாழ்வித்து இந்தநாயைப் பல்லக்கில் ஏற்றிவைத்த என் தந்தைக்குத் தந்தைக்கும் என் தாய்க்கும் தனித்தலைவன், குறைதலும் அழிதலும் இல்லாத வீட்டின்பமான செல்வத்தை உடையவனுக்கே சென்று ஊதுவாயாக!

223) கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறை மிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தான் எனக்கு
மரணம் பிறப்பு என்று இவை இரண்டின் மயக்கு அறுத்த
கருணைக் கடலுக்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 9

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புறக்கரணங்களும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் எனும் உட்கரணங்களும்

அறியமாட்டாமல் அவற்றைக் கடந்து விளங்கும் நீலகண்டனுடைய திருவடிகளே அடைக்கலமென்று நான் சென்றடைந்ததும், எனக்கு மரணம் அதன்பின் வரும் பிறப்பு இவற்றால் விளையும் மனமயக்கத்தைப் போக்கிய கருணைக்கடலாகிய சிவபெருமானுக்கே சென்று ஊதுவாயாக!

224) நோய் உற்று மூத்து நான் நுந்து கன்றாய் இங்கு இருந்து
நாய் உற்ற செல்வம் நயந்து அறியா வண்ணம் எல்லாம்
தாய் உற்றுவந்து என்னை ஆண்டுகொண்ட தன் கருணை
தேய் உற்ற செல்வற்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 10

நான் பலவகையான நோய்களுக்காளாகி, அதனால் மூப்பு வந்து, உழவரால் உழவுக்கு ஆகாது என்று ஒதுக்கப்பட்ட கன்றைப் போல் இங்கிருந்து, நாய்பெற்ற செல்வம் போல என்னை யாரும் விரும்பி அறியாத சமயத்தில், இழிவை நோக்காது அன்பினால் ஆட்கொள்ளும் தாய் போல வந்து என்னை ஆட்கொண்டு அருளிய பெருங்கருணையான ஒளிவீசும் செல்வப்பெருமானுக்கே சென்று ஊதுவாயாக!

225) வல் நெஞ்சக் கள்வன் மன வலியன் என்னாதே
கல் நெஞ்சு உருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னம் திளைக்கும் அணி தில்லை அம்பலவன்
பொன் அம் கழலுக்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 11

கள்ளத்தால் வன்னெஞ்சம் பெற்றவன், மேலும் மேலும் தவறு செய்யும் மனவலிமை மிக்கவன் என்று எண்ணாமல், என் கல்நெஞ்சை உருகவைத்துக் கருணை செய்து ஆட்கொண்டவன், அன்னப்பறவைகள் கூடித் திளைக்கும் அழகிய தில்லையம் பலத்தான், அவனுடைய பொன் போன்ற (தூக்கிய) திருவடிக்கே சென்று ஊதுவாயாக

226) நாயேனைத் தன் அடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமையனைச்
சீ ஏதும் இல்லாது என் செய் பணிகள் கொண்டருளும்
தாய் ஆன ஈசற்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 12

(தானாகவே இறைவன் புகழ்பாடும் ஞானம் பெறாத) நாயைப் போன்ற மிகக் கீழானவனான என்னைத் தன் திருவடிகளைப் பற்றியே பாடச் செய்த தலைவனும், பேய் போலக் கொண்டதைப்பற்றி நிற்கும்

கொடுமையும் நல்லோரைத் துன்புறுத்தும் இயல்பும் உள்ள என்னுடைய மனம், வாக்கு, காயங்களால் நான் செய்யும் குற்றங்கள் அனைத்தையும் பொறுத்தவனும் பெருந்தன்மை உடையவனும் என்னுடைய சிறிய தொண்டுகளைச் சீயென்று வெறுக்காமல் ஏற்றுக்கொள்பவனும், ஆகிய தாயன்பும் தலைமைப் பண்பும் உடைய தாயுமானவன் பாற்சென்று ஊதுவாயாக

227) நான் தனக்கு அன்பு இன்மை நானும் தானும் அறிவோம்
தான் என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாம் அறிவார்
ஆன கருணையும் அங்கு உற்றே தான் அவனே
கோன் என்னைக் கூடக் குளிர்ந்து ஊதாய் கோத் தும்பீ. 13

நான் இறைவனிடம் அன்பில்லாதவன் என்பதை நானும் அவனுமே அறிவோம். ஆனால் அவன் வலிய வந்து என்னை ஆட்கொண்டதை உலக மக்கள் எல்லோரும் அறிவார்கள். இப்படி ஆட்கொண்ட கருணையும் அவனிடத்ததே ஆகும். அவனே என் தலைவன். அவன் என்னைக் கூடிவாழ்விக்குமாறு அவன்பால் சென்று குளிர்ச்சியோடு ஊதுவாயாக!

228) கரு ஆய் உலகினுக்கு அப்புறம் ஆய் இப் புறத்தே
மரு ஆர் மலர்க் குழல் மாதினொடும் வந்தருளி
அரு ஆய் மறை பயில் அந்தணன் ஆய் ஆண்டு கொண்ட
திரு ஆன தேவற்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 14

ஊழிக்காலத்துக்குப்பின் உலகம் மீண்டும் தோன்றக் காரணமான மூலமாய், உலகைக்கடந்து நிற்கும் அப்புறமாய், உலக உயிர்களை ஆட்கொள்வதற்காக மணமிக்க மலர்க்குழலாள் உமையோடும், (தானும் தன் தையலுமாய்) எழுந்தருளி, ஞானவடிவில் அருவமாகி, வேதமோதும் அந்தணனாய் வந்து என்னை ஆட்கொண்ட சிவஞானச் செல்வமான தேவனுக்கே நீ சென்று ஊதுவாய் கோத்தும்பீ.

229) நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ் விடத்தோம்
தானும் தன் தையலும் தாழ் சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும் மா கடலும் ஆய பிரான்
தேன் உந்து சேவடிக்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 15

தானும் தன்னைப்பிரியாத அருட்சக்தியான உமையவளுமாக எழுந்தருளிவந்து, தாழ்ந்து தொங்குகின்ற சடையை உடைய

சிவபெருமான் என்னை ஆட்கொள்ளாவிட்டால், நானும் என் மனமும் நாயகனை விட்டு எவ்வளவு தூரம் விலகிப் போயிருப்போம்! அந்தத் திருவருள் மீண்டும் கிடைக்க, வான்வெளியும், திக்குகளும் பெருங் கடலுமாய் விளங்கும் பெருமானுடைய தேன்சொரியும் தாமரையாம் திருவடிக்கே சென்று ஊதுவாயாக! (உனக்கும் பேரின்பத் தேன் கிடைக்கும்)

230) உள்ளப்படாத திரு உருவை உள்ளுதலும்
கள்ளப்படாத களி வந்த வான் கருணை
வெள்ளப்பிரான் எம்பிரான் என்னை வேறே ஆட்
கொள் அப் பிரானுக்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 16

உணர்த்தினாலன்றி உணராத என் உள்ளத்தினால் நினைக்கவும் முடியாத அவன் ஞானத்திருமேனியை அவனருளே துணைசெய்ய நினைக்கும் பொழுது கள்ளினால் விளையாத பெருங்களிப்பு உண்டாகிறது. இந்தப் பேரின்பத்தைத் தந்த வானுயர்ந்த கருணை வெள்ளத்தை உடைய தலைவன், எம்பெருமான், என்னை அடியார் கூட்டத்தோடு சிவச்சோதியில் கலக்கவிடாமல், தில்லைக்குவா என்று வேறுபடுத்தி ஆட்கொண்டபெருமான், அவன் பக்கம் சென்று ஊதுவாயாக!

231) பொய் ஆய செல்வத்தே புக்கு அழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா என் ஆர் உயிரே அம்பலவா என்று அவன் தன்
செய் ஆர் மலர் அடிக்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 17

மணியும் தங்கமும் மாடும் வீடும் என்று, தோன்றி மறையும் நிலையற்ற செல்வத்தில் புகுந்து, புதை சேற்றில் அகப்பட்டார் போல் அதிலேயே அழுந்தி, நாளெல்லாம் அதனையே மெய்யானது என்று எண்ணி அறிவு மயங்கிக் கிடந்த என்னை ஆட்கொண்ட ஐயனே! என் உயிருக்கு உயிரானவனே! அம்பலத்தில் ஆடும் பெருமானே! என்று நான் பாராட்டுவது போலவே நீ பாராட்டிச் சென்று அவன் சிவந்த மலர்த்திருவடிக்கே ஊதுவாய் கோத்தும்பீ!

232) தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால் வெள்ளை நீறும் பசும் சாந்தும் பைங் கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய் கோத் தும்பீ. 18

வலப்புறம் புலித்தோல் இடப்புறம் பட்டாடை; வலப்புறம் குண்டலம் இடப்புறம் சுருண்ட தோடு; வலப்புறம் பால் போன்ற வெண்ணீறும் பசுமையுறு சந்தனமும் இடப்புறம் பச்சைக்கிளி; வலப்புறம் சூலம் இடப்புறம் தொகுதியான மங்கல வளையல்கள் என்று உலகப்படைப்புக்குக் காரணமான மிகப்பழைய உமையொரு பாதியனாகிய திருக்கோலத்தைக் கண்டு, அந்த மகிழ்ச்சியால் குளிர்ந்து ஊதுவாய் கோத்தும்பீ

233) கள்வன் கடியன் கதி இவன் என்னாதே
வள்ளல் வரவர வந்து ஒழிந்தான் என் மனத்தே
உள்ளத்து உறு துயர் ஒன்று ஒழியா வண்ணம் எல்லாம்
தெள்ளும் கழலுக்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 19

உடையவன் அறியாமல் உடைமையைத் திருடும் கள்வன், கொடுமை மிக்க கடியன், தீயகுணங்கள் கொண்ட கீழ்மகன் என்று என்னைத் தள்ளிவிடாமல், கருணைவள்ளலான சிவபெருமான் கொஞ்சம் கொஞ்சமாக என் மனத்தே குடிபுகுந்து மற்ற சிந்தனைகள் புகாவண்ணம் ஒழித்துத் தானே முழுவதுமாய்த் தங்கினான். அதனால் என் உள்ளத் துயரங்கள் எவையும் தப்பிவிடாமல், தெளிவாகத் துடைத்தான். அவன் திருவடிகளுக்கே சென்று ஊதுவாயாக

234) பூ மேல் அயனோடு மாலும் புகல் அரிது என்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசு இட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீ மேனியானுக்கே சென்று ஊதாய் கோத் தும்பீ. 20

(செல்வக்குழந்தையைப்பார்த்து ஏழைக்குழந்தை ஏமாற்றம் அடைவது போல்,) தாமரைப்பூவில் இருக்கும் பிரமனும், அவனைப்படைத்த திருமாலும் நம்மால் அடைய முடியாதது சிவப்பேறு என்று ஏமாற்றம் அடைந்து நிற்க, அந்தப் பேறுபெற்ற அடியேன் (உயிருக்கு இயல்பான) இறுமாப்புக் கொள்ள, யானை மேல் வைக்க வேண்டிய அம்பாரியை நாய்மேல் வைத்தது போல, நான் நன்மை அடைவதற்காக என்னையுமோர் பொருளெனக் கருதி ஆட்கொண்ட தீப்போலும் ஒளி மேனிச் செல்வனுக்கே சென்று ஊதுவாய் கோத்தும்பீ.

11.திருத்தெள்ளேணம்

தில்லையில் அருளியது நாலடித்தரவுக்கொச்சகக்கலிப்பா

(சிவனுடன் கலந்து இடையறாது நிற்பதற்காக, அவன் புகழ்பாடி மங்கையர் கும்மி கொட்டும் பாடல்)

235) திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத் திருவடியை
உரு நாம் அறிய ஓர் அந்தணன் ஆய் ஆண்டுகொண்டான்
ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திரு நாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ. 1

திருமாலும், பன்றி வடிவெடுத்துத் தேடி உணரமாட்டாத திருவடியின் உருவத்தை, நாம் அறியுமாறு ஒப்பற்ற அந்தணனாவதும் காட்டிவந்தாண்டவனும். அடையாளத்துக்கு ஒரு பெயரும், காட்சிதர ஓர் உருவமும், உடைமையாக ஒரு பொருளும் இல்லாதவனும் ஆகிய இறைவனுக்கு, நம் விருப்பப்படி ஆயிரக்கணக்கான பெயர்களைக் கூறித் தெள்ளேணம் கொட்டுவோமாக.

236) திரு ஆர் பெருந்துறை மேய பிரான் என் பிறவிக்
கரு வேர் அறுத்தபின் யாவரையும் கண்டது இல்லை
அரு ஆய் உருவமும் ஆய பிரான் அவன் மருவும்
திருவாரூர் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ. 2

சேர்ந்தவருக்குச் சிவனருட்செல்வம் தரும் திருப் பெருந்துறையில் எழுந்தருளியுள்ள பெருமான் தன் பிறவிக்குக் காரணமான ஆகாமிய சஞ்சித வினைகளை வேரொடும் அறுத்த பிறகு, நான் உறவு என்று யாரையும் கண்டதில்லை. (எல்லோரும் இறைவனாகவே காட்சியளிக்கிறார்கள்) அனுபவத்தில் அருவாகவும் ஆண்டருள உருவாகவும் வரும் பெருமான் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருவாரூரைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக.

237) அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்து அன்றி நின்ற சிவம் வந்து நம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பது கேட்டு உலகம் எல்லாம்
சிரிக்கும் திறம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 3

திருமாலுக்கும் பிரமனுக்கும் ஏனைய தேவர்களுக்கும் (தெரிந்து கொள்ளும் சிவபுண்ணியம் இன்மையால்) தெரிவிக்க ஒண்ணாத சிவம்,

தானே வலிய வந்து, நம் மனத்தை உருக்கும் நம் பணிகளை மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளும் என்று நாம் கூறுவதைக் கேட்டு (எள்ளி நகையாடி இப்படியும் நடக்குமா என்று) உலகமக்களெல்லாம் சிரிக்கும் தன்மையைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோமாக

238) அவம் ஆய தேவர் அவ கதியில் அழுந்தாமே
பவ மாயம் காத்து என்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவம் ஆய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து
சிவம் ஆனவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 4

திருக்கயிலை சென்று சிவவழிபாடு செய்யும் வாய்ப்பிருந்தும் அப்படிச் செய்யாமல் வீணான தேவர்களின் கீழான வழியில் சென்று அதிலேயே அழுந்தாமல், பிறவிக்குக் காரணமான வினைகளிலிருந்து என்னைக் காப்பாற்றி ஆட்கொண்ட ஒளி வடிவாகிய பெருமான், புதுமையான சிவஞான ஒளியை அருளியதால், நாம் என்ற ஆணவம் ஒழிந்து, சீவன் குறுகிச் சிவமான செயலைப்பாடித்தெள்ளேணம் கொட்டுவோமாக

239) அருமந்த தேவர் அயன் திருமாற்கு அரிய சிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பு எய்தக் கொண்டருளிக்
கரு வெந்து வீழக் கடைக்கணித்து என் உளம் புகுந்த
திரு வந்தவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 5

கிடைத்தற்கரிய அமுதம் போன்ற தேவர்களுக்கும் பிரமன் திருமால் முதலியவர்களுக்கும் அறிந்துணர்வதற்கு அரிய சிவபெருமான், திருமேனி தாங்கிவந்து, பூமியிலுள்ள மக்கள் கண்டு மகிழ என்னை ஆட்கொண்டருளி, என் பிறவிக்குக் காரணமான வினையாகிய கரு, வெந்து போய் இனி விளையாதபடித் திருவருள் செய்து, என் உள்ளக் கோயிலில் புகுந்து, சிவஞானச் செல்வமாகத் திகழ்வதைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோமாக

240) அரை ஆடு நாகம் அசைத்த பிரான் அவனியின்மேல்
வரை ஆடு மங்கை தன் பங்கொடும் வந்து ஆண்டதிறம்
உரை ஆட உள் ஒளி ஆட ஒள் மா மலர்க் கண்களில் நீர்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 6

எப்போதும் ஆடுகின்ற பாம்பைத் திருவரையில் அசையாதவண்ணம் அரைஞாணாகக் கட்டிய பெருமான் மலையரசன்

மகிழ்ந்து கொண்டாடும் மங்கையாகிய பார்வதியை இடப்பாகத்தில் கொண்டு மாதொரு பாதியனாய் வந்து ஆட்கொண்ட தன்மையை, உரைதடுமாறவும், உள்ளத்தில் ஒளி அதிகமாகவும், மலர்க்கண்களில் ஆனந்தக் கண்ணீர் திரைபோட்டது போல் மறைத்துத் ததும்பி நிற்கவும் பாடித் தெள்ளேணம் கொட்டுவோமாக!

241) ஆ வா அரி அயன் இந்திரன் வானோர்க்கு அரிய சிவன்
வா வா என்று என்னையும் பூதலத்தே வலிந்து ஆண்டு கொண்டான்
பூ ஆர் அடிச் சுவடு என் தலைமேல் பொறித்தலுமே
தே ஆனவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 7

ஆ! ஆ! திருமால் பிரமன் இந்திரன் முதலிய வானோர்க்கு அறிதற்கரிய சிவபெருமான் பூமிக்கு வந்து ஒன்றுக்கும் பற்றாத என்னையும் வா வா என்று அழைத்து வற்புறுத்தி அடிமையாக்கி ஆட்கொண்டான். திருவடி தீட்சை செய்து மலர் போன்ற திருவடியை என்தலை மேல் சூட்டியதும் நான் சிவபோத மிகுந்து தெய்வத்தன்மை பெற்றேன். (இந்த அருட் செயலைப் பாடி) நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

242) கறங்கு ஓலை போல்வது ஓர் காயப் பிறப்போடு இறப்பு என்னும்
அறம் பாவம் என்று இரண்டு அச்சம் தவிர்த்து என்னை ஆண்டு கொண்டான்
மறந்தேயும் தன் கழல் நான் மறவா வண்ணம் நல்கிய அத்
திறம் பாடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ. 8

வேகமாகச் சுற்றும் ஓலைக் காற்றாடியின் இதழ்கள் ஒரே வட்டமாகத் தோன்றுவது போல, உடலுக்கு மீண்டும் மீண்டும் வரும் பிறப்பு இறப்பு என்னும் அச்சம், அப்பிறவி எடுக்கக் காரணமான அறம், பாவம் என்ற அச்சம் என்று இரண்டு அச்சங்களையும் போக்கி என்னை ஆட்கொண்டான் எம்பெருமான். மறந்து கூட அவன் திருவடிகளை நான் மறக்காதபடி தன் திருவடிகளை நல்கிய அவன் திறமையைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக

243) கல் நார் உரித்து என்ன என்னையும் தன் கருணையினால்
பொன் ஆர் கழல் பணித்து ஆண்ட பிரான் புகழ் பாடி
மின் நேர் நுடங்கு இடை செந்துவர் வாய் வெள் நகையீர்
தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டாமோ. 9

கல்லில் நார் உரித்தது போல, கசியா மனத்துக் கடைப்பட்ட என்னையும், தன் பெருங்கருணையால் பொன் போல் போற்றத்தக்க திருவடிகளைத் தந்து ஆண்டவன் எம்பெருமான். அவன் புகழைப் பாடி மின்னற்கொடி இடையும், செம்பவளவாயும், வெண்பற்களும் கொண்ட தோழிகளே! தென்னவனாகிய சிவனைத் தென்னா தென்னா என்று வாய்மணக்க அழைத்துத் தெள்ளேணம் கொட்டுவோமாக.

244) கனவேயும் தேவர்கள் காண்பு அரிய கனை கழலோன்
புன வேய் அன வளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே எனைப் பிடித்து ஆட்கொண்டவா நயந்து நெஞ்சம்
சின வேல்கண் நீர் மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ. 10

கனவில் கூடத் தேவர்களால் காணமுடியாதவன். வீரக் கழலணிந்த சிவபெருமான், புனத்தில் உள்ள மூங்கில் போன்ற தோள்களை உடைய பராசக்தியோடும் என் மனத்தில் புகுந்து அருள்செய்து, விழிப்பு நிலையிலேயே என்னை வளைத்துப் பிடித்து வலியவந்து ஆட்கொண்ட பெருங்கருணையை மனத்தால் மிக விரும்பி, சிறிய வேல் போன்ற கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்கி நிற்கத் தெள்ளேணம் கொட்டுவோமாக

245) கயல் மாண்ட கண்ணி தன் பங்கன் எனைக் கலந்து ஆண்டலுமே
அயல் மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு அவனியின்மேல்
மயல் மாண்டு மற்று உள்ள வாசகம் மாண்டு என்னுடைய
செயல் மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 11

கண்ணால் நோக்கி முட்டைகளைப் பொரித்துக் குஞ்சாக்கி வளர்க்கும் மீன் போல, திருவருள் நோக்கினால் உயிர்களின் அறியாமையைப் போக்கி ஞானம் தரும் கண்களை உடைய உமாதேவியைப் பங்கிலுடைய சிவபெருமான் என்னுயிரில் கலந்து ஆட்கொண்டதுமே, என்வீடு என்பொருள் என்ற புறச்சார்பு கெட்டு, வினைகளுக்குத் தக்கவாறு என்னைச் சுற்றிய உறவுகளும் கெட்டு, மண்ணாசையும் கெட்டு, தூற்றதலும் போற்றுதலுமாகப் பிறர் கூறும் பேச்சுக்களும் கெட்டு, தற்போத முனைப்பால் நான் செய்யும் செயல்களும் கெட்டதைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோமாக

246) முத்திக்கு உழன்று முனிவர் குழாம் நனி வாட
அத்திக்கு அருளி அடியேனை ஆண்டு கொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ் சோதி
தித்திக்குமா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 12

இறைவனோடு ஒன்றியிருக்கும் முத்தி இன்பத்தை அடைய வேண்டிப் பலகாலும் தவம் செய்து முனிவர் கூட்டங்கள் மிகவும் வருந்த, மதுரையம்பதியில் வெள்ளையானைக்கு அருள்செய்து, அங்கேயே என்னையும் ஆண்டுகொண்டதால், பக்தி என்னும் அன்புக்கடலில் என்னைப் பதியச்செய்த சோதிவடிவமான சிவம், எப்பொழுதும் தித்திப்பதைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

247) பார் பாடும் பாதாளர் பாடும் விண்ணோர் தம் பாடும்
ஆர் பாடும் சாரா வகை அருளி ஆண்டு கொண்ட
நேர் பாடல் பாடி நினைப்பு அரிய த்னிப் பெரியோன்
சீர் பாடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ. 13

ஆணவத்தின் சேர்க்கையால் பிறந்திறந்துழலும் மண்ணுலகத்தார் பக்கமும், பாதாளத்தில் உள்ளவர்கள் பக்கமும், விண்ணோர் பக்கமும், மற்றுமுள்ள எவர் பக்கமும் சார்ந்து கெட்டுப்போகாமல் எனக்கு வழிகாட்டி ஆட்கொண்டதால், நேருக்கு நேராக யான் பெற்ற அனுபவங்களைப் பாடி, நினைப்பிற்கெட்டாத ஒப்பற்ற பெரியோனாகிய சிவபெருமான் புகழ்பேசும் பாடல்களைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

248) மாலே பிரமனே மற்று ஒழிந்த தேவர்களே
நூலே நுழைவு அரிய நுண்ணியன் ஆய் வந்து அடியேன்
பாலே புகுந்து பரிந்து உருக்கும் பாவகத்தால்
சேல் ஏர் கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ. 14

(உணர்த்த உணரும் சிற்றறிவான பசுஞானமுடைய) மாலும், நான்முகனும், மற்றுமுள்ள தேவர்களும், பாசஞானமாகிய அறிவுதரும் நூற்களும், அறியமுடியாத இறைவன், ஏற்பானாகிய அடியேனும் அறியமுடியாதபடி மிக நுட்பமானவனாய் என்முன் வந்து என்பால் புகுந்து, கருணையால் ஆண்டு, மனமுருகத் தியானிக்க வைத்துத் தன்னை அறிய வைத்த தன்மையால், மீன் போன்ற கண்களில் ஆனந்தக் கண்ணீர் தளும்பத் தெள்ளேணம் கொட்டுவோமாக

249) உருகிப் பெருகி உளம் குளிர முகந்து கொண்டு
பருகற்கு இனிய பரம் கருணைத் தடம் கடலை
மருவி திகழ் தென்னன் வார் கழலே நினைந்து அடியோம்
திருவைப் பரவி நாம் தெள்ளேணம் கொட்டாமோ. 15

காதலாகிக் கசிவதால் மனம் உருகியும், இறைக்காட்சி கிடைத்த மகிழ்ச்சியால் உடல் பூரித்தும், இதனால் உள்ளம் குளிர, இருகைகளாலும் குடிப்பதற்கினிய கருணைக்கடலான இறைவனை அள்ளிப் பருகி, ஆரத்தழுவி, சோமசுந்தர பாண்டியனுடைய வீரக்கழலணிந்த திருவடிகளையே நினைந்து, இப்படிப் பரமானந்தம் பெறக் காரணமாக நாம் செய்த புண்ணியப் பேற்றைப் புகழ்ந்து தெள்ளேணம் கொட்டுவோமாக

250) புத்தன் புரந்தர ஆதியர் அயன் மால் போற்றி செயும்
பித்தன் பெருந்துறை மேய பிரான் பிறப்பு அறுத்த
அத்தன் அணி தில்லை அம்பலவன் அருள் கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணம் கொட்டாமோ. 16

பேரறிவு வடிவானவன்; இந்திரன் பிரமன் திருமால் முதலிய தேவர்கள் வணங்க, அவர்களுக்குப் பகை நீக்கமும், அமுதமும் அளிக்கும் பித்தன் திருப்பெருந்துறையில் எழுந்தருளிய பெருமான், என்பிறவிவேர் அறுத்த தலைவன். அழகிய தில்லையில் அம்பலத்தாடலான். அவன் திருவருளான திருவடிகள் என் மனத்தில் புகுந்த செயலைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக.

251) உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரம் ஆம்
சவலைக் கடல் உளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலை கெடுத்துக் கழல் இணைகள் தந்தருளும்
செயலைப் பரவி நாம் தெள்ளேணம் கொட்டாமோ. 17

பயன் தராத பொய்யான சமயங்களும், ஒன்றுக்கொன்று முரண்படும் சாத்திரங்களும் ஆகிய வளர்ச்சியற்ற பெருங்கடலில் வீழ்ந்து கரைகாண முடியாமல் தடுமாறக்கூடிய என் கவலையைப் போக்கித் தன் திருவடிகள் தந்தருளும் சிவபெருமான் அருட்செய்கையைப் போற்றி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக

252) வான் கெட்டு மாருதம் மாய்ந்து அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டல் இன்றிச் சலிப்பு அறியாத் தன்மையனுக்கு
ஊன் கெட்டு உயிர் கெட்டு உணர்வுகெட்டு என் உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ. 18

மண் நீரினால் அழிய, நீர் தீயினால் வற்ற, தீ காற்றினால் அணைய, காற்று வானில் அடங்க, அந்த வானமும் அழிந்தாலும்,

தான் மட்டும் கெடுதலின்றி அசைவற்று இருக்கும் சிவபெருமான் திருவருளுக்கு ஆளானதால், என் ஊனுடம்பு கெட்டுச் சிவதேகமாக, என் உயிர் கெட்டுச் சிவமாக, உணர்வு கெட்டுச் சிவமயமாக, ஆசைமயமான என் உள்ளம் சிவன் திருக்கோயிலாக, நான் என்ற தன்முனைப்பும் கெட்டு எல்லாம் சிவமெனக் காணும் பக்குவம் பெற்றதைப் பாடித் தெள்ளேணம் கொட்டுவோமாக!

253) விண்ணோர் முழு முதல் பாதாளத்தார் வித்து
மண்ணோர் மருந்து அயன் மால் உடைய வைப்பு அடியோம்
கண் ஆர வந்து நின்றான் கருணைக் கழல் பாடி
தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டாமோ. 19

முதற்கடவுள் என்று பேசும் தேவர்களுக்கு முழுமுதல் கடவுள்; உலகைத் தாங்குவதாக நினைக்கும் பாதாளத்தாருக்கு அவர்களை உண்டாக்கிய வித்து, மண்ணுலக மக்களின் பிறவிப்பிணிக்கு மருந்து. பிரமனுக்கும் திருமாலுக்கும் அசுரரால் துன்பம் வரும் போது காப்பாற்றும் சேமநிதி. இத்தகைய சிவபெருமான் அடியவர்களான எங்கள் கண் பார்க்கக் குருந்தடியிலும் குதிரை மேலும் வைகை மண்ணிலும் நேரே வந்து நின்றான். அவன திருவருள் மயமான திருவடிகளைப் பாடித் தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டுவோமாக

254) குலம் பாடிக் கொக்கு இறகும் பாடிக் கோல் வளையாள்
நலம் பாடி நஞ்சு உண்டவா பாடி நாள்தோறும்
அலம்பு ஆர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பு ஆடல் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ. 20

திருச்சிற்றம்பலம்

தனக்கெனக் குலமில்லாமல் தொண்டர்கூட்டத்தையே தன்குலமாகக் கொண்ட இறைவனுடைய குலத்தைப் பாடி, அவன் அணியும் கொக்கிறகு என்று பூவைப்பாடி, திரண்ட வளையல்களை அணிந்த அருள் சக்தியான உமாதேவியின் அழகைப்பாடி, தேவர்கள் வாழநஞ்சுண்டமைந்த பெருங்கருணையைப் பாடி, அசைகின்ற நீர்சூழ்ந்த தில்லையம்பலத்தில் ஐந்தொழில் புரிய, பரநாத வடிவான சிலம்பணிந்து ஆடும் திருநடனம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோமாக!

12.திருச்சாழல்

தில்லையில் அருளியது தரவுகொச்சகக்கலிப்பா

(புத்தர்கள் கேட்ட வினாக்களுக்கு விடையளிப்பதற்காக, மாணிக்கவாசகர் அதே வினாக்களைக் கேட்க, இலங்கை மன்னன் மகள் பேச்சுவராத பெண் - பேசும் ஆற்றலும் பெரும் ஞானமும் பெற்று விடையளிக்கச் சிவனுடைய காருண்யத்தையும் பேராற்றலையும் உணர்த்தும் பகுதி இது) திருச்சாழல் மகளிர் ஆடும் ஒருவகை விளையாட்டு

255) பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கு அரவம்
பேசுவதும் திருவாயால் மறை போலும் காண் ஏடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு என்னை
ஈசன் அவன் எவ் உயிர்க்கும் இயல்பு ஆனான் சாழலோ.1

சிவபெருமான் திருமேனியில் பூசுவது வெண்ணீறு. அணிகளாக அணிந்திருப்பது சீறுகின்ற பாம்புகள். அழகிய வாயால் அவன் பேசுவது வேதங்கள். (எல்லாம் வல்ல இறைவனுக்கு இவை ஏன்) - இது வினா.

அவன் பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டதால் அவனுக்கென்ன பயன்? ஒன்றுமில்லை. அவன் எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்ட ஈசன். எல்லாஉயிர்களிலும் இயல்பாகவே விளங்குபவன். வெண்ணீறு சர்வ சங்காரத்துக்குப் பின்னாலும் அவன் இருக்கும் முழுமுதல் தன்மையையும், வேள்வியில் வந்த பாம்புகளை அணிவது மந்திரங்கள் வேள்விகள் எல்லாம் அவனே என்பதையும், வேதங்களைப் பேசுவது தகராகாசமான சிதம்பரத்தில் நடராசர் திருமேனியில் எழுந்த நாதம் மந்திரமாக, அவன் கூறும் வாக்குகளே வேதம் என்பதையும் உணர்த்துகின்றன) - இது விடை.

256) என் அப்பன் எம் பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளும் அது என்? ஏடீ
மன்னு கலை துன்னுபொருள் மறை நான்கே வான் சரடா
தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ. 2

என் தந்தை என் தலைவன் எல்லார்க்கும் ஈசன், தைக்கப்பெற்ற துணியைக் கோவணமாகக் கொண்டிருக்கிறானே அது ஏன் - இது வினா.

(அதுதுணிக் கோவணமல்ல) என்றும் அழியாத கலைஞானத்தையே பெரிய அரைஞாண் கயிறாகவும்பொருள் பொதிந்த நான்கு வேதங்களையும் கோவணமாகவும் சாத்தினான் (இது விடை)

257) கோயில் சுடுகாடு கொல் புலித் தோல் நல் ஆடை
தாயும் இலி தந்தை இலி தான் தனியன் காண் ஏடி
தாயும் இலி தந்தை இலி தான் தனியன் ஆயிடினும்
காயில் உலகு அனைத்தும் கல் பொடி காண் சாழலோ. 3

இறைவனுக்குச் சுடுகாடுதான் கோயில். கொல்லும் தன்மைவாய்ந்த புலியின் தோல் தான் நல்ல ஆடை. தாயுமில்லை. தந்தையுமில்லை. தான் மட்டும் தனியாக இருக்கிறானே இது என்னடி? - இது வினா

அவன் தாய் தந்தை இல்லாமல் தனியாய் இருப்பதால் (ஆற்றல் அற்றவன் என்று எண்ணாதே) அவன் சினப்பான் ஆனால், உலகமெல்லாம் கல்பொடியாய்ப் போய்விடும் - இது விடை

258) அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச் செய்தான் காண் ஏடீ
நயனங்கள் மூன்று உடைய நாயகனே தண்டித்தால்
சயம் அன்றோ வானவர்க்குத் தாழ் குழலாய் சாழலோ. 4

பிரமனையும், மன்மதனையும், எமனையும், சந்திரனையும் அடையாளங்கள் மாயாமல் சிரமறுத்தும், எரித்தும், உதைத்தும்,தேய்ந்து போக வைத்தும் வடுப்படுமாறு செய்தானே - இது என்னடி? - இது வினா

ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் முக்கண்களை உடைய தலைவனே தண்டிப்பான் என்றால் அது (உயிர் நீங்கத் தண்டிப்பதில்லை. குற்றம் தீரத் தண்டிப்பது. இதனால் அவர்கள் திருந்தினர். எனவே இது) தேவர்களுக்கு வெற்றிதானே - இதுவிடை.

259) தக்கனையும் எச்சனையும் தலை அறுத்துத் தேவர் கணம்
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்ததுதான் என்? ஏடீ
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்து அங்கு
எச்சனுக்கு மிகைத் தலை மற்று அருளினன் காண் சாழலோ. 5

வேள்வி செய்த தக்கனையும் வேள்வியை முன்னின்று நடத்திய எச்சனையும் தலையை அறுத்தும், தொகுதியாக வந்த தேவர் கூட்டத்தை விரட்டியும் இப்படியெல்லாம் செய்தது என்ன காரணத்தால்? - இது வினா

தொகுதியாக வந்த தேவர்களைத் தொலைத்து (அவர்களைத் தண்டித்ததன் மூலம் அவர்கள் தீமையைப் போக்கி மறக்கருணை காட்டு) அருள்செய்து, இதுபோலவே (தக்கனுக்கு ஆட்டுத்தலையும்) எச்சனுக்கு மான் தலையும் தந்து அருள் செய்தான். இது அவன் கருணையே அன்றிக் கொடுமையல்ல. - இது விடை

260) அரைவனும் மாலவனும் அறியாமே அழல் உரு ஆய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ. 6

நான்முகனும் திருமாலும் அறியமுடியாமல் நெருப்பு வடிவாய் நிலத்திற்குக் கீழும் (மேலுமாய்) பல அண்டங்களைக் கடந்து நின்றது எதற்காக -இது வினா

இறைவன் அப்படி நிற்காவிட்டால், நான்முகனும் திருமாலும் தங்கள் கோபத்தால் வந்த ஆணவத்தால் போர் செய்து தாங்களும் துன்புற்று உலகினையும் பாழ்படுத்திவிடுவார்கள். இதுவும் சிவன் கருணையே - இது விடை

261) மலை மகளை ஒரு பாகம் வைத்தலுமே மற்று ஒருத்தி
சல முகத்தால் அவன் சடையில் பாயும் அது என்? ஏடி
சல முகத்தால் அவன் சடையில் பாய்ந்திலளேல் தரணி எல்லாம்
பில முகத்தே புகப் பாய்ந்து பெரும் கேடு ஆம் சாழலோ. 7

இமயமலை அரசன்மகள் பார்வதியை ஒரு பாகத்தில் வைத்த பரமன், மற்றொருத்தியாகிய கங்கையை நீர்வடிவில் தன் சடையில் பாயுமாறு வைத்திருக்கிறானே,இது என்னடி? - இது வினா

நீர்வடிவில் வேகமாய் வந்த கங்கை அவன் தலையில் பாயாமல், நேராக இந்தப்பூமியில் பாய்ந்தால், உலகமெல்லாம் பாதாளத்தில் பாய்ந்து பேரழிவு நேர்ந்திருக்கும். இது பூமியைக் காத்த கருணை -இதுவிடை.

262) கோலாலம் ஆகிக் குரை கடல்வாய் அன்று எழுந்த
ஆலாலம் உண்டான் அவன் சதுர் தான் என்? ஏடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன் மால் உள்ளிட்ட
மேல் ஆய தேவர் எல்லாம் வீடுவர் காண் சாழலோ. 8

கோலாகலமாய் ஒலிக்கின்ற பாற்கடலில் முன்பு உண்டான ஆலகால நஞ்சை உண்டானே! அது கெட்டிக்காரத் தனமாகுமா? ஏன் இப்படிச் செய்தான்? - இது வினா.

அப்படி நஞ்சை உண்டு அவன் காப்பாற்றாவிட்டால், அன்றைக்கே பிரமன் திருமால் உள்ளிட்ட மேலான தேவர்கள் எல்லாம் அழிந்து போயிருப்பார்கள். எனவே சிவபெருமான் (தற்கொலை செய்து கொள்வதற்காக நஞ்சை உண்ணவில்லை.) தரணியைக்காக்கவே நஞ்சுண்டான். - இது விடை.

263) தென் பால் உகந்து ஆடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண் பால் உகந்தான் பெரும் பித்தன் காண் ஏடீ
பெண் பால் உகந்திலனேல் பேதாய் இரு நிலத்தோர்
விண் பால் யோகு எய்தி வீடுவர் காண் சாழலோ. 9

(தமிழ்மொழி விளங்கும்) தென்திசை நோக்கி மகிழ்ந்தாடும் தில்லைக் கூத்தன், உமையாகிய பெண்ணை ஒரு பாகத்திலேயே வைத்திருக்கிறானே அவன் என்ன பெண்ணாசை கொண்ட பெரும்பித்தனோ?-இது வினா

அறிவில்லாமல் வேகமாகக் கேள்வி கேட்கும் பெண்ணே! அவன் பெண்ணை ஒரு பங்கில் வைக்காவிட்டால், இவ்வுலக மக்கள் அனைவரும் (உலகவாழ்வில் ஈடுபட்டு வினைகளை அனுபவித்து வினைக்கழிவும் சிவஞானமும் பெறாமல்) யோகிகளாய்ச் சுவர்க்கம் அடைவார்கள் - இதுவிடை

264) தான் அந்தம் இல்லான் தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காண் ஏடீ
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்
வான் உந்து தேவர்கட்கு ஓர் வான் பொருள் காண் சாழலோ. 10

தனக்கு முடிவில்லாதவன், தன்னையே பற்றி நின்ற நாய் போன்ற என்னை, சிவானந்தப்பெருவெள்ளத்தில் அழுத்திவிட்டானே - இது தகுதி அறியாமல் செய்தது ஆகாதா? - இது வினா

இவ்வாறு ஆனந்த வெள்ளத்தில் அழுந்தக்காரணம் அவன் திருவடிகளையே பற்றி நின்று மற்றுப்பற்றின்றி இருந்தது. இது அவன் திருவடிப் பெருமை. இந்தத் திருவடிகள் வானத்திலுள்ள தேவர்களுக்கும் அடையமுடியாத பெரிய பொருளாகும். இது அவன் திருவடியாகிய திருவருட்பொலிவு - இதுவிடை

265) நங்காய் இது என்ன தவம் நரம்போடு எலும்பு அணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காண் ஏடீ
கங்காளம் ஆமா கேள் காலஅந்தரத்து இருவர்
தம் காலம் செய்யத் தரித்தனன் காண் சாழலோ. 11

பெண்ணே! இது என்ன தவம்? நரம்பையும் எலும்பு களையும் அணிந்துகொண்டு முழு எலும்புக் கூட்டைத் தோள் மேல் விரும்பி வைத்திருக்கிறானே இதைப் பாரடி. - இது வினா

முழுஎலும்புக்கூடு எப்படி வந்தது என்று கேள். பிரமனுக்கும் திருமாலுக்கும் இறுதி வந்த போது அவர்கள் கால எல்லை இவ்வளவு தான் என்று காட்ட, அவர்கள் எலும்புக்கூடுகளைத் தண்டாயுதம் போல் தோள்மேல் சார்த்தி வடுகநாதராக விளங்குகிறான். இது இறுதியில்லாதவன் சிவபிரான் மட்டுமே என்பதைத் தெரிவிப்பது - இது விடை

266) கான் ஆர் புலித் தோல் உடை தலை ஊண் காடு பதி
ஆனால் அவனுக்கு இங்கு ஆட்படுவார் ஆர்? ஏடி
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வான் நாடர் கோவும் வழி அடியார் சாழலோ. 12

காட்டுப்புலித்தோலை உடையாகக் கொண்டான். இறந்தவர் மண்டை ஓட்டில் உணவை ஏற்கிறான். சுடுகாடுதான் அவன் வாழும் நகரம். இப்படி இருந்தால் இவனுக்கு யார் ஆட்பட்டு அடிமை செய்வார்? - இது வினா

ஆனாலும் கேட்பாயாக. மண்ணவர் ஆட்படாமல் போனால் போகட்டும். அவனுக்குப் பிரமனும் திருமாலும் வழிவழியாக அடிமை செய்கிறார்கள். இது போதாதா? - இதுவிடை

267) மலை அரையன் பொற் பாவை வாள் நுதலாள் பெண் திருவை
உலகு அறியத் தீ வேட்டான் என்னும் அது என்? ஏடீ
உலகு அறியத் தீ வேளாது ஒழிந்தனனேல் உலகு அனைத்தும்
கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடும் காண் சாழலோ.13

உலகமே தானாகிய இறைவன், மலைகளுக்கு அரசனாகிய இமவான் பெற்ற பொற்பாவையும் ஒளிபொருந்திய நெற்றியை உடையவளும், பெண்கள் புகழ்வளர்க்கும் பெருஞ்செல்வம் ஆனவளும் ஆகிய உமாதேவியை, உலகம் அறியத் தீவலம் செய்து திருமணம் செய்து கொண்டது வியப்பான செயல் அல்லவா! இது ஏன்? - இது வினா

அப்படி உலகமறியத் தீமுன் திருமணம் செய்து காட்டாவிட்டால், உலகில் ஒழுக்கம் கெட்டு, மக்கள் மனம் போன போக்கில் வாழ்ந்து, அதனால் உலகங்கள் அனைத்தும், அவற்றிலுள்ள கலை நிறைந்த பொருள்களும் ஒழுங்கு மாறி நிலைகலங்கிப் போகும் - இது விடை

268) தேன் புக்க தண் பணை சூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான் புக்கு நட்டம் பயிலும் அது என்? ஏடீ
தான் புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணி எல்லாம்
ஊன் புக்க வேல் காளிக்கு ஊட்டு ஆம் காண் சாழலோ. 14

பூக்கள் இடைவிடாது பூத்துத் தேன் சொரிய, அந்தத் தேன் ஆறாக வந்து பாயக்கூடிய குளிர்ந்த வயல் சூழ்ந்த தில்லையில் ஆடும் சிற்றம்பலத்தான், நடனத்தைத் தானே விரும்பி ஈடுபட்டு இடைவிடாமல் ஆடுகிறானே - அது ஏன்? - இது வினா

அப்படி இடைவிடாமல் அவன் தொடர்ந்து ஆடாவிட்டால், (அவனோடு போட்டியிட்டு ஆடிய வேகசக்தியானவளும்) ஊன் தங்கிய வேலை உடையவளுமாகிய காளிக்கு உலகமெல்லாம் உணவாகியிருக்கும். -இது விடை

269) கட கரியும் பரி மாவும் தேரும் உகந்து ஏறாதே
இடபம் உகந்து ஏறிய ஆறு எனக்கு அறிய இயம்பு ஏடீ
தட மதில்கள் அவை மூன்றும் தழல் எரித்த அந் நாளில்
இடபம் அது ஆய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ. 15

எல்லாம் உடைய சிவபெருமான் மதம் பொங்கும் யானை மேல் வரலாம், விரைந்தோடும் குதிரைமேல் வரலாம், தேர் ஏறி வரலாம்,

அதையெல்லாம் விட்டுவிட்டு, இடபம் எனப்படும் காளை மாட்டை விரும்பி வாகனமாக்கி ஏறி வருகிறானே இது ஏன்? - இது வினா

மிகப்பரந்த மதில்களை உடைய முப்புரம் எரிய, சிவபெருமான் நெற்றிக்கண் திறந்தபோது, திருமால் காளை வாகனமாகித் தாங்கியதால், அறத்தின்வடிவான இடபத்தை இறைவன் வாகனமாகக் கொண்டான். - இதுவிடை

270) நன்றாக நால்வர்க்கும் நான் மறையின் உட்பொருளை
அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு அறம் உரைத்தான் காண் ஏடீ
அன்று ஆலின் கீழ் இருந்து அங்கு அறம் உரைத்தான் ஆயிடினும்
கொன்றான் காண் புரம் மூன்றும் கூட்டோடே சாழலோ. 16

உலகமெல்லாம் நன்மைபெற, சனகாதி முனிவர் நால்வருக்கும், வேதங்களின் உட்கருத்துக்களை எல்லாம், (தென்முகக் கடவுளாக) அன்று கல்லாலின் கீழமர்ந்து அறம் சொன்ன சிவபெருமான் அறக் கருணை மட்டும் தான் உடையவனா? - இது வினா

இல்லை இல்லை அப்படி ஆலின் கீழே அறத்தை உரைத்தாலும், (ஆணவ கன்ம மாயைக்கு அடையாளமான) முப்புரங் களையும் மொத்தமாக அழியச் செய்த மறக்கருணையும் உடையவன் - இது விடை

271) அம்பலத்தே கூத்து ஆடி அமுது செயப் பலி திரியும்
நம்பனையும் தேவன் என்று நண்ணும் அது என்? ஏடீ
நம்பனையும் ஆமா கேள் நான் மறைகள் தாம் அறியா
எம் பெருமான் ஈசா என்று ஏத்தின காண் சாழலோ. 17

தில்லையம் பலக்கூத்தாடி சிவபெருமான் உணவுக்காகப் பிச்சை எடுப்பவன். இப்படிப் பட்டவனை நம்முடையவன் என்பதற்காகத் தேவன் என்று ஏற்றுக்கொள்வது சரியா? (நாம் ஏற்றாலும் உலகம் ஏற்குமா) - இது வினா

நம்முடைய சிவபெருமான் உலகம் போற்றும் கடவுளான விதத்தைக் கேள். உலகிற்கு வழிகாட்டும் வேதங்களே, அவனை முழுவதும் அறியமாட்டாமல், எம்பெருமானே எல்லாம் உடைய ஈசனே என்று துதிக்கின்றன. இதனால் உலகம் துதிக்கிறது. வேதமொழி பொய்யாகுமா? - இது விடை

272) சலம் உடைய சலந்தரன் தன் உடல் தடிந்த நல் ஆழி
நலம் உடைய நாரணற்கு அன்று அருளிய ஆறு என்? ஏடீ
நலம் உடைய நாரணன் தன் நயனம் இடந்து அரன் அடிக்கீழ்
அலர் ஆக இட ஆழி அருளினன் காண் சாழலோ. 18

திருவிற்குடி என்ற திருத்தலத்தில் மிகவும் சினமுடையவனாகத் திகழ்ந்த சலந்தரன் என்ற அசுரனைக் கொல்ல சிவபெருமான் உண்டாக்கிய (பேராற்றல் வாய்ந்த) உலகிற்கு நலம் செய்யும் சக்கரப் படையைச் சிவபெருமான் தானே வைத்துக் கொள்ளாமல், (நலம் தரும் சொல்லுடைய) நாராயணமூர்த்திக்குக் கொடுத்தருளியது ஏன் - இது வினா.

நாள்தோறும் சிவவழிபாடு செய்யும் நலமுடைய நாராயண மூர்த்தி, ஆயிரம் தாமரைப்பூக்களில் ஒரு பூக்குறைய அதற்குப் பதிலாகத் தன் தாமரைக்கண்ணை எடுத்து மலராக எண்ணி இறைவன் திருவடிக்கீழ் வைக்க - அன்பர்களுக்குத் தன்னையே கொடுக்கும் சிவபெருமான் சக்கரப்படையைக் கொடுத்தது வியப்புக்குரியதில்லையே - இது விடை.

273) அம்பரம் ஆம் புள்ளித் தோல் ஆலாலம் ஆர் அமுதம்
எம் பெருமான் உண்ட சதுர் எனக்கு அறிய இயம்பு ஏடீ
எம் பெருமான் ஏது உடுத்து அங்கு ஏது அமுது செய்திடினும்
தம் பெருமை தான் அறியாத் தன்மையன் காண் சாழலோ. 19

புள்ளிகளை உடைய தோலை ஆடையாக அணிகிறான். அவனுக்கு நஞ்சமே அமுதாகிறது. மிகப்பெருமை உடையவன் இப்படியெல்லாம் செய்வது சாதுர்யமான செயலா? அவன் பெருமைக்குத் தக்கதா? சொல்லடி - இது வினா.

உயிர்களிடம் கொண்ட பெருங்கருணையால் அவன் எதையும் உடுத்துவான் எதையும் உண்பான். அவன் பெருமையை அவனே முழுவதும் அறியாதவன். அடியார் பெருமைதான் அவனுக்குத் தெரியும் - இது விடை.

274) அரும் தவருக்கு ஆலின் கீழ் அறம் முதலா நான்கினையும்
இருந்து அவருக்கு அருளும் அது எனக்கு அறிய இயம்பு ஏடீ
அரும் தவருக்கு அறம் முதல் நான்கு அன்று அருளிச் செய்திலனேல்
திருந்த அவருக்கு உலகு இயற்கை தெரியா காண் சாழலோ. 20

அரிய தவத்தினைஉடைய சனகாதி முனிவர் நால்வரும் (வயதானவர்களாக இருக்க, அவர்களுக்குக் குருநாதனாக இறைவன் இளமைத் தோற்றமுடன்) எழுந்தருளி இருந்து அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கு பொருள்களையும் அருளிச் செய்தான் என்கிறார்களே, அதை நான் அறியுமாறு கொஞ்சம் சொல்லடி - இது வினா

அப்படி சிவபெருமான் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டாவிட்டால், உலகம்திருந்தத் தவம்செய்யும் திருந்திய ஞானிகளாகிய அவர்களுக்கு உலகத்தின் இயற்கை தெரியாமல் போய்விடும் - இது விடை



வஞ்சி நுண்ணிடை மால்வரை மங்கைபூண்
துஞ்சு வெம்முலைத் தொய்யில் எழுதுகைக்
கஞ்சம் நோவக் கடவுள் எழுதும் அச்
செஞ்சுவைத் தமிழோன்அடி சேர்குவாம்.
- (சீகாளத்திப்புராணம்) சிவப்பிரகாச சுவாமிகள்

13.திருப்பூவல்லி

தில்லையில் அருளியது தரவு கொச்சகக்கலிப்பா

(திருவடிப் பேறு கிடைத்ததால் பற்று அறுத்தல், பெற்ற பேரின்பம், மாயையின் ஆற்றலை நீக்குதல் ஆகியவை பற்றி மகளிர் பூக்கொய்யும் போது பாடும் பாடல்)

275) இணை ஆர் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணைஆன சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்
அணை ஆர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர் பாடிப் பூவல்லி கொய்யாமோ. 1

சிவசக்திவடிவான அருள் ஞானத்திருவடிகள் இரண்டையும் சிவபெருமான் என்தலைமேல் வைத்ததுமே, எனக்குத் துணை என்று இதுவரை தவறாகக் கருதியிருந்த சுற்றத்தார் எல்லோரையும் துறந்து அவர்கள் தொடர்பை விட்டொழித்தேன். இப்படி அருள்புரிந்தவன் வரம்புக்குட்பட்ட வெள்ளம் சூழ்ந்த தில்லை அம்பலத்தில் ஆடுகின்றவன். என் பிறவிப் பெருங்கடல் தாண்ட வைக்கும் தெப்பம் போன்றவன். அவன் புகழ்பாடி அல்லிப் பூக்களைக் கொய்வோமாக

276) எந்தை எம் தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்து என்னை ஆண்டு கொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேன் இருந்த
பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ 2

எனக்கருள் தந்தையும் அந்தத் தந்தையைக் காட்டிய தாயான குருவும், எனனுடைய சுற்றத்தார்களும் எல்லாம் என் பாசக்கட்டறுத்து என்னை ஆட்கொண்ட சோமசுந்தர பாண்டியனாகிய எம்பெருமான். அருள்மணக்கும் அந்தத் திருவிடை மருதூரில் சிவானந்தத் தேனடை இருக்கும் மரப்பொந்தாய்த் திகழும் பெருமானைப் போற்றிப் பூக்கொய்வோமாக

277) நாயின் கடைப்பட்ட நம்மையும் ஓர் பொருட்படுத்துத்
தாயின் பெரிதும் தயா உடைய தம் பெருமான்
மாயப் பிறப்பு அறுத்து ஆண்டான் என் வல் வினையின்
வாயில் பொடி அட்டிப் பூவல்லி கொய்யாமோ. 3

பிறவியால் இழிந்து நன்றி மறவாமையால் உயர்ந்த நாயை விடக்கீழானவனான நம்மையும், ஆட்கொள்ளத்தக்க பொருளாக எண்ணி, தாயை விடமிகச் சிறந்த கருணையுடைய எம்பெருமான், மாயையால் வரும் பிறவியை வேரறுத்து, ஆண்டான். மேலும் வளராமல் என் வல்வினைகளின் வாயில் மண்ணைப் போட்டான். இதற்குக் காரணமான அவன் பெருமையை நினைத்துப் பூக்கொய்வோமாக!

278) பண் பட்ட தில்லைப் பதிக்கு அரசைப் பரவாதே
எண் பட்ட தக்கன் அருக்கன் எச்சன் இந்து அனல்
விண் பட்ட பூதப் படை வீரபத்திரரால்
புண் பட்டவா பாடிப் பூவல்லி கொய்யாமோ. 4

பண்பொருந்த இசைபாடும் பக்தர்களின் பாடலைப்பெற்ற தில்லையம் பதியில், நடராசனாக அரசாளும் பெருமானைப் போற்றாமல், தங்கள் தவறான எண்ணத்தால் துன்புற்ற தக்கன், சூரியன், எச்சன், சந்திரன், அக்கினி ஆகியோர் விண்ணளாவிய பூதப்படைகளோடு வந்த வீரபத்திரக்கடவுளால், உறுப்புக்கள் அழிந்து புண்பட்டதைப் பாடிப் பூக்கொய்வோமாக

279) தேனாடு கொன்றை சடைக்கு அணிந்த சிவபெருமான்
ஊன் நாடி நாடி வந்து உள் புகுந்தான் உலகர் முன்னே
நான் ஆடி ஆடி நின்று ஓலம் இட நடம் பயிலும்
வான் நாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ. 5

வண்டுகள் விரும்புகின்ற கொன்றை மாலையைச் சடையில் அணிந்த சிவபெருமான், என் உடம்பைத் தேடிவந்து உள்ளே புகுந்தான். நான் இதையறியாமல் உலகத்தவர் முன்னே அவனைத்தேடிக் காணாமல் ஆடிநின்று ஓலமிட்டேன் அவனே மிகமிகஎளியவனாகத் தில்லையிலே நடம்பயில்கிறான். விண்ணவர் தலைவனான அப்பெருமானுக்காகப் பூக் கொய்வோமாக.

280) எரி மூன்று தேவர்க்கு இரங்கி அருள் செய்தருளி
சிரம் மூன்று அறத் தன் திருப் புருவம் நெரித்தருளி
உரு மூன்றும் ஆகி உணர்வு அரிது ஆம் ஒருவனுமே
புரம் மூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ. 6

தேவர்கள் அவியுணவு கொள்வதற்காக, அவர்களுக்கு இரங்கி ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி என்ற மூன்றுவகையான

எரிகளை உண்டாக்கியும், தக்கன் வேள்வியில் கலந்து கொண்ட எச்சன், பிரமன், தக்கன் மூவர் தலைகளும் அற்றுப் போகும் படி, தன் புருவத்தை நெரித்தான். உரு அரு, அருவுரு என மூவகையாகி யாராலும் உணரமுடியாத ஒப்பற்ற பரம்பொருள், முப்புரம் எரித்ததைப் பாடிப் பூக்கொய்வோமாக!

281) வணங்கத் தலை வைத்து வார் கழல் வாய் வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீர் அடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணி தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணம் கூரப் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ. 7

சிவபெருமான் அவனை வணங்குவதற்காகவே நமக்குத் தலையைத்தந்தான். அவன் திருவடிகளை வாழ்த்துதற்கே வாயைத் தந்தான். அவனோடு இணங்கிக் கலந்து களிக்கத் தன் சிறப்பான அடியார் கூட்டத்தையும் வைத்தான். நமக்கருள் புரிய உமையவளோடும் அழகிய தில்லை அம்பலத்தில் ஆடுகின்றான். அடியவரை ஆட்கொள்ளும் அவனுடைய குணத்தை மிகுதியாகப் பாடி நாம் பூக்கொய்வோமாக

282) நெறி செய்தருளித் தன் சீர் அடியார் பொன் அடிக்கே
குறி செய்து கொண்டு என்னை ஆண்டபிரான் குணம் பரவி
முறி செய்து நம்மை முழுது உடற்றும் பழ வினையைக்
கிறி செய்தவா பாடிப் பூவல்லி கொய்யாமோ. 8

சரியை கிரியை யோகம் ஞானம் என்ற வழிகளை நாம் உய்வதற்காக நமக்கருளினான். அவனுடைய சிறப்பான அடியார்கள் திருவடிகளைப் பணிந்து அவர்களோடு இணைவதற்கே எனக்கு அடையாளமிட்டு, என்னிடம் அடிமை ஓலை எழுதி வாங்கிக்கொண்டு, அதனால் என்னை வருத்தும் பழவினைகள் முழுவதையும் இல்லாமல் போகும்படி செய்த திருவருட்கருணையைப் பாடிப் பூக்கொய்வோமாக!

283) பன்னாள் பரவிப் பணி செய்யப் பாத மலர்
என் ஆகம் துன்ன வைத்த பெரியோன் எழில் சுடர் ஆய்
கல்நார் உரித்து என்னை ஆண்டுகொண்டான் கழல் இணைகள்
பொன் ஆனவா பாடிப் பூவல்லி கொய்யாமோ. 9

நான் பல நாட்கள் அவனைப் போற்றிப் பணி செய்ய வேண்டும் என்பதற்காகவே அவன் திருவடித் தாமரைகள் என் நெஞ்சில்

பொருந்தவைத்த பெருமைஉடைய சிவபெருமான், அழகு மிக்க சோதியாய், கல்லிலே நார் உரித்தது போல என்னை ஆட்கொண்டான். அவன் திருவடிகள் எனக்குப் பொன்னே போல் போற்றத் தக்கவை. அவற்றைப் பாடிப் பூக்கொய்வோமாக.

284) பேர் ஆசை ஆம் இந்தப் பிண்டம் அறப் பெருந்துறையான்
சீர் ஆர் திருவடி என் தலைமேல் வைத்த பிரான்
கார் ஆர் கடல் நஞ்சை உண்டு உகந்த காபாலி
போர் ஆர் புரம் பாடிப் பூவல்லி கொய்யாமோ. 10

பேராசையால் நிறைந்த இந்த உடம்பு அற்றுப்போகும் படி, திருப்பெருந்துறையில் சிறப்பான திருவடிகளை என் தலை மேல் வைத்தான் எம்பிரான். உலகைக் காக்க, கரிய நிறத்தோடு கடலில் தோன்றிய நஞ்சை உண்டு மகிழ்ந்த அவன் நான்முகனுடைய மண்டை ஓட்டைக் கையில் ஏந்தியவன். அவனால் வீரம் காட்டி எரிக்கப்பட்ட முப்புரங்களையும் பாடிப் பூக்கொய்வோமாக

285) பாலும் அமுதமும் தேனுடன் ஆம் பரா பரம் ஆய்
கோலம் குளிர்ந்து உள்ளம் கொண்ட பிரான் குரை கழல்கள்
ஞாலம் பரவுவார் நல் நெறி ஆம் அந் நெறியே
போனும் புகழ் பாடிப் பூவல்லி கொய்யாமோ. 11

மேலானவற்றுக்கெல்லாம் மேலானவன், எனக்குப் பாலும் அமுதமும் தேனுமாய்க் காட்சி தந்து, அம்மையுடன் தண்மையான அருட்கோலம் காட்டி, என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டான். அவனுடைய சிலம்பொலி கேட்பிக்கும் திருவடிகளே இவ்வுலகில் அவனடியார்க்கு நல்வழிகாட்டுவன. அப்படி நன்னெறி காட்டும் அவன் திருப்புகழைப் பாடிப் பூக்கொய்வோமாக!

286) வானவன் மால் அயன் மற்றும் உள்ள தேவர்கட்கும்
கோன் அவன் ஆய் நின்று கூடல் இலாக் குணக் குறியோன்
ஆன நெடும் கடல் ஆலாலம் அமுது செய்யப்
போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ. 12

இந்திரன் திருமால் பிரமன் மற்றுள்ள தேவர்கள் யாவருக்கும் அரசனாய் நிற்பவன் சிவபெருமான். அவர்களாலும் சென்றடைய முடியாத குணம், குறிகள் உடையவன் மிகப்பெரிய பாற்கடலில் விளைந்த ஆலாலம் என்ற நஞ்சை அவன் உண்ண,

அவனைக்கொல்லாது அவனுக்கு அது நல்ல உணவான நாகரீகம் பாடி நாம் பூக்கொய்வோமாக!

287) அன்று ஆல நீழல் கீழ் அரு மறைகள் தான் அருளி
நன்று ஆக வானவர் மா முனிவர் நாள்தோறும்
நின்று ஆர ஏத்தும் நிறை கழலோன் புனை கொன்றைப்
பொன் தாது பாடி நாம் பூவல்லி கொய்யாமோ. 13

முன்னாளில் கல்லால நீழலின் கீழ் வேதப் பொருளை நால்வர்க்கும் அருளியவன். தாம் நல்வாழ்வு பெற வேண்டுமென்று, வானவர்களாலும், பெரிய முனிவர்களாலும் நாள்தோறும் சந்நிதியில் நின்று துதிக்கப்படுபவன். எங்கும் நிறைந்த பரநாத ஒலியுடைய கழலை அணிந்தவன். அவன் அணியத் தவம் செய்த கொன்றை மலரின் பொன்னிறமான மகரந்தங்களைப் பாடி நாம் பூக்கொய்வோமாக!

288) படம் ஆக என் உள்ளே தன் இணைப்போது அவை அளித்து இங்கு
இடம் ஆகக் கொண்டிருந்த ஏகம்பம் மேய பிரான்
தடம் ஆர் மதில் தில்லை அம்பலமே தான் இடமா
நடம் ஆடுமா பாடிப் பூவல்லி கொய்யாமோ. 14

தன்னுடைய திருவடித் தாமரைமலர்கள் இரண்டையும் என் மனத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் ஓவியமாக்கி, என் உள்ளத்தையே கோயிலாகக் கொண்ட கச்சியேகம்பன், அது போலவே விசாலமான மதில்கள் சூழ்ந்த தில்லையம்பலத்தைத் தனக்குரிய இடமாக்கி நடனமாடும் சிறந்த தன்மையைப் பாடி நாம் பூக்கொய்வோமாக!

289) அங்கி அருக்கன் இராவணன் அந்தகன் கூற்றன்
செங்கண் அரி அயன் இந்திரனும் சந்திரனும்
பங்கம் இல் தக்கனும் எச்சனும் தம் பரிசு அழியப்
பொங்கிய சீர் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ. 15

தீக்கடவுள், கதிரவன், இராவணன், அந்தகாசுரன், எமன், சிவந்த கண்களையுடைய திருமால், பிரமன், இந்திரன், சந்திரன், வெட்கமில்லாத தக்கன், எச்சன் ஆகியோர் தன்மை கெடும்படிச் சினந்து எழுந்து பொங்கிய சிவபெருமான் மறக்கருணைப் புகழ்பாடிப் பூக்கொய்வோமாக!

290) திண் போர் விடையான் சிவபுரத்தார் போர் ஏறு
மண்பால் மதுரையில் பிட்டு அமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண் பாடல் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ. 16

திறமையோடு சண்டையிடும் இடபவாகனத்தை உடையவன். சிவபுரத்தார் போற்றும் ஆண்சிங்கம் போன்றவன். மண்ணால் சிறப்புப்பெற்ற மதுரையில் உதிர்ந்த பிட்டை உணவாக உண்டு, பிரம்பால் அடிக்கச் செய்து பாண்டியனைப் பணிகொண்டு, புண்பட்ட செய்தியைப் பாடிப் பூக்கொய்வோமாக

291) முன் ஆய மால் அயனும் வானவரும் தானவரும்
பொன் ஆர் திருவடி தாம் அறியார் போற்றுவதே
என் ஆகம் உள் புகுந்து ஆண்டுகொண்டான் இலங்கு அணியாம்
பல் நாகம் பாடி நாம் பூவல்லி கொய்யாமோ. 17

எல்லாத் தேவர்களுக்கும் முன்னே படைக்கப்பட்ட திருமாலும், நான்முகனும், மற்ற வானுலகத்தவரும், அரக்கர்களும் எம்பிரானுடைய பொன்மயமான திருவடியைத் தாம் அறியமாட்டார்கள். எனவே அவர்களால் பெருமான் திருவடிகளைப் போற்ற முடியுமோ? சிவபெருமான் என் நெஞ்சினுள்ளே புகுந்து ஆண்டு கொண்டான். (எனவே நான் அவனைப் போற்ற முடியும்) அவனுடம்பில் அணிகளாகத் திகழும் பல நாகங்களைப் பாடி நாம் பூக்கொய்வோமாக

292) சீர் ஆர் திருவடித் திண் சிலம்பு சிலம்பு ஒலிக்கே
ஆராத ஆசை அது ஆய் அடியேன் அகம் மகிழத்
தேர் ஆர்ந்த வீதிப் பெருந்துறையான் திரு நடம்செய்
பேரானந்தம் பாடிப் பூவல்லி கொய்யாமோ. 18

சீர்மிக்க திருவடியில் கிடக்கும் திண்ணிய சிலம்பொலியைக் கேட்பதற்கே ஆராத ஆசையுடன் இருந்த அடியேன் மனம் மகிழும்படியாக, தேரோடும் வீதித் திருப்பெருந் துறையான் திருநடனம் காட்டினான். சிலம்பொலியும் கேட்பித்தான். அதனால் பெற்ற பேரானந்தம் பாடிப் பூக்கொய்வோமாக.

293) அத்தி உரித்து அது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவு கொண்டு இவ் உலகில் பிள்ளையும் ஆம்
முத்தி முழு முதல் உத்தரகோசமங்கை வள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ. 19

யானையை உரித்து அதன் தோலைப் போர்த்தி அருளும் திருப்பெருந்துறைப்பெருமான், (அந்தப் பேராற்றலை மறைத்து) பித்தரைப் போலவும் வடிவம் கொள்வான். இவ்வுலகில் சிறு பிள்ளை போலவும் வடிவம் கொள்வான். பேரின்ப வீட்டுக்கு முதலான தலைவன். உத்தரகோச மங்கையில் எழுந்தருளித் தன்னையே எனக்குத் தந்த வள்ளல். அப்பெருமான் நான் செய்த புண்ணியத்தால் என் அறிவிற்கு எளியவனாய் வந்த பெருமையைப் பாடிப் பூக்கொய்வோமாக!

294) மா ஆர ஏறி மதுரை நகர் புகுந்து அருளித்
தே வார்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்
கோ ஆகி வந்து எம்மைக் குற்றேவல் கொண்டு அருளும்
பூ ஆர் கழல் பரவிப் பூவல்லி கொய்யாமோ. 20

திருச்சிற்றம்பலம்

பெரும்புண்ணியம் செய்த குதிரையின் மனமகிழ ஏறியமர்ந்து, மதுரை நகருக்குள் நுழைந்து, தெய்வத்தன்மை மிக்க திருக்கோலம் விளங்க, திருப்பெருந்துறைக் குருநாதன், அரசனாகி வந்து, என்னையும் பாண்டிய மன்னனையும் குற்றேவல் செய்ய வைத்து அருள்செய்தான். அவனுடைய மலர் போன்ற திருவடிகளைப் போற்றி நாம் பூவல்லி கொய்வோமாக!



பெருகும் வையை தனை யழைப்பிக்குமே
பிரம்படிக்குப் பிரான் மேனி கன்றுமே
நரியெலாம் பரியாக நடத்துமே
நாடி மூகைதனைப் பேசுவிக்குமே
பரிவிற் பிட்டுக்கு மண் சுமப்பிக்குமே
பரமனேடெழுதக் கோவை பாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாதவூரர் வழங்கிய பாடலே

14.திருவுந்தியார்

தில்லையில் அருளியது கலித்தாழிசை

(உந்தியாடும் மகளிர் விளையாட்டு மூலம் முப்புரம் எரித்தது தக்கயாகத்தை அழித்தது ஆகியவற்றைக் கூறும் ஞானவெற்றி)

295) வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப் புரம் உந்தீ பற
ஒருங்கு உடன் வெந்தவாறு உந்தீ பற. 1

மேருமலையாகிய வில்வளைந்தது, சண்டை மூண்டது; முப்புரங்களும் துயர் உற்றன என்று உந்தீ பற. முப்புரங்களும் ஒன்றாக உடனே வெந்தன. (இது மும்மல வெற்றி) என்று உந்தீபற.

296) ஈர் அம்பு கண்டிலம் ஏகம்பர் தம் கையில்
ஓர் அம்பே முப் புரம் உந்தீ பற
ஒன்றும் பெரு மிகை உந்தீ பற. 2

ஏகாம்பரநாதர் திருக்கரங்களில் நாம் இரண்டு அம்புகளைக் காணவில்லை. ஒரு அம்பினாலேயே முப்புரங்களும் அழிந்தன என்று உந்தீபற. அவருடைய பேராற்றலுக்கு ஓரம்பே மிக அதிகம் என்று உந்தீ பற.

297) தச்சு விடுத்தலும் தாம் அடி யிட்டலும்
அச்சு முறிந்தது என்று உந்தீ பற
அழிந்தன முப் புரம் உந்தீ பற. 3

முப்புரம் அழிக்கத் தேவர்கள் எல்லாம் ஒன்று கூடித் தேரினை அமைத்துத் தந்தனர். சிவபெருமான் தேரில் திருவடி வைத்ததுமே அச்சு முறிந்தது என்று உந்தீபற. ஆனாலும் அவர் சிரிப்பினாலேயே முப்புரங்களும் அழிந்தன என்று உந்தீபற.

298) உய்ய வல்லார் ஒரு மூவரைக் காவல் கொண்டு
எய்ய வல்லானுக்கே உந்தீ பற
இள முலை பங்கன் என்று உந்தீ பற. 4

முப்புரம் எரித்த காலத்தில் சிவபக்தியால் உய்தி அடையத் தக்க அசுரர் மூவரையும் காப்பாற்றி முப்புரங்கள் மட்டும் அழியுமாறு அம்பு

எய்ய வல்லவனுக்கே உந்தீ பற. இளமைமிக்க கொங்கைகளை உடைய அருட்சக்தியைப் பங்கிலே வைத்தவன் என்பதால் அவர்கள் காப்பாற்றப்பட்டனர் என்று உந்தீ பற.

299) சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீ பற
உருத்திர நாதனுக்கு உந்தீ பற. 5

வீரபத்திரரால் தாக்கப்பட்ட தக்கன் வேள்வி சரிந்தழிந்ததால், தேவர்கள் எல்லாம் ஓடியதைப் பாடி உந்தீ பற. உருத்திரர்கள் தலைவனான சிவபெருமான் தனித்தலைவன் என்று உந்தீ பற.

300) ஆவா திருமால் அவிப் பாகம் கொண்டு அன்று
சாவாது இருந்தான் என்று உந்தீ பற
சதுர் முகன் தாதை என்று உந்தீ பற. 6

தக்கன் வேள்வியில் அவிர்ப்பாகம் கொண்ட திருமால் அன்று இறவாதிருந்தான் என்று உந்தீபற. அந்தத் திருமால் பிரமனுக்குத் தந்தை. (படைப்பவன் இருப்பதால் காப்பவன் இருக்க வேண்டும் என்று மறக்கருணை காட்டினார்) என்று உந்தீ பற.

301) வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான் என்று உந்தீ பற
கலங்கிற்று வேள்வி என்று உந்தீ பற. 7

வெப்பத்தை உடைய தீக்கடவுள் அவியுணவை விழுங்குவதற்காக அதனை உருட்டிய போது, அந்தக் கையை வெட்டினான் இறைவன் என்று உந்தீ பற. அவியுணவை வாங்கிக் கொடுக்கும் தீக்கடவுள் கை வெட்டப்பட்டதால் வேள்வியே கலங்கியது என்று உந்தீ பற.

302) பார்ப்பதியைப் பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பது என்னே ஏடி உந்தீ பற
பணை முலை பாகனுக்கு உந்தீ பற. 8

அருட்சக்தியாகிய பார்வதி அன்னையையே பகை என்று சொன்ன தக்கனைப் பார்ப்பதென்னே என்று உந்தீ பற. அவன் கிடக்கிறான். அவனை ஏன் பார்க்கிறாய்? பருத்த கொங்கைகளை

உடைய பார்வதியை ஒரு பங்கில் வைத்துப் பெண்ணைப் பெருமைப்படுத்திய பெருமானுக்கே உந்தீ பற.

303) புரந்தரனார் ஒரு பூங் குயில் ஆகி
மரந்தனில் ஏறினார் உந்தீ பற
வானவர் கோன் என்றே உந்தீ பற. 9

இந்திரனார் ஒரு பூங்குயிலாக மாறி மரத்தில் ஏறினார் என்று உந்தீபற. அவர் தேவர்களுக்கெல்லாம் அரசன் என்று உந்தீபற.

304) வெஞ்சின வேள்வி வியாத்திரனார் தலை
துஞ்சினவா பாடி உந்தீ பற
தொடர்ந்த பிறப்பு அற உந்தீ பற. 10

சிவபெருமான் சினத்துக்குக் காரணமான வேள்வியில், சர்வ சாதகனாக இருந்த வியாத்திரனார் தலை அறுபட்டதைப் பாடி உந்தீ பற (அவருக்கு மான் தலை வைக்கப்பட்டது. இந்த வேள்வியில் யாரும் கொல்லப்படவில்லை. தண்டிக்கப்பட்டனர்) அவன் தலை அறுந்தது போகட்டும். அதைப் பாடுவதால் நம்மைத் தொடரும் பிறப்பும் அறுந்தது என்று உந்தீ பற.

305) ஆட்டின் தலையை விதிக்குத் தலை ஆகக்
கூட்டியவா பாடி உந்தீ பற
கொங்கை குலுங்க நின்று உந்தீ பற. 11

வினைக்கேற்ற உடம்பென்று விதிசெய்யும் பிரமாக்களில் ஒருவனாகிய தக்கனுக்குத் தலையாக விளங்கும் படி ஆட்டுத்தலையைச் சேர்த்தது பாடி உந்தீ பற. விதிக்கும் விதி இப்படியா என்று குலுங்கிச் சிரிப்பவளே! உன் கொங்கைகள் குலுங்குமாறு உந்தீ பற.

306) உண்ணப் புகுந்த பகன்ஒளித்(து) ஓடாமே
கண்ணைப் பறித்தவா(று) உந்தீபற
கருக்கெட நாம்எலாம் உந்தீபற. 12

யாகத்தில் அவியுண்ண வந்தபகன் என்னும் கதிரவன் ஒளிந்து ஓட முடியாதபடி, அவன் கண்ணைப் பறித்ததைப் பாடி உந்தீ பற. இதைப் பார்த்தாவது நாம் சிவநிந்தனை செய்யாமல் இருந்தால், நம் பிறவிக்குக் காரணமான வினையழியும் என்று உந்தீ பற.

307) நாமகள் நாசி சிரம் பிரமன் படச்
சோமன் முகம் நெரித்து உந்தீ பற
தொல்லை வினை கெட உந்தீ பற. 13

கலைமகள் மூக்கும் நான்முகன் சிரமும் வருந்தவும், சந்திரன் முகம் நெரியவும் பட்டபாட்டைச் சொல்லி உந்தீ பற. இதைப் பாடுவதால் நம் பழவினை அழியும் என்று உந்தீ பற.

308) நான்மறையோனும் மகத்தியமான் பட
போம் வழி தேடும் ஆறு உந்தீ பற
புரந்தரன் வேள்வியில் உந்தீ பற. 14

வேள்வி செய்த தக்கன் தலையிழந்ததும், பிரமன் தப்பியோட வழி தேடினான் என்று உந்தீ பற. அவனோடு அந்த வேள்வியில் இந்திரனும் ஓடினான் என்று உந்தீ பற.

309) சூரியனார் தொண்டை வாயினில் பற்களை
வாரி நெரித்தவாறு உந்தீ பற
மயங்கிற்று வேள்வி என்று உந்தீ பற. 15

பூஷன் எனப்படும் சூரியனார் தொண்டையைப் பிடித்து அவர் வாயிலுள்ள பற்களை வாரி நொறுக்கியதைப் பாடி உந்தீ பற. இதனால் வேள்வி நிலை குலைந்தது என்று உந்தீ பற.

310) தக்கனார் அன்றே தலை இழந்தார் தக்கன்
மக்களைச் சூழ நின்று உந்தீ பற
மடிந்தது வேள்வி என்று உந்தீ பற. 16

தன் மக்கள் அனைவரும் சூழ நின்ற போதும், அவர்களால் காப்பாற்ற முடியாத காரணத்தால் தக்கனார் அப்பொழுதே தலையிழந்தார் என்று உந்தீ பற. அதனால் வேள்வி அழிந்தது என்று உந்தீ பற.

311) பாலகனார்க்கு அன்று பால் கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீ பற
குமரன் தன் தாதைக்கே உந்தீ பற. 17

உபமன்யு முனிவர் பால் கேட்டழுத போது, பாற்கடலையே கொடுத்த அழகான சடையுடைய சிவபெருமானுக்கே உந்தீ பற. அவன்

முருகனாகிய குழந்தைக்குத் தந்தை. அதனால் தான் குழந்தை அழுததும் பாற்கடல் கொடுத்தான் என்று உந்தீ பற.

312) நல்ல மலரின்மேல் நான் முகனார் தலை
ஒல்லை அரிந்தது என்று உந்தீ பற
உகிரால் அரிந்தது என்று உந்தீ பற. 18

நல்ல தாமரை மலரின் மேல் வீற்றிருந்த பிரமனது தலையை, (அவன் ஆணவத்தை அடக்க) விரைவில் கிள்ளியதைப் பாடி உந்தீ பற. அது விரல் நகத்தால் (பூக்கொய்வது போல்) அரியப்பட்டது என்ற உந்தீ பற

313) தேரை நிறுத்தி மலை எடுத்தான் சிரம்
ஈர் ஐந்தும் இற்றவாறு உந்தீ பற
இருபதும் இற்றது என்று உந்தீ பற. 19

புட்பகவிமானத்தை நிறுத்திக் கயிலாய மலையைத் தூக்கமுயன்ற இராவணனுடைய பத்துத் தலைகளும் இற்றுப் போயின என்று உந்தீ பற. இருபது தோள்களும் இற்றுப் போயின என்று உந்தீ பற.

314) ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்
ஆகாசம் காவல் என்று உந்தீ பற
அதற்கு அப்பாலும் காவல் என்று உந்தீ பற. 20

திருச்சிற்றம்பலம்

மேலாடை அணிந்து சூரிய மண்டலத்துக்கு அருகில் செல்லும் முனிவர்களை ஆகாசத்துக்கே காவலாயிருக்கும் சிவபெருமான் காப்பாற்றினான் என்று உந்தீ பற. ஆகாயம் மட்டுமா? அதற்கு அப்பாலும் அவனே காவல் என்று உந்தீ பற.

15.திருத்தோள் நோக்கம்

தில்லையில் அருளியது தரவு கொச்சகக் கலிப்பா

(மகளிர் தோளைத் தொட்டுக் கைகொட்டி ஆடும் இந்த விளையாட்டில், ஆன்மாக்களின் மலத்தை அகற்றித் தூய்மை செய்து சிவனருள் பெற வழிப்படுத்துவது கூறப்படுகிறது)

315) பூத்து ஆரும் பொய்கைப் புனல் இதுவே எனக் கருதிப்
பேய்த்தேர் முகக்க உறும் பேதை குணம் ஆகாமே
தீர்த்தாய் திகழ் தில்லை அம்பலத்தே திரு நடம் செய்
கூத்தா உன் சேவடி கூடும்வண்ணம் தோள் நோக்கம். 1

பூக்கள் நிறைந்த பொய்கைத் தண்ணீர் என்றெண்ணிக் கானல் நீரை முகக்க எண்ணும் அறியாமைக்குணம் என்பால் அணுகாமல், அதை நீக்கி ஆட்கொண்டவனே! விளங்கும் தில்லையம் பலத்தில் ஆனந்தத் தாண்டவம் செய்யும் கூத்தப்பெருமானே! உன் சிவந்த திருவடியைக் கூட வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு, தோள்நோக்கம் ஆடுவோமாக.

316) என்றும் பிறந்து இறந்து ஆழாமே ஆண்டுகொண்டான்
கன்றால் விளவு எறிந்தான் பிரமன் காண்பு அரிய
குன்றாத சீர்த் தில்லை அம்பலவன் குணம் பரவித்
துன்று ஆர் குழலினீர் தோள் நோக்கம் ஆடாமோ. 2

எப்பொழுதும் பிறந்தும் இறந்தும் உலக வாழ்க்கையில் ஆழ்ந்து போகாமல் நம்மை ஆட்கொண்டவனும், கண்ணனாகத் தோன்றி விளாமரத்தின் மேல் கன்றை எறிந்து தம்மைக் கொல்ல வந்த அசுரர்களைக் கொன்ற திருமாலும், நான்முகனும் காணமுடியாதவனும், ஆகிய புகழ் மிக்க தில்லையம்பலப்பெருமான் அருட்குணங்களைப் பாடி, நெருங்கி அடர்ந்த கூந்தலை உடைய பெண்களே! தோள் நோக்கம் ஆடுவோமாக

317) பொருள் பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்கச்
செருப்பு உற்ற சீர் அடி வாய்க் கலசம் ஊன் அமுதம்
விருப்பு உற்று வேடனார் சேடு எறிய மெய் குளிர்ந்து அங்கு
அருள் பெற்று நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ. 3

சாதனங்களைக் கொண்டு ஆகம விதிகளின்படி செய்யப்படுகின்ற பூசையைப் போலவே தன் பூசையும் விளங்குமாறு

செய்த கண்ணப்ப நாயனாரின் செருப்புக் கால்களை நிர்மால்யம் அகற்றும் கையாகவும், வாயைத் திருமஞ்சன நீர் வைக்கும் கலசமாகவும் தீயில் சுடப்பட்ட பன்றி இறைச்சியை அமுதமாகவும் கொண்டு, அவர் வழிபாட்டில் விருப்பமுற்று, வேடனார் புகழ்விளங்க, மெய் குளிர, இதனால் அவருக்கு அருள்புரிந்து, தன் பக்கத்திலேயே நிற்க வைத்த சிவபெருமானைப் பாடித் தோணோக்கம் ஆடுவோமாக!

318) கல் போலும் நெஞ்சம் கசிந்து உருகக் கருணையினால்
நிற்பானைப் போல என் நெஞ்சின் உள்ளே புகுந்தருளி
நல்பால் படுத்து என்னை நாடு அறியத் தான் இங்ஙன்
சொல் பாலது ஆனவா தோள் நோக்கம் ஆடாமோ. 4

வலிமைமிக்க கல்போன்ற என் நெஞ்சம் கசிந்து உருகுமாறு தன் கருணையினால், என்னருகில் குருநாதனாய் நிற்பவன் போல, என் மனத்துக்குள் நுழைந்து, என்னை நல்ல வழியில் செல்ல வைத்து நாட்டு மக்களெல்லாம் அறியுமாறு என்னை ஆட்கொண்டு, நான் பேசும் சொற்களுக்குள் தானிருந்து (சொல்லவைத்தவன்) புகழ் பாடித் தோள் நோக்கம் ஆடுவோமாக

319) நிலம் நீர் நெருப்பு உயிர் நீள் விசும்பு நிலாப் பகலோன்
புலன் ஆய மைந்தனோடு எண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகு ஏழ் எனத் திசை பத்து எனத் தான் ஒருவனுமே
பல ஆகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ. 5

நிலம் தண்ணீர் நெருப்பு காற்று நீண்டவானம் சந்திரன் கதிரவன் இவற்றுடன் அறிவுவடிவான உயிர் (இயமானன்) என்று எட்டுவகையாகக் கூடி நிற்பவன். ஏழு உலகங்களும் பத்துத் திசைகளும் இவ்வாறு பல வடிவங்களில் தான் ஒருவனே நிற்பவன். அவனுடைய பேராற்றலை வியந்து தோள் நோக்கம் ஆடுவோமாக.

320) புத்தன் முதல்ஆய புல்அறிவின் பல் சமயம்
தத் தம் மதங்களில் தட்டுளுப்புப் பட்டு நிற்க
சித்தம் சிவம் ஆக்கிச் செய்தனவே தவம் ஆக்கும்
அத்தன் கருணையினால் தோள் நோக்கம் ஆடாமோ. 6

புத்தமதம் முதலிய சிற்றறிவுடைய பல சமயங்களும், அவரவர் மதங்களில் உள்ள கொள்கைகளில் தடுமாறி நிற்க, சிவபெருமான் என் சித்தத்தைச் சிவமயமாக மாற்றி நான் செய்யும் செயல்களையே

தவமாக்கி அருள் புரிகிறான். அந்த அப்பன் திருவருட்கருணையினால் தோள் நோக்கம் ஆடுவோமாக!

321) தீது இல்லை மாணி சிவ கருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதை தனைத் தாள் இரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோள் நோக்கம் 7

எந்தக் குற்றமும் இல்லாத பிரமசாரியாகிய விசாரசருமர் (சண்டீசர்) சாதியில் வேதியன் என்றும் தன் தந்தை என்றும் எண்ணாமல், சிவவழிபாட்டைச் சிதைத்தவனாகிய எச்சதத்தன் கால்களிரண்டையும் வெட்ட, அந்தப் பாதகச் செயல் சிவபெருமான் திருவருளால் தேவரெலாம் தொழத்தக்க சிவபுண்ணியமான தன்மையைப் பாடித் தோள் நோக்கம் ஆடுவோமாக.

322) மானம் அழிந்தோம் மதி மறந்தோம் மங்கை நல்லீர்
வானம் தொழும் தென்னன் வார்கழலே நினைந்து அடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள் பெறில் நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகி நின்று ஆடாமோ தோள் நோக்கம். 8

சிவபெருமானுக்கு ஆளான நற்பெண்களே! தற்போதம் அழிந்ததால் நாம் தன் மதிப்பை இழந்தோம் உலகியல் வாழ்வுக்குரிய சிறுமதியை மறந்தோம். விண்ணவர் போற்றும் தென்பாண்டி மன்னன் திருவடிகளையே நினைத்து நினைத்து ஆனந்தத் தாண்டவமாடும் அவன் அருளைப் பெற்றால், நாம் ஆனந்த வடிவாகி அவன் வண்ணம் ஆவோம் என்று தோள்நோக்கம் ஆடுவோமாக.

323) எண் உடை மூவர் இராக்கதர்கள் எரி பிழைத்துக்
கண் நுதல் எந்தை கடைத் தலை முன் நின்றதன் பின்
எண் இலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால் பலர் மாண்டனர்காண் தோள் நோக்கம். 9

சிவபெருமானுடைய திருவருள் கருணைக்குரிய சிவபக்தர்களான தாரகன், தாரகாட்சன், வித்யுன்மாலி என்ற முப்புரத்து அரக்கர்களும் முப்புரம் எரிந்த பொழுது அதற்குத் தப்பிப் பிழைத்து நெற்றியில் கண்ணுடைய எந்தைபிரான் திருக்கயிலையில் முதல்வாயில் காவலராகப் பணியேற்ற பிறகு எண்ணமுடியாத இந்திரர்களும், எத்தனையோ நான்முகன்களும், திருமால் பலரும் தங்கள் காலம் முடிந்து அழிந்தனர்

(எனவே இறைவன் திருக்கருணையின்றேல் அழியாத் தன்மை இல்லை என்பதைப் பாடி) தோள் நோக்கம் ஆடுவோமாக

324) பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர் பூக் குறையத்
தங் கண் இடந்து அரன் சேவடிமேல் சாத்தலுமே
சங்கரன் எம் பிரான் சக்கரம் மாற்கு அருளிய ஆறு
எங்கும் பரவி நாம் தோள் நோக்கம் ஆடாமோ. 10

ஆயிரம் தாமரைப் பூக்களை வைத்துச் சிவபெருமானை வழிபட்ட திருமால், ஒரு சமயம் அந்தப்பூக்களில் ஒரு பூக் குறைய, தன்னுடைய தாமரைக் கண்ணைத் தோண்டிச் சிவபெருமான் சிவந்ததிருவடிமேல் சாத்துதலும் சங்கரனாகிய எம்பெருமான் திருமாலுக்குச் சக்கரப் படையைத் தந்து அருளிய பேரருளை எல்லா இடங்களிலும் பாடி, நாம் தோள்நோக்கம் ஆடுவோமாக

325) காமன் உடல் உயிர் காலன் பல் காய் கதிரோன்
நாமகள் நாசி சிரம் பிரமன் கரம் எரியைச்
சோமன் கலை தலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோள் நோக்கம் ஆடாமோ. 11

மன்மதன் உடலையும், காலனுடைய உயிரையும், கொளுத்துகின்ற கதிரவனுடையபல்லையும்,கலைமகள்மூக்கையும், நான்முகன் தலையையும், தீக்கடவுள் கரத்தையும், சந்திரனுடைய கலைகளையும், தக்கன் எச்சன் இருவருடைய தலைகளையும் அகற்றி அவரவர் செய்த பாவங்களுக்குத் தண்டனையளித்து அவர்களைத் தூய்மைப் படுத்திய சிவபெருமானுடைய மறக்கருணைப் புகழ்பாடித் தோள் நோக்கம் ஆடுவோமாக.

326) பிரமன் அரி என்று இருவரும் தம் பேதைமையால்
பரமம் யாம் பரமம் என்று அவர்கள் பதைப்பு ஒடுங்க
அரனார் அழல் உரு ஆய் அங்கே அளவு இறந்து
பரம் ஆகி நின்றவா தோள் நோக்கம் ஆடாமோ. 12

பிரமனும் திருமாலும் தங்களுடைய அறியாமையினால் நானே பரம்பொருள் நானே பரம்பொருள் என்று சண்டையிட, அவர்கள் ஆணவத்தை ஒடுக்க, சிவபெருமான் அடிமுடி அறிய முடியாத செந்தீப் பிழம்பாய்க் காட்சிதந்து, அந்தத் திருவண்ணாமலையில் இருவராலும்

அளந்தறிய மாட்டாமல் அவர்கள் அறிவுக்கு மேலான பரம்பொருளாய் நின்றதைப் பாடி நாம் தோள்நோக்கம் ஆடுவோமாக.

327) ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலம் எல்லாம்
பாழுக்கு இறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழி முதல் சிந்தாத நல் மணி வந்து என் பிறவித்
தாழைப் பறித்தவா தோள் நோக்கம் ஆடாமோ. 13

அறிவிலும் ஆற்றலிலும் ஏழையாகிய அடியனேன், எத்தனையோ காலங்கள், பரம்பொருளான சிவபெருமானைப் பணியாமல் என் பிறவியை வீணாக்கி உண்டு உடுத்து உறங்கிக் கழித்துவிட்டேன். ஊழிக்காலம் கடந்த பின் உலகைத் தோற்றுவிக்கும் முதல்வனும், ஒளி குன்றாத மாணிக்க மணியும் போன்ற சிவபெருமான் குருநாதனாக வந்து, என் பிறவியாகிய செடியின் வேரைப் பறித்து எனை ஆட்கொண்ட சிறப்பைப் பாடி நாம் தோள் நோக்கம் ஆடுவோமாக.

328) உரை மாண்ட உள் ஒளி உத்தமன் வந்து உளம் புகலும்
கரை மாண்ட காமப் பெரும் கடலைக் கடத்தலுமே
இரை மாண்ட இந்திரியப் பறவை இரிந்து ஓடத்
துரை மாண்ட வாபாடி தோள் நோக்கம் ஆடாமோ. 14

உரைகளால் சுட்டிக்காட்ட முடியாதவனும், உள்ளத்தில் ஒளியாய் விளங்குபவனும் ஆகி என்னைக் காக்கத் தான் மானிடச் சட்டை தாங்கி எழுந்தருளிய உத்தமன், என் உள்ளத்தில் புகுந்ததும், கரையற்ற காமங்கள் (ஆசைகள்) ஆகிய மிகப்பெரிய கடலை நான் கடந்தேன். ஐம்புலப் பறவைகளுக்கு இரைகிடைக்காமையால் அவை அனைத்தும் பறந்தோடிவிட்டன. என் மனமாகிய இடம், இறைவன் கோயிலாய் மாட்சி பெற்றது. இந்தக் கருணையைப் பாடி நாம் தோள் நோக்கம் ஆடுவோமாக.

கந்தமொடு உயிர்படும் கணபங்கம் எனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித்து எந்தைபால்
வந்திடும் அடிகளை வணக்கம் செய்குவாம்.
- (கந்தபுராணம்) கச்சியப்ப சிவாச்சாரியார்

16.திருப்பொன்னூசல்

தில்லையில் அருளியது தரவு கொச்சகக் கலிப்பா

(அருட்சக்தி இருந்தாடத் தாலாட்டி மகளிர் ஆட்டும் பொன்னூஞ்சல் பாடல்களில் இறைவன் அறக்கருணையும் அருளால் பெற்ற தூய்மையும் விளக்கப் படுகின்றன)

329) சீர் ஆர் பவளம் கால் முத்தம் கயிறு ஆக
ஏர் ஆரும் பொன் பலகை ஏறிஇனிது அமர்ந்து
நாராயணன் அறியா நாள் மலர்த் தாள் நாய் அடியேற்கு
ஊர் ஆகத் தந்தருளும் உத்தரகோசமங்கை
ஆரா அமுதின் அருள் தாள் இணை பாடிப்
போர் ஆர் வேல் கண் மடவீர் பொன் ஊசல் ஆடாமோ. 1

வேல் போல ஒன்றோடொன்று சண்டை இடுகின்ற அழகான கண்களைப் பெற்ற பெண்களே! (வாருங்கள் ஊஞ்சலில் இருந்து ஆடுவோம்) சிறப்பு மிக்க பவளத்தைக் கால்களாக்குவோம். முத்துவடத்தை நான்கு சங்கிலிகள் ஆக்குவோம் அழகுமிக்க தங்கத்தாலான பலகை அமைப்போம் அதன்மேல் மகிழ்வோடு அமர்வோம். திருமாலும் அறிய முடியாத அன்றலர்ந்த செந்தாமரைத் திருவடிகளை நாய் போன்ற அடிமைகளாகிய நமக்கு எப்பொழுதும் வசிக்கத் தக்க ஊராகத் தந்தருளியவன், உத்தர கோசமங்கையில் எழுந்தருளியுள்ள தெவிட்டாத தெள்ளமுதன், அவனுடைய அருள்வடிவான திருப்பாதங்களைப் பாடிப் பொன்னூசல் ஆடுவோமாக.

330) மூன்று அங்கு இலங்கு நயனத்தன் மூவாத
வான் தங்கு தேவர்களும் காணா மலர் அடிகள்
தேன் தங்கித் தித்தித்து அமுது ஊறித் தான் தெளிந்து அங்கு
ஊன் தங்கி நின்று உருக்கும் உத்தரகோசமங்கைக்
கோன் தங்கு இடைமருது பாடிக் குல மஞ்ஞை
போன்று அங்கு அன நடையீர் பொன் ஊசல் ஆடாமோ. 2

கூட்டில் வாழ்கின்ற மரபுவழி வந்த மயில் போன்ற தோற்றத்தையும், அன்னப் பறவை போன்ற நடையினையும் உடைய பெண்களே! விளங்குகின்ற கதிரவன் சந்திரன், தீக்கடவுள் என்னும் மூன்று கண்களை உடையவன். மூப்படையாதவையும் வானத்துத்

தேவர்களால் காணமுடியாததவையுமான மலரடிகள் என் உள்ளத்தில் தங்கி, தேனாய் இனித்து, அமுதமாய் ஊறி, எனக்குத் தெளிவு தந்து, என் உடம்பில் தங்கி அதிலேயே நின்று என் உள்ளம் உருகச் செய்த உத்தர கோச மங்கைக்கு அரசன். அவன் எழுந்தருளியுள்ள திருவிடைமருதூரைப் பாடிப் பொன்னூசல் ஆடுவோமாக.

331) முன் ஈறும் ஆதியும் இல்லான் முனிவர் குழாம்
பல் நூறு கோடி இமையோர்கள் தாம் நிற்பத்
தன் நீறு எனக்கு அருளித் தன் கருணை வெள்ளத்து
மன் ஊற மன்னும் மணி உத்தரகோசமங்கை
மின் ஏறும் மாட வியன் மாளிகை பாடிப்
பொன் ஏறு பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ. 3

பொன் அணிகளை அணிந்த கொங்கைகளை உடைய பெண்களே! முதலாவதாகிய அந்தமும் ஆதியும் (முடிவும் முதலும்) இல்லாத பெருமான், முனிவர் கூட்டமும் பலநூறு கோடி இமையவர்களும் அவனருளுக்குக் காத்து நிற்க, தன்னுடைய திருநீறாகிய திருவருட் செல்வத்தை எனக்குத் தந்து, தன் கருணையாகிய வெள்ளத்தில் நான் என்றென்றும் ஊறித் திளைக்கும்படி அருள்செய்தான். அவன்இருக்கும் உத்தரகோச மங்கையின் மின்னலைத்தொடும் அகன்றுயர்ந்த மாட மாளிகைகளைப் பாடிப் பொன்னூசல் ஆடுவோமாக.

332) நஞ்சு அமர் கண்டத்தன் அண்டத்தவர் நாதன்
மஞ்சு தோய் மாட மணி உத்தரகோசமங்கை
அம் சொலாள் தன்னோடும் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்று அமுதம் ஊறிக் கருணை செய்து
துஞ்சல் பிறப்பு அறுப்பான் தூய புகழ் பாடிப்
புஞ்சம் ஆர் வெள் வளையீர் பொன் ஊசல் ஆடாமோ. 4

திரண்டிருக்கும் வெண்முத்து வளையல்களை அணிந்த பெண்களே! ஆகாத நஞ்சைக் கழுத்தில் அடக்கி வைத்திருப்பவன். எல்லா அண்டங்களுக்கும் தலைவன், மேகங்கள் இறங்கித் தங்கிச் செல்லும் மாளிகைகளை உடைய உத்தரகோசமங்கையில் அழகிய சொற்களைப் பேசும் மங்கள நாயகியோடும் இணைந்து, அடியவர்கள்

மனத்தில் நிலையாக நின்று, அமுதம் ஊறக் கருணைகாட்டி, அவர்களுக்கு இறப்பையும் பிறப்பையும் அறுத்தருள் புரிபவன் - அவனுடைய பொருள் சேர் புகழ்பாடிப் பொன்னூசல் ஆடுவோமாக

333) ஆணோ அலியோ அரிவையோ என்று இருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர் குழாம்
நாணாமே உய்ய ஆட்கொண்டருளி நஞ்சு தனை
ஊண் ஆக உண்டருளும் உத்தரகோசமங்கைக்
கோண் ஆர் பிறைச் சென்னிக் கூத்தன் குணம் பரவிப்
பூண் ஆர் வன முலையீர் பொன் ஊசல் ஆடாமோ. 5

பல அணிகளுக்கு அழுகுதரும் கொங்கைகளை உடைய பெண்களே! திருமால் பிரமன் இருவராலும் ஆணோ பெண்ணோ அலியோ என்று காணமுடியாதபடி அருட்பெருஞ்சோதியான ஆண்டவன், தேவர்களுக்குக் கருணை காட்டி, அவர்கள் "நஞ்சுண்டு அஞ்சும் நாமென்ன தேவர்கள்" என்று வெட்கப்படாமல் இருக்கும் வகையில் அவர்கள் பிழைக்குமாறு ஆட்கொணடு, நஞ்சை அமுதாக உண்டு அருளினான். வளைந்த இளம்பிறையை முடியில் சூடிய கூத்தப்பெருமான் உத்தர கோசமங்கையில் மரகத நடராஜப் பெருமானாக எழுந்தருளியவன் அவன் அருட்குணங்களைப் போற்றிப் பொன்னூசல் ஆடுவோமாக.

334) மாது ஆடு பாகத்தன் உத்தரகோசமங்கைத்
தாது ஆடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டு என் தொல் பிறவித்
தீது ஓடா வண்ணம் திகழப் பிறப்பு அறுப்பான்
காது ஆடு குண்டலங்கள் பாடிக் கசிந்து அன்பால்
போது ஆடு பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ. 6

அணிகள் அணிந்து, மலரத்துடிக்கும் அரும்புகளை வெல்லும் இளமுலைப் பெண்களே! உமையாகிய சக்தியைக் காட்டும் இடப்பாகம் உடையவன், உத்தர கோசமங்கையில் மகரந்தங்கள் மிகுந்த கொன்றை மாலையைச் சடையில் சூடி எழுந்தருளியவன், என் குற்றம் களைந்து, அடியார் கூட்டத்துள் சேர்த்து நாயேனை ஆண்டுகொண்டவன். நான் பழைய பிறவிகளில் செய்த தீவினைகள் அடுத்த பிறவிக்குத் தப்பி

ஓடாவண்ணம் தீர்த்து, நான் விளங்க என் பிறப்பை அறுத்தவன் அவனுடைய செவிகளில் இருந்து, திருப்பாடல்களைக் கேட்டு அசைகின்ற, குண்டலங்களைப் பாடிப் பொன்னூசல் ஆடுவோமாக

335) உன்னற்கு அரிய திரு உத்தரகோசமங்கை
மன்னிப் பொலிந்து இருந்த மா மறையோன் தன் புகழே
பன்னிப் பணிந்து இறைஞ்சப் பாவங்கள் பற்று அறுப்பான்
அன்னத்தின் மேல் ஏறி ஆடும் அணி மயில் போல்
என் அத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில் பாடிப்
பொன் ஒத்த பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ. 7

அணிகளை அணிந்து பொன்போல் திகழும் முலையினை உடைய பெண்களே! நினைக்கவும் முடியாத அளவுக்குப் புகழ்பெற்ற உத்தர கோச மங்கையில், நிலையாக வீற்றிருக்கும் அந்தணனாகிய சிவபெருமான், தன் புகழையே பலமுறை கூறிப் பணிந்து வணங்கும் அன்பர்களின் பாவத் தொடர்புகளை நீக்கி விடுவான். என்னப்பன், என்னையும் ஆட்கொண்டவன். அவன் அழகைப் பாடி, அன்னம் போன்ற ஊசலில் அழகு மயில்களாகிய நாம் ஏறி ஆடுவோமாக!

336) கோல வரைக் குடுமி வந்து குவலயத்துச்
சால அமுது உண்டு தாழ் கடலின் மீது எழுந்து
ஞாலம் மிகப் பரி மேற்கொண்டுநமை ஆண்டான்
சீலம் திகழும் திரு உத்தரகோசமங்கை
மாலுக்கு அரியானை வாய் ஆர நாம் பாடிப்
பூலித்து அகம் குழைந்து பொன் ஊசல் ஆடாமோ. 8

பொன்மலை மேல் கருப்பூரக்குவியல் போல் அழகு பொலியும் திருக்கயிலை மலையுச்சியில் வீற்றிருந்து, அங்கிருந்து இறங்கிப் பூமிக்கு வந்து, வந்தி தரும் பிட்டை அன்பு மிகுதியால் உண்டு, ஆழமான கடலில் கட்டுமரத்தின் மேல் தோன்றி (வலைவீசி மீன்பிடித்து) உலகம் உய்யக் குதிரை மேல் (பரிமேலழகனாய்) எழுந்தருளி இப்படிப் பல உருவம் எடுத்துப் (படாத பாடுபட்டு) நம்மை ஆட்கொண்ட பரமன். அடியார்க்கெளியனாய்த் திருஉத்தர கோசமங்கையில் எழுந்தருளி இருப்பவன். மயங்கிய மனத்தாரால் அறியப்படாதவன். அவனை வாயாரப் பாடிப் பூரித்து மனமகிழ்ந்து பொன்னூசல் ஆடுவோமாக!

337) தெங்கு உலவு சோலைத் திரு உத்தரகோசமங்கைத்
தங்கு உலவு சோதித் தனி உருவம் வந்தருளி
எங்கள் பிறப்பு அறுத்திட்டு எம் தரமும் ஆட்கொள்வான்
பங்கு உலவு கோதையும் தானும் பணி கொண்ட
கொங்கு உலவு கொன்றைச் சடையான் குணம் பரவிப்
பொங்கு உலவு பூண் முலையீர் பொன் ஊசல் ஆடாமோ. 9

திருச்சிற்றம்பலம்

அணிகள் அணிந்து பொங்கிப் பூரிக்கும் இளமுலைப் பெண்கேள! தென்னைகள் மிகுந்த சோலைகள் சூழ்ந்த திருவுத்தர கோசமங்கையில், பேரொளிப் பிழம்பாய்த் தனியுருவம் கொண்டுவந்து, எங்கள் பிறப்பை அறுத்து எல்லா நிலைகளிலும் எம்மை ஆட்கொள்ள, பங்கில் உறையும் உமையும் தானுமாய்த் தோன்றி, நம்மைப்பணியாளாக ஏற்றுக் கொண்டவன் – தேன் மிக்க கொன்றை சூடிய சடையை உடையவன் அவன் அருட்குணத்தைப் போற்றிப் பொன்னூசல் ஆடுவோமாக

வார்மாலை முலையுமையாள் மணவாளன் மலர்க்கழற்கீழ்த்
தார்மாலை எனஞானத் தமிழ்மாலை ததும்பிய கண்
நீர்மாலை உடன் சார்த்தி நிகழ்வாத ஊர்அடிகள்
சீர்மாலை பாடும் அவர் சேவடி என் சிரமீதால்.
- திருவாப்பனூர்ப்புராணம்

எந்தையருளால் கூடல்பதிவந்து ஏறி
எண்ணரிதாம் பரிஅரசுக்கு ஏற ஏற்றி
முந்துதிரு வாசகமாம் மணிக்குலத்தை
மூதுலகோர் இன்புற மாமுகத்தால் தூவி
அந்தமில் ஐந்திணை தழுவு கோவை நின்றும்
அகம் மகிழ வரும்பொருளும் அவனுக்கு ஈந்து
வந்துபெருந் துறைபுகுந்து மலைபுகாத
வாதவூர்த் தமிழ்க்கடலை வணங்கல் செய்வாம்
- (வேதாரண்ய புராணம்) பரஞ்சோதி முனிவர்

17. அன்னைப்பத்து

தில்லையில் அருளியது கலிவிருத்தம்

(மணிவாசகக் காதலி, தன் தோழியை அன்னையே என்று அழைத்துக் காதலனாகிய சிவபெருமான் புகழையும் செயல்களையும் கூறுகிறாள். ஆன்மா சிவத்தோடு ஒன்றி எல்லாம் சிவமயமான ஆத்ம பூரண நிலையை இப்பகுதி காட்டுகிறது)

338) வேத மொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர் இந் நாதனார் அன்னே என்னும். 1

என் தலைவருடைய வாய்மொழி எல்லாம் வேதம். திருமேனி முழுவதும் வெண்ணீறு. பரநாதமாகிய பறையினை உடையவர் அன்னையே என்கிறாள். இந்த நாதப்பறை உடையவர் நான்முகனுக்கும் திருமாலுக்கும் தலைவராவார் என்கிறாள்.

339) கண் அஞ்சனத்தர் கருணைக் கடலினர்
உள் நின்று உருக்குவர் அன்னே என்னும்
உள் நின்று உருக்கி உலப்பு இலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும். 2

அன்னையே! இவர் கண்களில் மை பூசியவர். கருணை செய்வதில் கடல் போன்றவர். உள்ளே நின்று என்னை உருகச் செய்கிறார் என்கிறாள். உள்ளே நின்று நெஞ்சை உருக்கி அதை வெளிப் படையாகக் காட்டுவது போல, வற்றாத ஆனந்தக் கண்ணீர் வடிய வைக்கிறார் என்கிறாள்.

340) நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்து இருப்பரால் அன்னே என்னும்
சித்தத்து இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும். 3

அன்னையே! ஆன்மாவாகிய காதலிக்கு அருள் மணமாலை சூட்டும் அவர் நித்திய கல்யாண சுந்தர மூர்த்தி. மிக மிக அழகானவர் (என் கணவரல்லவா) என் மனத்தில் என்றும் இருப்பவர் என்கிறாள். இப்படி என் சிந்தை கவர்ந்தவர் தென் பாண்டி நாட்டவர்.

திருப்பெருந்துறைத் தலைவர். என் மனத்தில் ஆனந்த மாயிருப்பவர் என்கிறாள்.

341) ஆடு அரப் பூண் உடைத் தோல் பொடிப் பூசிற்று ஓர்
வேடம் இருந்த ஆறு அன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டு கண்டு என் உள்ளம்
வாடும் இது என்னே அன்னே என்னும். 4

அன்னையே! படம் எடுத்தாடும் உயிருள்ள பாம்பை அணியாய் அணிந்தவர். புலித்தோலை ஆடையாகக் கட்டியவர். வெண்ணீறு பூசியவர். இந்த வேடம் தான் (உருவம் கடந்த) அவருக்கு வாய்த்தது இது என்னே என்கிறாள். இந்த வேடத்தை அடிக்கடி கண்டுதான் என் மனம் அவர் மேல் காதல் கொண்டு வாடுகிறது. இது என்ன வியப்பு என்கிறாள்

342) நீண்ட கரத்தர் நெறி தரு குஞ்சியர்
பாண்டி நல் நாடரால் அன்னே என்னும்
பாண்டி நல் நாடர் பரந்து எழு சிந்தையை
ஆண்டு அன்பு செய்வரால் அன்னே என்னும். 5

அன்னையே! நீண்ட திருக்கரங்களை உடையவர். நெருங்கி வளர்ந்த தலைமுடி உடையவர். பாண்டி நாடாகிய நல்ல நாட்டவராமே என்கிறாள் இந்த நற்பாண்டி நாட்டவர், பலவாறு ஓடுகின்ற என் மனத்தை ஒரு நிலைப்படுத்தி அடக்கி ஆண்டு கருணை செய்வார் என்கிறாள்.

343) உன்னற்கு அரிய சீர் உத்தர மங்கையர்
மன்னுவது என் நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவது என் நெஞ்சில் மால் அயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும். 6

அன்னையே! எவராலும் நினைக்கவும் முடியாத சிறப்புடைய இந்த உத்தர கோச மங்கைக்காரர், என் நெஞ்சில் நிலைபெற்று நின்று விட்டாரே - என்கிறாள். என் நெஞ்சில் கூட வந்திருக்கும் எளியவரான இப்பெருமானைத் திருமாலும் பிரமனும் காணமுடியவில்லையாமே இது என்ன அதியம் என்கிறாள்.

344) வெள்ளைக் கலிங்கத்தர் வெண் திருமுண்டத்தர்
பள்ளிக் குப்பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக் குப்பாயத்தர் பாய் பரி மேற்கொண்டு என்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும். 7

அன்னையே! தூய்மையைக் காட்டும் வெள்ளை ஆடை அணிந்தவர். வெள்ளையான நீறு பூசிய நெற்றியை உடையவர். துறவிகள் வாழும் அறச்சாலைகளில் உள்ளது போல, கணுக்கால் வரை தொங்கும் சட்டை அணிந்தவர் என்கிறாள். இந்தத் துறவுச் சட்டை அணிந்தவர்தான் பாய்ந்து வரும் குதிரை மேல் தோன்றி என் உள்ளத்தைக் கவர்ந்தவர் என்கிறாள்.

345) தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆள் எம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆள் எம்மை ஆளும் அடிகளார் தம் கையில்
தாளம் இருந்த ஆறு அன்னே என்னும். 8

அன்னையே! கூதாளி மலரையும் அறுகம் புல்லையும் அணிந்தவர். மணமிக்க சந்தனச் சாந்து பூசியவர். இவர் தான் என்னை ஆளாக ஏற்றுக் கொண்டு அருள் செய்தவர் என்கிறாள். இப்படி ஆட்கொள்ளும் அடிகளார் திருக்கரங்களில் பிச்சை ஏற்கும் உண்கலம் இருக்கிறதே. இது என்ன வியப்பு என்கிறாள்.

346) தையல் ஓர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்து அவர் போதலும் என் உள்ளம்
நையும் இது என்னே அன்னே என்னும். 9

அன்னையே! ஒரு பக்கம் பேரழகுப் பிழம்பான தையல் நாயகியை இடப்பாதியாகத் தாங்கி நின்று போகத்தைக் காட்டுகிறார் மறுபக்கம் தவவேடம் தாங்கிப் பிச்சை எடுத்து யோகத்தைக் காட்டுகிறார் - இது என்ன முரண்பாடு என்கிறாள். என்னதான் துறவுக் கோலத்தில் வந்தாலும், அவர் பிச்சை வாங்கிப் போனதும் என் மனம் அவரோடு போக மாட்டாமல் நைந்து வாடுகிறதே இது ஏன் என்கிறாள்.

347) கொன்றை மதியமும் கூவிளம் மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம் உன்மத்தமே
இன்று எனக்கு ஆன ஆறு அன்னே என்னும். 10

அன்னையே! அவர் கொன்றைப்பூ, பிறைமதி, வில்வத்தளிர் இவற்றோடு ஊமத்தம் பூவையும் தன் திருமுடியில் சூடியிருக்கிறார் என்கிறாள். இத்தனை பூக்கள் இருந்தாலும் அந்த ஊமத்தம்பூ தான் மிகவும் அழகாக இருக்கிறது அதிலே ஒட்டியுள்ள மத்தம் தான் உன்மத்தமாக வந்து என்னை இப்படிப் பைத்தியமாக்கி விட்டதோ என்கிறாள்.

18.குயிற்பத்து

தில்லையில் அருளியது அறுசீர் ஆசிரிய விருத்தம்

(ஆத்மநாதப் பெருமானை அடைய முடியாத தலைவி, துன்ப மிகுதியால் இரங்கிக் குயிலைத் தூது விடுப்பது போலக் கூவச் சொல்கிறாள். இது அவன் பெருமை கூறி அவன் வர அழைப்பதாகும்)

348) கீதம் இனிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவில்
பாதாளம் ஏழினுக்கு அப்பால்
சோதி மணிமுடி சொல்லின்
சொல் இறந்து நின்ற தொன்மை
ஆதி குணம் ஒன்றும் இல்லான்
அந்தம் இலான் வரக் கூவாய். 1

கேட்பதற்கு இனிமையாய்ப் பாடக்கூடிய குயிலே! உன் தலைவன் யார் என்று என்னிடம் நீ கேட்பாயானால் எங்கள் பெருமான் இயல்பை உன்னிடம் கூறுகிறேன். அவன் திருவடிகள் எங்கே உள்ளன என்று வினவினால், அவை கீழேயுள்ள ஏழாவது உலகான பாதாளத்தையும் தாண்டி அப்பால் நிற்பவை. அவனுடைய ஒளிமிக்க மணிமுடி இருக்கும் இடம் எங்கே தெரியுமா? அது சொல்லின் எல்லையைக் கடந்து நிற்கும் மிகப் பழமையானது. எல்லாவற்றுக்கும் ஆதியாய் இருப்பவன், குணங்கள் அற்றவன், தனக்கு முடிவில்லாதவன்; இத்தகைய பெருமான் இங்கே வரும் வண்ணம் நீ கூவுவாயாக.

349) ஏர் தரும் ஏழ் உலகு ஏத்த
எவ் உருவும் தன் உருஆய்
ஆர் கலி சூழ் தென் இலங்கை
அழகு அமர் மண்டோதரிக்குப்
பேர் அருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயால் குயிலே
தென் பாண்டி நாடனைக் கூவாய். 2

ஒன்றுக்கொன்று மேலே திகழ்ந்து எழுச்சியைக் காட்டும் ஏழு உலகத்தவரும் போற்றுமாறு, எல்லா வடிவங்களும் தன் வடிவமே

ஆக, கடல் சூழ்ந்த தென்னிலங்கையில் இருந்த அழகு மிக்க மண்டோதரிக்குப் பேரருள் புரிந்து பேரின்ப மளித்த திருப்பெருந்துறைப் பெருமானை, தென்பாண்டி நாட்டானை, குயிலே! உன் புகழ் மிக்க வாயால் வரக் கூவுவாயாக!

350) நீல உருவின் குயிலே
நீள் மணி மாடம் நிலாவும்
கோல அழகின் திகழும்
கொடி மங்கை உள்ளுறை கோயில்
சீலம் பெரிதும் இனிய
திருஉத்தர கோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த
நாயகனை வரக் கூவாய். 3

நீலக் கருங்குயிலே! மணிகள் பதிக்கப்பட்ட நீண்டுயர்ந்த மாடங்களைக் கொண்டதும், ஒழுக்கமிக்கவர்கள் வாழ்வதால் வாழ இனியதுமான திருவுத்தரகோச மங்கையில், மிகுந்த அழகோடு விளங்கும் பூங்கொடியான உமையவள் எழுந்தருளியுள்ள திருக்கோயிலில், உலகமெல்லாம் சிவஞானம் பெற்று விளங்குவதற்காகவே வீற்றிருக்கின்ற என் காதலனை (உன் குரல் கேட்டு இங்கே வருமாறு) கூவுவாயாக!

351) தேன் பழச் சோலை பயிலும்
சிறு குயிலே இது கேள் நீ
வான் பழித்து இம் மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன் பழித்து உள்ளம் புகுந்து என்
உணர்வு அது ஆய ஒருத்தன்
மான் பழித்து ஆண்ட மென் நோக்கி
மணாளனை நீ வரக் கூவாய். 4

தேன் மிகுந்த பழங்களையுடைய சோலையிலேயே இடைவிடாது ஒலிக்கும் சிறுகுயிலே! இதைக் கேட்பாயாக. போக பூமியாகிய வானுலகை இகழ்ந்து, இம் மண்ணுலகை விரும்பி வந்து மனிதர்களாகிய மெய்யடியாரை ஆட்கொள்ளும் வள்ளல் தன்மை உடையவன் - இந்த உடலை இகழ்ந்து உள்ளத்தில் புகுந்து உணர்வில் கலந்த ஒப்பற்ற பரம்பொருள், மானைத் தன் மருண்ட பாாவையால்

வென்ற, மெல்லிய திருக்கடைக்கண் பார்வையுடைய உமையவள் மணவாளன் – அவன் கவனத்தை ஈர்த்து, என் பால் வரக் கூவுவாயாக!

352) சுந்தரத்து இன்பக் குயிலே
சூழ் சுடர் ஞாயிறு போல
அந்தரத்தே நின்று இழிந்து இங்கு
அடியவர் ஆசை அறுப்பான்
முந்தும் நடுவும் முடிவும்
ஆகிய மூவர் அறியாச்
சிந்துரச் சேவடியானைச்
சேவகனை வரக் கூவாய். 5

கண்ணுக்கு அழகும் காதுக்கு இன்பமும் தரும் குயிலே! பல கிரகங்கள் சூழ நடுவில் இருக்கும் கதிரவன் புற இருளை ஓட்டுவது போல, வானிலிருந்து மண்ணில் இறங்கி அடியவர் அக இருளாகிய ஆசைகளை நீக்குபவன், முதல், நடு, முடிவு, எனப்படும் ஆக்கல், காத்தல், அழித்தல் மூன்றையும் செய்யும் அயன் அரி அரன் ஆகிய மூவரும் அறிய மாட்டாதவன் – சிவந்த திருவடிகளை உடைய அந்த ஞான வீரனை வரும் படிக் கூவுவாயாக.

353) இன்பம் தருவன் குயிலே
ஏழு உலகும் முழுது ஆளி
அன்பன் அமுது அளித்து ஊறும்
ஆனந்தன் வான் வந்த தேவன்
நன் பொன் மணிச்சுவடு ஒத்த
நல் பரி மேல் வருவானை
கொம்பின் மிழற்றும் குயிலே
கோகழி நாதனைக் கூவாய். 6

மாமரக் கொம்பிலிருந்து இனிமையாய்க்கூவும் குயிலே! உனக்கு நல்ல உணவு தருவேன். ஏழு உலகங்களையும் அதற்கு அப்பாற்பட்ட அண்டங்கள் முழுவதையும் ஆள்பவன். அன்பே வடிவானவன். அடியார்களுக்கு அமுதூட்டும் ஆனந்த மயமானவன். வானிலிருந்து வந்த கடவுள், நல்ல பொன்னில் மணியைப் பதித்து நடக்க விட்டது போன்ற நல்ல குதிரைமேல் ஏறிவரும் நாயகன் – திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் என் நாதன் வரக் கூவுவாயாக!

354) உன்னை உகப்பன் குயிலே
உன் துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்த நன் மேனிப்
புகழின் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப் புயங்கன் வரக் கூவாய். 7

குயிலே! உன்னைப் பார்த்தால் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நான் உனக்குத் துணையாக நல்ல தோழியாக இருக்கலாம் என்று எண்ணுகிறேன். மாற்றுடைய பொன்னை வென்ற மாற்றறியாத செழும் பசும்பொன் போன்ற திருமேனி உடையவன், அடியார்கள் தன்புகழ் பாடும் திருப்பாடல்களில் திகழும் அழகன், என் மனங்கவர்ந்த மன்னன், குதிரை மேல் காட்சி தந்த வள்ளல், திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் பாண்டியன், சேரன், சோழன், பாம்பணிந்த பெருமான் வரக் கூவுவாயாக!

355) வா இங்கே நீ குயில் பிள்ளாய்
மாலொடு நான்முகன் தேடி
ஓவி அவர் உன்னி நிற்ப
ஒண் தழல் விண் பிளந்து ஓங்கி
மேவி அன்று அண்டம் கடந்து
விரி சுடராய் நின்ற மெய்யன்
தாவி வரும் பரிப் பாகன்
தாழ் சடையோன் வரக் கூவாய். 8

இளமையான குயிலே! இங்கே வா. திருமாலும் நான்முகனும் தேடிக் களைத்துச் செய்வதறியாமல் திகைத்து நிற்க, பெருஞ்சோதியாய் வானத்தையும் பிளந்து கொண்டு மேலே சென்று, எல்லா அண்டங்களையும் கடந்து விரிந்த சுடராக விளங்கிய மெய்ப்பொருள், ஆனால் நமக்கோ அவன் தாவித் தாவி வரும் குதிரைக் கூட்டத்திற்குத் தலைவன், திருவடியைக் காட்டுவது போலத் தாழ்ந்து தொங்கும் சடையை உடையவன் - அவன் வரக் கூவுவாயாக!

356) கார் உடைப் பொன் திகழ் மேனிக்
கடி பொழில் வாழும் குயிலே
சீர் உடைச் செம் கமலத்தில்
திகழ் உரு ஆகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப்
பாசம் அறுத்து எனை ஆண்ட
ஆர் உடை அம் பொனின் மேனி
அமுதினை நீ வரக் கூவாய். 9

கார் வண்ணமும் பொன்னிறமும் கலந்து திகழக் கவின் மிக்க உடலோடு, மணமிகுந்த சோலைகளில் வாழும் கருங்குயிலே! சிறப்பு மிகுந்த நம் இதயத் தாமரையில் விளங்குகின்ற ஒளி வடிவமான அருட்செல்வன். இம்மண்ணில் தன் திருவடிபடுமாறு மனித உருக் கொண்டுவந்து, பாசத் தளையறுத்து என்னை ஆட்கொண்டவன் - கிடைத்தற்கரிய பொன் போன்ற மேனியன் - வாழ்விக்கும் அமுதம் போன்றவன் - அவன் வரக் கூவுவாயாக!

357) கொந்து அணவும்பொழில் சோலைக்
கூங் குயிலே இது கேள் நீ
அந்தணன் ஆகி வந்து இங்கே
அழகிய சேவடி காட்டி
எம் தமர் ஆம் இவன் என்று இங்கு
என்னையும் ஆட்கொண்டருளும்
செந்தழல் போல் திரு மேனித்
தேவர் பிரான் வரக் கூவாய். 10

பூங்கொத்துக்கள் நிறைந்த சோலையிலிருந்து கூவுகின்ற குயிலே! இதைக் கேள் - திருப்பெருந்துறையில் அந்தணக் கோலத்துடன் வந்து, இந்த மண்ணில் தன்னுடைய அழகான திருவடியைக் காண வைத்து, இவன் எம்முடைய உறவினர்களில் ஒருவன் என்று என்னையும் ஆட்கொண்டு அருள் செய்த பெருங்கருணையாளன் - செந்தீப் போல் மேனியினான் - தேவர் தலைவன் அவன் வரக்கூவுவாயாக!

(காதலனைத் தேடிக் காதலி செல்வது மரபல்ல என்பதால் உன்னைத் தூது போகச் சொல்கிறேன். நீயும் பெண்தானே - அவன் வரக் கூவுவாய்)

19.திருத்தசாங்கம்

தில்லையில் அருளியது நேரிசை வெண்பா

(இறைவனுக்குரிய பத்து உறுப்புகளைக் கூறி அவன் நம்மை அடிமை கொண்ட முறையை உணர்த்துவது இப்பகுதி. திருத்தசாங்கம் கீர்த்தித் திருவகவலிலும் கூறப்பட்டுள்ளது)

358) ஏர் ஆர் இளம் கிளியே எங்கள் பெருந்துறைக் கோன்
சீர் ஆர் திரு நாமம் தேர்ந்து உரையாய் - ஆரூரன்
செம்பெருமான் வெள்மலரான் பால் கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர் பிரான் என்று. 1

"அழகும் இளமையுமிக்க கிளியே! எங்கள் திருப் பெருந்துறை மன்னனுடைய பெருமைமிக்க திருப்பெயரை ஆராய்ந்து உரைப்பாயாக" என்று தலைவி கேட்கிறாள் "படைப்புத் தொழில் புரிய வெண் தாமரையில் வீற்றிருக்கும் நான்முகன், அந்தத் தொழில் நடப்பதற்காகச் சிவபெருமானைச் செம்பவள மலைபோல் கண்டு தியானித்துச் சிவந்த பெருமான் என்றழைக்கிறான். பாற்கடலில் துயிலும் பரந்தாமன் தன் நெஞ்சில் தியாகேசப் பெருமானை வைத்து வழிபடுவதால் ஆரூரன் என்றழைக்கிறான். நீ எம்பெருமானைத் தேவதேவன் என்று சொல்" என்று கிளி விடை கூறுகிறது.

359) ஏதம் இலா இன் சொல் மரகதமே ஏழ் பொழிற்கும்
நாதன் நமை ஆளுடையான் நாடு உரையாய் - காதலவர்க்கு
அன்பு ஆண்டு மீளா அருள் புரிவான் நாடு என்றும்
தென் பாண்டி நாடே தெளி. 2

குற்றமற்ற சொற்களை இனிமையாகச் சொல்லும் மரகதப் பச்சைக் கிளியே! ஏழுலகத் தலைவன், நம்மை ஆட்கொண்டவன் - அவனுடைய நாடு எது - (தலைவி)

தன் மீது காதல் கொண்டவர் மேல் (அதைவிட அதிகமாகத்) தானும் அன்பு கொண்டு மீண்டும் பிறக்காத வண்ணம் அருள் புரிபவன் ஆகிய சிவபெருமான் நாடு என்றென்றும் தென் பாண்டி நாடேயாகும். இதை நீ தெளிவாயாக - (கிளி)

360) தாது ஆடு பூஞ்சோலைத் தத்தாய் நமை ஆளும்
மாது ஆடும் பாகத்தன் வாழ் பதி என்? - கோதாட்டிப்
பத்தர் எல்லாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும்
உத்தரகோசமங்கை ஊர். 3

மகரந்தங்கள் செறிந்த பூக்கள் மிகுந்த சோலையில் வாழும் கிளியே! நம்மை ஆளுகின்ற உமையாள் ஒரு பாகன் வாழ்கின்ற ஊர் எது? - (தலைவி)

என்றும் புகழ்பாடி இப்புவியில் பக்தரெல்லாம் கயிலாயம் போலக் கொண்டாடும் உத்தர கோச மங்கையே ஊராகும் - (கிளி)

361) செய்ய வாய்ப் பைஞ் சிறகின் செல்வீ நம் சிந்தை சேர்
ஐயன் பெருந்துறையான் ஆறு உரையாய் - தையலாய்
வான் வந்த சிந்தை மலம் கழுவ வந்து இழியும்
ஆனந்தம் காண் உடையான் ஆறு. 4

(சிவபெருமான் நிறம் போலச்) சிவந்த வாயும், (பார்வதியின் நிறம் போலப்) பச்சைச் சிறகும் கொண்ட செல்வக்கிளியே! நம் மனத்தில் என்றும் இடங்கொண்ட தலைவனாகிய திருப்பெருந்துறைப் பெருமானுடைய ஆறு எதுவெனச் சொல்வாய் - (தலைவி)

பெண்ணே! வானுயர்ந்த மனம், தன்னிடமுள்ள மலமாகிய ஆணவத்தைக் கழுவ, வந்து இறங்குகின்ற சிவானந்தமே நம்மை உடையவன் ஆறாகும் - (கிளி)

362) கிஞ்சுக வாய் அஞ்சுகமே கேடு இல் பெருந்துறைக் கோன்
மஞ்சு மருவும் மலை பகராய் - நெஞ்சத்து
இருள் அகல வாள் வீசி இன்பு அமரும் முத்தி
அருளும் மலை என்பது காண் ஆய்ந்து. 5

முள்முருக்க மலர் போலச் சிவந்த வாயை உடைய கிளியே! என்றும் கேடில்லாத திருப்பெருந்துறைத் தலைவனாகிய மைந்தன் எழுந்தருளும் மலையாது - (தலைவி)

மனத்திலுள்ள அறியாமை இருள் நீங்க, ஞான வாள் வீசி, இன்பம் தரும் வீட்டுலகை அருளுகின்ற மலை எதுவோ அதுவே அவன் மலை. இதை நீ ஆய்ந்து காண்க - (கிளி)

363) இப் பாடே வந்து இயம்பு கூடு புகல் என் கிளியே
ஒப்பு ஆராச் சீர் உடையான் ஊர்வது என்னே - எப்போதும்
தேன் புரையும் சிந்தையராய்த் தெய்வப்பெண் ஏத்து இசைப்ப
வான் புரவி ஊரும் மகிழ்ந்து. 6

என் அன்புக்கிளியே! இந்தப் பக்கம் வந்து சொல். அதற்குள் என்ன கூட்டிற்குள் நுழைகிறாய்? ஒப்பு உரைக்க முடியாதவன் எந்த ஊர்தியில் வருகிறான்? –(தலைவி)

தேன் போன்ற சிந்தையும் சொல்லும் கொண்ட தெய்வப் பெண்கள் போற்றி செய அவன் எப்போதும் மகிழ்ந்து ஊர்வது ஞானாகாயமாகிய குதிரையே யாகும் – (கிளி)

364) கோல் தேன் மொழிக் கிள்ளாய் கோது இல் பெருந்துறைக் கோன்
மாற்றாரை வெல்லும் படை பகராய் - ஏற்றார்
அழுக்கு அடையா நெஞ்சு உருக மும் மலங்கள் பாயும்
கழுக்கடை காண் கைக்கொள் படை. 7

கொம்புத்தேன் போல் இனிய மொழி பேசும் கிளியே! குற்றமற்ற திருப்பெருந்துறைத் தலைவன், தன் பகைவர்களை வெல்லும் படைக்கலம் எது? சொல்வாய் – (தலைவி)

எதிர்த்தவர் ஆணவ அழுக்கை மாற்றி அவர்களைக் கசிந்துருகவைத்து, அவர்களுடைய மும்மலங்களின் மேல் பாயும் முத்தலைச்சூலமே அவன் கைப்படையாகும் – (கிளி)

365) இன் பால் மொழிக் கிள்ளாய் எங்கள் பெருந்துறைக் கோன்
முன் பால் முழங்கும் முரசு இயம்பாய் - அன்பால்
பிறவிப் பகை கலங்கப் பேரின்பத்து ஓங்கும்
பரு மிக்க நாதப் பறை. 8

பால் போலப் பேசும் பசுங்கிளியே! எங்கள் திருப்பெருந் துறைநாதன் திருமுன்பு முழங்குகின்ற முரசு எது என மொழிவாய் – (தலைவி)

அடியார்களின் பேரன்பால், அவர்களுடைய பிறவியாகிய பகை கலங்குமாறு பேரின்ப ஒலி கொடுக்கும் பரநாதமே அவன் பறையாகும் – (கிளி)

366) ஆய மொழிக் கிள்ளாய் அள்ளூறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த் தார் என் - தீய வினை
நாளும் அணுகா வண்ணம் நாயேனை ஆளுடையான்
தாளி அறுகு ஆம் உவந்த தார். 9

ஆராய்ந்து பேசும் அருட்கிளியே! வாயூறப் புகழ் பேசும் மெய்யன்பர்கள்பால் என்றும் விரும்பிச் சேர்ந்திருக்கும் திருப்பெருந்துறை நாதன் அணிந்துள்ள உண்மையான மாலை எது? - (தலைவி)

எந்த நாளும் தீவினை அணுகாதபடி நாயேனைக் காத்து ஆட்கொண்டவன் விரும்பியணியும் மாலை மிக எளிய கொடிஅறுகு மாலையே ஆகும் - (கிளி)

367) சோலைப் பசுங்கிளியே தூ நீர்ப் பெருந்துறைக் கோன்
கோலம் பொலியும் கொடி கூறாய் - சாலவும்
ஏதிலார் துண் என்ன மேல் விளங்கி ஏர் காட்டும்
கோது இலா ஏறு ஆம் கொடி. 10

திருச்சிற்றம்பலம்

சோலையில் இருக்கும் பச்சைக்கிளியே! தூய்மையான தீர்த்தங்கள் உள்ள திருப்பெருந்துறைத் தலைவன் - அவனுடைய அழகு விளங்கும் கொடி எதுவெனக் கூறுவாயாக - (தலைவி)

அவனுக்கு மாறுபட்டவர்கள் மிகவும் திடுக்கிட, வானத்தின் மேல் பறந்து, அழகும் வெற்றியும் காட்டும் குற்றமில்லாத இடபக் கொடியே அவன் கொடியாம் - (கிளி)

உள்ளமாகிய புலத்தினைப் பக்தியால் உழுது
தெள்ளுஞானவித்து உறுத்து நல்சிரத்தை நீர்பாய்ச்சிக்
கள்ளவன்பொறி களைகள் கட்டு ஆனந்தம்விளைத்துக்
கொள்ளைகூறும் மாணிக்கவாசகன் கழல் குறிப்பாம்.
- பேரூர்ப் புராணம்

20. திருப்பள்ளி எழுச்சி

திருப்பெருந்துறையில் அருளியது எண்சீர் ஆசிரிய விருத்தம்

(நம்மை எழுப்பிய பெருமானை நாம் எழுப்புவது திருப்பள்ளி எழுச்சி. புறத்திருள் நீங்கும் போது அகத்திருளும் நீங்க அவனைப் பாடுவது. இதுவரை வினைப் போகம் தந்த மறைப்பு சக்தி, அருட்சக்தியாக மாறுவதையும், மறைத்த மலம் நீங்க, அறியாமைத் துயில் நீங்கி அறிவு விழிப்படைவதையும் இப்பகுதி கூறுகிறது)

368) போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற்கு இணை துணை மலர்கொண்டு
ஏற்றி நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்
சேற்று இதழ்க் கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
ஏற்று உயர் கொடி உடையாய் எமை உடையாய்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 1

எங்கள் வாழ்வுக்குப் பொருளாகவும் மூலமாகவும் இருக்கும் பெருமானே! உனக்கு வணக்கம். பொழுது விடிந்தது. உன் பூப்போன்ற திருவடிகளில் அணிவிப்பதற்காக ஒன்றுக்கொன்று இணையான இருபூக்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அவற்றைச் சாத்தி, உன்னுடைய திருமுகத்தில் எமக்கு அருள் மலரச் செய்கின்ற அழகான புன்முறுவலை மனத்தினால் காண்கிறோம். உன் திருவடிதொழுகிறோம். சேற்றில் மலரும் செந்தாமரைகளும், குளிர்ச்சிமிக்க வயல்களும் சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளும் சிவபெருமானே! ஏந்திப் பிடித்த இடபக் கொடியை உடையவனே! எம்மை அடிமையாகப் பெற்றவனே! எங்கள் பிரானே! படுக்கையிலிருந்தும் எழுந்தருள்வாயாக!

369) அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள் போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ நயனக்
கடி மலர் மலர மற்று அண்ணல் அம் கண் ஆம்
திரள் நிரை அறு பதம் முரல்வன இவை ஓர்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே
அலை கடலே பள்ளி எழுந்தருளாயே. 2

கதிரவன் தேரைச் செலுத்தும் அருணன், இந்திரனுக்குரிய கிழக்குத் திசைக்கு வந்து சேர்ந்து விட்டான். இருள் போய் விட்டது. உதய ஒளி பரவுகிறது. உன் மலர் போன்ற திருமுகத்தில் கருணையாகிய சூரியன் மெதுவாக எழ எழ, அதனால் கண்களாகிய தாமரைகள் மலர, அதைக்காண்பதற்கு அடியார்களின் கண்களாகிய வண்டுகள் வரிசையாய்த் திரண்டு ஒலிக்கின்றன. இவற்றை உன் திருவுள்ளத்தில் எண்ணித் திருப்பெருந்துறைப் பெருமானே! திருவருட் செல்வம் தரவரும் ஆனந்த மலையே! அருட் கடலே! பள்ளியிலிருந்தும் எழுந்தருள்க!

370) கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ நல் செறி கழல் தாள் இணை காட்டாய்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
யாவரும் அறிவு அரியாய் எமக்கு எளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 3

இருள் நீங்க, அழகிய குயில் கூவிவிட்டது. சேவற்கோழியும் கூவியது. நாரைகள் ஒலி செய்தன. வெண்மையான சங்குகள் ஒலித்தன. விண்மீன்கள் ஒளி குறைந்தன. சூரிய உதய காலத்து ஒளி திரண்டெழுந்தது. இந்நிலையில் எங்கள் மேல் விருப்பம் கொண்டு தேவ தேவனே! வீரக் கழலணிந்த உன் திருவடிகளைக் காட்டி அருள வேண்டும். திருப்பெருந் துறையில் வளரும் சிவபெருமானே! யாவராலும் அறிதற்கரியவனே! எங்கள் அன்புக்கு எளியவனே! எம்பெருமானே! பள்ளி எழுந்தருள்வாயாக.

371) இன் இசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டு இன் அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 4

உன் திருச்சந்நிதியில் இனிமையான இசையெழுப்பும் வீணையை உடையவர்களும், யாழ்வாசிப்பவர்களும் ஒரு புறம்

நிற்கிறார்கள். இருக்கு முதலிய வேத மந்திரங்களையும், தோத்திரப் பாடல்களையும் ஓதுகின்றவர்கள் ஒரு பக்கம் இருக்கிறார்கள். இரண்டிரண்டு மலராகக் காம்போடு காம்பாக மாறி வைத்துக் கட்டப்பட்ட மாலைகளை ஏந்திய கையினர் ஒருபால் இருக்க, உன்னைத் தொழுபவரும் அழுபவரும் துவண்டு விழுபவருமாக உன் பக்தர் கூட்டம் ஒருபால் இருக்கிறது. தலைமேல் கரம் கூப்பிக் கும்பிடுவோர் ஒரு பக்கம் இருக்கிறார்கள். திருப்பெருந்துறைப் பெருமானே! இவ்வளவு பக்தியுள்ளவர்களோடு, ஒன்றுக்கும் பற்றாத என்னையும் ஆட்கொண்டு இனிய திருவருள் புரிபவனே! எம்பிரானே! பள்ளி எழுந்தருள்வாயாக!

372) பூதங்கள் தோறும் நின்றாய் எனில் அல்லால்
போக்கு இலன் வரவு இலன் என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டு அறியோம் உனைக் கண்டு அறிவாரைச்
சீதம் கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள் முன் வந்து
ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 5

எம்பெருமானே! ஐம்பூதங்களிலும் நீ கலந்திருக்கிறாய் என்றும் உனக்கு முடிவும் இல்லை தோற்றமும் இல்லை என்றும் புலமை மிக்க ஞானிகள் பாடல்கள் மூலம் பாடுவதும் ஆடுவதும் செய்கிறார்களே தவிர, உன்னை நேரில் கண்டு வழிபட்டவர் யாரென்று நாங்கள் காதால் கேட்டும் அறிந்ததில்லை. குளிர்ச்சி மிக்க வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறை மன்னனே! சிந்திப்பதற்கும் அருமையானவனே! எங்கள் முன்னே மனித வடிவில் வந்து எங்கள் துன்பங்களை நீக்கி எங்களை அடிமைகளாக ஆண்டருள் வழங்கும் எம்பெருமானே! நாங்கள் காணுமாறு பள்ளி எழுந்தருள்வாயாக.

373) பப்பு அற வீட்டு இருந்து உணரும் நின் அடியார்
பந்தனை வந்து அறுத்தார் அவர் பலரும்
மைப்பு உறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா
செப்பு உறு கமலங்கள் மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டு அருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 6

பரபரப்பு இல்லாமல், பாசங்களை விட்டு உன்னையே உணரும் உன்னடியார்களும், மேலுலகங்களில் சென்று வினைப் போகம் துய்த்து, பந்தபாசக் கட்டுகளை அறுத்தவர் பலரும், மனித இயல்புடையவராகிக் காதலனைப் பிரிந்த மைதீட்டிய கண்களை உடைய காதலியின் நிலையில் நின்று உன்னை வணங்குகிறார்கள். உமையாள் மணவாளனே! செம்புக்கிண்ணம் போன்ற தாமரை மலர்கள் மலர்ந்துள்ள குளிர்ந்த வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே! இந்தப் பிறப்பை அறுத்து எங்களை அடிமை கொண்டருளும் எம்பிரானே! பள்ளி எழுந்தருள்வாயாக.

374) அது பழச் சுவை என அமுது என அறிதற்கு
அரிது என எளிது என அமரரும் அறியார்
இது அவன் திரு உரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளும்
மது வளர் பொழில் திரு உத்தரகோச
மங்கை உள்ளாய் திருப்பெருந்துறை மன்னா
எது எமைப் பணி கொளும் ஆறு அது கேட்போம்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 7

நீ தரும் சிவப்பேரின்பம் பழச்சுவை போன்றதென்றும், அமுதம் போலிருக்கும் என்றும், அடைவதற்கு அரிதானதென்றும், எளியது என்றும் பேசக்கூடிய தேவர்கள் உண்மையில் அதை அறிந்ததில்லை. ஆனால் நாங்கள் இதுவே அவன் திருவுருவம் என்றும், இவனே அவன் என்றும் உறுதியாகச் சொல்லுமாறு எங்களை ஆட்கொண்டு, இம்மண்ணில் எழுந்தருளும் தேன் மிக்க சோலைகள் சூழ்ந்த திருவுத்தர கோச மங்கையில் இருப்பவனே! திருப்பெருந்துறை மன்னனே! எங்களைத் தொண்டு கொள்ளும் வகை எதுவெனக் கேட்கிறோம். எம்பெருமானே! எங்களுக்குத் தெளிவுதரப் பள்ளிஎழுந்தருள்வாயாக!

375) முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்
பந்து அணை விரலியும் நீயும் நின் அடியார்
பழங் குடில்தொறும் எழுந்தருளிய பரனே
செந்தழல் புரை திரு மேனியும் காட்டித்
திருப்பெருந்துறை யுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டி வந்து ஆண்டாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே. 8

எல்லா உலகங்களுக்கும் முந்திய தோற்றமும் காப்பும் முடிவும் ஆனவனே! பிரம்மா விஷ்ணு ருத்ரன் என்ற மூவரும் உன்னை அறியும் அறிவற்றவர் என்றால் வேறு யார் உன்னை உள்ளபடி அறிவார்கள்? பந்து வந்து அணையும் மெல்லிய விரல்களையுடைய உமையும் நீயுமாக, உன்னடியார்களுடைய பழைய குடிசைகளாகிய நைந்த உள்ளம் தோறும் எழுந்தருளும் பரம்பொருளே! எனக்குச் சிவந்த நெருப்புப் போன்ற திருமேனியைக் காட்டி, திருப்பெருந்துறையில் நீ எழுந்தருளிய கோயிலைக்காட்டி, அந்தணனாக உன் தோற்றத்தையும் காட்டி, வலிய வந்து ஆண்டாய். அடைவதற்கு அருமையான அமுதமே! பள்ளி எழுந்தருள்வாயாக.

376) விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே உன தொழுப்பு அடியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே
வண் திருப்பெருந்துறையாய் வழி அடியோம்
கண் அகத்தே நின்று களிதரு தேனே
கடல் அமுதே கரும்பே விரும்பு அடியார்
எண் அகத்தாய் உலகுக்கு உயிர் ஆனாய்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே. 9

வானகத்தில் உள்ள தேவர்கள் அணுகவும் முடியாத மேலான மெய்ப்பொருளே! உன் குற்றேவல் செய்யும் அடித் தொண்டர்களாகிய எங்களுக்குக் குருவாக வந்து, இம்மண்ணுலகில் நாங்கள் வாழச் செய்தவனே! வண்மை மிக்க திருப்பெருந்துறைச் செல்வனே! பரம்பரை பரம்பரையாக உனக்குத் தொண்டு செய்யும் எங்கள் கண்ணுக்குள் பாவையாக இருந்து மகிழ்வூட்டும் தேன் போன்றவனே! பாற்கடலில் வந்த அமுதமே! கரும்புச்சாறே! உன்னை விரும்பும் மெய்யன்பர்கள் எண்ணத்துள் இருப்பவனே! எல்லா உலகங்களுக்கும் உயிராய் இருப்பவனே! எம்பிரானே! பள்ளி எழுந்தருள்வாயாக!

377) புவனியில் போய்ப் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்றஆறு என்று நோக்கித்
திருப்பெருந்துறை உறைவாய் திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும் அலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்
ஆர் அமுதே பள்ளி எழுந்தருளாயே. 10

திருச்சிற்றம்பலம்

பூமியில் சென்று பிறவி எடுக்காமல் வீணாக நாட்களைப் போக்கி விட்டோமே. இந்தப் பூமி சிவபெருமான் திருவருள் பெற்று உய்வதற்குரிய வழியல்லவா என்று பலகால் சிந்தித்துத் திருப்பெருந்துறைச் செல்வனே! திருமாலாகிய அவன் விரும்பவும் பிரமன் ஆசைப்படவும் உன்னுடைய மலர்ந்த மெய்யான திருக்கருணையான திருவருட்சக்தியும், நீயும், இந்த உலகில் புகுந்து எம்மை ஆளாகக் கொள்ள வல்லவனே! அருமை மிக்க அமுதனே! பள்ளி எழுந்தருள்வாயாக!



செழியர்குல பதிகொடுத்த மாடு கொண்டு
சென்று திருப்பெருந்துறையில் செறிந்த சம்புப்
பழிவிரவு பரித்திரள் கொண்டு அணைந்து மாறன்
பணித்த இடர்க்கு இரங்கி அருள்பாடிப்போற்றி
வழியமுத கிரணநிலா மகுடம் மீதே
மதுரைஅமர் பரம்பரனை வந்திக்காகச்
சுழிபெருகு புனல்தரங்க வைகை வாய்மண்
சுமப்பித்தார் பதம் தலைமேல் சுமத்தல் செய்வாம்

\- சேதுபுராணம்

21. கோயில் மூத்த திருப்பதிகம்

தில்லையில் அருளியது அறுசீர் ஆசிரிய விருத்தம்

(இறைவனுக்குள் அருட்சக்தியும், அருட்சக்தி வசப்பட்டு இறைவனும் அடியார்களிடம் இருவரும் இருப்பதை உரைப்பது இது. முதிர்ந்த அனுபவம் காட்டுவதும் நல்கா தொழியான் என்று நம்பிக்கை ஊட்டுவதும் இதன் சிறப்புக்கள் ஆகும். இப்பதிகத்தை மனம் உருகிப் படித்தால் நல்ல குழந்தைப்பேறு கிடைக்கும்)

378) உடையாள் உந்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம்பலத்து எம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன் நின்றே. 1

உடையவளாகிய பராசக்தி (ஈசை) ஈசனாகிய உன் நடுவில் இருக்கிறாள். ஈசனாகிய நீ ஈசையின் உள்ளத்தில் இருக்கிறாய். உயிராகிய அடியேன் உள்ளத்தில் நீங்கள் இருவரும் இருப்பது உண்மையானால் அடியேன் உன் அடியார் திருக் கூட்டத்துக்கு நடுவில் இருக்கும் திருவருளைத் தருவாயாக. பொன்னம்பலத்தில் எழுந்தருளும் முடிவற்ற முதலே! என் விருப்பம் நிறைவேற என்முன்னின்று அருள்வாயாக! (சிவயசிவ என்ற மந்திரம் இருதலை மாணிக்கம் எனப்படுகிறது சி என்பது சிவம். வ என்பது சக்தி ய என்பது ஆன்மா. இம்மந்திரத்தில் சிவத்துக்கு நடுவில் சக்தியும் சக்திக்கு நடுவில் சிவமும் இரண்டுக்கும் நடுவில் ஆன்மாவும் உள்ளன. எனவே இப்பாடல் இருதய மந்திரப்பாடல் எனப் போற்றப்படுகிறது)

379) முன் நின்று ஆண்டாய் எனை முன்னம்
யானும் அதுவே முயல்வு உற்றுப்
பின் நின்று ஏவல் செய்கின்றேன்
பிற்பட்டு ஒழிந்தேன் பெம்மானே
என் நின்று அருள் இவர நின்று
போந்திடு என்னாவிடில் அடியார்
உன் நின்று இவன் ஆர் என்னாரோ
பொன்னம்பலக் கூத்து உகந்தானே. 2

முன்னாளில் குருநாதனாக எனக்கு முன்னால் நின்று என்னை ஆட்கொண்டாய். நானும் நீ கூறியபடியே செயல்பட்டு நீ இட்ட பணிகளை உன் பின்னால் நின்று செய்கிறேன். ஆனாலும் உன்னருள் கிடைக்காமல் பிற்பட்டுத் தங்கிப் போய் விட்டேன். பொன்னம்பலத் திருக்கூத்தை விரும்பிய பெருமானே! நீ எனக்காகத் தாமதித்து (நொண்டிப் பசு வந்த பிறகு கதவைச் சாத்தும் மாட்டுக்காரன் போல) அருள் செய்து, வா என்று அழைக்காமல் விட்டுவிட்டால், உன்னடியார்கள் உன்னிடம் வந்து இப்படித் தங்கிப் போன இவன் யார் என்று கேட்கமாட்டார்களோ? எனவே என்னையும் காத்துக் கிடந்து ஏற்றருள்க.

380) உகந்தானே அன்பு உடை அடிமைக்கு
உருகா உள்ளத்து உணர்வு இலியேன்
சகம் தான் அறிய முறையிட்டால்
தக்க ஆறு அன்று என்னாரோ
மகம் தான் செய்து வழி வந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்கு உன்
முகம் தான் தாரா விடின் முடிவேன்
பொன்னம்பலத்து எம் முழு முதலே. 3

அன்புடன் அடிமை செய்பவரை விரும்பும் பெருமானே! உன்பால் அன்பு கொண்டு உருகும் உள்ளம் பெறாத உணர்வற்ற இச்சிறியேன், நீ என்னை விட்டுவிட்டாய் என்று உலகம் அறிய முறையீடு செய்தால், உலகினர் உன்னைப்பார்த்து நீ செய்வது சரியில்லை என்று சொல்லமாட்டார்களா? பலவாறு வேள்விகள் செய்து உன் அருள் வழிப்பட்டவர் வாழ்வதற்காகவே வாழும் பெருமானே! பொன்னம்பலத்து முழுமுதற்கடவுளே! நீ எனக்கு முகங்கொடுத்துக் காப்பாற்றாவிட்டால் பயனற்ற இப்பிறவியை முடித்துக் கொள்வேன்.

381) முழு முதலே ஐம்புலனுக்கும்
மூவர்க்கும் என் தனக்கும்
வழி முதலே நின் பழ அடியார்
திரள் வான் குழுமிக்
கெழு முதலே அருள் தந்து இருக்க
இரங்கும் கொல்லோ என்று
அழும் அதுவே அன்றி மற்று என்
செய்கேன் பொன்னம்பலத்து அரைசே. 4

எல்லாவற்றுக்கும் மூலமுதலானவனே! ஐம்புலன்களுக்கும், முத்தொழில் புரியும் மூன்று தேவர்களுக்கும் எனக்கும் வழிவழியாக வந்து கொண்டிருக்கும் தலைவனே! உன்னுடைய மிகப்பழைய அடியார்கள் திரண்டு ஞானமயமான வானத்தில் கூடிக்கலந்து எழுவதற்குக் காரணமான முதல்வனே! அடியேற்கு அருள்புரிந்து என்னோடு இருக்க எம்பெருமான் திருவுள்ளம் இரங்குமா என்று அழுவதைத் தவிரப் பொன்னம்பலத்து அரசனே! வேறு நான் என்ன செய்ய வல்லேன்?

382) அரைசே பொன்னம்பலத்து ஆடும்
அமுதே என்று உன் அருள் நோக்கி
இரை தேர் கொக்கு ஒத்து இரவு பகல்
ஏசற்று இருந்தே வேசற்றேன்
கரை சேர் அடியார் களி சிறப்பக்
காட்சி கொடுத்து உன் அடியேன்பால்
பிரை சேர் பாலின் நெய் போலப்
பேசாது இருந்தால் ஏசாரோ. 5

அரசனே! பொன்னம்பலத்தில் நடனமிடும் அமுதனே! என்று உன் திருவருள் பொழியும் காலத்தையே எதிர்பார்த்து, இரையை ஆராய்கின்ற கொக்கைப் போல, இரவும் பகலும் வருந்திக்கிடந்து வாடிவிட்டேன். பிறவிக்கடல் கடந்து உன் திருவடிக்கரையைச் சேர்ந்த அடியார்கள் மிகவும் மகிழுமாறு காட்சி கொடுத்த நீ, உன் அடிமையாகிய என்பால் மட்டும் பிரை ஊற்றிய பாலுக்குள் நெய் புலப்படாது மறைந்திருப்பது போல, பேசாமல் இருந்தால் உலக மக்கள் உன்னை ஏச மாட்டார்களா?

383) ஏசா நிற்பர் என்னை உனக்கு
அடியான் என்று பிறர் எல்லாம்
பேசா நிற்பர் யான் தானும்
பேணா நிற்பேன் நின் அருளே
தேசா நேசர் சூழ்ந்து இருக்கும்
திரு ஓலக்கம் சேவிக்க
ஈசா பொன்னம்பலத்து ஆடும்
எந்தாய் இனித்தான் இரங்காயே. 6

என்னைப் புறக்கணித்த உன்னை எல்லோரும் ஏசுவார்கள். என்னைப் பார்த்து உன்னடிமை என்று மற்றவர்கள் பேசுவார்கள். நானும் (அதைக் காதில் வாங்காமல்) உன் திருவருளையே போற்றிக் காத்துக் கிடப்பேன். ஒளிமயமானவனே! ஈசனே! பொன்னம் பலத்திலாடும் என்

அப்பனே! நின் அன்பர்கள் உன்னைச் சூழ்ந்திருக்க, அவர்கள் நடுவில் அரியாசனத்தில் அருளரசனாக நீ வீற்றிருக்கும் அந்தத் திருவோலக்கத்தைக் கண்டு தொழ, இனியாவது எனக்கு இரங்கித் திருவுள்ளம் கொள்ளக் கூடாதா?

384) இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன்
என்று என்று ஏமாந்திருப்பேனை
அரும் கற்பனை கற்பித்து ஆண்டாய்
ஆள்வார் இலி மாடு ஆவேனோ
நெருங்கும் அடியார்களும் நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வர எங்கள்
வாழ்வே வா என்று அருளாயே. 7

அம்பலத்தில் ஆடும் அருட்கூத்தன் நமக்கு இரங்கி அருள்புரிவான் என்று பலகாலமாய் ஏமாந்து போன என்னை, அடையமுடியாத கற்பனைகளை அடையலாம் என்று காட்டி ஆண்டுகொண்டாய். இப்போது மேய்ப்பார் இல்லாமல் வெறித்துத் திரியும் கொண்டி மாடு ஆவேனோ? உன் பக்கத்தில் நெருங்கியிருக்கும் அடியார்களும் நீயும் எந்நாளும் ஒன்றாய் இருந்து விளையாடும் பொழுது, அந்த இடத்திற்குப் பக்கத்திலாவது வர எனக்கு வாழ்வாய் இருப்பவனே! அருள்புரிய மாட்டாயா?

385) அருளாது ஒழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர் இங்குப்
பொருளா என்னைப் புகுந்து ஆண்ட
பொன்னே பொன்னம்பலக் கூத்தா
மருள் ஆர் மனத்தோடு உனைப் பிரிந்து
வருந்துவேனை வா என்று உன்
தெருள் ஆர் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ. 8

நீ எனக்கு அருள்புரியா விட்டால், எனக்கு அஞ்சாதே என்று அபயம் கொடுப்பார் யார் இருக்கிறார்கள்? என்னையும் ஒரு பொருளாக எண்ணி இம்மனத்துக்குள் புகுந்து ஆட்கொண்ட பொன் போன்றவனே! பொற்சபையில் ஆடுபவனே! மயக்கம் நிறைந்த மனத்தோடு, உன்னை விட்டுப்பிரிந்து, வருந்திக் கொண்டிருக்கும் என்னை, வா என்று நீ அழைத்து, உன்னுடைய தெளிவுமிக்க மெய்யடியார் திருக்கூட்டத்தைக் காட்டாவிட்டால் நான் செத்துப் போவேன். அப்படிச் செத்துப் போனால் "நீ என்ன ஆண்டான்?" என்று உலகமக்கள் உன்னைப் பாத்துச் சிரிக்க மாட்டார்களா?

386) சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டு உன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறு இருந்து உன் திரு நாமம்
தரிப்பார் பொன்னம்பலத்து ஆடும்
தலைவா என்பார் அவர் முன்னே
நரிப்பு ஆய் நாயேன் இருப்பேனோ
நம்பீ இனித்தான் நல்காயே. 9

அடியார்கள் உன்னோடு கூடிவிளையாடும் இன்பத்தால் தமக்குத் தாமே சிரிப்பார்கள். மகிழ்வார்கள். தேன் போல மனம் கசிவார்கள். கூடிக்கூடி உன் திருவார்த்தையாகிய புகழ்மொழி களைப் பொருள் விரித்துப் பேசுவார்கள். பிறர் உன் புகழ் பேசக் கேட்பார்கள். அதைவியந்து பாராட்டுவார்கள். தனித்தனியே இருந்து உன் திருநாமம் அஞ்செழுத்தும் செப்பிச் சிந்தையில் இருத்துவார்கள். பொன்னம்பலத்திலாடும் தலைவனே என்று வாயாரக்கூவி அழைப்பார்கள். இப்படிப்பரவசமாய் இருக்கும் அடியார்களுக்கு முன்னால் நாய் போன்ற நான் இகழத்தக்கவனாக இருப்பேனோ? என் தலைவா! இனியாவது அருள்செய்.

387) நல்காது ஒழியான் நமக்கு என்று உன்
நாமம் பிதற்றி நயன நீர்
மல்கா வாழ்த்தா வாய் குழறா
வணங்கா மனத்தால் நினைந்து உருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம்பலம் என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கு இரங்கி
அருளாய் என்னை உடையானே. 10

உடைமைகளாகிய நமக்கு உடையவனாகிய இறைவன அருள் புரியாமல் இருக்கமாட்டான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையோடு, உன் திருநாமத்தையே பலமுறை கூறி, கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பாய, உன்னையே வாழ்த்தி, உரை தடுமாறி, உடம்பால் வணங்கி, மனத்தால் பலவாறு நினைத்து உருகி, பலகாலும் உன் திருவுருவத்தையே மனக்கண்ணில் பாவனை செய்து தியானித்து, போற்றிப் பொன்னம் பலமென்று பலமுறை அழைத்து, வாய் சோர்ந்து நிற்கும் உயிராகிய எனக்கு இரங்கி என்னை உடைய பெருமானே! திருவருள் தருவாயாக!

22. கோயில் திருப்பதிகம்

தில்லையில் அருளியது எழுசீர்ஆசிரியவிருத்தம்

(சிவானுபூதி பெற்றவர்களின் அடையாளம் கூறுவது)

388) மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன் ஐந்தின் வழி அடைத்து அமுதே
ஊறி நின்று என் உள் எழு பரஞ் சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஈறி இலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே. 1

தேனின் தெளிவானவனே! சிவபெருமானே! திருப் பெருந்துறையில் உள்ள சிவனே! அழிவில்லாத பதங்கள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு விளங்கும் இன்பமயமானவனே! என்னுடைய அன்பே! என் கருத்துக்கு மாறுபட்டு நின்று என்னை மயங்கச் செய்யும் வஞ்சகமான ஐம்புலன்கள் என்னை இழுத்துச் செல்லும் வழிகளைப் போக முடியாமல் அடைத்து, என்னுள் அமுதமாகச் சுரந்து எழக்கூடிய மேலான ஒளியே! உன்னை உள்ளபடி நான் காணும்படி வந்தருள்வாயாக!

389) அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்து உருக
என் பரம் அல்லா இன் அருள் தந்தாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறு
முன்பும் ஆய்ப் பின்பும் முழுதும் ஆய்ப் பரந்த
முத்தனே முடிவு இலா முதலே
தென் பெருந்துறையாய் சிவபெருமானே
சீர் உடைச் சிவபுரத்து அரைசே. 2

எல்லா உலகங்களுக்கும் முன்னாகவும், அவை அழிந்ததற்குப் பின்பாகவும் அவை முழுவதுமாகவும் நிறைந்து நிற்கும் காலமும் இடமும் கடந்த பெருமானே! என்றும் அழிவில்லாத மூலமுதற்பொருளே! அழகுமிக்க திருப்பெருந் துறையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானே! சீர்மிகுந்த திருக்கயிலை மன்னனே! உன்பால் வைத்த பேரன்பால்,

என்னுடைய உயிரும் உருகிற்று உடம்பும் ஆனந்தமாய்க் கசிந்து உருகிற்று. இதை அடையத் தகுதி சிறிதுமில்லாத எனக்கு உன் இனிய பேரருளைப் புரிந்தாய். இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்.

390) அரைசனே அன்பர்க்கு அடியனேன் உடைய
அப்பனே ஆவியோடு ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்து நின்று உருக்கிப்
பொய் இருள் கடிந்த மெய்ச் சுடரே
திரை பொரா மன்னும் அமுதத் தெண் கடலே
திருப்பெருந்துறை உறை சிவனே
உரை உணர்வு இறந்து நின்று உணர்வது ஓர் உணர்வே
யான் உன்னை உரைக்குமாறு உணர்த்தே. 3

அன்பு செய்பவரை அருளால் ஆட்சி செய்யும் மன்னனே! அடிமையாகிய என் அப்பனே! உயிரோடு இணைந்த உடம்பு, மயிர்க்கால்கள் தோறும் கனியவைத்து, என்னுளே புகுந்து, அதையே உன் திருக் கோயிலாக்கி, அதிலேயே நிலைத்து நின்று, உன் கருணையால் என்னை உருகவைத்து, அறியாமை ஆணவம் ஆகிய பொய்இருளை அகற்றிய உண்மையான ஒளியே! அலைவீசாமல் நிலைபெற்றிருக்கும் அமுதம் நிறைந்த தெளிவான கடலே! திருப்பெருந்துறையில் உள்ள சிவமே! யான் கூறும் சொற்களையும் என் உள்ளத்து உணர்வையும் கடந்து நின்று என்னால் உணர மட்டுமே கூடிய சொல்லற்கரிய உணர்வே! நான் உன்னை முழுவதுமாகப் பேசுவதற்கு என்னுள் இருந்து நீதான் உணர்த்த வேண்டும்

391) உணர்ந்த மா முனிவர் உம்பரோடு ஒழிந்தார்
உணர்வுக்கும் தெரிவு அரும் பொருளே
இணங்கு இலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப் பிறப்பு அறுக்கும் எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்த தூ வெளியே
திருப்பெருந்துறை உறை சிவனே
குணங்கள் தாம் இல்லா இன்பமே உன்னைக்
குறுகினேற்கு இனி என்ன குறையே. 4

பெருந்தவத்தால் உன்னை உணர்ந்ததாகக் கூறும் பெரிய முனிவர்கள், தேவர்கள், இவர்கள் தவிர மற்றையோர் ஆகிய

எல்லோருடைய உணர்வினாலும் உணரமுடியாத மெய்ப்பொருளே! தன்னொப்பார் இல்லாதவனே! எல்லா உயிர்களுக்குள்ளும் அவற்றை இயக்கும் உயிராய்த் திகழ்பவனே! என் பிறவிப் பிணியை ஒழிக்க யான் பெற்ற அருமருந்தே! பொருள் புலப்படாமல் செறிந்திருக்கும் ஒப்பற்ற (ஆணவ) இருளில் தெளிந்து காணப்படும் ஞான வெளியே! திருப்பெருந்துறைச் சிவபெருமானே! எல்லாக் குணங்களையும் கடந்த இன்பமே! உன்னை அணுகிய எனக்கு இனி என்ன குறை இருக்கிறது!

392) குறைவு இலா நிறைவே கோது இலா அமுதே
ஈறு இலாக் கொழும் சுடர்க் குன்றே
மறையும் ஆய் மறையின் பொருளும் ஆய் வந்து என்
மனத்திடை மன்னிய மன்னே
சிறை பெறா நீர் போல் சிந்தை வாய்ப் பாயும்
திருப்பெருந்துறை உறை சிவனே
இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே. 5

குறைவது என்பதே இல்லாமல் எங்கும் எப்பொழுதும் நிறைந்திருப்பவனே! குற்றமில்லாத பேரமுதமே! அழிவில்லாத வளமிக்க ஒளிமலையே! வேதங்களாகியும் வேதங்கள் விளக்கும் உட்பொருளாகியும் வந்து என் மனத்தவிசில் நிலையாக வீற்றிருக்கும் மன்னனே! அணை கட்டப்படாத தண்ணீர் போல, அடியார்கள் மனமாகிய அன்புப் பள்ளங்கள் எல்லாவற்றிலும் பாயும் திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! எல்லா உயிர்களிலும் தங்கி இருப்பவனே! நீ என் உடலையே உன்னுடைய உரிமை இடம் ஆக்கிக் கொண்டாய் இனி இன்ப துன்பங்கள் உனக்கே என்பதால் இனி உன்னிடம் எதை யாசிக்கப் போகிறேன்?

393) இரந்து இரந்து உருக என் மனத்துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரம் தனில் பொலியும் கமலச் சேவடியாய்
திருப்பெருந்துறை உறை சிவனே
நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீ கால்
ஆய் அவை அல்லை ஆய் ஆங்கே
கரந்தது ஓர் உருவே களித்தனன் உன்னைக்
கண் உறக் கண்டு கொண்டு இன்றே. 6

பலகாலும் உன்னிடம் உன்னையே கேட்டுக் கேட்டு உருகுமாறு, என் மனத்தில் தோன்றிய ஞானப்பிழம்பே! தேவர்கள் தலைமணக்க

வீற்றிருக்கும் தாமரைப் பாதனே! திருப் பெருந்துறையில் எழுந்தருளும் சிவபெருமானே! எங்கும் பரவிய வானம்,நீர், நிலம், தீ, காற்று ஆகிய ஐம்பூதங்களாகியும், அவற்றுக்கு அப்பாற்பட்டு நின்றும், அப்பூதங்களிலேயே மறைந்தும் காட்சிதரும் பேரின்பத் தோற்றமே! என் கண்ணார உன்னைக் கண்டு கொண்டேன். களிப்புற்றேன். இனி என்ன வேண்டும்?

394) இன்று எனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்
நீ அலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்று ஆம்
திருப்பெருந்துறை உறை சிவனே
ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்று இல்லை
யார் உன்னை அறியகிற்பாரே. 7

என் உயிர் எல்லாப் பொருட்களிலும் சென்று சென்று, பாசக் கூட்டங்களிலிருந்து விடுபட்டு, அணுவணுவாய்த் தேய்ந்து, இறைவனோடு சேர்ந்து, இறையனுபவம் பெற்றுத் தன்னையே மறந்து திருவடியில் இரண்டறக் கலக்கும் பொழுது தோன்றும் திருப்பெருந்துறைச் சிவனே! இன்று அடியவனுக்கு அருளி, அறியாமை இருளையகற்றி என் மனத்தில் உதிக்கின்ற ஞானக்கதிரவனாகி நிற்கின்ற உன்தன்மையை மறப்பில்லாமல் பிறநினைவுகள் அற்றுப் போக நினைத்தேன். உன்னைத் தவிர வேறுபொருள் இல்லை என்பதை உணர்ந்தேன். எந்தப் பொருளும் நீ இல்லை. உன்னையன்றி எந்தப் பொருளும் இல்லை. (மரமும் நிழலும் போல உயிரும் உடலும் போல உடனாய் நிற்கிறாய்) உன்னை அறிய வல்லவர் யார் இருக்கிறார்கள்?

395) பார் பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்தது ஓர் படர் ஒளிப் பரப்பே
நீர் உறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின் அருள் வெள்ளச்
சீர் உறு சிந்தை எழுந்தது ஓர் தேனே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஆர் உறவு எனக்கு இங்கு யார் அயல் உள்ளார்
ஆனந்தம் ஆக்கும் என் சோதி. 8

செயல்கள் நடப்பதற்குரிய பூமியும், புண்ணியம் செய்தார் மறுமையில் சென்று சேரும் பதங்களும், அவற்றை அடக்கியுள்ள பல அண்டங்களும் இவை எல்லாமாகவும் தோன்றி விரிந்திருக்கும் படர்ந்த ஒளிப்பரப்பான அறிவு ஆகாயமே! நீர் ஆகிய சக்தியைத் தன்னுள் கொண்ட தீயாகிய சிவமே! நினைக்க முயன்றால் அதற்கு அருமையானவனே! மலங்கடந்தவனே! உன்னுடைய திருவருளாகிய வெள்ளம் பாய்வதால் சிறப்புற்ற அடியார்கள் மனத்தில் தோன்றும் இன்பத்தேனே! திருப்பெருந்துறையில் உள்ள சிவபெருமானே! எல்லாம் நீயாக இருப்பதால் இவ்வுலகில் எனக்கு யார் உற்றார்? யார் அயலார்? ஆனந்தம் தரும் பேரொளியே! (எனக்கு யார் மேலும் விருப்புமில்லை வெறுப்பு மில்லை)

396) சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற்கு அரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்த மா கடலே
தீதுஇலா நன்மைத் திருவருள் குன்றே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாது நீ போவது ஓர் வகை எனக்கு அருளாய்
வந்து நின் இணை அடி தந்தே. 9

அருட்பெருஞ் சோதியாய்த் தோன்றும் ஒளியுருவம் பெற்றவனே! அருவாக இருக்கும் ஒருவனே! சொல்ல முடியாத முழுமுதலே! நடுவே! முடிவே! ஐம்புலக்கட்டுக்களை அறுக்கும் ஆனந்தப்பெரும்கடலே! தீமை கலக்காத நன்மையே ஆன திருவருள் மலையே! திருப்பெருந்துறையில் சிவபெருமானே! நீயாக வந்து உன் திருவடிகளைத் தந்து, என்னை அடிமை கொண்டபின், இப்பொழுது என்னை விட்டு எப்படிப் போக முடியும்? எனக்குச் சொல்வாயாக.

397) தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப்பெருந்துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடல் இடம்கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே. 10

திருச்சிற்றம்பலம்

என் அப்பனே! கைம்மாறு வேண்டாக் கருணையினால் நான் அனுபவிக்க உன்னைத் தந்தாய். அனுபவிக்கும் பொருளாக என்னை ஏற்றுக் கொண்டாய்! சுகத்தைச் செய்பவனே! நம் இருவரில் யார் சாமர்த்தியமுள்ளவர்? உன்னைப் பெற்ற நான் எல்லைகாண முடியாத ஆனந்தம் பெற்றேன். நீ என்னிடமிருந்து எதைப் பெற்றாய்? என் மனத்தையே கோயிலாகக் கொண்ட சிவபெருமானே! திருப்பெருந்துறைச் செல்வனே! ஈசனே! என் உடலில் இடங்கொண்டவனே! யான் இதற்குப் பிரதியாக உனக்கு எதுவும் செய்ய முடியாதே.



பெருந்துறையில் சிவபெருமான் அருளுதலும் பெருங்கருணைப்
பெற்றி நோக்கிக்
கரைந்து கரைந்து இருகண்ணீர் மழை வாரத்துரிய நிலை
கடந்து போந்து
திருந்துபெரும் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடித்துத்
தேக்கிச் செம்மாந்(து)
இருந்தருளும் பெரும் கீர்த்தி வாதவூர் அடிகள் அடி
இணைகள் போற்றி
- காஞ்சிப் புராணம்

23.செத்திலாப் பத்து

திருப்பெருந்துறையில் அருளியது   எண்சீர்ஆசிரியவிருத்தம்

(கிடைத்த சிவானந்தத்தை அனுபவிக்க முடியாமல் மலங்கள் தடுக்க, பெற்றதை இழந்த பெருந்துன்பத்தால் இன்னும் இறந்து போகாமல் இருக்கிறேனே என்று வருந்துவதைக் காட்டுவது இப்பகுதி)

398) பொய்யனேன் அகம் நெகப் புகுந்து அமுது ஊறும்
புது மலர்க் கழல் இணை அடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அருள் பெருங் கடலே
அத்தனே அயன் மாற்கு அறி ஒண்ணாச்
செய்ய மேனியனே செய் வகை அறியேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 1

பொய்யொழுக்கமுடைய என் மனம் நெகிழும்படிப் புகுந்து அமுதூற வைத்த, உன் புதுமலர் போன்ற திருவடிகளைப் பிரிந்த பின்பும் கீழ் மகனாகிய சிறியேன் இன்னும் இறக்காமல் இருக்கிறேனே! ஐயோ. கண் விழித்துக் கவனமாக இருந்தும், என் உள்ளத்திலுள்ள கருதத்தக்க பொருளான உன்னை இழந்துவிட்டேனே என் தலைவனே! அரசனே! அருள் பொழியும் பெரிய கடலே! என் அப்பனே! அயனும் மாலும் அறிய மாட்டாமல் சிவந்த தீப்பிழம்பாய் நின்றதிருமேனி உடையவனே! திருப்பெருந்துறைச் சிவபெருமானே! நான் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறேனே!

399) புற்றுமாய் மரமாய்ப் புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாரும் நின் மலர் அடி காணா
மன்ன என்னை ஓர் வார்த்தையுள் படுத்துப்
பற்றினாய் பதையேன் மனம் மிக உருகேன்
பரிகிலேன் பரியா உடல் தன்னைச்
செற்றிலேன் இன்னும் திரிதருகின்றேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 2

திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே! அண்டங்களில் வாழும் முனிவர்களும் பிறரும், புற்றிலும்

மரப்பொந்திலும் தவம் செய்தும், தண்ணீரையும் காற்றையும் உணவாய்க்கொண்டும், நோன்பினால் வற்றிப்போய், வருந்தியும் நின் மலரடி காணமாட்டாமல் மறைத்துக் கொண்ட மன்னனே! எளியவனாகிய என்னை உபதேசம் தந்து அஞ்செழுத்தாகிய ஒப்பற்ற வார்த்தையால் கட்டிப் பற்றிக் கொண்டாய். இப்பெரும் கருணையை நினைத்து நான் மனம் பதைக்கவில்லை. உருகவில்லை. உன்பால் அளக்க முடியா அன்பு செலுத்தவில்லை. அப்படி அன்பு செலுத்தாத இந்த உடம்பை மாய்க்கவில்லை. இன்னும் உன்னடியார் போலத் திரிந்து கொண்டிருக்கிறேனே.

400) புலையனேனையும் பொருள் என நினைந்து உன்
அருள் புரிந்தனை புரிதலும் களித்துத்
தலையினால் நடந்தேன் விடைப் பாகா
சங்கரா எண்ணில் வானவர்க்கு எல்லாம்
நிலையனே அலை நீர் விடம் உண்ட
நித்தனே அடையார் புரம் எரித்த
சிலையனே எனைச் செத்திடப் பணியாய்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 3

குணத்தால் மிகவும் கீழான என்னை, ஒரு பொருட்டாக நினைத்து எனக்கு அருள்புரிந்தாய். அருள் பெற்ற நான் மகிழ்ந்தேன். கர்வமுற்றேன் தலையினால் நடந்தேன். (பெற்ற இன்பத்தைத் தவறவிட்டேன்) அறவடிவான காளை வாகனனே! சங்கரனே! எண்ணத் தொலையாத தேவர்கள் யாவருக்கும் நிலைபேறு தருபவனே! கடல் நீரில் தோன்றிய நஞ்சை உண்டு நித்தனாய் இருப்பவனே! உனக்கு மாறுபட்டவர் முப்புரம் எரித்த வில்லை உடையவனே! திருப்பெருந்துறைப் பெருமானே! இத்தகைய பாவியான என்னைப் பார்த்துச் செத்துப்போ என்று கட்டளை இடமாட்டாயா?

401) அன்பர் ஆகி மற்று அரும் தவம் முயல்வார்
அயனும் மாலும் மற்று அழல் உறு மெழுகு ஆம்
என்பராய் நினைவார் எனைப் பலர்
நிற்க இங்கு எனை எற்றினுக்கு ஆண்டாய்
வன் பராய் முருடு ஒக்கும் என் சிந்தை
மரக் கண் என் செவி இரும்பினும் வலிது
தென் பராய்த்துறையாய் சிவலோகா
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 4

அழகிய திருப்பராய்த்துறையில் எழுந்தருளி இருப்பவனே! சிவலோக நாயகனே! திருப்பெருந்துறைச் செல்வனே! உன் திருவடிக்கண் மாறாத அன்பு கொண்டு உன்னை அடைய அருமையான தவமுயல்பவர்களும், நான்முகனும், திருமாலும், உன்னை நினைத்து நெருப்பில் பட்ட மெழுகு போல எலும்புகள் உருக நிற்பவரும் என்று இவ்வளவு பேர் காத்திருக்க, தவமும் ஞானமுமற்ற என்னை எதற்காக ஆட்கொண்டாய்? என் மனம் வலிமை மிக்க, உலர்ந்த பராய் மரக் கட்டையாகிவிட்டது. என் கண் மரத்தில் உள்ள கணுப் போலக்காணும் தன்மை அற்றுவிட்டது. என் செவி உன் புகழ் கேட்டு உருகாமல் இரும்பை விடக் கடினமாகி விட்டது. என் செய்வேன்?

402) ஆட்டுத் தேவர் தம் விதி ஒழித்து அன்பால்
ஐயனே என்று உன் அருள்வழி இருப்பேன்
நாட்டுத் தேவரும் நாடு அரும் பொருளே
நாதனே உனைப் பிரிவு உறா அருளைக்
காட்டித் தேவ நின் கழல் இணை காட்டிக்
காய மாயத்தைக் கழித்து அருள் செய்யாய்
சேட்டைத் தேவர் தம் தேவர் பிரானே
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 5

ஆட்டுத்தலைபெற்ற தக்கன் உள்ளிட்ட பிரமர்கள் என்தலையில் எழுதி வைத்த விதியை ஒழித்து, ஐயனே! உன் மேல் கொண்ட அன்பினால் என்றும் உன்னுடைய திருவருள் காட்டும் வழியிலேயே செயல்படுவேன். உலகமக்கள் தெய்வமென்று நம்புகின்ற தேவர்களும் நாடமுடியாத மெய்ப்பொருளே! எனையாண்ட நாதனே! உன்னை எப்பொழுதும் பிரியாதபடி அருள்செய்து, வீரக்கழலணிந்த உன் திருவடிகளைக் காட்டி உடம்பாகிய மாயப்பொருளைக் கழித்து விடுவதற்கு அருள்புரிவாய். முத்தொழில் புரியும் பெருமை மிக்க தேவர்களுக்கும் தலைவனே! திருப்பெருந்துறைச் சிவபெருமானே! அருள்வாயாக.

403) அறுக்கிலேன் உடல் துணிபடத் தீப் புக்கு
ஆர்கிலேன் திருவருள் வகை அறியேன்
பொறுக்கிலேன் உடல் போக்கு இடம் காணேன்
போற்றி போற்றி என்போர் விடைப் பாகா
இறக்கிலேன் உனைப் பிரிந்து இனிது இருக்க
என் செய்கேன் இது செய்க என்று அருளாய்
சிறைக் கணே புனல் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 6

கரைக்குள் அடங்கும் நீர்நிலை மிக்க வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறைச் சிவபெருமானே! உன்னைப்பிரிந்த துன்பத்தால் இந்த உடம்பைத் துண்டு துண்டாக வெட்டவில்லை. தீயில் பாய்ந்து என்மனத்திற்கு அமைதி தேடவில்லை. உன் திருவருள் வரும் வகை அறியாது தவிக்கிறேன். இனிப் பொறுக்கமாட்டேன். இந்த உடம்பைப் போக்கிக் கொள்ள ஒரு வழியும் தெரியவில்லை. அறத்தின் வடிவான விடையில் வரும் அப்பனே! வணங்குகிறேன் இறக்கமாட்டாமல் உன்னைப் பிரிந்து இன்னும் தவிக்கிறேன். என்ன செய்வேன்? இது செய்க என்று அருளமாட்டாயா?

404) மாயனே மறி கடல் விடம் உண்ட
வானவா மணி கண்டத்து எம் அமுதே
நாயினேன் உனை நினையவும் மாட்டேன்
நமச்சிவாய என்று உன் அடி பணியாப்
பேயன் ஆகிலும் பெரு நெறி காட்டாய்
பிறை குலாம் சடைப் பிஞ்ஞகனே ஓ
சேயன் ஆகி நின்று அலறுவது அழகோ
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 7

மாயையை உண்டாக்கும் மகாதேவனே! அலைகள் ஆர்ப்பரிக்கும் கடலில் வந்த நஞ்சுண்ட பெருமானே! நீலகண்டம் பெற்ற எங்கள் அமுதமே! நாய் போன்ற நான் நன்றி கெட்டவனாய் உனை நினையாமல் இருக்கிறேன். நமசிவாய என்று அஞ்செழுத்தோதி உன் திருவடி வணங்காத பேய் போன்ற எனக்கும் உன்னையே அடையும் பெருவழிகாட்டு. பிறை விளங்கும் தலையில் தலைக்கோலம் அணிந்த பெருமானே! திருப்பெருந்துறைச்செல்வா! உன் பக்கத்தில் இருக்காமல் நான் இப்படித் தூரத்தில் நின்று அலறிக்கொண்டிருந்தால், அது என்னை ஆட்கொண்ட உன் பெருமைக்கு அழகாகுமோ?

405) போது சேர் அயன் பொரு கடல் கிடந்தோன்
புரந்தர ஆதிகள் நிற்க மற்று என்னைக்
கோது மாட்டி நின் குரை கழல் காட்டிக்
குறிக்கொள்க என்று நின் தொண்டரில் கூட்டாய்
யாது செய்வது என்று இருந்தனன் மருந்தே
அடியனேன் இடர்ப்படுவதும் இனிதோ
சீத வார் புனல் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 8

குளிர்ந்து ஒழுகும் நீர் நிறைந்த வயல்கள் சூழ்ந்த திருப் பெருந்துறையை விரும்பி எழுந்தருளிய சிவபெருமானே! தாமரைப் பூவைச் சேர்ந்த நான்முகனும், அலைகள் கரையோடு போரிடும் பாற்கடலில் கிடக்கும் பரந்தாமனும், இந்திரன் முதலான தேவர்களும் காத்திருக்க, எளியவனாகிய என்னை அழைத்துக் குற்றங்கள் நீக்கி உன்னுடைய சிலம்பொலிக்கும் திருவடிகளைக் காட்டி, "இவற்றையே குறிப்பாகப் பற்றிக்கொள்க" என்று உன் தொண்டர் கூட்டத்தில் மீண்டும் கூட்டிவைக்க மாட்டாயா? இனி என்ன செய்வது என்று வருந்துகிறேன். என் மயக்கத்திற்கு மருந்தானவனே! நான் இப்படித் துன்பப்படுவது உன் திருக்கருணைக்கு அழகாகுமோ?

406) ஞாலம் இந்திரன் நான் முகன் வானவர்
நிற்க மற்று எனை நயந்து இனிது ஆண்டாய்
காலன் ஆர் உயிர்கொண்ட பூங் கழலாய்
கங்கையாய் அங்கி தங்கிய கையாய்
மாலும் ஓலம் இட்டு அலறும் அம் மலர்க்கே
மரக்கணேனையும் வந்திடப் பணியாய்
சேலும் நீலமும் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே. 9

கெண்டை மீன்களும் நீலப்பூக்களும் நிறைந்த நீர் வளமிக்க வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறைப் பெருமானே! இந்த மண்ணுலகத்தில் உள்ளவர்களும், இந்திரன், நான்முகன் முதலிய வானகத் தேவர்களும் நின் சந்நிதியில் காலம் நோக்கிக் காத்துநிற்க, நீ என்னை விரும்பி இனிதாக ஆண்டாய். காலனுடைய அரிய உயிரைக் கொண்ட பூப் போன்ற திருவடிகளை உடையவனே! கங்கையைச் சடையில் தாங்கி நெருப்பைக் கையில் தாங்கியவனே! திருமாலும் அடையமாட்டாமல் ஓலமிட்டு அலறக்கூடிய உன் திருவடித் தாமரைகளில், கசியாத மரம் போன்ற கண்களை உடைய என்னையும் வாவென்று கட்டளை இடுவாய்.

407) அளித்து வந்து எனக்கு ஆவ என்று அருளி
அச்சம் தீர்த்த நின் அருள் பெருங் கடலில்
திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே
வளைக் கையானொடு மலரவன் அறியா
வானவா மலை மாது ஒரு பாகா
களிப்பு எலாம் மிகக் கலங்கிடுகின்றேன்
கயிலை மா மலை மேவிய கடலே. 10

திருச்சிற்றம்பலம்

அடியவனாகிய என்மீது கருணை கொண்டு, வந்து, (ஆவா) என்று அருள்வழங்கி, பிறவியாகிய அச்சத்தைப் போக்கிய உன் திருவருளாகிய மிகப்பெரிய கடலில் மூழ்கியும், என்னுள்ளே தேக்கி வைத்துக்கொண்டும், குடித்தும் உருகாமல் இருக்கிறேனே! திருப்பெருந்துறைச் சிவபெருமானே! சங்கைக் கையில் ஏந்தும் திருமாலோடு பிரமனும் அறியமாட்டாத ஞானவானில் திகழ்பவனே! மலைமகளை இடப்பாகத்தில் ஏற்றவனே! கயிலை மலை மீது குடியிருக்கும் கருணைக் கடலே! ஒருபக்கம் நீ வருவாய் என்று களிக்கிறேன். மறுபக்கம் கலங்கி நிற்கிறேன். (கை கொடுத்துக் காப்பாயாக)

குறிப்பு : இப்பாடலை வளைக்கையானொடு என்று தொடங்கிப் பின்னால் உள்ள நான்கு வரிகளை முன்னால் வைத்துப் பாடி, திருப்பெருந்துறை மேவியசிவனே என்று முடிக்கும் வழக்கமும் உண்டு. இதனால் முந்திய ஒன்பது பாடல்களைப் போலப் பத்தாவது பாடலும் அமையும்

மாது பாகனுக்கு மெய்வாசகத் தமிழ்
ஓதியே மூகையை ஓதுவித்து அருள்
சீதவார் பொழில் திகழ் சேண் தொடும் திரு
வாதவூர் அடிகளை வணக்கம் செய்குவாம்
-திருமயிலைப்புராணம்

24. அடைக்கலப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது கலவைப்பாட்டு

(மற்றஅடியார்கள்போலத் தானும் திருவடி அடையாமல் தடுத்தது அழுக்குமனம், (வல்வினை) என்றுணர்ந்த மணிவாசகர் இறைவனிடம் அடைக்கலம் புகுந்தாலன்றி இது போகாது என்று அடைக்கலமாகத் தன்னைக் கொடுத்தல்)

408) செழுக் கமலத் திரள் அன நின்
சேவடி சேர்ந்து அமைந்த
பழுத்த மனத்து அடியர் உடன்
போயினர் யான் பாவியேன்
புழுக்கண் உடைப் புன் குரம்பைப்
பொல்லாக் கல்வி ஞானம் இலா
அழுக்கு மனத்து அடியேன்
உடையாய் உன் அடைக்கலமே. 1

செழுங்கமலம் போன்ற உன் வளமான சிவந்த அடிகளை இடையீடின்றி நினைத்து, அறிவும் ஆசையும் அடங்கி, அதனால் கனிகின்ற மனமுள்ள அடியார்கள், (மன்னனொடு பரிவாரங்கள் செல்வது போல) குருநாதனாகிய உன்னுடன் சிவபுரநகர் புகப் போய்விட்டனர். நான் பாவம் செய்தவன். (போக முடியவில்லை) புழுக்கள் நிறைந்த புன்மையான இந்த உடற்கூட்டினையும், கல்வி அறிவற்றதும் பொல்லாத ஆசைகளாகிய அழுக்கு நிறைந்ததும் ஆன மனத்தினையும் உடையவன், என்னை உடைமையாகக் கொண்டபெருமானே! உன் திருவடிகளில் அடைக்கலம் ஆகிறேன்.

409) வெறுப்பனவே செய்யும் என்
சிறுமையை நின் பெருமையினால்
பொறுப்பவனே அராப் பூண்பவனே
பொங்கு கங்கை சடைச்
செறுப்பவனே நின் திருவருளால்
என் பிறவியை வேர்
அறுப்பவனே உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 2

வெறுக்கத் தக்க கீழான செயல்களையே செய்யும் என்னுடைய சிறுமைத்தன்மையை உன்னுடைய பெருமைக்குணங்களால்

பொறுத்தருள் பவனே! (என்னைவிடக் கொடிய) நாகப்பாம்புகளை அணியாக அணிந்தவனே! ஆணவத் தோடு பொங்கி வந்த கங்கையைத் திருச்சடையின் ஒரு பகுதியிலேயே அடக்கிக் கொண்டவனே! உன்னுடைய திருவருளால் என் பிறவியை வேரோடும் அறுத்துப் பிடுங்கக் கூடியவனே! என்னை உடையவனே! உனக்கே அடைக்கலமாகிறேன்.

410) பெரும் பெருமான் என் பிறவியை
வேர் அறுத்துப் பெரும் பிச்சுத்
தரும் பெருமான் சதுரப் பெருமான்
என் மனத்தினுள்ளே
வரும் பெருமான் மலரோன் நெடுமால்
அறியாமல் நின்ற
அரும் பெருமான் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 3

பெரியவற்றுக்கெல்லாம் பெரிதாக விளங்கும் பெருமானே! என் பிறவியாகிய பெரிய மரத்தின் வேரை முழுமையாக அறுத்து, எனக்கு உன் திருவடிப் பேரழகில் மிகப் பெரிய பித்துண்டாக்கும் பெருமானே! சாமர்த்திய மிக்க பெருமானே! என் நெஞ்சக் கோயிலில் எழுந்தருளும் பெருமானே! நான்முகனும் நீண்ட திருமாலும் அறிய முடியாமல் அவர்களுக்கு முன்னாலேயே அண்ணாமலையின் அரும்பெருஞ்சோதியாய் நின்ற அருமைக்குரிய பெருமானே! என்னை உடையவனே! உனக்கே அடைக்கலமாகிறேன்.

411) பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தில்
நின் கழல் புணை கொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான்
யான் இடர்க் கடல் வாய்ச்
சுழி சென்று மாதர்த் திரை பொரக்
காமச் சுறவு எறிய
அழிகின்றனன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 4

பிறவித்துன்பம் என்னும் மேகம் பொழிகின்ற வெள்ளத்தில், உன்னுடைய திருவடிகளையே தெப்பமாகக் கொண்டு, இழுத்துச் செல்லப்பட்ட அன்பர்கள் கரையேறி விட்டார்கள். ஆனால் நான் உன்

திருவடிகளைப் பற்றாத காரணத்தால், துன்பக்கடலில் விழுந்து சுழியில் அகப்பட்டு, பெண்களாகிய அலைமோத, காமம் என்னும் சுறாமீன் எதிர்க்க, அழிந்து கொண்டிருக்கிறேன். என்னை உடையவனே! உனக்கே அடைக்கலமாகிறேன்

412) சுருள் புரி கூழையர் சூழலில் பட்டு
உன் திறம் மறந்து இங்கு
இருள் புரி யாக்கையிலே கிடந்து
எய்த்தனன் மைத் தடம் கண்
வெருள் புரி மான் அன்ன நோக்கி தன் பங்க
விண்ணோர் பெருமான்
அருள் புரியாய் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 5

சுருண்ட கூந்தலையுடைய மங்கையர் கூட்டத்தில் அகப்பட்டு, உன் கருணைத் திறத்தை மறந்து, இந்த உலகில், அறியாமை இருள் சூழ்ந்த உடம்பிலே கிடந்து இளைத்து விட்டேன். மை பூசியது போன்ற கண்களையும் விரிந்த, மருட்சி பொருந்திய மான் பார்வை போலும் பார்வையையும் உடைய உமாதேவியைப் பங்கிலே உடையவனே! தேவர்கள் தலைவனே! என்னை உடையவனே! உனக்கே அடைக்கலம். நீதான் அருள்புரிந்து காக்க வேண்டும்.

413) மாழை மைப் பாவிய கண்ணியர்
வன் மத்து இட உடைந்து
தாழியைப் பாவு தயிர் போல்
தளர்ந்தேன் தட மலர்த் தாள்
வாழி எப்போது வந்து எந் நாள்
வணங்குவன் வல் வினையேன்
ஆழி அப்பா உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 6

மாவடுவின் பிளவு போன்ற, மைதீட்டப்பட்ட கண்களையுடைய பெண்கள் என்னும் வலிமைமிக்க மத்தினால் கடைந்ததால் உடைந்து போய், தயிர் மோராகித் தயிர்ப்பானையில் சுற்றிச் சுற்றி வருவது போல், நான் நிலைமாறி உடைந்து தளர்ந்தேன். குளத்தில் பூத்த தாமரை போன்ற உன் திருவடிகளை எப்பொழுது வந்து எந்த நாளில் வணங்கப் போகிறேன்? கருணைக்கடலானவனே! என் அப்பனே!

என்னை உடையவனே! பொல்லா வினையேன் உனக்கே அடைக்கலமாகிறேன்.

414) மின் கணினார் நுடங்கும் இடையார்
வெகுளி வலையில் அகப்பட்டு
புன் கணன் ஆய்ப் புரள்வேனைப்
புரளாமல் புகுந்து அருளி
என் கணிலே அமுது ஊறித்
தித்தித்து என் பிழைக்கு இரங்கும்
அம் கணனே உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 7

மின்னல் போன்ற கண்களையும், துவளும் இடையையும் உடைய பெண்களின் புலவியாகிய பொய்க்கோப வலையில் சிக்கிக் கொண்டு, துன்பம் உள்ளவனாய் இடமும் காலமும் நோக்காமல் புரண்டு விழுந்து கிடந்த என்னை, அப்படிப் புரளாமல் காப்பாற்ற, என் மனத்தில் புகுந்தருளி, கண்டகண்கள் அமுதூறவும், பேசிய வாய் தித்திக்கவும் செய்து, என் குற்றங்களுக்கு இரங்கி, கண்ணோட்டத்தால் அழகு பொலியும் கண்களை உடையவனே! என்னை ஆட்கொண்ட உடையவனே! அடிமை உனக்கே அடைக்கலமாகிறேன்.

415) மா வடு வகிர் அன்ன கண்ணி பங்கா
நின் மலர் அடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய்
நின் குறிப்பு அறியேன்
பா இடை ஆடு குழல் போல்
கரந்து பரந்தது உள்ளம்
ஆ கெடுவேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 8

மாவடுவின் பிளவையொத்த கண்களை உடைய உமையாள் ஒரு பாகனே! உன் அடிமையாகிய என்னை, உன் திருவடித் தாமரையை அடையும்படி கூவி அழைப்பாய். அல்லது இன்னொரு தாய் வயிற்றில் பிறக்க வைப்பாய். இதில் உன் திருவுள்ளக் கருத்து எதுவோ அறியமாட்டேன். நெய்யும் பொழுது, நூற்பாவுக்குள் ஓடியாடும் தார்க்குழல் போல், என் மனம் இங்குமங்குமாக மறைந்து சுழல்கிறது. ஐயோ! நான் கெட்டுப் போய்விடுவேன். உடையவனே! உனக்கே அடைக்கலமாகிறேன்.

416) பிறிவு அறியா அன்பர் நின் அருள்
பெய் கழல் தாள் இணைக் கீழ்
மறிவு அறியாச் செல்வம் வந்து பெற்றார்
உன்னை வந்திப்பது ஓர்
நெறி அறியேன் நின்னையே அறியேன்
நின்னையே அறியும்
அறிவு அறியேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 9

உன்னைப் பிரிந்திருக்க மாட்டாத மெய்யன்பர்கள் உன் அருள் வடிவாகிய வீரக்கழல் அணிந்த தாளிணைக்கீழ் வந்து, மீளாச் செல்வமாகிய முத்திப்பேறு பெற்றார்கள். ஆனால் நானோ, உன்னைப் புகமும் வழியறியேன். உன்னையும் உள்ளபடி அறியேன். உன்னை அறியும் அறிவாகிய மெய்ஞ்ஞானத்தையும் அறியேன் உடையவனே! உனக்கே அடைக்கலமாகிறேன்.

417) வழங்குகின்றாய்க்கு உன் அருள் ஆர்
அமுதத்தை வாரிக் கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன்
வினையேன் என் விதி இன்மையால்
தழங்கு அரும் தேன் அன்ன தண்ணீர்
பருகத் தந்து உய்யக் கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய்
அடியேன் உன் அடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்

திருவருட் கருணையால், நீ உன்னுடைய அருளாகிய இனிய அமுதத்தை நிறைய வழங்குகின்றாய். எல்லாவற்றையும் உண்ண வேண்டுமென்று மிக விரைவாக வாரி வாரி விழுங்குகிறேன. தீவினை உடையவனாகிய எனக்கு அமுதம் உண்ணும் ஊழ்வினை இல்லாமையால் தொண்டையில் விக்கல் வந்துவிட்டது. வருந்துகிறேன். அதனால் தொண்டையிலிருந்து வரும் ஒலி நீங்கத் தேன் போன்ற தண்ணீரைத் தந்து என்னை உய்யுமாறு ஆட்கொள்வாய். என்னை உடையவனே! உனக்கே நான் அடைக்கலமாகிறேன்.

குறிப்பு : மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இப்பதிகம் பாடக் கேட்டபடி இறைவன் திருவடி அடைந்தார். பாடியவர் உ.வே.சாமிநாத ஐயர்)

25. ஆசைப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது அறுசீர்ஆசிரியவிருத்தம்

(ஆன்மாவின் இலக்கணத்தை அறிந்து, பெற்ற உலகச் சார்பை விட்டுப் பெறவேண்டிய அருட்சார்பை விரும்பி, அருள்வழங்கப் பெற, ஆசைப்படுவது)

418) கருடக் கொடியோன் காணமாட்டாக்
கழல் சேவடி என்னும்
பொருளைத் தந்து இங்கு என்னை ஆண்ட
பொல்லா மணியே ஓ
இருளைத் துரந்திட்டு இங்கே வா என்று
அங்கே கூவும்
அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 1

கருடக் கொடியைப் பிடித்து நிற்கும் காத்தற்கடவுளாகிய திருமாலும் காண முடியாத, வீரக்கழல் புனைந்த, சிவந்த திருவடியென்னும் விலைமதிக்க முடியாத பொருளைக் கொடுத்து இப்பூவுலகில் என்னை ஆட்கொண்ட துளை போடப்படாத முழுமாணிக்க மணியே! ஆணவ இருளைப் போக்கிவிட்டு அருள்உலகாகிய இங்கேவா என்று அங்கே இருந்து நீ என்னை அழைக்கக்கூடிய திருவருளைப் பெற ஆசைப்படுகிறேன். இதுவே என் விருப்பம் என் அம்மானே! கண்டுகொள்க.

419) மொய்ப்பால் நரம்பு கயிறு ஆக
மூளை என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக்கு இருக்ககில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவே ஓ
எப்பாலவர்க்கும் அப்பாலாம்
என் ஆர் அமுதே ஓ
அப்பா காண ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 2

நெருக்கமான நரம்புப் பகுதிகள் கயிறாக இருக்க, மூளை, எலும்பு முதலிய உறுப்புக்களைக் கட்டி, தோலால் போர்த்தப்பட்ட இந்த உடல் சட்டைக்குள் புகுந்து நெடுநாள் இருக்கமாட்டேன். என் தலைவனே! என்னைக் கூவி அழைத்துக்கொள் எத்தகைய பக்குவம் உள்ளவர்

களுக்கும் அப்பாற்பட்டுக் கடந்து நிற்கும் என்னுடைய அரிய அமுதமே! ஓ! அப்பா! உன்னைக் காண வேண்டுமென்று மிகவும் ஆசைப்படுகிறேன். அம்மானே! கண்டுகொள்க!

420) சீவார்ந்து ஈ மொய்த்து அழுக்கொடு திரியும்
சிறு குடில் இது சிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்து
ஆட்கொள்ளும் குரு மணியே
தேவா தேவர்க்கு அரியானே சிவனே
சிறிது என் முகம் நோக்கி
ஆ ஆ என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 3

அருவருக்கத்தக்க சீழ் ஒழுகி, ஈ மொய்த்து, எல்லா இடங்களிலும் அழுக்குச் சேரத் திரிகின்ற சிறிய குடிசையாகிய இவ்வுடம்பு அழியும் படி, என்னைக் கூவி அழைத்துக்கொள். என் அரசனே! கூத்தப்பெருமானே! தவறான வழியில் செல்லாமல் காப்பாற்றி ஆண்டுகொள்ளும் குருநாதனே! தேவனே! தேவர்களுக்கும் அரிய பெருமானே! சிறிது நேரம் என் முகத்தைப் பார். ஆ! வா என்று அழைத்துக்கொள். இதற்குத் தான் ஆசைப்பட்டேன். அம்மானே! கண்டுகொள்க.

421) மிடைந்து எலும்பு ஊத்தை மிக்கு அழுக்கு ஊறல்
வீறி இலி நடைக் கூடம்
தொடர்ந்து எனை நலியத் துயர் உறுகின்றேன்
சோத்தம் எம் பெருமானே.
உடைந்து நைந்து உருகி உள்ஒளி நோக்கி
உன் திரு மலர்ப் பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 4

எலும்புகள் நெருங்கியும், ஊத்தை அதிகரித்தும், அழுக்குநீர் ஊறியும் திரியும், சிறப்பில்லாத, நடந்து கொண்டிருக்கும் வீடாகிய இந்த உடம்பு, பல பிறவிகளாகத் தொடர்ந்து வந்து என்னைத் துன்புறுத்த நான் துயரப்பட்டுவிட்டேன். இனித்தாங்க மாட்டேன். தோத்திரம். எம்பெருமானே! என் ஆணவம் உடைந்து உள்ளம் நெக்குருகி, உன் திருமுகப் பேரொளியையே நோக்கி, உன்னுடைய மங்கல மருளும் மலரடிகளை அடைந்து அதிலேயே நிலையாக நிற்க ஆசைப்பட்டேன் கண்டுகொள்வாய் அம்மானே!

422) அளி புண் அகத்துப் புறம் தோல் மூடி
அடியேன் உடை யாக்கை
புளியம்பழம் ஒத்து இருந்தேன் இருந்தும்
விடையாய் பொடி ஆடீ
எளி வந்து என்னை ஆண்டுகொண்ட
என் ஆர் அமுதே ஓ
அளியேன் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 5

அன்பினால் கனிந்த புண்ணை உள்ளே வைத்து வெளியில் தோலைவைத்து மூடி, என்னுடைய உடம்பும் பக்குவமாய்ப் பழுத்த புளியம்பழம் போல் பழமும் தோடும் பற்றற்று இருக்கிறது. இருந்தாலும், இடபவாகனத்தை உடையவனே! திருநீறணிந்தவனே! எளிமையாக வந்து என்னை ஆட்கொண்ட என் அரிய அமுதமே! நீ வந்து இவன் இரங்கத்தக்கவன் என்று என்னை அழைக்க ஆசைப்பட்டேன். கண்டு கொள்வாய் அம்மானே!

423) எய்த்தேன் நாயேன் இனி இங்கு இருக்க
கில்லேன் இவ் வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா
மலர்ச் சேவடியானே.
முத்தா உன் தன் முக ஒளி நோக்கி
முறுவல் நகை காண
அத்தா சால ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 6

பல பிறவிகள் எடுத்து நாயேன் இளைத்துப் போய்விட்டேன். இனி இவ்வுலகில் இருக்க முடியாது. இந்த வாழ்க்கையை என் வினைக்கேற்பக் கூட்டி வைத்த பெருமானே! நீயே திரும்ப எடுத்துக்கொள்வாய் தேவர்கள் அறியாத செழுமலர்ப்பதத்தானே! முத்தியளிப்பவனே! உன் திருமுகப் பேரொளியை நோக்கி உன் முகத்துக் குமிழ்சிரிப்பைக் காண வேண்டு மென்று என் அப்பனே ஆசைப்பட்டேன் கண்டுகொள்வாய் அம்மானே. (அம்மான் என்றால் மாமன் என்று பொருள். மருகன் கேட்டதை மாமன் கொடுப்பது மரபு. எனவே இப்படி அழைக்கிறார்)

424) பாரோர் விண்ணோர் பரவி ஏத்தும்
பரனே பரஞ் சோதி
வாராய் வாரா உலகம் தந்து
வந்து ஆட் கொள்வானே
பேர் ஆயிரமும் பரவித் திரிந்து
எம் பெருமான் என ஏத்த
ஆரா அமுதே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 7

மண்ணக மக்களும் விண்ணகத் தேவரும் வணங்கிப் போற்றும் பரம்பொருளே! சோதி வடிவானவனே! மீண்டும் என் முன் வரவேண்டும். மீண்டும் இவ்வுலகிற்கு வாராதபடி, உன் திருவருள் உலகம் தந்து, வந்து ஆட்கொள்பவனே! உண்ணத் தெவிட்டாத அருளமுதே! உன்னுடைய ஆயிரக்கணக்கான திருநாமங்களையும் சொல்லித் திரிந்து இவன் எம்பெருமான் எம்பெருமான் என்று போற்ற ஆசைப்பட்டேன். கண்டு கொள்வாய் அம்மானே!

425) கையால் தொழுது உன் கழல் சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்டு
எய்யாது என் தன் தலை மேல் வைத்து
எம் பெருமான் பெருமான் என்று
ஐயா என் தன் வாயால் அரற்றி
அழல் சேர் மெழுகு ஒப்ப
ஐயாற்று அரசே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 8

என் கைகளைத் தலை மேல் கூப்பி உன்னைத் தொழுது, பல பிறவித் தவத்தால் கிடைக்கும் உன்னுடைய கழல் அணிந்த திருவடிகளை என் இருகரங்களாலும் நிறையத் தழுவிக்கொண்டு இடைவிடாமல் அவற்றை என் தலைமேல் சுமந்து எம்பெருமான் எம்பெருமான் என்று ஐயா! என்னை மறந்து என் வாயால் புலம்பி, நெருப்பிலிட்ட மெழுகாக நெஞ்சம் உருக, திருவையாற்று அரசனே! ஆசைப்பட்டேன். கண்டுகொள் அம்மானே!

426) செடி ஆர் ஆக்கைத் திறம் அற வீசிச்
சிவபுர நகர் புக்குக்
கடி ஆர் சோதி கண்டு கொண்டு என்
கண் இணை களி கூரப்
படி தான் இல்லாப் பரம்பரனே உன்
பழ அடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 9

குற்றம் நிறைந்த இந்த உடம்புக்கு வேண்டிய தேவைகளை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு, உன்னுடைய சிவபுரமாகிய திருக்கயிலையில் நுழைந்து, தெய்வ மணம் பொருந்திய சிவச் சோதியாகிய உன்னைக் கண்டுகொண்டு என் கண்கள் பிறவிப்பயன் பெற்றுக்களிப்புற வேண்டும். ஒப்பில்லாத பரம்பொருளே! அந்தச் சிவபுரத்தில் உன் பழமையான அடியார் திருக்கூட்டத்தைக் காண வேண்டும். இதுவே அடியேனுடைய ஆசை. கண்டுகொள்வாய் அம்மானே!

427) வெஞ்சேல் அனைய கண்ணார்தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச் சுடரே
நான் ஓர் துணை காணேன்
பஞ்சு ஏர் அடியாள் பாகத்து ஒருவா
பவளத் திரு வாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

விரும்ப வைத்து வெப்பம் தரும் கெண்டைமீன் போன்ற கண்களைப் பெற்ற மங்கையரின் பொய்க்கோப வலையில் சிக்கிக் கொண்டு, நான் நைந்து போனேன் ஞானவிளக்கே! நாய் போன்ற எனக்கு வேறு துணை தெரியவில்லை. பஞ்சு போல் மெல்லிய திருவடிகளை உடைய உமையவளின் வலப்பாகம் பெற்றவனே! உன் செம்பவளத் திருவாயால் அஞ்சாதே என்று சொல்ல ஆசைப்பட்டேன். கண்டுகொள்வாய் அம்மானே!



26. அதிசயப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது   அறுசீர்ஆசிரியவிருத்தம்

(அடியார்கள் கூட்டத்தோடு சேர்த்த சிவபெருமான் திருவருளை வியந்து கூறி அவனையடைந்த அடியார்கள் இலக்கணத்தை அறிவிப்பது)

428) வைப்பு மாடு என்று மாணிக்கத்து ஒளி என்று
மனத்திடை உருகாதே
செப்பு நேர் முலை மடவரலியர் தங்கள்
திறத்திடை நைவேனை
ஒப்பு இலாதன உவமனில் இறந்தன
ஒண் மலர்த் திருப் பாதத்து
அப்பன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 1

தேவைப்படும் போது பயன்படுத்தலாம் என்று சேர்த்து வைத்த செல்வம் என்றும், மாணிக்கத்தின் ஒளியென்றும், மனத்தில் நினைத்துச் சிவபெருமானை எண்ணி உருகாமல், செப்புக் கிண்ணம் போன்ற முலைகளை உடைய மடப்பம்மிக்க பெண்களின் இன்பத்தில் நைந்து போகும் அடியேனை, ஒப்பற்றவையும் உவமை கூற முடியாதவையும் ஆகிய ஒளிமிக்க மலர்ப்பாதங்களை உடைய அப்பனாகிய சிவபெருமான் தன் அடிமையாக்கி அடியார் திருக்கூட்டத்தில் சேர்த்த அதிசயத்தை நாம் கண்டோம்.

429) நீதி ஆவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவரொடும் கூடேன்
ஏதமே பிறந்து இறந்து உழல்வேன் தனை
என் அடியான் என்று
பாதி மாதொடும் கூடிய பரம்பரன்
நிரந்தரமாய் நின்ற
ஆதி ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 2

நீதி என்று சான்றோர்கள் கூறியவற்றில் எதையும் நினைக்க மாட்டேன். அப்படி நினைக்கும் அடியார்களோடும் சேரமாட்டேன். இப்படித் துன்பத்திலே துன்பத்துக்காகவே பிறந்து இறந்து சுழல்கின்ற என்னை,

இவன் என்னடியான் என்று உரிமையோடு கூறித் திருமேனியில் பாதியாகத் தேவியை ஏற்ற பரம்பொருள், எங்கும் நீக்கமற நின்ற ஆதிமுதல்வன், என்னை ஆட்கொண்டு, தன்னடியார் கூட்டத்தில் சேர்த்தருளிய அதிசயத்தை நாம் கண்டோம்.

430) முன்னை என்னுடை வல் வினை போயிட
முக்கண் அது உடை எந்தை
தன்னை யாவரும் அறிவதற்கு அரியவன்
எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றது ஓர் புரி சடை முடிதனில்
இள மதி அது வைத்த
அன்னை ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 3

வினைகளை எரித்து ஞானஒளிதரும் மூன்று கண்களை உடைய என் அப்பன், தன்னை யாரென்று எத்தகையவராலும் அறியமுடியாதவன். அடியார்கள் அறிவுக்கும் அனுபவத்துக்கும் மிக எளியவன், நிறத்தால் தங்கத்தை வென்ற திருச்சடையில் இளம்பிறை அணிந்த அருட்கடலாகிய என் அன்னை - என்னுடைய மிகப்பழைய பொல்லாத வினையனைத்தும் போய் ஒழிய ஆட்கொண்டு, தன் அடியார் திருக்கூட்டத்தில் சேர்த்தருளிய அதிசயத்தை நாம் கண்டோம்.

431) பித்தன் என்று எனை உலகவர் பகர்வது ஓர்
காரணம் இது கேளீர்
ஒத்துச் சென்று தன் திருவருள் கூடிடும்
உபாயம் அது அறியாமே
செத்துப்போய் அரு நரகிடை வீழ்வதற்கு
ஒருப்படுகின்றேனை
அத்தன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 4

உலகமக்கள் என்னைப் பித்துப் பிடித்தவன் என்று ஏன் கூறுகிறார்கள் தெரியுமா? நான் அதற்கான காரணத்தைக் கூறுகிறேன். தலைவனாகிய சிவபெருமானோடு ஒத்துச் சென்று அவன் திருவருளோடு கலக்கும் வழியறியாமல், வீணாக உடம்பை அழித்து, கொடிய நரகத்தில் விழ ஏற்பாடு செய்கிறேனே நான் பித்தன் தானே - இந்தப் பித்தனை

என்னப்பன் ஆட்கொண்டு தன்னடியாரோடு சேர்த்த அதிசயத்தை நாம் கண்டோம்

432) பரவுவார் அவர் பாடு சென்று அணைகிலேன்
பன் மலர் பறித்து ஏத்தேன்
குரவுவார் குழலார் திறத்தே நின்று
குடி கெடுகின்றேனை
இரவு நின்று எரி ஆடிய எம் இறை
எரி சடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டு தன் அடியாரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 5

இறைவன் புகழ்பாடக் கூடிய அடியார்களின் பக்கத்தில் கூடப் போக மாட்டேன். பல மலர்களைப் பறித்துச் சூட்டி வழிபடமாட்டேன். குரா மலரையணிந்த நீண்ட கூந்தலையுடைய பெண்களின் நலத்திலேயே மனம் செலுத்திநின்று குடிகெட்டுப் போகக் காரணமான என்னை, ஊழிக்காலத்து நள்ளிருளில் ஊழித்தீயில் நின்று தாண்டவமாடும் என் தலைவன், தீக்கொழுந்து போலச் சிவந்த சடையில் பாம்புகளை அணிந்த சிவபெருமான் அடிமையாகக் கொண்டு அடியார் கூட்டத்தில் கூட்டிவைத்த அதிசயத்தை நாம் கண்டோம்.

433) எண்ணிலேன் திருநாமம் அஞ்சு எழுத்தும் என்
ஏழைமை அதனாலே
நண்ணிலேன் கலை ஞானிகள் தம்மொடு
நல் வினை நயவாதே
மண்ணிலே பிறந்து இறந்து மண் ஆவதற்கு
ஒருப்படுகின்றேனை
அண்ணல் ஆண்டு தன் அடியாரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 6

என்னுடைய அறியாமையால், அகந்தூய்மை செய்யும் நின் திருநாமமாகிய அஞ்செழுத்தை எண்ணவில்லை. கலைஞானம் பெற்ற ஞானிகள் தம்மோடும் கூடவில்லை. நல்ல புண்ணியச் செயல்கள் புரிய விரும்பாமல், மண்ணிலே பிறந்த நான். இங்கேயே இறந்து மண்ணாய்ப் போக ஒருப்படுகின்றேன். பெருமையில் சிறந்த

சிவபெருமான் என்னை ஆட்கொண்டு தன் அடியார் கூட்டத்தில் சேர்த்த அதிசயத்தை நாம்கண்டோம்.

434) பொத்தை ஊன் சுவர் புழுப்பொதிந்து உளுத்து
அசும்பு ஒழுகிய பொய்க்கூரை
இத்தை மெய் எனக் கருதி நின்று இடர்க் கடல்
சுழித்தலைப்படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச் சோதி
அத்தன் ஆண்டு தன் அடியாரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 7

பல துளைகளை உடையது. தோலால் ஆகிய சுவர் உடையது. புழுக்கள் நிறைந்தது. உளுத்துப் போனது. நிணநீர் கசிவது பொய்யாகிய கூரை வேயப்பட்டது. இந்த உடம்பை மெய்யானது என்றெண்ணி, நின்று, துன்பக்கடலில் தோன்றும் சுழியில் அகப்பட்டுச் சுழல்கின்ற என்னை, முத்து, நீலம், மாணிக்கம் வயிரம், பவளம் இவை எல்லாம் ஒருங்கே கூடியது போல ஒளிவீசும் எம்பெருமான், என்னப்பன் என்னை ஆட்கொண்டு தன்னடியார் கூட்டத்தில் சேர்த்த அதிசயத்தை நாம் கண்டோம்

435) நீக்கி முன் எனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையில் புகப் பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொல் செய்து
நுகமின்றி விளாக்கைத்து
தூக்கி முன் செய்த பொய் அறத் துகள் அறுத்து
எழுதரு சுடர்ச் சோதி
ஆக்கி ஆண்டு தன் அடியாரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 8

தொடக்கத்தில் ஆன்மா சிவத்துள் அடங்கிச் செயலற்றுக் கிடந்த காலத்தில், என்னைத் தன்னோடு நில்லாமல் நீக்கினான். உடம்பைத்தந்து பிறவியில் புகச்செய்தான். பிறவியில் தவித்த என்னை இவன் அறியாமை இப்படி இருக்கிறதே என்று நோக்கினான். மிகநுட்பமான ஒலியுடைய சிவயநம என்ற அஞ்செழுத்தை, நொடித்தல் தொழில்

செய்யும் போது கட்டைவிரலும் சுட்டுவிரலும் சேர்வது போல் சின் முத்திரையால் உபதேசித்தான் மாட்டின் கழுத்தில் பூட்டும் நுகத்தடி இல்லாமலேயே வட்டமாக உழுதான். என்னைத் தூக்கி நிறுத்தினான். முன் செய்த பொய்யாகிய செயல்கள் நீங்கக் குற்றங்களை அறுத்தான். எழுகின்ற ஒளிப்பிழம்பான இறைவன் என்னைத் தன்னடியான் ஆக்கி ஆட்கொண்டு அடியார்களோடு சேர்த்த அதிசயம் கண்டோம்.

436) உற்ற ஆக்கையின் உறு பொருள் நறு மலர்
எழுதரு நாற்றம் போல்
பற்றல் ஆவது ஓர் நிலை இலாப் பரம் பொருள்
அப் பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயன் அது நுகர்ந்திடும்
பித்தர் சொல் தெளியாமே
அத்தன் ஆண்டு தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே. 9

வினைக்குத் தக்கவாறு இறைவன் கொடுத்த உடம்பில் உற்ற பொருளாக இறைவன் இருக்கிறான். நல்ல மலரில் மணம் பொருந்தி இருப்பது போல நமக்குள் பற்ற முடியாத பரம்பொருளான இறைவன் இருக்கிறான். அவனைப் பார்க்காமல், கைக்குக் கிடைத்ததைக் கிடைத்தபடி பயன்படுத்தி இம்மைப் பயன் நுகர்வோர் பித்தர்கள். இவர்கள் சொல்லைக் கேட்காதவண்ணம் என்னப்பன் என்னை ஆட்கொண்டு தன் அடியார் களோடு சேர்த்த அதிசயமே அதிசயமாகும்

437) இருள் திணிந்து எழுந்திட்டது ஓர் வல் வினைச்
சிறு குடில் இது இத்தைப்
பொருள் எனக்கு அளித்து அரு நரகத்திடை
விழப் புகுகின்றேனை
தெருளும் மும்மதில் நொடி வரை இடிதர
சினப் பதத்தொடு செந்தீ
அருளும் மெய்ந் நெறி பொய்ந் நெறி நீக்கிய
அதிசயம் கண்டாமே. 10

திருச்சிற்றம்பலம்

ஆணவத்தால் விளைந்த அறியாமை இருளில் செறிவாக எழுந்தது வலிய வினைகளை நுகர்வதற்குரிய இந்த உடம்பாகிய குடிசை. இதை மெய்யான பொருள் என எண்ணி, இன்பம் துய்த்து, மீளா நரகத்தில் விழ இருந்த என்னை, விளங்குகின்ற மூன்று மதில் சூழ்ந்த கோட்டைகள் நொடிப்பொழுதில் அழியுமாறு, கோபத்துடன் எரித்தவன் காப்பாற்றினான். முப்புரம் என்பது மும்மலம் ஆகும் சிவஞானத்தால் மும்மலம் அழியும் என்று அவனருளிய மெய்யானவழி, நான் செல்லவிருந்த பொய்யான வழியை நீக்கி என்னைக் காப்பாற்றிய அதிசயத்தை அவனருளால் நான் கண்டேன்.



ஊற்றிருந்து ஆனந்தவெள்ளம் ஒழுகவுளம் அனல் மெழுகாய்
உருகு வோனை
நாற்றடந்தோள் சுந்தரர் மண் சுமந்திட மெய், அன்புகொண்ட
நலத்தினானைத்
தேற்று திருவாசகம் இவ்வுலகம் உய்யச் செப்பிய செவ்
வாயி னோடு
தோற்று பரானந்த நடப்பொதுவினில் சென்று இருந்தோனைத்
துதித்து வாழ்வாம்

- திருவாவடுதுறைப்புராணம்

27.புணர்ச்சிப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது ஆசிரிய விருத்தம்

(இறைவனோடு ஒன்றிக் கலக்கும் அத்துவித இலக்கணம் கூறும் பகுதி இது)

438) சுடர் பொன் குன்றைத் தோளா
முத்தை வாளா தொழும்பு உகந்து
கடைபட்டேனை ஆண்டு கொண்ட
கருணாலயனைக் கருமால் பிரமன்
தடைபட்டு இன்னும் சாரமாட்டாத்
தன்னைத் தந்த என்னார் அமுதைப்
புடை பட்டு இருப்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 1

தானே ஒளிவீசும் தங்கமலை, கருவிகளால் துளைக்கப்படாத முழுமுத்து, எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல் அவன் திருத் தொண்டினையே விரும்பிக் கீழ்ப்பட்ட என்னை ஆட்கொண்ட கருணைத் திருக்கோயில், கரிய திருமாலும் நான்முகனும் ஆணவத்தால் தடை செய்யப்பட்டு இன்னும்அணுக முடியாத இறைவன், தன்னையே நான் அனுபவிக்கத் தந்த என் ஆரமுதன் அந்தப் பெருமானுக்குப் பக்கத்திலேயே இருந்து அவனோடு கூடி, அந்தத் துளைபடா மாணிக்கத்தைப் பிரியாமல் களிப்பது எந்நாளோ?

439) ஆற்றகில்லேன் அடியேன் அரசே
அவனி தலத்து ஐம் புலன் ஆய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து
சிவன் எம் பெருமான் என்று ஏத்தி
ஊற்று மணல் போல் நெக்கு நெக்கு
உள்ளே உருகி ஓலம் இட்டுப்
போற்றி நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 2

அரசே! உன் அடியேன் இனிப்பொறுக்க மாட்டேன். இந்த மண்ணுலகில் ஐம்புலன்களாகிய சேற்றில் அழுந்திவிடாமல், சிவபெருமானையே சிந்தித்து, சிவனே! என் தலைவனே! என்று வாயாரப் போற்றி, தொடுமணற் கேணி போல, சுரந்து நீர்பாய, மனம் நெகிழ்ந்து

நெகிழ்ந்து உருகி ஓலமிட்டு அவனையே கூவி, என் துளைபடா மாணிக்கமான சிவபெருமானோடு கூடி, போற்றிநிற்பது எந்நாளோ?

440) நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்புஇலேனை
ஆண்டு கொண்ட என் ஆர் அமுதை
அள்ஊறு உள்ளத்து அடியார் முன்
வேண்டும் தனையும் வாய்விட்டு அலறி
விரை ஆர் மலர் தூவிப்
பூண்டு கிடப்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 3

ஓங்கி உலகளந்த திருமாலும், நான்முகனும், அஞ்சும் படி, அண்டங்கள் தாண்டி நீண்டுயர்ந்து திருவண்ணாமலையில் தோன்றிய நெருப்பை, அறியாமையால் அவனை விரும்பாத என்னையும் ஆட்கொண்ட என் பெறற்கரிய அமுதத்தை நினைத்து, அவன் பேரைக் கேட்டதுமே வாயூறும் அடியார்களுக்கு முன்னால், அவன் பெயரை முடிந்த அளவுக்கு வாய்விட்டுக்கூவி, மணமிக்க மலர்களைத் தூவி, என் பொல்லா மணியான சிவனைக் கூடி, அவனை என் உடம்பில் அணி போலப் பூண்டு, தழுவி உடம்பெல்லாம் ஒற்றி என்னை மறந்து கிடப்பது எந்நாளோ?

441) அல்லிக் கமலத்து அயனும் மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறை இன் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 4

தாமரை மலரின் அகவிதழில் உரையும் பிரமனும், திருமாலும், பிறதேவர்களும், தேவர்கள் தலைவனான இந்திரனும் பலமுறை சொல்லிச் சொல்லிப்புகழும் பெயரை உடையவனை, சொல்லையும் அதன் பொருளையும் கடந்து நிற்கும் ஒளியாய் விளங்குபவனை, கருநெல்லிக் கனியை, தேனை, பாலை, நிறைவான அமுதத்தை, அந்த அமுதின் இனிய சுவையை என் பொல்லா மணியைக் கூடி அணைத்துத் தழுவி, உண்ணாமல் உறங்காமல் கிடப்பது எந்நாளோ?

442) திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான் கீழ் மேல் அயனும் மாலும்
அகழப் பறந்தும் காணமாட்டா
அம்மான் இம் மாநிலம் முழுதும்
நிகழப் பணி கொண்டு என்னை ஆட்கொண்டு
ஆவா என்ற நீர்மை எல்லாம்
புகழப் பெறுவது என்று கொல்லோ? என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 5

(சூரியன் சந்திரன் அக்கினி மூன்றும் விளங்குவதற்காக) மேன்மேலும் விளங்கும் திருவடி திருமுடி இரண்டையும் காண்பதற்காக, கீழும் மேலுமாக, மாலும் பிரமனும், தோண்டிச் சென்றும் வானில் பறந்தும் காண இயலாத அம்மான், இந்தப் பெரிய உலகெல்லாம் அறியுமாறு என்னை ஆட்கொண்டு, அடிமையாக்கி, ஆ! வா! என்றழைத்த கருணைத்திறத்தைப் புகழ்ந்து என் பொல்லாமணியோடு கூடி மகிழ்வது எந்நாளோ?

443) பரிந்து வந்து பரம ஆனந்தம்
பண்டே அடியேற்கு அருள் செய்யப்
பிரிந்து போந்து பெரு மா நிலத்தில்
அரு மால் உற்றேன் என்று என்று
சொரிந்த கண்ணீர் சொரிய உள்நீர்
உரோமம் சிலிர்ப்ப உகந்து அன்பாய்ப்
புரிந்து நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 6

அளவிடமுடியா அன்பினால் மனம் இரங்கி, நான் இருக்கும் இம்மண்ணுக்குத் தான் வந்து, குருநாதனாக எழுந்தருளி, அப்பொழுதே எனக்குப் பரமானந்தத்தை அருளினான். நானோ அறியாமையால் அவனைப் பிரிந்து சென்று இப்பரந்த பூமியில் மிகப்பெரிய மயக்கத்தை அனுபவித்துவிட்டேன். இதை நினைத்து நான் வடித்த கண்ணீர் என் அன்பை வெளிக்காட்ட, என் மயிர்க்கால்கள் குத்திட்டுநிற்க, என் பொல்லா மணியை விரும்பிக்கூடி மகிழ்வது எந்நாளோ?

444) நினையப் பிறருக்கு அரிய நெருப்பை
நீரைக் காலை நிலனை விசும்பைத்
தனை ஒப்பாரை இல்லாத் தனியை
நோக்கி தழைத்து தழுத்த கண்டம்
கனையக் கண்ணீர் அருவி பாயக்
கையும் கூப்பிக் கடி மலரால்
புனையப் பெறுவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 7

மற்றவர்களால் நினைக்கவும் முடியாத தீ, நீர், காற்று, மண், வான் இவைகளாக விளங்குபவனை, தன்னை ஒப்பார் இல்லாமல் தானே தனக்கொப்பாய்த் தனியே நிற்பவனை, கண்களால் நோக்கி, உடல்பூரிக்க, குரல் தழுதழுத்துக் கனைக்க, கண்ணீர் அருவியாய்ப் பொழிய, கைகளைக் கூப்பி, மணமிக்க மலர்களால் அவன் திருவடிகளை அலங்கரித்து என் பொல்லா மணியைக் கூடி இருப்பது எந்நாளோ?

445) நெக்கு நெக்கு உள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தால் கூத்து நவிற்றிச்
செக்கர் போலும் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர் சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 8

என் பொல்லா மணியாகிய சிவபெருமானோடு கூடி மகிழ்ந்து, அந்த மகிழ்வினால் மனம் நெகிழ்ந்து கசிந்து உருகி, நின்றும், இருந்தும் தரையில் கிடந்தும், எழுந்தும், சிரித்தும் அழுதும் தொழுதும் பல நிலைகளில் எம்பெருமானை வாழ்த்தி, பலவகையான கூத்துக்களை நடத்தி, செவ்வானம் போன்ற எம்பிரான் திருமேனியை முழுவதும் நோக்கி, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, அவனுள்ளே நானும் என்னுள்ளே அவனுமாய் (இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்துவது) எந்நாளோ?

446) தாதாய் மூ ஏழ் உலகுக்கும்
தாயே நாயேன் தனை ஆண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கு ஓர் மருந்தே
பெருந் தேன் பில்க எப்போதும்
ஏது ஆம் மணியே என்று என்று ஏத்தி
இரவும் பகலும் எழிலார் பாதப்
போது ஆய்ந்து அணைவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 9

மண்ணுலகம் விண்ணுலகம் பாதாள லோகம் எனப்படும் மூன்று உலகங்களிலும் உள்ள ஏழேழான உலகங்கள் அனைத்துக்கும் தந்தையும் தாயுமாய் இருப்பவனே! நாய் போன்ற என்னையும் ஆட்கொண்டதால் பேதை போல் தெரிபவனே! பிறவிநோய் வராமல் தடுக்கும் மருந்தே! என் புரைபடா மாணிக்கமே! உன்னோடு கூடி, குற்றமற்ற மாமணியே என்று போற்றி, இரவும் பகலும் உன் அழகிய பாதமலரை அறிந்து அணைந்து பெருந்தேன் பருகுவது எந்நாளோ!

447) காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கு எல்லாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே எனை ஆண்ட
பார்ப்பானே எம் பரமா என்று
பாடிப் பாடிப் பணிந்து பாதப்
பூப்போது அணைவது என்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 10

திருச்சிற்றம்பலம்

உலகங்கள் எல்லாவற்றையும் காப்பவனே! படைப்பவனே! தன்னுள் ஒடுக்கிக் கொள்பவனே! கண்ணுக்கு எட்டாத வானத்திலுள்ள தேவர்கள் யாவருக்கும் மூத்தவனே! என்றும் அழியாத முதற்பொருளாய் நின்ற முதல்வனே! என்னைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட அந்தணனே! என் பரம்பொருளே என்று பலவாறு உன் புகழைப் பாடிப்பாடிப் பணிந்து உன் திருடித்தாமரைகளைச் சேர்ந்து என் பொல்லா மணியான உன்னைக் கூடி மகிழ்வது எந்நாளோ!

28.வாழாப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது   எழுசீர்ஆசிரியவிருத்தம்

(உலகப்பற்று அற்றுப் போவதே முத்திக்குவழி. பற்றில்லாத என்னை அழைத்துக் கொள் என வேண்டுவது இப்பகுதி)

448) பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கு எடுத்து உரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 1

பாருலகம் முதல் விண்ணுலகம் முடிய எல்லாப் பூதங்களிலும் பரவிக் கலந்து நிற்கும் பரம்பொருளே! உன்னைத் தவிர எனக்கு எப்பற்றுமில்லை. இதனை நீ அறிவாயாக. புகழோடு விளங்குபவனே! சிவபுரத்து மன்னனே! திருப்பெருந்துறையில் விளங்கும் சிவனே! ஆட்கொண்ட நீ எனக்கு அருள்புரியாமல் புறக்கணித்தால் இதை வேறு யாரிடம் முறையிடுவேன்? யார்க்கு உரைத்துத் துன்புறுவேன்? கடல் சூழ்ந்த உலகில் இனியும்வாழமாட்டேன் என்பதை அறிந்துகொள். என்னை உன் திருவடிக்கீழ் வருக என்று அருள்புரிவாயாக!

449) வம்பனேன் தன்னை ஆண்ட மா மணியே
மற்று நான் பற்று இலேன் கண்டாய்
உம்பரும் அறியா ஒருவனே இருவர்க்கு
உணர்வு இறந்து உலகம் ஊடுருவும்
செம் பெருமானே சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எம் பெருமானே என்னை ஆள்வானே
என்னை நீ கூவிக் கொண்டுஅருளே. 2

வீணனாகிய என்னைத் தடுத்தாட்கொண்ட குருமணியே! உன்னைத் தவிர, வேறு எந்தப்பற்றும் எனக்கில்லை. தேவர்களும் காண முடியாத ஒரு பரம்பொருளே! அயனும் அரியுமாகிய இருவருக்கும், அவரவர் அறிவின் எல்லையைத் தாண்டி எல்லா உலகங்களையும்

ஊடுருவி நின்ற செந்நிறத் தீவண்ணனே! சிவபுரத்தின் மன்னனே! திருப்பெருந்துறையில் உள்ள சிவபெருமானே! என் தலைவனே! என்னை ஆளும் அருளரசே! என்னை நீ கூவி அழைத்துக் கொள்வாயாக!

450) பாடி மால் புகழும் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
தேடி நீ ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை
உணர்த்துவது உனக்கு எனக்கு உறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரி யாயே. 3

திருமால் பாடிப்புகழும் உன் திருவடிகளைத் தவிர, வேறு எதிலும் நான் பற்று வைக்கவில்லை. என்னை நீ தேடிவந்து ஆட்கொண்டாய்! சிவபுரத்தரசனே! திருப்பெருந்துறைப் பெருமானே! உன்னைக் கலந்த நான் ஊடுவதும் உன்னோடு தான். கூடுவதும் உன்னோடு தான். ஊடல் முடிந்ததை உணர்த்துவதும் உனக்கும் எனக்கும் இடையில் தான். என்னைப் பிரிந்த நீ இப்பொழுது உறுதி பயக்கும் இன்சொற்களைக் கூறாமையால் நான் வாடினேன். இவ்வுலகில் இனி வாழமாட்டேன் என்பதை அறிந்துகொள். என்னை வருக என்று அருள்புரிவாயாக!

451) வல்லை வாள் அரக்கர் புரம் எரித்தானே
மற்று நான் பற்றி இலேன் கண்டாய்
தில்லை வாழ் கூத்தா சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எல்லை மூ வுலகும் உருவி அன்று இருவர்
காணும் நாள் ஆதி ஈறு இன்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள்புரியாயே. 4

அரக்கர் வாழ்ந்த முப்புரங்களையும் விரைந்தளித்தவனே! உன் பற்றொழிய ஒரு பற்றும் எனக்கில்லை. தில்லைக்கூத்தனே! சிவபுரத்து அரசனே! திருப்பெருந்துறைச் செல்வனே! முன்னாளில் திருமாலும் நான்முகனும் தேடிய பொழுது, மூன்றுலகங்களின் எல்லைகளையும் ஊடுருவி, முதலும் முடிவும் இல்லையெனக் காட்டி வளர்ந்தவனே! நான் இனி வாழமாட்டேன். அறிந்து கொள். என்னை வருக என்று அருள் புரிவாயாக

452) பண்ணின் நேர் மொழியாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
திண்ணமே ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
எண்ணமே உடல் வாய் மூக்கொடு செவி கண்
என்று இவை நின்கணே வைத்து
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 5

செவிக்கினிய இசைப்பண் போன்ற மொழிகளைப் பேசும் உமையவளை ஒரு பாகத்தில் உடையவனே! எனக்கு வேறு பற்றுக்கள் இல்லை. என்னை ஆண்டுகொண்டவன் நீ என்பது உறுதி. சிவபுரத்தரசனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளும் சிவபெருமானே! உலகில் போகங்களை அனுபவிப்பதற்கான எண்ணம், உடம்பு, வாய், மூக்கு, காது, கண் ஆகிய கருவிகரணங்களையெல்லாம் உலகின்பால் வைக்காமல் உன்பால் வைத்துவிட்டேன். இனி இந்த மண்ணின் மேல் வாழமுடியாது என்பதைக் கண்டுகொள். என்னை வருக என்று அருள்புரிவாயாக.

453) பஞ்சின் மெல் அடியாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செஞ்செவே ஆண்டாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அஞ்சினேன் நாயேன் ஆண்டு நீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 6

பஞ்சைவிட மென்மையான திருவடிகளை உடைய உமையவளை ஒரு பாகமாக ஏற்றவனே! உன்னையன்றி எனக்குப் பற்றுக் கோடில்லை. நீ என்னைச் செவ்வையாக ஆட்கொண்டாய். சிவபுரத்தரசனே! திருப் பெருந்துறைச் சிவபெருமானே! இனியும் இவ்வுலகில் வாழ்வதற்கு அஞ்சுகிறேன். நாய் போன்ற நான் அன்று நீ எனக்குத் தந்த பேரருளை அறியாமை மயக்கத்தால் மறந்து விட்ட வஞ்சகன் ஆனேன் இங்கு வாழமாட்டேன். என்னை வருக என்று அழைத்து அருள்வாயாக!.

454) பருதி வாழ் ஒளியாய் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
திரு உயர் கோலச் சிவ புரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்து உளம் உருகிக்
கலந்து நான் வாழும் ஆறு அறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 7

சூரியன் வாழ்வதற்குரிய ஒளியைக் கொடுப்பவனே! உன் திருவடிகளைத் தவிர வேறு எதையும் பற்றிக் கொள்ளாதவன் நான். இதை நீ அறிவாய். மங்கலத்திருக்கோலம் காட்டும் சிவபுர மன்னனே! திருப்பெருந்துறையில் உள்ள சிவபெருமானே! உன் அருட்கருணையையே எண்ணி எதிர்பார்த்து, என் மனம் கசிந்து உருகி உன்னோடு கலந்து வாழத் தெரியாத மயக்கவுணர் வுடையவன், இவ்வுலகில் வாழமாட்டேன். என்னை வருக என்று அழைத்து அருள்வாயாக!

455) பந்தணை விரலாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
அந்தம் இல் அமுதே அரும் பெரும் பொருளே
ஆர் அமுதே அடியேனை
வந்து உய ஆண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 8

அருள் புரிவதற்காகவே, பந்து வந்து சேரும் மென்மையான விரல்களை உடைய உமையவளைப் பங்கில் ஏற்றவனே! உன்னைத்தவிர, எனக்கு வேறு பற்றில்லை. ஒளியால் தீயைப் போன்றவனே! சிவபுரத்தரசனே! திருப்பெருந்துறையில் வீற்றிருந்தருளும் சிவபெருமானே! முடிவில்லாத அமுதமே! கிடைக்க முடியாத பெருஞ் செல்வமே! உண்ணத்தக்க அமுதமே! நீயே வந்து நான் உய்யுமாறு என்னை ஆட்கொண்டாய்! இனி இங்கு வாழமாட்டேன் என்னை வருக என்று அழைத்து உன் திருவடியை அருள்வாயாக.

456) பாவ நாசா உன் பாதமே அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
தேவர் தம் தேவே சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
மூ உலகு உருவ இருவர் கீழ்மேலாய்
முழங்கு அழலாய் நிமிர்ந்தானே
மா உரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 9

பாவங்களை அழிக்கும் பரமனே! உன் திருவடிகளைத் தவிரப் பற்றிக் கொள்ள வேறு எதுவும் அற்றவன் நான். தேவர்களுக்கும் தேவனே! சிவபுரத்தரசனே! திருப்பெருந்துறையில் உள்ள சிவபெருமானே! திருமாலும் பிரமனும் கீழும் மேலுமாய்த் தேடிய பொழுது மூன்றுலகங்களையும் ஊடுருவ, முழங்குகின்ற நெருப்பாய் உயர்ந்தவனே! யானையின் தோலைப் போர்த்தியவனே! இம்மண்ணில் வாழமாட்டேன் என்னை வருக என்று அழைத்து அருள் புரிவாயாக.

457) பழுது இல் தொல் புகழாள் பங்க நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
செழு மதி அணிந்தாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறை உறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்கு ஓர்
துணை என நினைவனோ சொல்லாய்
மழ விடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரியாயே. 10

திருச்சிற்றம்பலம்

இயல்பாகவே குற்றங்கள் அற்ற, பழமையான புகழுக்குரிய அம்மையை ஒரு பாகத்தில் வைத்த அப்பனே! எனக்கு வேறு பற்றுக்கள் இல்லை. செழிப்பான இளம்பிறையை அணிந்தவனே! சிவபுரத்தரசனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளும் சிவபெருமானே! உனக்கு ஆளாகிய நான் பிற தெய்வங்களை வணங்குவேனா? அவர்களைத் துதிப்பேனா? எனக்குத் துணையாக நினைப்பேனா? சொல்லப்பா. இளமையான காளையை வாகனமாகக் கொண்டவனே! நான் இவ்வுலகில் வாழமாட்டேன். என்னை வருக என்று அழைத்து அருள்புரிந்து காப்பாயாக!

29.அருட்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது எழுசீர் ஆசிரிய விருத்தம்

(நான் உன்னை அழைக்கும் போது சும்மா இராமல் அது என்ன என்று கேட்கும் அருளையாவது புரிக என வேண்டுவது இப்பகுதி. உலகமாகிய மாயையை விட்டுவிலகி இறைவனை அழைப்பது இதன் உட்பொருள்)

458) சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே
சுரி குழல் பணை முலை மடந்தை
பாதியே பரனே பால் கொள் வெண் நீற்றாய்
பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. 1

ஒளிவடிவானவனே! அந்த ஒளிக்கு ஆதாரமான தீச்சுடரே! அந்தச் சுடரை ஏந்தும் விளக்கே! சுருண்ட கூந்தலையும், பருத்து நெருங்கிய முலைகளையும் உடைய பார்வதியின் ஒரு பாதியே! பரம்பொருளே! பால் போன்ற வெண்மையான திருநீற்றை அணிந்தவனே! தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும் திருமாலும் கண்டறிய முடியாதபடி கல்விக்கும் செல்வத்துக்கும் நடுவில் நின்ற நீதியே! செல்வம் நிறைந்த திருப்பெருந் துறையில் மலர்கள் நிறைந்த குருந்த மரத்தடியில் வீற்றிருக்கும் புகழ்மிக்க ஆதிப்பொருளே! நான் உன்னை விரும்பி அழைக்கிறேன். அது என்ன என்று கேட்டாவது அருள்புரிவாயாக!

459) நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலம் இட்டு அலறி
உலகு எலாம் தேடியும் காணேன்
திருத்தம் ஆம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம்மேவிய சீர்
அருத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. 2

ஆனந்தத் தாண்டவனே! மலங்கள் அற்றவனே! திருநீறணிந்தவனே! தீமையை எரிக்கும் நெற்றிக்கண் உடையவனே! தேவர்கள் தலைவனே! தனக்குவமை இல்லாத ஒருவனே! உன் பெயர் கூறி ஓலமிட்டு அலறி உன்னை உலகெலாந் தேடிப்பார்த்தும் காண மாட்டாதவன் ஆனேன். அழகும் தூய்மையும் மிக்க பொய்கையை உடைய திருப்பெருந்துறையில் வளமிக்கமலர்களை உடைய குருந்த மரத்தடியில் எழுந்தருளியிருக்கும் மெய்ப்பொருளே! அடியேன் உன்னைவிரும்பி அழைக்கிறேன். அது என்ன என்று கேட்டு அருள்புரிவாயாக!

460) எங்கள் நாயகனே என் உயிர்த் தலைவா
ஏல வார் குழலிமார் இருவர்
தங்கள் நாயகனே தக்க நல் காமன்
தனது உடல் தழல் எழ விழித்த
செங்கண் நாயகனே திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தமேவிய சீர்
அங்கணா அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. 3

எங்களை ஆட்கொண்ட ஆன்மநாயகனே! என் உயிர்ககுயிரான தலைவனே! மயிர்ச் சாந்தணிந்த கூந்தலை உடைய உமையவளுக்கும் கங்கைக்கும் நாயகனே! தகுதி வாய்ந்த நல்ல மன்மதன் உடல் எரியுமாறு விழித்துப் பார்த்த சிவந்த கண்களைஉடைய தலைவனே! திருப்பெருந்துறையில் வளமான மலர் நிறைந்த குருந்த மரத்தடியில் எழுந்தருளும் அழகிய கண்களை உடையவனே! அடியேன் உன்னை விரும்பி அழைக்கிறேன். அது என்ன என்று கேட்டு அருள்புரிவாயாக!

461) கமல நான் முகனும் கார் முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற்கு அரிய
விமலனே எமக்கு வெளிப்படாய் என்ன
வியன் தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமில நான் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அமலனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. 4

தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனும், கரியதிருமேனிக் கண்ணபிரானும், அணுகுவதற்கரியவனே! இயல்பாகவே மலமற்றவனே! எமக்கு முன்னால் வெளிப்பட்டுத் தோன்றுவாயாக என்று அவர்கள்

வேண்ட, பெரிய தீப்பிழம்பாக வெளிப்பட்ட எந்தையே! பேரொலியோடு வேதங்கள் முழங்கும் திருப்பெருந் துறையில் செழுமையான மலர்களைச் சொரியும் குருந்த மரத்தடியில் எழுந்தருளிய சிறப்பு மிக்கவனே! மலங்களை அகற்றுபவனே! அடியேன் அன்புடன் அழைத்தால் அது என்ன என்று கேட்டு அருள்வாயாக!

462) துடி கொள் நேர் இடையாள் சுரி குழல் மடந்தை
துணை முலைக் கண்கள் தோய் சுவடு
பொடி கொள் வான் தழலில் புள்ளிபோல் இரண்டு
பொங்கு ஒளி தங்கு மார்பினனே
செடி கொள் வான் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அடிகளே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. 5

உடுக்கை போன்ற இடையினையும், சுருண்ட கூந்தலையும் உடைய உமை மடந்தையின் திருமுலைக்கண்கள் தோய்ந்ததால் உண்டான அடையாளம், நீறுபூத்திருக்கும் நெருப்பின் மேல் இரண்டு புள்ளிகள் போல ஒளிவீசும் மார்பை உடையவனே! நெருக்கமான மரங்களை உடைய சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் செழுமையான மலர்சொரியும் குருந்த மரத்தடியில் எழுந்தருளியுள்ள சிறப்பு மிக்க ஞானாசிரியனே! அடியேன் விரும்பி அழைத்தால் அது என்ன எனக் கேட்டருள்வாயாக

463) துப்பனே தூயாய் தூய வெண்ணீறு
துதைந்து எழு துளங்கு ஒளி வயிரத்து
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தில்
உறு சுவை அளிக்கும் ஆர் அமுதே
செப்பமாம் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அப்பனே அடியேன் ஆதரித்து அழைததால்
அதெந்துவே என்று அருளாயே. 6

ஆன்மாக்களுக்குத் துணைவலியாய் உள்ளவனே! தூய்மை யானவனே! தூய வெண்ணீறு நெருங்கியதால், விளங்கும் ஒளி வயிரம் போல் இருப்பவனே! உன்னை இடைவிடாமல் நினைப்பவர் மனத்தில் இனிய சுவையைத் தரும் அரிய அமுதமே! திருத்தமான வேதங்கள் சேர்ந்த திருப்பெருந்துறையில் செழுமலர்க்குருந்த மரத்தடியில்

எழுந்தருளும் அப்பனே! அடியேன் விரும்பி அழைத்தால் அது என்ன எனக் கேட்டருள்வாயாக

464) மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கள் மூன்று எரித்த
கையனே காலால் காலனைக் காய்ந்த
கடும் தழல் பிழம்பு அன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஐயனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. 7

உண்மைப் பொருளானவனே! உயிர்களின் பக்குவத்துக் கேற்பப் பலஉருவம் கொள்பவனே! மேருமலையை வில்லாகக் கொண்டு, பகைவர்களின் முப்புரங்களை எரித்த திருக்கரங்களை உடையவனே! திருவடியால் உதைத்துக் காலனைக்கோபித்த தழற்பிழம்பு போன்ற சிவந்த மேனியை உடையவனே! செல்வமிக்க திருப்பெருந்துறையில் செழுமலர் சொரியும் குருந்தமரத்தடியில் காட்சிதரும் ஐயனே! அடியேன் விரும்பி அழைத்தால் அது என்ன என்று கேட்டருள்வாயாக!

465) முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டு அறா மலர் பறித்து இறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்து அருள் செய்யும்
சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. 8

இயல்பாகவே பாசநீக்கம் பெற்றவனே! எவ்வுயிர்க்கும் முதலானவனே! முக்கண் பெற்றவனே! தவமானவனே! அலரும் பருவத்து அரும்புகளைப் பறித்து, உன் திருவடிகளில் இட்டு, பக்தியோடு பாடும் அடியார்களுக்குச் சிறந்த பரகதியான உன்னையே தந்து அருள்புரியும் சித்தம் உடையவனே! செல்வமிக்க திருப்பெருந்துறையில் செழுமலர் சூழ்ந்த குருந்த மரத்தடியில் வீற்றிருக்கும் புகழ்மிக்க என்னப்பனே! அடியேன் அன்புடன் அழைத்தால் அது என்ன என்று கேட்டு அருள்புரிவாயாக

466) மருளனேன் மனத்தை மயக்கு அற நோக்கி
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவாள் அரவம்
கங்கை நீர் தங்கு செஞ் சடையாய்
தெருளும் நான் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அருளனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே. 9

மயங்கிக் கிடந்தவனாகிய என் மனத்தில் மயக்கம் தெளிய நோக்கி, மறுமை இம்மை ஆகிய பிறவிகளை இல்லையாக்கிய மெய்ப்பொருளே! புனித மிக்கவனே! சீறுகின்ற ஒளி மிக்க பாம்பும் வேகமான கங்கையும் தங்கள் வீறு ஒடுங்கித் தங்கியிருக்கும் செஞ்சடைக் கடவுளே! தெளிவுதரும் நான்கு வேதங்களும் சேர்ந்திருக்கும் திருப்பெருந்துறையில் செழுமலர் பொழியும் குருந்த மரத்தடியில் வீற்றிருந்து அருள்புரிபவனே! அடியேன் அன்புடன் அழைத்தால் அது என்ன என்று கேட்டு அருள்புரிவாயாக!

467) திருந்துவார் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
இருந்தவாறு எண்ணி ஏசறா நினைந்திட்டு
என்னுடை எம் பிரான் என்று என்று
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால்
அலை கடல் அதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இது காண்
போதராய் என்று அருளாயே. 10

திருந்திய நீண்ட சோலைகள் சூழ்ந்த திருப்பெருந் துறையில் செழுமையான மலர்கள் மிகுந்த திருக்குருந்த மரத்தின் நிழலில், பெருமைமிக்க குருநாதனாக வீற்றிருந்ததையே எண்ணி, முன்பு பெற்றிழந்தது போல் இல்லாமல் அவனையே நினைத்து, என்னுடையவன் என் தலைவன் என்று பலவாறு கூறி அருந்தவக் காட்சி தருபவனே என்று அன்புடன் அழைத்தால், அலைவீசும் பிறவிக்கடலிலிருந்து எழுந்து என்னோடு சேரவா! திருக்கயிலைக்குச் செல்லும் வழி இதுதான். வருவாய் என்று அருள்புரிவாயாக!

30.திருக்கழுக்குன்றப் பதிகம்

திருக்கழுக்குன்றத்தில் அருளியது எழுசீர்ஆசிரியவிருத்தம்

(பசுத்தன்மை நீங்கப் பெற்ற ஆன்மாவுக்குச் சற்குருவின் தரிசனம் மீண்டும் கிடைத்ததை இப்பகுதி காட்டுகிறது. இதைக் காட்சிப்பத்து எனப் பழைய நூற்கள் குறிப்பிடுகின்றன. ஏழுபாடல்கள் தான் காணப்படுகின்றன)

468) பிணக்கு இலாத பெருந்துறைப் பெருமான்
உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கு இலாதது ஓர் இன்பமேவரும்
துன்பமேதுடைத்து எம்பிரான்
உணக்கு இலாதது ஓர் வித்து மேல்
விளையாமல் என் வினை ஒத்த பின்
கணக்கு இலாத் திருக் கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 1

நல்லார் பொல்லார் என்ற வேறுபாடின்றி அருள்புரியும் திருப்பெருந்துறைப் பெருமானே! உன் திருநாமங்களை வாயாரச் சொல்லும் மெய்யன்பர்களுக்கு, வருகின்ற துன்பங்களை நீக்கி, இணையற்ற இன்பவடிவாக இருப்பவனே! காயப்போடாத ஈரவிதை முளையாத வண்ணம் (என் பிறவியைத் துடைத்தாய்) என் இருவினைகளும் ஒத்துப் போக, நீயே வந்து திருக்கழுக்குன்றத்தில், உன்னுடைய எல்லைகாண முடியாத ஞானாசிரியக் கோலத்தைக் காட்டினாய்.

469) பிட்டு நேர்பட மண் சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்திலாத
சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறு
நாயினும் கடை ஆய வெம்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 2

வந்தி கொடுத்த பிட்டுக்கணக்கு நேராக வேண்டுமென்று தலையில் மண்சுமந்த திருப்பெருந்துறைப் பித்தனே! (வினைப் போகங்களுக்குத் தக்கவாறு அவற்றைத் தொலைக்க உடம்பு கிடைத்தது)

அந்த உடம்பைத் தக்கவாறு பயன்படுத்தி வராத வஞ்சகன் ஆகிய நான் உன்னைச் சேரவில்லை. எல்லோரையும் ஒழுங்கு செய்பவனே! சிவலோக நாதனே! சிறுநாயை விடக் கீழானவனும், கொடுந்துன்ப வடிவானவனும், ஆகிய என்னையும் ஆண்டு கொள்வதற்காக, நீ வந்து திருக்கழுக்குன்றத்தில் உன் திருமேனி காட்டி ஆட்கொண்டாய்

470) மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி
மலம் கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக் கேடனேன் இனி
மேல் விளைவது அறிந்திலேன்
இலங்குகின்ற நின் சேவடிகள்
இரண்டும் வைப்புஇடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 3

கலக்கமுற்றிருந்த என் கண்ணீரைத் துடைத்துக் கலக்கத்திற்குக் காரணமான ஆணவ மலத்தின் ஆற்றலைக் கெடுத்த திருப்பெருந்துறையை விட்டு விலகினேன். வினைகளால் கெடுபவனாகிய நான். இனிமேல் என்ன விளையப் போகிறது என்று அறியமாட்டேன் என் மனத்தில் வைப்பாக வைத்த நின் திருவடிகள் இரண்டையும் வைத்த இடத்தில் காணாமல் என் அறியாமையால் கலங்குகின்றேன். அப்படிக் கலங்காவண்ணம் திருக்கழுக்குன்றத்திலே வந்து மீண்டும் திருவடிகாட்டினாய். தொலைத்த திருவடியைக் கண்டு பிடித்துவிட்டேன்.

471) பூண்ஒணாதது ஓர் அன்பு பூண்டு
பொருந்தி நாள்தொறும் போற்றவும்
நாண்ஒணாதது ஓர் நாணம் எய்தி
நடுக் கடலுள் அழுந்தி நான்
பேண்ஒணாத பெருந்துறைப் பெரும்
தோணி பற்றி உகைத்தலும்
காண்ஒணாத் திருக் கோலம் நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 4

உன்மேல் வேறுயாராலும் மேற்கொள்ளமுடியாத, பேரன்பு கொண்டேன். உன் திருவடிகள் என் மனத்தில் பொருந்த, நாள் எல்லாம் போற்றினேன். ஆனால் உன்னை வணங்கவும் உன்னடியான் என்னவும் சிவச்சின்னம் அணியவும் நாணப் பட்டேன். நாண

வேண்டாதவற்றுக்கு நாணப்பட்டுத்துன்பமென்னும் நடுக்கடலுள் அழுந்தினேன். உன்னருளால் வேறு யாராலும் பற்ற முடியாத திருப்பெருந்துறைத் தெப்பம் கிடைத்தது. அதை இறுகப் பற்றிக் கொண்டு செலுத்தினேன். நீ கருவி கரணங்களால் காணற்கரிய திருக்கோலத்தைத் திருக்கழுக்குன்றத்தில் காட்டி அருள்புரிந்தாய்

472) கோல மேனி வராகமே குணம்
ஆம் பெருந்துறைக் கொண்டலே
சீலம் ஏதும் அறிந்திலாத என்
சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமே கரி ஆக நான் உனை
நச்சி நச்சிட வந்திடும்
காலமே உனை ஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 5

பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுக்க வந்த அழகான தாய்ப் பன்றியே! திருப்பெருந்துறையில் நீர் அருந்த இறங்கிய எண்குணம் கொண்ட மேகமே! எந்த ஒழுங்கையும் அறியாத என் சிந்தையில் நிறைந்திருக்கும் அரிய முடிமணியே! உலகம் சாட்சியாக நான் உன்னை விரும்பிட, என்னை விரும்பி யாவரும் காண எழுந்தருளிய பெருமானே! எல்லையற்ற நல்ல காலமே! உன்னை நான் காதலாகிக் கசிந்து ஓத, நீ வந்து, திருக்கழுக் குன்றத்தில் உன் திருவுருக்காட்டினாய்.

473) பேதம் இல்லது ஓர் கற்பு அளித்த
பெருந்துறைப் பெரு வெள்ளமே
ஏதமே பல பேச நீ எனை
ஏதிலார் முனம் என் செய்தாய்
சாதல் சாதல் பொல்லாமை அற்ற
தனிச் சரண் சரண் ஆம் எனக்
காதலால் உனை ஓத நீ வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 6

உன்னையன்றிப் பிறதெய்வம் எண்ணாதபடி, மாறுபடாத உறுதியான கற்பு நெறியை எனக்குத் தந்த பெருந்துறைக் கருணை வெள்ளமே! உன்னைப் பிரியச் செய்தாய். அதனால் அயலார் பலவாறு குறைபேச அவர்களுக்கு முன்னால் இப்படிச் செய்துவிட்டாய். இப்பொழுது மரணத்துக்கே மரணம் தருவதும், பொல்லாமை அற்றதும்

ஆன ஒப்பற்ற உன் திருவடிகளே சரணம் என்ற பிடித்துக்கொண்டு, தீராக்காதலால் உன்னைப் புகழ நீ வந்து திருக்கழுக்குன்றில் உன் திருவடிகாட்டினாய்

474) இயக்கிமார் அறுபத்து நால்வரை
எண் குணம் செய்த ஈசனே
மயக்கம் ஆயது ஓர் மும் மலப் பழ
வல் வினைக்குள் அழுந்தவும்
துயக்கு அறுத்து எனை ஆண்டுகொண்டு நின்
தூய் மலர்க் கழல் தந்து எனைக்
கயக்க வைத்து அடியார் முனே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே. 7

உத்தரகோச மங்கையில் அறுபத்துநான்கு இயக்கி மார்களுக்கும் தனக்குரிய எட்டுக்குணங்களும் அமையச் செய்த ஈசனே! அறிவை மயக்கும் மும்மலங்களும் பழைய வினையுமாகிய சேற்றில் நான் அழுந்திய போது, வல்வினையின் தொடக்கறுத்து எனை ஆட்கொண்டு, உன்னுடைய தூய்மையான மலரடிதந்து, பிரிவினால் கொஞ்சம் கசக்க வைத்து அடியார்கள் முன்னிலையில் குருவடிவாக வந்து திருக்கழுக்குன்றில் திருமேனி காட்டி அருள் செய்தாய்.



பாசமும் பற்றும் விட்டோர் பற்றறப் பற்றும் மூர்த்தி
நேசமோடு ஆலின்கீழே நிலைத்ததேன்? எங்கள் தெய்வ
வாசகர் நூலைப் போல மற்றொரு நூலை எய்தும்
ஆசையால் அன்றோ வள்ளல் அருந்தவம் இயற்று கின்றான்
- சொ.சொ.மீ. சுந்தரம்

31. கண்டபத்து

தில்லையில் அருளியது கொச்சகக் கலிப்பா

(திருப்பெருந்துறையில் கண்ட குருநாதன்திருக்கோலத்தைத் திருக்கழுக்குன்றிலும் கண்டு, தில்லைக்கு வந்த மணிவாசகர், ஆனந்தத் தாண்டவம் கண்டு, பாடியது. ஐம்புல இன்பம் தவிர்த்து அந்தமிலா ஆனந்தம் பெற்றதைப் பாடும் பகுதி இது)

475) இந்திரிய வயம் மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அரு நரகில் வீழ்வேற்குச்
சிந்தை தனைத் தெளிவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட
அந்தம் இலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே. 1

ஐம்புலன்களின் இன்பத்தால் மயக்கமுற்று, இறந்து போவதற்கே காரணமாகி ஆதரவின்றி அந்தரமாகிய வானில் திரிந்து சென்று, மிகக்கொடிய நரகத்தில் வீழ இருந்த எனக்கு, மனத்தெளிவு தந்து, என்னைச் சிவமாக்கி, ஆண்டுகொண்ட, முடிவில்லாத பேரானந்தமாய் விளங்கும் பெருமானை, அழகுமிக்க தில்லைப்பதியில் கண்டு கொண்டேன்

476) வினைப் பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச் சிறிதும் நினையாதே தளர்வு எய்திக் கிடப்பேனை
எனைப் பெரிதும் ஆட்கொண்டு என் பிறப்பு அறுத்த இணை இலியை
அனைத்து உலகும் தொழும் தில்லை அம்பலத்தே கண்டேனே. 2

இருவினைகளால் விளைகின்ற பிறப்பு என்னும் பெருந்துன்பத்தில் சிக்கி, வினைநீக்கும் சிவபெருமானைச் சிறிதளவும் சிந்திக்காமல், செயலற்றுக் கிடக்கின்ற என்னை, என் தலைவனான சிவபெருமான் பெருங்கருணையினால் ஆட்கொண்டு, என் பிறவியை அழித்தான். தனக்கு ஒப்பில்லாத அந்தப் பெருமானை எல்லா உலகங்களும் போற்றும் தில்லைச் சிற்றம்பலத்தே கண்களிக்கக் கண்டு கொண்டேன்

477) உருத் தெரியாக் காலத்தே உள் புகுந்து என் உளம் மன்னிக்
கருத்திருத்தி ஊன் புக்குக் கருணையினால் ஆண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவ பதத்தை
அருத்தியினால் நாய் அடியேன் அணிகொள் தில்லை கண்டேனே. 3

தாய் வயிற்றில் ஆண், பெண் என்ற உருவம் அறியப்படாத காலத்திலேயே, என் உள்ளே புகுந்து, என் மனத்தில் நிலையாக நின்று,

என் கருவையே சிவப்பணிக்கு ஆகும் வண்ணம் திருத்தி, இதற்காக என் தாயின் வயிற்றுள் புகுந்து, கருணையினால் என்னை ஆண்டு கொண்ட திருத்துருத்தி (குத்தாலம்) என்ற தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானை, என்றும் இனிக்கக்கூடிய அவன் குஞ்சித பாதமாகிய தூக்கிய திருவடியை, என் ஆசையினால், நாய் போன்ற அடியேன் அழகான தில்லையில் கண்டு கொண்டேன்

478) கல்லாத புல் அறிவின் கடைப்பட்ட நாயேனை
வல்லாளனாய் வந்து வனப்பு எய்தி இருக்கும் வண்ணம்
பல்லோரும் காண என் தன் பசு பாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சு தில்லை அம்பலத்தே கண்டேனே. 4

சிவபெருமானைத் தொழச் செய்யும் ஞானக்கல்வி பெறாமல், சிற்றறிவு பெற்றுக் கடைப்பட்ட நாய் போன்ற என்னை, என கொடிய வினைகளை நீக்கத் தக்க வல்லமை உடையவனாக வந்து, நான் மயக்கம் நீங்கிப் புத்தழகு பெறும்படி, உலகமக்கள் பலரும் காணுமாறு என்னுடைய சீவன் என்ற நினைப்பையும் பாசத்தளையையும் அறுத்த பெருமானை எல்லோரும் வணங்கும் தில்லையம்பலத்தில் கண்டுகொண்டேன். (திருவைந்தெழுத்தில் நம என்பது பாசம். ய என்பது பசு. இவற்றை நீக்கிவிட்டால் சிவ என்ற இரண்டெழுத்து மிஞ்சிச் சிவசக்தியைக் காட்டும் இது மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் விளக்கம்)

479) சாதி குலம் பிறப்பு என்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம் இலி நாயேனை அல்லல் அறுத்து ஆட்கொண்டு
பேதை குணம் பிறர் உருவம் யான் எனது என் உரை மாய்த்துக்
கோது இல் அமுது ஆனானைக் குலாவு தில்லை கண்டேனே. 5

நான்கு சாதிகள், பலகுலங்கள், எழுவகைப்பிறப்பு என்கிற நீர்ச்சுழியில் சிக்கிக்கொண்டு தடுமாறுகின்ற ஆதரவற்ற நாய் போன்ற என்னை, என் துன்பங்களைத் தீர்த்து ஆண்டுகொண்டு, அறிவு அறியாமை எனப்பிரித்து நோக்கும் குணத்தையும் பிறர் உருவம் என்னுருவம் என்று வேறுபடுத்தும் இயல்பையும், யான் எனது என்ற அகப்பற்று புறப்பற்று களையும் அந்தச் சொற்களே இல்லாமல் மாய்த்து, எனக்குக் குற்றமற்ற அமுதம் போன்ற பெருமானை விளங்குகின்ற தில்லையில் கண்டேன்

480) பிறவிதனை அற மாற்றிப் பிணி மூப்பு என்ற இவை இரண்டும்
உறவினொடும் ஒழியச் சென்று உலகு உடைய ஒரு முதலை
செறி பொழில் சூழ் தில்லை நகர்த் திருச்சிற்றம்பல மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேனே. 6

என் பிறவியை முழுவதுமாக நீக்கி, நோய், மூப்பு என்னும் இரண்டும் அவற்றோடு உறவுடைய வினை, சாக்காடு ஆகியவற்றோடு ஒழிந்து போக, நான்சென்று, உலகம் எல்லாம் தன்னுடைமையாகப் பெற்ற தனிமுதல்வனை, சோலைகள் சூழ்ந்த தில்லையில் சிற்றம்பலத்தில், நிலைபெற்று, வேதியரும் வானவரும் வணங்கிநிற்கக் கண்டேன்.

481) பத்திமையும் பரிசும் இலாப் பசு பாசம் அறுத்தருளிப்
பித்தன் இவன் என என்னை ஆக்குவித்துப் பேராமே
சித்தம் எனும் திண் கயிற்றால் திருப் பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்கு தில்லை கண்டேனே. 7

இறைவன் திருவடியில் அன்பும், அதற்குப்பயனாகிய நல்லொழுக்கப் பண்பும் இல்லாமல் செய்யும் என் ஆணவமாகிய பசுத்தன்மையையும் பாசங்களையும் நீக்கியருளி. அவன் திருவடிக்கே பித்துக் கொண்டவனாக என்னை ஆக்கி, நான் அகன்று போகாமல், சித்தம் என்ற வலிய கயிற்றினால் தன் திருவடியாகிய தறியிலே என்னைக் கட்டிப் போட்ட பேரறிவுடைய பெருமானுடைய திருவிளையாடலை விளங்குகின்ற தில்லையம் பதியில் கண்டு கொண்டேன்.

482) அளவு இலாப் பாவகத்தால் அமுக்கு உண்டு இங்கு அறிவு இன்றி
விளைவு ஒன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு
அளவு இலா ஆனந்தம் அளித்து என்னை ஆண்டானைக்
களவு இலா வானவரும் தொழும் தில்லை கண்டேனே. 8

எண்ணங்களால் விளைந்த அளவில்லாத பாவனைகளில் மூழ்கி, அவற்றால் அமுக்கப்பட்டு, அறிவின்றி, இதனால் விளையும் பயனைப்பற்றி ஏதும் தெரியாமல்,வெற்று மனிதனாய்க் கிடக்கின்ற எனக்கு, எல்லையற்ற பேரின்பம் தந்து, என்னை ஆண்டருளிய பெருமானை, வஞ்சனையற்ற தேவர்களும் வந்து தொழும் தில்லையில் கண்டுகொண்டேன்.

483) பாங்கினொடு பரிசு ஒன்றும் அறியாத நாயேனை
ஓங்கி உளத்து ஒளி வளர உலப்பு இலா அன்பு அருளி
வாங்கி வினை மலம் அறுத்து வான் கருணை தந்தானை
நான்கு மறை பயில் தில்லை அம்பலத்தே கண்டேனே. 9

இறைவனை நாடும் உரிமையையும் அதனால் விளையும் நல்ல குணங்களையும் பற்றி எதுவும் தெரியாத நாய் போன்றவனை, என் உள்ளத்தில் சிவஞான ஒளி ஓங்கி வளர, அழியாத பேரன்பைத் தந்து, என் வினைகளை அகற்றி, மலங்களை அழித்து, வானளாவிய பெருங்கருணை வழங்கிய வள்ளலை, நான்கு வேதங்களும் இடைவிடாது ஓதப்படுகின்ற தில்லையம்பலத்தில் கண்டு கொண்டேன்.

484) பூதங்கள் ஐந்து ஆகிப் புலன் ஆகிப் பொருள் ஆகிப்
பேதங்கள் அனைத்தும் ஆய்ப் பேதம் இலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்து ஆண்டகிளர் ஒளியை மரகதத்தை
வேதங்கள் தொழுது ஏத்தும் விளங்கு தில்லை கண்டேனே. 10

வான் காற்று நெருப்பு நீர் மண் என்ற ஐந்து பூதங்களுமாகி, சுவை, ஒளி, ஊறு ஓசை நாற்றம் என்ற புலன்களாகி, ஏனைய பொருள்களாகி, வேறுபாடுகள் அனைத்துமாய், தான்மட்டும் வேறுபாடில்லாமல் விளங்கும் பெருமை உடைய பெருமானை, என் துன்பங்களைப் போக்கி எனையாண்டு கொண்ட, என்னுள்ளத்தில் கிளர்ந்தெழும் ஒளி போன்றவனை, தன்னைச் சார்ந்தால் தன் நிறம் கொடுக்கும் மரகதமணியை, வேதங்கள் தொழுது போற்ற விளங்குகின்ற தில்லையம்பதியில் கண்டேன்



ஆதி நாயகன் ஓதிய ஆகம
வேத நீதி விளங்க வெம் புத்தரை
வாதில் வென்று அருள் வாதவூர் மாதவன்
பாத தாமரை போற்றிப் பணிகுவாம்
-திருவாரூர்ப் புராணம்

32.பிரார்த்தனைப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது அறுசீர் ஆசிரியவிருத்தம்

(இடையீடு இல்லாமல் சிவானந்தக் கடலில் திளைக்கத் திருவருளை வேண்டுவது பிரார்த்தனைப் பத்து.(என்றாலும் பதினொரு பாடல்களைப் பெற்ற அந்தாதி)

485) கலந்து நின் அடியாரொடு
அன்று வாளா களித்து இருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்றது இடர் பின் நாள்
உலர்ந்து போனேன் உடையானே
உலவா இன்பச் சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள் செய்யாய்
ஆர்வம் கூற அடியேற்கே. 1

திருப்பெருந்துறையில் குருநாதனாக நீ வந்து ஆட்கொண்ட அன்று, உன்னடியாரோடு கலந்து, உன் புகழ் பேசி மகிழாமல், பயனின்றிக் கழித்துக் காலத்தைப் போக்கி விட்டேன். (உலக இன்பங்களில் களிப்புற்றேன்) காலங்கள் பயன் இன்றிச் சென்றன. துன்பம் வந்து பின்னாளில் புகுந்துவிட்டது. அடியேன் அதனால் வாடிக்காய்ந்து போனேன். என்னை உடைய பெருமானே! என்றும் அணையாத மகிழ்ச்சி ஒளியைக் காண வேண்டும் என்று வருந்தி நிற்கிறேன். அடியேன் அன்பு அதிகமாகி (உன்னைக் காண) அருள் செய்வாய்.

486) அடியார் சிலர் உன் அருள் பெற்றார்
ஆர்வங் கூர யான் அவமே
முடை ஆர் பிணத்தின் முடிவு இன்றி
முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியேனுடைய கடு வினையைக்
களைந்து உன் கருணைக் கடல் பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே
ஓவாது உருக அருளாயே. 2

சில மெய்யடியார்கள், உன் மேலுள்ள மிகுதியான ஆர்வத்தினால் உன் திருவருள் பெற்றார்கள். நானோ முடைநாற்றம் வீசும் பிணத்தைப் போல, யாருக்கும் பயன்படாமல், வீணாக, முடிவே இல்லாமல் என் வாழ்க்கையில் உண்டான எல்லையற்ற வெறுப்பினால் மூப்படைகின்றேன். கடுந் தன்மையுடைய என் கொடிய வினைகளை நீக்கி உன் கருணைக்கடல் என் மீது வெள்ளமாய்ப் பொங்க, என்னை உடையவனே! இடைவிடாது என் உள்ளம் உன்னை நினைந்துருக அருள்புரிவாய்

487) அருள் ஆர் அமுதப் பெரும் கடல் வாய்
அடியார் எல்லாம் புக்கு அழுந்த
இருள் ஆர் ஆக்கை இது பொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே
மருள் ஆர் மனத்து ஓர் உன்மத்தன்
வருமால் என்று இங்கு எனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய் அன்பை
உடையாய் பெற நான் வேண்டுமே. 3

உன் திருவருளாகிய பெரிய அமுதக்கடலில் அடியார்கள் எல்லாம் புகுந்து திளைக்க, நான் மட்டும் இருள் மிகுந்த இவ்வுடம்பை இதுவரை சுமந்தே இளைத்துவிட்டேன். எம்மானே! இதைச் சிறிதுகண்டுகொள்வாய். உடையவனே! என்னைப்பார்த்து மயக்கம் மிகுந்த மனத்தோடு ஒரு பைத்தியம் பிடித்தவன் வருகிறான் என்று அஞ்சி ஓடாமல் உன் மெய்யன்பை நான் பெற்றுக் கடைத்தேறக் கருணை செய்வாய்

488) வேண்டும் வேண்டும் மெய் அடியார்
உள்ளே விரும்பி எனை அருளால்
ஆண்டாய் அடியேன் இடர் களைந்த
அமுதே அரு மா மணி முத்தே
தூண்டா விளக்கின் சுடர் அனையாய்
தொண்டனேற்கும் உண்டாங் கொல்
வேண்டாது ஒன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே. 4

நீயே வேண்டும் வேண்டும் என்று உன்னையே அதிகமாக விரும்பும் மெய்யடியார் கூட்டத்தில், நீயே விரும்பி ஆட்கொண்டு

சேர்த்துவிட்டாய். அருளால் ஆண்டு, அடியேன் துன்பங்களை அகற்றிய அமுதமே! கிடைத்தற் கரிய மாணிக்கமணியே! முத்தே! இடையீடின்றி ஒளி கொடுக்கம் தூண்டா விளக்கான இரத்தின தீபத்துச் சுடர் போன்றவனே! நீ விரும்பாத எதையும் நானும் விரும்பாமல், உன் மீது பேரன்பு செலுத்தி உன்னால் உனக்காக உன்னோடு வாழும் உயர்ந்த நிலை இந்தத் தொண்டனுக்கும் உண்டாகுமோ!

489) மேவும் உன் தன் அடியாருள்
விரும்பி யானும் மெய்ம்மையே
காவி சேரும் கயல் கண்ணாள்
பங்கா உன் தன் கருணையினால்
பாவியேற்கும் உண்டாமோ
பரம ஆனந்தப் பழம் கடல் சேர்ந்து
ஆவி யாக்கை யான் எனது என்று
யாதும் இன்றி அறுதலே. 5

உன்னை விரும்பும் மெய்யடியார் கூட்டத்தில் ஒருவனாக வேண்டுமென்று உண்மையாகவே நானும் விரும்பி வந்துள்ளேன். நீல மலர்க்கண்களையும் கயல்விழியையும் உடைய உமையாள் விளங்கும் இடப்பாகனே! உன் திருக்கருணையினால், பேரானந்தமாகிய பழம் பெருங் கடலில் சேர்ந்து உயிர் உடம்பு என்றும் யான் எனது என்றும் கூறப்படும் எதுவும் இல்லாமல் இருக்கும் நிலை, கொடிய பாவியாகிய எனக்கும் உண்டாகுமோ?

490) அறவே பெற்றார் நின் அன்பர்
அந்தம் இன்றி அகம் நெகவும்
புறமே கிடந்து புலை நாயேன்
புலம்புகின்றேன் உடையானே
பெறவே வேண்டும் மெய்யன்பு
பேரா ஒழியாப் பிரிவு இலா
மறவா நினையா அளவு இலா
மாளா இன்ப மா கடலே. 6

என்னை உடைய பெருமானே! உன் அன்பர்கள் உன்னை முழுவதுமாகப் பெற்றுவிட்டார்கள். ஆனால் கீழான நாய் போன்ற நான்,

எல்லையில்லாத காலங்களாக என் மனம் உடைய, உன் இன்பமயமான உலகிற்கு வெளியே நின்று புலம்புகின்றேன். இடம் பெயராததும், அழிவற்றதும், பிரிந்து போகாததும், மறக்கவும் நினைக்கவும் முடியாததும், அளவற்றதும், நிலையான இன்பம் தருவதுமான கருணைக்கடலே! உன்பால் உண்மையான அன்பை நான் பெற்றே தீரவேண்டும். அதற்கு அருள்செய்.

491) கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்து உண்ண
இடரே பெருக்கி ஏசற்று இங்கு
இருத்தல் அழகோ அடி நாயேன்
உடையாய் நீயே அருளுதி என்று
உணர்த்தாது ஒழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடர் ஆர் அருளால் இருள் நீங்கச்
சோதீ இனித்தான் துணியாயே. 7

உன்னைக் கண்டவர்கள் எல்லாம் கடல் போன்ற பேரின்பத்தைக் கவர்ந்து உண்டு சென்றார்கள். நாயான நான்மட்டும் துன்பங்கள் அதிகரிக்க, இகழப்பட்டு இங்கே இருந்தால் அது உன் கருணைக்கு அழகாகுமா? என்னை உடைமையாகக் கொண்ட நீதான் எனக்கருள வேண்டும் என்று உனக்கு உணர்த்தாமல் காலங்களைக் கழித்து ஒழிந்து போனேன். சோதிவடிவானவனே! இனியாவது உன் ஒளிமயமான திருவருளால் என் அறியாமை இருள் நீங்க அருள வேண்டும்

492) துணியா உருகா அருள் பெருகத்
தோன்றும் தொண்டர் இடைப் புகுந்து
திணி ஆர் மூங்கில் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றேன்
அணி ஆர் அடியார் உனக்கு உள்ள
அன்பும் தாராய் அருள் அளியத்
தணியாது ஒல்லை வந்தருளித்
தளிர்ப் பொன் பாதம் தாராயே. 8

சிவபெருமானே! உன் திருவருள் மேலும்மேலும் அதிகரிப்பதால் உன் மெய்யடியார்கள், பொய்யான இன்பங்களை விட்டுவிலகி, மனம்

உருகி இன்பத்தோடிருக்கிறார்கள். அவர்களுக்கு இடையில், வலிமை மிக்க மூங்கிலைப் போல் வளையாத மனமுடையேன், பலகால் நின்று தேய்ந்து விட்டேன். அந்த அழகுமிக்க அடியார்களுக்கு உன் மேல் உள்ள அன்பை எனக்கும் தாராய். உன் கருணை கனிய, காலம் கடத்தாமல், விரைவாக வந்து உன் தளிர் போன்ற பொற்பாதங்களைத் தந்தருளமாட்டாயா?

493) தாரா அருள் ஒன்று இன்றியே
தந்தாய் என்று உன் தமர் எல்லாம்
ஆரா நின்றார் அடியேனும்
அயலார் போல அயர்வேனோ
சீர் ஆர் அருளால் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா
பேர் ஆனந்தம் பேராமை
வைக்கவேண்டும் பெருமானே. 9

பெருமானே! இனிமேல் பெறுவதற்கு அருள் மிச்சமில்லை என்று எண்ணும்படி, உன்திருவருளை முழுவதுமாகத் தந்துவிட்டாய்! என்று உன் உறவினர்களான அடியார் எல்லாம் களிப்போடு நிற்கிறார்கள். நான் மட்டும் அயலான் போலத் தளரலாமா? சிறந்த அருளால் என் எண்ணங்களைத் திருத்தி ஆண்ட சிவலோகனே! நானும் அவர்களைப் போல, (என்றும் இன்பம் பெருக) நீங்காத பேரின்பம் காணும்படி உன் உறவினனாக என்னையும் வைக்க வேண்டும் பெருமானே.

494) மான் ஓர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனம் நெகா
நான் ஓர் தோளாச் சுரை ஒத்தால்
நம்பி இத்தால் வாழ்ந்தாயே
ஊனே புகுந்த உனை உணர்ந்தே
உருகிப்பெருகும் உள்ளத்தை
கோனே அருளும் காலம் தான்
கொடியேற்கு என்றோ கூடுவதே. 10

மான் போன்ற உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவனே! உன்னைத் தொழும் அடியார்களுக்கு ஆயுட்காலம் முழுவதும் இனிக்கும் நறுங்கனியே! மனம் நெகிழாத நான், துளையிடப்படாத சுரைக்காய்

தண்ணீர் எடுக்க உதவாதது போலப் பயன்படாதவன் ஆகிவிட்டேன். தலைவனே! என்னை நம்பி ஆட்கொண்டு நீ வாழ்ந்தது போலத்தான். இவ்வுடம்பில் புகுந்த உன்னை முழுவதுமாக உணர்ந்து, உருகி அதனால் இன்பம் பெறும் மனத்தை நீ கொடுக்கும் காலம், என் அரசனே! இந்தக் கொடியவனுக்கு எப்பொழுது வரப் போகிறது?

495) கூடிக் கூடி உன் அடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழிஅற்றே
வற்றல் மரம்போல் நிற்பேனோ
ஊடி ஊடி உடையாயொடு
கலந்து உள் உருகிப் பெருகி நெக்கு
ஆடி ஆடி ஆனந்தம்
அதுவே ஆக அருள் கலந்தே. 11

உன்னோடு கூடிக்கூடி உன் மெய்யடியார்கள் உன்னைப் போலவே கூத்தாடுகிறார்கள். குமிழ்சிரிப்புக் கொள்கிறார்கள். மகிழ்கிறார்கள். நான் மட்டும் மிகவும் வாட்டமுற்று, உன்னைச் சேரவழி தெரியாமல், வற்றிக் காய்ந்த மரம் போல் நிற்கலாமா? இறைவனே! உன்னோடு கூட வேண்டும். உன்னிடம் ஊடல் கொள்ள வேண்டும். பிறகு இரண்டறக் கலக்க வேண்டும். நெஞ்சம் உருகி ஆனந்தம் பெருக நெகிழ்ந்து ஆட வேண்டும். சிவானந்தம் அதுவேயாக நான் மாற வேண்டும். என்னை உடைய பெருமானே! அருள் செய்வாயா?

தூயதிரு வெண்ணீறும் கண்மணியும் ஐந்தெழுத்தும்
சுரந்து வாழ்க!
ஆய பெருந் துறைவாழ்க! ஆன்மநா யகர் வாழ்க!
அருள் சூல் கொண்டு
மேயசிவ யோகபரா பரைவாழ்க! வாதவூர்
விமலர் வாழ்க!
நேயமலி அம்பலத்துள் நடம் நவிலும் குஞ்சிதத்தாள்
நீடு வாழ்க!

- திருப்பெருந்துறைப் புராணம்

33. குழைத்த பத்து

திருப்பெருந்துறையில் அருளியது அறுசீர்விருத்தம்

(எத்தனை பிழைகள் செய்திருந்தாலும் நீயே பொறுத்தருள வேண்டும் என்று ஆன்மா தன்னை அறிவித்து இறைவனை வேண்டுவது இப்பகுதி. வினைகளால் உயிரைத் தன்னிலை திரியுமாறு குழையச் செய்தல் குழைத்தலாகும்)

496) குழைத்தால் பண்டைக் கொடு வினை நோய்
காவாய் உடையாய் கொடு வினையேன்
உழைத்தால் உறுதி உண்டோ தான்
உமையாள் கணவா எனை ஆள்வாய்
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ
பிறை சேர் சடையாய் முறையோ என்று
அழைத்தால் அருளாது ஒழிவதே
அம்மானே உன் அடியேற்கே. 1

என்னை ஆளாக உடைய பெருமானே! நான் செய்த பழைய தீவினைகள், துன்பம் தந்து என்னை நிலைதிரியச் செய்தால் நீதான் காக்க வேண்டும். கொடிய வினைகளை உடைய நான் உன்னை அடைய வேண்டுமென்று உழைத்தால் பயன் உண்டா? உமையவள் கணவனே! நீதான் என்னை ஆட்கொள்ள வேண்டும். நான் தவறு செய்தால் நீ பொறுக்க வேண்டாமா? தவறு செய்த சந்திரனைத் தலையில் சூடிய பெருமானே! இது முறையா என்று கேட்டு நான் உன்னை அழைத்தால் அம்மானே! உன் அடிமையான எனக்கு அருள்புரியாமல் இருக்கலாமா?

497) அடியேன் அல்லல் எல்லாம் முன்
அகல ஆண்டாய் என்று இருந்தேன்
கொடி ஏர் இடையாள் கூறா எம்
கோவே ஆவா என்று அருளிச்
செடி சேர் உடலைச் சிதையாதது
எத்துக்கு எங்கள் சிவலோகா
உடையாய் கூவிப் பணி கொள்ளாது
ஒறுத்தால் ஒன்றும் போதுமே. 2

மின்னல்கொடிபோல் இடையினையுடைய உமையவளை ஒரு பாகமாக உடையவனே! என் அரசே! என்னுடைய துன்பங்கள்

எல்லாவற்றையும் அகன்று போகச்செய்து ஆட்கொண்டாய் என்று நினைத்திருந்தேன். நீ அப்படிச் செய்யவில்லை. ஆஆ என்று எனக்கிரங்கி வந்து வினைகள் சேரக் காரணமான இவ்வுடலை இன்னும் ஏன் அழிக்கவில்லை? சிவலோகனே! எங்களை உடையவனே! ஆட்கொண்ட நீ எங்களை அழைத்துப் பணி கொள்ளாமல் இப்படித் தண்டிக்கிறாயே! உன்னை அடைந்த எங்களுக்கு இதுவே போதும்.

498) ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின் கருணை
இன்றே இன்றிப் போய்த்தோ தான்
ஏழை பங்கா எம் கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணம் ஆம் என்றே நீ கொண்டால்
என் தான் கெட்டது இரங்கிடாய்
எண் தோள் முக்கண் எம்மானே. 3

எங்கள் சுமைகளைத் தாங்குவதற்காகவே எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் கொண்டவனே! உமையொரு பாகனே! என் அரசே! ஒன்றுக்கும் பற்றாத நாய் போன்ற என்னை, உய்யுமாறு ஆட்கொண்ட உன் திருக்கருணை, இன்று இல்லாமல் போய்விட்டதா? நாங்கள் செய்யும் மலை போன்ற குற்றங்களையெல்லாம், குணமாகவே நீ ஏற்றுக்கொண்டால் உனக்கு என்ன கெட்டுப் போய்விடும்? எனவே குற்றமே செய்யினும் குணமெனக் கருதும் கொள்கை உடைய நீ எனக்கு இரங்குவாயாக!

499) மான் நேர் நோக்கி மணவாளா
மன்னே நின் சீர் மறப்பித்து இவ்
ஊனே புக என் தனை நூக்கி
உழலப் பண்ணுவித்திட்டாய்
ஆனால் அடியேன் அறியாமை
அறிந்து நீயே அருள் செய்து
கோனே கூவிக் கொள்ளும் நாள்
என்று என்று உன்னைக் கூறுவதே. 4

மான் போன்ற பார்வையுடைய உமையாள் மணவாளனே! என் மன்னவனே! உன் பெரும்புகழை மறக்கச் செய்து, இவ்வுடலில் புகுமாறு என்னைச் செலுத்தி அலையவைத்துவிட்டாயே! என் அறியாமை உனக்குத் தெரியாதா? அதை அறிந்து அதை மாற்ற நீயே அருள்

செய்து என்னை வாவென்று கூவிக் கொள்ளும் நாள் என்று வருமோ? என்றைக்கு நான் வாயார உன்புகழ் கூறப் போகிறேனோ?

500) கூறும் நாவே முதலாகக்
கூறும் கரணம் எல்லாம் நீ
தேறும் வகை நீ திகைப்பு நீ
தீமை நன்மை முழுதும் நீ
வேறு ஓர் பரிசு இங்கு ஒன்று இல்லை
மெய்ம்மை உன்னை விரித்து உரைக்கில்
தேறும் வகை என் சிவலோகா
திகைத்தால் தேற்ற வேண்டாவோ. 5

உண்பதும் உரைப்பதும் செய்கின்ற நாக்கு முதலாகக் கூறப்படுகின்ற அகக்கரணம் புறக்கரணம் எல்லாம் நீயே. தெளிவும் நீ. தெளியுமுன் வந்த திகைப்பும் நீ. தீமையும் நீ நன்மையும் நீ. உனக்கு வேறாக எந்தத் தன்மையுமில்லை. மெய்ப்பொருளான உன்னை முழுவதுமாக விரித்துரைக்க வேண்டுமென நான் நினைத்தால் அதில் தேறும் வகையறியாது திகைத்துப் போவேன். அப்படித் திகைத்தால் அப்பொழுதும் நீவந்து தான் தேற்ற வேண்டும்.

501) வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன் தன் விருப்பு அன்றே. 6

நான் கேட்காமலேயே நான் விரும்பத்தக்க பொருட்களை நீ அறிவாய். உன் திருவுள்ளப்படி நான் வேண்டிக் கேட்டால், கேட்டவற்றை முழுமையாகத் தருபவனும் நீ. உன்னிடம் இடைவிடாமல் வேண்டிக் கேட்கும் பிரமனுக்கும் திருமாலுக்கும் காணற்கருமையான கடவுள் நீ. விரும்பி வந்து என்னைப் பணிகொண்டாய். நான் உன்னிடம் எதுவும் கேட்கமாட்டேன். நீ விரும்பி எதை அருள் செய்கிறாயோ, அதையே நானும் வேண்டி நிற்பேன். ஒரு வேளை நான் ஏதாவது கேட்க விரும்பினால் அதுவும் உன் விருப்பமாகவே இருக்கும்.

502) அன்றே என் தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே. 7

எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் கொண்ட பெருமானே! மலை போன்றவனே! என்னை அடிமையாக ஏற்றுக் கொண்ட அன்றைக்கே, என்னுடைய உயிர், உடல், உடைமை எல்லாவற்றையும் நீ ஏற்றுக் கொள்ளவில்லையா? இன்று ஒரு துன்பம் எனக்கு எப்படி வரும்? நீ எனக்கு என்றைக்கும் நன்மையைத்தான் செய்வாய் பிழையா செய்வாய்? செய்யமாட்டாய். இதைச் சொல்லக் கூட எனக்கென்ன தகுதி உள்ளது? நானா இங்கு தலைவன்?

503) நாயின் கடை ஆம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன் வசமே
வைத்திட்டு இருக்கும் அது அன்றி
ஆயக் கடவேன் நானோதான்
என்னதோ இங்கு அதிகாரம்
காயத்து இடுவாய் உன்னுடைய
கழல்கீழ் வைப்பாய் கண் நுதலே. 8

நெற்றியில் கண்கொண்ட பெருமானே! நாயை விடக்கீழான நாயேனை, நீயே விரும்பி ஆட்கொண்டாய். மாயா காரியமான இப்பிறவியை உன்னிடம் ஒப்படைத்துவிட்டு எல்லாம் உன்செயல் என்று நிம்மதியாக இருக்கும் அதைத்தவிர, அதைப்பற்றி ஆராயத்தக்கவன் நானா? எனக்கா அதிகாரம் இருக்கிறது? அடுத்தபிறவிதந்து உடல் சிறையில் போடு. அல்லது உன் திருவடி நிழலில் வைத்து உன்னைக் கொடு. என்ன வேண்டுமானாலும் செய்வாய் என் அப்பனே!

504) கண்ணார் நுதலோய் கழல் இணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணாது இரவும் பகலும் நான்
அவையே எண்ணும் அது அல்லால்
மண்மேல் யாக்கை விடும் ஆறும்
வந்து உன் கழற்கே புகும் ஆறும்
அண்ணா எண்ணக் கடவேனோ
அடிமை சால அழகு உடைத்தே. 9

நெற்றிக்கண்ணனே! என் கண்கள் மகிழுமாறு உன் திருவடிகளைக் கண்டு கொண்டேன். வேறெதையும்நினைக்காமல், இரவு பகல் பலகாலும் இணையடிகளையே நினைப்பதன்றி மண்ணில் நான் எடுத்த உடம்பைப் போடுவது பற்றியும், சிவபுரத்துக்கு வந்து உன் திருவடிகளில் இன்புறுவது பற்றியும் எண்ணுவதற்கு எனக்கென்ன உரிமை உள்ளது. அப்படி நினைத்தால் அண்ணா! என் அடிமைத்தனம் மிக அழகாக அல்லவா இருக்கும்?

505) அழகே புரிந்திட்டு அடி நாயேன்
அரற்றுகின்றேன் உடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி என்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதம் எனக்குப்
புராண நீ தந்தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே என்னைக் குழைத்தாயே. 10

அழகாகத் தொண்டு செய்தே உனக்கு அடிமையானேன். இப்பொழுது புலம்புகின்றேன். என்னை உடையவனே! ஒளி விளங்கும் திருமேனியைக் காட்டி என்னைப் பணியாளன் ஆகக் கொண்டாய். எல்லாப் புகழுக்கும் உரிய இறைவனே! மிகப்பழமையானவனே! இளமையானவனே! அழகிய அந்தணனே! என் மன்னவனே! உன் திருவடியாகிய பெரிய செல்வத்தை எனக்குத் தராமல் என்னைக் குழைந்த சோறுபோல் நிலைதிரியச் செய்து விட்டாயே!

34. உயிருண்ணிப் பத்து

திருப்பெருந்துறையில் அருளியது கலிவிருத்தம்

(உயிர் உண்ணப்பட்டு சிவானந்தமே மேலிட்டுத் தான் பெற்ற பெரும் பேற்றை விளக்குவது இப்பகுதி)

506) பைந் நாப்பட அரவு ஏர் அல்குல்
உமை பாகம் அது ஆய் என்
மெய்ந் நாள்தொறும் பிரியா வினைக்கேடா
விடைப் பாகா
செந் நாவலர் பரசும் புகழ்த்
திருப்பெருந்துறை உறைவாய்
எந் நாள் களித்து எந் நாள் இறுமாக்கேன்
இனி யானே. 1

பையையும் நாவையும் உடைய பாம்பின் படம் போன்ற மறைவிடத்தை உடைய உமையாளை இடப்பாகத்தில் கொண்டவனே! என் உடம்பு முழுவதும் பிரியாமல் எழுந்தருளியிருக்கும், வினை கெடுக்கும் பெருமானே! இடப வாகனம் கொண்டவனே! செம்மையான புலவர்கள் போற்றும் புகழ்மிக்க திருப்பெருந்துறையில் வீற்றிருப்பவனே! இந்த நாளை விட்டால், இனி எந்த நாளில் நான் உன்னைப் பெற்ற களிப்பினால் இறுமாந்திருக்கப் போகிறேன்?

507) நான் ஆர் அடி அணைவான் ஒரு நாய்க்குத்
தவிசு இட்டு இங்கு
ஊன் ஆர் உடல் புகுந்தான் உயிர்
கலந்தான் உளம் பிரியான்
தேனார் சடை முடியான் மன்னு
திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாதது ஓர் வளம்
ஈந்தனன் எனக்கே. 2

அவன் திருவடியைச் சேர்வதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது? ஒரு நாய்க்கு அம்பாரி வைத்து, என் ஊன் நிறைந்த உடம்பில் புகுந்தான். உயிரில் கலந்தான். உள்ளத்தோடு இணைந்தான். தேன் மிக்க மலரணிந்த திருச்சடையான், நிலையான திருப்பெருந்துறையில் விருப்புடன் இருப்பவன். தேவர்கள் நினைத்தறிய முடியாத இன்பத்தை எனக்கே தந்தருளினான்.

508) எனை நான் என்பது அறியேன்
பகல் இரவு ஆவதும் அறியேன்
மனவாசகம் கடந்தான் எனை
மத்தோன்மத்தன் ஆக்கிச்
சின மால் விடை உடையான் மன்னு
திருப்பெருந்துறை உறையும்
பனவன் எனைத் செய்த படிறு
அறியேன் பரஞ் சுடரே. 3

நான் யாரென்று எனக்கே தெரியவில்லை. பகலும் இரவும் தெரியவில்லை. மனத்தையும் மொழியையும் கடந்த பெருமான் என்னை இழக்கச் செய்து மிகப்பெரிய பித்தனாக்கி விட்டான். சினமிக்க பெரிய காளை மாட்டை உடையவன். நிலைபெற்றதிருப்பெருந்துறையில் இருக்கும் முனிவன், என்னுள்ளே என்ன மாயம் செய்தானோ தெரியவில்லை. எல்லாம்பரஞ்சுடராகவே தோன்றுகிறது.

509) வினைக் கேடரும் உளரோ பிறர்
சொல்லீர்? வியன் உலகில்
எனைத் தான் புகுந்து ஆண்டான் எனது
என்பின் புரை உருக்கிப்
பினைத் தான் புகுந்து எல்லே பெருந்துறையில்
உறை பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான் மறு
மாற்றத்து இடையானே. 4

இவ்வுலகில் வினையைக் கெடுக்கும் ஆற்றல் உள்ளவர்கள் சிவபெருமானைத்தவிர வேறு யாரேனும் உண்டா? சொல்லுங்கள். தானே வலிய வந்து என்னுள் புகுந்தான். என்னை ஆட்கொண்டான். என் எலும்புத் துளைகளைக் கூட உருக்கினான். பின்னர் என் உயிரில் ஒன்றினான். விளங்குகின்ற திருப்பெருந்துறைப் பெருமான் என் மனத்தகத்தான். கண்ணில் மணியாடு பாவையாக இருப்பவன். நான் கூறும் மறுமாற்றங்களாகிய விடைகளிலும் இருக்கிறான்.

510) பற்று ஆங்கு அவை அற்றீர் பற்றும்
பற்று ஆங்கு அதுபற்றி
நற்று ஆம் கதி அடைவோம் எனின்
கெடுவீர் ஓடி வம்மின்
தெற்று ஆர் சடை முடியான் மன்னு
திருப்பெருந்துறை இறை சீர்
கற்று ஆங்கு அவன் கழல்
பேணின ரொடுங் கூடுமின் கலந்தே. 5

நான் என்ற அகப்பற்றும் எனதென்ற புறப்பற்றும் அற்றவர்களே! பற்ற வேண்டிய பற்றாகிய இறைவன் திருவடிகளைப் பற்றி நற்கதியை அடைவோம் என்று நீங்களாக முயன்றால் கெட்டுப் போவீர்கள். நான் ஒரு வழிகாட்டுகிறேன். ஓடி வாருங்கள். பின்னிக் கிடக்கும் சடைமுடி உடையவனும் நிலையானதிருப்பெருந்துறையில் உள்ளவனுமாகிய சிவபெருமான் புகழ்பாடக்கற்று, அவன் திருவடிகளை வழிபடும் மெய்யடியார்களோடு ஒன்றாகக் கலந்து கூடுங்கள்.

511) கடலின் திரை அது போல் வரு
கலக்கம், மலம் அறுத்து என்
உடலும் எனது உயிரும் புகுந்து
ஒழியா வண்ணம் நிறைந்தான்
சுடரும் சுடர் மதி சூடிய
திருப்பெருந்துறை உறையும்
படரும் சடை மகுடத்து எங்கள்
பரன் தான் செய்த படிறே. 6

கடலில் அலைவருவது போல, இடைவிடாமல், ஒவ்வொன்றாக வந்த துன்பங்களைத் தருகின்ற மலங்களை அறுத்து, சிவபெருமான், என் உடலிலும் உயிரிலும் புகுந்து நீக்கமின்றி எல்லா இடங்களிலும் நிறைந்தான். சுடர்வீசும் கதிரவனையும் சந்திரனையும் தொடக்கூடிய திருப்பெருந்துறையில் எழுந்தருளிய (நான்கு திசைகளிலும் பரவிய) சடைமுடி ஏந்திய எங்கள் பரமன் செய்த மாயவித்தை தான் என்னே!

512) வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்பு சிவம்
வேண்டார் தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
திருப்பெருந்துறை இறை தாள்
பூண்டேன் புறம் போகேன் இனிப்
புறம் போகல் ஒட்டேனே. 7

ஆணவத்தை வளர்க்கும் புகழை விரும்ப மாட்டேன். செல்வத்தையும் விரும்பேன். மண்ணுலக ஆட்சியையும்விண்ணுலக ஆட்சியையும் வேண்டேன். பிறப்பு இறப்பு இவைகளையும் வேண்டேன். சிவபெருமானை விரும்பாதவர்களை எந்த நாளும் தொடமாட்டேன். திருப்பெருந்துறை இறைவன் திருவடிகளையே சென்றடைந்தேன். அவற்றை என் தலைமேல் அணிந்து கொண்டேன். அவற்றைப் பிரிந்து புறம் போகமாட்டேன். இறைவனையும் என்னை விட்டுப் போக விடமாட்டேன்.

513) கோல்தேன் எனக்கு என்கோ குரை
கடல் வாய் அமுது என்கோ
ஆற்றேன் எங்கள் அரனே அரு மருந்தே
எனது அரசே
சேற்று ஆர் வயல் புடை சூழ் தரு
திருப்பெருந்துறை உறையும்
நீற்று ஆர் தரு திருமேனி நின்மலனே
உனை யானே. 8

எங்கள் சிவபெருமானே! பிறவிப் பிணிநீக்கும் அருமருந்தே! எங்கள் மன்னனே! சேறு மிக்க வயல்கள் நிறைந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளும் நீறுவிளங்கும் திருமேனியை உடைய நின்மலனே! உன்னை நான் என்னவென்று கூறுவேன்? எனக்கு வாய்த்த கொம்புத்தேன் என்பேனா? ஒலிக்கின்ற கடலில் எழுந்த அமுதம் என்பேனா? சொல்லைக் கடந்த உன்னை என் சொல் அளக்க மாட்டாமல் தவிக்கிறதே.

514) எச்சம் அறிவேன் நான் எனக்கு
இருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனே
அரு மருந்தே எனது அமுதே
செச்சை மலர் புரை மேனியன்
திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம் என நெஞ்சில் மன்னி
யான் ஆகி நின்றானே. 9

என் வினைகள் இன்னும் எஞ்சியிருக்கின்றன என்பதை நான் அறிவேன். ஆனால் இன்னும் சேர இருக்கின்ற வினைகளை அறியமாட்டேன். எங்கள் பாவங்களை அழிப்பவனே! பிறவிப்பிணிக்கோர் மருந்தே! என் அமுதமே! வெட்சிமலர் போன்ற செம்மேனியன், திருப்பெருந்துறையில் இருப்பவன், நித்தியமாகி என்னெஞ்சில் நிறைந்து நிற்கிறான். இருந்தும் வினைகளுக்கு அஞ்சுவது வியப்பல்லவா? (அச்சோ என்பது வியப்பைக்காட்டும் சொல்)

515) வான் பாவிய உலகத்தவர்
தவமே செய அவமே
ஊன் பாவிய உடலைச் சுமந்து
அடவி மரம் ஆனேன்
தேன் பாய் மலர்க் கொன்றை மன்னு
திருப்பெருந்துறை உறைவாய்
நான் பாவியன் ஆனால் உனை
நல்காய் எனல் ஆமே. 10

தேன் சொரியும் மலர்க்கொன்றை மரங்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருப்பவனே! வானவெளியாகிய ஞானவெளியில் இருக்கின்ற சிவஞானிகள் எல்லாம் தவம் செய்ய, நான், தசைகள் மிக்க உடம்பைச் சுமந்து பயன்படாத காட்டுமரம் போல் வீணாய்ப் போய்விட்டேன். இப்படி, நான் பாவியாக இருந்து கொண்டு, உன்னைப்பார்த்து நீ அருள்புரியாமல் இருக்கிறாயே என்று கேட்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

35.அச்சப்பத்து

தில்லையில் அருளியது அறுசீர் ஆசிரிய விருத்தம்

(சிவத்தோய்வில் ஆனந்தமுற்று, அதற்கு மாறானவற்றைக்கண்டு அச்சமுற்று இறைவனிடம் விண்ணப்பம் செய்தல்)

516) புற்றில் வாள் அரவும் அஞ்சேன்
பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்
கற்றை வார் சடை எம் அண்ணல்
கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும் ஓர் தெய்வம் தன்னை
உண்டு என நினைந்து எம் பெம்மாற்கு
அற்றுஇலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 1

புற்றில் இருக்கின்ற ஒளிமிக்க பாம்புக்கு அஞ்சமாட்டேன். பொய்யே பேசுகின்ற பொய்யர்கள் பொய்யையே மெய்போலப் பேசி ஏமாற்றினாலும் அஞ்சமாட்டேன். ஆனால், தொகுதியான நீண்ட சடையை உடைய எம் தலைவனாகிய நெற்றிக்கண் கொண்ட சிவபெருமான் திருவடி அடையப்பெற்றும், வேறொரு தெய்வத்தை உண்டு என நினைத்து, எம்பெருமான் புகழ் பேசாதவரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுகின்றோம்.

517) வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக் கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா
எம்பிரான் தம்பிரான் ஆம்
திருவுரு அன்றி மற்று ஓர்
தேவர் எத்தேவர் என்ன
அருவரா தவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 2

என்னுள் ஆசைகள் எழுந்தால் அஞ்சமாட்டேன். ஆசைகளின் பயனாகிய வினைக்கடலில் விழுந்து மூழ்கினாலும் அஞ்சமாட்டேன். திருமால் பிரமன் ஆகிய இருவரும் பன்றியாகவும் அன்னமாகவும் மாறிச் சென்று காணமுடியாத எங்கள் தலைவன், தனக்குத் தலைவன் தானே ஆனவன். அவன் திருவுருவத்தை அன்றி, மற்ற தேவர்களைக்

காண நேர்ந்தால், இவர் என்ன தேவரென்று அருவருப்புக் கொள்ளாதாரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுகின்றோம்.

518) வன் புலால் வேலும் அஞ்சேன்
வளைக் கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பு எலாம் உருக நோக்கி
அம்பலத்து ஆடுகின்ற
என் பொலா மணியை ஏத்தி
இனிது அருள் பருக மாட்டா
அன்பு இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 3

வன்மையான மாமிசத்தைச் சூடிய வேலுக்கும் அஞ்சமாட்டேன். வளையலணிந்த பெண்கள் கடைக்கண் (வேலுக்கும்) அஞ்சமாட்டேன். சிற்றம்பலத்தில் திருநடம் புரியும் என்னுடைய துளைக்கப்படா மாணிக்கமான சிவபெருமானைப் போற்றி,எலும்புகள் எல்லாம் உருக வழிபட்டு, அவன் திருவருளைப் பருகமாட்டாத அன்பிலா மனத்தரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுகின்றோம்.

519) கிளி அனார் கிளவி அஞ்சேன்
அவர் கிறி முறுவல் அஞ்சேன்
வெளிய நீறு ஆடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளி உலாம் கண்ணர் ஆகித்
தொழுது அழுது உள்ளம் நெக்கு இங்கு
அளி இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 4

கிளிபோலப் பேசும் பெண்களின் ஆசை வார்த்தைக்கு அஞ்சமாட்டேன். மயக்கம் தரும் அவர்களுடைய மோகனச் சிரிப்புக்கும் அஞ்சமாட்டேன். வெள்ளையான திருநீற்றில் குளித்த திருமேனியன், வேதமேயானவன் திருவடிகளைச் சேர்ந்து, ஆனந்தக்கண்ணீர் உலவும் கண்ணராகித் தொழுதும் அழுதும் உள்ளம் நெகிழ்ந்து அன்பினால் கனியாதவரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுகின்றோம்.

520) பிணி எலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்
துணி நிலா அணியினான்தன்
தொழும்பரோடு அழுந்தி அம்மால்
திணி நிலம் பிளந்தும் காணாச்
சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 5

உலகத்திலுள்ள நோய்கள் எல்லாம் ஒன்றாய்த் திரண்டு என்னிடம் வந்தாலும் அஞ்சமாட்டேன் பிறப்புக்கும் அதனால் வரும் இறப்புக்கும் அஞ்சமாட்டேன். இளம்பிறையணிந்த சிவபெருமானுடைய தொண்டர்களோடு கூடிக்கலந்து ஒன்றாகி, அந்தத் திருமால் பன்றி வடிவம் கொண்டு நிலத்தைத் தோண்டிச் சென்றும் காணமுடியாத திருவடியைப் பலவாறு போற்றித் திருவெண்ணீறு அணியமாட்டாதவர்களைக் கண்டால், அம்ம! நாம் அஞ்சுகின்றோம்.

521) வாள் உலாம் எரியும் அஞ்சேன்
வரை புரண்டிடினும் அஞ்சேன்
தோள் உலாம் நீற்றன் ஏற்றன்
சொல்பதம் கடந்த அப்பன்
தாள தாமரைகள் ஏத்தித்
தட மலர் புனைந்து நையும்
ஆள லாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 6

ஒளிவீசும் தீக்கு அஞ்சமாட்டேன். மலையே புரண்டாலும் அஞ்சமாட்டேன். தோளில் திருநீறு பொலியச் சுந்தரத் தோற்றம் அளிப்பவன், காளைவாகனம் உடையவன். சொல்லின் அளவுக்கு அப்பாற்பட்ட அப்பன், அவனுடைய தாள்களாகிய தாமரைகளைத் தொழுது, குளத்துத் தாமரை சூட்டிக் கும்பிட்டு நைந்துருகும் , அவன் அடியார் அல்லாதவரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுகின்றோம்.

522) தகைவு இலாப் பழியும் அஞ்சேன்
சாதலை முன்னம் அஞ்சேன்
புகை முகந்து எரி கை வீசிப்
பொலிந்த அம்பலத்துள் ஆடும்
முகை நகைக் கொன்றை மாலை
முன்னவன் பாதம் ஏத்தி
அகம் நெகாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 7

தடுக்க முடியாத பழிவந்தாலும் அஞ்சமாட்டேன். வினைவயத்தால் முன்னாலேயே இறந்து போவதற்கும் அஞ்சமாட்டேன. புகையோடு எரியும் நெருப்பைத் தன் திருக்கரங்களில் எந்தி நின்று வீசி, விளங்குகின்ற திருவம்பலத்துள் ஆடுகின்ற மொட்டு விரிந்த கொன்றைமாலையை அணிந்த, யாவருக்கும் முன்னவனான சிவபெருமான் திருவடிகளைப் போற்றி மனம் நெகிழாதவர்களைக் கண்டால், அம்ம! நாம் அஞ்சுகின்றோம்

523) தறி செறு களிறும் அஞ்சேன்
தழல் விழி உழுவை அஞ்சேன்
வெறி கமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச்
சிறந்து இனிது இருக்க மாட்டா
அறிவு இலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 8

கட்டுத்தறியில் கட்டிப் போடத்தக்க ஆண்யானைக்கும் அஞ்சமாட்டேன். நெருப்புப் போன்ற கண்களை உடைய புலிக்கும் நான் அஞ்சமாட்டேன். மணம் மிகுந்த சடையை உடையவன், என் அப்பன், தேவர்களால் அணுகவும் முடியாத அவனுடைய வீரக்கழல் அணிந்த திருவடிகளைப் போற்றி, வையத்துள் வாழ்வாங்கு வாழத் தெரியாத அறிவற்றவர்களைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுகின்றோம்.

524) மஞ்சு உலாம் உருமும் அஞ்சேன்
மன்னரோடு உறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுதம் ஆக்கும்
நம்பிரான் எம் பிரானாய்ச்
செஞ்செவே ஆண்டு கொண்டான்
திரு முண்டம் தீட்ட மாட்டாது
அஞ்சுவார் அவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 9

கரிய மேகங்களில் இருக்கும் இடிக்கும் அஞ்சமாட்டேன். மன்னர்களோடு மிக நெருங்கிப்பழகும் நட்புறவுக்கும் அஞ்சமாட்டேன். தானுண்ட நஞ்சையே அமுதமாக மாற்றக்கூடிய நம் தலைவன், எம் தலைவனாகி எம்மைச் செம்மையாக ஆட்கொண்டான். அவன் தரும் இணையற்ற செல்வமாய திருநீற்றைப் பூசமாட்டாமல், பயப்படுகின்றவர் களைக் கண்டால், அம்ம! நாம் அஞ்சுகின்றோம்.

525) கோண் இலா வாளி அஞ்சேன்
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீள் நிலா அணியினானை
நினைந்து நைந்து உருகி நெக்கு
வாள் நிலாம் கண்கள் சோர
வாழ்த்தி நின்று ஏத்த மாட்டா
ஆண் அலாதவரைக் கண்டால்
அம்ம நாம் அஞ்சுமாறே. 10

கோணல் இல்லாத அம்புக்கும் அஞ்சமாட்டேன். எமனுடைய கோபத்திற்கும் அஞ்சமாட்டேன். நீண்டஇளம்பிறையை ஆபரணமாகச் சூடிய சிவபெருமானை நினைந்து, நெஞ்சகம் நைந்து உருகி நெகிழ்ந்து, ஒளிமிக்க கண்களில் கண்ணீர் வழிய, வாழ்த்திநின்று போற்றமாட்டாத ஆண்மை யற்றவர்களைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுகின்றோம்.



36. திருப்பாண்டிப் பதிகம்

திருப்பெருந்துறையில் அருளியது   கட்டளைக்கலித்துறை

(சோமசுந்தர பாண்டியனாகிய சிவபெருமான், தம்மை ஆட்கொண்டதையும், அதனால் தாம்பெற்ற சிவானந்தத்தையும் கூறி இதை அனைவரும் பெறுமாறு அழைப்பது)

526) பரு வரை மங்கைதன் பங்கரைப்
 பாண்டியற்கு ஆர் அமுது ஆம்
ஒருவரை ஒன்றும் இலாதவரைக்
 கழல்போது இறைஞ்சித்
தெரிவர நின்று உருக்கிப் பரி
 மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி உருவு அறியாது
 என்தன் உள்ளம்அதே. 1

உலக மலைகள் அனைத்திலும் பெரிய இமயமலை யரசன் மகளான பார்வதியை ஒருபாகத்தில் வைத்தவர். பாண்டிய மன்னனுக்குக் கிடைத்தற் கருமையான அமுதம் போன்றவர். தனக்குவமை இல்லாதவர். தனக்கென்று நாமம் உருவம் குணம் எதுவுமில்லாதவர். அடியேன் அவருடைய திருவடிப் போதுகளை வழிபட்டதால், தன் திருவுருவைத் தெரியக் காட்டி, என் முன் நின்று, மனத்தை உருக்கிக் குதிரை வீரனாக வந்தபெருமான் - அந்த ஒருவர் உருவத்தையன்றி வேறு எந்த உருவத்தையும் என் உள்ளம் அறியாது.

527) சதுரை மறந்து அறிமால் கொள்வர்
 சார்ந்தவர் சாற்றிச் சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி
 கழுக்கடை கைப் பிடித்துக்
குதிரையின்மேல் வந்து கூடிடு மேல்
 குடிகேடு கண்டீர்
மதுரையர் மன்னன் மறு பிறப்பு
 ஓட மறித்திடுமே. 2

நான் இப்பொழுது ஓர் உண்மையைப் பறையறைந்து சொல்கிறேன். அதைக்கேட்டு இறைவனைச் சார்ந்தவர்கள் தங்கள் சாமர்த்தியத்தை மறந்து சிவபெருமானை அறிய வேண்டுமென்று

அவன்பால் மயங்குவார்கள். கதிரவனை மறைக்கக் கூடிய பெருஞ்சோதியான இறைவன். சூலம் போலத் தார்க்குச்சி ஏந்தி, குதிரையின்மேல் எழுந்தருளிவந்து, நம்மைக்கூடினால், நம்குடி கெட்டுப்போகும். (பிறவியால் உண்டாகும் குலப்பெருமை அழியும்) மதுரை அரசனாகிய பாண்டியனுடைய மறுபிறப்பு ஓடியொழிய, அதை விரட்டி மறித்துத் தடுத்துவிடும்.

528) நீர் இன்ப வெள்ளத்துள் நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சம் கொண்டீர்
பார் இன்ப வெள்ளம் கொளப் பரி
மேற் கொண்ட பாண்டியனார்
ஓர் இன்ப வெள்ளத்து உருக் கொண்டு
தொண்டரை உள்ளம் கொண்டார்
பேர் இன்ப வெள்ளத்துள் பெய் கழலே
சென்று பேணுமினே. 3

தண்ணீர் வெள்ளத்தில் நீந்திக் குளிப்பதே இன்பம் என்ற நெஞ்சம் கொண்டவர்களே! (உங்களுக்குப் பேரின்ப வெள்ளம் காட்டப்போகிறேன்) உலக மக்கள் அனைவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் அழுந்துமாறு குதிரையின் மேல் வந்த பாண்டியனாகிய சோமசுந்தரக் கடவுள், ஒப்பில்லாத ஆனந்த வடிவம் கொண்டார். தொண்டரின் மனங்கவர்ந்தார். பேரின்ப வெள்ளத்தில் ஆழ்த்தக் கூடிய அவருடைய வீரக்கழல் அணிந்த திருவடிகளையே பிடித்துக் கொள்ளுங்கள்.

529) செறியும் பிறவிக்கு நல்லவர்
செல்லன்மின் தென்னன் நல் நாட்டு
இறைவன் கிளர்கின்ற காலம் இக்
காலம் எக் காலத்துள்ளும்
அறிவு ஒண் கதிர் வாள் உறை கழித்து
ஆனந்த மாக் கடவி
எறியும் பிறப்பை எதிர்ந்தார்
புரள இரு நிலத்தே. 4

அடர்ந்த பிறவியை விரும்பக் கூடிய நல்லவர்கள், இவன் முன்னால் செல்லாதீர்கள். பாண்டியனுடைய நல்ல நாட்டுக்கு இறைவனாகிய சிவபெருமான், எக்காலத்தையும் விட அதிகமாகப் போருக்கு எழுகின்ற காலம் இக்காலம். அப்பெருமான் ஞானமாகிய

ஒளிமிக்க வாளை உருவி, ஆனந்தக் குதிரையைச் செலுத்தி, எதிர்ப்பட்டவர்கள் பிறப்பை, மண்ணில் புரளும்படி வெட்டி வீழ்த்துவான். (இது ஆன்மாக்கள் பக்குவப்பட்ட காலம்)

530) காலம் உண்டாகவே காதல் செய்து
உய்ம்மின் கருது அரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்
பிரான் தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான்
வந்து முந்துமினே. 5

நல்ல காலம் பிறந்து விட்டது. இறைவன் மீது அன்பு செலுத்தி உய்யுங்கள். உலகம் உண்ட திருமாலும், பிரமனும், தேவர்களும் அணுக முடியாத ஆலகால நஞ்சை உண்டவன், எங்கள் பாண்டித்தலைவன், தன் அடியவர்களுக்கு, எல்லாவற்றுக்கும் மூலமான தன் திருவருள் சேமநிதியை அள்ளியள்ளிக் கொடுக்கிறான். வாங்குவதற்கு முந்திக் கொள்ளுங்கள்.

531) ஈண்டிய மாயா இருள் கெட
எப் பொருளும் விளங்கத்
தூண்டிய சோதியை மீனவனும்
சொல்ல வல்லன் அல்லன்
வேண்டிய போதே விலக்கு இலை
வாய்தல் விரும்புமின் தாள்
பாண்டியனார் அருள் செய்கின்ற
முத்திப் பரிசு இதுவே. 6

செறிந்திருப்பதும், அழிவற்றதுமான ஆணவ இருட்டு அழியவும், எல்லாப் பொருள்களும் நன்கு விளங்கவும், என்னுள் இருந்து என்னைத் தூண்டிய சோதிவடிவான சோமசுந்தரப் பெருமானை, பக்கத்திலிருந்து பார்த்த பாண்டிய மன்னனும் சொல்லவல்லன் அல்லன். அருள்பெற நீங்கள் விரும்பினால் அவன் விலக்கமாட்டான். திருவடி வாய்க்க வேண்டும் என்று விரும்புங்கள். தருவான் எங்கள் பாண்டிப் பெருமான் அருள்கின்ற முத்தியின் தன்மை இதுவேயாகும்.

532) மாய வனப் பரி மேல்கொண்டு
மற்றவர் கைக்கொளலும்
போய் அறும் இப் பிறப்பு என்னும்
பகைகள் புகுந்தவருக்கு
ஆய அரும் பெருஞ் சீருடைத்
தன் அருளே அருளும்
சேய நெடும் கொடைத் தென்னவன்
சேவடி சேர்மின்களே. 7

மாயம் பொருந்திய காட்டுக் குதிரையின் மேல் எழுந்தருளிவந்து, மலம் மாயை இவற்றோடு கூடிய உயிர்கள் மீது திருவருள் சுரந்து ஏற்றுக் கொண்டதும். இப்பிறவி என்னும் பகைநீங்கும். அவனை வந்து அடைந்தவர்களுக்கு, அரும்பெரும் சிறப்புமிக்க தன் திருவடித் திருவருளையே தருவான். எனவே செம்மை மிக்க நீண்ட கொடைத்தன்மை உள்ள தென்னவனாகிய சிவபிரான் திருவடிகளையே சென்று சேருங்கள்.

533) அழிவு இன்றி நின்றது ஓர் ஆனந்த
வெள்ளத்திடை அழுத்திக்
கழிவு இல் கருணையைக் காட்டிக்
கடிய வினை அகற்றிப்
பழ மலம் பற்று அறுத்து ஆண்டவன்
பாண்டிப் பெரும் பதமே
முழுது உலகும் தருவான் கொடையே
சென்று முந்துமினே. 8

மெய்யடியார்களை, என்றும் அழியாத ஆனந்த வெள்ளத்தில் அழுந்தச் செய்கிறான். தன்னுடைய நீங்காத கருணையைக் காட்டிப் பொல்லாத வினைகளைப் போக்குகிறான். பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் மிகப்பழைய ஆணவமலத்தை முழுவதுமாக அறுத்து ஆட்கொள்கிறான். இத்தகைய சிவபெருமான். பாண்டிய நாட்டை ஆளும் பதவியை மட்டுமா தருவான்? இல்லை இல்லை. உலகம் முழுவதையும் தன்னடியவர்க்குக் கொடையாகத் தரக் காத்திருக்கிறான். அமுதம் பெய்கின்ற போது வாயேந்திக் கையேந்தி நிற்பது போல, வந்து முந்திக் கொள்ளுங்கள்.

534) விரவிய தீவினை மேலைப்
பிறப்பு முந்நீர் கடக்கப்
பரவிய அன்பரை என்பு உருக்கும்
பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்தி
கொளப்பட்ட பூங்கொடியார்
மர இயல் மேல்கொண்டு தம்மையும்
தாம் அறியார் மறந்தே. 9

சேர்ந்து வருகின்ற தீவினைகளால் விளையும், இனிவரும் பிறப்பாகிய கடலைக்கடக்க வேண்டும் என்றெண்ணி வழிபடும் மெய்யடியார்களின் ஊனை உருக்கி உணர்வைப் பெருக்கும் பாண்டிப் பெருமான், குதிரையின் மேல் வந்ததைக் கண்டதனால், தம் மனத்தையும் அறிவையும் அவன்பால் செலுத்திய பூங்கொடி போன்ற பெண்கள், மரத்தின் தன்மை பெற்று, எல்லாவற்றையும் மறந்து தம்மையே தாம் அறியாத தன்மை பெற்றனர்.

535) கூற்றை வென்று ஆங்கு ஐவர் கோக்களையும்
வென்று இருந்து அழகால்
வீற்றிருந்தான் பெருந்தேவியும்
தானும் ஓர் மீனவன்பால்
ஏற்று வந்து ஆர் உயிர் உண்ட
திறல் ஒற்றைச் சேவகனே
தேற்றம் இலாதவர் சேவடி
சிக்கெனச் சேர்மின்களே. 10

மார்க்கண்டேயனைக் காப்பதற்காக எமனைவென்றவன். ஐம்புலன்களாகிய அரசர்களை வென்றவன். உமாதேவியும் தானுமாக அருட்கோலம் கொண்டு அழகாக வீற்றிருந்தான். அவன் யார் தெரியுமா? எனக்காகப் பாண்டிய மன்னன்பால் குதிரைகளை ஒப்படைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு வந்தவன். அருட்காட்சி தந்து என் ஆருயிரை உண்டவன். தன்னொப்பார் இல்லாத வீரன். தெளிவில்லாதவர்கள், தெளிவு பெறுவதற்காக, அவன் திருவடியைச் சீக்கிரம் சென்று உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள்.

37. பிடித்த பத்து

திருத்தோணிபுரத்தில் அருளியது எழுசீர் ஆசிரியவிருத்தம்

(இறைவனை விடாமல் இறுகப் பற்றிக் கொண்டதைக் கூறுவதன் மூலம், மற்ற ஆன்மாக்களுக்குத் தான் அனுபவித்த முத்தி இன்பத்தை உணர்த்துதல்)

536) உம்பர்கட்கு அரசே ஒழிவு அற நிறைந்த
யோகமே ஊற்றையேன் தனக்கு
வம்பு எனப் பழுத்து என் குடி முழுது ஆண்டு
வாழ்வு அற வாழ்வித்த மருந்தே
செம் பொருள் துணிவே சீர் உடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 1

தேவர்களுக்கு மன்னவனே! எங்கும் நீக்கமின்றி நிறைந்த சிவயோக வடிவானவனே! அழுக்குமிகுந்த உடம்பைப் பெற்ற அடியேனுக்கு, காலமில்லாத காலத்தில் பழுத்து, என் குடி முழுவதையும் ஆட்கொண்டு, இனிப்பிறவி எடுத்து வாழாதவண்ணம், இப்பிறவியில் வாழவைத்த, பிறவிப்பிணிக்கு மருந்தே! சிறந்த நூல்களால் தெளிந்துரைக்கப்பட்ட செம்பொருளே! சிறந்த கழலணிந்த திருவடிகளை உடையவனே! ஞானச் செல்வமே! சிவபெருமானே! அடியார்களாகிய நாங்கள் எல்லோரும் உய்வதற்காக, உன்னை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன். இனி நீ எங்கே போகமுடியும்?

537) விடை விடாது உகந்த விண்ணவர் கோவே
வினையனேனுடைய மெய்ப் பொருளே
முடை விடாது அடியேன் மூத்து அற மண் ஆய்
முழுப் புழுக் குரம்பையில் கிடந்து
கடைபடா வண்ணம் காத்து எனை ஆண்ட
கடவுளே கருணை மா கடலே
இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 2

அறத்தின் வடிவான காளை, விருப்பத்தோடு, விட்டு விடாமல் தாங்கிக் கொண்டிருக்கும் விண்ணோர் பெருமானே! இருவினைக்

கொள்கலமான எனக்குக் கிடைத்த மெய்ப்பொருளே! முடைநாற்றம் வீசும் இந்த உடம்பை விடாத, அடியேன், முதுமை யடைந்து மண்ணாய் அழியாமல், காத்தவனே! முழுவதும் புழுமயமான இவ்வுடம்பில் மயங்கிக் கிடந்து கீழானவன் ஆகாமல் காப்பாற்றி எனையாண்ட கடவுளே! பெருங்கருணைக்கடலே! இடைவெளியில்லாமல் உன்னை இறுகப்பற்றினேன். இனி நீ எங்கே போகமுடியும்?

538) அம்மையே அப்பா ஒப்பு இலா மணியே
அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 3

அன்பைப் பொழியும் அம்மையே! அடித்தும் திருத்தும் அப்பனே! ஒப்பற்ற மாணிக்கமே! என் அன்பு நிலத்தில் விளைந்த அமுதமே! பொய்யானதும் பயனற்றதுமான செயல்களை அதிகரித்தும், நல்ல செயல் புரியும் நேரத்தைச் சுருக்கியும், புழுத்து அலைகின்ற கீழ்மகனாகிய எனக்குச் சிறப்பு மிக்க சிவபதப் பேரின்பமளித்த பெருஞ்செல்வமே! சிவபெருமானே! இப்பிறப் பிலேயே உன்னை இறுகப் பிடித்துக் கொண்டேன். இனி நீ எங்கே போக முடியும்?

539) அருள் உடைச் சுடரே அளிந்தது ஓர் கனியே
பெரும் திறல் அரும் தவர்க்கு அரசே
பொருள் உடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருள் இடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருள் இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 4

திருவருள் ஒளிவீசும் தீப்பிழம்பே! சிறப்பாய்ப் பழுத்த செழுங்கனியே! ஆற்றல் மிக்க தவமுனிவர்க்கு அரசனே! மெய்ப்பெருளைக் காட்டும் கலையே! வாய்மொழியான புகழ்ச்சியைக் கடந்த அனுபவமே! சிவயோகத்தின் பேரழகே! தெளிவு பெற்ற போது அடியார் சிந்தையுள் நுழைந்து கொண்ட என் செல்வமே!

சிவபெருமானே! இருள் மிகுந்த இம்மண்ணுலகில் உன்னை இறுக்கமாகப் பற்றிக் கொண்டேன். இனி எங்கு எழுந்தருளுவாய்?

540) ஒப்பு உனக்கு இல்லா ஒருவனே அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே
மெய்ப் பதம் அறியா வீறு இலியேற்கு
விழுமியது அளித்தது ஓர் அன்பே
செப்புதற்கு அரிய செழுஞ் சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
எய்ப்பு இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே. 5

உனையொப்பார் யாருமின்றி இருக்கும் ஒருவனே! என் மனத்தில் ஒளிவிடும் ஞானஒளியே! எது மெய்யான நிலை என்று அறியக்கூடிய ஆற்றல் இல்லாத எனக்கு, மிகச் சிறந்த முத்தியின்பம் தந்த அன்பு வடிவமே! சொல்லமுடியாத செழுமையான சுடர்வீசும் தெய்வவடிவே! செல்வமே! சிவபெருமானே! நான் இளைத்துப் போன போது, உன்னை இறுகப்பற்றிக் கொண்டேன். இனி எங்கெழுந் தருளுவாய் அப்பனே!

541) அறவையேன் மனமே கோயிலாக் கொண்டு ஆண்டு
அளவு இலா ஆனந்தம் அருளிப்
பிறவி வேர் அறுத்து என் குடி முழுது ஆண்ட
பிஞ்ஞகா பெரிய எம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே அடியேன்
செல்வமே சிவபெருமானே
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே. 6

எந்த ஆதரவும் இல்லாதவனாகிய என் மனத்தை உன் திருக்கோயிலாக்கி, என்னை ஆட்கொண்டு எல்லை காண முடியாத இன்பம்தந்தாய். என் பிறவிக்கு வேரான வினைகளை அறுத்தாய். என் குடிமுழுவதையும் உனக்கு ஆளாக்கினாய். தலைப்பாகை அணிந்தவனே! யான் பெற்ற பெரிய பொருள்களுக்கெல்லாம் பெரிய பொருளே! திறந்த வெளியில் நான் கண்ட ஒளிக்காட்சியே! செல்வமே! சிவபெருமானே! இறப்பதற்கான இறுதிக்காலத்தில் உன்னை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன். இனி என்னை விட்டு எப்படிப் போவாய்? எங்கே போவாய்?

542) பாச வேர் அறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றும் ஆறு அடியனேற்கு அருளிப்
பூசனை உகந்து என் சிந்தையுள் புகுந்து
பூங் கழல் காட்டிய பொருளே
தேசு உடை விளக்கே செழுஞ் சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெருமானே
ஈசனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே. 7

பாச பந்தங்களின் ஆணவ வேரை அறுக்கும் பழம் பொருளான உன்னைப் பற்றிக் கொள்ளுமாறு எனக்குத் திருவருள் கூட்டினாய். என் வழிபாட்டுக்கு மகிழ்ந்து என் மனத்துள் புகுந்து பூப்போன்ற திருவடிக்காட்சியைத் தந்து கொண்டே இருக்கும் செம்பொருளே! ஒளிமிக்க விளக்கே! அந்த விளக்கின் சுடரில் தெரியும் தெய்வ வடிவமே! செல்வமே! சிவபெருமானே! எங்கும் இருக்கும் ஈசனே! உன்னை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன். இனி நீ எங்கெழுந்தருளுவாய் அப்பனே!

543) அத்தனே அண்டர் அண்டம் ஆய் நின்ற
ஆதியே யாதும் ஈறு இல்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்து
பிழைத்து அவை அல்லை ஆய் நிற்கும்
எத்தனே உன்னை சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே. 8

என் தந்தையே! தேவர்களாகவும் அவர்கள் வாழும் அண்டங்களாகவும் நின்ற மூலகாரண மூர்த்தியே! ஒரு சிறிதும் அழிவற்ற சித்திகளை உடையவனே! பக்திவலைபோட்டுப் பக்தர்கள் இறுக்கமாகப் பற்றிக் கொண்ட செல்வமே! சிவபெருமானே! அடியார் பால் அவர்களை விட அதிகமாகப் பித்துக் கொண்டவனே! எல்லா உயிர்களிடத்தும் கலந்து நின்று தழைக்கச் செய்கிறாய். அந்த உயிர்களில் தவறிழைத்த உயிர்களிலிருந்து வேறாயிருக்கிறாய். இப்படி உடனாகவும் வேறாகவும் இருக்கும் ஏமாற்றுக் காரனே! நீ தப்பிவிடாமல் உன்னை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன். இனி எங்கு எழுந்தருளுவாய்?

544) பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே. 9

சொல்லத் தெரியாத குழந்தைக்குப் பசிவரும் நேரம் நினைந்து பால் ஊட்டும் தாயைக் காட்டிலும் மிகவும் அன்பு கூர்ந்து, (எனக்கு ஞான மூட்டி) என் உடம்பை உருக்கி உள்ளத்தில் ஞான ஒளியைப் பெருகச் செய்து, என்றும் கெடாத பேரின்பமான தேனைச் சொரிந்து, என்னை விட்டு (எனக்குப் புறம்பாக) வெளியில் திரிந்த செல்வமே! சிவபெருமானே! நான் உன்னை விடாமல் தொடர்ந்து இறுகப் பிடித்துக் கொண்டேன். இனி எங்கு எழுந்தருளுவாய்?

545) புன் புலால் யாக்கை புரை புரை கனியப்
பொன் நெடும் கோயிலாப் புகுந்து என்
என்பு எலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசு இலா மணியே
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்கு ஆம்
தொடக்கு எலாம் அறுத்த நல் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே. 10

இழிவானதும் புலால் நாற்றம் வீசுவதுமான என் உடம்பு, மயிர்க்கால்கள் தோறும் நெகிழ்ந்து கனிய வைத்து, அந்த உடம்பையே உன்னுடைய பொன்னாலான பெரிய கோயிலாக்கி, அதனுள் எழுந்தருளி, என் எலும்பெல்லாம் உருகவைத்து, மிக எளியவனாய் வந்து என்னை ஆண்ட முதல்வனே! குற்றமற்ற மாணிக்கமே! துன்பம், பிறப்பு, இறப்பு, மயக்கம் முதலிய வினைத் தொடர்புகளை எல்லாம் அழித்த சோதிச்சுடரே! என் இன்பமே! உன்னை இறுக்கமாகப் பற்றினேன். இனி எங்கெழுந்தருளுவாய் இறைவனே.

38. திருவேசறவு

திருப்பெருந்துறையில் அருளியது   கொச்சகக் கலிப்பா

(விருப்பத்தையும் அது நிறைவேறத் தாமதிப்பதால் வரும் வருத்தத்தையும் காட்டுவது ஏசறவு, இறைவன் தன்னை ஆட்கொணட விதத்தை எண்ணி ஏசறுகிறார் மணிவாசகர். ஆன்மா, தன் செயலற நிற்பதைஉணர்த்துவதுஇப்பகுதி)

546) இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் என்பு உருக்கிக்
கரும்பு தரு சுவை எனக்குக் காட்டினை உன் கழல் இணைகள்
ஒருங்கு திரை உலவு சடை உடையானே நரிகள் எல்லாம்
பெரும் குதிரை ஆக்கிய ஆறு அன்றே உன் பேர் அருளே. 1

அலைகள் மிகுந்த கங்கை, தன் வேகம் அடங்க, ஒன்றாய்ச் சேர்ந்து உலாவருகின்ற திருச்சடையை உடையவனே! எளிதில் உருகாத இரும்பு போல் மனமுடைய என்னை, அடிக்கடி இழுத்து இழுத்து என் எலும்புகளை உருகவைத்து, உன் திருவடிகளில் கரும்பு தரும் இன்சுவையைக் காட்டினாய். தகாத நரிகளையெல்லாம் தகுதி வாய்ந்த குதிரைகள் ஆக்கி அன்று நீ செய்த பேரருள் போன்றதுதானே என் கனியாத மனத்தைக் கனிய வைத்ததும்? (உன்னால் எதுவும் செய்ய முடியும்)

547) பண் ஆர்ந்த மொழி மங்கை பங்கா நின் ஆள் ஆனார்க்கு
உண்ணார்ந்த ஆர் அமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பு அறுத்திட்டு ஆள்வாய் நீ வா என்னக்
கண்ணார உய்ந்த ஆறு அன்றே உன் கழல் கண்டே. 2

இசை போலப் பேசுகின்ற எழில் உமையாள் ஒருபாகனே! உனக்கு அடிமையானவர் உண்ணத் தகுந்த அரிய அமுதமே! என்னை உடையவனே! மண்ணில் பொருந்திய என் மானிடப் பிறவியை ஒழித்து ஆட்கொள்பவனே! நீ என்னை வாவென்று அழைத்தாய். உன் திருவடி காட்டினாய் கண்கள் மகிழக்கண்டேன். நான் உய்தியடைந்தேன்.

548) ஆதம் இலி யான் பிறப்பு இறப்பு என்னும் அரு நரகில்
ஆர் தமரும் இன்றியே அழுந்துவேற்கு ஆ ஆ என்று
ஓதம் மலி நஞ்சு உண்ட உடையானே அடியேற்கு உன்
பாத மலர் காட்டிய ஆறு அன்றே எம் பரம் பரனே. 3

ஈரமிக்க கடலில் எழுந்த நஞ்சை உண்ட உடையவனே! மேலானவற்றுக் கெல்லாம் மேலானவனே! எந்த ஆதரவும் இல்லாதவன் நான். பிறப்பு இறப்பு என்னும் கொடிய நரகத்தில் என்னைச் சார்ந்த உற்றார் உறவினர் யாருமில்லாமல் அழுந்திக் கிடக்கும் எனக்கு இரங்கி ஆ! வா என்று உன் திருவடித் தாமரைகளைக் காட்டி ஆட்கொண்டாயே! இது நான் பெற்ற பெரும் பேறல்லவா!

549) பச்சைத் தாள் அரவு ஆட்டீ படர் சடையாய் பாத மலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்டு
எச்சத்தார் சிறு தெய்வம் ஏத்தாதே அச்சோ என்
சித்தத்து ஆறு உய்ந்தவாறு அன்றே உன் திறம் நினைந்தே.4

பசுமையான புற்றிலுள்ள பாம்பை ஆட்டுவிக்கும் பெருமானே! எட்டுத்திக்கிலும் படர்ந்து நிற்கும் சடையை உடையவனே! உன்திருவடித் தாமரைகளைத் தலைஉச்சியில் வைத்துப் போற்றக்கூடிய மெய்யடியார் பெருமானே! என் மனம் போன போக்கில் சென்று குற்றம் பொருந்திய சிறுதெய்வங்களை வணங்காமல், என்னை உய்யக் கொண்டாய். உன் பேரருள் திறத்தை நினைந்து நான் உய்ந்தவகை (அச்சோ) மிகவியப் பல்லவா?

550) கற்று அறியேன் கலை ஞானம் கசிந்துஉருகேன் ஆயிடினும்
மற்று அறியேன் பிற தெய்வம் வாக்கு இயலால் வார் கழல் வந்து
உற்று இறுமாந்து இருந்தேன் எம்பெருமானே அடியேற்குப்
பொன் தவிசு நாய்க்கு இடும் ஆறு அன்றே நின் பொன் அருளே. 5

உவமையிலாக்கலைஞானம் படித்தறியேன். உன்னை நினைத்து உருகமாட்டேன். என்றாலும் வேறு தெய்வங்களை அறிந்ததில்லை. நீ கொடுத்த உபதேச வார்த்தையின் தன்மையால், உன் திருவடிக்கு ஆளாகி அங்கேயே இறுமாந்திருந்தேன். எம்பெருமானே! எனக்கு நீ செய்த பேரருள் நாய்க்குப் பொன்னாலான சிங்காதனம் போட்டது போலல்லவா இருக்கிறது!

551) பஞ்சு ஆய அடி மடவார் கடைக் கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சு ஆய துயர் கூர நடுங்குவேன் நின் அருளால்
உய்ஞ்சேன் எம்பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேல் என்று ஆண்ட ஆறு அன்றே அம்பலத்து அமுதே. 6

எம்பெருமானே! என்னை உடையவனே! அம்பலத்தில் கிடைத்த அமுதமே! பஞ்சுபோல் மெல்லடிப் பாவையரின் கடைக்கண் பார்வையால் பெரிதும் துன்பமுற்று நஞ்சு உண்டது போல் துயர்ப்பட்டு நடுங்கக் கூடியவனாகிய நான், உன் திருவருளால் அன்றோ தப்பி உய்ந்தேன். அடியேனை அஞ்சாதே என்று ஆட்கொண்டது எவ்வளவு வியக்கத் தக்க செயல்!

552) என்பாலைப் பிறப்பு அறுத்து இங்கு இமையவர்க்கும் அறிய ஒண்ணாத்
தென் பாலைத் திருப்பெருந்துறை உறையும் சிவபெருமான்
அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி ஆட் கொண்டது
என்பாலே நோக்கியவாறு அன்றே எம்பெருமானே. 7

பசையற்ற பாலைநிலம் போல், பயன்படாத என் பிறவியைப் போக்கி ஆட்கொண்ட, தேவர்க்கும் அறியவொண்ணாத தென்பாலுள்ள திருப்பெருந்துறைச் சிவபெருமானே! என் மேல் அன்புவைத்தாய். என் மனம் நெகிழுமாறு நெஞ்சுள் புகுந்தாய். என்னை ஆட்கொண்டாய். இது என்பால் நீ வைத்த திருவருள் நோக்கமல்லவா!

553) மூத்தானே மூவாத முதலானே முடிவு இல்லா
ஓத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்து இங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தே நீ ஆண்டஆறு அன்றே எம்பெருமானே. 8

மூத்தவை அனைத்திற்கும் மூத்தவனே! அப்படி மூப்பு வந்ததால் நரைதிரை பிணி அணுகாத முதற்பொருளே! முடிவில்லாத வேதங்கள் கூறிடும் ஞானவடிவே! அவ்வேதங்களின் பொருளானவனே! அழியும் பொருளாகவும் அழியாத பொருளாகவும் உலகில் தோன்றுபவனே! இந்த மண்ணில் பிறந்து வினையில் புரளும் என்னை, உன் கருணையினால் உலகியலினின்றும் நீக்கி நீ ஆட்கொண்ட தன்மை வியப்பல்லவா எம்பெருமானே!

554) மருவு இனிய மலர்ப் பாதம் மனத்தில் வளர்ந்து உள் உருகத்
தெருவு தொறும் மிக அலறிச் சிவபெருமான் என்று ஏத்திப்
பருகிய நின் பரங் கருணைத் தடம் கடலில் படிவு ஆம் ஆறு
அருள் எனக்கு இங்கு இடைமருதே இடம் கொண்ட அம்மானே. 9

திருவிடைமருதூரை இடமாகக் கொண்டு எழுந்தருளும மகாலிங்கப் பெருமானே! அடைந்தார்க்கு இனிமைதரும் உன்

திருமலர்ப்பாதங்கள், என் மனத்தில் வளர, அதனால் மனமுருக, தெருக்கள் தோறும் உன்னைப்போற்றிச் சிவபெருமானே! சிவபெருமானே! என்று அலறிக்கொண்டு, எனக்குப் பருகக் கிடைத்த உன் பெருங்கருணையாகிய கடலில் முழுவதும்கிடந்து தோயும் வண்ணம் எனக்கு அருள்வாய் அம்மானே!

555) நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்
தேன் ஆய் இன் அமுதமும் ஆய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்
ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே 10

சிவாய நம என்ற அஞ்செழுத்து மந்திரத்தைக் குருநாதன் கொடுக்க நான்பெற்றுக் கொண்டேனே, இப்பேறு பெறுவதற்கு நானோ தவம் செய்தேன்? தேனாகவும் இனிய அமுதாகவும் இனிக்கின்ற சிவபெருமான், எனக்கிரங்கி, அவனாகவே வந்து என் நெஞ்சில் புகுந்து எனக்கு அருள் வழங்கினான். அதனால் உடம்புக்குள் இருக்கும் உயிரின் இந்த வாழ்க்கையை அப்பொழுதே வெறுத்து அழிக்கச் செய்தான். இது அவன் கருணையல்லவா!



வடநிழலின் ஒரு நால்வர்க்கு அருளும் நிலை இதுவென்று
வயக்கி ஆங்கு
விடம் மிடற்றில் அணிந்தபிரான் குருந்தடியில் இருந்துணர்த்த
விழைந்து கேட்டோர்
தொடரும் நிலை இதுவென்று தெரித்ததுபோல் கரைந்துருகிச்
சொரிந்து கண்ணீர்
படர்அருள் மெய்ம் மொழிதொடுத்த மாணிக்க வாசகர் பொன்
பாதம் போற்றி

-பூவாளூர்ப்புராணம்

39.திருப்புலம்பல்

திருவாரூரில் அருளியது கொச்சகக் கலிப்பா

(அன்பின் முதிர்ச்சியால் அழுதல் திருப்புலம்பல். இதனால் சிவானந்தம் மேலும் அதிகரிக்கிறது. மூன்று பாடல்களில் திருவாரூர், திருப்பெருந்துறை, குற்றாலம் என்ற மூன்று தலங்கள் குறிப்பிடப் படுகின்றன)

556) பூங்கமலத்து அயனொடு மால் அறியாத நெறியானே
கோங்கு கலர் சேர் குவி முலையாள் கூறா வெண்ணீறு ஆடீ
ஓங்கு எயில் சூழ் திருவாரூர் உடையானே அடியேன் நின்
பூங் கழல்கள் அவை அல்லாது எவை யாதும் புகழேனே. 1

தாமரைப்பூவில் உள்ள நான்முகனும், திருமாலும் அறிய முடியாத ஞானநெறி மூலம் அடையத் தக்கவனே! கோங்கு மலரின் அரும்புபோலக் குவிந்த தனமுடைய உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவனே! திருவெண்ணீறு அணிந்தவனே! உயர்ந்தமதில்கள் சூழ்ந்த திருவாரூர் உடையவனே! அடியேன் உன்னுடைய மலர்க் கழல்கள் அன்றி வேறு எதையும் ஒரு சிறிதளவும் புகழமாட்டேன்.

557) சடையானே தழல் ஆடீ தயங்கு மூஇலைச் சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழ வெள்ளை
விடையானே விரி பொழில் சூழ் பெருந்துறையாய் அடியேன் நான்
உடையானே உனை அல்லாது உறு துணை மற்று அறியேனே 2

சடையை உடையவனே! சர்வசங்கார காலத்தில் ஊழித்தீயில் நடனமாடுபவனே! விளங்குகின்ற முத்தலைச் சூலப்படையை உடையவனே! மேலான சோதி வடிவம் கொண்டவனே! வெண்மையான இளங்காளையை வாகனமாக உடையவனே! விரிந்த சோலைகள் சூழ்ந்த திருப்பெருந் துறையில் எழுந்தருளி இருப்பவனே! என்னை உடைமையாக ஏற்றவனே! அடியவனாகிய நான் உன்னைத் தவிர எனக்கு உற்ற துணையாக வேறுயாரையும் அறிய மாட்டேன்

558) உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரை கழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்து உருக வேண்டுவனே. 3

என்னுடைய சுற்றத்தார்களை நான் விரும்பவில்லை. எனக்குச் சொந்தமான ஊரை விரும்பவில்லை என்பேர் புகழ் எதையும் விரும்பவில்லை. கல்வித்திறத்தால், நெறியல்லாதவற்றை நெறியெனச்சாதிக்கும் கற்றவர்களை நான்விரும்பேன்.என்னுடைய கல்வியும்இனிப்போதும். திருக்குற்றாலத்தில்அமர்ந்து சித்திரசபையில் ஆடும்கூத்தப்பெருமானே! உன்னுடைய ஒலிக்கின்றதும் வீரக்கழலை அணிந்ததுமான திருவடிகள் மீது அன்புகொண்டு, இளங்கன்றோடு கூடிய பசுவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுகிறேன்.



40.குலாப்பத்து

தில்லையில் அருளியது கொச்சகக் கலிப்பா

(தில்லை ஆண்டவனோடு கூடிக்குலாவுதல் குலாப்பத்து, இடைவிடாத இன்ப அனுபவத்தை இது விளக்குகிறது)

559) ஓடும் கவந்தியுமே உறவு என்றிட்டு உள் கசிந்து
தேடும் பொருளும் சிவன் கழலே எனத் தெளிந்து
கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்து அடியேன்
ஆடும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 1

திருவோடும் கோவணமும் மட்டுமே எனக்குரிய உறவுப் பொருட்களாக எண்ணி, என் மனம் உருகி, தேடத்தக்க பொருளாவது சிவபெருமான் திருவடிகளே என்ற தெளிவு பெற்று, இந்த உடலும் உயிரும் கூத்தாட, தில்லையாண்டானை என் தலைவனாகக் கொண்டு அவனோடு குலாவி நானும் வளைந்து மகிழ்ந்து ஆடுகின்றேன்.

560) துடி ஏர் இடுகு இடைத் தூய் மொழியார் தோள் நசையால்
செடி ஏறு தீமைகள் எத்தனையும் செய்திடினும்
முடியேன் பிறவேன் எனைத் தன தாள் முயங்குவித்த
அடியேன் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 2

உடுக்கை போல் சுருங்கிய இடையையும், தூய மொழியினையும் உடைய மங்கையரின் தோள்மேல் கொண்ட விருப்பத்தால், சிறு தூறு போலக் கிளைத்துப் பரவும் தீமைகள் எவ்வளவு செய்தாலும் அதனால் இறக்கமாட்டேன். மீண்டும் பிறக்க மாட்டேன். ஏன் தெரியுமா? என்னைத் தன் திருவடிகளில் இணைத்து இன்பமளித்த தில்லைநாதனோடு குலாவியல்லவா கூத்தாடுகின்றேன்.

561) என்பு உள் உருக்கி இரு வினையை ஈடு அழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்பு உள்ளவற்றை முழுது அழிய உள் புகுந்த
அன்பின் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 3

என் எலும்பை உருக்கி, நல்வினை தீவினைகளின் ஆற்றலை யொழித்து, அவற்றால் வந்த துன்பங்களை அகற்றி, பாசத்தொடர்புகளை அறுத்துத் தூய்மைப்படுத்தி, முன்பு சேர்த்து வைத்திருந்த மலங்கள்

அனைத்தையும் முழுவதுமாக அழித்து, என் மனத்துள் புகுந்த தில்லை யாண்டவனோடு அன்புடன் குலாவி அவனையே பற்றி நிற்கிறேன்.

562) குறியும் நெறியும் குணமும் இலார் குழாங்கள்தமைப்
பிறியும் மனத்தார் பிறிவு அரிய பெற்றியனைச்
செறியும் கருத்தில் உருத்து அமுது ஆம் சிவபதத்தை
அறியும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 4

இறைவனுடைய செம்மேனி, வெண்ணீறு போன்ற அடையாளங்கள், அவனையடையும் சரியை கிரியை யோகம் ஞானமெனும் நெறிகள், அவனைப்பற்றுவதற்குரிய நற்குணங்கள் இவற்றை அறியாத கூட்டத்தை விட்டுப் பிரிந்தவர்கள் மெய்யன்பர்கள். அவர்களால் பிரியமுடியாத தன்மை உள்ளவன், அன்பு செறிந்த உள்ளங்களில் உருக்கொண்டு அமுதம் போல் இனிக்கும் சிவபதமாய்த் திகழ்பவன், எல்லாவற்றையும் அறியும் தில்லை ஆண்டவன் அவனோடு குலாவுதல் கொண்டு அவனையே பற்றிக் கிடக்கிறேன்.

563) பேரும் குணமும் பிணிப்பு உறும் இப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசு அறுத்து தொண்டர் எல்லாம்
சேரும் வகையால் சிவன் கருணைத்தேன் பருகி
ஆரும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 5

சித்தாய் இருந்த உயிரைப் பெயராலும் குணத்தாலும் கட்டிப் போட்ட பிறவியானது, தூர்ந்து போகுமாறு, குற்றங்களைப் போக்கி, தொண்டர் அனைவரும் ஒன்று சேர்ந்து சிவபெருமான் பெருங்கருணைத் தேன் பருகும் இடம் தில்லை. அங்கே அரசாளும் எம்பெருமானைப் பற்றிக்கொண்டு அவனோடு குலாவி ஆடுகின்றேன்.

564) கொம்பில் அரும்பு ஆய் குவி மலர் ஆய்க் காய் ஆகி
வம்பு பழுத்து உடலம் மாண்டு இங்ஙன் போகாமே
நம்பும் என் சிந்தை நணுகும் வண்ணம் நான் அணுகும்
அம் பொன் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 6

இந்த உடம்பு மரக்கொம்பில் தோன்றிய அரும்புபோல் குழந்தையாய் அரும்பி, இளைஞனாய் மலர்ந்து இல்லறத்தில் காயாகி, முதுமையில் பழுத்து வீணாக மாண்டு போகாமல், நம்பிக்கை கொண்ட என்மனம் அவனையே சேருமாறு நான் சேர்ந்த இடம் அழகிய

பொன்னாலான தில்லையம்பலம். அங்கே என்னை ஆட்கொண்ட பெருமானோடு குலாவுதல் கொண்டேன்.

565) மதிக்கும் திறல் உடைய வல் அரக்கன் தோள் நெரிய
மிதிக்கும் திருவடி என் தலை மேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசு பாசம் ஒன்றும் இலோம் எனக் களித்து இங்கு
அதிர்க்கும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 7

பலராலும் மதிக்கப்படக் கூடிய வலிமை மிக்க இராவணன், கயிலையைத் தூக்க முயன்ற போது அவனுடைய தோள்கள் நெரிந்து போக மிதித்த திருவடி என் தலை மீது வீற்றிருப்பதால் இனிமேல் பிறவியைத் தோற்றுவிக்கும் பசு பாசத் தன்மைகள் எதுவும் எம்மைச் சேராது என்று மகிழ்ந்து நாம் ஆரவாரத்தோடு குலாவி நிற்பது, தில்லையம்பலப் பெருமானை நம் சிந்தையில் கொண்டல்லவா!

566) இடக்கும் கரு முருட்டு ஏனப் பின் கானகத்தே
நடக்கும் திருவடி என் தலைமேல் நட்டமையால்
கடக்கும் திறல் ஐவர் கண்டகர் தம் வல் ஆட்டை
அடக்கும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 8

(பாசுபதம் பெற அருச்சுனன் தவம் செய்த போது அவனைக் கொல்லப் பன்றி வடிவில் வந்தான் மூகாசுரன். அந்தப் பன்றியைக் கொல்வதற்காகச் சிவபெருமான்) பூமியைத் தோண்டும் வலிமை மிக்க கரிய பன்றியைப் பின் தொடர்ந்து காட்டில் திருவடிபதியச் சென்றான். அந்தத் திருவடியை என் தலைமேல் சூட்டியதால், என்னை வெல்லும் ஆற்றல் மிக்க ஐம்புலப் பகைவரின் வலிமையான விளையாட்டை அடக்கும் ஆற்றல் பெற்றேன். அதற்குக் காரணமான தில்லைப்பெருமானோடு குலாவி மகிழ்ந்து ஆடுகின்றேன்.

567) பாழ்ச் செய் விளாவிப் பயன் இலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச் செய் தவத்தால் கிழியீடு நேர் பட்டுத்
தாள் செய்ய தாமரைச் சைவனுக்கு என் புன் தலையால்
ஆட்செய் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 9

பாழான வயலை உழுது பயன்பெறாமல் கிடந்த நான், என் முன்னைத் தவத்தால், அந்த வயலில் புதையலாய்ப் பொற்கிழி கிடைத்தால் போல் சிவபெருமானைப் பெற்றேன். தாமரை போல் சிவந்த

திருவடிகளை உடைய பெருமானுக்கு என் புல்லிய தலையால் ஆளாகப் பணிசெய்யும் பேறு, தில்லை ஆண்டவனைக் குலாவியதால் அன்றோ விளைந்திருக்கிறது.

568) கொம்மை வரி முலைக் கொம்பு அனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தால் திருப் பணிகள் செய்வேனுக்கு
இம்மை தரும் பயன் இத்தனையும் ஈங்கு ஒழிக்கும்
அம்மை குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 10

வட்டமான, வரிகள் படிந்த கொங்கைகளை உடைய பூங்கொடியான உமையவளை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமானுக்கு, செம்மை பெற்றுத் திருந்திய மனத்தோடு நான் திருப்பணிகள் செய்கிறேன். அதனால் இப்பிறவியில் அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்களை இங்கேயே ஒழியச் செய்து, மறுமையில் இன்பந்தரும் தில்லைக் கூத்தனைப் பற்றிக் கொண்டு, நான் குலாவி மகிழ்கிறேன்.



41. அற்புதப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது அறுசீர் ஆசிரியவிருத்தம்

(மிகுதி காரணமாக விளைநத மேன்மை அதிசயம். நுகரப்படாத ஒன்றை நுகரும் போது விளைந்த தன்வசமற்ற நிலை அற்புதம். சிவானுபவம் முற்றுதலால், புதிய உணர்வுகளுக்கு ஆளாகி ஆச்சரியப்பட்டதைக் கூறுவது இப்பகுதி)

569) மையலாய் இந்த மண்ணிடை வாழ்வு எனும்
ஆழியுள் அகப்பட்டுத்
தையலார் எனும் சுழித் தலைப்பட்டு நான்
தலை தடுமாறாமே
பொய் எலாம் விடத் திருவருள் தந்து தன்
பொன் அடி இணை காட்டி
மெய்யன் ஆய் வெளிகாட்டி முன் நின்றது ஓர்
அற்புதம் விளம்பேனே. 1

இவ்வுலகத்தின் மீது மயக்கம் கொண்டு, வாழ்க்கை என்ற கடலில் சிக்கிக் கொண்டு, பெண்கள் என்ற சுழியில் அகப்பட்டு நான் இடம் பெயர்ந்து தடுமாறிப் போகாமல், பொய்யான பொருட்கள் மீது வைத்த ஆசைகள் ஒழியத் திருவருள் செய்தான் சிவபெருமான். தன்னுடைய பொன்னார் திருவடிகளைக் காட்டி, திருமேனி தாங்கி வந்து ஞானவெளி காட்டி என்முன் நின்றான். இந்த அற்புதத்தை நான் எப்படிச் சொல்லவல்லேன்!

570) ஏய்ந்த மா மலர் இட்டு முட்டாதது ஓர்
இயல்பொடும் வணங்காதே
சாந்தமார் முலைத் தையல் நல்லாரொடும்
தலை தடுமாறு ஆகிப்
போந்து யான் துயர் புகா வணம் அருள் செய்து
பொன் கழல் இணை காட்டி
வேந்தனாய் வெளியே என் முன் நின்றது ஓர்
அற்புதம் விளம்பேனே. 2

எம்பெருமான் திருவடிகளைத் தக்க மலர்களைக்கொண்டு, இடைவிடாமல் வணங்காத நான், சந்தனம் பூசிய முலைகளை உடைய தையல் நல்லாரோடும் கூடித் தலைதடுமாறிச் சென்று, துயர்க்கடலில்

வீழாமல், அருள்செய்தான். தன் பொன்னான திருவடிகள் இரண்டையும் காட்டி, என்னையாளும் அரசனாக வெளிப்பட்டு என் முன் நின்ற அற்புதத்தை எப்படிச் சொல்வேன்!

571) நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து
நான் எனது எனும் மாயக்
கடித்த வாயிலே நின்று முன் வினை மிகக்
கழறியே திரிவேனை
பிடித்து முன் நின்று அப் பெரு மறை தேடிய
அரும்பொருள் அடியேனை
அடித்து அடித்து அக்காரம் முன்
தீற்றிய அற்புதம் அறியேனே. 3

சிவனடியார் போல் நடித்து, இப்பூமியில் பல பொய்யான செயல்களைச் செய்து, நான் எனது என்ற இரட்டை நாக்குப் பாம்புகள் கடிக்க, அந்தக் கடிவாயிலில் நின்று, பழவினைகளைப் பற்றிப் பலவாறு பேசிக்கொண்டு திரிகின்றவன் நான். என்னைக் கீழே விழாமல் பிடித்து, என் முன்னே குருவடிவில் நின்று, வேதங்கள் தேடியலையும் விழுப்பொருளான சிவம், என்னை அடித்து அடித்து, என் வாயில் சர்க்கரைக் கட்டியை ஊட்டிய அற்புதத்தை எப்படிச் சொல்வேன்!

572) பொருந்தும் இப் பிறப்பு இறப்பு இவை நினையாது
பொய்களே புகன்று போய்க்
கருங் குழலினார் கண்களால் ஏறுண்டு
கலங்கியே கிடப்பேனை
திருந்து சேவடிச் சிலம்பு அவை சிலம்பிடத்
திருவொடும் அகலாதே
அருந் துணைவன் ஆய் ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே. 4

செய்த வினைகளுக்கேற்ப உயிரைவந்து சேரக்கூடிய பிறப்பு இறப்பு இவற்றைப்பற்றிய சிந்தனையில்லாமல், பொய்களையே சொல்லி, கரிய கூந்தலையுடைய மகளிர் கண்களாகிய (வேலால்) தாக்கப்பட்டுக் கலக்கத்தோடு கிடக்கும் என்னை ஆட்கொண்டான். தன் சேவடியில் கிடப்பதால் திருத்தமுற்ற சிலம்புகள் ஒலிக்க, திருவருளோடு, என்னைப் பிரியாத அருமையான துணையாகி ஆட்கொண்டான். இந்த அற்புதத்தை அறியும் அளவுக்கு எனக்கு அறிவில்லையே.

573) மாடும் சுற்றமும் மற்று உள போகமும்
மங்கையர் தம்மோடும்
கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடு தந்து என் தன் வெந் தொழில் வீட்டிட
மென் மலர்க் கழல் காட்டி
ஆடுவித்து எனது அகம் புகுந்து ஆண்டது ஓர்
அற்புதம் அறியேனே. 5

செல்வம், உறவு, மற்றுள்ள இன்பங்கள் எல்லா வற்றையும் பெண்களோடு அடைந்து அனுபவித்து, அவ்வவற்றின் குணங்களால் தாக்கப்பட்டு, குலாவித் திரிகின்ற, என்னை, ஆட்கொண்டு வீட்டின்பம் அளித்தான். என்னுடைய தீய தொழில்கள் அழியுமாறு மென்மையான மலரடிகளைக் காட்டி, என்னை இன்பத்தால் ஆடவைத்தான். என் நெஞ்சக்கோயிலில் புகுந்தாண்டான். இந்த ஒப்பற்ற அற்புதத்தை நான் சொல்ல முடியுமா?

574) வணங்கும் இப் பிறப்பு இறப்பு இவை நினையாது
மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாய் இதழ்ப் பெரு வெள்ளத்து அழுந்தி நான்
பித்தனாய்த் திரிவேனைக்
குணங்களும் குறிகளும் இலாக்குணக் கடல்
கோமளத்தொடும் கூடி
அணைந்து வந்து எனை ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே. 6

இறைவனை வணங்குவதற்காகவே கிடைத்த இப்பிறப்பையும் இறப்பையும், அவ்வாறு நினைத்துப் பயன்படுத்தாமல், பெண்களோடு கூடி அவர்கள் வாயில் ஊறும் எச்சில் வெள்ளத்தில் மூழ்கி, பைத்தியக் காரனாய்த் திரிகின்ற என்னை, குணங்களும் அடையாளங்களும் இல்லாத, தானே குணங்களான குணக்கடலான சிவபெருமான், அழகே வடிவான அம்மையொடும் கூடி, என்னை அணுகி வந்து ஆட்கொண்ட அற்புதத்தை என்னென்பேன்?

575) இப் பிறப்பினில் இணை மலர் கொய்து நான்
இயல்பொடு அஞ்சு எழுத்து ஓதி
தப்பிஇலாது பொன் கழல்களுக்கு இடாது நான்
தட முலையார் தங்கள்
மைப்புலாம் கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை
மலர் அடி இணை காட்டி
அப்பன் என்னை வந்து ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே. 7

இந்தப் பிறவியில், சிவவழிபாட்டுக்குப் பொருத்தமான மலர்களை முறைப்படி கொய்து, திருவைந்தெழுத்தை ஓத வேண்டிய முறைப்படி ஓதி, நாள் தவறாமல் இறைவன் பொன்னார் கழல்களில் இட்டு வணங்காமல், பருத்த முலை மங்கையரின் மை பூசப்பெற்ற கண்களால் தாக்கப்பட்டுக் கிடக்கிறேன். எனக்குத் தன் மலர்ப்பதம் காட்டி, என் அப்பன் என்னை ஆண்டுகொண்டு அருள் செய்த அற்புதத்தை எப்படிச் சொல்வேன்?

576) ஊசல் ஆட்டும் இவ் உடல் உயிர் ஆயின
இரு வினை அறுத்து என்னை
ஓசையால் உணர்வார்க்கு உணர்வு அரியவன்
உணர்வு தந்து ஒளி ஆக்கிப்
பாசம் ஆனவை பற்று அறுத்து உயர்ந்த தன்
பரம் பெருங் கருணையால்
ஆசை தீர்த்து அடியார் அடிக் கூட்டிய
அற்புதம் அறியேனே. 8

உடலையும் உயிரையும் பிறவி ஊஞ்சலில் ஆடவைக்கும் நல்வினை தீவினையாகிய சங்கிலிகளை அறுத்தான். ஆசை வடிவான வேதங்களால் உணரலாம் என்பார்க்கும் உணர மாட்டாதவன், எனக்கு ஞான உணர்வு தந்து என்னை ஒளிமயமான பொருள் ஆக்கினான். பாசப்பற்றுக்களை அறுத்து. மிக உயர்வான பெருங்கருணையால், என் ஆசைகளை ஒழித்து அடியார் திருவடிகளோடு இணைத்த அற்புதத்தை எப்படிச் சொல்வேன்?

577) பொச்சை ஆன இப் பிறவியில் கிடந்து நான்
புழுத்து அலை நாய்போல
இச்சை ஆயின ஏழையர்க்கே செய்து அங்கு
இணங்கியே திரிவேனை
இச்சகத்து அரி அயனும் எட்டாத தன்
விரை மலர்க் கழல் காட்டி
அச்சன் என்னையும் ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே. 9

வெட்ட வெட்ட முளைக்கின்ற காடு போல் மண்டிக் கிடக்கும் இப்பிறவியில் சிக்கி, நான், புழுத்து அலைகின்ற நாய் போல, பெண்கள் விரும்பும் செயல்களையே செய்து, அவர்களோடு இணங்கியே திரிகின்ற என்னை, இம்மாயஉலகத்தில், அரியயனும் காணமுடியாத, தன்னுடைய தெய்வமணங்கமழும் திருவடிகளைக் காட்டி, என்னுடைய தந்தையாகிய சிவபெருமான், ஆட்கொண்ட அற்புதத்தை எப்படி அறிந்துரைப்பேன்?

578) செறியும் இப் பிறப்பு இறப்பு இவை நினையாது
செறி குழலார் செய்யும்
கிறியும் கீழ்மையும் கெண்டை அம் கண்களும்
உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லை இல்லாத தன்
இணை மலர்க் கழல் காட்டி
அறிவு தந்து எனை ஆண்டு கொண்டு அருளிய
அற்புதம் அறியேனே. 10

இறைவன் திருவடி கிடைக்கக் காரணமானவை இப்பிறப்பும் இறப்பும் என்று கருதாமல், நெருங்கிய கூந்தலையுடைய பெண்கள் செய்யும்பொய்மிக்க கீழான செயல்களையும் கெண்டைமீன் போன்ற கண்களையும் நினைத்துக் கொண்டே கிடக்கின்ற என்னை, யாவர்க்கும் இறைவனும், என் தலைவனும், ஆகிய சிவபெருமான், எல்லை காணமுடியாத, தன்னுடைய திருவடித் தாமரைகளைக் காட்டி, அவனையறியும் ஞானமளித்து, ஆண்டுகொண்ட அற்புதத்தை எப்படி அறிந்துரைப்பேன்?

42. சென்னிப்பத்து

திருப்பெருந்துறையில் அருளியது அறுசீர்ஆசிரியவிருத்தம்

(சிவபெருமான் திருவடிகளைத் தன்தலைமேல் சூடி அவை என்றும் அகலாது அங்கேயே இருப்பதைப் பாடுவது. திருவடிப் பேறே சிவப்பேறு. எனவே இது சிவனால் சென்னியில் விளைந்த சிவவிளைவு ஆகும்)

579) தேவ தேவன் மெய்ச் சேவகன்
தென் பெருந்துறை நாயகன்
மூவராலும் அறி ஒணா முதல்
ஆய ஆனந்த மூர்த்தியான்
யாவராயினும் அன்பர் அன்றி
அறி ஒணா மலர்ச் சோதியான்
தூய மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னிச் சுடருமே. 1

தேவர்களுக்கெல்லாம் தேவன். (சிறப்பான படைகளின்றிச் சிரித்தே புரமெரித்த) உண்மையான வீரன். திருப்பெருந் துறைத்தலைவன். பிரமன் திருமால் உருத்திரன் மூவரும் அறிய முடியாத முதல்வன். பேரின்ப வடிவான மூர்த்தி, அன்பர்களைத் தவிர வேறு யாராலும் அறிய ஒண்ணாத மலரொளி போன்றவன். அவனுடைய தூய்மை தரும் மலர்த்திருவடிகளின் கீழ், நம் தலை நிலைபெற்று ஒளிரட்டும்.

580) அட்ட மூர்த்தி அழகன் இன் அமுது
ஆய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச் சிவலோக நாயகன்
தென் பெருந்துறைச் சேவகன்
மட்டு வார் குழல் மங்கையாளை ஓர்
பாகம் வைத்த அழகன் தன்
வட்ட மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 2

ஐந்து பூதங்களும் கதிரவன் சந்திரன் உயிர் ஆகியவையும் தன் வடிவானவன், நினைப்பிற்கும் இனிக்கும் அழகன், இனிய அமுது போன்ற பேரின்ப வெள்ளமானவன், எல்லோரையும் கற்பிப்பவன், அழிவற்ற சிவலோகத்தலைவன், திருப்பெருந்துறை வீரன், தேனொழுகும் கூந்தலையுடைய உமையவளை ஒரு பாகத்தில் வைத்தவன், அதனால் மேலும் அழகானவன், அவனுடைய வட்டமான மலரடிக்கீழ் நம் தலை நிலை பெற்று விளங்கட்டும்.

581) நங்கைமீர் எனை நோக்குமின் நங்கள்
நாதன் நம் பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ் பெருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கைமார் கையில் வளையும் கொண்டு எம்
உயிரும் கொண்டு எம் பணி கொள்வான்
பொங்கு மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னிப் பொலியுமே. 3

பெண்களே! என்னைப்பாருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். நம்முடைய தனித்தலைவன், நம்மை அடிமைகளாகக் கொண்டவன். தென்னை மரச் சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையில் உள்ள வீரன், நமக்கு ஆன்மநாயகன், நம்மைப் போன்ற பெண்களின் கையில் உள்ள வளைகளைப் பறித்துக் கொண்டு, நம் உயிரையும் கொள்ளை கொண்டு, நம் பணிகளை ஏற்றுக் கொள்வான். தேன் பொங்கும் அவனுடைய செந்தாமரைத் திருவடிகளில் நம் தலை நிலைபெற்றுப் பொலிவுறட்டும்.

582) பத்தர் சூழப் பரா பரன்
பாரில் வந்து பார்ப்பான் எனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடம் செய்வான்
எத்தன் ஆகி வந்து இல் புகுந்து எமை
ஆளுங் கொண்டு எம் பணி கொள்வான்
வைத்த மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 4

அடியார்கள் புடைசூழ, மேலானவர்க்கெல்லாம் மேலான சிவபெருமான், இம்மண்ணில் அந்தணக் கோலத்தில் குருநாதனாக

வந்தான். பிறகு சித்தர்கள் எல்லாரும் சூழ்ந்திருக்கத் தில்லை என்ற பழைய ஊரில் நடனக் கோலம் காட்டினான். பெரிய தந்திரக்காரனாக, வந்து, என் வீட்டில் புகுந்தான். என்னை மனைவியாக்கிக் கொண்டான். என் பணிகளை ஏற்றுக் கொண்டான். அவன் என் தலையில் சூட்டிய மலர்ப்பாதங்களில், என் தலை நிலைபெற்று மலர்ந்திருக்கிறது.

583) மாய வாழ்க்கையை மெய் என்று எண்ணி
மதித்திடா வகை நல்கினான்
வேய தோள் உமை பங்கன் எங்கள்
திருப்பெருந்துறை மேவினான்
காயத்துள் அமுது ஊற ஊற நீ
கண்டு கொள் என்று காட்டிய
சேய மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 5

தோன்றி மறையும் பொய்யான உலக வாழ்க்கையை நிலையென்றெண்ணி, அதனைப் பாராட்டாத அறிவை எனக் களித்தான். மூங்கில் போன்ற தோள்களை உடைய உமையவளைப் பங்கில் உடையவன். எங்களுக்கு அருள் புரியத் திருப்பெருந்துறையில் எழுந்தருளியவன். அருளாகிய அமுத வெள்ளத்தில் என்னுடம்பை அமிழ்த்தினான். அமுது உடம்பில் ஊற ஊற, நீ என்னைக் கண்டு கொள்வாய் என்று காட்டினான். அவனுடைய சிவந்த மலர்த் திருவடிகளில், என் தலை நிலையான மலர்ச்சி பெறுவதாக!

584) சித்தமே புகுந்து எம்மை ஆட்கொண்டு
தீவினை கெடுத்து உய்யல் ஆம்
பத்தி தந்து தன் பொன் கழற்கணே
பன் மலர் கொய்து சேர்த்தலும்
முத்தி தந்து இந்த மூஉலகுக்கும்
அப்புறத்து எமை வைத்திடும்
அத்தன் மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 6

தித்திக்குமாறு சித்தம் புகுந்து எம்மை ஆண்டு கொண்டான். தீவினைகளை அழித்தான். நாம்உய்ந்து போகத் தேவையான பக்தியுணர்வைத் தந்தான். அதனால் அவனுடைய பொன்னார் திருவடிகளில் நாம் பலமலர்சூட்டி வழிபட்டதும் அழியாத முத்தியின்பம்

தந்தான். மூன்றுலகங்களுக்கும் அப்பாலுள்ள பேரின்ப உலகத்தில் நம்மை வைத்தான். இவ்வளவும் செய்த எந்தையாகிய சிவபெருமான் திருவடி மலர்களில் எம்தலை நிலைபெற்றிருக்கட்டும்

585) பிறவி என்னும் இக் கடலை நீந்தத் தன்
பேர் அருள் தந்துஅருளினான்
அறவை என்று அடியார்கள் தங்கள்
அருள் குழாம் புகவிட்டு நல்
உறவு செய்து எனை உய்யக் கொண்ட
பிரான் தன் உண்மைப் பெருக்கம் ஆம்
திறமை காட்டிய சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 7

பிறவிக்கடலை நீந்திக் கடக்கத் தன் பேரருள் தந்து அருள் செய்தான். நான் துணையற்றவன் என்றறிந்து, தன் அடியார்களின் திருவருட் கூட்டத்தில் புகச் செய்தான். அவர்களோடு நெருக்கமான உறவை உண்டாக்கினான். என்னை உய்யச் செய்தான். அவனுடைய, அழியாத, வளரக்கூடிய வல்லமை காட்டிய திருவடிகளில் எம்தலை நிலைபெற்று மலரட்டும்.

586) புழுவினால் பொதிந்திடு குரம்பையில்
பொய் தனை ஒழிவித்திடும்
எழில் கொள் சோதி எம் ஈசன் எம் பிரான்
என்னுடை அப்பன் என்று என்று
தொழுத கையினர் ஆகித் தூ மலர்க்
கண்கள் நீர் மல்கு தொண்டர்க்கு
வழுவுஇலா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே. 8

புழுக்களால் நிறைக்கப் பட்டுள்ள உடம்பில், அறியாமையான பொய்யை நீக்கும் அழகிய பேரொளி, எங்கள் ஈசன், எம் தலைவன், என்னை உடைய அப்பன் என்று பலவாறு போற்றி, தொழுகின்ற கையராகித் தூய்மையான மனத்தைக் காட்டும் மலர்க்கண்களில் நீர்மல்க, நிற்கும் அடியார்களுக்கு, என்றும் நழுவிப் போகாத திருவடித்தாமரைகளில் நம் தலை நிலையாக மலர்வதாக!

587) வம்பனாய்த் திரிவேனை வா என்று
வல் வினைப் பகை மாய்த்திடும்
உம்பரான் உலகு ஊடு அறுத்து அப்
புறத்தன் ஆய் நின்ற எம்பிரான்
அன்பர் ஆனவர்க்கு அருளி மெய்
அடியார்கட்கு இன்பம் தழைத்திடும்
செம் பொன் மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 9

வம்புரை பேசிய வீணனாகிய என்னை வா என்றழைத்து, வலிய வினைகளாகிய பகைகளையெல்லாம் அழித்த தேவன், உலகங்கள் எல்லாவற்றையும் கடந்து அப்பாலுக்கப்பாலாய் நின்ற எம் தலைவன், அன்பு செய்வார்க்கு அருள்செய்பவன், மெய்யடியர்களுக்கு இன்பம் மேலும் மேலும் வளரச்செய்பவன், அவனுடைய செம்பொன் நிறத்திருவடித்தாமரைகளில் நம் தலை நிலைபெற்றுத் திகழ்வதாக.

588) முத்தனை முதல் சோதியை முக் கண் அப்பனை
முதல் வித்தினை,
சித்தனைச் சிவலோகனைத் திருநாமம்
பாடித் திரிதரும்
பத்தர்காள் இங்கே வம்மின் நீர் உங்கள் பாசம்
தீரப் பணிமினோ
சித்தம் ஆர் தரும் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே. 10

இயல்பாகவே மலங்களிலிருந்து விடுபட்டவன், எல்லாச் சோதிகளுக்கும் ஒளிதரும் முதல் சோதியானவன், மூன்று கண்கள் கொண்ட என்னப்பன், எல்லாவற்றுக்கும் வித்தாகி இருப்பவன், சித்திகளில் வல்லவன், சிவலோகத்திருப்பவன், அவன் திருப் பெயர்களை வாயாரப் பாடித் திரிபவர்களே! பக்தர்களே! இங்கே வாருங்கள். நீங்கள் பாசக்கட்டு அற்றுப் போக அவனைப் பணியுங்கள். மனமெல்லாம் நிறைந்திருக்கும் அவனுடைய திருவடிகளில் நம் தலை நிலைபெற்றுத் திகழ்வதாக!

43. திருவார்த்தை

திருப்பெருந்துறையில் அருளியது எண்சீர் ஆசிரிய விருத்தம்

(உன் தலைவன் யார் என்று ஒருத்தி கேட்க, மற்றவள் சிவனடியாரே எம் தலைவர் என்று பதில் வார்த்தை (சொல்) உரைப்பது. இது இறைவனை அறிவித்து மேலும் அன்புறுதலாகும்)

589) மாது இவர் பாகன் மறை பயின்ற
வாசகன் மா மலர் மேய சோதி
கோது இல் பரங் கருணை அடியார்
குலாவும் நீதி குணம் ஆய நல்கும்
போது அலர் சோலைப் பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே. 1

உமையவள் விளங்கும் இடப்பாகத்தை உடையவன், வேதங்களாகவே வெளிப்படும் வார்த்தைகளை உடையவன், மனத் தாமரையில் எழுந்தருளும் சோதிவடிவினன், குற்றமற்ற பெருங் கருணையானவன், அடியார்கள் பேசிமகிழும் நீதியையே அவர்களுக்குக் குணமாகத் தருபவன், பூக்கள் மலரும் சோலைகள் மிக்க திருப்பெருந் துறையில் எழுந்தருளிய புண்ணியன், இம்மண்ணில் இறங்கி வந்து முழுமுதற்கடவுள் சிவமே என்று வெளிப்படுத்தினான். இந்த அருள் அறிந்த சிவஞான மிக்கவரே எம் தலைவர் ஆவார்.

590) மால் அயன் வானவர் கோனும் வந்து
வணங்க அவர்க்கு அருள் செய்த ஈசன்
ஞாலம் அதனிடை வந்திழிந்து
நல் நெறி காட்டி நலம் திகழும்
கோல மணி அணி மாடம் நீடு
குலாவும் இடைவை மட நல்லாட்கு
சீலம் மிகக் கருணை அளிக்கும்
திறம் அறிவார் எம்பிரான் ஆவாரே. 2

திருமாலும் நான்முகனும் வானவர் தலைவனான இந்திரனும் வந்து வணங்க, அவர்கள் பகையொழிய அருள் செய்த தேவதேவன், இந்த மண்ணுலகிற்கு இறங்கிவந்து, நல்வழியை காட்டி, நலமிக்கதும், அழகான மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மாடங்கள் உயர்ந்து

விளங்குவதுமான திருவிடை மருதூரில், இளம்பெண் ஒருத்திக்கு ஒழுக்கம் மிகுதியாகும் படி கருணைசெய்த தன்மையை அறிந்தவரே எங்கள் தலைவர் ஆவார். (இப்பாடலில் அடிகள் ஒரு சிறந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். தான் பெற்ற எதையும் சிவபெருமானுக்கு அளிக்கும் வரகுணபாண்டியன், திருமணநாள் இரவில், தன் அழகான மனைவியைத் திருவிடை மருதூரில் ஆலயக் கருவறையில் விட்டுவந்தான். மறுநாள் காலையில், அவன் தொட்ட வலக்கரம் மட்டும் மேலே தெரிய எஞ்சிய உடம்பு சிவலிங்கத்துக்குள் மறைந்திருந்தது. பின்னர் மன்னன் வேண்டப் பெருமான் கரத்தையும் ஏற்றார். அரசியின் கற்பொழுக்கம் தோன்றக் கையை மட்டும் விட்டு, அவளுக்கு வீடு தந்தது இப்பாடலில் குறிக்கப்படுகிறது)

591) அணி முடி ஆதி அமரர் கோமான்
ஆனந்தக் கூத்தன் அறு சமயம்
பணி வகை செய்து படவு அது ஏறிப்
பாரொடு விண்ணும் பரவி ஏத்தப்
பிணி கெட நல்கும் பெருந்துறை எம்
பேர் அருளாளன் பெண் பால் உகந்து
மணி வலை கொண்டு வான் மீன் விசிறும்
வகை அறிவார் எம்பிரான் ஆவாரே. 3

அழகிய சடைமுடியை உடைய முதல்வன், தேவர்கள் தலைவன். ஆனந்தக் கூத்தாடி அறுவகைச் சமயங்களும் தம்மைப் பணியச் செய்தவன், பிறவிப் பிணி கெடச் செய்யும் பெருந்துறைப் பெருங் கருணையாளன், அன்று படகில் ஏறி, வலைஞர் வீட்டில் பிறந்த உமாதேவியை மணக்க விரும்பி, அழகிய வலையை ஏந்தி, பெரிய சுறாமீனை வீசிப் பிடித்த வகையினை அறிபவரே எங்கள் தலைவர் ஆவார்.

592) வேடு உரு ஆகி மகேந்திரத்து
மிகு குறை வானவர் வந்து தன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்து அடியோங்கள் உய்ய
ஆடல் அமர்ந்த பரிமா ஏறி
ஐயன் பெருந்துறை ஆதி அந்நாள்
ஏடர்களை எங்கும் ஆண்டுகொண்ட
இயல்பு அறிவார் எம்பிரான் ஆவாரே. 4

மகேந்திர மலையில் ஆகமங்களைத் தோற்று விப்பதற்காக, வேடன் உருவில் வந்து, மிக்க குறைகளை உடைய தேவர்கள் வந்து தன்னைத்தேடுமாறு மறைந்திருந்த சிவபெருமான், அவனடியே சிந்திக்கும் அடியார்களாகியநாங்கள் உய்ய, ஆட்டத்தை விரும்பும் குதிரைமேலேறி, எம் தலைவனும் திருப்பெருந்துறை முதல்வனும் ஆனவன், அந்த நாளில், தொண்டர்களாகிய தோழர்களை ஆட்கொண்ட தன்மையை அறிபவரே எங்கள் தலைவர் ஆவார்.

593) வந்து இமையோர்கள் வணங்கி ஏத்த
மாக் கருணைக் கடல் ஆய் அடியார்
பந்தனை விண்டு அற நல்கும் எங்கள்
பரமன் பெருந்துறை ஆதி அந்நாள்
உந்து திரைக் கடலைக் கடந்து அன்று
ஓங்கு மதில் இலங்கை அதனில்
பந்தணை மெல் விரலாட்கு அருளும்
பரிசு அறிவார் எம்பிரான் ஆவாரே. 5

இமைக்காத தேவர்கள் தன்னை வணங்கித் துதிக்க, பெருங்கருணைக்கடலாய், மெய்யடியார்களின் பாசங்களை ஒழித்து ஞானமளிக்கும் எங்கள் பரம்பொருளான திருப்பெருந்துறை முதல்வன், முன்னாளில், அலைமோதும் கடல்கடந்து, உயர்ந்த மதில்கள் சூழ்ந்த இலங்கை நகரில், பந்து வந்து பொருந்தும் மெல்லிய விரல்களை உடைய மண்டோதரிக்கு அவள் விரும்பியபடி குழந்தை வடிவில் காட்சியளித்து அருள்செய்த தன்மையை அறிபவர்களே எம் தலைவர் ஆவார்.

594) வேவத் திரிபுரம் செற்ற வில்லி
வேடுவன் ஆய்க் கடி நாய்கள் சூழ
ஏவல் செயல் செய்யும் தேவர் முன்னே
எம் பெருமான் தான் இயங்கு காட்டில்
ஏ உண்ட பன்றிக்கு இரங்கி ஈசன்
எந்தை பெருந்துறை ஆதி அன்று
கேவலம் கேழல் ஆய்ப் பால் கொடுத்த
கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே. 6

தீயில் வெந்தழியுமாறு திரிபுரம் எரித்த வில்லாளன், எம்பெருமானும் ஈசனும் எந்தையுமான திருப்பெருந்துறை முதல்வன், அந்நாளில், தனக்குக் குற்றேவல்பணி புரியும் தேவர்கள் முன்னால்,

தானொரு வேடனாகி, வேட்டை நாய்கள் சூழக்காட்டில் சென்றான். அப்போது வேறொரு வேடனின் அம்புபட்டிறந்த தாய்ப்பன்றிக்கு இரங்கி, இழிந்த தாய்ப்பன்றியாய்த் தானே மாறிப் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த திருவுள்ளக் கிடக்கையை அறிய வல்லவர் எம் தலைவர் ஆவார்.

595) நாதம் உடையது ஓர் நல் கமலப்
போதினில் நண்ணிய நல் நுதலார்
ஓதிப் பணிந்து அலர் தூவி ஏத்த
ஒளி வளர் சோதி எம் ஈசன் மன்னும்
போது அலர் சோலைப் பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிடை வந்து தோன்றி
பேதம் கெடுத்து அருள்செய் பெருமை
அறிய வல்லார் எம்பிரான் ஆவாரே. 7

நாதத்தோடு கூடிய ஒப்பற்ற நல்ல தாமரை மலர்களில் இருக்கும் திருமகளும் கலைமகளும் மந்திரங்களை ஓதி வழிபட்டு மலர்களால் அருச்சனை செய்ய, ஒளிமிகுந்த சோதியான எங்கள் இறைவன், நிலையான பூஞ்சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறைப் புண்ணியன், இம்மண்ணில் தோன்றித் திருவாரூரில் திருமகளுக்கும் திருக்கண்டியூரில் கலைமகளுக்கும் அவர்கள் சிவ சீவ வேற்றுமைகளைப் போக்கி அருள் வழங்கிய பெருமையை அறியவல்லவரே எம் தலைவர் ஆவார்.

596) பூ அலர் கொன்றை அம் மாலை மார்பன்
போர் உகிர் வன் புலி கொன்ற வீரன்
மாது நல்லாள் உமை மங்கை பங்கன்
வண் பொழில் சூழ் தென் பெருந்துறைக்கோன்
ஏதில் பெரும் புகழ் எங்கள் ஈசன்
இரும் கடல் வாணற்குத் தீயில் தோன்றும்
ஓவிய மங்கையர் தோள் புணரும்
உருவு அறிவார் எம்பிரான் ஆவாரே. 8

மலர்ந்த கொன்றை மாலையை மார்பில் அணிந்தவன், போர் செய்யும் நகங்களைஉடைய வலிய புலியைக் கொன்ற வீரன், பெண்ணின் நல்லாளாகிய உமையொரு பாகன், வனமிக்க பொழில் சூழ்ந்த திருப்பெருந்துறை மன்னவன், குற்றமற்ற பெரும்புகழ் கொண்டவன், எங்கள் இறைவன், கடலால் வாழும் வலைஞர்களுக்கு,

வேள்வித்தீயில் தோன்றிய சித்திரம் போன்ற உமையம்மையை மணந்து கொண்ட திருவுருவச் செம்மையை அறிபவர்களே எம் தலைவர் ஆவர்

597) தூ வெள்ளை நீறு அணி எம் பெருமான்
சோதி மகேந்திர நாதன் வந்து
தேவர் தொழும் பதம் வைத்த ஈசன்
தென்னன் பெருந்துறை ஆளி அன்று
காதல் பெருகக் கருணை காட்டி
தன் கழல் காட்டிக் கசிந்து உருகக்
கேதம் கெடுத்து என்னை ஆண்டருளும்
கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே. 9

தூய்மையான வெண்ணீறணிந்த பெருமான், ஒளிமிக்க மகேந்திர மலைத்தலைவன், தானே வலிய வந்து, தேவர்கள் தொழும் திருவடியை என்தலை மேல் வைத்த ஈசன், பாண்டியன், திருப்பெருந்துறையிலிருந்து ஆள்பவன், என்குருநாதனாக வந்த அந்நாளில் அவன் மீது காதல் மிகும் வண்ணம் கருணைகாட்டினான், தன் திருவடிகாட்டினான். நான்மனம் கசிந்து உருகினேன். என் துன்பங்களை நீக்கி என்னையாட்கொண்டான். இந்தத் திருவுள்ளக் கிடக்கை அறிந்தவரே எங்கள் தலைவர் ஆவார்.

598) அங்கணன் எங்கள் அமரர் பெம்மான்
அடியார்க்கு அமுதன் அவனி வந்த
எங்கள் பிரான் இரும் பாசம் தீர
இகபரம் ஆயது ஓர் இன்பம் எய்தச்
சங்கம் கவர்ந்து வண் சாத்தினோடும்
சதுரன் பெருந்துறை ஆளி அன்று
மங்கையர் மல்கு மதுரை சேர்ந்த
வகை அறிவார் எம்பிரான் ஆவாரே. 10

கண்ணோட்டம் மிக்க கண்ணழகன், தேவர் பெருமான், அடியவர் உண்ணும் அமுதம் அனையவன், எங்களைத் தேடி இம்மண்ணுக்கு வந்த எம் தலைவன், எங்களைப் பற்றியுள்ள பெரிய பாசம் அகலவும், நாங்கள் இம்மையிலும் மறுமையிலும் இன்பமெய்தவும் எங்கள் கைகளில் உள்ள சங்கு வளையல்களைக் கொள்ளை கொண்டான். வணிகப் பொருள் மிகுதியாக உடைய கூட்டத்தோடு, அந்தச் சாமர்த்திய சாலி, பெருந்துறைத் தலைவன், வளையல் விற்பவன் போல், பெண்கள் நிறைந்த மதுரைக்கு அவர்கள் வளையல்களையும் கொள்ளை கொள்ளப் போய்ச் சேர்ந்தான். இப்படி அவன் அருள்புரியும் வழிவகைகளை அறிந்தவரே எம் தலைவர் ஆவார்.

44. எண்ணப் பதிகம்

தில்லையில் அருளியது ஆசிரிய விருத்தம்

(ஒழியாத இன்பத்தால் என்றும் உவகையுடன் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கூறி இறைவனிடம் வேண்டுவது இப்பதிகம். இதில் ஆறு பாடல்களே உள்ளன)

599) பார் உரு ஆய பிறப்பு அற வேண்டும்
பத்திமையும் பெற வேண்டும்
சீர் உரு ஆய சிவபெருமானே
செங் கமல மலர் போல்
ஆர் உரு ஆய என் ஆர் அமுதே உன்
அடியவர் தொகை நடுவே
ஓர் உரு ஆய நின் திருவருள் காட்டி
என்னையும் உய்யக் கொண்டருளே. 1

மெய்ப்புகழையே உருவமாகக் கொண்ட சிவபெருமானே! செந்தாமரை போலப் பொருந்திய திருமேனியுடையவனே! உண்ணத்தக்க அமுதமே! இந்த உலகத்தில் ஐம்பூதக் கூட்டால் வந்த பிறப்பு ஒழிய வேண்டும். அதற்குத் தேவையான சிவபக்தியைப் பெற வேண்டும். அந்தப்பக்தி வளர, உன் அடியார் கூட்டத்தின் நடுவில் ஒப்பற்ற உருவான உன் திருவருளைக் காட்டி, என்னையும் உய்தி பெறும்படி சேர்த்துக் கொண்டருள வேண்டும்.

600) உரியேன் அல்லேன் உனக்கு அடிமை
உன்னைப் பிரிந்து இங்கு ஒரு பொழுதும்
தரியேன் நாயேன் இன்னது என்று
அறியேன் சங்கரா கருணையினால்
பெரியோன் ஒருவன் கண்டு கொள் என்று உன்
பெய் கழல் அடி காட்டிப்
பிரியேன் என்று என்று அருளிய அருளும்
பொய்யோ எங்கள் பெருமானே. 2

சுகமளிக்கும் பெருமானே! உனக்கு அடிமையாகும் (தகுதியால் பெற்ற) உரிமை எனக்கில்லை என்றாலும் உன்னைப் பிரிந்து ஒரு சிறுபொழுதும் தங்கமாட்டேன். இதன் காரணம் என்ன வென்றும் அறிய மாட்டேன். என் குருநாதனாக வந்த ஒரு பெரியவர் " தம்பி இதனைக்

கண்டுகொள்" என்று உன்னுடைய கழலணிந்த திருவடிகளைக் காட்டி, உன்னை விட்டுப்பிரியேன் என்று பலமுறை கூறினாரே அந்த அருள் இப்பொழுது பொய்யாகி விட்டதா? எனக்குத் தெரியவில்லையே.

601) என்பே உருக நின் அருள் அளித்து உன்
இணை மலர் அடி காட்டி
முன்பே என்னை ஆண்டுகொண்ட
முனிவா முனிவர் முழு முதலே
இன்பே அருளி எனை உருக்கி
உயிர் உண்கின்ற எம்மானே
நண்பே அருளாய் என் உயிர்
நாதா நின் அருள் நாணாமே 3

என்னுடைய எலும்புகள் எல்லாம் உருகுமாறு திருவருள் தந்து, உன் திருவடித்தாமரை இரண்டையும் காட்டி, என்னை ஆட்கொண்ட காலத்திலேயே அருளிய முனிவனே! முனிவர் அனைவருக்கும் முதல்வனே! துன்பக்கலப்பிலா இன்பத்தைத் தந்து என் மனம் உருக்கி என் உயிரையும் உண்ணும் எம்மானே! என்னுயிர்த் தலைவனே! உன் திருவருள் (நம்மால் உதவமுடியவில்லையே என்று) நாணப்படாமல், உன் நட்பையே எனக்குத் தந்தருள்வாயாக!

602) பத்து இலன் ஏனும் பணிந்திலன் ஏனும் உன்
உயர்ந்த பைம் கழல் காணப்
பித்து இலன் ஏனும் பிதற்றிலன் ஏனும்
பிறப்பு அறுப்பாய் எம்பெருமானே
முத்து அனையானே மணி அனையானே
முதல்வனே முறையோ என்று
எத்தனை யானும் யான் தொடர்ந்து உன்னை
இனிப் பிரிந்து ஆற்றேனே. 4

எம்பெருமானே! நான் உன்பால் பற்றில்லாதவன் ஆயினும், உன்னைப் பணியாதவன் என்றாலும், எல்லாவற்றையும் விட உயர்ந்த உன்னுடைய பசுமையான திருவடிகளைக் காண வேண்டுமென்ற பித்தில்லாதவன் ஆயினும், உன் திருநாமம் கூறிப் பிதற்றாதவன் ஆயினும் என் பிறவியை அறுத்தருள்செய்வாய். முத்துப் போன்றவனே! மாணிக்க மணியை ஒத்தவனே! முதலானவனே! உன் செயல் முறையானதா வென்று, எப்படியேனும் உன்னைத் தொடர்ந்து

வருவேனே தவிர, இனிப்பிரிந்திருக்க முடியாதவன் ஆகிவிட்டேன். பிரிந்தால் ஆற்றமாட்டேன்.

603) காணும் அது ஒழிந்தேன் நின் திருப்பாதம்
கண்டு கண் களி கூரப்
பேணும் அது ஒழிந்தேன் பிதற்றும் அது ஒழிந்தேன்
பின்னை எம்பெருமானே
தாணுவே அழிந்தேன் நின் நினைந்து உருகும்
தன்மை என் புன்மைகளால்
காணும் அது ஒழிந்தேன் நீ இனி வரினும்
காணவும் நாணுவனே. 5

எம்பெருமானே! நிலையான நடுதறியே! உன்னைப் பிரிந்த பிறகு, உன் திருவடிகளைக் காண்பதை விட்டுவிட்டேன். அவற்றைக் கண்டு கண்கள் களிக்க வணங்குவதை விட்டுவிட்டேன். அவற்றைப் பேசிப் பிதற்று வதை விட்டுவிட்டேன். இதனால் நான் அழிந்தே போனேன். என் இழிவான தன்மையால் உன்னையே நினைத்து உருகுவதை விட்டுவிட்டேன். உன் திருவருளைக் காண்பதையும் இழந்தேன். இனி நீயே வந்தாலும் உன்னைக் காண்பதற்கு மிகமிக வெட்கப்படுவேன்.

604) பால் திரு நீற்று எம் பரமனைப்
பரம் கருணையோடும் எதிர்ந்து
தோற்றி மெய் அடியார்க்கு அருள் துறை அளிக்கும்
சோதியை நீதி இலேன்
போற்றி என் அமுதே என நினைந்து ஏத்திப்
புகழ்ந்து அழைத்து அலறி என் உள்ளே
ஆற்றுவன் ஆக உடையவனே எனை
ஆவ என்று அருளாயே. 6

பால்போன்ற நீறுபூசிய பரமன், மேலான கருணை உள்ளத்தோடு, தானே எதிரில்வந்து தோன்றி, மெய்யடியார்களுக்கு அருளாகிய துறையைக் கொடுக்கும் சோதி. இத்தகைய பெருமானை, நீதியற்ற நான், என்னமுதமே போற்றி என்ற பலகால் நினைந்து வாழ்த்திப் புகழ்ந்து அழைத்து, கூவி, எனக்குள்ளேயே ஆறுதல் கூறிக்கொண்டு இருக்கிறேன். என்னை உடையவனே! என் நிலைக்கிரங்கி என்னை நோக்கி, ஆ! வா! என்று அருள்புரிய வேண்டும் என் அப்பனே!

45. யாத்திரைப் பத்து

தில்லையில் அருளியது அறுசீர் ஆசிரிய விருத்தம்

(பிறவியை விட்டுத் திருவடி சேரும் காலம் வந்தது என்று எல்லோரையும் அழைத்துக் கொண்டு யாத்திரை போவதைக் குறிப்பது இப்பத்து. இறைவனோடு இரண்டறக் கலப்பதை இது உணர்த்துகிறது)

605) பூ ஆர் சென்னி மன்னன் எம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து உணர்வு ஆய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆவா என்னப்பட்டு அன்பாய்
ஆட்பட்டீர் வந்து ஒருப்படுமின்
போவோம் காலம் வந்தது காண்
பொய் விட்டு உடையான் கழல் புகவே. 1

பூக்கள் நிறைந்த திருமுடி உடைய பேரரசன், பாம்பை அணிந்த எம்பெருமான், மிகச் சிறியவர்களாகிய நம்மை, இடைவிடாமல் நம் உள்ளத்தில் கலந்து, உணர்வேயாகி உருகவைப்பவன் அவனுடைய வெள்ளம் போன்ற கருணையினால் ஆ! வா என்று அவனால் அழைக்கப்பட்டு, அவன் மேல் கொண்ட அன்பினால் அவனுக்கு ஆளானமெய்யடியார்களே! வந்து சேருங்கள். பொய்யுலக வாழ்வை விட்டு, நம்மை உடைய பெருமான் திருவடியில் போய்ச் சேருவதற்கான பொற்காலம் வந்துவிட்டது.

606) புகவே வேண்டா புலன்களில் நீர்
புயங்கப் பெருமான் பூங் கழல்கள்
மிகவே நினைமின் மிக்க எல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத்து உள் புகுந்து
நாயே அனைய நமை ஆண்ட
தகவே உடையான் தனைச் சாரத்
தளராது இருப்பார் தாம் தாமே. 2

ஐம்புல இன்பங்களில் நீங்கள் சிக்கிக் கொள்ள வேண்டாம். பாம்பணிந்த பெருமானுடைய மலரடிகளையே மிகவும் நினையுங்கள். மற்றவையெல்லாம் உங்களுக்கு வேண்டாம். அவற்றைப் போகுமாறு

விட்டுவிடுங்கள். ஊர்மக்கள் நகை செய்யுமாறு, இந்த உலகத்துக்குள் புகுந்து, நாய் போன்ற நம்மை ஆட்கொண்ட தகுதிமிக்க பெருமான் திருவடிகளைச் சேர, அவரவர்களும் தளராமல் முயன்று கொண்டிருக்கிறார்கள். நீங்களும் முயலுங்கள்.

607) தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதி வகையும்
யாம் ஆர் எமது ஆர் பாசம் ஆர்
என்ன மாயம் இவை போகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன் தன் குறிப்பே குறிக்கொண்டு
போம் ஆறு அமைமின் பொய் நீக்கிப்
புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே. 3

சிவனடியார்களுக்குச் சிவபெருமானே உறவாவான். அவனே நமக்கு விதிசெய்பவன். எனவே நாம் யார்? நம்முடைய தாகப் பேசப்படுபவர் யார்? நம்மைக்கட்டும் பாசங்கள் யார்? இவை என்ன மாயம்! இவையனைத்தும் போகுமாறு, நம் தலைவன் சிவபெருமான், பழைய தொண்டரோடு, சேருங்கள். சிவனுடைய திருவுள்ளக் குறிப்பையே குறிக்கோளாகக் கொண்டு, இப்பொய் வாழ்வை விட்டுப் பாம்பணிந்த பெருமான், நம்மை ஆள்பவன் பொன்னடிக்கே சென்று சேர ஒருப்படுங்கள்.

608) அடியார் ஆனீர் எல்லீரும்
அகல விடுமின் விளையாட்டை
கடி சேர் அடியே வந்தடைந்து
கடைக் கொண்டு இருமின் திருக் குறிப்பைச்
செடி சேர் உடலைச் செல நீக்கிச்
சிவலோகத்தே நமை வைப்பான்
பொடி சேர் மேனிப் புயங்கன் தன்
பூ ஆர் கழற்கே புக விடுமே. 4

அடியவர்களே! எல்லோரும் பயனற்ற விளையாட்டுத் தனமான செயல்களை, அகன்று செல்லுமாறு விட்டுவிடுங்கள். நமக்கெல்லாம் அரணாக இருக்கின்ற, தூக்கிய திருவடியை அடையுங்கள். அவன் திருவுள்ளக் குறிப்பையே பற்றிக் கொள்ளுங்கள். அழுக்குச் சேரும் இந்த உடம்பை நீக்கிச் சிவலோகத்தில் நாம் இருக்கச் செய்வான்.

திருநீறணிந்த திருமேனியன் பாம்பணிந்த பரமன் அவனுடைய பூப்போன்ற திருவடியில் நாம் சேர வைப்பான்.

609) விடுமின் வெகுளி வேட்கை நோய்
மிக ஓர் காலம் இனி இல்லை
உடையான் அடிக்கீழ் பெரும் சாத்தோடு
உடன் போவதற்கே ஒருப்படுமின்
அடைவோம் நாம்போய்ச் சிவபுரத்துள்
அணி ஆர் கதவு அது அடையாமே
புடைபட்டு உருகிப் போற்றுவோம்
புயங்கன் ஆள்வான் புகழ்களையே. 5

மெய்யன்பர்களே! கோபத்தையும் ஆசையையும் அதனால் வரும் துன்பத்தையும் விட்டுவிடுங்கள். இதை விட நல்ல காலம் இனிவரப்போவதில்லை. நம்மையுடையவன் திருவடிகளின் கீழ், பெரிய அடியார் கூட்டத்தோடு இணைந்து செல்ல ஒன்றுபடுங்கள். திருக்கயிலையின் அழகான கதவுகள் அடைக்கப்படுமுன், நாம் அங்கே போய்ச் சேர்ந்து விடுவோம். கயிலையின் பக்கத்தில் நின்று, நம்மை ஆள்பவனும் பாம்பணிந்தவனுமாகிய பெருமான் புகழை மனம் உருகிப் போற்றுவோம்.

610) புகழ்மின் தொழுமின் பூப் புனைமின்
புயங்கன் தாளே புந்தி வைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லையும்
இனி ஓர் இடையூறு அடையாமே
திகழும் சீர் ஆர் சிவபுரத்துச்
சென்று சிவன் தாள் வணங்கி நாம்
நிகழும் அடியார் முன் சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே. 6

பாம்பணிந்த பெருமான் திருவடிகளை மனத்தில் வைத்துப் போற்றி வணங்கி மலர் சூட்டுங்கள். எல்லாத் துன்பங்களையும் இகழ்ந்து ஒதுக்குங்கள். இனி நமக்குத் துன்பம் வராது. விளங்குகின்ற சிறப்பு மிக்க திருக்கயிலைக்குச் சென்று சிவபெருமான் பாதங்களை வணங்கி, அங்கிருக்கும் அடியார்கள் முன்னால் சென்று,மனம் கசிந்து நிற்போம்.

611) நிற்பார் நிற்க நில்லா உலகில்
நில்லோம் இனி நாம் செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திரு மேனிப்
புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற்கு அரியன் பெருமானே. 7

அடியார்களில் விரைந்து வராமல் நிற்பவர்கள் இங்கேயே நிற்கட்டும். நில்லாத உலகத்தில் நாம் இனிமேல் நிற்கமாட்டோம். விரைந்து செல்லப் போகிறோம். அழகால் தன்னையே தானொக்கும் திருமேனியை உடைய புயங்கனும் நம்மை ஆள்பவனுமான சிவபிரான் திருவடி நோக்கிச் செல்லப் போகிறோம். எம்முடன் நிற்கும் அடியார்களே! தாமதிக்காமல் என்றும் அவன் திருவடிக்கீழ் இருக்க ஒன்றுபடுங்கள் பிற்பட்டு நின்று, பின்னால் வருந்திப் பயனில்லை. இறைவன் அப்பொழுது பெற முடியாதவனாவான்.

612) பெருமான் பேர் ஆனந்தத்துப்
பிரியாது இருக்கப் பெற்றீர்காள்
அரு மால் உற்றுப் பின்னை நீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திரு மா மணி சேர் திருக் கதவம்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமால் அறியாத் திருப் புயங்கன்
திருத் தாள் சென்று சேர்வோமே. 8

பெருமான் அளிக்கும் பேரின்பத்தை விட்டுப் பிரியாமல் இருக்கும் பேறுபெற்றவர்களே! இப்பொழுது நீக்க முடியாத மயக்கத்தில் கிடந்துவிட்டுப் பின்னால் வருந்தி அம்மா அப்பா என்று புலம்பாதீர்கள். திருக்கயிலையில் பெரிய மணிகள் பொருந்திய திருக்கதவுகள் திறந்திருக்கும் இந்நேரத்தில், திருமாலால் அறியப்படாதவன், பாம்பணிந்த பரமன் திருத்தாள்களைச் சென்றடைவோம்.

613) சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரில் பொலியும் வேல் கண்ணாள்
பங்கன் புயங்கன் அருள் அமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வம் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன் கழற்கே
பொய்யில் கிடந்து புரளாதே. 9

சிவபெருமான் திருவடிகளையே சேரவேண்டும் என்றெண்ணிச் சிந்தனையைத் திருத்திச் சிந்தியுங்கள். போரில் அழகுபெறும் வேல் போன்றகண்களையுடைய உமையை ஒரு பாகத்தில் வைத்தவன், பாம்பணிந்தவன். அவனுடைய திருவருள் அமுதை நிறையக் குடித்தும், போதும் என்ற நிறைவில்லாமல் அந்த ஆர்வத்திலேயே அழுந்தி நிற்பவர்களே! பொய்யான இவ்வுலக வாழ்வில் கிடந்து புரளாமல், சிவபெருமான் திருவடியில் போக விரும்புங்கள்.

614) புரள்வார் தொழுவார் புகழ்வாராய்
இன்றே வந்து ஆள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பார்ஆர்
மதியுள் கலங்கி மயங்குவீர்
தெருள்வீர் ஆகில் இது செய்ம்மின்
சிவலோகக் கோன் திருப் புயங்கன்
அருள் ஆர் பெறுவார் அகல் இடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே. 10

இறைவனை நினைத்துப் புரண்டும் வணங்கியும் புகழ்ந்தும் இன்றே வந்து இறைவனடி சேர மாட்டாதவர்களே! இப்படி மயங்குவீர்களானால் பிறகு உங்களையார் மதிக்கப் போகிறார்கள்? மனங்கலங்கி அறிவு தடுமாறுகின்றவர்களே! நீங்கள் தெளிவு பெற விரும்பினால் அவன் திருவடி சேர்தலாகிய இதைச் செய்யுங்கள். சிவலோக மன்னன், பாம்பணிந்த பிரான் அருளைப் பெறுவதற்குரியார் உங்களைத் தவிரயார் இருக்கிறார்கள்? ஐயோ ஐயோ அவன் திருவருள் பெறுவாரில்லாமல் வீணாகிறதே.



46. திருப்படை எழுச்சி

தில்லையில் அருளியது கலிவிருத்தம்

(மாயப் பகையைத் தாக்க ஞானப்படை எழுகிறது. இது பிரபஞ்சத்தில் நடக்கும் மிகப்பெரிய போராகும்)

615) ஞான வாள் ஏந்தும் ஐயர் நாதப் பறை அறைமின்
மான மா ஏறும் ஐயர் மதி வெண் குடை கவிமின்
ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்
வான ஊர் கொள்வோம் நாம் மாயப் படைவாராமே. 1

ஞானமாகிய வாளை ஏந்தும் சிவபெருமானுடைய பரநாதப் பறையைக் கொட்டுங்கள் பெருமைமிக்க இடபவாகனத்தில் வரும் சிவபிரான் சூடியுள்ள சந்திரனாகிய குடையைப் பிடியுங்கள். பசுவிடமிருந்து வந்த திருநீற்றைக் கவசமாக்கி அதற்குள் புகுந்து கொள்ளுங்கள். மாயப் படையான உலக இன்பங்கள் வருமுன்னால் நாம் சென்று கயிலாயத்தைப் பிடித்து விடுவோம்

616) தொண்டர்காள் தூசி செல்லீர் பத்தர்காள் சூழப் போகீர்
ஒண் திறல் யோகிகளே பேர் அணி உந்தீர்கள்
திண் திறல் சித்தர்களே கடைக் கூழை செல்மின்கள்
அண்டர் நாடு ஆள்வோம் நாம் அல்லல் படை வாராமே. 2

தொண்டர்களே! நீங்கள் முன்னணிப்படையாகச் சொல்லுங்கள். பக்தர்களே! நீங்கள் அவர்களைச் சூழ்ந்து பக்கத்தில் செல்லுங்கள். ஆற்றல் மிக்க யோகிகளே! இந்த அணிவகுப்பை நடத்திச் செல்லுங்கள். வலிமை மிக்க சித்தர்களே! பின் படையாகச் செல்லுங்கள். துன்பமாகிய படைகள் நம்மைத் தாக்க வருமுன்னால் நாம் சென்று தேவர்களும் தொழும் சிவபுரத்தை ஆளுவோமாக!



47. திருவெண்பா

திருப்பெருந்துறையில்அருளியது நேரிசை வெண்பா

(திருவருள் பெற்ற சீவன் முக்தர் செய்தியைக் கூறித் திருவருளின் தன்மையை விளக்குவது இப்பகுதி)

617) வெய்ய வினை இரண்டும் வெந்து அகல மெய்உருகிப்
பொய்யும் பொடி ஆகாது என் செய்கேன் - செய்ய
திரு ஆர் பெருந்துறையான் தேன் உந்து செந் தீ
மருவாது இருந்தேன் மனத்து. 1

நல்வினையும் தீவினையுமான,பிறவியைத்தரும் கொடிய வினைகள் இரண்டும் வெந்து, அவை இருந்த இந்தப் பொய்யான உடம்பும் பொடியாகவில்லை. ஏன்தெரியுமா? சிவந்த திருமேனி கொண்ட திருப்பெருந்துறைப் பெருமானை, தேன் போல இனிமைதரும் செந்நிறத் தீயானவனை, என் சிந்தையுள் வைக்காமல் போய்விட்டேன்.

618) ஆர்க்கோ? அரற்றுகோ? ஆடுகோ? பாடுகோ?
பார்க்கோ? பரம் பரனே என் செய்கேன் - தீர்ப்பரிய
ஆனந்த மால் ஏற்றும் அத்தன் பெருந்துறையான்
தான் என்பார் ஆர் ஒருவர் தாழ்ந்து. 2

தீர்க்கமுடியாத ஆனந்தக் களிப்பைத் தருபவன் என் அப்பனாகிய திருப்பெருந்துறையான்தான் என்று எனக்கு யார் சொல்லி வழி காட்டு வார்களோ அவர்களை வணங்கி ஆரவாரம் செய்வேனோ? அரற்றுவேனோ? ஆடுவேனோ? அவர் புகழ் பாடுவேனோ? அவரையே நினைத்துப் பார்ப்பேனோ? மேலான பரம்பொருளே! நான் என்ன செய்வேன்?

619) செய்த பிழை அறியேன் சேவடியே கை தொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பு அறியேன் - வையத்து
இருந்து உறையுள் வேல் மடுத்து என் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 3

நான் செய்த தவறுகளை அறியமாட்டேன். அவன் திருவடிகளை வணங்கி நானாகக் கடைத்தேறும் வழியின் தோற்றத்தையும் அறியேன். திருப்பெருந்துறையில் எழுந்தருளிய பெருமான். இவ்வுலகத்தில்

உருவமேற்று வந்திருந்து, உறைக்குள் வேலைச் செருகினாற் போல, என் மனத்தில் திருவருள் ஞானத்தைக் கொடுத்தான்.

620) முன்னை வினை இரண்டும் வேர் அறுத்து முன் நின்றான்
பின்னைப் பிறப்பு அறுக்கும் பேராளன் - தென்னன்
பெருந்துறையில் மேய பெருங் கருணையாளன்
வரும் துயரம் தீர்க்கும் மருந்து. 4

முந்திய பிறவிகளில் தேடி வைத்த நல்வினை தீவினை இரண்டையும் வேரொடும் களைந்து எனக்குக் காட்சிதந்தான். அவனே இனிவரும் பிறப்பையும் போக்கும் பெருமையுடையான் தென்னவன், திருப்பெருந்துறையில் எழுந்தருளும் பெருங் கருணையுடையவன், இப்பிறப்பில் வரும் இறப்பென்ற துன்பம் தீர்க்கும் மருந்தும் அவனேயாவான்.

621) அறையோ அறிவார்க்கு அனைத்து உலகும் ஈன்ற
மறையோனும் மாலும் மால் கொள்ளும் -இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியாது
இருந்து உறையும் என் நெஞ்சத்து இன்று. 5

இறைவன் எங்கிருக்கிறான் என அறிய விரும்புவோர்க்கு அறை கூவல் விடுக்கிறேன். எல்லா உலகங்களையும் படைத்த அந்தணனாகிய நான்முகனும், திருமாலும், தேடிக்காணாது மயங்கக் காரணமான இறைவன், திருப்பெருந்துறைச் செல்வன், என்றும் நீங்காது என் நெஞ்சையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளி இருக்கிறான்.

622) பித்து என்னை ஏற்றும் பிறப்பு அறுக்கும் பேச்சு அரிது ஆம்
மத்தமே ஆக்கும் வந்து என் மனத்தை - அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேர் அருளால் நோக்கும்
மருந்து இறவாப் பேரின்பம் வந்து. 6

என்னைப்பித்துக் கொள்ளச் செய்தான். என் பிறப்பை ஒழித்தான். பேசுதற்கரிய பேரின்பத்தை என் மனத்தில் உண்டாக்கினான். யார் தெரியுமா? என் தந்தை, திருப்பெருந்துறைச் செல்வன், என்னை ஆண்டு கொண்டு திருவருட் பார்வையை என் மேல் செலுத்தியவன். பிறவிப்பிணிக்கு மருந்தானவன். அழியாத பேரின்ப வடிவினன். அவனே இத்தனையும் செய்தான்.

623) வாரா வழி அருளி வந்து எனக்கு மாறு இன்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே - சீர் ஆர்
திருத்தென் பெருந்துறையான் என் சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. 7

சிறப்புமிக்கதும் மங்கலமானதும் தெற்கில் உள்ளது மான திருப்பெருந்துறைப்பெருமான், என் மனத்தில் வேறு யாருக்கும் இடமின்றி எழுந்தருளியிருக்கும் ஒருவன், அவன் காட்டிய என்றும் பெருகும் ஞானஒளி, மீண்டும் பிறவியெடுத்து இவ்வுலகிற்கு வராமலிருக்க வழிசெய்து, என் மனத்தில் நுழைந்து, என்னுடைய குணம் செயல்களுக்கு மாறுபடாமல், எனக்குஉண்ண உண்ணத் தெவிட்டாத தெள்ளமுதாய் அமைந்தது.

624) யாவர்க்கும் மேல் ஆம் அளவு இலாச் சீர் உடையான்
யாவர்க்கும் கீழ் ஆம் அடியேனை - யாவரும்
பெற்று அறியா இன்பத்துள் வைத்தாய்க்கு என் எம் பெருமான்
மற்று அறியேன் செய்யும் வகை. 8

இறைவனே! நீ யாவருக்கும் மேலான அளவற்ற புகழ்உடையவன். அத்தகைய நீ, யாவருக்கும் கீழான அடியவனை, யாவரும் இதுவரை பெற்றறியாத பேரின்பத்தில் இருத்தினாய். இதற்குக் கைம்மாறாக நான் என்ன செய்ய முடியும்? ஒன்றையும் நான் அறியேனே.

625) மூவரும் முப்பத்து மூவரும் மற்று ஒழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான் -மா ஏறி
வையகத்தே வந்திழிந்த வார் கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். 9

பிரமன் திருமால் உருத்திரன் என்ற மூவரும், முப்பத்து முக்கோடி தேவர்களும், ஏனைய விண்ணுலகவாசிகளும், காண முடியாத சிவபெருமான், எனக்கருள் புரிவதற்காக ஒரு குதிரையின் மேலேறிக் கன்மபூமியாகிய இந்த உலகத்திற்கு வந்து, குதிரையை விட்டு இறங்கித் தன் திருவடிகளை இம்மண்ணில் வைத்தான். அந்தத் திருவடிகளை வணங்க, என்னுடம்பில் பேரானந்தம் பெருகி நிற்கிறது.

626) இருந்து என்னை ஆண்டான் இணை அடியே சிந்தித்து
இருந்து இரந்துகொள் நெஞ்சே எல்லாம் - தரும் காண்
பெருந்துறையின் மேய பெரும் கருணையாளன்
மருந்து உருவாய் என் மனத்தே வந்து. 10

திருப்பெருந்துறையில் எழுந்தருளிய பெருங்கருணைக் கடவுள், பிறவிப்பிணிக்கு மருந்தாகி, என் மனத்துக்குள் வந்தான். அங்கேயே இடைவிடாமல் இருந்து என்னை ஆட்கொண்டான். என் மனமே! அவன் திருவடிகள் இரண்டையும் சிந்தித்தால் நீ வேண்டிக் கேட்ட எல்லாவற்றையும் தருவான்.

627) இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வு அறுத்து சோதி ஆய் - அன்பு அமைத்துச்
சீர் ஆர் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊர் ஆகக் கொண்டான் உவந்து. 11

சீர்மிகுந்த திருப்பெருந்துறைச்செல்வன், என்மனத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கச் செய்தான். அறியாமை இருள், அகலச் செய்தான். எப்பொழுதும் என்னைப் பற்றாமல் துன்பத் தொடர்புகளை அறுத்தான். ஒளிவடிவாய்க் காட்சிதந்து என் அன்புக்குப் பாத்திரமானான். என் மனத்தையே திருக்கயிலையாகக் கொண்டு மகிழ்ந்திருந்தான்.



48. பண்டாய நான்மறை

திருப்பெருந்துறையில் அருளியது நேரிசை வெண்பா

(இறைவன் தந்த அருளனுபவத்தை உறுதிப்படுத்தி அதற்குக் கைம்மாறு காட்டமுடியாமையை உரைப்பது இப்பகுதி. ஏழு வெண்பாக்களே உள்ளன)

628) பண்டாய நான் மறையும் பால் அணுகா மால் அயனும்
கண்டாரும் இல்லை கடையேனைத் - தொண்டு ஆகக்
கொண்டருளும் கோகழி எம் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மாறு உரை. 1

பழமையான வேதங்கள் நான்கும் அவனருகில் சென்றதில்லை. திருமாலும் பிரமனும் கூட அவனைக்கண்ட தில்லை. அத்தகையவன் மிகக்கீழான என்னைத் தொண்டனாக ஏற்றுக் கொணடான். இப்படி அருள் செய்த திருவாவடுதுறையில் எழுந்தருளிய மன்னவனுக்கு நாம் செய்யும் கைம்மாறு உண்டோ? என் நெஞ்சமே! உரைப்பாயாக!

629) உள்ள மலம் மூன்றும் மாய உகு பெரும் தேன்
வெள்ளம் தரும் பரியின் மேல் வந்த - வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவும் கெடும் பிறவிக் காடு. 2

ஆன்மாவுக்கு இயல்பாயுள்ள ஆணவ, கன்ம, மாயையாகிய, மூன்றுமலங்களும் மாய்ந்துபோகும்படி, பெரிய இன்பமாகிய தேன் வெள்ளத்தையே தந்த குதிரையின் மேல்வந்த வள்ளலாகிய சிவபெருமான், சேர்ந்திருக்கின்ற திருப்பெருந்துறையை வாழ்த்துங்கள். அப்படி வாழ்த்தினால் உங்கள் பிறவிக்காட்டுக்குக் கருவான வினைகள் கெட்டுப்போகும்.

630) காட்டகத்து வேடன் கடலில் வலை வாணன்
நாட்டில் பரிப் பாகன் நம் வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அம்கமலப் பாதம்
மருளும் கெட நெஞ்சே வாழ்த்து. 3

நம்மை ஆட்கொள்ள இறைவன் காட்டில் வேடனாகவந்தான். கடலில் வலைஞனாக வந்தான். நாட்டில் குதிரைச் சேவகனாக வந்தான். நம் வினைகளைப் போக்கியருளினான். அவன்தான் திருப்பெருந் துறையான். அவனுடைய தாமரைப் பாதங்களை வாழ்த்துவாய் நெஞ்சமே! உன் அறியாமை இருள் நீங்கும்

631) வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்து உலகம் ஏத்தத் தகுவாரும் -சூழ்ந்து அமரர்
சென்று இறைஞ்சி ஏத்தும் திரு ஆர் பெருந்துறையை
நன்று இறைஞ்சி ஏத்தும் நமர். 4

தேவர்கள் யாவரும் சூழ்ந்து சென்று வணங்கிப் போற்றும் திருமிக்க பெருந்துறையை, நன்றாக வணங்கிப் போற்றும் நம்மவர்களாகிய மெய்யடியார்கள் தான், இவ்வுலகில் வாழ்ந்தவர் ஆவார்கள். வலிய வினைகளை அழிப்பார்கள். அவர்களே உலகமெல்லாம் தாழ்ந்து பணிந்து ஏத்தும் தகுதிமிக்கவர்ஆவார்கள்.

632) நண்ணிப் பெருந்துறையை நம் இடர்கள் போய் அகல
எண்ணி எழு கோகழிக்கு அரசைப் - பண்ணின்
மொழியாளோடு உத்தரகோசமங்கை மன்னிக்
கழியாது இருந்தவனை காண். 5

நெஞ்சமே! திருப்பெருந்துறைக்குச் சென்று, நம் பிறவித்துன்பம் போயொழிய, வணங்கி எழு. திருவாவடுதுறைக்கு அரசனை, இசைபோல இன்மொழி பேசும் மங்கள நாயகியோடும் திருவுத்தர கோசமங்கையில் பிரியாமல் நிலைபெற்றிருந்தவனைக் கண்டுமகிழ்வாயாக!

633) காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பம் எனப்
பேணும் அடியார் பிறப்பு அகலக் - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாய் ஆரப் பேசு. 6

இருவினையொப்புவந்ததால், கரணங்களாகிய மனம் முதலிய எல்லாம் பேரின்பமே தரும் எனப்பாவிக்கும் மெய்யடியார்களின் பிறப்பு ஒழியத் திருவருள் நோக்கம் செய்பவன், திருப்பெருந்துறையை என்றும் பிரியாத அந்தப் பெரிய பெருமானை வாயாரப் புகழ்வாயாக

634) பேசும் பொருளுக்கு இலக்கிதம் ஆய்ப் பேச்சு இறந்த
மாசில் மணியின் மணி வார்த்தை - பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பு அறுத்தேன் நல்ல
மருந்தின் அடி என் மனத்தே வைத்து. 7

பேசும் பொருட்கள் யாவினுக்கும் குறிக்கோளாக இருப்பவன், பேச்சைக் கடந்திருக்கும் மாசிலாமணிப் பெருமான், அவன் தந்த உபதேச மணிவார்த்தையான சிவநாமத்தையே பேசிப் பெருந்துறைத்தலத்தையே வணங்கி, நல்ல மருந்தாயிருக்கும் நாயகன் திருவடிகளை என் நெஞ்சத்தில் கொண்டு, என் பிறவியை வேர் அறுத்தேன்.

49. திருப்படையாட்சி

தில்லையில் அருளியது ஆசிரிய விருத்தம்

(இறைவன் வெளிப்பட்டு அருள் செய்தால் என் செயல்கள் யாவும் சிவச்செயல்களாகவே விளங்கும். எல்லாம் நல்வினையே யாகும் என்பது இப்பகுதி. தொண்டர்படையின், குற்றங்களைக் கூடக் குணங்களாக்கி ஆட்சி செய்யும் இறைவன் கருணை இப்பகுதியில் விளக்கம் பெறுகிறது)

635) கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில் என் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடும் ஆறு
மறந்திடும் ஆகாதே
மால் அறியா மலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண் களி கூர் தரு பாடலொடு ஆடல்
பயின்றிடும் ஆகாதே
பாண்டி நன் நாடு உடையான் படை ஆட்சிகள்
பாடுதும் ஆகாதே
விண் களி கூர்வது ஓர் வேதகம் வந்து
வெளிப்படும் ஆகாதே
மீன் வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படும் ஆயிடிலே. 1

மீனைப்பிடிக்கும் பொருட்டு வலைவீசிய வேடனாகிய இறைவன் என் முன் வந்து வெளிப்பட்டு நானும் அவனும் இரண்டறக் கலந்துவிட்டால், என் கண்கள் இரண்டும் அவன் கழலிணை கண்டுகளிக்க முடியாது போகுமா? (போகாது) பெண்களோடு கூடி வாழ்வதால் என் வாழ்வு கீழ்ப்பட்டுப் போகுமோ? (போகாது) மண்ணில் வந்து பிறப்பதற்கான வழிகளை மறப்பது ஆகாது போகுமோ? (ஆகும்) மாலும் காணமுடியாத மலர்ப்பாதங்கள் இரண்டையும் நான் வழிபடுவது ஆகாது போகுமோ? (ஆகும்) இசையினால் இன்பம் தரும் பாட்டும் ஆட்டமும் பழகுதல் ஆகாது போகுமோ? (ஆகும்) தென்பாண்டி நன்னாட்டுச் செல்வனுடைய திருப்படையாட்சியைப் பாடுவதுஆகாது

போகுமோ? (ஆகும்) விண்ணகத்தவரும் மகிழத்தக்க மாற்றங்களாகிய சித்துக்கள் வந்து வெளிப்படுவது ஆகாது போகுமோ? (ஆகும்) எல்லாம் ஆகும். சீவோபாதி ஒழிந்த நிலையில் விதிவிலக்குகள் இல்லை.

636) ஒன்றினொடு ஒன்றும் ஓர் ஐந்தினொடு ஐந்தும்
உயிர்ப்பறும் ஆகாதே?
உன் அடியார் அடியார் அடியோம் என
உய்ந்தன ஆகாதே
கன்றை நினைந்து எழு தாய் என வந்த
கணக்கு அது ஆகாதே
காரணம் ஆகும் அனாதி குணங்கள்
கருத்து உறும் ஆகாதே
நன்றி இது தீது என வந்த நடுக்கம்
நடந்தன ஆகாதே
நாமும் எலாம் அடியாருடனே செல
நண்ணுதும் ஆகாதே
என்றும் என் அன்பு நிறைந்த பரா அமுது
எய்துவது ஆகாதே
ஏறு உடையான் எனை ஆளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே. 2

இடபவாகனத்தை உடையவனும், என்னை ஆட்கொண்ட நாயகனுமாகிய சிவபெருமான் என்னுள்ளே புகுந்து இரண்டறக் கலந்து விட்டால், உயிரோடு உடம்பும், பொறிகளோடு புலன்களும் கலந்து உயிர்க்கும் தன்மை அற்றுப் போகாதா? (போகும்) நாம் உன்னடியார்க்கு அடியோம் என்று நாங்கள் உய்ந்து போவது ஆகாதா (ஆகும்) கன்றை நினைந்து தாய்ப்பசு வருவது போல, நீ எங்களை நினைத்து அருள்சுரக்கும் கருணை இல்லாமல் போகுமா? (இருக்கும்) பிறவிக்குக் காரணமான பழைய குணங்களை (மாற்ற) நீ திருவுள்ளம் பற்றுதல் ஆகாது போகுமா? (ஆகும்) இது நல்லது இது தீயது எனப்பிரித்துப் பார்ப்பதால் வந்த நடுக்கங்கள் எங்களை விட்டுப் போவது ஆகாதா? (போகும்) நாமும் எல்லா அடியார்களோடும் சென்று வீட்டுலகை அடைவது ஆகாதா? (ஆகும்) என்றும் என் அன்பு மிக்க வணங்குதற்குரிய அமுது வலிய வந்து என்னை அடைவது ஆகாதா? (ஆகும்)

637) பந்த விகார குணங்கள் பறிந்து
மறிந்திடும் ஆகாதே
பாவனை ஆய கருத்தினில் வந்த
பரா அமுது ஆகாதே
அந்தம் இலாத அகண்டமும் நம்முள்
அகப்படும் ஆகாதே
ஆதி முதல் பரமாய பரஞ்சுடர்
அண்ணுவது ஆகாதே
செந் துவர் வாய் மடவார் இடர் ஆனவை
சிந்திடும் ஆகாதே
சேல் அன கண்கள் அவன் திருமேனி
திளைப்பன ஆகாதே
இந்திரஞால இடர்ப் பிறவித் துயர்
ஏகுவது ஆகாதே
என்னுடை நாயகன் ஆகிய ஈசன்
எதிர்ப்படும் ஆயிடிலே. 3

என்னை ஆட்கொண்ட ஈசன் எதிரே தோன்றுவான் ஆனால், பாசக்கட்டுக்குக் காரணமான மாறுபட்ட குணங்கள் வேர் பறிக்கப் பட்டுத் தலைகீழாக விழுவது ஆகாதா? (ஆகும்) அவனையே தியானிக்கும் மனத்தில் அவன் பரவத்தக்க அமுதமாய்த் தோன்றுவது ஆகாதா? (தோன்றுவான்) எல்லையற்ற அண்டங்கள் நம்முள் அடங்காதா?(அடங்கும்) யாவினுக்கும் முதலான பரம்பொருளாகிய பேரொளி நம்மை வந்து அணுகாதா? (அணுகும்) சிவந்த வாயினை உடைய பெண்களால் வரும் துன்பம் சிதறிப் போய் ஒழியாதா? (ஒழியும்) சேல்மீன் போன்ற இந்த நாயகியின் கண்கள் அவன் திருமேனியழகில் திளைப்பது ஆகாதா (திளைக்கும்) இந்திரஜாலம் போன்றதும் துன்பம் தருவதுமான பிறவித்துயர் நம்மைவிட்டுப் போகாதா? (போகும்.)

638) என் அணியார் முலை ஆகம்அளைந்து உடன்
இன்புறும் ஆகாதே
எல்லை இல் மாக் கருணைக் கடல் இன்று இனிது
ஆடுதும் ஆகாதே
நல் மணி நாதம் முழங்கி என் உள் உற
நண்ணுவது ஆகாதே
நாதன் அணித் திரு நீற்றினை நித்தலும்
நண்ணுவது ஆகாதே

மன்னிய அன்பரில் என் பணி முந்துற
வைகுவது ஆகாதே
மா மறையும் அறியா மலர்ப் பாதம்
வணங்குதும் ஆகாதே
இன் இயல் செங்கழுநீர் மலர் என் தலை
எய்துவது ஆகாதே
என்னை உடைப் பெருமான் அருள் ஈசன்
எழுந்தருளப்பெறிலே. 4

என்னை ஆளாக உடையவனும் எனக்கருள் புரிபவனுமாகிய ஈசன் என்முன் எழுந்தருளி வரப்பெற்றால், நாயகியான என்னுடைய அணிகள் அணிந்த முலை அவன் மார்போடு இணைந்து இன்பமுறுதல் ஆகாதா? (ஆகும்) எல்லையற்ற பெருங்கருணைக்கடலில் இன்று திளைத்தாடுவது ஆகாதா? (ஆடலாம்) எனக்குள்ளே நல்ல மணியோசை முழங்கி என்னை அடைவது ஆகாதா? (ஆகும்) தலைவனாகிய சிவபெருமான் அணியும் திருநீற்றை நாள்தோறும் அடைய முடியாதா?(முடியும்) நிலைபெற்ற அன்பர்களுக்குள் என்தொண்டு முதலில் தொடங்கப்படுவது ஆகாதா? (ஆகும்) பெரிய வேதங்களும் அறியா மலரடியை வணங்குவது ஆகாதா?(ஆகும்) அவன் அணிந்த இனிய செங்கழுநீர்ப்பூ என் தலையில் பொருந்துவது ஆகாதா? (பொருந்தும்) எல்லாம் ஆகும்.

639) மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கு அறும் ஆகாதே
வானவரும் அறியா மலர்ப் பாதம்
வணங்குதும் ஆகாதே
கண் இலி காலம் அனைத்திலும் வந்த
கலக்கு அறும் ஆகாதே
காதல் செயும் அடியார் மனம் இன்று
களித்திடும் ஆகாதே
பெண் அலி ஆண் என நாம் என வந்த
பிணக்கு அறும் ஆகாதே
பேர் அறியாத அனேக பவங்கள்
பிழைத்தன ஆகாதே
எண் இலி ஆகிய சித்திகள் வந்து எனை
எய்துவது ஆகாதே
என்னை உடைப் பெருமான் அருள் ஈசன்
எழுந்தருளப் பெறிலே. 5

என்னை உடையபெருமான் இன்னருள் தரும் ஈசன் எழுந்தருளி வரப்பெற்றால், இந்த மண்ணில் மாயையால் வகுக்கப்பட்ட பொருட்களால் வந்த மயக்கம் நீங்குவது ஆகாதா? (ஆகும்) தேவர்களாலும் அறியப்படாத திருவடி மலர்களை வணங்குவது ஆகாதா? (ஆகும்) கணக்கிட முடியாத காலங்களாக ஆணவ இருளில் கிடந்த கலக்கம் அற்றுப் போகாதா? (போகும்) இறைக்காதல் கொண்ட அடியார் மனம் இன்பம் அடைவது மாகாதா? (அடையும்) பெண் ஆண் அலி என்றும் நாம் வேறு அவன் வேறு என்றும் வந்த மாறுபாடுகள் அற்றுப்போகாதா? (போகும்) பெயர்கள் தெரியாத அனேகப் பிறவிகளிலிருந்து தப்பிப் பிழைப்பது ஆகாதா? (ஆகும்) எண்ணற்ற சித்துக்கள் வந்து என்னைச் சேருவது ஆகாதா? எல்லாம் ஆகும்.

640) பொன் இயலும் திரு மேனி வெண் நீறு
பொலிந்திடும் ஆகாதே
பூ மழை மாதவர் கைகள் குவிந்து
பொழிந்திடும் ஆகாதே
மின் இயல் நுண் இடையார்கள் கருத்து
வெளிப்படும் ஆகாதே
வீணை முரன்று எழும் ஓசையில் இன்பம்
மிகுந்திடும் ஆகாதே
தன் அடியார் அடி என் தலை மீது
தழைப்பன ஆகாதே
தான் அடியோமுடனே உய வந்து
தலைப்படும் ஆகாதே
இன் இயம் எங்கும் நிறைந்து இனிது ஆக
இயம்பிடும் ஆகாதே
என்னை முன் ஆளுடை ஈசன் என் அத்தன்
எழுந்தருளப் பெறிலே. 6

முன்னாலேயே என்னை ஆட்கொண்ட ஈசனும் என்னப்பனுமாகிய இறைவன் என்முன் எழுந்தருளப் பெற்றால், அவனுடைய பொன்னார் திருமேனியில் வெண்ணீறு விளங்கித் தோன்றுவது ஆகாதா? (தோன்றும்) பெருந்தவத்தோர் கரங்கள் குவிந்து பூமழை பொழிதல் ஆகாதா? (பொழியும்) மின்னல் போன்ற நுண்ணிடைப் பெண்களின் வஞ்சக எண்ணம் வெளிப்படாதா? (வெளிப்படும்) வீணையிலிருந்து ஒலித்தெழும் இசையினால் இன்பம்

மிகுதியாகாதா? (ஆகும்) இறைவன் அடியார்களின் திருவடி என் தலை மேல் தழைத்து விளங்காதா? (விளங்கும்) நாம் உய்வதற்காகத் திருவுளம் கொண்டு சிவபெருமான் நம்மோடு வந்து கூடுவது ஆகாதா? ஆகும். எவ்விடத்திலும் இனிய ஒலிகள் நிறைந்து ஒலிப்பதும் ஆகாதா? (ஒலிக்கும்.) எல்லாம் ஆகும்.

641) சொல் இயலாது எழு தூ மணி ஓசை
சுவை தரும் ஆகாதே
துண் என என் உளம் மன்னிய சோதி
தொடர்ந்து எழும் ஆகாதே
பல் இயல்பு ஆய பரப்பு அற வந்த
பரா பரம் ஆகாதே
பண்டு அறியாத பர அனுபவங்கள்
பரந்து எழும் ஆகாதே
வில் இயல் நன்னுதலார் மயல் இன்று
விளைந்திடும் ஆகாதே
விண்ணவரும் அறியாத விழுப் பொருள்
இப்பொருள் ஆகாதே
எல்லை இலாதன எண் குணம் ஆனவை
எய்திடும் ஆகாதே
இந்து சிகாமணி எங்களை ஆள
எழுந்தருளப் பெறிலே. 7

சந்திரனை முடியில் கொண்ட பெருமான், எங்களை ஆள்வதற்காக எழுந்தருளி வந்தால், சொல்ல முடியாத தூய மணியோசை இன்பச்சுவை தராதா? (தரும்) நான் துணுக்கமுற என்னுளத்தில் நிலைபெற்ற பேரொளி என்னைத் தொடர்ந்து எழாதா? (எழும்) பல வேறு இயல்புகளால் வந்த பரபரப்பை மாற்றப் பராபரமாய் இறைவன் தோன்றிய தாகாதா? (ஆகும்) முன்பு நான் அறியாத சிவானுபவங்கள் என்னுள் பரந்தெழ மாட்டாதா? (பரந்தெழும்) வில் போன்ற புருவத்தை உடைய பெண்கள் மயக்கம் விளைவது ஆகாதா?(ஆகும்) தேவர்களும் காணாத பெருமையுடைய பொருள் சிவமாகிய இந்த மெய்ப்பொருள் ஆகாதா! (ஆகும்) எல்லையற்ற இப்பொருளின் எட்டுக்குணங்களும் என்னை அடையாதா?(அடையும்)

642) சங்கு திரண்டு முரன்று எழும் ஓசை
தளைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள் நம்மோடு
சலித்திடும் ஆகாதே
அங்கு இது நன்று இது நன்று எனும் மாயை
அடங்கிடும் ஆகாதே
ஆசை எலாம் அடியார் அடியோம் எனும்
அத்தனை ஆகாதே
செங் கயல் ஒண் கண் மடந்தையர் சிந்தை
திளைப்பன ஆகாதே
சீர் அடியார்கள் சிவ அனுபவங்கள்
தெரிந்திடும் ஆகாதே
எங்கும் நிறைந்து அமுதூறு பரம் சுடர்
எய்துவது ஆகாதே
ஈறு அறியா மறையோன் எனை ஆள
எழுந்தருளப் பெறிலே. 8

முடிவறியப்படாத வேதமுதல்வன் என்னை ஆட்கொள்ள எழுந்தருளப் பெற்றால், பல சங்குகள் ஒன்று சேர்ந்து ஒலிப்பதால் எழும் ஓசை அதிகரிக்காதா? (அதிகரிக்கும்) சாதிப்பற்றால் நம்மை விடாத குணங்கள் நம்மை விட்டு நழுவாதா? (நழுவும்) அது நல்லது இது நல்லது என்ற மாயை அடங்காதா? (அடங்கும்) எங்கள் ஆசையெலாம் அடியார்க்கடியோம் எனப்படும் அவ்வளவே ஆகாதா? (ஆகும்) சிவந்த கயல் போன்ற கண்களையுடைய பெண்களின்மனம் இன்பத்தில் திளைப்பதும் ஆகாதா. (திளைக்கும்) சிறந்த அடியார்களின் சிவானுபவங்கள் எனக்கு விளங்காதா? (விளங்கும்) அமுதம் போல எங்கும் நிறைந்து சுரக்கின்ற இனிய சுடர் என்னை வந்து அடையாதா? (அடையும்) எல்லாம் ஆகும்.



50. ஆனந்த மாலை

தில்லையில் அருளியது ஆசிரியவிருத்தம்

(சிவத்தை அனுபவிக்க வேண்டும் என்ற விருப்பத்தை வெளியிட்டு ஆனந்தத்தை வேண்டும் மாலை ஆனந்த மாலையாகும்)

643) மின் நேர் அனைய பூங் கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியன் உலகம்
பொன் நேர் அனைய மலர் கொண்டு
போற்றா நின்றார் அமரர் எல்லாம்
கல் நேர் அனைய மனக் கடையாய்
கழிப்புண்டு அவலக் கடல் வீழ்ந்த
என் நேர் அனையேன் இனி உன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே. 1

ஒளி மிகுந்த மின்னல் போன்ற உன் திருவடிகளை அடைந்தவர்கள் இவ்வுலக வாழ்வைக் கடந்தார்கள். தேவர்கள் பொன் போன்ற மலர்களைக் கொண்டு போற்றி நிற்கிறார்கள். கல் போன்ற மனம் பெற்றமையால் கடையேனாய்க் கழிக்கப்பட்டுத் துன்பக்கடலில் வீழ்ந்தவனும், அன்பு செய்யாமல் இருப்பதில் எனக்கே ஒப்பானவனும் ஆகிய நான், இனி உன்னைச் சார்ந்து உய்ய வழிசொல்வாயாக!

644) என்னால் அறியாப் பதம் தந்தாய்
யான் அது அறியாதே கெட்டேன்
உன்னால் ஒன்றும் குறைவு இல்லை
உடையாய் அடிமைக்கு ஆர் என்பேன்
பல் நாள் உன்னைப் பணிந்து ஏத்தும்
பழைய அடியரொடும் கூடாது
என் நாயகமே பிற்பட்டு இங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே. 2

என்னை உடையவனே! என்னால் அறிய முடியாத பெரும் பதத்தைத் தந்தாய். அதன் பெருமை தெரியாமல் கெட்டுப் போனேன். உன்னால் ஒரு குறைவும் இல்லை. இறைவனே! எனக்கு வேறு துணை யார் இருக்கிறார்கள்? பல நாட்களாக உன்னைப்பணிந்து வணங்கும் பழைய அடியார்களோடு சேராமல், என் தலைவனே! நான் பின்தங்கித் துன்பத்திற்கு விருந்தாக இங்கேயே இருந்து விட்டேனே!

645) சீலம் இன்றி நோன்பு இன்றிச்
செறிவே இன்றி அறிவு இன்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டு ஆய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலும் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறி ஏறக்
கோலம் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே. 3

சிவநெறிக்குத் தேவையான ஒழுக்கங்களும், விரதமும், உன் திருவடித் தோய்வும், அறிவும் இல்லாமல், தோற்பாவை கூத்தாடுவதைப் போல, துன்ப இன்பங்களில் சுழன்று விழுந்து கிடக்கின்ற என்னை, மயக்கத்திற்கான காரணம் காட்டி, அதைப் போக்கும் வழிகாட்டி, மீண்டும் வாராத முத்தியுலகத்திற்குச் செல்ல வழிகாட்டும் குருவடிவான கோலங்காட்டி ஆட்கொண்டவனைக் கொடியவனாகிய நான் என்று கூடப் போகிறேன்!

646) கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடு இலாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவது எல்லாம் நான்
பட்டால் பின்னைப் பயன் என்னே
கொடு மா நரகத்து அழுந்தாமே
காத்து ஆட்கொள்ளும் குரு மணியே
நடு ஆய் நில்லாது ஒழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே. 4

கெட்டுப் போதற்குரிய தகுதிமிக்க நான், கெடக்கூடியபடி கெட்டுப்போகிறேன். ஆனால் கேடற்றவனாகிய நீ என்னை ஆட்கொண்டு வீணாகப் பழியேற்றுவிட்டாய். துன்பப்பட வேண்டிய நான், பட வேண்டிய எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தால், உன்னால் எனக்குப் பயன் என்ன? கொடிய நரகத்தில் நான் அழுந்திப் போகாமல் காப்பாற்றி ஆட்கொள்ளும் குருமணியே! இன்பதுன்பம் ஒன்றையும் சாராது, நீ நடுநிலை வகிக்காவிட்டால், எங்கள் தலைவனே! அது உனக்கு நல்லதாகுமோ?

647) தாய் ஆய் முலையைத் தருவானே
தாராது ஒழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்று உன் தாள் அடைந்தேன்
தயா நீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடன் ஆக
ஆண்டாய் நான் தான் வேண்டாவோ. 5

தாயாகி முலைகொடுத்துப் பாலுட்டும் பெருமானே! அப்படி நீ தராமல் போய்விட்டால், சவலைப் பிள்ளை போல நாயேன் இறந்து போகலாமா? நம்பியே! இனியாவது அருள்செய். தாய் என்று உன் திருவடியை அடைந்தேன். தயாநிதியே ! நீ என்பக்கம் இல்லையே. நாயேனையும் உன்னடியார் பலருடன் ஆட்கொண்டவனே! இன்று நான் மட்டும் உனக்கு வேண்டாத வனாகி விட்டேனோ?

648) கோவே அருள வேண்டாவோ
கொடியேன் கெடவே அமையுமே
ஆவா என்னாவிடில் என்னை
அஞ்சேல் என்பார் ஆரோதான்
சாவார் எல்லாம் என் அளவோ
தக்க ஆறு அன்று என்னாரோ
தேவே தில்லை நடம் ஆடீ
திகைத்தேன் இனித்தான் தேற்றாயே. 6

அரசனே! எனக்கு நீ அருள் செய்ய வேண்டாமா? கொடியவனாகிய நான் கெட்டழிந்து போனால். அது உன் பெருமைக்குத் தக்கதாக அமையுமா? ஆ! வா என்று அழைத்து அஞ்சாதே என்று எனக்கு உதவக்கூடியவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்? பிறவிப்பயன்பெறாமல் இறந்து போகும் அனைவரும் என்னைப் போன்றவர்கள்தானே? உன் அருளுக்கு இதுதக்கதல்ல என்று உனக்கு யாரும் சொல்ல மாட்டார்களா? தேவனே! தில்லையில் ஆனந்த நடமிடும் பெருமானே! நான் திகைத்துப் போய் நிற்கிறேன். இனியாவது என்னைத் தேற்ற மாட்டாயா?

649) நரியைக் குதிரைப் பரி ஆக்கி
ஞாலம் எல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை எல்லாம்
பிச்சு அது ஏற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வது ஒன்றும் அறியேனே. 7

நரியை விரைந்து செல்லும் குதிரையாக்கி இந்திர ஜாலங்கள் எல்லாம் செய்தாய். பெருமை மிக்க பாண்டிய மன்னனுடைய மதுரைப் பட்டணம் முழுதும் உன்பால் பித்துக்கொள்ளச் செய்தாய். திருப்பெருந் துறைச்செல்வனே! கிடைத்தற்கரிய பொருளே! அவிநாசியில் வீற்றிருக்கும் அப்பனே! என்னைக் காக்க வைகைநதியில் வந்த பாண்டி வெள்ளமே! ஆராய்ந்தறிய முடியாத பரஞ்சோதியே! நான் உன் திருவடியடைய எதுவும் செய்யமாட்டாமல் தவிக்கிறேன்.



51. அச்சோப்பதிகம்

தில்லையில் அருளியது கலிவிருத்தம்

(இறைவன் கருணையை வாய்விட்டுச் சொல்ல முடியாமல், அச்சோ என்று வியந்து நிற்பது இப்பதிகம். அனுபவித்ததைச் சொல்லமாட்டாத அறியாமை காட்டுவது. ஒன்பது பாடல்களே உள்ளன)

650) முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே. 1

முத்திக்குரிய வழிகளை அறியாத மூர்க்கத்தன மிக்கவர்களோடு சேர்ந்து திரிகின்ற என்னை, அன்புநெறியை அறியச் செய்து, என் பழைய வினைகள் நீங்குமாறு, என் சித்தத்தில் இருந்த ஆணவமலத்தை நீக்கி, சிவமாக்கி ஆண்டு கொண்ட என்னப்பனாகிய சிவபெருமான் எனக்கு அருளிய இப்பேற்றை வேறு யார் பெறுவார்கள்?

651) நெறி அல்லா நெறி தன்னை நெறியாக நினைவேனைச்
சிறு நெறிகள் சேராமே திரு அருளே சேரும் வண்ணம்
குறி ஒன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே.2

எனக்குரியதல்லாத வழியை, வழியாக நினைத்து, அவ்வழியே செல்ல இருக்கின்ற என்னை, சிறுதெய்வ நெறிகளில் சேராமல், அவன் திருவருளின் படி நடக்கும் வண்ணம் செய்தான். அடையாளம் இல்லாத கூத்தப்பெருமான், அவனுடைய ஞானக்கூத்தை நான் அறிந்துய்யும்படி எனக்கு அருளினான். இந்தப் பேற்றை வேறு யார் பெறுவார்கள்?

652) பொய்எல்லாம் மெய் என்று புணர் முலையார் போகத்தே
மையல் உறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையல் இடம் கொண்ட பிரான் தன் கழலே சேரும் வண்ணம்
ஐயன் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே. 3

பொய்யான உலக இன்பங்களை மெய்யென்று கருதி புணரத்தக்க முலைகளை உடைய பெண்களின் சேர்க்கையில் மயங்கிக் கிடக்க இருந்த என்னை அதில் விழுந்து அழியாமல் காத்து, உமையவளை இடப்பாகத்தில் கொண்ட சிவபெருமான், அவன்

திருவடிகளையே சேருமாறு தலைவனாய் வந்தருளிய இப்பேற்றை வேறு யார் பெறவல்லார்கள்?

653) மண் அதனில் பிறந்து எய்த்து மாண்டு விழக் கடவேனை
எண்ணம் இலா அன்பு அருளி எனை ஆண்டிட்டு என்னையும் தன்
சுண்ண வெண்ணீறு அணிவித்துத் தூய் நெறியே சேரும் வண்ணம்
அண்ணல் எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார்? அச்சோவே. 4

இம்மண்ணுலகில் மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் இளைத்துப் போய் அழிய இருந்த எனக்கு, தானே இயல்பாகச் சுரக்கின்ற அன்பைத் தந்தான். என்னை ஆட்கொண்டான். எனக்குத் தன்னுடைய வெண்மையான திருநீற்றை அணிவித்து அழகுபடுத்தினான். தூய சிவநெறியில் சேருமாறு. அண்ணலாகிய சிவபெருமான் எனக்கு அருளினான். இப்பெரும் பேற்றை வேறு யார் பெற வல்லார்கள்?

654) பஞ்சாய அடி மடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர் கூர நிற்பேன் உன் அருள் பெற்றேன்
உய்ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருக என்று
அஞ்சேல் என்று அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே. 5

பஞ்சு போன்ற பாதங்களை உடைய பெண்களின் கடைக்கண் பார்வையால் துன்பமுற்று, என் நெஞ்சு மேலும் மேலும் துயர்ப்பட நிற்கும் அடியேன் உன் திருவருளுக்கு இலக்கானேன். என்னை உடையவனே! நான் உய்ந்து போனேன். அடியேனை வருக! அஞ்சாதே என்று அழைத்து நீ அருளிய அருள் திறத்தை வேறுயார் பெறவல்லார்கள்?

655) வெந்து விழும் உடல் பிறவி மெய் என்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல் வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தம் அறுத்து எனை ஆண்டு பரிசு அற என் துரிசும் அறுத்து
அந்தம் எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே. 6

வெந்து சாம்பலாகக் கூடியஇவ்வுடல் எடுத்த பிறப்பை, உண்மையென்று செயல்பட்டு, நல்வினை தீவினைகளை அதிகரித்து, மலர் அணிந்த கூந்தலையும், திரண்ட வளைகளையுமுடைய பெண்களின் குவிந்த முலை மேல் வீழக்கூடிய என்னை, பாச பந்தங்களை அறுத்து ஆட்கொண்டான் பின் சீவபோதம் கெட, என் குற்றங்களைக் களைந்தான். இறுதியில் முத்தியான முடிவருளினான். இப்பேற்றைவேறு யார் பெறவல்லார்கள்?

656) தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனைப்
பையவே கொடு போந்து பாசம் எனும் தாழ் உருவி
உய்யும் நெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்து உட்பொருளை
ஐயன் எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே. 7

பெண்களின் மயக்கத்தில் நிலைகெட்டு விழ வேண்டிய என்னை, மெல்ல மெல்லக் கொண்டுசென்று பாசம் என்ற தாழ்ப்பாளை உருவி எடுத்து, இது தான் உய்யும் நெறி என்று காட்டி, பிரணவத்தின் உட்பொருளை எனக்கு அருளிய தன்மையை வேறு யார் பெறுவார்கள்?

657) சாதல் பிறப்பு என்னும் தடம் சுழியில் தடுமாறிக்
காதலின் மிக்கு அணி இழையார் கலவியிலே விழுவேனை
மாது ஒரு கூறு உடைய பிரான் தன் கழலே சேரும் வண்ணம்
ஆதி எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே. 8

இறப்பு பிறப்பு என்ற பெரிய சுழியில் சிக்கி, வெளிவரமாட்டாமல் தடுமாறிப் போய்க் காதல் மிகுந்து அழகிய அணிகளை அணிந்த பெண்களின் போகத்தில் விழுகின்ற என்னை, உமாதேவியை இடப்பாகத்தில் கொண்ட எம்பெருமான், அவனுடைய திருவடிகளிலேயே சேருமாறு, அம்முதல்வன் எனக்கு அருள்செய்த இப்பேற்றை வேறுயார் பெறுவார்கள்?

658) செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதல் ஆய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருள் ஆக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளிய ஆறு ஆர்பெறுவார் அச்சோவே. 9

மேலானவீட்டின்பத்தின் நன்மையை அறியாத மூடர்களோடு சேர்ந்து திரிகின்ற என்னை, மூன்று மலங்களையும் நீக்கி, எல்லாவற்றுக்கும் முதல்வனான சிவபெருமான், ஆட்கொண்டான். மிகவும் கடைப்பட்ட நம்மையும் ஒரு பொருளாக மதித்து, நாயைப் பல்லக்கில் தூக்கி வைத்தது போல, மறுமை இன்பத்தை அருளினான். இந்தப் பெரும் பேற்றை வேறு யார் பெறுவார்கள்?

திருச்சிற்றம்பலம்


மாணிக்கவாசகப்பெருமான் திருவடிகளே சரணம்!

திருவாசகம்

பாட்டு முதற்குறிப்பு அகராதி







செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப!
பாவெனப் படுவதுஉன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே.

– நால்வர் நான்மணி மாலை
(சிவப்பிரகாச சுவாமிகள்)